38:59

31-1

உ

ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் துணை.



திரு ஆலவாய்

என்னும்

மதுரை மான்மியம்.

பதிப்பகம்

நடேசர் பிரஸ்,

திண்டுக்கல்.

1951

Acc. No : 778
Q1 : 38

விலை] [ரூ. 1—8—0

Acc No: 778
Q1:38
TIRUPPUVANA MADAM
31-1

முகவுரை.

புண்ணிய பூமியாம் பாரத நாட்டில் எங்குமே இறைவனது திருவருளையும் மாட்சியையும் விளங்கச் செய்யும் திருக்கோயில்களும், தலங்களும், தீருத்தங்களும் பொலிவுறுகின்றன. அவற்றுள் மிகச் சிறந்தவையெனப் புகழ் பெற்றவை சிலவே. அவற்றினுளும் தலை சிறந்து திகழ்வது கயற்கண்ணம்மையுடன் ஆலவாயுடையான் கோயில் கொண்டிருக்கும் **மதுரையம்பதியே** யென்பது யாவரும் ஒப்புக்கொண்ட விஷயம். இத் திருப்பதியில் தலம், தீருத்தம், மூர்த்தி இம் மூன்றி னுடையவும் பெருமை ஒருங்கே அமைந்திருக்கின்றது. இவண் இலங்கும் சோமசுந்தரப் பெருமானது இலிங்கமே ஆதி லிங்கம். திருக் கைலாயம் முதலான மிகப் பெரிய தலங்களில் விளங்கும் மூர்த்திகளின் திருவொளி இப் பேரிலிங்கத்தினின்றே தோன்றிப் பரவி நிற்கின்றது.

இத்தகைய மாண்பு வாய்ந்த திருவாலவாயின் வரலாறு தமிழ் மொழியில் தொன்று தொட்டுப் பல நூல்களில் வரையப்பட்டிருக் கின்றது. அவற்றுள் முதன்மையானவை உலகப் புகழ்பெற்ற **பரஞ்ஜோதி முனிவர்** இயற்றிய செய்யுள் நடையிலுள்ள திருவிளை யாடற் புராணம், சென்ற நூற்றாண்டில் தஞ்சை கவிஞரியற்றிய கடம்ப வனப் புராணம், உரை நடையில் படங்களுடன் கூடிப் பொதுமக்கள் படித்துவரும் திருவிளையாடற் கதைகள், இயாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலராக்கிய பரஞ்ஜோதி முனிவர் நூலின் உரை நடை உருவம் முதலி யன. என்றாலும், வடமொழி ஸ்காந்த புராணத்தின் கண் மிளிரும் ஹாலாஸ்ய மஹாத்மியத்தின் நேரான தமிழ் மொழிபெயர்ப்பு இதுவரை வெளிவரவில்லை. இக்குறையை நீக்குவதே ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவராள் தேவஸ்தானத்தார் இம் மொழி பெயர்ப்பு நூலைத் தோற்றுவிப்பதன் நோக்கமாகும். இம் மொழி பெயர்ப்பு மதுரை இராமேசுவரம் தேவஸ் தானம் பாடசாலை தலைமை ஆசிரியர் **ஸ்ரீ V. சுப்பிரமணிய அய்யர், B. A., L. T., அவர்களால்** செய்யப்பட்டது.

வடமொழியில் ஸ்காந்த புராணம் இருவகைப்படும். ஒன்று ஸ்காந்த மஹா புராணம். அதில் 81,100 செய்யுட்கள். அந் நூல் மாஹேசுவரம், வைஷ்ணவம், பிராம்மம், காசி, ஆவந்தியம், நாகரம், பிரபாசரம் என ஏழு கண்டங்களடங்கியது. மற்றொன்று ஸ்காந்த உப புராணம். இதில் ஏறக்குறைய இலக்ஷம் செய்யுட்கள் உள. ஐம்பது கண்டங்களடங்கிய ஆறு ஸம்ஹிதைகளாலானது இந் நூல். **ஸம் ஹிதைகளாவன:-** (1) ஸநத்குமார ஸம்ஹிதை. (2) சூத ஸம்ஹிதை. (3) சங்கர ஸம்ஹிதை. (4) வைஷ்ணவ ஸம்ஹிதை. (5) பிரம்ம ஸம்ஹிதை. (6) ஸௌர ஸம்ஹிதை - என. ஹாலாஸ்ய மகாத்மியம் சங்கர ஸம்ஹிதையில் விளங்குகின்றது.

ஹாலாஸ்ய மாஹாத்மியத்தின் தமிழ்ப் பெயர்ப்பான **'திரு ஆலவாய் மான்மியம்'** எனும் இந் நூலை மக்கள் பெரிதும் படித்தும் கேட்டும் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெறுவரென்று எதிர்பார்க்கப்பெறுகின்றது. கயற்கண்ணம்மையாரும் ஆலவாய்ப் பெருமானும் திருவருள்புரிவாராக.

மதுரை,
30—5—'51.

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வராள் தேவஸ்தானம்,
நிர்வாக அதிகாரி.

Acc. No. 3118

31-1

விஷய அட்டவணை.

அத்தியாயம்	விஷயம்		பக்கங்கள்
1	வினுப் படலம்	—	1
2	தீர்த்தப் பெருமை	—	10
3	மூர்த்தி பெருமையும், திருவிளையாடல் சுருக்கமும்		17
4	விருத்திரன் கதை	—	22
5	இந்திரன் பழி தீர்த்தல்	—	27
6	வெள்ளை யானை சாபம் தீர்த்தல்	—	32
7	மதுரை நகர் அமைத்தல்	—	35
8	தடாதகை பிராட்டியாரின் பிறப்பு	—	39
9	திருமணம்	—	44
10	திருக்கூத்து	—	49
11	குண்டோதரனுக்கு உண்டியிடல்	—	54
12	அன்னக்குழி-வைகை யழைத்தல்	—	57
13	எழு கடலழைத்தல்	—	61
14	மலயத்துவசனை அழைத்தல்	—	64
15	உக்கிர பாண்டியன் பிறப்பு	—	66
16	உக்கிரபாண்டியனுக்கு வளையம், வேல், சண்டாயுதம் கொடுத்தல்	—	69
17	கடலை வற்றடித்தல்	—	72

18	இந்திரன்முடி தகர்த்தல்	—	74
19	சோமவாரநோன்பு நோற்றல்முறை	—	78
20	சோமவாரநோன்பு முடித்தல்முறை	—	83
21	மேருவினின்று பொன் பறித்தல்	—	88
22	வேதப் பொருளுரைத்தல்	—	91
23	நவரத்தினங்கள் விற்றல்	—	96
24	மேகங்கள் கடலைப் பருகுதல்	—	105
25	பெரு மழையினின்று காத்தல்	—	107
26	சித்தர் விளையாட்டு	—	110
27	கல்லானைக்கு கரும்பு கொடுத்தல்	—	112
28	சமணரேவிய யானை வதம்	—	115
29	பிராம்மண பெண்ணின் துயர் தீர்த்தல்	—	118
30	கால்மாறி யாடல்	—	121
31	பிராம்மண மங்கையின் கோலையைகண்டுபிடித்தல்		124
32	மாபாதகந் தீர்த்தல்	—	128
33	அங்கம் வெட்டுதல்	—	130
34	சமணரேவிய சருப்பத்தை வதைத்தல்	—	133
35	சமணரேவிய பசுவை விழுத்தல்	—	135
36	படை காட்டல்	—	138
37	குறையாக்கிழி கொடுத்தல்	—	142

38	வலையல் விற்றல்	—	144
39	அட்டமாசித்தி யுபதேசித்தல்	—	146
40	காடுவெட்டின சோழராசன் பொருட்டு கதவுடைத்தல்		148
41	பாண்டியனது படைக்கு தண்ணீரளித்தல்	—	151
42	ரசவாதம் புரிதல்	—	154
43	படையுடன் சோழனை மடுவில் விழ்த்தல்	—	157
44	குறையாத அரிசி மூட்டை யளித்தல்		160
45	வைசிய குழந்தைக்கு மாமனாக வருதல்	—	162
46	வரகுணபாண்டியனது பிரமகத்தி பழியை யொழித்தல்	—	165
47	விறகு விற்றல்	—	169
48	சேரனுக்கு நிருபம் கொடுத்தல்	—	171
49	பத்திரனுக்கு பலகை யிடல்	—	174
50	பத்திரனது மனைவிக்கு வெற்றியளித்தல்	—	176
51	பன்றிக் குட்டிகளுக்கு தாய்ப்பால் கொடுத்தல்	—	179
52	பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்குதல்		183
53	கரிக்குருவிக்கு உபதேசம் செய்தல்	—	185
54	நாரைக்கு முத்தியளித்தல்	—	187
55	ஆலவாயின் எல்லை காட்டல்	—	190

56	சோழனது படையை முறியடித்தல்	193
57	சங்கப் பலகை யளித்தல் —	196
58	சுந்தரநாதனுக்கு பொற்கிழி கிடைப்பித்தல் —	201
59	நக்கீரரைக் காத்தருளல் —	204
60	நக்கீரருக்கு இலக்கணமுபதேசித்தல்	206
61	நூல்களின் ஏற்றத்தாழ்வுகண்டறிதல்	210
62	வட ஆலவாய் தோன்றல் —	212
63	வலியன் மகளை மணத்தல் —	218
64	திருவாதவூரருக்குத் தீக்கையளித்தல்	221
65	மாயக் குதிரைகள் விற்றல் —	226
66	வைகையாற்றை பெறுக்கெடுக்கச் செய்தல் —	234
67	பிட்டுக்கு மண் சுமத்தல், பவுத்தரை வதைத்தல் —	237
68	கூன் பாண்டியனது சுரத்தைத் தணித்தல் —	249
69	சமணர் கழுவேற்றம் —	258
70	வன்னி மரமும், கிணறும், சிவலிங்கமும் அழைத்தல் —	268
71	கேட்டதற் பயனுரைத்தல் —	274



31-/

படங்கள்.

படங்கள்	விஷயம்	பக்கங்கள்
1	ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் (முகப்பு படம்) —	1
2	ஸ்ரீ மீனாக்ஷியம்மையார் (அங்கயற்கண்ணம்மை) —	17
3	ஸ்ரீ சுந்தரேஸ்வரர் (தென்னவனு யுலகாண்ட திருவாலயுடை மன்னர் பிரான்) —	22
4	இந்திரன் பழி தீர்த்தல் —	27
5	திருமணம் —	44
6	திருக்கூத்து —	49
7	வேதப் பொருளுரைத்தல் —	91
8	சித்தர் விளையாட்டு —	110
9	கல்லானைக்கு கரும்பு கொடுத்தல் —	112
10	கால்மாறியாடல் —	121
11	கரிக்குருவிக்கு உபதேசம் செய்தல் —	185
12	நாரைக்கு முத்தியளித்தல் —	187
13	நூல்களின் ஏற்றத்தாழ்வு கண்டறிதல் —	210
14	திருவாதவூரருக்கு உபதேசித்தல் —	221
15	மாயக்குதிரைகள் விற்றல் —	226
16	மண் சுமத்தல் —	237
17	வன்னியும், கிணறும், சிவலிங்கமும் அழைத்தல் —	268



ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர்



உ

ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஸ்வரர் துணை.

திரு ஆலவாய் மான்மியம்.

(வடமொழி ஹாலாஸ்ய மஹாத்மியத்தின் தமிழ்மொழி பெயர்ப்பு)

முதலாம் அத்தியாயம்
(விளம்பகடலம்)

திருத்திகழும் மலைகளுள் மேலானது கைலாஸமலை. எல்லா தேவர்களும் மங்களம் பெறுதற்கும் வீட்டுப்பேறு அடைவதற்கும் அங்கு தங்குவதுண்டு. திருவளிப்போருக்கும் திருவளிக்கும் தன்மை வாய்ந்தது அந்த மலை. கறைக்கண்டனின் உறை விடங்களில் முதன்மையானது. பாற் கடலையும் தனது திருவால் வென்று மிளிர்கின்றது. அதைக் காதால் கேட்டலாலேய பக்களின் பிறப்பிறப்பச்சம் நீங்கிவிடும். அங்கு எல்லாத் தீர்த்தங்களுமுண்டு. அதை விண்ணவர் வணங்குகின்றனர். அதை நினைப்போரும் புகழ்வோரும் எல்லாப் பயன்களையுமடைகின்றனர். மிகுந்த தவ வலிமையுடன் அதைப்பார்ப்போர் முத்திபெறுவர்.

பூதக்குழுக்களால் மலையானது எல்லாப் புறங்களிலும் காக்கப் படுகின்றது. இறைவனது ஆணையின்றித் தேவர்களும் அவண் செல்ல முடியாது. அது மூவ்வுலகிலும் புகழ்பெற்றது. மதிமண்டலம்போல் வெளுப்பானது. புவியில் அது வடதிசைக்கிலும் அறிவோர் மனதிலும் மிளிர்கின்றது.

அம்மலையின் மத்தியிலுள்ள மஹாமேருவின் நடுவில் ஒளிநிறைந்த சிகரம் ஒன்றுளது. அதன் உச்சியில் கண்ணாடிபோல் சமமானதும் வானம்போல் மாசற்றதுமான ஓர் இடம் உண்டு. தவத்திற்கு வைரிகளான காமம் முதலியவற்றால் மனிவாது மனம் வெல்ல முடியாததுபோல் அந்த இடம் எதிரிகளால் வெல்ல முடியாதது. அங்குப் பழம் பூ நிறைந்த கற்பகத் தருச் சோலைகளும், சிந்தாமணிக் குன்றுகளும், காமதேனு மந்தைகளும், பால், தயிர், நெய், தேன், அமுது இவை மயமான ஆறுகளும், விளங்குகின்றன. அங்குக் குடியிருக்கும் பிரமதர்களின் இல்லங்கள் மேருமலைக் கொப்பாயும், இரத்தினங்களிழைக்கப் பெற்றனவாயும், அழகிய கிண்ணைகளோடு கூடியனவாயும் பொலிகின்றன. அங்குள்ள விமானங்கள் எண்ணற்ற கதிரவர்போலும் கோடிக்கணக்கான மதிகள்போலும் ஒளியுடன் தென்படுகின்றன. அவற்றில் தேவமகளிர் உலாவுகின்றனர்.

இவ்வாறு திகழும் அவ் வெள்ளியுச்சியில் சிவபெருமானது ஒளித்திரளாய்ப் பார்ப்பதற்கொண்ணாத மாபெரும் மாளிகை யொன்றுளது. அதைச் சுற்றிலும் இரத்தின வீளக்கு வட்டங்கள் வீளங்குகின்றன. அம் மாளிகையினுட்புறம், நான்கு வாயிலுடையவீடத்தில், வைணவி முதலிய ஒன்பது சக்திதேவதைகள் நிறைந்ததும் நவரத்தினமயமானதுமான பெரும் பீட மொன்றிருக்கின்றது. அதன் மத்தியில் பெருமானது இலிங்கம் திகழ்கின்றது. அது மிகப்பழமையானது. ஸ்ரீகண்டபரமேச மென்பது அதன் பெயர். பீடத்திலமர்ந்த தானே தோன்றிய அந்த இலிங்கம் ஒரே தருணத்திலுண்டான எண்ணற்ற பருதிகளின் பொலிவுடன் மிளிர்கின்றது. பராசக்திமயமானது. அது அறிவு வடிவமானது.

பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலான முதன்மையான தேவர்கள், மற்ற தேவர்கள், அரக்கர், இயக்கர், கிம்புருடர். வித்தியாதரர், சித்தர், கந்தருவர், கின்னரர், முனிகள், யோகியர் இவர்கள் எல்லோரும் நிலைபெறும் பொருட்டும், முத்திபெறுதற்கும் இறைவனை அடிக்கடி வணங்குகின்றனர். அதன்மூலம் ஆன்மலாபமும் அழிவில்லாத சுகமும் பெறுகின்றனர். கைலாஸ மலையிலுள்ள மக்களுக்குப் பெருமான் தனது அசைவற்ற இலிங்கத்தாலும் அசையும் வடிவத்தாலும் அருள் புரிகின்றார். கரும பூமியிலுள்ள மக்கட்கும் இறைவன் விசேஷமான தலங்களிலும் மலைகளிலும் தோன்றி இவ்விருவகையில் அருள்கின்றார். உலகம் உய்யும் பொருட்டு இருபத்தைந்து தலங்களில் பரமனது இலிங்கங்கள் இருக்கின்றன. அம்பிகையுடன் கூடினவகையாக இவற்றை வழிபடுகின்றவர் தெய்வப் பெண்கள் நிறைந்த விமானங்களிலேறி அரிய இன்பங்கள் துய்த்துக் கடைசியில் கைலாஸம் சேர்ந்து என்றும் சுகமுடையோராய் விளங்குவர்.

மேற்கூறிய சோதிலிங்கத்தினெதிரே மிகப் பெரிதானதும் தூயதுமான ஓர் பொய்கை இருக்கின்றது. சிவதீர்த்த மென்று அதன் பெயர். இறைவனைப் போல் மங்களம் பயக்குதலாலும் தூய்மை பொருந்தியிருத்தலாலும் அதற்கு அப் பெயர் வரலாயிற்று. அப் பொய்கையில் இரத்தினத் தூண்கள் நிற்கின்றன. எண்ணிலா மணிகள் கட்டப்பெற்று மணிகளின் ஒலியும் கேட்கப்படுகிறது. அதன் முன்னும் நான்கு மூலைகளிலும் இருடபங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. அதன்கரையில் விசுவகருமனால் தவவலிமை கொண்டு சந்திரகாந்தக் கற்களால் அமைக்கப் பெறாத ஆயிரக்கால் மண்டப மொன்றுண்டு. அதில் நவரத்தினங்களாலாக்கப்பெற்ற சிங்காதன மொன்று வானவில்லின் துண்டு போன்று மிளிர்கின்றது.

அம்மண்டபத்தில் கம்பளியின்மேல் விரிக்கப்பெற்ற குருவிற்கேற்றபுலித்தோலில் நிலவுபோல் வெளுத்த வுடையணிந்த சுதமுனிவர் அமர்ந்திருந்தார். திருநீறும், உருத்திராக்கமும்பூண்டு இறைவன் நினைவில் ஈடுபட்டுத் தெளிந்த முகத்துடன் விளங்கும் வியாஸ முனிவரின் சீடரும், பேரறிஞரும், புராணம் கூறுவதில் வல்லுனரும், மறைகளின் கருத்துக்களை நன்குணர்ந்தவருமான அவரை வணங்குவதற்கும் அவரிட மிருந்து புகழ்பெற்ற சிவத் தலங்களை முக்கியமாக பூவுலகிலுள்ள தலங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும் முனிவர்கள் வந்தனர். அவர்களின் எண்

எண்ணாயிரம். அதில் முதன்மையானவர் சிவனன்பர், சதானந்தர், பிரபாகரர், உக்கிரவீரியர், மஹாவீரியர், மஹாகாயர், மஹோதரர், மஹாயோகி, ஜிதக்குரோதர், கைவல்லியப்பிரியர், உத்தமர், தேவநிட்டர், யக்ஞநிட்டர், தபோநிட்டர், மஹாவிரதி, தேவபக்தர், சிவானந்தர், சிவத்தியானபராயணர், ஜலாசி, ஜீர்ணபர்ணாசி, வாயுபக்ஷர், சலாகிதி முதலிய யோகிகள். சிவனன்பால் தூண்டப்பெற்ற இப்பெரியோர் சிவபெருமான் கதைகளைக் கேட்கும் ஆவலுடன் நிட்டையிலிருக்கும் செருப்பில் தோன்றிய சூத முனிவரையணுகி, வெற்றி மொழிந்து, தடிபோல் வீழ்ந்து திரும்பத்திரும்ப வணங்கி, அவரது அடித்தாமரைகளை தாமரைப் பூக்களால் வழிபட்டு, துதிகள்பாடி, மிகவுவகையுடன் வினவினதாவது—

நீக்குழியில் தோன்றிய சூத முனிவரே, அன்பரிடமன்புடையவரே, சிவவழி முற்றிலுமறிந்தோரே, மறைமுடியின் கரைகண்டவரே! பதி முத்தியளிக்கும் எல்லாச் சிவத்தலங்களைப்பற்றியும், மேரு, மந்தரம், கைலாஸம், சிரீசைலம் முதலியவைப் பற்றியும் சுருக்கமாகவும், விரிவாயும் கூறிவிட்டீர். அந்தந்தத் தலத்தின் மேன்மையும் அங்கங்குள்ள இறைவனின பெருமையும் உம்மால் நன்றாய்ச் சொல்லப்பட்டுவிட்டது. அவற்றில் முதன்மையான காசி முதலிய தலங்களைப்பற்றியும் நீர் செப்பிவிட்டீர். இவற்றுள்ளும் முதன்மையான தலம் எது என்பதைப்பற்றியும் சொன்னீர். ஆனால், சிற்றறிவுடையரான எங்களிடம் அவை யொன்றும் தங்கவில்லை. எல்லாவற்றிலும் சிறந்ததாகச் சொல்லிய தலத்தைப்பற்றியும் மறந்து விட்டோம். ஆதலால், பெரியவரே, மிகப்பழமையுடையதும் மிகச் சிறந்ததும், இறைவன் இறைவிக்கு மிகவுகந்ததும் இறைவன் எப்பொழுதும் தங்கக்கூடியதுமான எந்த ஒரு தலம் உண்டோ அதை எங்களுக்குச் சொல்லியருள வேண்டும்.

இவ்வாறு கேட்டதும், கருணைவடிவான சூதர் பதில்கூற ஆரம்பித்தார். அதற்குமுன் கேள்விக்குச் சரியான பதில்பற்றி தலைக்கருள் கிடைக்கும் பொருட்டு எல்லா மறிந்தவரும், உமையுடன் கூடியவரும், இறைவனும், தேவர்களுக்குத் தேவனும், உலகத்திற் காசினியனும், முக்கண்ணனும், பிறைசூடியும், புலித்தோல் போர்த்தவனும், படிகம்போல் ஆயனும், சின் முத்திரை, மழு, அபயம் இவற்றை எந்தியவனும், புலித் தோலில் வீராஸனத்துடன் வீற்றிருப்பவனும், எல்லா வணிகள் பூண்டவனும், அரவாபரண மணிந்தவனும், ஸநகர் முதலிய முனிவருக்கு அறிவூட்டியவனும், சிறந்த ஆசிரியனும், ஸநகர் முதலிய யோகிகளால் வணங்கப் பெற்றவனும், பிரமதக் குழுக்களால் பூசிக்கப்பட்டவனுமான தக்ஷிணமூர்த்திப் பெருமானையும், விஷ்ணு முதலியவரால் மனதில் நிறுத்தப்பட்டிருக்கும் அவரது திருவடிகளையும் தியானித்து அதன்பேரில் நினைவிற்கு வந்த சிவபெருமானது மிகச்சிறந்த தலத்தைப் பற்றிச் சொல்லலானார்.

சிவபக்தி நிறைந்த முனிவரே! கேளுங்கள். முன்னம், ஆனந்த வனத்தில் இது விஷயமாக வசிட்டர் முதலிய பெரியோருக்கு அகத்தியர் சொல்லியிருக்கிறார். அகத்தியருக்குக் கந்தக் கடவுளும், கந்தருக்குச் சிவபெருமானும் இதைக் கூறினர். கந்தனும் சிவபெருமானும் ஒன்றே

என்பது உங்களுக்குத் தெரியும். எனது குருவான வியாஸர் எனக்குச் சொன்னார். புராண ஸம்ஹிதையிலும் அதுகூறப்பட்டிருக்கிறது. அந்தப் புராணத்திற்கு ஹாலாஸ்ய புராணமெனப் பெயர். அதை நான் சொல்லப் போகிறேன். அதைக் கேட்பதாலேயே பாவங்கள் போய்விடும். வேதாந்தக் கருத்துக்களை யெல்லாம் அது அடக்கிக் கொண்டிருக்கிறது. வேதங்களில் மறைவாயிருக்கும் பொருள் புராணங்களில் தெளிவாக்கப்படுகிறது. எல்லாப் புராணங்களிலும் ஹாலாஸ்யம் கூறப்பட்டிருக்கின்றது. ஆயினும் ஸ்காந்த புராணத்தில் அது வெகுவாகக் காணப்படுகிறது. ஸ்காந்தத்தில் ஆறு ஸம்ஹிதைகள், ஐம்பது கண்டங்கள் ஸம்ஹிதைகளாவன — ஸநத்குமார ஸம்ஹிதை, ஸூத ஸம்ஹிதை, சங்கர ஸம்ஹிதை, விஷ்ணு ஸம்ஹிதை, பிரம்ம ஸம்ஹிதை, சூரிய ஸம்ஹிதை என.

முன்பொருதான சங்கர ஸம்ஹிதை உமாதேவிக்குச் சிவபெருமான் கூறியது. அம்மையின் மடியிலிருந்த குழந்தைக்கடவுள் முழுவதையும் கேட்டுக்கொண்டார். தனக்குச் சொல்லவேண்டுமென்று வேண்டிக் கொண்ட அகத்தியருக்கு முருகன் ஸம்ஹிதையைக் கூறினார். அவ்விதமே அகத்தியர் ஆநந்தவனத்தில் முனிவருக்குச் சொன்னார் அதன்பேரில் அந்த ஸம்ஹிதைக்கு அகத்திய ஸம்ஹிதை என்ற பெயர் வந்தது. விரும்பியதை யெல்லாம் அளிக்க வல்லது. அந்த ஸம்ஹிதையை இப்பொழுது உலக நலத்திற்காக உங்களுக்குச் சொல்கின்றேன்.

முன்னொரு காலத்தில் மிகத்தூயதானதும் கங்கை நதியோடப் பெற்றதும், விசுவநாதர் விசாலாக்ஷி கோயில் கொண்டிருப்பதால் எல்லா நலன்களையும் பயக்கக் கூடியதுமான காசித் தலத்திற்குப் பிரமதேவர் ஓர் இலிங்கப் பிரதிட்டையும் வேள்வியும் நடத்தும் நோக்கத்துடன் ஸத்திய லோகத்திலிருந்து வந்தார். அங்கு தன் பெயருடன் கூடிய பிதாமஹேசுவர லிங்கம் என்ற ஓர் இலிங்கத்தையும் பிரதிட்டை செய்தார். அந்த இலிங்கத்தின் முன்னிலையில் பத்து அசுவமேத வேள்விகளையும் செய்தார். அப்பொழுது மைமிசாரண்யத்திலிருந்து வசிஷ்டர், வாமதேவர் முதலிய மிகப்பழைய முனிவர் வந்து பிரம்மதேவன் கேட்டுக்கொள்ள வேள்விகளில் பங்கெடுத்துக் கொண்டனர். அவை முற்றுப்பெற்றவுடன் பிரமதேவர் அம் முனிவருக்கு முறைப்படி உயர்ந்த ஆடை, அணி, பொன், இரத்தினங்கள் இவற்றை அளித்தார். முனிவரும் பேரானந்த மெய்தினர்.

பின்னர் அவர்கள் பிரம்ம தேவரின் அனுமதிபெற்று அங்குள்ள தீர்த்தங்களில் நீராடப் புறப்பட்டனர். அந்த முனிவர் குழாமில் வசிஷ்டர், வாமதேவர், கௌதமர், பிருகு, போதாயனர், காசியபர் யாக்ஞவல்கியர், பராசரர், பரத்துவாசர், அங்கிரஸ், அத்திரி, குத்ஸர், சகநி, சுகர், வேதவியாஸர், கஹோளர், வால்மீகி, அகஸ்தியர், ஸநத்குமாரர், ஸுகர், ஸுதனர், ஸநந்தனர், புலஸ்தியர், புலஹர், கர்க்கர், விசுவாமித்திரர், நாரதர் இவர்கள் முதன்மை பெற்றவர். எல்லாம் தெரிந்தவரும், பேரறிஞரும், பிரம்மத்தை யறிந்தோருமான அந்த முனிவர் தீர்த்தங்களனைத்திலும் மூழ்கி, துண்டி முதலான எல்லா விநாயகர்களையும் வணங்கி, விசாலாக்ஷி முதலிய தேவிமார்களையும் வழிபட்டு, காலராசக் கடவுளையும், காலனை வென்ற ஸதாசிவ மூர்த்தியையும், தண்டநாதன் முதலான கணக்

கூட்டத்தவரையும் துதித்து, ஆதிகேசவன் முதலிய கேசவர்களையும் களிப்பித்து, லோகாதித்தியன் முதலான ஆதித்தியர்களையும் பூசித்து மிக ஊக்கத்துடன் எல்லா தீர்த்தங்களிலும் பிண்டதானமும் செய்தார்கள். பின்னர் ஓங்காரேசர் முதலிய சிறந்த லிங்கங்கட்குத் தக்க வழிபாடு நடந்தது. காணிக்கைகளும் செலுத்தப்பெற்றன. அதன்பின் ஆயிரக் கணக்கான துறவிகளுக்கும் பிராம்மணர்களுக்கும் அன்னம் அளிக்கப் பட்டது. பிறகு மனத் துன்பங்களனைத்தையும் போக்க வல்ல மணிகர்ணி கையைக் கண்டு, அதில் நீராடி, தர்ப்பணங்கள் செய்து, அதன்பின் விசுவநாதர் ஆலயம் சென்று பொன், ஆடை, அணி, ரத்தினம் முதலிய வற்றால் உபசாரங்கள் செய்து வழிபட்டு தோத்திரங்கள் சொல்லிப் பெருமானை மகிழ்வித்தனர். பின்னர் முக்தி மண்டபம் சென்று கூப்பாறினர்.

அச்சமயத்தில் மேரு மலையிலிருந்து சில பழுத்த தபஸிகள் ஒன்றுகூடிக் கங்கையில் நீராடி விசுவநாதப் பெருமானை வணங்குதற்கு அவண் வந்திருந்தார்கள். வசிஷ்டர் முதலியோர் அவர்களைக்கண்டு வியப்புற்று முக்தி மண்டபத்திற்கு அழைத்து இருக்கை முதலியன தந்து வரவேற்றனர். கூப்பு நீங்கியவுடன், வந்த காரணமென்னவென்று வினவினர். அதற்கு வந்த முனிவர் கூறியதாவது— நாங்கள் மேரு மலையின் பக்கத்திலிருக்கும் பிரம்ம தேவரால் உண்டுபண்ணப்பட்ட பிரம்மபுரத்திலிருந்து வந்திருக்கின்றோம். சாத்திரங்கள் புராணங்களறிந்த பெரியோரிடமிருந்து ஆகத்தக்காவின் (காசித்தலம்) பெருமையைக் கேள்வியுற்றோம். புண்ணியத் தலங்களில் மிகச் சிறந்தது காசி. அதன் மாட்சி சொல்ல முடியாதது. புண்ணிய தீர்த்தங்களில் மேலானது மணிகர்ணிகை. சிவலிங்கங்களிற் சிறந்தது விசுவேசுவர லிங்கம். புண்ணிய காலங்களில் முதன்மையானது சூரியனும் சந்திரனும் கூடியிருக்கும் அமாவாசை நாள்.

ஆடி மாதத்தில் திங்கட்கிழமையன்று அமாவாசைவரப் போகிறது. அந்த சமயத்தில் மணிகர்ணிகையானது வடக்கு நோக்கி ஓடும். ஆனை முதுகிலேறிக்கொண்டு விசுவநாதர் முன்னிலையில் வரும். அப்பொழுது நீராடிய மாத்திரத்திலேயே பாவங்களனைத்தும் தொலையும். முக்தியும் கைகூடும். விசுவநாதக் கடவுளும் விசாலாக்ஷி யம்மையாருடன் பிரமன், விஷ்ணு, இந்திரன், விநாயகர், ஸ்கந்தர், கணத்தலைவர்கள் இவர்கள் சூழ இரண்டாம் கைலாஸ பர்வதம்போன்ற விடையின் மீதேறிப் பரிவுடன் காட்சியளித்து புக்தியும் முக்தியும் தருவார் என்று சிவதீர்த்தர் எனும் துறவியிடமிருந்து கேள்வியுற்றோம். இன்று சனிக்கிழமை திரயோதசி, காலை நின்று திங்கட்கிழமையும் அமாவாசையும் வருகிறது. அன்று நீங்களும் எங்களுடன் அந்த இடத்தில் நீராடுங்கள்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட முனிவர் "இடம், ஸமயம், தீர்த்தம், இலிங்கம் இவற்றின் பெருமையை வெளிப்படுத்தவும், நமக்கு அருள்புரியவும் இப்பெரியோர் இங்கு வந்திருக்கிறார்கள்" என்று ஒருவருக்கொருவர் மிகுந்த நம்பிக்கையுடன் பேசிக்கொண்டார்கள். பின்னர் வசிஷ்டர் அவர்களைப் பார்த்து "இவர்களால் கூறப்பட்ட விஷயம் உண்மையானது.

இதில் ஐயமில்லை. விரதங்களனைத்திலும் சாத்திரங்களில் கூறப்பட்டவை சிறந்தவை. சாத்திரங்களில் கூறப்பட்ட விரதங்களிலும் சிவ விரதங்கள் மேலானவை. சிவ விரதங்களிலும் சோமவார விரதம் மிக மேன்மையானது. சோமவார விரதத்தைக் காட்டிலும் சிவராத்திரி விரதம் சிறந்தது. சோமவாரத்தில் வரும் அமாவாசையானது மூன்றுகோடி சிவராத்திரிகளுக் கொப்பானது. அதிலும் ஆடி மாதம் வரும் அமாசோமவாரம் தனிச் சிறப்புடையது. ஆதலால் அன்று சிவபெருமானது காட்சி திண்ணமாய் நேரும். அதில் ஐயத்திற்கிடமேயில்லை. நாமும் பேறு பெறுவோம். சிவனருளும் நமக்குக் கிட்டும். யோகிகளுக்குள் சிறந்தவர் சிவதீர்த்தர். முக்காலமும் மறிந்தவர். அவரது சொல் உண்மையாகவே நிகழும்:: என்று கூறிவிட்டு வந்திருந்த விஷ்ணு விருத்தர் முதலிய பெரியோருக்கு எண்ணெய் நீராடல் முதலான சௌகரியங்களைச் செய்வித்து சர்க்கரை, நெய், பாலுடன் அறுசுவை யுண்டி அளித்தார். பின்னர் வெற்றிலை பாக்கு ஆடை முதலியன வழங்கப்பட்டன. எல்லோரும் புண்ணிய காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர்.

புண்ணிய காலமும் வந்தது. வசிஷ்டர் விஷ்ணு விருத்தர் முதலியோர் மணிகர்ணிகையை யடைந்து சிவபெருமானையும் அம்மையாரையும் தியானித்து, ஆகமார்ஜன மந்திரங்களோலித்து முறைப்படி நீராடி, நித்தியகருமங்களை முடித்து விசுவநாதரது ஆலயம் சென்று ஜோதி லிங்கத்திற்குப் பஞ்ச சுத்தி செய்து (பஞ்சகவியம், பஞ்சாமிருதம், ரத்தினஜலம், புஷ்பஜலம், சந்தனஜலம்) ஆயிரத்தெட்டுத் தங்கக் கலயங்கள் வைத்து கங்கை நீரால் நிறப்பி, நூல், வஸ்திரம் இவை கட்டி ஜபம் செய்து பின்னர் விதிப்படி பால் முதலியவையுடன் இலிங்கத்திற்குப் பதினொருமுறை அபிஷேகம்செய்து, ஒவ்வொரு அபிஷேகத்திற் கிடையிலும் வெள்ளைத் துணியால் துடைத்து சந்தனம் பூசி, செங்கழனிப் பூ முதலிய மலர்களாலும் தூபம், தீபம், பலவித நைவேத்தியங்கள் கர்ப்பூரம் இவற்றாலும் இறைவனை வழிபட்டார்கள். ஐந்து முகங்களுக்கும் தனித்தனி பூஜை நடந்தது. பின்னர் எல்லாப் பேறுகளைத் தரக்கூடியதும் சத ருத்திர ருத்தத்திலிருப்பதும், இன்பம் விரும்புவோருக்கு இன்பமும் முத்தி விரும்புவோருக்கு முக்தியு மளிக்கவல்லதும், மந்திரங்களுக்குள் சிறந்ததுமான பஞ்சாக்ஷர மந்திரத்தை ஓங்காரத்துடன் ஆயிரம் தடவை ஜெபித்தனர். பிறகு மறுபடியும் ஐந்து மூர்த்திகளையு மொன்றுக்கி மந்திரத்தை ஒரே சமயத்தில் எல்லோருமாக உரத்த குரலில் ஒலித்தனர். உடனே மனம் வாக்குக் கெட்டாதவரும், எல்லா மறிந்தவரும், எங்குமுள்ளவரும், அனைவர்க்கும் கன்மை பயக்குபவரும், ஆதியில்லாதவரும், ஸத்து சித்து ஆநந்த இலக்கணமுடையவரும், அம்மையோடு கூடியவருமான இறைவன் தோன்றினார். அவரைக் கண்ணுற்றதும் முனிவரனைவரும் வெற்றிகூறித் திரும்பத்திரும்ப அடி வணங்கித் தலைகுனிந்து போன்புடன் தோத்திரம் செய்ய ஆரம்பித்தனர்.

தேவர்களுக்குத் தேவனே போற்றி, உலகத்தின் பதியே போற்றி, பிறைசூடி போற்றி, சூலம் தரித்தவனே போற்றி! மறைகளாலறியத் தக்கவனே போற்றி, புண்ணியவடிவனே போற்றி, பிரம்ம விஷ்ணு ருத்திர உருவனே போற்றி, பரமசிவனே போற்றி, மகாதேவனே போற்றி,

மங்களமூர்த்தியே போற்றி, மலைமகள் மணாளனே போற்றி, யோகத்தில் களிப்பவனே போற்றி, யோகவடிவனே போற்றி, யோகிகளின் தலைவனே போற்றி, பிராணயாமம் செய்வோருக்கு தோன்றுபவனே போற்றி, உலக வடிவனே போற்றி, உலகிற் நிறைவனே போற்றி, உலகைத் தாங்குபவனே போற்றி! அன்பரின் அச்சத்தை அகற்றுபவனுக்கு வணக்கம், அருவனுக்கு வணக்கம், உருத்திரனே! உமது வெகுளிக்கு வணக்கம், உமது அன்பிற்கு வணக்கம், வில்லேந்திய உமக்கு வணக்கம், உமது இரு புயங்களுக்கு வணக்கம், பொன்னிறச் சடையுடையவனே! உமக்கு வணக்கம், ஆட் படையின் தலைவனே! உமக்கு வணக்கம், வளர்ச்சி யுடையோர் தலைவனே, உமக்கு வணக்கம், பரமாத்மாவே! உமக்கு வணக்கம்! தேவர்கள் போற்றும் சிவனுக்கு வணக்கம்! மலம் நீங்கியவனும் குணக்கடலும், முக்தி வழி காட்டுபவனும் தேவர்களுக்கு தேவனுமான சிவபெருமானுக்கு வணக்கம்!

என்றிவ்வாறு துதித்து, வசிஷ்டர் முதலான முனிவர் விசுவநாதக் கடவுளைப் பலமுறை வணங்கினர். உடன் கருணைக் கடலான பெருமான் அவர்களை நோக்கி "முனிவரே உங்கள் அன்புகண்டு மகிழ்ந்தேன். உங்கள் புகழுரையும் எனக்கு மகிழ்ச்சியளித்தது. அதில் வேதாந்தக் கருத்துக்கள் செறிந்து கிடக்கின்றன. மோகூம் பெறுதற்கு அது ஓர் கருவியாகும். இதன்மூலம் உங்களுக்குப் பிறவித் துக்கம் நீங்கட்டும். பக்தியுடன் இருப்போருக்கு அறம், பொருள், இன்பம் வீடும் தருவேன். இது திண்ணம்" என்று அருளினார். இவ்வாறு வரங்கள் கிடைக்கப் பெற்ற முனிவர் உடனே விரும்பியதையளிக்கும் கடவுளே! இந்த ஒரு வரத்தை எங்களுக்குத் தரவேண்டும். அதாவது உம்மிடம் எங்களுக்கு நிலைத்த பக்தி இருக்க வேண்டும் என்று இறைவனிடம் தெரிவித்துக் கொண்டனர். இறைவனும் "அப்படியே உண்டாகட்டும்" என்றருளிய வாறே லிங்கத்தினுள் மறைந்தார்.

பின்னர் வசிஷ்டர் முதலியோரும் பிரம்ம புரத்திலிருந்து வந்தோரும் இலிங்க வடிவமான விசுவேசுவரப் பெருமானை வணங்கி வேத மந்திரங்கள் சொல்லித் துதித்துவிட்டு எல்லோரும் முக்திமண்டபம் வந்து, அங்குள்ள தெய்வங்களனைத்தையும் கும்பிட்டு, நான்கு கோழிகளையும் காட்சிகண்டு தக்ஷிணமூர்த்திப் பெருமானின் முன்னிலையிலமர்ந்து வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், சாஸ்திரங்கள், உபநிடதங்கள் முதலிய வற்றை அளவளாவிப் பெருமானை மகிழ்வித்தனர். அதன்பின் முனிவர் அவணிருந்த பிரம்ம குமாரனை நாரதரை நோக்கி "தவத்தால் பாவம் களைந்த நாரத முனியே! பிரம்மாண்டத்தின் உள்ளும்புறமும் எங்கும் உமது தவ வலிமையால் தடையின்றி நீர் உலாவுகின்றீர். உமக்கு எல்லாம் உள்ளது உள்ளபடியே தெரியும். அந்தந்த இடங்களிலுள்ள புண்ணியத் தலங்களெல்லாம் உமக்கு கண்ணுய்த் தெரியும். அவற்றுள் மிகப்பழமை யானதும் மிகச்சிறந்ததும் எதுவென்று உம்மிடமிருந்து அறிந்துகொள்ள நாங்கள் ஆவல் கொள்கிறோம். தயவுசெய்து கூறவேண்டு மென்று வேண்டிக்கொண்டனர். அதற்கு நாரதர், முனிவரே! முன்னொரு காலத் தில் தலங்களின் மேன்மை பற்றி வேத வியாஸருக்கு ஸுதகுமாரர் சொல்லி யுள்ளார். ஆதலால் அவர்தான் உங்களுக்குச் சொல்லவேண்டும் என்று பதிலுரைத்தார். உடனே பக்கத்தில் வீற்றிருந்த வேத வியாஸரைப்

பார்த்து "எல்லாத் தருமங்களு மறிந்த வேத வியாஸரே! அறிஞருள்ளும் சிவனன்பருள்ளும் நீரே முதன்மையானவர். புராணங்கள், வேதங்கள், வேதாங்கங்கள், இதிகாஸங்கள், காவியங்கள், அலங்கார சாஸ்திரங்கள். காடகங்கள் முதலிய அனைத்தும் உமக்கு நன்முகத் தெரியும் இவற்றைக் கற்றுப் பிறருக்குச் சொல்லுவதில் உமக்கு நிகர்கிடையாது. ஆதலால் தலங்களனைத்திலும் மிகப்பழையதும் சிறந்ததும் எதுவென்று கருணை கூர்ந்து கூறவேண்டும்" என்று வணக்கத்துடன் தெரிவித்துக்கொண்டனர்.

இதைக்கேட்டு வேத வியாஸர் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவர்களிடம் கூறினர் "முனிவரே, உங்களுக்கு நலமான தொன்றுசொல்கின்றேன் கேளுங்கள். சிவ பக்தர்களுக்குள் முதன்மையானவர் அகஸ்தியர் மிகப் பழமையானவர். எல்லா மறிந்த சிவபெருமானின் குழந்தையான எல்லா மறிந்த ஆறுமுகக் கடவுளிடமிருந்து அறிவுபெற்றவர் முன்னொரு ஸமயம் கைலாஸ மலையின் உச்சியில் பெருமானை வணங்குதற்கு இந்திரன் முதலிய திக்பாலர்கள் பிரமன் விஷ்ணு இவர்களுடன் வந்திருந்தார்கள். அப்பொழுது பளுவினால் வடகோடி தணிந்து தென்கோடி உயர்ந்தது. இதனால் பூமியானது மிகப்பயங்கரமான தோற்றமளித்தது. இதைக் கண்ணுற்ற பெருங்கடவுள் தனது பக்தர்களுக்குள் சிறந்தவரான அகஸ்தியரை மலய மலையில் போய்த் தங்கும்படியாகக் கட்டளையிட்டார் இறைவனது ஆணையைத் தலைமேற்கொண்டு அவரும் அப்படியே செய்தார். அது முதற் கொண்டு பூமியானது சம நிலையிலிருக்கின்றது. ஆதலால் அவரே சிவ சேர்க்கைகளிற் சிறந்தவர். அறிவாளிகளிலும் முதல்வர். உங்களது ஒப்பற்ற வினாவிற்கு அவரே விடை கூறுவார்" என்றார்.

வியாஸரது மொழிகளைக்கேட்ட முனிவர் மனமகிழ்ந்து மூன்றல் வீற்றிருந்த ஜடை தரித்தவரும், சிவத் தியானத்திலீடுபட்டவரும், எல்லா வித்தையும் கற்றவரும், உருத்திராக்க மாலையணிந்தவரும், நீறு பூசிய மேனியுடையவரும், மலர்ந்த முகமுடையவரும், தனது ஒளியால் கதிரவனையொத்தவருமான அகஸ்தியரைக் கண்ணுற்று வணங்கி, "கந்தனருளால் ஞான மெய்திய பெரியோருக்கு வெற்றி! கந்தனடிகளிற் பற்றிய மனமுடையோருக்கு வெற்றி! கந்தனன்பர்களில் முதல்வனுக்கு வெற்றி! வேதாந்தங்களெனும் தாமரையோடைக்குக் கதிரவன் போன்றவனுக்கு வெற்றி! கந்தனறிவெனும் விளக்கிற்குத் திரி போன்றவனுக்கு வெற்றி" என்றவாறு துதித்து மறுபடியும் அவரிடம் "குடமுனிவரே! நீர் மிகப் பெரியவர். உண்மையில் கடவுளுக் கொப்பானவர். இல்லையேல் நீர் மலய மலையிலமரப் பூமியானது சம நிலைக்கு வருமா? நான்கு கடல்களையும் பருகி மறுபடியும் இருந்தபடியே விருக்கும்படி விடுவித்தீர்! சூரியன் சந்திரன் இவர்களின் போக்கிற்குத் தடை செய்த விந்தியமலையை அமிழ்த்தினீர்! உலகனைத்திற்கும் அச்சம் விளைவித்த வாதாபி, இல்வலன் என்ற அரக்கரை உண்டிசெய்தீர்! தாமிரபர்ணியாற்றில் நான்றோறும் நீராடி, நீறு பூசி, நித்திய கருமங்களை முடித்துப் பின்னர் பதினாறு உபசாரங்களுடன் சிவலிங்க வணக்கமும் மூன்று காலமும் செய்கின்றீர். உம்மால் தர்ப்பணம் செய்து விடப்பட்ட நீருக்கு பிரம்ம கணங்கள் ஆசைப் படுகின்றார்கள். தங்களது கலத்தின் பொருட்டு முனிவரும் பிதிருக்களும் அந்த நீரை விரும்புகின்றார்கள். பரமசிவனிடமிருந்து மூல சூத்திரங்

களைப் பெற்று அதன் வழியே தமிழ் மொழியையும், ஒலி, எழுத்து, யாப்பு, அணி இவற்றின் இலக்கணங்களையும் உலகம் உய்யும் பொருட்டு ஆக்கிக் கொடுத்தீர்! ஆதலால் நீரே எல்லோரிலும் பெரியவர்! சிவபெருமானது திருவாலயங்களையும், தீர்த்தங்களையும், தானே தோன்றிய லிங்கங்களையும் பெருமானது அருளால் நீரே கண்ருயறிவீர்! அவற்றுள் பக்தி முக்தி அருளக் கூடிய மிகச்சிறந்தது எது என்று எங்களுக்கு அருள வேண்டும். இதை அறிய எங்களுக்குப் பேரவா எற்பட்டிருக்கின்றது" என்று கூறினர்

அவர்களது மொழிகளைக் கேட்ட அகஸ்தியருக்கு உரோமம் சிலிர்த்தது; கண்களினின்றும் நீர் சொரிந்தது; முகத்தில் புன்னகை பூத்தது. அவர் முனிவரை நோக்கி தழுதழுத்த குரலில் "பெரியோரே, நீங்கள் பொருத்தமான கேள்வி கேட்டிருக்கிறீர்கள். அதற்குச்சொல்லுகின்றேன் கவனமாய்க்கேளுங்கள்" என்று மொழிந்து மனத்தை அமைதிப் படுத்தி விக்னேசுவரக் கடவுளையும், தனது குருவான கந்தபெருமானையும், ஆலவாய்மூர்த்தியையும், அங்கயக் கண்ணியம்மையையும் தியானித்து, வணங்கி, விருப்பம் தெரிவித்து, ஆதியான ஆறெழுத்து மந்திரத்தை ஜபித்து, தெய்வ நோக்கால் கண்டு சொல்ல வாரம்பித்தார். அப்பொழுது முனிவரனைவரும் வணங்கினர். அமைதியுடன் புனிதமான இந்தக் கேள்விப் படலத்தைக் கேட்போர் கங்கையில் நீராடிய பலன் பெற்று பாவங்களனைத்தினின்றும் விடுபடுவர்.



இரண்டாம் அத்தியாயம்.

தீர்த்தப் பெருமை.

பரீக்ஷியம்பெற்ற முனிவரே! "கேட்ட மாத்திரத்திலேயே பாவங்களையகற்றக்கூடிய தலம் தீர்த்தம் மூர்த்தி இவற்றின் பெருமையைக் கவனமாய்க் கேளுங்கள். இதனைத்தும் தேவியார் கேட்க பெருமானருளியது. அவ்வமயம் அம்மை மடியிலமர்ந்திருந்த முருகக் கடவுள் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டார். நான் விரும்பியதன் பேரில் அன்பருக்கருளும் மயில் வாகனன் அனைவற்றையும் எனக்குக்கூறினர். அதை இப்பொழுது நான் உங்களுக்கு உரைக்கின்றேன். ஆலவாய்க்கு நிகரான தலமோ, பொற்றாமரைக்கு நிகரான தீர்த்தமோ, சுந்தரமூர்த்திக்கு நிகரான இலிங்கமோ மூவ்வுலகிலும் கிடையாது. ஆனதுபற்றி அதன் மாட்சியைச் சுருங்கச் சொல்கின்றேன்.

உலகிலேயே மற்றவிடங்களைக்காட்டிலும் புண்ணியத் தலங்கள் சிறந்தவை. புண்ணியத்தலங்களில் சிவத்தலங்கள் சிறந்தவை. அவற்றுள் அறபத்தெட்டு மிகச் சிறந்தவை. அவற்றுள் கைலாயம் முதலிய பதினாறு முதன்மையானவை. அப்பதினாறுள் நான்கு மிக முதன்மை வாய்ந்தன. காசி முதலிய அந்நான்கினைப் பற்றிக் கூறுகின்றேன். காசியில் மரண மெய்தில் முத்தியுண்டு. விசுவேசுவரப் பெருமானிருப்பதால் அங்கு எல்லா நலன்களுமுண்டாம். அன்பர்களுக்கு இன்பம் வீடு இவற்றை பயக்கும் தென் கைலாய மிருக்கின்றது. அங்கு தேவரால் வணங்கப்பெற்ற காளஹஸ்தீசுவரம் என்ற இலிங்கம் உண்டு. மூன்றுவதாகப் புண்டரீகபுரமிருக்கிறது. அதைக் கண்ணுற்றாலே புக்தியும் முக்தியும் கிட்டும். அங்கு இறைவன் ஆனந்தக்கூத்து ஆடுகின்றான். ஆலவாய்த்தலமோ பெயர் கேட்டவுடனேயே களிப்பும் வீடும் தரவல்லது. அங்குள்ள இலிங்கம் தானே தோன்றியது. அதுதான் சோமசுந்தரமூர்த்தி. பிரம்மன் விஷ்ணு இந்திரன் முதலியோர் அதை வணங்குகின்றனர். எல்லாப் பேற்றையுமளிக்கக்கூடியது. இவ்வனைத்திலும் மிகப் பழமையான தலம் ஆலவாய். அங்குள்ள பொற்றாமரைத் தீர்த்தம் மிகச் சிறந்தது. பாவங்களனைத்தையும் விலக்கிவிடும். தானே தோன்றிய இலிங்கத்தின் பெருமையாலும், பொற்றாமரைத் தீர்த்தத்தினாற்றலாலும், அந்தத் தலத்தின் மாட்சியாலும், சிவபெருமான் அம்மையாருடன் அங்கு கோயில்கொண்டிருக்கிறார். அதனால் தலமானது சிறந்ததிலும் சிறந்தது.

என்று அகத்தியர் கூறவே முனிவர் அவரை நோக்கி "குடமுனியே, தலங்களின் சிறப்பையறிந்தவரே! ஓர் ஐயம்! காசி முதலிய முதன்மையான தலங்களுக்குள் ஆலவாய் மிகமிகச் சிறந்ததென்று கூறினீர். யாது காரணம்பற்றி?" என்றுவினவினர் உடனே குறுமுனி சொல்லத் தொடங்கினர்.

"பேரறிஞரே! நன்றாய்க் கேட்டீர்கள் குமரக்கடவுள் எப்படி அருளினாரோ அதையே சொல்கின்றேன். பரப்பிரம்மத்தின் பன்னிரண்

டாம் நிலையாயிருப்பதாலும், பூலோகத்தில், சிவலோகமாயிருப்பதாலும், சிவ பெருமானது திருவிளையாடல்களுக்கு உகந்த இடமாயிருந்திருத்தலாலும் ஆலவாய்த் தலமானது மற்றெல்லாவற்றிலும் சிறப்புற்றது. உலகில் புண்ணியத்தலம் ஒன்றும் இல்லாதிருந்தகாலத்தில் இறைவன்தான் கோயில் கொண்டு விளையாடுதற்கு இத்தத் தலத்தைத்தானே உண்டாக்கினன். ஆதலால் இறைவனுக்கே அதன் மாண்பு சன்றாய்த்தெரியும். அதைக் கேள்வியுற, அறங்களெல்லாம் உண்டாம்? நினைக்க, எல்லாப்பேருகளும் கிடைக்கும்? பார்க்க, விருப்பமெல்லாமீடேறும். தொடர்ச்சியாய் அங்குக் குடியிருக்க மேலாம் சிவஸாயுச்சியம் கிட்டும். காசி முதலிய தலங்களில் இறந்தபிறகே முக்தி? ஆலவாயிலோ இருக்கும்பொழுதே ஆதலின் ஆலவாய்க்கு நிகரான தலம் மூவுலகிலும் கிடையாது. பிரம்மஹத்தி செய்த இந்திரன் வேட்டை என்ற வெளிக்காரணத்துடன் தேவர்களோடு ஆலவாயடைந்து அந்தப் பாவத்திலிருந்தும் விடுபட்டான். மாபாதங்களெலும் பஞ்சிற்கு நெருப்புப்போன்றது அந்தத்தலம். ஆதலால் பாவங்களைக் களைய மக்கள் அந்தத்தலம் செல்லவேண்டும். தெரியாமலோ, அல்லது மயக்கத்தாலோ, அல்லது ஊழ்வலியாலோ அங்கு ஒருவன் போய்ச்சேரப் பாவங்களனைத்தும் தொலையும்.

மூன்னளில் புத்திகெட்ட ஓர் பிராம்மணன் காமவேட்கையால் தன் தாயிடம் புகுந்து, அதையறிந்த தன் தகப்பனை மண்வெட்டியால் கொன்றுவிட்டான். தகப்பனது ஆவி, அச்சம் பயக்கும் கொடியவடிவுடன் கையில் உலக்கை யேந்தி அவனைத் துறத்திக்கொண்டே சென்றது. அப்பொழுது நிகிலடைந்த அவன் எத்தனையோ இடங்களுக்கு ஓடிக் கடைசியில் ஊழ்வலியால் ஆலவாய் புகுந்தான். உடனேயே அந்தப் பாவம் அவனை விட்டகன்றது. காய்ச்சின இரும்பிற்பட்ட நீர் மறைவது போல் எல்லாப் பாவங்களும் அந்தத் தலத்தில் மறைந்துபோம். எறும்பு முதல் யானை ஈருக உயிர்களனைத்தும் அங்கு முக்திபெறுகின்றன. அங்கு ஓர் விசேடம். இறைவன் தனது சடையிலுள்ள பிறையினின்றும் அமுதை வாரியிறைத்தான் அந்த ஊரில். அதனால்தான் அதற்கு இனிப்பாம் மதுரை யெனப் பெயர் வந்தது. சிறப்புற்ற சிதம்பரத்தலத்தில் நடனம் ஒன்று; வெள்ளி யம்பலத்திலோ வென்றால் கால்மாற்ற அதிகம். தலங்களெத்தனையோ புவியிலுள; ஆனால் ஆலவாய்க்குச் சமமானது இல்லவேயில்லை. ஆலவாயைவிட்டு வெளிச்செல்பவன் கையிலுள்ள பாயஸத்தையெறிந்துவிட்டுக் கர்ப்பூரத்தை நக்குபனுக்கொப்பாவான். எல்லோர்க்கும் புக்தியும் முக்தியு மளித்தற் பொருட்டு இறைவன் தானேயுண்டாக்கியது அது. பிரம்மன், விஷ்ணு, இந்திரன் முதலான தேவர்கள் அந்தத்தலத்தை வணங்குகின்றனர். நினைத்த மாத்திரத்திலேயே பாவங்கள் போய்விடும்; பேறுகளனைத்தும் கூடும். எப்பொழுதுமே அங்குக்குடியிருப் போர்க்கு மறுபிறப்பு என்ற அச்சமே கிடையாது. இதில் ஐயமில்லை. அங்கு வாழும் அறிவிலியுங்கூட மகன் பேரன் பெற்றுச்சுகமாக வாழ்கின்றான். அசுவமேதம், அக்னிஷ்டோமம், அத்தியக்னிஷ்டோமம், பிருகஸ்பதியாகம், அதிராத்திரம், மகாராத்திரம், ஸோமயாகம், தரிசபூர்ணமாஸம், துவாதசாஹம், ஷோடசாஹம், வாஜபேயம், ராஜசூயம், விசிவஜித்து இவை போன்ற சிறந்த வேள்விகளா லடையும் பயனை ஆலவாயில் தங்குவோன் அடைகின்றான். எள், நெய், ஆடை, அணி, காராம்பசு, நெல் விளையும்

நிலம், இரத்தினம், பொன், வெள்ளி, தானியம், வேலைக்காரி, வேலைக்காரர், யானை, குதிரை, வீடு இவைபோன்ற சிறந்த தானங்களாலெய்தும் பயன் ஆலவாயில் தங்குபவனுக்குக் கிட்டும். காசி முதலிய மேலான தலங்களில் தொடர்ச்சியாகத் தங்குவோர் பெரும் பலனை அங்கு வசிப்பவர் பெறுவர். கட்குடியன், பிராம்மணனைக் கொன்றவன், குருவழித்தவன், குருவைக் கொன்றவன், பெண்வதை செய்தவன், உடன்பிறந்தாரைக் கொன்றவன், தாய்வதை செய்தவன், குருவின் மனைவியைத் தொட்டவன், திருடியவன் முதலானவர் ஆலவாயில் தங்குதலால் அந்தந்தப் பாவத்திலிருந்தும் விடுபடுகின்றனர். கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நர்மதை, தாமிரபரணி, இப்புண்ணிய ஆறுகளின் தீர்த்தங்களில் நீராடுதலாலேற்படும் பெரும்பயன் முழுதையும் ஆலவாயில் வாழக் கொடுத்து வைத்த நல்லோன் அடைகின்றான். வேறு தலங்களில் ஒருமாத காலம் தங்கி சாந்திராயணவிரதம் மேற்கொண்டதால் கிடைக்கும் நற்பயன் ஆலவாயில் ஒரிரவு தங்கி உண்டியருந்தலால் உண்டாம். மற்ற விடங்களில் ஒருமாதம் உண்ணா விரதத்தாலடையும் புண்ணியத்தை ஆலவாயில் ஒரு நாளிலேயே பெறமுடியும். சாதுர்மாஸ்ய விரதமிருந்து வேறு தலங்களிலடையும் பயனை ஆலவாயில் அட்டமியன்று உண்ணாவிரதத்தாற் பெறலாம். மற்றத் தலங்களில் ஆறு மாதம் உண்டி நீக்கியடையும் பயன் ஆலவாயில் சோமவாரத்தன்று விரதமிருப்பதாற் கிட்டும். இதில் ஐயமில்லை பிற விடங்களில் ஓராண்டு விரதமிருந்து அடையும் பலனை ஆலவாய்த்தலத்தில் சிவராத்திரி ஒருநாள் நோன்பு நூற்றுப் பெறமுடியும். அந்த ஆலவாயின் சிறப்பு எல்லையற்றது. அந்தச் சிறந்த தலத்தின் பெருமையை யாரே செப்பவல்லவர்? உள்ளத்தையடக்கி மனவமைதியுடன் அந்த ஆலவாயில் வாழுமொருவன் மூன்று வேளையுண்டியருந்திடலும் காற்றளவு உட்கொண்டவனாகவே கருதப்படுவான். ஒருபிடி கொடுப்பினும் அவன் பெருங்கொடையின் பயனெய்துவான். அங்குத்தங்கு பவனுக்கு எல்லாத் தீர்த்தங்களின் பயனும் எல்லா வேள்விகளின் பயனும், எல்லாமந்திரத்களின் பயனும் எல்லா யோகங்களின் பயனும் உண்டாம். அதனால் தனது நலத்தைக்கருதும் ஒருவன் அவ்விடத்தில் தங்கவேண்டும். அதிகம் கூறுவானேன். திருவாலவாய்த்தலம் பெரிதிலும் பெரிது. எல்லாவித நீராடுதலின் பயனையும், எல்லாவித வழிபாட்டின் பயனையும் அதுதரவல்லது. ஆதலால் அதற்கு நிகரான பழமைவாய்ந்த தலம் பிரிதில்லை. புனிதமானது. சிறப்புவாய்ந்தது. உடன் எல்லாப் பயன்களையும் தரக்கூடியது. சிறந்த சிவத்தலமென்றும், திருவாலவா யென்றும், ஸமஷ்டி வித்தியா நகரமென்றும், மதுரையென்றும், பூலோக சிவலோகமென்றும், ஜீவன் முக்திபுரமென்றும், நாற்கூடலென்றும், துவாத சாந்த மென்றும் அந்தத் தலத்திற்குப் பலபெயர்கள் உண்டு. இவ்வாறு அதன் பெருமையுள்ளது. திருவாலவாயானது சிறந்ததிலும் சிறந்த தலம். இதில் ஐயம் சிறிதேனுமில்லை.

என்றவாறு ஆலவாயின் பெருமையைக் கேள்வியுற்ற முனிவர் வியப்பெய்திக் குடமுனிவரை நோக்கி "பெரியவரே, தலத்தின் மாட்சியை யுணர்ந்த உம்மால் உண்மையே கூறப்பட்டது. அத் தலத்தின் மாண்பைக் கேட்டு நாங்கள் அடையவேண்டிய பயனை யெய்தினோம். இனிப் பொற்றுமை தீர்த்தத்தின் சிறப்பைச் சொல்லியருளல் வேண்டும்" என்று

வேண்டினர். அவரது மொழிகளைக் கேட்ட அகத்தியர் பொற்றுமரைக் குளத்தின் ஏற்றத்தைச் சொல்லப் புகுந்தார்.

"இருடிகளே! கேளுங்கள். பொற்றுமரை எவ்வாறு தோன்றிற்று, அதன் பெருமை என்ன என்பவைபற்றிக் கூறுகின்றேன். ஈசனைக்கு முத்தியளித்த ஸோமசுந்தரக் கடவுளின் ஆணையினால் அந்தத் தீர்த்தத்தில் நீர்ப் பிராணிகள் கிடையா. மேகங்களும், கங்கை முதலிய ஆறுகளும், கடல்களும் புண்ணியத் தலங்களிலுள்ள மற்றைய தீர்த்தங்களும் உலகில் தோன்றுவதிலிருந்த நாளில் கணத் தலைவரது வேண்டுகோளுக் கிணங்கி மூலமூர்த்தியின் அபிஷேகத்தின் பொருட்டுச் சுல மேற்திய பெருமானால் அத்தீர்த்தம் தோற்றுவிக்கப் பெற்றது. அஃதெப்படியெனில் முன்னொரு காலத்தில் கருணைக் கடலான சுடம்பவனப்பிரான் விளையாட்டாக உருவம் பூண்டு எங்கும் தன்னொளி வீச, மதி சூடியாய், முக்கண்ணனாய் அரவப்பூணூலுடையனாய், ஒரு கையில் சூலமும் மற்றொன்றில் திருவோடும் ஏந்தி, உமை யொருபாகனாய் விடையேறி, நந்தி முதலிய கணத் தலைவருடன் மூவுலகிலும் திரிந்தார்.


அப்பொழுது விண்ணவர் பேரன்புடன் ஆலவாயானைப்பார்த்துப் புகழ்ந்தனர். இறைவன் அவர்களது விருப்பத்தை நிறைவேற்றி யருள் புரிந்து, தனது சொந்தவிடமான கடம்பக் காட்டையடைந்து, நந்தி முதலான கணத் தலைவர்களை அருள் நோக்குடன் சுண்ணுற்றப் பேரிலிங்கத்தில் மறையும் திருவாயில் கணத் தலைவர் பெருமானையணுகி "ஸ்ரீவளமுத்தியூராசே! அன்பர்க் கருள்பவரே! திருமஞ்சன மற்றிருக்கும் பேரிலிங்கத்தைப் பாரும்! எங்களுக்கும் நீராடலில் மிகுந்த வேட்கையுண்டாயிருக்கின்றது. பேரிலிங்கத்தின் திருமஞ்சனத்திற்கும், மக்கள் குளிப்பதற்கும் மிகப்புனிதமானதும், இன்பம் வீடு இரண்டையும் தரவல்லதுமான தீர்த்தமொன்றை உடன் தோற்றுவித்தருள வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர். உடனே இறைவன் இலிங்கத்தின் தென்கிழக்கில் தனது சூலத்தால் இடித்தார். சூலத்தின் அடிப்பக்கம் பிரம்மாண்டத்தின் அடியோரங்களைத் தாக்கிற்று. உடன் அங்கிருந்து தூய தெளிந்த நீர்ப்பெருக்குகள் கிளம்பிச் சூலத்தால் தோண்டப்பெற்ற குளத்தை நிறப்பி, அதன்பின் மேல்நோக்கி யோடத்துவங்கின. உடனே உலகங்களழிந்துபோகாவண்ணம் இறைவன் அவற்றை நிறுத்தினர். பின்னர் சடையிலுள்ள கங்கை நீரைத் தீர்த்தத்திற் சேர்த்து கணத்தலைவரை நோக்கி 'கணங்களே! நான் சொல்வதைக்கேளுங்கள்! சிவனால் தோற்றுவிக்கப்பட்டமையால் இந்தத் தீர்த்தத்திற்குச் சிவ தீர்த்தமெனப்பெயர். இயல்பாகவே இது சிவத்தை (மங்களத்தை) தரக்கூடியதும்கூட. மூவுலகிலும் இனிபுண்டாகப் போகும் தீர்த்தங்களிலெல்லாம் இது பரமானதாகையால் (மேலானதாகையால்) இதற்குப் பரதீர்த்தமெனப்பெயர். தீர்த்தங்களுள் முதலானதாவதால் இதை ஆதி தீர்த்தமென்று சொல்வார்கள். பெரும் தீர்த்தங்களில் பெரிதாகையால் மகா தீர்த்தமென்றும், பாவங்களனைத்தையும் நாசம் செய்வதால் பாபநாசத் தீர்த்தமென்றும், அதைத் தொடுதலாலேயே அசுவமேத வேள்வியின் பயன் கிடைப்பதால் மகா புண்ணியப்பிரத தீர்த்தமென்றும், அறிவைக் கொடுப்பதால் ஞான தீர்த்தமென்றும், முத்தியைத் தருதலால் முக்தி தீர்த்தமெனவும், எனது தலையிலுள்ள கங்கையின் சேர்க்கையால்

சிவசங்கைத் தீர்த்தமென்னும், தீர்த்தங்களுக்குள் சிறப்புப் பெற்றதால் உத்தமோத்தம தீர்த்தமென்னும், அதை வழங்குவார்கள். வருங்காலத்தில், இந்திரனது வீருத்திராசுரனைக் கொன்ற பாவத்தை நீக்கப் போகிறேன். அப்பொழுது இதற்குப் பொற்றாமரை யெனப்பெயர் ஏற்படும். அறங்களனைத்தையுமளித்தலால் ஸருவசருமப் பிரததீர்த்தமென்றும், பொருள்களனைத்தையும் கொடுத்தலால் ஸருவார்த்தப் பிரத தீர்த்தமென்றும், காமங்களனைத்தையும் தருவதால் ஸருவகாமார்த்தப் பிரத தீர்த்தமென்னும், நீண்டவாயுளைக் கொடுத்தலால் தீர்க்காயுஷ்கர தீர்த்தமென்னும் இத்தகுப் பெயர்கள் உண்டு. இறைவனுல் வெட்டப்பெற்றமையால் தேவகாத மென்றும், சூலத்தால் தோண்டப்பெற்றமையால் சூலகாதமென்றும், பெரும் மாயைக் கடலில் அமுதம் போன்றிருப்பதால் மகாமாயார்ணவாபிருத மென்றும், புகழ் பயக்குவதால் யசஸ்கரமென்றும், வளர்ச்சியைச் செய்வதால் புஷ்டிகரமென்றும், திருவை யுண்டாக்குவதால் சிரீகர மென்றும், சிவத்தன்மை தருவதால் சிவத்துவதமென்றும், அச்சத்தை விலக்குவதால் பயாபஹமென்றும், தீர்த்தங்களிற் சிறந்ததால் தீர்த்தராஜனென்றும், எல்லாத்தீர்த்தங்களின் பயனைப்பயக்குதலால் ஸருவதீர்த்த பலப்பிரத மென்றும், பகைவரனைவரையும் அழிப்பதால் ஸருவசத்துரு ஹரமென்றும், கெடுதலனைத்தையும் நீக்குதலால் ஸருவாபத்நிரமென்றும், பிணியனைத்தையும் போக்குதலால் ஸருவரோகஹரமென்றும், பிறப்புப்பிணியகற்றுவதால் பவரோகஹரமென்றும், மாசனைத்தையும் கழுவதலால் ஸருவதோஷஹரமென்றும், மலடு நீக்குவதால் வந்தியாத்துவஹரமென்றும், துக்கங்களனைத்தையுமகற்றுவதால் ஸருவ துக்கஹரமென்றும், மகிழ்ச்சி யனைத்திற்கும் காரணமாதலால் ஸமஸ்தசுககாரணமென்றும், இதுபோல் வேறு பல பெயர்களுமுண்டு. இவை பொருளுக்கேற்றபடி உண்மை யானவை. இந்தத் தீர்த்தமானது எனது தீர்த்தமாகையால், அதற்கு எனது குணங்கள் உண்டு. இந்தத் தீர்த்தத்தில் ஒருவன் நீராடித் தேவர் முதலியோருக்குத் தருப்பணம் செய்து, கூடியவரை தானங்கள் கொடுத்து, மேலான தான பஞ்சாக்கர மந்திரத்தை ஜெபித்து, வலம் வருதல், வணங்குதல், புகழ்தல், இவற்றுல் என்னை மகிழ்வித்தால் கடமை நிறைவேற்றியவனுவான். இது உண்மை. இது உண்மை. இந்தத் தீர்த்தத்தைக்கொண்டு, ஒரு கடவை இலிங்கங்களுக்கு அபிஷேகம் செய்ய, எல்லாத் தீர்த்த நீரால் அபிஷேகம் செய்த பயன் கிடைக்கும். ஆதலால் நீங்கள் தீர்த்தத்தில் நீராடி எனது லிங்கமூர்த்திக்கு கள்தோறும் அபிஷேகம் செய்யுங்கள்'' என்று கூறி ஆலவாயழகன் கணங்களுடன் தீர்த்தத்தில் இறங்கி நீராடி, கணங்களுக்கும் நீராட ஆணையளித்துவிட்டு தான் தோன்றிய லிங்கத்தில் மறைந்தார்.

பிள்ளை கணங்களும் இறைவனது ஆணைப்படி பொற்றாமரையில் நீராடி இலிங்கத்திற்கும் அபிஷேகம் செய்து எல்லா விருப்பங்களையும் பெற்றனர். இவ்வண்ணம் பொற்றாமரை தோன்றிய வரலாற்றைக் கூறினேன். முனிவரே 'இனி அதன் பெருமையைச் சொல்கின்றேன். அதைப் பார்த்தலாலேயே பாவங்களனைத்தும் போய்விடும். அதில் நீராட மிகுதியான பேறுகள் கிட்டும். பொற்றாமரையில் ஒரு முழுக்கு முழுகினுலே எல்லாத் தீர்த்தங்களில் நீராடிய பயன் கிடைக்கும். முறைப்படி, தூய தான மண்ணுடன், பாவத்தைப்போக்கும் அகமருஷண மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு நீராடினுல், தீர்த்தங்களனைத்திலும் தானங்களனைத்தையும்

கொடுத்த பயனும் புண்ணியமுமுண்டாம். முனிவரே இது உண்மை. தெரியாமல் தொட்டாலும் நெருப்பு எவ்வாறு சுடுகின்றதோ, அவ்வாறே இத்தத் தீர்த்தத்தை அறியாமல் தொட்டாலும் பாவங்களகன்றுவிடும். பொற்றுமலையிற் குளிப்பவன் எவனுயினும் அவனுக்கு ஜீவன் முக்தியுண்டு. பொற்றுமலை முழுக்கானது வருணன். அக்கினி, இந்திரன், வாயு இந்தத் தேவர்களது மந்திரங்களைச் சொல்லிச்செய்யும் மந்திர முழுக்கினும் மேலானது. சிவகங்கைத் தீர்த்தத்தில் நீராடிச் சோமசுந்தரக்கடவுளை வணங்குபவனுக்குக் கிட்டும் கலன் எல்லையற்றது பொற்றுமலைப் பொய்கை நீரானது சாத்திரங்களிற் கூறப்பட்ட தூய பொருள்களனைத்திலும் தூயது. நம்பிக்கையில்லாது அதில் நீராடுபவனுக்கும் சுவர்க்கம் கிடைப்பது திண்ணம். நம்பிக்கையுடன் நீராடி முறைப்படி தருப்பை, எள் முதலியன கொண்டு தேவர்களுக்குத் தர்ப்பணம் புரிபவன் வேள்விகளனைத்தும் செய்த பயனடைவான். பொற்றுமலையில் நீராடி தனது நிலைமைக்கேற்பப் பொன் தானம் கொடுப்பவன் மஹாதானங்கள் செய்த பலனெய்துவான். மற்றத் தீர்த்தங்களில் செய்யும் நீராடல், நோன்புநூற்றல், தவம், ஈதல் இவற்றிலடையும் பயன் பொற்றுமரைக் கரையில் கோடிமடங்காகின்றது. பிறத்தாளன்று பொற்றுமரையில் நீராட முன்பிறப்பு வினைகளெல்லாம் நீங்கும். சித்திரை, மாசி, கார்த்திகை இம்மாதங்களில் பொற்றுமரை கிடைப்பதரிது. அமாவாசை நீராடலுக்கு நூறுமடங்கும், மாதப்பிறப்பன்று ஆயிரம்மடங்கும், கிரஹணத்தன்று நூராயிரம் மடங்கும், ஐப்பசி மாதப்பிறப்பன்று பதினாயிரம்மடங்கும், தட்சிணாயனம் உத்தராயணம் இந்த இரண்டு நாட்களில் நூறுயிரம் மடங்கும், திங்கட்கிழமையன்று வரும் அமாவாசையன்று கணக்கிட முடியாததுமான புண்ணியமுண்டென்று சாஸ்திர மறிந்தோர் கூறுகின்றனர். பொற்றுமரை முழுக்கினுல் பிரம்மஹத்திக் குற்றமும் தொலையும். மற்றக் குற்றங்களைப் பற்றிச் சொல்வானேன். பொற்றுமரையில் நீராடிப் பிண்டதானம் செய்யப் பிதுருக்கள் பிறவிக்கடலினின்றும் மீட்கப்படுவர். தருப்பணத்தில் எத்தனை திலங்கள் நீருடன் விடப்படுகின்றனவோ அத்தனையாயிரமாண்டுகள் பிதுருக்கள் சுவர்க்கத்தில் வாழ்வர். உலகிலுள்ள புண்ணிய தீர்த்தங்களெல்லாம் பொற்றுமரைக்குப் பணியாற்றுகின்றன. ஆலவாயி லிங்கத்தை வணங்குதலால் எங்குமுள்ள தேவர்களை வழிபட்டபயன் கிட்டுவதுபோல் பொற்றுமரைத் தீர்த்தத்தில் நீராடத் தீர்த்தங்களனைத்திலும் நீராடிய பலன் கிடைக்கும். பொய்கையிற் குளித்துப் பெருமானை வழிபட, இப்பிறப்பிலேயே வீடுகிட்டிவிடும். அக்கினி ஹோத்திரங்களும், வேதங்களும், நோன்புகளும், கொடைகளும், தவமும் பொற்றுமரைக்கரையில் இலிங்க வழிபாட்டின் கோடியிலொருபங்கிற்கு நிகராகா. முப்பிறப்பிலாற்றிய தவம், நோன்பு, இவற்றாலேற்படும் பயன் பொற்றுமரைக் குளியால் நாள்தோறு மேற்படும். சிவபெருமான் எட்டு மூர்த்திகளுடையனல்லவா! அவற்றுள் நீர்மயமான வடிவமே இந்தப் பொற்றுமரைப் பொய்கை. மாசிமாதம் முழுதும் பிரயாகையில் நீராடக்கிடைக்கும் பயன் ஒருநாட் குளியினாலேயே பொற்றுமரையில்கிட்டும். மலடியானவள் ஒராண்டு நீராடி அம்மரையையும் அப்பனையும் வழிபட்டால் நல்ல மகனைப் பெறுவாள். பெயர்பெற்ற பெரிய தீர்த்தங்கள் பலவுள. ஆயினும் அவை பொற்றுமரைக்கு நிகராகா. அதைக்காண்டலறத்தையும், தொடுதல் பொருளையும், பருகலின்பத்தையும், அதில் நீராடல் வீட்டையும் பயக்கும். தீர்த்தங்களில் முதலானதும், பிறதீர்த்தங்களால் வணங்கப் பெற்றதும், பாவங்களாற

மெரி பொருளிற்கு நெருப்பும், புண்ணியமாம் பயிருக்கு முகிலும், சுகப்பேறு வீட்டுப்பேறு இவற்றிற்குக் காரணமானதுமான திருப் பொற்றுமையைப் பொய்கையின் மாட்சியிலொரு பாகமே கூறப்பட்டது. தீர்த்தப் பெருமை யுடனுலவாய்த்தலமான்மியத்தை யொருமுறை கேட்டல் புக்தியையும் முக்தி யையும் பயக்கும்.





ஸ்ரீ மீனாக்ஷியம்மையார்

மூன்றும் அத்தியாயம்

மூர்த்திப் பெருமையும், திருவிளையாடல் சுருக்கமும்.

ஆலவா யிலிங்கத்தின் மாட்சி மிகவும் வியக்கத்தக்கது சுருக்கமாய் கூறுகின்றேன். முனிவரே! கேளுங்கள். மேரு, மந்தரம், கைலாயம், காசி, சிரீசைலம் முதலான பேறுகளனைத்தும் தரவல்ல சிவத் தலங்களி லெல்லாம் தானே தோன்றிய இலிங்கங்கள் தோன்றுவதற்கு முன்னரே கடம்பக் காட்டின் நடுவில் அவ்விலிங்கம் தோன்றலாயிற்று. அதனால் இதற்கு நிகரான பழமை பொருந்திய இலிங்கம் சுருதிகளிலோ, ஸ்மிருதிகளிலோ, புராணங்களிலோ இல்லவேயில்லை உமையுடன் கூடி யிருத்தலாலும் இயல்பாகவே அழகாக விருப்பதாலும் முன்னாளில் தேவர் கள் இந்த இலிங்கத்திற்குச் சோமசுந்தரமூர்த்தி யெனப் பெயரமைத்தனர். இலிங்கங்க ளனைத்திற்கும் மூலமானதுபற்றி அதற்கு மூல லிங்கமெனப் பெயர். தானேதோன்றிய அவ்விலிங்கம் உலகெலாம் பரவி கிற்றலால் பிரம்படி எங்கணும் தெரிந்தது. தனித்தனி மூர்த்திகளின் தொகுதியான சோமசுந்தரமூர்த்தியைத் தொழுவதால் எல்லாத் தல மூர்த்திகளையும் தொழுத பயன் கிடைக்கும். மரத்தின் வேரில் நீரூற்றக் கிளை களெல்லாம் தழைப்பது போல் மூல இலிங்கமான வாலவாய் மூர்த்தியை வழிபட மூர்த்திக ளனைத்தும் வழிபட்டனவாகும். எந்தக் கடவுளா லறுபத்து நான்கு திருவிளையாடல்களும் புரியப் பெற்றனவோ, எவரால் கருங் குருவிப் பறவைக்கு மிருத்யுஞ்சய மந்திரம் சொல்லி வைத்துப் பறவை களனைத்திலும் உயர்ந்த தன்மை யளிக்கப்பட்டதோ, எவர் காரைக்கு நிர்வாண நிலையை யருளினரோ, எவர் எனக்குத் தமிழ் மொழி யிலக்கணச் சூத்திரங்களைக் கற்பித்தாரோ, எவர் (பிட்டிற்கு) மண் சுமந்தாரோ, எத்தப்பெருமாள் தனது மாயா வலிமையால் நரிகளைப் பரியாக்கிப் பாண்டிய வரசனுக்கு விற்றாரோ, எவரால் வேதத்தை யிகழ்பவரான சமணர்கள் கழுவி லேற்றப் பட்டனரோ, எந்த வள்ளல் பன்றிக் குட்டி களுக்குப் பால் ஊட்டிக் காப்பாற்றினரோ அவருக்கு நிகரான தெய்வம் உண்டானது மில்லை உண்டாகப் போவது மில்லை. அதனால் அம் மூர்த்தியானது அனை வராலும் வணங்கத்தக்கது. எல்லா மூர்த்திமயமானது. மேலானது. அறம், பொருள், இன்பம், வீடு இந் நான்கிற்கு மாதாரமானது. இது உண்மை. வேள்விகளில் அசுவமேதமும், மலைகளில் பரி மலையும், நோன்புகளில் சோமவார நோன்பும், மந்திரங்களில் ஆறெழுத்தும், கொடைகளில் சோற்றுக் கொடையும், வருணங்களில் பிராம்மண வருண மும், உரிய மக்களில் சிவனன்பனும், அறங்களிற் சிவ வழிபாடும், தெய்வங் களில் சிவபெருமானும், தருக்களில் தேவத்தருவும், ஆவினத்திற் காம தேனுவும், தீர்த்தங்களிற் பொற்றாமரையும், இரத்தினங்களிற் சிந்தாமணி யும் போல இலிங்கங்களில் தானே தோன்றியது சிறந்தது. தான் தோன்றி யிலிங்கங்களிற் சிறந்தது சோமசுந்தரப் பெயருடைய பூலோக சிவலோகப்

பெருமானது திருமூர்த்தி, அவ்விலிங்கம் பேரொளி; அது பெரிதிலும் பெரிது; அது உலகத்தின் ஆதி; அது பேறனைத்தும் தாவல்லது. உலக மூய்யும் பொருட்டுக் கலைகளற்ற பெரும் பொருள் ஆலவாயில் இலிங்க வடிவாய்த் தோற்ற மளிக்கின்றது.

உலகிலுள்ள தான் தோன்றி யிலிங்கங்க ளனைத்து ஆலவா யழகனைக்காண வருகின்றன. ஆலவாய் மூர்த்தியைப் பரிவுடன் காண் கின்றவன் கைலாய மலையிலமரும் பெருமானையே நேரில் பார்க்கின்றான். கதிரவன் தோற்றத்தி லிருள் போலும், சிங்கத்தின் முன் யானை போலும், சிவனறிவில்லறிவீனம் போலும் கருடனைக் கண்ட பாம்பு போலும், பெருங் காற்றிலகப்பட்ட முகில் போலும், வச்சிரத்தா லடிபட்ட மலைபோலும் பாவங்க ளனைத்தும் ஆலவாய் மூர்த்தியைக் காண்ட லால் சிதறிவிடும். காமத்தா லறிவும், கோபத்தால் தவமும், செருக்கால் படிப்பும், சிறந்த மருந்தாற் பிணியும், பேராசையால் நற்குணமும், தீப்பொறியால் பஞ்சும் போல் குற்றங்க ளெல்லாம் சோம சுந்தரப் பெருமானைக் காணவழியும் ஆலவாய் மகாலிங்கத்தைக காலையிற் காண்டல் கடல்சூழ்ந்த பூமியனைத்தையு மீந்த பயனைப்பயக்கும். உச்சி நேரத்திற் காண வாயிரம் காராம் பசுக் கொடுத்த பயனைப் பெறலாம். அந்தி நேரத்தி லொருமுறை கடம்பக் காட்டிறைவனைக் காண ஆக்கள் கோடி தந்த பயன் கிட்டும். பாதி ராத்திரியில் நாற்கூடப்புரி மன்னனை யொருமுறை காணுமன்பன் அசுவமேதம் முதலிய வேள்விகளின் பயனை யெய்துவான். இவ்வாறு தெரிந்து கொண்டு அறிவுடையொருவன் நாள் தோறும் அந்தந்த நேரத்தில் ஆலவாய்க் கடவுளை வலம் வந்து, வணங்கிப் புகழ்ந்து வழிபட்டால் பாவங்கள் நீங்கிப் பேறுகள் பெற்று இப்பிறப்பிற் சுக வாழ்வு வாழ்ந்து பின்னர் சிவனுடன் கலப்பான். அந்த மூர்த்தியைக் கேள்விப் படுதலாலேயே பத்துப் பிறப்புக்களிற் கூடிய பாவங்கள் தீயிலகப் பட்ட பஞ்சுபோ லெரிந்துபோம். இலிங்கத்தை நினைப்பதால் நூறு பிறப்புப் பாவங்கள் கதிரவனைக் கண்ட விருள் போல் நீங்கிவிடும். ஆலவாய்ப் பெருமானைக் காணுதற்கு வீட்டிலிருந்து புறப்படவே ஆயிரம் பிறவிப் பாவங் களழிந்துவிடும். கடம்ப வன நாதனை இலிங்க மூர்த்தியாகக் காணுதலால் ஆயிரம் அசுவமேத வேள்விப் பயன் கிடைக்கும். பண்களா லும், உருத்திர சூக்தங்களாலும் புகழ வாயிரம் இராசசூய வேள்விகளின் பயனுண்டாம். மூலமூர்த்தியை உள்ளங்கை நீரால் நீராட்டப் பிறவிடங் களிற் பொற் கலயங் கொண்டு நீராட்டிய பயன் வரும். பஞ்சகவ்வியசுத்தி செய்து பஞ்சாமிருதம் முதலியவற்றாற் குளிப்பாட்டிப் பெரும் வழிபாடு நடத்த நான்கு குறிக்கோள்களும் கிட்டும். ஆலவா யிலிங்கத்தை வடி கட்டிய நீரா லபிஷேகம் செய்ய நூறுயிர வசுவமேதப் பயன் பெறலாம். கர்ப்பூர சுந்தர மூர்த்தியைப் பச்சைக்கர்ப்பூரம் சந்தனம் முதலிய நறுமண பொருள்களாற் பூசி ஒரு பூ வெடுத்து வணங்கப் பிற தலங்களிற் பொன் மயமான நூறு மலர்களால் வழிபட்ட பயன் தோன்றும். சோமசுந்தர மூர்த்திக் கொருமுறை புகைகாட்ட வாயிரம் குற்றங்கள் மன்னிக்கப்பெறும். நெற்றிக் கண்ணனுக்குக் கர்ப்பூர விளக்குக் காண்பிக்க வருவ மெலாம் கர்ப்பூரம் போல் மாசற்ற தாகும். நைவேத்தியம் கொடுத்தால் இன்பங் களை யனுபவித்துக் கொண்டு சிவ லோகத்தில் வாழலாம். தாம்பூலம் தந்தவனுக்குச் சிவ லோகத்தில் நூறு கோடி யாண்டுபரிபாலனம்.

சோமசுந்தரமூர்த்தியின் வழிபாட்டிற்கு மணி, கலயம், தூபம், தீபம் முதலியன தருபவன் பாவங்களினின்றும் விடுபட்டு விருப்பங்களனைத்தையும் பெறுவான். மூர்த்தியின் முன்னிலையில் ஆடல், பாடல், வாத்தியம் இவற்றை யமைப்பவன் முன்னிலையில் எப்பொழுதும் இவை நிகழும். ஆலவாய் மூர்த்தியின் முன்னர் தடிபோல் வீழ்ந்து வணங்குபவன் அனைவராலும் வணங்கப்பெற்ற வரசனுவான். இறைவனது முன்னிலையிற் செய்யப்படும் ஜெபம், ஓமம், தவம், கொடை முதலியன சிறக விருத்தாலும் பெரும் பயன் பயக்கும். பெருமானின் மாட்சிமுழுதையு முரைக்க யாரே வல்லவன். கடம்ப வனத்தை யொத்த தல நிலையமும், பொற்றுமரைக்கு நிகரான புண்ணிய தீர்த்தமும், சோமசுந்தரமூர்த்திக்குச் சமமான இலிங்க மும் கிடையாது. மூலலிங்கத்தை ஹாலாஸ்ய சுந்தரம், கர்ப்பூர சுந்தரம், கடம்பவன சுந்தரம், கலியாண சுந்தரம், அபிஷேக சுந்தரம், சுந்தரேசன், கஸ்தூரி சுந்தரம், ஸத் சுந்தரம், அபய சுந்தரம், ஆதி சுந்தரம், ஆனந்த சுந்தரம், தேவ சுந்தரம், சுவர்ண சுந்தரம், பாண்டிய சுந்தரம், ஸமஸ்தி வித்தியாபுர சுந்தரம், மதுரை நாதன், கன்னி நகர நாதன், நாற்கூடபுர நாதன், பூலோக சிவலோக நாதன், ஜீவன் முக்திபுர நாதன், என்றிவ் வாரெல்லாம் முனிவர் கூறுவர். சிவ நாட்டுத் தலை நகரான கடம்ப வனத் தில் உலக நலத்தின் பொருட்டுக் கீழே பூலகத்திற் கடினினின்று இவ் வமுதமூர்த்தி தானே தோன்றிற்று. எனது குருவான கர்த பெருமான் அதன் மேன்மையை எனக் கெவ்வாறு எடுத்துரைத்தாரோ அவ்வாறே உங்களுக்கு நான் அதைக்கூறினேன் எனப் பகர்ந்து முடித்தார்.

பின்னர் ஆலவாய் மூர்த்தியின் திருவிளையாடல்களைப் பற்றிக் கேட்க வவாக்கொண்ட முனிவர் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு ஆர்வத்துடன் குட முனிவரை நோக்கி, "சாத்திரங்க ளனைத்து மறிந்த பெரியவரே! தலத்தினுடையவும், தீர்த்தத்தினுடையவும், மூர்த்தியி னுடையவும் பெருமையைக் கேட்டுச் சோமசுந்தரக் கடவுளிடம் எங்களுக் குப் போன்பு பிறந்திருக்கின்றது. குறிப்பாக முன்னம் கூறப்பட்ட அவரது அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் இப்பொழுது வரிசையாகச் சொல்லியருள வேண்டும்" என்றுகேட்டுக் கொண்டனர்.

எனவே அகத்தியர், "முனிவரே! கேளுங்கள். எவற்றைக் கேட்டவுடனேயே பிரம்மஹத்திப் பாவம் தொலையுமோ அந்தத் திருவிளை யாடல்களை வரிசையாகவும் சுருக்கமாகவும் கூறுகின்றேன். ஆலவாய்ப் பெருமான் மனம் வாக்கிற் கெட்டாதவர் எல்லாத் தேவர்களும் அவரடி மலர்களை வணங்குகின்றனர். இரக்கமுடையவர், எல்லாப் பிராணிக ளிடத்தும் பரிவுகாட்டு மியல்பினர். அனைத்துமறிந்தவர் தேவர்களுக்கு முதல்வர். அறிவானந்த வடிவினர். சிறிதிலும் சிறியவர். எல்லாமானவர். பெரிதிலும் பெரியவர். இறைவன். கடம்பவனத் தலத்தில் தானே தோன்றிய பெருமை வாய்ந்த இலிங்கத்தில் எப்பொழுது முய்பவர். சந்திர வமிசத்தில் தோன்றிய பாண்டிய மன்னர் அப் பெருமானை நான் தோறும் பேரன்புடன் தமது பண்டங்களாலும் செல்வத்தாலும் வழிபட்டனர்.

இதுதவிர, இந்திரன் முதலிய விண்ணவர் மிகவன்புடன் பேரி லிங்கத்தை வணங்கினர். இவர்களது அன்புவயப்பட்டு இறைவன் திரு

விளையாடல்களைப் புரிந்தார். கிருத யுகத்தில் பதினெறு, திரேதா யுகத்தில் பதினெறு, துவாபர யுகத்தில் பதினெறு, கலியுகத்தில் பதினெறு ஆக மொத்தம் அறுபத்து நான்கு விளையாடல்கள் பெருமானால் புரியப்பட்டன. அவை வியக்கத்தக்கவை மிகத் தூயவை. புகழ் பெற்றவை. அவ் வறுபத்து நான்கினையும் வரிசையாய் பகர்கின்றேன்.

(1) இந்திரன் பழி தீர்த்தல் (2) வெள்ளை யானைக்கு முனி சாபத்தினின்று விடுதலை (3) கடம்பக் காட்டில் மதுரை நகர் தோன்றுதல் (4) தடாதகைப் பிராட்டியாரின் திருப்பிறப்பு (5) பாண்டியமன்னனுடன் பிராட்டியாரின் திருமணம் (6) தோழனை பதஞ்சலி முனிவருக்காகப் பெருமானின் திருக்கூத்து (7) குண்டோதரனுக்குப் பேருண்டி யருந்த வாற்றலளித்தல் (8) பூமிக்குள் ளோடும் வையை யாற்றைக் குண்டோ தரனுக்குக் காண்பித்தல் (9) எழு கடலழைத்தல் (10) விண்ணுலகி னின்றும் மண்ணுலகிற்கு மலயத்துவஜ பாண்டியனைக் கொணர்தல் (11) உக்கிர பாண்டியன் பிறப்பு (12) உக்கிர பாண்டியனுக்கு வையம் முதலிய மூன்றாயுதங் கொடுத்தல் (13) வேலாற் கடலைச் சிதைத்தல் (14) இந்திரன் முடி தகர்த்தல் (15) மேரு மலையிலிருந்து பொன் பறித்தல் (16) முனிவர்க்கு வேதப் பொருளுரைத்தல் (17) அரசன் முடிக்கு மாணிக்கம் விற்றல் (18) கடல் வற்றடித்தல் (19) வெள்ளம் தடுத்தல் (20) அதிசயச் சித்தராதல் (21) கல்லானைக்குக் கரும்பு தரல் (22) சமணரது யானையை வதைத்தல் (23) அந்தணப் பெண்ணிற் கனுக் கிரகம் செய்தல் (24) கால்மாறி யாடல் (25) பிரமனின் மனைவியின் கொலை விளக்கம் (26) தாயின் கற்பழித்துத் தகப்பனைக் கொன்ற வரைக் காப்பாற்றி யருளல் (27) அங்கம் வெட்டல் (28) சமணர்களைவிய சர்ப்பத் தணித்தல் (29) சமணரேவிய மாயைப் பசுவதம் (30) பாண்டியனது படைத்தலைவனைக் காக்கப் பட்ட காட்டல் (31) பாண்டியமன்னனுக்குப் பொற்கிழி யளித்தல் (32) வைசியர் வீதியில் வரையல் விற்றல் (33) இயக்க மகளிர்க்கு அஷ்ட சித்தியருளல் (34) சோழராசனுக்கு வாயிலைத் திறத்தல் (35) பாண்டியன் படைக்குத் தண்ணீர் கொடுத்தல் (36) பூவனத்தில் மலைவாதம் புரிதல் (37) புரவி மீதேறிச் சோள மன்னனைச் செயித்தல் (38) அன்பனுக்குக் குறையாக் களஞ்சிய மளித்தல் (39) வணிகச் சிறுவ னின் வழக்குவென்றி (40) வரகுண பாண்டியனது பழிநீக்குதல் (41) வீறகு விற்றல் (42) சேர ராசனுக்குத் திருமுகம் கொடுத்தல் (43) பத்திரர்க்குப் பலகையிடல் (44) பத்திரர் மனைவிக்கு வாதில் வெற்றி யளித்தல் (45) பன்றிக் குட்டிகளைப் பாலூட்டிக் காப்பாற்றல் (46) பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்குதல் (47) கரிச்சான் குருவி யெதிரிகளை வென்றல் (48) கரைக்கு முத்தி கொடுத்தல் (49) நகரின் வல்லை வகுத்தல் (50) சோள ராசனைத் திருப்பெயர் பொறித்த அம்புகளால் வென்றல் (51) சங்கத் தார்க்குப் பலகை யளித்தல் (52) அந்தணனுக்குத் தான் செய்த தூலைக் கொடுத்தல் (53) கற்கோடைக்காத்தல் (54) நற்கீரருக்கு சூத்திர முரைத்தல் (55) நூல்களின் எற்றைத் தாழ்வு காண்டல் (56) இறைவன் வடக்கு மதுரை யடைதல் (57) வலேச்சி திருமணம் (58) வாதவூருக்குத் தீக்ஷை கொடுத்தல் (59) அரசனுக்கு மாயக் குதிரை விற்றல் (60) பரிசியாதல் (61) பிட்டுக்கு மண் சுமத்தல் (62) கூன் பாண்டியனது காய்ச்சல் நோய் தீர்த்தல் (63) சமணர் கழுவேற்றம் (64) வன்னிமரம், கிணறு இறைவன் சாட்சியம்.

கடம்பவனக் கடவுளிவ்வாறுள்ள அறுபத்து நான்கு திருவிளையாடல்களைக் கேட்போரும் புகழ்வோரும் பேறனைத்தையும் அடைவர். சுருக்கச் சுலோகங்களை மாத்திரம் நினைத்துக் கொண்டு யாதாெரு செய்கையிலிறங்குமுன் அது நிர்ணயமாய் ஈடேறும். இவ்வண்ணம் ஆலவாய்ப் பெருமானின் திருவிளையாடல்களின் முறை கூறப்பெற்றது. இனி அவற்றை ஒவ்வொன்றாக வரிசையாச் சொல்லப்போகிறேன். முதலாவதாக இந்திரன விருத்திராசுரனைக் கொன்ற பழியைத் தீர்த்துக் கொண்ட விபரம் கூறுகின்றேன். கேட்டால் மங்களம் தழைக்கும் அந்த விளையாடலைக் கேளுங்கள். இவ்வாறு மூர்த்தியும் பெருமையும் திருவிளையாடல்களின் சுருக்கமும கூறப்பட்டன. மனவமைதியுடன் படிப்போரும் கேட்போரும் சிவனருளால் பாவங்களை யகற்றிப் பேறுகளைப் பெற்று, கடைசியில் இறைவனைடு கூடுவர்.



நான்காம் அத்தியாயம்.


விருத்திரன் வதை.

மூன்னுளில் கிருதயுகத்தில் அழகான வமராவதி நகரில் விசுவ கருமனுல் தவவலிமை கொண்டு அமைக்கப்பெற்ற சுதர்மையெனும் பெயரு டன் விளக்கும் அவையில் அரியிருக்கையிலமர்ந்து விண்ணவர் கோமான் கொலு வீற்றிருந்தான். மூப்பத்துமூக்கோடி தேவர்களும் எவ லெதிர் பார்த்து கின்றனர். அப்சரப் பெண்கள் பணிபுரிந்தனர். நாரதர் முதலிய முனிவர் இந்திரனுக்கு ஆசிமொழி கூறினர். பாட்டுக்காரர் பாடினர். அரம்பை முதலான வாட்டக்காரர் ஆடினர்.

அப்சரக்குழுவில் முதன்மையானவளும் பிகவழகியுமான திலோத் தமை அனைவரும் மயங்கும்படியாய்ப் பாடிக்கொண்டு அதிசய வாடலாடி னள். இமையவர்கோனும் அவளைக்கண்டு சற்று நேரம் மெய்மறந்தான். அவ்வமயம், தேவகுரு அவனைப் பார்க்கவந்தார். இந்திரன் எழுந்து வணக் கம் முதலியன செய்யவில்லை. தன்னைக் கவனிக்கவில்லையென்று சினங் கொண்டு தேவகுரு நல்லபார்வையுள்ள தேவருள்பட எவர்க்கும் புலப்படா மற் செய்துகொண்டார்.

திலோத்தமையது ஆடல்கண்ட விண்ணவர் வியப்பில் மூழ்கினர். தேவராசன் அவளுக்குச் சிறந்த வாபரணங்கள் முதலியவற்றை யளித்தான். வந்திருந்த தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் முறைப்படி மரியாதைகள் நடத்தன. பின்னர், இந்திரன் ஒவ்வொருவரையும் குளிர்ந்தபார்வையுடனும் இனிய மொழிகளுடனும் அவரவரில்லத்திற்கு வழியனுப்பினன். பிறகு குரு வந்தது மனத்தில் தோன்றிற்று. உடல் நடுக்கத்துடன் அவரைக் காண்பதற்கு அவரது வீடுசென்றனன். வீட்டில் அவரைக் காணவில்லை. இந்திரன் எக்கத்துடன் தன்னகம் சென்றான்.

குருவைக் குறைவுபடுத்தலென்பது பாவத்திலெல்லாம் மிகக் கொடியது. அதனுல், அதுமுதல், நாளுக்குநாள் தேவராசனது வலிமை யும் தெம்பும், படிப்பும் குன்றின. இதுகண்டவசுரர் தேவருடன் சண்டை யிடக் கிளம்பிப் போரிலும் வென்றனர். அதன்பேரில் அவர்கள் இந்திரனை முன்னிட்டுக்கொண்டு பிரம்மதேவனிடம் சென்று சரண் புகுந்து அவரை நோக்கி, "பொற்கருவினனே போற்றி! பரப்பிரம்மவடிவனே போற்றி! அறிசுற்கரியவுருவனே போற்றி! தனித்த மூர்த்தியே போற்றி! மூக்குண மானவனே போற்றி! பிரகிருதிவடிவனே போற்றி! ஆணவமாயுமறிவாயும் விளங்குபவனே போற்றி! பெருவுருவனே போற்றி! ஒலிமுதலான குணங் களானவனே போற்றி! கருமேந்திரிய ஞானேந்திரிய வடிவனே போற்றி! பூமி முதலான வைந்து பூதவுருவனே போற்றி! பிரம்மாண்ட வடிவனே போற்றி! அன்பரனைவரையும் காத்தற்பொருட்டு விரும்பிய வடிவமெடுப்ப வனே போற்றி! பெரியவனே! உமக்கு வணக்கம், உமக்கு வணக்கம், உமக்கு வணக்கம்" என்று புகழ்ந்து வணங்கினர்.



ஸ்ரீ சுந்தரேஸ்வரர்

பிரம்மதேவன் அவர்களைப்பார்த்து, "வீண்வரே எழுமின். உபதையடைந்தேன். வேண்டும் வரங்களைக் கேள்மின் என்று பகர்ந்தார். உடனே தேவர்கள் அவரிடம் பெருமானே! இந்திரனுள்பட எங்களை வரையும் அவுணர் போரில் வெல்கின்றனர். வலிமையினால் செருக்குண்ட அவர்களை நாங்கள் எவ்வாறு வெல்வது? கூறியருளவேண்டும்" என்று தெரிவித்துக்கொண்டனர். உடன், பிரம்மதேவன் அவர்களை நோக்கி "உங்களுக்கு ஆசானில்லை, அவர்களுக்கிருக்கின்றார். ஆசானை வணங்குதலால் அறிவும், வலியும், புகழும், தெம்புமுண்டாகின்றன. ஆசானிகழ்ச்சியால் இவையனைத்தும் போய்விடுகின்றன. உங்களதுகுருவோ இப்பொழுது கண்ணிற்குப் புலப்படவில்லை வரவும் மாட்டார். தவஷ்டாவின் மகனை விசுவரூபர் எல்லா வித்தையுமோதினவர், அவரையுங்களது குருவாக வேற்படுத்திக்கொண்டு அவர் கூறும் நற்செயல்களைப் புரியுங்கள். நிண்ணமாக வெற்றிகாண்பீர். தோல்வியில்லை என்று மறுமொழிதந்தார்.

தேவர்களுமவ்வாறே விசுவரூபரை வரவழைத்து குருவாக்கிக் கொண்டு அவர் சொல்லிய கருமங்களையெல்லாம் சரிவரச்செய்தனர். தேவராசனும் அவரிடமிருந்து வைரக்கூட்டுக்கோப்பான வெற்றி டயக்கும் சிவகவசமொன்றைப் பெற்று அதன் பெருமையினால் போரில் எதிரிகளை வென்று முன்போல் இன்பமாக வாழ்ந்தான். இப்படி இருக்கையில், தேவர்களுக்கு குருவும் அசுரர்களுக்கு மருமகனுமான அவ் விசுவரூபர் வேள்விகளில் அவியைத் தேவர்களுக்கு வெளிப்படையாய்க் கொடுத்துக்கொண்டு அசுரர்களுக்கும் மறைமுகமாகக் கொடுத்துவந்தார். அறிவுக்கண்ணுலிதை யிந்திரன் தெரிந்து சினமுற்று வச்சிராயுதத்தாலவரது மூன்று தலைகளையும் கொய்தான். தவ வலிமையினால் அவனது சோமரச முண்ட தலை காடையாகவும், கள்ளுண்ட தலை ஊர்க்குருவியாகவும், சோறுண்ட தலை கவுதாரியாகவும் உருவமெடுத்து வானிற் பறந்தன.

இத்தப் பிராமணக் கொலையானது கரிய வடிவெடுத்துக் கோண முகத்துடன் கையிற்றடியும் துணியுமேந்தித் தேவராசனைத் துன்புறுத்தியது. ஓராண்டிற்குப்பின் துன்பம் பொறுக்க மூடியாமல் இந்திரன் தேவர் முனிவரைக் கலந்தாலோசித்து அந்தக் கொலை யுருவை நான்கு கூறுகளாக்கிப் பூமி, நீர், பெண்டிர், மரம் இவற்றி லெறிந்தான். எறியும் பொழுது ஒவ்வொன்றிற்குமொரு வரம் கொடுத்தான். அதன்படி பூமியில் வெட்டுக்குழிகள் ஓராண்டில் நிறையும். வெட்டுண்ட மரம் மறுபடி தழைக்கும். பெண்டிர் பேர்காலம்வரைக் கணவருடன் கூடலாம். நீர் மறபடியும் ஓடும் தன்மையைப்பெறும். பின்னர்க் கொலைப்பாவம் நீங்கி தேவேந்திரன் இன்புற்றிருந்தான்.

விசுவரூபரது தந்தையான துவஷ்டன், மகன் துயராற் சினங்கொண்டு வேள்வித்தீ வளர்த்து 'இந்திரனெதிரியேவளர்' என்ற மந்திரமோதி எள், நெய் முதலானவற்றை அவியாகச் சொரிந்தான். தீயினின்று மிக வலிமைபெற்ற வீருத்திரன் என்ற அசுரன் ஒருவன் தோன்றினான். அம்புசெல்லுமளவிற்கு நாள்தோறும் அவன் வளர்ந்து தவத்தாலும் வலிமையாலும் உலகெலாம் பரவலுற்றான். அவனுக்கும் தேவர்களுக்கும் போர் மூண்டது. பலவிதவாயுதங்கள் தாங்கியும் பலவிதவூர்திகளேறியும் தேவர்

கள் தோன்றினர். வெள்ளையானையின்மீது கையில் வச்சிரமெடுத்துத் தேவராசனும் வந்தான். வியக்கத்தக்க சண்டை நடந்தது. இறுதியில் இந்திரனுக்கும் விருத்திரனுக்கும் போர்க்களப்பேற்பட்டது. அந்தகாசுரனுக்கும் சிவபெருமானுக்கும் நடந்த அமர்போலிருந்தது. இந்திரன் வச்சிராயுதத்தால் விருத்திரனை மார்பிலடித்தான். உடன் சீற்றத்துடன் விருத்திரன் இந்திரனது வெள்ளையானையை யமனது தடியையொத்த உலக்கையால் முதலில் தாக்கிப் பின்னரதைக்கொண்டே யவனது தோளையு மடித்தான். உறுத்தவடியால் வலியிழந்த விந்திரன் கையிலிருந்த வச்சிராயுதத்தை நழுவ விட்டு வெள்ளையானையுமில்லாமலோடினான். அச்சமுற்ற தேவர்களும் ஆயுதங்களை யெறிந்துவிட்டு நாலாபக்கங்களிலுமோடினர்.

பின்னர் அவரெல்லோரு மோரிடத்திலொன்று கூடிப் பிரமதேவனிடம் சரண் புகுந்தனர். பிரமன் அவர்களை யிட்டுக் கொண்டு விஷ்ணுவினுறைவிடமான வைகுண்டத்திற் சேர்ந்தனர். அங்கு அவர்கள் கரியமேனியுடன் மஞ்சளுடையணிந்தும், சங்கு, சக்கரம், கதை, தாமரை மலர் இவற்றை நான்கு கைகளிலேந்தி, முடி, தோள்வளைகளுடன் மார்பில் வனமாலையாரம் புரள, இலக்குமி தேவியாரும் கருடனும் பக்கத்திலிருக்க, அரியிருக்கையி லிருக்கும் கடவுளைக் கண்டனர். அவரைத் துதித்து வணங்கி விருத்திரன் செயலனைத்தையும் தெரிவித்தனர். அதைக் கேட்ட கெருடக்கொடியோனவர்களை நோக்கி "விண்ணோரே! வலாசுரனிடமிருந்துண்டான வச்சிராயுதமானது இந்திரனது கையிலிருந்து நழுவி விட்டமையால் அது வலியிழந்து விட்டது. பெரும் வலிமைபெற்ற விருத்திரனைக் கொல்ல வதற்குத் திரன் போதாது. அதைத் தாக்குவதால் பயனில்லை. ஆதலால் மிகச் சத்துள்ள வச்சிராயுதமொன்று தயாரித்துத்தான் அவனைக் கொல்லமுடியும். அதற்குத் ததீசி முனி யிருக்குமிடம் நீங்கள் செல்லவேண்டும். முன்னாளில் தேவரும் அசுரரும் திருப்பாற் கடலைக் கடைந்தனர். அதற்குச் செல்லுமுன் அவரவரது ஆயுதங்களை வைத்திருந்து தரவேண்டுமென்று ததீசி முனிவரிடம் ஒப்படைத்தனர். கடைதல் வெகுகாலம் நடந்தது. அப்பொழுது முனிவர் ஆயுதமனைத்தையும் தின்றுவிட்டார். வச்சிராயுதம் போலுறுத்து நிமிர்ந்து நிற்கும் அவரது முதுகெலும்பில் அவையனைத்தும் மறைந்துகிடக்கின்றது. அவ்வெலும்பைக் கொண்டுதான் விருத்திரனை வதை செய்யவேண்டும். உலகிற்றோன்றிய சிவிச்சக்கரவர்த்திபோன்ற வள்ளல்களனைவரிலும் ததீசி முனியே தலை சிறந்து நிற்பவர். பெரும் சிவனன்பர் எதைக்கேட்டாலும் தருவார். அவரிடமிருந்து அவ்வெலும்பைப் பெறுங்கள்" என்று மொழிந்து பிரமன் முதலியோரை அனுப்பிவிட்டார். பிரமனும் இந்திரனிடம் தேவர்களுடன் ததீசி முனியிடம் செல்லும்படியாய்ச் சொல்லிவிட்டுத் தன்னகமேகினர்.

பின்னர், தேவர்கள் முனி தவம் செய்துகொண்டிருந்தவிடம் சென்று வெற்றிமுழக்கி அவரிடம், வள்ளல்களிற்சிறந்த பெரியோய்! எங்களுக்கு வரமருளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர். முனிவரு முவகையுடன் "நீங்கள் கேட்கும் வரம் தருகின்றேன்" என்றுரைத்தார். உடனே தேவர்கள் அவரைப் பார்த்து "உங்கள் உடலின் மத்தியிலிருக்கும் வீணுதண்டமெனு மெலும்பை விருத்திராசுரனை வதைத்தற்குக் கொடுத்துதவுங்கள்" என்று சொல்லி அவரது முன்னிலையில் நின்றனர்.

Acc-No: 778

இந்திரன் முதலியோரது இம் மொழியைக் கேட்டுத் ததீசிமுனிவர் பொருளின் அழியுமதன்மை யழியாதன்மைபற்றிச் சிந்திக்கலானர். "உயிர் என்று மூளது. உடல் அழியத்தக்கது" என்று தீர்மானித்து, வலும்பைக் கொடுக்கவெண்ணி மனமகிழ்ந்து அவர்களை நோக்கித் துணிந்த சொற் களால் "தேவர்களே! அப்படியேயாகட்டும்! எலும்பை யெடுத்துக்கொள் ளுங்கள்! தந்துவிட்டேன்!" என்று கூறித் தூலவுடலை விடுத்துப் பிரம்மரந் திரத்தின் வழி வெளியேறிச் சிவனுருவம் பெற்றுச் சிவலோகத்திலிருந்து வந்திருந்த விமானத்திலேறிச் சிவலோகம் சேர்ந்தார்.

தேவர்களும் எலும்பைக் கொண்டுபோய் விசுவகருமனிடம் கொடுத்தனர். அவன் அதைக்கொண்டு உறத்ததும் கூரானதுமான வச்சி ராயுதமொன்றை யுண்டாக்கி இந்திரனிடம் அதைக் கொடுத்து இதைக் கொண்டு விருத்திராசுரனைக் கொல், என்றான். உடனே இந்திரன் எதிரி களாற் பார்க்கவுமொண்ணாத யமதண்டம்போன்ற அவ்வாயுதத்தை பெற்று, வலிமையடைந்து, வெள்ளையானைமீதேறித் தேவர்களுடன் விருத்திராசுர னிருக்குமிடமேகி, வச்சிராயுதத்தை யசைத்தான். அதினின்றும் மின்னற் குவியல்கள் பறந்தன. தேவக்குழாங்களையும் வச்சிராயுதம் வீசும் இந்திரனை யும் கண்டு விருத்திரன் ஓடிக் கடலில் மூழ்கி யொளித்துக்கொண்டான். மறுபடியும் பிரம்மனையடைந்து தேவர்கள் நடந்ததைக் கூறினர். அவர் களது மொழியைக் கேட்டுப் பிரமன் கடலை வற்றடிக்கக் குடமுனியை யணுகி வேண்டிக்கொள்ள வேண்டுமென்று கூற, இந்திரன் தேவர்களை யிட்டுக்கொண்டு அம்முனிவரிடம் சென்றான். முனிவரும் கோடியூழிகால நெருப்பினையொத்த ஆலவாய்க் கடவுளை நெஞ்சில் எண்ணிக் கடல்நீரனைத் தையும் வலவுள்ளங்கையிற் பிடித்துப் பருகினர். கடல் வற்றிவிட்டது. அப்பொழுது கடல் மத்தியிலுள்ளவோர் பரந்த மலையுச்சியில் தாமரை யிருக்கைபூட்டிச் சிலபோலசைவற்றப் பொறிகளை நெஞ்சத்திற்சேர்த்து நெஞ்சத்தை பரம்பொருளிடம் கூட்டி யோகநிலையிலிருக்கும் விருத்திரா சுரனைத் தேவர்கள் கண்ணுற்றனர். உடனே இந்திரன் கூரான வச்சிரா யுதத்தாலவனது தலையை யறுத்தான். அக்கணமே அக்கொடிய கொலைப் பழி நிழலுருவில் கையிலுலக்கை பிடித்து இந்திரனை வெருட்டி அல்லும் பகலும் அவனை விடாமல் தொடர்ந்துகொண்டேயிருந்தது. அது கண்டு மிகத் திகிலடைந்த இந்திரன் வடகீழ்த்திசை நோக்கி யோடியவண் உருத்திர லோகத்தில் தாமரைத் தண்டொன்றினுட் புகுந்து மறைந்து கொண்டான்.

வெகுகாலத்திற்குப் பிறகும் இந்திரன் கொலைப்பழி நிழலிற் கஞ்சி வெளி வரவேயில்லை. அவ்வமயம் நகுஷன் என்ற பூலோகவரசன் இந்திரன் நிலைபெற்று அரசமாகக்கடவனென்று அகத்தியரால் சபிக்கப் பட்டுப் பூவுலகில் வீழ்ந்தான். அப்பொழுது தாமரை நூலில் மறைந் திருந்த இந்திரன் தன குருவை எண்ணித்துதித்து வணங்கினன். குருவும் மகிழ்ந்து இந்திரனது முன்னிலையில் தோன்றினர் இந்திரன் அடங்கா மகிழ்ச்சிகொண்டு தன் குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று குருவைக் கெஞ்சியவரது தாள்களில் வீழ்ந்தான். குருவும் அவனை யெழுப்பியணைத்து அஞ்சல்வேண்டாமென்று கூறி அறிவு நோக்கால் பழிதீரும் வகைகண்டு "தேவேந்திரனே! மிகக் கொடிய பழிகளுக்குச் சிவலிங்க வழிபாடு தவிர

வேறு சிறந்த வழிகள் இடையா. ஆதலின் ஊக்கத்துடன் அதைச் செய்! முழுக்கடவுளான சிவபெருமான் பழம் தலங்களில் அன்பர்களுக்கருளும் பொருட்டு எப்பொழுதும் இருந்துகொண்டேயிருக்கிறார். அன்புடன் கைலாயம் முதலான அத்தத்தலங்களுக்குச் சென்று அங்குள்ள தீர்த்தங்களில் நீராடிப் பரமசிவ மூர்த்திகளைக் கண்டு வணங்கு! அவற்றுள் தலை சிறந்த தலமொன்றில் உனது பழி தீரும். என்று இந்திரனுக்கு அறிவுறுத்தினார். பின்னர் குருவானவர் மறைந்தார். தேவர்கள் கண்ணிற்கும் புலப்பட்டார். இவ்விதமான விருத்திராசுரன் வதையைக் கேட்கும் அரசர் போரில் எதிரிகளைக் கொன்று வெற்றிபெறுவர்.





இந்திரன் பழி தீர்த்தல்

ஐந்தாம் அந்தியாயம்.

இந்திரன் பழிதீர்த்தல்.

குருவினது இம்மொழிகளைக்கேட்டு இந்திரன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து மாபாதகம் ஒழிந்தது போலபத்து நீங்கிற்றென்றெண்ணி விருத்திரக் கொலையச்சம் தவிர்த்துக் குருவுடன் அமராவதி சென்றனன். அங்கு தேவர்களைத் திரட்டிக்கொண்டு உச்சைச்சிரவமென்ற புரவிமீதேறிக் குருவை முன்னிட்டுக்கொண்டு வேட்டைக்குச் செல்வதாக வெளியிற் பறை சாற்றி வில்லும் கையுமாக வின்னுலகிலிருந்திறங்கிப் பூவுலகில் மலைகளிலும் காடுகளிலும் திரிந்து சிங்கம் புலி பன்றி முதலிய கொடிய விலங்குகளை வேட்டையாடித் தன் கைத்திறனை வெளிப்படுத்தினன். கைலாய முதலிய வுயர்ந்த சிவத்தலங்களுக்குச் சென்று, ஆங்காங்கு தீர்த்தங்களிலும் நீராடி மூர்த்திகளையும் கண்டு வணங்கினன். என்றாலும் பழி தீரவில்லை மைமலையொத்த கரும்பேய் கையில் உலக்கையுடன் அவனை விடவேயில்லை. அதைக்கண்டு நடுநடுங்கி இந்திரன் சோமசுந்தரக்கடவுள் கோவில்கொண்டிருக்கும் தலத்தை நோக்கி விரைந்தான். அங்கு விலங்குகளைக்கண்டும் வேட்டையில் விருப்பமெழவில்லை. உடனே தேவராசன் வியப்பெய்தித் தேவர்களை நோக்கி, வேட்டைக்கென்று புறப்பட்டிருக்குமெனக்கு இன்று கொல்லமனம் வரவில்லை. ஒருவித இரக்கம் மனதில் புகுந்திருக்கின்றது. இவ்விடத்தில் ஏதோ விசேடமிருக்கின்றது. ஐயமேயில்லை! என்று மொழிந்தவனுய் வேட்டையை விடுத்துத் தலவெல்லைக்குட்புகுந்தான். தலத்தின் மாட்சியால் கூடவந்த பழிப்பேய் உட்புகமுடியவில்லை. திறனற்று வெளியிலேயே நின்றது. அதுதங்கினவிடத்தைப் பழிநின்றவிடமென்று இன்னும் சொல்வார்கள்.

எப்பொழுதும் கூடவே நிழல்போல் தொடர்ந்துகொண்டிருந்த பழிப்பேய் இப்பொழுது வராததைக்கண்டு அச்சம் நீங்கிப் பேருவகையடைந்து அனைத்தையுமறித்த குருவையும் விண்ணோரையும் நோக்கி, "விடுபட்டேன்! விடுபட்டேன் பழியினின்றும் என்று உரத்த குரலில் திரும்பத் திரும்ப வுரைத்தான். இதைகேட்ட குருவும் தேவரும் வியப்பும் மகிழ்ச்சியுமெய்தி கோமானே! இத்தத்தலத்தில் விசேடமிருப்பதாக முன்னமே யுரைத்தீர். அறிவாளிகளிற் சிறந்த உமது சொல் எவ்வாறு பொய்க்கும். புனிதமான இந்தக் கடம்பக்காட்டிலே சிங்கங்களும் யானைகளும், கருடன்களும் அரவங்களும், மற்றுமுள்ள விலங்குகளும் ஒன்றுக்கொன்று வெறுப்பை விடுத்து அச்சமின்றி உலவுகின்றன. ஆதலற்றி இங்குமிகத்தூய்மையான பொருளொன்றுளது என்றுரைத்தனர். உடனே இந்திரன் அதுவென்ன வாச்சரியமென்று தெரிந்து வரும்படியவர்களையனுப்பினன்.

அவர்கள் நாலாபக்கங்களிலும் சென்று சுற்றிப் பார்த்துக் கடைசியில் தெளிந்த நீருடைய மாபெரும் குளமொன்றை யடைந்து அனைவரும் ஒன்றுகூடிக் கோப்பாறினர். குளத்தின் வடமேற்கிலுள்ளவிடம் மிகப்

புனிதமாய் விளங்கிற்று. அங்கு பூத்த கடம்ப மரங்களும் வில்வமரங்களும் ஏராளமாய்த் தெரிந்தன. அவற்றிலிருந்துகொண்டு பச்சைக் கிளிகளும் பஞ்சவருணக் கிளிகளும் மிகவழகாகச் சிவனே, சம்புவே, பேரிறைவனே, பெருங் கடவுளே, சங்கரனே, ஜதிருடியே, பூதங்களின் தலைவனே, உமை யொருபாகனே, கறைக்கண்டனே. எனறுமிருப்பவனே, என்று இறை வனது ஆணைப்படியவனது திருப்பெயர்களோ மொழிந்துகொண்டிருந்தன. அதைக்கேட்டுத் தேவர்கள் உடன் அவ்விடம் சென்று கடம்பக் காட்டின் மத்தியில் தானே தோன்றி அமுதத்தைப் பொழிந்துகொண்டு கண்களுக்கு விருந்தளிக்கும் சிவபெருமானது இலிங்கமொன்றைக் கண்ணுற்றுப் பெரு வியப்பெய்தினர். உடன் இந்திரனிடம் ஓடி, வணங்கி தேவனே! கண்டு விட்டோம்! கண்டுவிட்டோம்! பேராச்சரியத்தை! நீர்ற்ற வறண்டுகிடக்கும் இத்தச் கடம்பம் வில்வம் நிறைந்த காட்டிலே பெரும் தீர்த்தமொன்றையும், இலிங்கமொன்றையும் கண்டோம்! என்றனர். உடனே இந்திரன் அவ்வி டத்திற்கு விரைந்து குருவின் முகத்தை நோக்கி ''ஐயனே! இப்பொழுது நான் செய்யவேண்டியதென்னவென்று கூறியருளவேண்டும் என்று வேண் டிக்கொண்டான். அதன்பேரில் குருவானவர் இந்திரா! முதலாக முறைப் படி தீர்த்தத்தில்நீராடி இலிங்கத்திற்கு உன்பெயர்பூண்ட மேற்கூடொன்று கட்டுவித்து இலிங்கத்தை வழிபடு. மாபழி நீங்கும்'' என்று சொன்னார்.

இவ்விதம் குருவின் கட்டளைபெற்ற விந்திரன தேவர்களுடனும் குருவுடனும் பழியகற்றக்கூடிய மேலான வேதமந்திரங்களோதி, சங்கற்பம் செய்துகொண்டு, தீர்த்தத்திலிறங்கி, நன்றாய் நீராடித், திருநீறணிந்து, நித்திய கருமங்களோ முடித்து, தானே தோன்றிய அவ்விலிங்கத்தைத் தரி சனம் செய்தான். உடனேயே எல்லைக்குவெளியில் நின்ற கொலைப்பேய் ஊழித்தீயிலகப்பட்ட பஞ்சுத் துணிபோல் அழிந்தது. இந்திரனது உடலி லிருந்த பழிப்புணவும் வேரறுந்த மாம்போல் வீழ்ந்தது. மகிழ்வுற்ற தேவ ராசன் கொலைப்பழி நீங்கினவனுய் விசுவகருமனையழைத்து பேரிலிங்கத் திற்கு மியக்குதற்குரிய விமானமொன்றை யாக்குதற்காணையிட்டான். பின் னர் தீர்த்தத்தில் நீராடிக்களித்துநிற்கும் தேவர்களோக் கூப்பிட்டு ஏராளமாக மலர்கள் கொய்துவர ஏவினன். அதன்பின் சுற்றிலுமுள்ள வடர்ந்த காடு களோ வெட்டி நிலத்தை திருத்திக் கண்ணடியொத்த சமதளமாக்கினன் இலிங்கத்தை யடிக்கடி தரிசித்து அதன்மேல்வெயில்படாமலிருக்கத் தனது குடையைத்தானே பிடித்தான். அதற்குள் விசுவகருமனுக்கிய விமானமும் வந்துவிட்டது. அது மற்றொரு மேருமலைபோல் விளங்கிற்று. அதில் தேவர்களனைவரும் இடம்பெற்றிருந்தனர். எட்டு யானைகளும், எட்டு யானைச் சிங்கங்களும், அறுபத்துநான்கு கணத்தலைவரும் அதை ஒருவாறு தாங்கினர். அது பலவித ரத்தினங்களிழைக்கப்பெற்றுத் தோன்றும் கதிர வன் போலொளிவீசிற்று. அதன் உச்சியில் தங்கக்குடம் மிளிர்ந்தது. அத்துடன் வீடையுருவமெழுதப்பெற்ற கொடியொன்று பறந்தது. முத்துச் சரங்களும் கொடியிற்கட்டிய சதங்கைகளும், குடைகளும், சாமரங்களும் விமானத்திற்கணிகளாக விளங்கின இந்த வதிசய விமானத்தைக் கண் ணுற்ற தேவராசன் வியப்புற்றுக் குருவிலுற் கூறப்பட்ட சல்ல முகூர்த்தத் தில் அதைப் பிரதிட்டைசெய்தான்.

பின்னர் தேவேந்திரன் வேண்டிக்கொள்ள விசுவகருமன் அக் கணத்திலேயே ஐந்து பிராகாரங்களையும், பல மண்டபங்களையும், எல்லாக் கோபுரங்களையும், தேவியாரின் மாளிகையையும், பரிவார தெய்வங்களின் கோயில்களையும், பலவிதமான பிரதிமைகளையும், குளத்தின் படிவரிசை களையும், தவவலிமைகொண்டு கட்டுவித்தான்

இதற்குள் பூக்கொணரப்போன தேவர்கள் எங்கும் கிடைக்க வில்லையென்று இந்திரனிடம் தெரிவித்தனர். அவர்களை யிந்திரன் அமரா வதிசென்று பேரிலிங்கத்தின் வழிபாட்டிற்கு வேண்டிய சந்தனம், பூ, பொற்கலங்கள், ஆபரணங்கள், ஆடைகள் முதலியவற்றை கடிதில் கொண்டு வருமபடி கட்டளையிட்டான். தானும எங்கிருந்தாவது மலர் கொணர வெண்ணி அடர்ந்தவிடங்களில் தனதாயிரம் கண்களாலும் தேடி ஓரிடத் திலும் கிடையாமல் அலுத்துப்போய் தீர்த்தக்கரை வந்துசேர்ந்தான். தனது வழிபாட்டிற்காக இவன் அலைகின்றானென்று தெரிந்து இறைவன் இரக்கப் பட்டு இந்திரனுக்கு அப்பொய்கையில் பொன்னிறமான தாமரை மலர் களைத் தோற்றுவித்தான். பொய்கையானது மலர்ந்த பொற்றாமரைகளுடன் அற்புதக்காட்சியளித்தது. அதைக் கண்ணுற்ற விந்திரன் வியப்பெய்தி அந்தப பொய்கைக்குப் பொற்றாமரைப் பொய்கையெனும் பெயரைச் சூட்டி னான். உடனே வேண்டுமளவு மலர்களைத் தனது கரத்தாலேயே பறித்து வழிபாட்டிற்காக இலிங்கத்தினருகிற் போய்ச்சேருமுன் தேவர்கள் அமரா வதியினின்று பூசைப் பண்டங்களுடன் வந்துவிட்டனர்.

பின்னர் பிருகஸ்பதியானவர் முறைதெரிந்த தேவர், தேவமுனி வர் இவர்களுடன் ஞானசக்தி மயமான லிங்கத்தில் கிரியா சக்திவடிவமான விசுவகருமனால் அமைக்கப்பெற்ற பிண்டிகையைச் சேர்த்தனர். பிறகு பேரிலிங்கத்தின் முன்னிலையில் தேவியார், பரிவார தேவதைகள், இறை வனது பிரதிமைகள் இவற்றின் பிரதிட்டை கடந்தேறியது. உடனே முனிவரனைவரும் மறையிலுள்ள ருத்திர சூக்தம் முழுதையும் உயர்ந்த குர லில் ஒலித்தனர். பாட்டுக்களும் வாத்தியங்களும் முழங்கின. அப்சரமகளிர் ஆடல்புரிந்தனர். தேவேந்திரன் விதிப்படி பஞ்சகவியம் பஞ்சாமிருதம் இவற்றால் அபிஷேகம் செய்து, பின்னர் சுத்தமான பொற்றாமரை நீரால் திருமஞ்சனம் செய்வித்து அருளொடும் அன்பொடும் ஆடை ஆபரணம் சந் தனம், பொற்றாமரைமலர், பாரிசாதப்பூக்கள், தூபம், தீபம், பலவகை, நைவேத்தியங்கள் இவற்றால் வழிபட்டு, வலம் வந்து, வணங்கியெழுந்து இலிங்கத்தினெழிலைக் கண்ணுற்ற இவ்விலிங்கத்தில் எழுந்தருளியிருக்கும் சதா சிவப்பெருமான் சுந்தரக்கடவுள்தானென்று ஆகாயம் செவிடுபட வுரைத்து மூர்த்திக்கு அப்பெயர் வைத்தனன். உடன் இலிங்கத்தின் மத்தி யில் உருவுடன் கருணைக்கடலாம் சோமசுந்தரப் பெருமானைக் கண்டனன். இறைவன் இளங்கதிரவனது ஒளியுடன் மிளிர்ந்தான். பெயருக்கேற்றவனப் புடன் கைகளில் கோடரி, மான். வரம், அபயம் இவற்றைத் தாங்கினவனாய் காணப்பட்டான். அவனது முடியில் கங்கையும் பிறையுமிலங்கின. ஆரம், குண்டலம், தோள்வளை, கைவளை யிவையணிந்து முக்கண்ணனுக்குறு நகையுடன் காட்சியளித்தான். சிறந்த வாடையுடன் சந்தனம், மலர்கள் சூடித்து இளம் பருவத்திலுள்ள தேவியாருடன் இளம் பிராயத்தனாய் தோன்றினன்.

அழகிற் சிக்குண்ட இந்திரன் அருள்மேலீட்டால் குரல் குளர இறைவனே நோக்கி "பெருமானே! எந்தப்பரம்பொருளே மறைகளனைத்தும் ஒன்றே, இரண்டாவதற்றதென்று அறைகின்றனவோ அந்த முழு முதற் பொருளாகும் சோமசுந்தர மூர்த்தியை வணங்குகின்றேன். அறியும் பொருள், அறிவு, அறியப்படும் பொருள் இவை வடிவமாய் உலகெங்கும் புகுந்து நிற்கும் யாரும் காணமுடியாத சோமசுந்தரமூர்த்தியை வணங்குகின்றேன். அசுவமேதம் முதலிய வேள்விகளால் வணங்குமந்தணர்களுக்கும் பயனையளிக்கும் சோமசுந்தரமூர்த்தியை வணங்குகின்றேன். அறிஞர் எவனை யறிவதால் கருமக்கட்டினின்றும் விடுபடுகின்றனரோ அந்த சோமசுந்தர மூர்த்தியை வணங்குகின்றேன். மார்க்கண்டேய முனி எவரை வழிபட்டு அழிவில்லாத் தன்மை பெற்றாரோ அந்த சோமசுந்தரமூர்த்தியை வணங்குகின்றேன். தனது கண்களாகின்ற தாமரை மலர்களால் பூசித்துக் களிப்புறச்செய்த மகாவிஷ்ணுவிற்குச் சக்ராயுதம் தந்தருளிய சோமசுந்தரமூர்த்தியை வணங்குகின்றேன். உலகை யாக்கிக்காத்தழித்து உண்மை, அறிவு, ஆனந்தம் இவை வடிவாய்த்திகழும் சோமசுந்தரமூர்த்தியை வணங்குகின்றேன். நான்கு மறைகளும் உருவெடுத்து எவனை வணங்குகின்றனவோ வித்தகனனைத்திற்கு மெவனிறைவனோ, அந்த சோமசுந்தரமூர்த்தியை வணங்குகின்றேன். தனக்கு மேலும் கீழுமற்றுப் பூதங்களின் தலைவனாய் விளங்கும் சோமசுந்தரமூர்த்தியை வணங்குகின்றேன். வணங்கினமாத்திரத்திலேயே பேறுகளனைத்தையும் பயன்களனைத்தையும் பயக்க வல்ல சோமசுந்தரமூர்த்தியை வணங்குகின்றேன். காண்டலாலேயே பிரமஹத்தி முதலான பழி தீர்க்கும் சோமசுந்தரமூர்த்தியை வணங்குகின்றேன். முயற்சித்தும் எவனது முடியும் அடியும் பிரம்மனாலும் விஷ்ணுவாலும் காணப்படவில்லையோ அந்த சோமசுந்தரமூர்த்தியை வணங்குகின்றேன். கடம்பவனாதனே! அறிவிலிகள் உனக்கு நிகராக மற்றத்தெய்வங்களைக் கூறுகின்றார்கள். கழுதை குதிரையாகும்பொழுதுதான் மற்றவர் உனக்கு சமமாவர். சிறிதிலும் சிறியவன், பெரிதிலும் பெரியவன் நீ, அனைத்திலும் புகுந்து நிற்பதால் நீயே முழுமை பெற்றுத் தனித்திருப்பவன். உனது பெருமை யுனக்கே தெரியும். யாரே சொல்லமுடியும்" என்று துதிகூறி அன்புவயப் பட்டுத் தடிபோல் வீழ்ந்து வணங்கினான்.

உடனே மேன்மைமிக்க குரலில் இறைவன் இந்திரனே எழுச் சொல்லி வேண்டும் வரத்தைக் கேட்டுக்கொள்ள வாக்களியிட்டான். இந்திரன் உடனே மகிழ்ச்சியுடன் எழுந்து கைகூப்பி இறைவனிடம், கடவுளே! உனது பேரிலிங்கத்தைப் பார்த்தவுடனேயே எனது கொலைப் பழியும், முன்பிறப்புகளிற் செய்த தீவினைகளும் நீங்கிவிட்டன. இனிக் கேட்கவேண்டிய வரம் ஒன்றுமில்லை. ஆயினும் ஒன்று வேண்டிக்கொள்ளுகிறேன். அருள வேண்டும். என் மனமாகும் வண்டு அலையாமல் நிலைத்து எப்பொழுதும் உனது அடித்தாமரையினின்று கசியும் தேனைச் சுவைப் பதில் ஊக்கம்பெற வேண்டும், என்று தெரிவித்துக்கொண்டான். அதற்கு தேவன் "இந்திரா! உனக்கு, என்மீது மட்டற்ற அன்பு இருக்கின்றது. அது நிலைத்திருக்கும். உனக்கு இன்னுமொரு வரம்தர விரும்புகின்றேன் உன்னால் கட்டுவிக்கப்பெற்ற இந்த அழகான விமானமானது இந்திர விமானமென்று உன் பெயருடன் விளங்கும். பெரும் பிரளயகாலத்திலும் ஆச்சரியமான இத்தலம் அழியாது. நான் சொல்வது உண்மை. எனது

அம்பினின்று கிளம்பிய நெருப்பில் திரிபுரம் எரியும் பொழுது அதிலிருந்த எனது அன்பர் எவரும் அழியவில்லை, அதுபோல் ஊழித்தீயிலும் இந்தத் தலம் பாழ்படாது. உபபாதகமோ அல்லது மகா பாதகமோ புரிந்தவர் இத்தத்தலம் வருவாராகில் அவரது பழிகள் நீங்கும். எனது மூர்த்தியைக் காண்டலே கிடைத்தற்கரிது. அப்படியிருக்க இன்பமிரண்டையும் தரும் பூசை மிக மிக வரிது!,, என்று பகர்ந்தான்.

இறைவனது இம்மொழிகளைக்கேட்ட தேவராசன் ''அண்ணலே உமையொருபாக! உனது மூர்த்தியற்புதமானது. பார்த்ததுமே பிரமஹத்தி முதலிய பழிகள் போய் விடுகின்றன. ஆசைபற்றி இப்பேரிலிங்கத்தை ஆண்டுதோறும் வழிபட எனக்கு அவா உண்டாகின்றது. அதற்கருளவேண்டும்'' என்று தெரிவித்தான். உடனே பெரும் பெருமான் அவனை நோக்கி ''காலங்களிற்சிறந்த இளவேனிலும், மாதங்களிற் சிறந்த சித்திரையும் திதிகளிற் சிறந்த பூர்ணிமையும், நட்சத்திரங்களிற் சிறந்த சித்திரையும் இவ்வாண்டில் சேர்ந்துவருகின்றன. இந்தப் புண்ணிய காலத்திலும் ஆண்டுதோறும் இதேபோல் வரும் காலத்திலும் தேவர்களுடன் இத்தத் தலத்திற்கு வந்து மேன்மைமிக்க தீர்த்தத்தில் நீராடி பொற்றாமரை மலரால் இலிங்கவடிவமாய்த்தோன்றும் என்னைப் பூசைசெய் அந்த நேரத்திற் புரியும் நீராடல், ஜபம், ஓமம், தர்ப்பணம், இலிங்கதரிசனக்காண்டல், முதலிய நற்செய்கைகள் அளவற்ற பயனைப் பயக்கும். இதையறிந்து கூடுமானவரை அறிவாளிகள் நீராடல், கொடை, ஜபம் முதலியன செய்தல் நலம் உனக்கும் இதினும் மேம்பட்ட வலிமையும், புகழும், மேன்மையும், ஒளியும் உண்டாம. இப்பொழுது நீ உன் உலகம் செல்லலாம். எங்கும் வெற்றிபெறுவாய். தேவர்கள் உனக்கடங்கி உன்னைத்துதிப்பர். அங்கு மகிழ்வுடன் வெகுகாலம் பெரும் இன்பங்களனைத்தும்த்து உடல் வீழும் பொழுது பெறுதற்கரிய என்னுடன் கலந்தலையடைவாய். நீ கூறிய துதியைப் படிப்போர்க்கு அறம் முதலான நான்கு பேறுகளையுமளிப்பேன்' என்று மொழிந்து வரமருளினன். பின்னர் முக்கண்ணன் தனது மூலலிங்கத்தில் மறைந்தான்.

இவ்வாறு பெருமானிடம் வரம்பெற்றுப் பேருவகையில் மூழ்கி வலம் வந்து அன்புடன் புகழ்ந்து வணங்கி மூலலிங்கத்தின் முன்னிலையிலமர்ந்து நெஞ்சத்தாமரையில் உமையுடன் கூடிய ஆலவாய்ப்பெருமானை நிறுத்தி நூற்றெட்டுமுறை ஐயெழுத்தை ஜெபித்து 'சம்புவே! சங்கரனே தேவர்களுக்கிறையே! பகவனே! சோமசுந்தரமூர்த்தியே! யான்செய்த குற்றங்களை மன்னிக்க வேண்டுகிறேன்' என்று கூறி பூசையை முடித்துப் பெருமானையும் தனது குருவான பிரகஸ்பதியையும் வணங்கி தனது பாவங்கள் தொலைந்தனவென்ற உணர்ச்சியுடன் தேவர்களுடன் அமராவதிக்கு புறப்பட்டான். அதுமுதல் ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரம் கூடிய பௌர்ணமி நன்னாளில் இந்திரன் தேவர்களுடன் வந்து சோமசுந்தர பெருமானுக்கு வழிபாடு நடத்துகின்றான்.

இது ஆலவாய்க்கடவுளின் 'இந்திரனுக்கருளல்' என்ற முதலாம் திருவிளையாடல்; இதுபெரும் செல்வங்களைப்பயக்கும்; மிகுந்த புண்ணியத்தையளிக்கும், கொடிய பிணிகளைத் தீர்க்கும், கொடும் பழிகளைப்போக்கும். அன்பர் பணிவுடன்படித்துக்கேட்டும் பயன் பெறலாம்.

———

ஆருவது அத்தியாயம்.

வெள்ளையானை சாபம் தீர்த்தல்.

இந்தப் புனிதமான வரலாற்றைகேட்ட முனிவர்மேலும் பெருமானது விளையாட்டுக் கதைகளைக்கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அகத்தியர் வெள்ளையானை சாபம் தீர்த்த இரண்டாவது திருவிளையாடலைப் பற்றிசொன்னார்.

முன்னொரு காலத்தில் இந்திரன், சம்பன் முதலான அவுணத்தலைவர்களைப் போரில் வென்று மிக மகிழ்ச்சியுடன், கிரகத்திலும் ஆகாசத்திலும் பனிமலையையொத்த ஐராவதமெனும் நான்கு கொம்புகளுடைய வெள்ளையானைமீதேறி முப்பத்துமுக்கோடித் தேவர்களும், சித்தர், சாரணர் முதலியோரும் வெற்றிமுழக்கத்துடன் சூழ்ந்துவர, தலைநகரான அமராவதிக்கு வந்துகொண்டிருந்தான். அப்பொழுது தேவர்கள் அவனுக்கு விலைமதிக்க முடியாத பல நற் பண்டங்களைக் காணிக்கையாகக் கொடுத்தனர். அவனும் அவற்றை ஏற்றுக்கொண்டான்.

துர்வாசமாமுனி அப்பொழுதுதான் காசித்தலம் சென்று திரும்பவந்தார். காசியில் தீர்த்தங்களனைத்திலும் நீராடி இலிங்கங்களனைத்தையும் வணங்கி, கமேசுவரம் என்ற லிங்கமொன்றைத்தானே பிரதிட்டை செய்து, வலம்வந்து, வணங்கி அதன் முன்னிலையில் நின்றார். அவ்வமயம் மூர்த்தியின் தலையிலிருந்த பெரிய நீலோற்பல மலர் ஒன்று விழ, அதை மகிழ்ச்சியுடன் எடுத்துக்கொண்டு, தன் விருப்பம்போல் திரித்துவந்து கொண்டிருக்கையில் இந்திரனைக்கண்டு அருள்மொழிகளுடன் கொண்டாடிச் சிவபெருமானது திருவருள் என்று சொல்லி மலரை அவனிடம் கொடுத்தார். வெற்றிச்செருக்கிலிருந்த இந்திரன் அதை ஒரு கையாற்பெற்றுத்தன் முடியில் சூட்டிக்கொள்ளாமல் வெள்ளையானையினது நிமிர்ந்த சிரத்தில் வைத்தான். தலையசைத்ததும் மலர் கீழே வீழ்ந்தது. மதங்கொண்ட யானை ஊழ் வலியால் அதைக்காலால் மிதித்துத்தேய்த்து விளையாடிற்று.

இதைக்கண்ட முனி சினத்தால் உதடு துடிக்க இந்திரனுக்கும் வெள்ளையானைக்கும் சாபம் கொடுத்தார். அப்பொழுது அவர் "இந்திரா! நீ அவுணர் வெற்றியால் செருக்கடைந்திருக்கின்றாய். மற்ற முனிவரைப் போல் என்னையும் கருதி மலரை நீ முடியிற் சூடிக்கொள்ளவில்லை மற்றவர் கொடுத்தவையனைத்தையும் பரிவுடன் ஏற்றுக்கொண்டாய். தவத்திலும் ஞானத்திலும் யான் ஒப்பற்றவனென்று கொஞ்சமும் நீ அறிந்தாயில்லை. ஆதலால் பாண்டியமன்னன் உனது மண்டையைப்பிளப்பான். ஐராவதமும் ஓர் அற்ப யானையாய்ப் பூவுலகில் திரியும்" என்ற கடுஞ்சொற்களை யுரைத்தார்.

இவ்வாறு முனி, இந்திரனுக்கும் யானைக்கும் சாபம்கொடுத்ததை கண்ணுற்ற தேவர் அவரைப்பார்த்து மன்னிக்கவேண்டுமென்று கூறிக் காலில் விழுந்து வணங்கி அவர் பின்னரே சென்று 'இயற்கையில் குளிர்ச்சி யான நீர் நெருப்பாற் சுடடையும், அதே போல் காரணம்பற்றித்தான் உமக்கு சினம் மூண்டது. குளிர்ந்து அருள வேண்டும்' என்று மன்றாடினர். இதைக்கேட்ட துர்வாசர் தனக்கியற்கையான கோபத்தை விடுத்து "தேவர் களே! சொன்னதை மாற்ற எனக்குத் திறன்கிடையாது. தவிரவும் இந்திர னுக்கும் வெள்ளையானைக்கு என் சாபம் மாத்திரம் ஏற்படவில்லை. பெரிய தொரு சிவத்துரோகமும் ஏற்பட்டிருக்கிறது. காசித்தலத்தில் என்னால் பிரதிட்டை செய்யப்பட்ட காமேசுவர லிங்கத்தின் திருவருள் அந்த உற்பல மலர். அதை இந்திரன் முடிமேல் வைக்கவில்லை. மேலும் யானை அதைக் காலால் தேய்த்தது. இக்குற்றத்தை மாபாதகமென்று சிவசாத்திரம் கற் றோர் கூறுவர். மிகப் பெரிய பாவங்களுக்கு மாற்றுக்கிடையாது. ஆயினும் பெருமானுல் இரகசியமாக அவற்றிற்கு மாற்றொன்று கூறப்பட்டுள்ளது. அதை நான் சொல்கின்றேன். அதுவே வேதாந்த சாத்திரங்களிலும் உரைக்கப்பட்ட வழி. பூலோக சிவலோகமெனும் சிவத்தலமொன்றிருக் கின்றது. அது பாவமனைத்தையும் போக்க வல்லது. அங்கு பொற் றாமரைப் பொய்கை என்று மாதீர்த்தமொன்றுண்டு. முவ்வுலகமும்நிறைந்த ஆலவாய்மூர்த்தி லிங்கமும் அங்குளது. பழிக்கஞ்சுவோரும், சாபத்திற் கஞ்சுவோரும், இன்பம் விரும்புவோரும், வீடு வேண்டுவோரும் அங்கு சென்று அருளுடனும் அன்புடனும் தீர்த்தத்தில் நீராடி, ஆலவாய் நாதனைக் கண்டு வணங்கில் குற்றமனைத்தும் விலகி விரும்பியவற்றை பெறுவர். கசேந் திரனும் மகேந்திரனும் ஆலவாய் சேர்ந்து நிச்சயமாய்ச் சாபத்தினின்றும் விடுதலை பெறுவர். பெருங்கடவுளான ஆலவாய் மூர்த்தியினருளால் பாண் டியவரசன் இந்திரனது முடியையமட்டும் தட்டுவான். ஐராவதமும் நூறுண்டு புவியில் திரிந்து கடைசியில் ஆலவாய்சென்று மூர்த்தியை வணங்கிச் சாப விடுதலை பெறும்" என்று கூறி அந்த உற்பல மலரை வாங்கித் தலையில் சூடிக்கொண்டு சென்றுவிட்டார்.

வெள்ளை யானை மிகக் கரியயானையாகி பூலோகத்தில் இரண்டு கொம்புகளுடன் மற்றைய யானைகளுடன் சேர்ந்து திரிந்தது. வெகுகாலத் திற்குப்பிறகு வினையின்பயனுல் ஆலவாய் வந்து சாபம் மறையும்பொருட்டு முனிவர் கூறியவண்ணம் பொற்றாமரையில் குளித்தது. உடன் சாபத்தின் பயன் விலகியது. தனது நான்கு கொம்புகளும் வெளுத்த நிறமும் மறுபடி தோன்றின. பெருமகிழ்ச்சியுடன் இறைவன் முன்னிலை சென்று தன்னி னைத்தார் தாங்கும் விமானத்தினடியிலமர்ந்திருக்கும் பெருமானை கண்ணுற்று துதிக்கையால் நீர் கொணர்ந்து மூர்த்திக்கு அபிஷேகம் செய்து மனத்தால் சந்தனம் முதலிய ஐந்துவித உபசாரங்களையும் செய்து, புகழ்கள் பல மொழிந்து வணங்கி எழுந்து மூர்த்தியை நோக்கி "பெருமானே எனது இனத்தவர் புண்ணியம் செய்தவர். உனது அகத்தை எப்பொழுதும் தாங் கிக்கொண்டு இன்பத்துடன் வாழ்கின்றனர். எனக்கும் அவ்வாறு செய்ய அவாப்பிறந்திருக்கிறது அருளவேண்டும்" என்று வேண்டிற்று. இறைவன் வெளித்தோன்றி யானையிடம் "தேவராசன் எனது பேரன்பன், நீ யோ அவனைச்சார்ந்தவன். ஆதலால் நீயும் அவன்போலவே. நீ அவனையே சுமந்து கொண்டிரு. அதுவே எனது விருப்பம்" என்று கூறினர்.

அதற்கு யானை "அன்பருக்கருளும் அன்பே! துர்வாசரது சாபத் தாலேற்பட்ட துன்பத்தை காட்டில் மிகவும் துய்த்து இங்கு வந்து இறைவ னருளால் விடுதலையுற்றேன். விமானம் தாங்கும் யானைகளுக்கருளுவது போல் எனக்கும் அருளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டது. இறைவ னும் 'அவ்வாறேயாகட்டும்' நீ செய் என்று மொழிந்து லிங்கத்தினுள் மறைந்தார்.

வெள்ளையானைக்கோ பூலோக சிவலோகத்தை விட்டுப்போக மனம் வரவில்லை. அதற்காக மூர்த்திக்கு மேற்றிசையில் தனது கால்களால் குளமொன்று பறித்து அதன்கரையில் தனது பெயருடன் கூடிய விநாயக மூர்த்தியையும் சிவலிங்கத்தையும் வைத்து நாள்தோறும் அவ்விரண்டையும் வழிபட்டுச் சுவர்க்க லோகிருப்பதுபோல் களிப்புற்றிருந்தது. வெகுகாலம் வரை இவ்வாறு நடக்கையில், ஐராவதயானையின் சாபம் நீங்கிவிட்டதென்று தேவராசனறிந்து அமராவதி வரும்படியாகக் கட்டளை பிறப்பித்தான். ஆனைக்கு அஞ்சி மதுரையிலிருந்தும் புறப்படுமூன் மூர்த்திக்குக் கீழ்திசை யில் தனக்கு தலைவனான இந்திரனது பெயருடன் இந்திரேசுவரம் என்ற வோர் லிங்கத்தைப் பிரதிட்டை செய்து வழிபட்டுக்கொண்டுக் கடம்ப வனத்தைவிட்டுப் போகாமலேயிருந்தது. மறுபடியும் அதன் வந்துவிட் டான். தேவராசனது கட்டளையை மீறக்கூடாதென்று சுவர்க்கலோகத்திற் கேகிற்று. யானையின் கால்களாலாக்கப்பெற்ற பொய்கைக்குக் கசபுஷ்கரிணி யென்றும், பொய்கைக்கரை மீதுள்ள விநாயகருக்கு ஐராவத விநாயகரென் றும், சிவலிங்கத்திற்கு ஐராவதேசுவர லிங்கமென்றும் பெயர். கசபுஷ் கரிணியில் நீராடி ஐராவதேசுர லிங்கத்தை வழிபடப் பாவங்களெத்தும் சாபங்களெத்தும் விலகும். யானை புறப்பட்டுச்சென்ற தெருவிற்கு கசகாவன வீதி (யானையோடிய தெரு) யென்றும் புறப்பட்டவிடத்திற்கு ஐராவதபுர மென்றும் பெயர். அங்குள்ள இந்திரேசுர மூர்த்தியைவணங்கினால் இந்திர லோகத்தில் பதினொன்று இந்திரருள்ளவரை எல்லாப்பேறகளுடன் வாழலாம்.

இவ்வாறு வெள்ளை யானையைச் சாபத்தினின்றும் அலவாய்பெரு மான் விடுவித்தார். இறைவனது இவ்விரண்டாம் திருவிளையாடலைக்கேட்டு பாவங்களைக்களையலாம்.



ஏழாவது அத்தியாயம்.

மதுரை நகர் அமைத்தல்

———) 0 (———

விமானத்தைப் பிரதிட்டை செய்து பூசையும் கடத்திவிட்டு இந்திரன் அமராவதிக்குச்சென்ற நாள்முதல் விண்ணோர் இன்பமும் வீடும் அடைதற்பொருட்டு அல்லும் பகலும் மூலலிங்கத்தை வணங்கி வந்தனர். திங்கள்திழமைதோறும், அதிகப்படியாக, இரவில் ஒவ்வொரு சாமத்திலும் வாத்திய முழக்கத்துடன் வழிபாட்டை நடத்தினர். இவ்வாறு வெகுநாட்கள் கழிந்தன. கடம்பவனமும் வானமளாவும் வில்வம் முதலிய மரங்களால் மிக வடர்த்தியாய்க் கொண்டுவந்தது. மனிதர் போக்கு வரத்தும் இல்லாமற் போய்விட்டது.

அல்வமயம்தேவியார் கருணைக்கடலான பெருமானிடம் காட்டை நகராக்கிவிட வேண்டுமென்று அடிக்கடி தெரிவித்துவந்தார். இப்படியிருக்கையில் சுலியாணபுரம் என்ற மணலூரில் தனஞ்செயன் என்று ஒருவணிகன் இருந்தான். பெயருக்கேற்றபடி அவனிடம் ஏராளமான பொருள் இருந்தது. அவன் ஓர் சிவனன்பன். எப்பொழுதும் பெருமானே வழிபடுபவன் திரட்டிய பொருளை சிவநேசர்களுக்குக் கொடுத்துக்கொண்டே யிருப்பான். சிவநோன்புகளில் அவனுக்குப் பிடித்தமானது சோமவார நோன்பு. அன்று இரவில் சிவநிசியன்று செய்வதுபோல் உண்டியருந்தாமல் சாமம்தோறும் சிவபூசை புரிவான். இம்மாதிரி எப்பொழுதும் அன்பாலும் பொருளாலும் அறத்தையே ஈட்டுவான்.

இக்குணமுடைய தனஞ்செயன் ஒருநாள் தன் ஊரான கலியாணபுரத்திலிருந்து வர்த்தகத்தின் பொருட்டு மேற்கு நோக்கிப்புறப்பட்டான். பலவிடங்கள் சென்று மிகுதியான பொருள் திரட்டிக்கொண்டு ஊர் திரும்பினான். வரும் வழியில் தங்கித்தங்கிக் கூப்பாறிச் சின்னாட்களுக்குப் பின்னர் ஊழின்செயலால் கடம்பவனம் வந்துசேர்ந்தான். கானக மத்தி வந்ததும் கதிரவன் மறையும் நேரமாகிவிட்டது. பறவைகளும் விலங்குகளும் தத்தம் இடம் போய்ச்சேர்ந்தன. மனித நடமாட்டமில்லை இருள் சூழ்ந்தது. சிங்கம் புலி கரடிகள் விருப்பம்போல் உலாவின. அன்று சோமவாரம். தனஞ்செயன் பகல் முழுவதும் உண்ணவில்லை. அலைச்சல் வேறு. கூப்பாலும் அச்சத்தாலும் திசையறியாதவனாய் மகாலிங்க வடிவாயெழுந்தருளியிருக்கும் ஆலவாய்ப் பெருமானது திரு விமானத்தண்டை சென்று போக்கிடம் தெரியாமல் கலங்கியுற்று நின்றான்.

சோமவாரமாகையால் தேவர்கள் அங்கு வந்து பொற்றூமழையில் குளித்து வாத்திய முழக்கங்களுடன் பூசையை ஆரம்பித்தனர். அச்சமயத்தில் அன்பர்க்கபயந்தரும் ஆலவாய் வள்ளல் பெரும் சிவநேசனான தனஞ்செயனுக்குத் திவ்வியக்கண்ணளித்தார். தேவர்களது உருவங்களைக்கண்டு

பெரு வியப்பெய்தினன். அவர்களோடு கூடவே பொய்கையில் நீராடி அக மகிழ்ச்சியுடன் நித்திய கருமங்களை முடித்து, வலமாகச்சென்று, பார்த்த மாத்திரத்திலேயே பாவங்களைத்தும் பெருமானது இல்லத்தையடைந்து, உட்புகுந்து, தேவர்கள் வணங்கிய இலிங்கத்தை கண்ணுற்று, தடி போல் விழுந்து வணங்கி, எழுந்து, தேவர்கள் புரியும் பூசையைப்பார்த்துத் தானும் தன் மூட்டையிலிருந்து கஸ்தூரி குங்குமப்பூ முதலான மணப்பொருள்களை யெடுத்து குளிர்ந்த நீருடன் அரைத்துப் பேரிலிங்கத்திற்குப் பூசினான். அழகிய மண்டபத்தில் நின்றுகொண்டு புகழ்கள் பாடினான். வணங்கினான். சோமவார நோன்பில் ஆர்வமுடைய அவன் சாமந்தோறும் தேவர்கள் வழி படும்பொழுது தானும் பூசை செய்தான். ஆலவாய் மூர்த்தியைப் பலமுறை கண்டு அடங்காத களிப்புடன் கடமை முடித்தேனென்று உள்ளத்திற் கூறிக்கொண்டு தேவலோகத்து வாத்தியங்களைக் கேட்டுக்கொண்டும் தேவர் களைப் பார்த்துக்கொண்டும் இரவை ஓர் நொடிபோல் கழித்தான்.

பொழுது விடிந்தது. இறையன் தனஞ்செயனுக்கருளியிருந்த திவ்வியப் பார்வையை மறைத்துவிட்டார். லிங்கமும், விமானமும் சுற்றிலும் அடர்ந்த கானகமும்தான் தென்பட்டன. இதென்னவென்று பெரும் வியப்படைந்தான். இரவுக்குள் நல்ல வெளிச்சம் வந்துவிட்டது. பாதை தென்றாகப் புலப்பட்டது. இறைவனால் இரவில் காப்பற்றப்பட்ட தனஞ் செயன் மணலூர் சென்று தன் வீடு சேர்ந்தான்.

அப்பொழுது கலியாணபுரத்தரசன் குலசேகரபாண்டியன். அவன் சந்திர வமிசத்து மன்னருள் தலைசிறந்தவன். சந்திரன்போல் களிப்பப்ப வன். சிவனடியிலும் ஆற்றலிலும் புகழிலும் மங்களத்திலும் நிகரற்றவன். அவன் நெறி தவறாது மக்களைக் காத்து அரசுபுரிந்துவந்தான். தனஞ் செயன் இரவில் தான் கண்ட அற்புதக்காட்சிகளனைத்தையும் அரசனிடம் விரிவாகக் கூறினான். மன்னனும் வணிகன் மொழிந்ததை நினைத்துக் கொண்டே இரவில் தூங்கச்சென்றான். ஆலவாய்ப்பிரான் சித்தனது வேடத்தில் கனவில் தோன்றி "குலசேகர மன்னனே இதற்கு மேற்கி லுள்ள பெரிதான கடம்பக்காட்டின் மத்தியில் தேவேந்திரனால் கட்டுவிக் கப்பெற்ற விமானத்துடன் எனது இல்லம் இருக்கின்றது. அந்த வனம் உனது தலைநகராகக்கடவது" என்று கூறி மறைந்தார்.

காலையில் மன்னன் அமைச்சர்களை யழைத்துக் கனவுக்கதை முழுவதையும் அவர்களிடம் சொன்னான். அதைக்கேட்டு அவர்கள் ஆச்சரிய மடைந்து இறைவன் கட்டளைப்படியே நடத்தல் வேண்டுமென்று கூறினர் உடனே எல்லோரும் கடம்பவனத்திற்கேகினர். அங்கு திருக்கோயிலையும் பொற்றாமரைப் பொய்கையையும் கண்ணுற்றனர். அரசனும் அமைச்சரும் திருப்பொய்கையில் நீராடித் தானே தோன்றிய பேரிலிங்கத்தையும் கண்டு வணங்கினர். பின்னர் வெளிச்சென்று கானகத்தைச் சுற்றிப்பார்த்து நகரமைப்புப்பற்றி அரசன் ஆலோசித்துக்கொண்டிருக்கையில், கனவில் தோன்றியவாறு பெருமான் சித்த வேடத்தில் எழுந்தருளி நகரின் எல்லை களை வகுத்துவிட்டு மறைந்தார். உடனே அரசன் அமைச்சரிடம் உவகை யுடன் "இறைவன் எந்தச் சித்தருருவில் கனவில் வந்தாரோ அப்படியே இப்பொழுதும் தோன்றி நகரின் எல்லைகளைக் காட்டி மறைந்துவிட்டார்"

என்று கூறினன். அரசன் மொழிகேட்ட அமைச்சர் ஆச்சரியமுற்று "அரசே! உமது ஆக்கத்தின்பொருட்டும் மக்களின் நலத்தின்பொருட்டும் பிரம்மனும் விஷ்ணுவும் கண்டறியாத கடவுள் உமக்குக் காட்சியளித்திருக்கின்றார். ஆதலால் கண்டிப்பாய் இக்காடானது நகரமாய் ஆக்கப்படுதல் வேண்டும். கணக்கிலவாலும், யானைகளாலும், சிங்கங்களாலும் தாங்கப் பெறும் விமானத்தில் குற்றங்களொன்றுமில்லை. பிராகாரங்கள், கோபுரங்கள் முதலியவற்றில் பழுதுபார்க்க வேண்டியிருக்கிறது. அதை இப்பொழுதே கவனிக்கவேண்டும்" என்றனர்.

மகிழ்வுற்ற அரசன் உடனே காடனைத்தையும் வெட்டி, மேடு பள்ளங்களைத் திருத்தினான். திருக்கோயிலின் மதில்களையும் கோபுரங்களையும் பழுது பார்த்து புதுப்பித்தான். பத்து நாட்களில் தெரு வரிசைகளுடன் நகர் தோன்றிற்று. வாயில்தோறும் வாழைகளும் கொடிகளும் தோரணங்களும் கட்டப்பெற்றன. குளங்கள் பல தோற்றுவிக்கப்பட்டு அவற்றிலுள்ள தாமரை நீலோற்பலம் முதலான மலர்களிலுள்ள தேனை யருந்துவதற்கு வண்டுகள் ஒலித்துக்கொண்டு மொய்த்தன. நகரில் பல தோட்டங்கள் உண்டாக்கப்பெற்று அவற்றில் மா, கமுகு, தென்னை, செம்பகம், பலா, மாதுளை, எலுமிச்சை, நாரத்தை வில்வம் முதலிய மரங்களும், பலவித பூச்செடிகளும் செழிப்புடன் விளங்கின. விதைகளனைத்திலும் தேர்ந்து வேள்விகள் புரியும் அந்தணரையும், மற்ற வருணத்தாரையும் நகரில் வாழச்செய்தான். நகர் முழுதும் மக்கள் மயமாகவே இருந்தது. ஆலயத்தில் வழிபாடு செய்தற்குக் கங்கைக்கரையிலிருந்து சிவத்துவிசர் என்ற பட்டமார்களை வரவழைத்து காமிகம் முதலான ஆகம முறைப்படி பூசை நிகழ்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அரசன் அவர்களது இல்வாழ்க்கைக்கு வேண்டியவற்றையும் கொடுத்தான். ஆலயத்தின் வடகிழக்கில் தனக்கு அகமொன்று கட்டி அங்குவாழ்ந்துகொண்டு சிவனன்பு நிறைந்த வனுய் நாளில் மூன்றுநேரமும் ஆலவாய்ப்பெருமானை வணங்கிக்கொண்டு சுவர்க்கத்தில் தேவேந்திரன்போல் மகிழ்வுடன் அந்த நகரில் விளங்கினான்.

அரசனே ஒரு காட்டை அமராவதிக்கு மேற்பட்ட ஓர் நகரமாக மாற்றிவிட்டான். ஆனால் அக்காடு சிங்கம், புலி, கரடி, சர்ப்பம் முதலிய கொடிய விலங்குகள் வாழ்ந்தவிடம். அதனால் நகருக்குச் சுத்தியும் காப்பும் ஏற்படவேண்டும். அவ்விரண்டும் எவ்வாறு ஏற்படப்போகின்றனவோ என்று சிவனன்பிற்சிறந்த அந்தமன்னன் சற்று எக்கமுற்றான். இதையறிந்த ஆலவாய்ப்பெருமான் மழை என்ற வெளியோர்க்கு நினைப்பூட்டி உண்மையில் தனது சடையிலிருக்கும் மதியமுதுடன் கலந்து வெண்மைநிறம் பெற்ற கெல்கை நீரை நகர் முழுதிலும் ஓடச்செய்து புனிதமாக்கினர். பின்னர் நகருக்குக் காவலாக கீழ்த்திசையில் ஐயனாரையும், தெற்கில் எழுதாய் மாரையும். மேற்கில் விஷ்ணுவையும், வடக்கில் பத்திரகாளியையும் பிரதிட்டை செய்யும்படியாய் மன்னனுக்கு ஆகாயவாணிமூலமாய் ஆணை பிறந்தது. உடனே அவன்குறிப்பிட்ட இடங்களில் ஆலயங்களமைத்து அந்தந்தத் தெய்வங்களையும் அங்கங்கே பிரதிட்டைசெய்து அவைகளுக்கு நாள்தோறும் முறைப்படி வழிபாடு நடப்பதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். அது முதற்கொண்டு நகருக்கு நான்காலய நகரமென்று பெயர் வரலாயிற்று. நகரின் மத்தியிலுள்ள விமானத்தின்கீழ் அன்பர்களுக்கு இன்பமும் வீடும்

அளித்துக்கொண்டு சோமசுந்தரக்கடவுள் உறைந்திருந்தார். குலசேகர மன்னனும் இறைவருளாலே குபேரனுக்கு மேற்பட்ட செல்வத்தை யடைந்து போரில் எதிரிகளை வென்று சக்கரவர்த்தியானான். அவனுக்கு மலயத்துவசன் என்ற மகன் பிறந்தான். இந்திரனுக்கு செயந்தன்போல விருந்த அந்தக் குமாரன் குணத்திலும் அழகிலும், ஆற்றலிலும் ஒப்பற்றவன். அவனுடன்கூட ஆராயிரம் ஆண்டு அரசுபுரிந்து இறைவனது ஆணைபெற்று மகனுக்கு முடி சூட்டி இராச்சியத்தை அவனிடம் ஏற்பித்தான். பின்பொரு நாள் அரசன் மலயத்துவசனைக் கூப்பிட்டுக் குழந்தாய்! கடம்பவனகாதனது திருவடிகளில் உள்ள அன்பே எப்பொழுதும் இன்பத்தைபயக்கும். அதுவே முக்திக்கும் காரணம். இதை நன்கு உணர்ந்துகொள். நன்கு உணர்ந்து கொள்' என்று கூறிவிட்டு இறைவனது ஆலயம்சென்று கருப்பக்கிருகத் திற்குள் போய், இலிங்கத்திற்கு வலம் வந்து, எல்லோரும் பார்க்க உட னடனேயே சிவனோடு கலந்தான்.

இது பெருமானது மூன்றும் திருவிளையாடல். இதைப் படிப் போரும் கேட்போரும் எல்லாச்செல்வமும் பெறுவர்.



எட்டாவது அத்தியாயம்.

தடாதகைப்பிராட்டியாரின் பிறப்பு.

குலசேகர பாண்டியனது குமாரன் மலயத்துவசன் கடிதில் எதிரிகளை முறியடித்து. மீண்ட தோள்களுடன் பெரிய வில்லேந்தி பாண்டியவமிச திலகமாய் விளங்கினன். இலக்குமிகளனைவரும் அவனிடம் குடியிருந்தனர். இரக்கசித்தமுடைய அவன் எப்பொழுதும் ஏழைகளிடம் பரிவு காட்டினன். இந்திரன்போல் மிகுந்த ஆற்றலொடு இராச்சியத்தைத் தாங்கினன். நற்செய்கை நிறைந்த அவ்வரசன் புராணங்களை நன்கு கற்றவன். பெரியோர்களிடத்தன்புடையன். அறுபத்துநான்கு கலைகளையும் எல்லாச் சாத்திரங்களையும் ஆராய்ந்தறிந்தவன். உலகையுடன் மக்களைக்காக்கும் குணமுடையவன். பெரும் சிவனன்பன். சிவநேசச் செல்வர்களிடம் அன்பு கொண்டவன். எப்பொழுதும் சிவ நினைப்பிலீடுபட்டு சிவ வறத்திலொழுகுபவன். உச்சைச்சிரவம்போன்ற குதிரைகளும் ஐராவதம்போன்ற யானைகளும் அவனுக்குப் பணிபுரிந்தன. அறிவாளிகளான அமைச்சரும் பிராம்மணரும் அவனது பக்கலில் எப்பொழுதும் இருந்தனர். அவன் பூமியனைத்தையும் செயித்து சக்கரவர்த்தி நிலையையும் எய்தினன். மனுநெறி தவறாது அவன் அரசுபுரிகையில் மக்கள் மிகுந்த மகிழ்ச்சிபெற்று முன்னிருந்த மன்னர்களை மறந்தனர்.

அரசனுக்கு ரமணீயமான மகளிர் பலர் மனைவிகளாயிருந்தனர். அவர்களுக்குள் முக்கியமானவள் சூரியவமிசத்தைச் சேர்ந்த சூரசேமனனின் மகளான எழில்களனைத்தும் பொருந்திய காஞ்சனமாலை. அப்பெண்மணியின்கூட மலயத்துவசன் பல அறச்செயல்களைப்புரிந்து வந்தான். தந்தையாகிய குலசேகரமன்னனது சொற்களை மறவாது சோமசுந்தரப்பெருமானது திருவடிகளில் அன்புசெலுத்தி நாள்தோறும் மூன்று நேரங்களிலும் சிவபூசை செய்துவந்தான். மற்றநேரங்களில் தான் அரசியல் அலுவல்களைக் கவனித்தான்.

இவ்வாறு பலவாயிரம் ஆண்டுகள் கழிந்தன. ஆனால் மக்கட்பேறு ஏற்படவில்லை. குழந்தை கிடைத்தற்பொருட்டு அரசன் எத்தனையோ சைவ நோன்புகள் நோற்றான். கிருஷ்ணபட்ச சதுர்த்தசி, அஷ்டமி, சோமவாரம் இந்த நாட்களில் நியமத்துடன் பட்டினி யிருந்து தானங்கள் பல கொடுத்து, சோமசுந்தரக் கடவுளுக்கும் விசேட வழிபாடுகள் நிகழ்த்தி சிவனன்பர்களுக்குச் சோறும் பொருளும் கொடுத்து வணங்கிப்பின்னரே உவகையுடன் உண்டியேற்றான். இன்னும் பல இறைவனுக்குகந்த நற்செயல்களைச் செய்தான்.

ஆலவாய்ப் பெருமானது முன்னிலையில் நூறு அசுவமேத வேள்விகள் புரிவதாக சங்கற்பித்து தொண்ணூற்றொன்பது நிறைவேறின. நூறு

வது தொடங்கவிருக்கையில் இந்திரன் மலயத்துவசனிடம் வந்து அதை நடத்தவேண்டாமென்றும் புத்திரனைப் பெறுவதற்குப் புத்திரகாமேஷ்டி நடத்தினாற்போதுமென்றும் கூறி வேண்டிக்கொண்டான். அதன்பேரில் அசுவமேதம் நின்றது. உடனே மிகச்சிறப்புடன் புத்திரகாமேஷ்டி நிகழ்ந்தது. அப்பொழுது சிவபெருமானின் எட்டு மூர்த்திகளில் மிகத் தூயதும் உலகெலாம் புகுந்து நிற்பதுமான அக்கினிமூர்த்தி விசேடமான ஒளியுடன் மிளிர்ந்து தோற்றமளித்தது. பூர்ணாகுதியும் நடந்தேறியது. அவ்வமயம் அவிகளனைத்தையும் ஏற்றுச் சிவனது ஆணையால் வினைக்குத்தக்கவாறு பயனை விளைவிக்கும் ஒளிமூர்த்தியான வேள்வித்தீயினின்றும், அங்கயக்கண்ணியம்மை மூன்றுபிராயப் பெண்ணுருத்தோன்றலுற்றாள். அக்குழந்தையின் திருமேனியினது வனப்பை யாரே கூறமுடியும்? வண்டுகுழல்களும், முழுமதிபோன்ற முகமும், அரமதிபோன்ற நெற்றியும், அழகிய புருவங்களும், மான்விழிகளும், மின்னல்போன்ற காதோலைகளும் எள்ளுப்பூப்போன்ற மூக்கும், அழகான பற்களும், அமுதம் நிறைத்தூதும் சங்குபோன்ற கழுத்தும், கொஞ்சுமொழியும், சிற்றிடையும், வாழைபோன்ற தொடைகளும், அழகிய பொன்னடிகளும், அதிசயிக்கத்தக்க பொலிவையுண்டாக்கின. குழந்தை காலையில் மலர்ந்த தாமரைபோல் கண்களோப்பதித்தாள். திவ்விய ஆடையுடுத்தி, திவ்விய ஆபரணங்கள் பூண்டு திவ்விய மலர்கள்சூட்டி மிகப் பகட்டான தோற்றம் நிறுவினாள் உமாதேவி.

வேள்வியக்கினியில் தோன்றிய அந்த குழந்தை மலயத்துவச மன்னனின் பக்கத்தில் வீற்றிருந்த காஞ்சனமாலையைக் கட்டித்தழுவி அவளது மடிமீதேறி உட்கார்ந்தாள். காஞ்சனமாலை ஆச்சரியத்தில் அமிழ்ந்தாள். மன்னன் குழந்தையை உற்றுநோக்குகையில் அவளுக்கு மூன்றாவது ஸ்தனமொன்றிருக்கக்கண்டான். உடனே அவனது முகம் வாட்டமடைந்தது. அதையறிந்த இறைவன் அவனது துயரத்தைப் போக்குதற்காக ஆகாயத்திலிருந்துகொண்டு அவனைநோக்கி "அரசனே துயர்கொள்ளாதே. உன்னுடையவும், உனது மனைவியுடையவும், உலகத்தினுடையவும் நலத்தின்பொருட்டு மகாதேவி அவதரித்திருக்கின்றாள். அவளுக்குத் தடாதகையென்று பெயரிடு. திருமணத்திற்கு மாப்பிள்ளை அவளை நோக்குங்கால் மூன்றாவது ஸ்தனம் மறைந்துவிடும். சாதகருமம் முதலிய சடங்குகளை அவளுக்கு உடனே செய் என்று மொழிந்தார்.

அதைக்கேட்டு வேள்வித்தீக்கையிலிருந்த மன்னன் இறைவனது அருள் என்று எண்ணிப் பெரியோரைக்கொண்டு சாதகருமம் நடத்தி, வேண்டிய தானங்கள் செய்து குழந்தைக்குத் தடாதகையென்று திருப்பெயரும் சூட்டினான். அரசன் காஞ்சனமாலையை நோக்கி 'இது எனது பாக்கியம். பெரும் பொருளே கன்னிவடிவத்தில் மூன்று குலங்களையும் பிறவிக்கடலினின்று மீட்டுதற்கும், தீயோரையழித்து நல்லோரைக் காக்கவும் அவதாரம் செய்திருக்கின்றது. நான் கன்றாய்க் கண்டுகொண்டேன், என்று அடிக்கடி உரைத்தான். கன்னிக்கு மென்மேலும் ஆபரணங்களணிவித்துக் கண்டுமகிழ்ந்தான். காஞ்சனமாலையும் இலக்குமிபோன்ற அக்கன்னியை மிகப்பரிவுடன் வளர்த்துக்கொண்டு அரசனுடன் மாபெரும் இன்பங்களைத்துய்த்து வாழ்ந்துவந்தாள். ஆதியந்தமற்ற சக்திவடிவாய் எப்பொழுதும் இறைவனை விட்டுப் பிரியாமலிருக்கும் உமாதேவி ஒரு அமிசத்துடன்

மலயத்துவச மன்னனது இல்லத்தில் அவதரித்து வளர்பிறைமதியின் கலை போல் வளர்ந்துவந்தாள்.

இவ்வாறு அகத்தியர் சொல்லக்கேட்ட முனிவர் அவரைப்பார்த்து முன்னொரில் தாக்காயணிதேவி பெருமானைப் பழித்ததற்காக தன் தகப்பனைத் தள்ளிவிட்டு மலயத்துவசன் மகளாகப் பிறந்தாள், இப்பொழுது யாது காரணம்பற்றி மலயத்துவசன் மகளாகப் பிறந்திருக்கிறாள். கூறவேண்டும். முனியே!! என்று வேண்டிக்கொண்டனர்.

அதற்கு அகத்தியர் கூறுகின்றார். முன்னொருகாலத்தில் விசுவாவசு என்ற கந்தருவ ராசனுக்கு வித்தியாவதி என்ற ஓர் பெண் இருந்தாள். அவள் தனது இளசத்திறத்தினால் மூவுலகையும் மயக்கும் திறமை வாய்ந்தவள். இளம் பிராயத்திலேயே அவளுக்கு உலக வாழ்வில் வெறுப்பு வந்து தேவியிடம் மிக அன்பு செலுத்தினாள். சந்தனம் முதலிய மணப்பொருள் களை நீக்கி மேனியில் திருநீறு அணிந்தாள். ஆபரணங்களை வெறுத்து உருத்திராக்க மாலைகள் பூண்டாள். இரவும் பகலும் எப்பொழுதும் பெரு மகிழ்ச்சியுடன் நெஞ்சில் உமாதேவியை எண்ணி அந்த அம்மையாரையே பரிவுடன் பூசித்தாள். மூல மந்திரத்தை விடாது செபித்துக்கொண்டு தேவியை துதித்துவந்தாள்.

ஒருநாள் தேவியன்பினளான வித்தியாவதி அறிஞருள்சிறந்ததன் தந்தையாரை அணுகி "தந்தையே பெரியோருள் பெரியவரே அருளவேண்டும். மண்ணுலகில் உமையாரின் தலங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றுள் சிறந்தது எது?!! என்று வினவினள். உடனே விசுவாவசு "மகளே சொல்கின்றேன் கேள், இப்பொருள்பற்றி சதானந்தரை நாங்கள் ஒருசமயம் கேட்டோம். அதற்கு அவர் கூறிய பதிலையே உனக்கு இப்பொழுது கூறுகின்றேன். முன்னொரில் பிரம்மதேவன் தலங்களின் ஏற்றத் தாழ்வை நிர்மானிக்கும்பொருட்டு இடை போட்டுப்பார்த்தான். அதில் ஆலவாய்த்தலமே மிகச் சிறந்ததெனத் தெளிவாயிற்று. மேரு, மந்தரம், கைலாயம், காசி, சிவசைலம் இவற்றையெல்லாம் ஒருதட்டிலும், ஆலவாய்த் தலத்தைத் தனித்து மற்றொரு தட்டிலும் போட ஆலவாயே கனத்திருந்தது ஆதலால் அதுவே அனைத்திலும் மேம்பாடுடையது. பயன்களனைத்தையும் உடனே பயக்கும் ஆற்றல்வாய்ந்தது. அங்கு சுவர்க்கம் செல்லும் வாயில் எப்பொழுதும் திறந்தே கிடக்கின்றது. அங்கயக்கண்ணியம்மையை வணங்குதற்கு இந்திராணி முதலிய தேவமகளிர் தேவராசனிடம் விடைபெற்று அங்குச் செல்கின்றனர். அங்கே தீர்த்தத்தின் கரையில் திவ்வியமான கோயிலில் உமாதேவி பெரும் சக்தியாய், நிறைந்தவளாய், முதல் முடிவற்றவளாய், சத்து, சித்து ஆனந்தவடிவமாய், நினைத்தமாத்திரத்தில் பாவம் தீர்ப்பவளாய், பேறுகளனைத்தையு மளிப்பவளாய், ஆலவாய்ப் பெருமானின் நெஞ்சமறிந்தவளாய், கயற்கண்ணியாய், பெருந்தேவியாய் மனோன்மணியாய் அன்பர்களது விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக எப்பொழுதும் இருக்கை கொண்டேயிருக்கின்றாள். மூவுலகிலும் தேவியினது பீடங்கள் பல உள. அவற்றுள் அறுபத்துநான்குபீடங்கள் சிறந்தவை. இவற்றிலும் கடம்பவனப் பீடமானது மிக்க மேன்மை வாய்ந்தது. வசுபூர்ணர் என்றஇயக்கரும், சுவச்சவித்தியர் என்ற வித்தியாதாரும், பஞ்சசுவரர் என்ற எனது தந்தையாரும் அங்கு பெரும் சித்திகளைப்பெற்றனர்!! என்று சொல்லிமுடித்தார்.

உடனே வித்தியாவதி தானும் அங்கு சென்று மூன்று வேளைகளும் தேவியை வணங்கி சீக்கிரமே சித்திபெற வேண்டுமென்று தீர்மானித்து தந்தையின் அனுமதியும் பெற்று, தனக்குக் கயக்கண்ணியைப்பார்க்கும் பாக்கியம் கிட்டிவிட்டதென்று எண்ணி, கதிரவன் வடதிசை திரும்பும் நாளாகிற தைமாதப் பிறப்பெனும் புண்ணிய காலத்தில் மனோவேகமாய் ஆலவாய்த்தலம் வந்துசேர்ந்தாள். உடனேயே ஆண்களுக்கும் முடியாத ஸம்வத்ஸர விரதமென்னும் பெரும் கோன்பை நெஞ்சுறுதி பெற்ற அவள் மேற்கொண்டாள். பொற்றாமரையில் நீராடி, விநாயகரை வணங்கி, அங்கயக்கண்ணி அம்மையையும் ஆலவாய்ப் பெருமானையும் பூசித்த, வணங்கி எடுத்திருக்கும் நோன்பு நிறைவுறவேண்டுமென்று வேண்டிக்கொண்டு, அம்மனது முன்னிலையடைந்து கருநிறத்தவளும் இரண்டு புயங்களும் இரண்டு கண்களுமுடையவளும், மங்களவுருவினளும், தேன்பெருக்கும் செங்கழனி மலரை யேந்தியவளும், சிவப்பாடை யணிந்தவளும், மேலான மணப்பொருள்கள் பூசியவளும், மலர்மாலைகள் பூண்டவளுமான மனோன்மணி தேவியை நெஞ்சில் எண்ணி, அகவேள்வி முறைப்படி நாள்தோறும் வழிபட்டு நூற்றெட்டுக்குடங்களில் புண்ணியதீர்த்தங்களிலிருந்து கொண்டு வந்த நீரை நிறப்பி செபம்செய்து அந்நீரைக்கொண்டு அங்கயக்கண்ணிக்கு அபிஷேகம் முடித்து மேலான ஆடை, ஆபரணங்கள், மணம் முதலியன கொடுத்து உபசாரங்கள் செய்து தேவியை விசேடமாக வணங்கினாள். ஒவ்வொருநாளும் ஆயிரத்தெட்டு நீலோற்பல மலர்கள் தொடுத்த பூமாலையை தேவிக்கு சாத்தினாள். ஒருமாதகாலம் ஒருவேளை உண்டி அருந்தினாள். அடுத்தமாதத்தில் இரவில் ஒருவேளை புசித்தாள். மூன்றாம்மாதம் கேட்காமல் கிடைத்ததை யருந்தினாள். நான்காம்மாதம் கீரை பழம் இவற்றை உட்கொண்டாள். ஐந்தாம்மாதம் எள்ளுப்பிண்ணாக்குணவுடனிருந்தாள். ஆறாவதுமாதத்தில் சாந்திராயண விரதப்படி உணவேற்றாள். ஏழாம் மாதத்தை பஞ்சகவ்வியத்தைக்கொண்டும் எட்டாம் மாதத்தை நீரைக்கொண்டும் கழித்தாள். ஒன்பதாம்மாதம் பால் விரதம். பத்தாம்மாதம் தருப்பைப்புல் நுனியிலிருக்கும் நீர்த்துளிகள் அருந்தப்பட்டன. பதினோராம்மாதம் காற்றுண்டி. பன்னிரண்டாம் மாதம் ஒன்றுமே கிடையாது. இவ்வாறு ஒரு முழு ஆண்டு முனிவர்க்கும் செயதற்கரிய விரதங்களை யேற்று முடித்தாள்.

பதின்மூன்றாவது மாதம் பிறந்தது. அதிகாலையில் வித்தியாவதி பொற்றாமரையில் குளித்து மாசற்ற நெஞ்சினளாய் மீனாட்சியம்மையின் முன்னிலை போய்ச் சேர்ந்தாள். அதற்குள்ளாகக் கருணைமூர்த்தியான தேவி மூன்று பிராயக்கன்னியாய் புன்முறுவல்பூத்த முகத்துடன் காட்சி கொடுத்தாள். அப்பொழுது ஆலவாய்ப்பெருமாட்டி கருநிறத்தொடு மெல்லிய மேனியினளாய் காதுவரை நீண்ட கண்களுடன் எல்லாவாபரணங்களுமணித்து மஞ்சள் பட்டுடுத்தி மஞ்சள் மலர்கள்தரித்து விளங்கினாள். உடனே தேவியானவள் வரத்தைச்சொல், வரத்தைச்சொல், என்று கூவிக்கொண்டே கருப்ப கிருகத்திலிருந்து வெளியேறி அர்த்தமண்டபம் வந்தாள். கண்களுக்கினிய வடிவத்தை கண்ணுற்று வித்தியாவதி போன்புடன் வணங்கி "எந்தத்தேவி உலகத்தை ஆக்கினவளோ, எவள் இறைவனுக்கும் இறைவியோ அந்த மங்களவடிவமான அங்கயக்கண்ணி அம்மைக்கு வணக்கம். எவளை ஒருமுறை வணங்கி மக்கள்எல்லா விருப்பங்களையுமடைகின்றனரோ எவளது 'திவலையருளால் இன்பமும் வீடும் கிடைத்தற்கரியனவல்

லவோ எவளுடன் சேர்ந்ததான் சிவபெருமான் ஐஞ்செயலேப்புரிகின் றாரோ, எவளது களிப்பின்பொருட்டு இறைவன் திருக்கூத்து ஆடினாரோ, பூமகள் காமகள் முதலியோர் எவளதுவலிமையின் துளியிலிருந்து தோன்றி னாரோ, எவள் வீடு விரும்புவோர்க்கு பிரம்மவித்தையைக் கற்பிக்கின் றாளோ, எவளை வணங்குதலால் செல்வங்களனைத்தும் தழைக்கின்றனவோ, எவளைத் துதிக்க எல்லாவிதமான பாவங்களும் இன்னல்களும் விலகுகின் றனவோ, பராசக்தியான எவளை நினைத்தால் சித்திகளனைத்தும் கைகூடு மோ, எவளில்லையெனில் சிவபெருமானும் திறனற்றுவிடுவாரோ, அசையு மூலகும் அசையாவுலகும் அனைத்தும் எவளது திருவடிகளிலிருந்து தோன் றினவோ அந்த மங்களவடிவமான அங்கயக்கண்ணி அம்மைமக்கு வணக்கம் ''என்றவாறு துதித்து திரும்பத்திரும்ப வணங்கி மீனாட்சிதேவியின் அனு மதியின்பேரில் ''தாயே! எனது நெஞ்சம் எப்பொழுதும் உன்னையே பற்றி நிற்கட்டும். இதுவே நான் கோரும் வரம். மற்ற வரங்களால் யாது பயன்? என்று தெரிவித்தாள். உடனே தேவி குயில்போன்ற குரலில் அப்படியே இருக்கட்டும் என்று கூறி அவளை இன்னுமொருவரம் கேட்கும்படி உத்தர விட்டாள். அப்பொழுது, வித்தியாவதி, தேவியைநோக்கி ''அம்மையே இப்பொழுது அருளிய உருவத்தில் எனக்கு மகளாகவந்து என்னைக்கட்டித் தழுவி என்னுடன் இருந்து கடைசியில் எனக்கு வீடு அருளவேண்டும் 'என்று கேட்டுக்கொண்டாள்.

வித்தியாவதியினது இம்மொழிகளைக்கேட்டு இறைவி அவளிடம் 'பெண்ணே! அடுத்த பிறவியில் நீ பாண்டியமன்னர்களிற் சிறந்த மலயத் துவசனை கணவனுகவடைந்து அவனுடன் வெகுகாலம் இன்பங்களனுபவிப் பாய். பின்னர் புத்திரகாமேட்டி வேள்வி நடைபெறும், மூன்று ஸ்தனங் களுடன் யான் அக்கினிகுண்டத்திலிருந்து தோன்றி வருவேன். நீ என்னை மகளாக ஏற்றுக்கொள்வாய். பின்னர் எனது அருளால் மலயத்துவசமன்ன னுடன் கைவல்லியநிலை கிட்டும். இப்பொழுது நீசெய்த தூதிமக்கட்பேற ளிக்கவல்லது. பரிவுடன் அதை செபிக்கும் ஆணை பெண்ணை அனைவரும் எல்லா நலன்களையும் பெறுவர் 'என்றருளியவாறே கருப்பகிருகத்தினுட் சென்று மறைந்தாள்.


மேற்கூறிய காரணத்தால்தான் தேவியானவள் காஞ்சனமாலைக் கும் பாண்டியவரசனுக்கும் தடாதகை என்ற பெயருடன் மகளாகத் தோன் றினள். முனிவரே! உங்களது கேள்விக்குப் பதில் கூறிவிட்டேன். மலயத் துவசவரசன் அந்தக்கன்னியைத் தனது குலத்தை தாக்கிவிட வந்த மகளுகவே எண்ணி அவளுக்கு வில்வித்தை முதலான எல்லா வித்தைகளை யும் கற்பித்தான். தனக்குப் பாக்கியம் கிடைத்ததென்ற நினைவுடன் காஞ் சனமாலையோடு சுகமாய் வாழ்ந்தான். நீதியாய் அரசபுரிந்து கடைசிக் காலத்தில் அமைச்சருடன் ஆலோசித்து மகளுக்கு முடி சூட்டி அவளிடம் இராச்சியத்தை ஒப்புவித்துப் பின்னர் விண்ணுலகம் சென்றான். அரச னது ஈமச்சடங்குகளை அவளே செய்தாள். பின்னர் தடாதகைப்பிராட்டி மனுநீதி தவறாது செங்கோல் நடத்தினுள். தனது திறமையினுல் எதிரி மன்னர்களைப் போர்களில் செயித்து அனைவரையும் அடக்கித் தன்னை பே ரரசியாக்கிக்கொண்டு அந்தப் பெண்ணரசி அரசு புரிந்தாள். இந்த நான்காம் திருவிளையாடலைக் கேட்போர் எல்லாப் பேறுகளையும் பெறுவர்.

ஒன்பதாவது அத்தியாயம்.

திருமணம்.

கன்னியான அந்தத்தடாதகை பிராட்டி தானே சிங்காதனத்தி லமர்ந்து, ஒருபுறம் அரசுத்திருவும் மற்றொருபுறம் அழகுத்திருவும் மிளிர, நவரத்தினங்களிழைத்த மூடி, வெண்குடைசாமரங்களுடன் மிகவிளங்கினாள். அறிவிற்சிறந்த அமைச்சருடன் கல்லோரைக் காத்தும் தீயோரை அடக்கியும் நெறிமுறையே அரசு செலுத்தினாள். காலம்செல்ல, அவள் குமரிப் பருவம் எய்தவே தாயாரான காஞ்சனமாலைக்குக் கவலை பிறந்தது. இதை யறிந்த தடாதகை "எனக்கு எப்பொழுது கணவன் வரப்போகிறான்? எனது மூன்றாவது தனம் எப்பொழுது மறையப்போகின்றது? இங்கேயே இருப்பேனாகில் எனது விருப்பம் ஒருக்காலும் நிறைவேறப்போவதில்லை. ஆனதபற்றித் திக்குவிசயம் என்ற பெயருடன் வெளிநாடுகளில் சுற்றுகின்றேன்" என்று நீர்மானித்து வெற்றி யாத்திரைக்கு வேண்டியவற்பாடுகளை செய்யும்படி உத்தரவிட்டாள். நான்குவிதப் படைகளும் தயாராகின. பின்னர் பிராட்டி காலுருநிரை பூட்டி மீனக்கொடியுடன் விளங்கும் பெரிய இரதத்தில் ஏறி அரசாணைவரையும் செயித்து அவரிடமிருந்து பொன், பலவித இரத்தினங்கள், குதிரைகள், யானைகள், ஒப்பற்ற ஆடைகள் ஆச்சரியமான ஆபரணங்கள், முதலானவற்றைக் காணிக்கையாகப் பெற்று, கிடைத்தபொருள்களைக்கொண்டு தனதுராச்சியத்தைச் செழிப்புறசெய்து அற்புதமான கோட்டையையும் கட்டுவித்தாள்.

பின்னர் மிகுந்த வீறுகொண்டு தடாதகைப்பிராட்டி லோகபாலர் களையும் செயிக்க விரும்பினாள். படைகள் சித்தமாயின. பிராட்டி ஐயெழுத்து மந்திரத்தைச் செபித்துப் படையினர்க்கு திவ்விய பார்வையையும் வானிற் செல்லும் திறனையும் அளித்தாள். கன்னியரசி முதலாவதாக கீழ்த் திசைக்கதிபனான இந்திரனை வெல்லும் நோக்கத்துடன் அமராவதி நகரை முற்றுகையிட்டாள். தேவர்கள் முறியடிக்கப்பட்டனர். இந்திரனும் யாவற்றையும் இழந்து திகிலடைந்து சரண்புகுந்தான். அவன்கொடுத்த கற்பகத் தருவையும், காமதேனுவையும், சிந்தாமணி மாலையையும் ஏற்றுக்கொண்டாள். பிறகு தென் கீழ்த்திசையதிபனான அக்கினிதேவனை வென்று அவனது நகரையும் பிடித்து அவனால் காணிக்கையாக வளிக்கப்பட்ட பொன் முதலான சிறந்த பொருள்களைப்பெற்றுக்கொண்டு அவனுக்கு அருள் புரிந்தாள். அதன்பின் தென்திசையில் யமனைச் செயித்து அவனால் கொடுக்கப்பட்ட சிறந்த கருநிறப் பொருள்களை வாங்கிக்கொண்டாள். பின்னர் முறையேயுள்ள திசை பாலர்களான நிருதி, வருணன், வாயு, குபேரன் இவர்களை வென்று அவர்களிடத்தினின்று மேன்மையான பொருள்களை யீட்டி, வட கீழ்த்திசையில் கைலாயமலையின் மத்தியின் உச்சியில் ஒளியோடு இலங்கும் சிவபெருமானதுபுரியைச் செயிக்கவெண்ணி வெளிக் கோட்டையிலுள்ள



திருமணம்

கோவற்கணங்களோ வென்று அதன்பின் கொடிப்பொழுதில் மற்ற மதில்களின் யும் தாண்டி முதல்வேலியின் வாயிலில் நிற்பவரும் இறைவனையொத்த வலிமை படைத்தவருமான நந்திகேசுரரைப் போரில் வெல்லும் தருவாயில் கணங்களுக்குத் தலைவரான நந்திகேசுரர் தனது தோல்வியை இறைவன் முன்னிலையில் சென்று தெரிவிக்க முயற்சிக்கையில் பெருமான் அவரது மூன்பு தோன்றினர்.

என்று தடாதகைப்பிராட்டி திசைபாலர்களோச் செயிக்கக்கிளம்பி னளோ, அன்றே ஆலவாய்நாதன் லிங்கத்தினின்று சிறிதளவு பிரிந்து யாருக்கும் புலப்படாதவனாய், பதினாறாட்டைப்பிராயத்து இளங்குமர வடிவ னாய் மிகுந்த பொலிவுடன் தேவியை மணக்கும் நோக்கத்துடன், அவள் சென்றவிடங்களனைத்திற்கும் கூடவேசென்றார். இப்பொழுது நந்திகே சுரரது சங்கடநிலை தெரிந்து அவருக்குதவும்பொருட்டு மாயைத்திரையை நீக்கி அவர் காணும்படியாய் நின்றார். கணத்தலைவர்கள் இறைவனைக் கண் ணுற்று "ஐயனே காக்கவேணும். மூன்று தனங்களுடைய ஓர் பெண் ஆயுதங்களேந்தி எங்களோ வாட்டு கின்றாள். கருணைநிதியே! சாத்தருள வேண்டும்" என்று கூக்குரலிட்டனர். உடனே பெருமான் அவர்களோ பார்த்து "அஞ்சவேண்டாம் நீங்கள் சும்மாவிருங்கள். நானே அந்தப் பெண்ணை செயிக்கப்போகிறேன்" என்று கூறி ஊக்குவித்தார். பின்னர் மனைக்க ஆவல்கொண்டு வில்லும் கையுமாய் தடாதகைப்பிராட்டியாரை உற்றுநோக்கிக்கொண்டு நின்றார். அவர் கண்ணுற்ற மாத்திரத்திலேயே மூன்றாவது தனம் முற்காலத்தில் விந்தியமலைபோல் மறைவுற்றது. பக்கத் தில் நின்ற எல்லோரும் ஆச்சரியமடைந்தார்கள். கூடவந்திருந்த பழைய அமைச்சரான சுமதி பிராட்டியாரைப்பார்த்து" தாயவளே! இவரே உனது கணவன்" என்று காதில் உரைத்தார். அதுகேட்ட தடாதகை பேரழகனை உற்றுநோக்கினாள். முகம் அழகு, கண்கள் அழகு புயங்கள் அழகு, அங்கங் களனைத்தும் அழகு. இளம்பிராயம், தலையில் திங்கள், அப்படியே மயங்கி விட்டாள். கையிலிருந்த வில்லையும் அம்பையும் எறிந்துவிட்டு மிகுதியான வெட்கத்தினால் தலை குனிந்து, கால் கட்டைவிரலை நோக்கிய வண்ணமாய் இரதத்தில் சித்திரத்திலிட்ட பதுமைபோல் அசைவற்று நின்றனள்.

அப்பொழுது கடம்பவனப்பிரான் பிராட்டியைப்பார்த்து 'பெண் ணே! உன்னை அடைவதற்காக நான் வந்திருக்கிறேன். அதற்கு வேண்டி யதை உடனே செய், என்றார். அரசன் மகளான தடாதகை இதைக்கேட்டு துணுக்குற்று குரலில் 'ஐயனே! பாண்டியநாட்டில் மதுரையென்று ஓர் நகர் உளது. அங்கு எனது தாயார் மலயத்துவச மன்னனது பட்டத்தராணி காஞ்சனமாலைப் பெயருடையார் இருக்கின்றார். பெரும் தவம் புரிகின்றவர். அவரது அனுமதியின்பேரில் தங்கள் என்னை மணந்துகொள்ளவேண்டும் என்று வேண்டிக்கொண்டனள். அதற்கு இறைவன் அரசகுமாரியை நோக்கி "இதற்கு நேர் எட்டாவதுநாள் சோமவாரத்தன்று உனது தாயா ரின் அனுமதியுடன் நான் உன்னை மணப்பேன். நீ புறப்பட்டுச்செல். தாம தம்வேண்டாம்" என்று மொழிந்து அவளைத் தனதுஊருக்குஅனுப்பிவிட்டு மறைந்தார்.

தடாதகை மூன்றும் தனம் மறைந்த காரணத்தாலும் நாயகன் கிடைத்துவிட்டான் என்ற காரணத்தாலும் அதிகமான உவகையடைந்து உடனே மதுரை சென்று அருமைத்தாயிடம், நடந்தது அனைத்தையும் கூறி அவளுடன்கூட அமைச்சரையழைத்து நாட்டிலுள்ள மன்னர்க்கெல்லாம் கட்டளை பிறப்பித்தாள். எங்கும் தங்குமிடங்களும் தண்ணீர்ப் பந்தல்களும் நிறுவப்பெற்றன. திருமணத் திருவிழாவிற்கு வேண்டும் ஏற்பாடுகளையெல்லாம் செய்விக்கப்பெற்றன. விசித்திரமான ஆடைகளையும் ஆபரணங்களையும் தேவேந்திரனிடமிருந்து கொணர்ந்த கற்பகத்தரு கொடுத்தது. காமதேனுவோ பால், தயிர், நெய், தேன், சர்க்கரை முதலான பண்டங்களை வேண்டிய அளவு ஈன்றது. சிந்தாமணியானது போதிய பொன், இரத்தினங்கள் முதலியவற்றைத் தந்தது. இவ்வாறு எல்லா ஏற்பாடுகளும் முடிந்ததும் பெண்ணரசி மணமகன் வரவையும் முகூர்த்தம் நடக்க வேண்டியதையும் எதிர்பார்த்து நகர் முழுவதையும் தோரணங்கள் முதலானது கட்டி அழகுபடுத்தச்செய்தாள். பின்னர் தாயாரும் பெண்ணும் பெருமான் மணமகன் வேடத்தில் எப்பொழுது வந்துவிடுவாரோவென்று சிக்கிரத்தில் தங்களது பெருஞ்செல்வத்திற்கேற்றவாறு வஸ்திரங்களும், முத்துக்களும், பொன்னும் நிறைந்த பெரியதொரு மணமண்டபத்தை நிறுவித்தனர்.

முகூர்த்தம் வந்துவிட்டது. சுந்தரமூர்த்தியான சுடம்பவன நாதன் கலியாணத்திற்கு உகந்த ஆடை ஆபரணங்களணிந்து விசேடப் பொலிவுடன் கைலாய மலைபோன்ற தனது விடை மீதேறி சூலத்தைக் கைப்பிடித்து, இரத்தினங்கள் இழைத்த தடியும்முடியுமுடைய வெண்குடையைக் குண்டோதரன் பிடிக்க, கணக்கூட்டங்கள் ஆயிரக்கணக்கில், ஆயிரக்கணக்கான வாய்களினின்றும் பலவித வாத்தியங்களின் ஒலியை முழக்கிக்கொண்டு முன்செல்ல, பலம்படைத்த கும்போதரன்பின்வர, மதுரைநகரில் தோன்றினர்.

ஏற்கனவே பெருமானது கட்டளைப்படி சங்கு கர்ணன், மகாகர்ணன், கண்டாகர்ணன், நாலகர்ணன் முதலிய கணத்தலைவர்கள் திருமணச் செய்தியை விஷ்ணு முதலான தேவர்களுக்கு அறிவித்திருந்தார். கருடன் மீதேறி இலக்குமிதேவியுடன் மகாவிஷ்ணு அவரது பரிவாரங்களுடன் விரைந்து வந்தார். பிரம்மதேவன் நாமகளோடு அன்னவாகனத்தில் முனிக் குழாங்களுடன் விரைவாக வந்தார். தேவராசனும் இந்திராணியுடன் வித்தியாதரர் அப்சரமகளிர், திசைபாலர்கள் பின்தொடர மணமண்டபத்திற்கு ஓடிவந்தார். மாமேரு முதலான ஏழுகுலமலைகளும், நாவலம் முதலிய ஏழு தீவுகளும், பாற்கடல் முதலிய ஏழுகடல்களும், மேற்கோடும் நதங்களும், மற்ற ஆறுகளும் தங்களது அசையா உருவைவிடுத்து அசையும் உருவை ஏற்று, தக்க காணிக்கைகளுடன் அங்குக் குழுமினர். தேவர் முதலானோரின் கன்னிகள் இரத்தினம் நிரப்பிய பொற்கலங்களுடன் மங்களப்பண்கள் பாடிக்கொண்டு அவண் கூடினர். தடாதகைப்பிராட்டியின் திருமணத்திற்கு வந்திருந்த தேவர் முனிவர் இவரது கூட்டங்களால் நகரெங்கும் மிக நெருக்கடியாகவிருந்தது. காஞ்சனமாலையினுடையவும் தடாதகையினுடையவும் ஆணையை மேற்கொண்டு பூவுலக மன்னரனைவரும் தமது அமைச்சருடன் வந்தார்கள். வந்திருந்த எல்லோரும் உடனே சென்று இடபக் கொடியோனை வணங்கி நகரை வலம்சுற்றினர்.

பின்னர் பெருமான் மணமண்டபவாயிலுக்கு வந்ததும் தேவர் மலர்மாரி பொழிந்தனர். விடையினின்று இறங்கி சுந்தரேசுரரின் கையைப் பற்றிக்கொண்டு ரத்தின கம்பளங்கள் விரித்து பட்டுமேல் கட்டிகள்கட்டி இலங்கின மணமேடைமேது அடிவைத்தார். உடனே ஆபரணங்க ளணிந்த அவரது தாமரைபோன்றதும் தவசிகளாலும் காணமுடியாதது மான திருவடிகளைத் தேவமகளிர் குளிர்ந்தநீரால் கழுவி சந்தனம் தடவி ரத்தினங்களாலும் பொன்மலர்களாலும் பூசித்து அவற்றிற்குக் கர்ப்பூர நீராஞ்சனம் காட்டினர். அப்பொழுது காஞ்சனமாலைத்தேவியார் குங்கும நீர் தோய்ந்த முத்துமணிகளை இருகைகளாலுமெடுத்துப் பெருமானின் கால்களில் வைத்து வணங்கி அவரிடம் சடவுளே! எனது கன்னியை மூறைப் படி மணந்து பாண்டியநாட்டின் மன்னனாகவும் ஆகி எங்களனைவரையும் காப்பாற்றவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள். கருணாநிதியான இறை வன் தன் குறுகையால் அதை ஏற்றுக்கொண்டதாகக்காட்டி பக்கத்தில் நின்ற பிரமன் விஷ்ணு இவர்களது புயங்களைத் தொட்டுக்கொண்டு அந்தப் புரம் சென்று அங்கு அமைக்கப்பெற்ற ரத்தினப்பந்தலில் பொன்மயமான அரி இருக்கையில் அமர்ந்து அப்சரமகளிர் ஆடல்புரிய, விண்ணவர் சூழ்ந்து நிற்க, முனிவர் துதிபாட, நாரதர் முதலானவர் இசையொலிக்க பார்ப்போர் கண்களுக்கு விருந்தளித்துக்கொண்டிருக்கையில், நாகமணிகளால் நீராட்டி வைக்கப்பெற்ற தடாதகைப்பிராட்டியை ஆபரணங்களால் அலங்காரம் செய்து இலக்குமிதேவியானவள் அவரது பக்கத்தில் உட்காரவைத்தாள். இறைவனது ஆணையின்பேரில் பிரம்மதேவன் அவரது முன்னிலையில் ஓமம் வளர்த்தார். மகாவிஷ்ணுவானவர் உலகத்திலுள்ள அரசரனைவரும் தனது அமிசம் என்று கூறிக்கொண்டு காஞ்சனமாலைத்தேவி கெண்டியிலிருந்து தாரைநீர் வார்க்க கன்னியை தானம்செய்தார். உடனே இறைவன் மந்தி ரங்களை முணுத்துக்கொண்டு ஆபரணங்கள் நிறைந்த தடாதகைப்பிராட்டி யின் கழுத்தில் உலகனைத்திற்கும் மங்களமான திருமங்கலியத்தைக்கட்டி னர். அப்பொழுது பிராட்டி மலர்பூத்த பூங்கொடிபோல் இலங்கினாள். பின்னர் பொறி ஓமமும் அம்மி மிதித்தலும்கடந்தேறின. முனிவரும் தேவ ரும் குங்கும முத்துக்களை அரிசூறி இறைத்தனர்.

பின்னர் மதுராபுரி இறைவன், மனைவிமக்களுடன் மணவிழா விற்கு வந்திருந்த தேவர்களுக்கு உயர்ந்தபட்டாடை மூதலியன களிப்புடன் தந்து அவர்களை அவரவர் இடத்திற்கு அனுப்பினர். அவர் தற்சமயம் பாண்டியநாட்டு மன்னராய்விட்டபடியால் கொன்றைப்பூமாலையைவிடுத்து கடம்பமலர் மாலையையும் சடையிருந்தவிடத்தில் ரத்தினமுடியையும் புலித்தோலிற்குப் பதிலாக பட்டாடையையும் அரவங்களை நீக்கிவிட்டு பொன்மயமானதும் ரத்தினமயமானதுமான ஆபரணங்களையும் அணிந் தார். மேனியில் திருநீற்றுக்குப்பதிலாக கறுமணங்கொண்ட சந்தனத்தைப் பூசிக்கொண்டார். இடபக்கொடியைவிடுத்து மீனக்கொடியை ஏற்றுக் கொண்டார்.

பின்னர், யாதாமொருமனிதன் புண்ணியத்தின்பயனால் அரசனாக வந்தால் அவனதுபேறு சிவலிங்கப்பிரதிட்டையால்தான் வளருமென்று மனதில் எண்ணி, சோமசுந்தரக்கடவுளான பாண்டியமன்னன் பிரம்மத் தானமாய்விளங்கும் ஆலவாய்நகரின் மத்தியில் உமுதல்முதல் பிரதிட்டை

மீரூகச் சடங்குகளனைத்தையும் முடித்து, இம்மைவிருப்பம் தருபவரான் இகாபீஷ்டப்பிரதர், என்ற பெயருடன் மேற்குமுகமாக லிங்கமொன்றைப் பிரதிட்டை செய்து வழிபட்டார். எந்தநாளில் தடாதகைப் பிராட்டியாரின் திருமணம் கைடபெற்றதோ அன்றே இகாபீஷ்டப் பிரதலிங்கத்தின் பிர திட்டையும்நடந்தேறிற்று. சனது மூல லிங்கமான ஆலவாய் மூர்த்திக்கும் எப்பொழுதும்போல் நித்திய நைமித்திக வழிபாடுகளும் முறைப்படி நடந் தன. சானே பிரதிட்டை .செய்த இகாபீஷ்டப்பிரத லிங்கத்திற்கும் தனது செல்வத்திற்குத்தக்கவளவில் பூசை முதலியன செய்விக்கப்பெற்றன. தேவர் கள் முதலியோரால் பிரதிட்டை செய்யப்பட்ட இலிங்கங்களுக்கே மாட்சி அதிகம். அப்படியிருக்க சிவபெருமானுலேயே பிரதிட்டை செய்விக்கப் பெற்ற லிங்கத்தின் மாட்சியை யாரே கூறமுடியும். சிவபெருமானுல்தான் முடியும். இகாபீஷ்டப் பிரதமூர்த்தியை காள்தோறும் வணங்குபவன் எல்லா விருப்பங்களையும் பெறுவான். இந்தத் திருமணத் திருவிளையாடல் கதை படிப்போர்க்கும் கேட்ப்போர்க்கும் கலன்களனைத்தையும் பயக்கும்.





திருக்கூத்து

பத்தாவது அத்தியாயம்.

திருக்கூத்து.

கலியாணத்திற்கு வந்திருந்த அரசர்களும் முனிவரும் அங்கங்கே மண்டபங்களில் சௌக்கியமாகத் தங்கினர்கள். உச்சி நேரமானதும் சுந்தரேசமன்னன் அவர்களைப் போசனத்திற்கு வரும்படியாய்க் கேட்டுக் கொண்டான். உடனே எல்லோரும் பொற்றாமரைக்குச்சென்று நீராடி நிறபூசி தேவர் முதலானவருக்குத் தர்ப்பணம்செய்து கரையிலுறையும் விநாயகரையும், மீனாட்சியம்மையையும், ஆலவாய்ப் பெருமானையும் வணங்கிப் பின்னர் அரசர்வடிவான பெருமானுக்கு வணக்கம்செலுத்திப் போசன சாலைக்குச் சென்றனர்.

அப்பொழுது சிவதேசரான பதஞ்சலிமுனிவர் தனது கண்பர் வியாக்ரபாதருடன் இறைவனிடம் தங்களது விருப்பத்தைத் தெரிவித்தார். தாங்கள் நான்தோறும் சிதம்பரத்தலத்தில் நடராசப்பெருமானின் திருநடனத்தைக்கண்டபின்தான் அருந்துவது வழக்கமென்றும் இன்று செய்வதென்னவென்று தெரியவில்லையென்றும் கூறினர். அதற்கு ஆலவாய்நாதன் பதஞ்சலிமுனிவரை நோக்கி "அன்பனே! இந்த ஆலவாய்த்தலமானது மிகப் புனிதமானது. பிரம்மாண்ட வடிவான பிரம்மதேவனது பன்னிரண்டாம் மேலையாதலால் இதற்குத் துவாதசாந்தமெனப் பெயர். சிதம்பரம் பிரம்மனின் இதயத்தானம்தான். ஆனதால் இது சிதம்பரத்திலும் சிறப்புவாய்ந்ததென்று அறிந்துகொள். இந்தத் துவாதசாந்தத்தானமான கடம்பவனத்தில் ஓர் அற்புத நடனம் இப்பொழுது புரியப்போன்கிறேன் பாரும்" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

உடனே மாபாடியம் ஆக்கிய பதஞ்சலிமுனிவர் பெருமானை நோக்கி "சிவன்முத்தி புராதனனே! ஆலவாயானது பிரம்மாண்டவடிவான பிரம்மதேவரது பன்னிரண்டாம் மேலையென்றும் சிதம்பரத்தலமானது அவரது இதயத்தானமென்றும் மொழிந்தீர். கைலாயம் முதலான மற்றைத் தலங்கள் அவரது எந்த எந்த அங்கங்களில் இருக்கின்றன? தயவுசெய்து கூற வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். இதைக்கேட்டுச் சோமசுந்தர மூர்த்தி பதஞ்சலிமுனிவரைப் பார்த்து 'பேரறிஞரே! நீர் கேட்டது நலமாயிற்று. நான் வரிசையாக சொல்கின்றேன். அது பெரியோர் ஆலோசிப்பதற்குப் பயன்படும். பிரம்மாண்டமானது பிரம்மனது உடல் என்று அறிவாளிகள் தெரிந்துகொள்ளவேண்டும். அரைக்குக்கீழ் கீழேழு உலகங்களும் அரைக்குமேல் மேலேழு உலகங்களும் உள. கீழ் உலகங்கள் முறையே கால்கட்டை விரலிலும், படத்திலும், கணுக்காலிலும், கீழ்காலிலும், முழங்காலிலும தொடை மத்தியிலும், தொடையடியிலுமாக இருக்கின்றன. பூமி முதலிய மேல்உலகங்கள் வரிசையாக மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, பிரம்ம சந்திரம்

என்ற தானங்களில் நிற்கின்றன. அன்பர்கள் உய்யும்பொருட்டு எனது ஆணையின்பேரில் மற்ற உலகங்களிலுமுள்ள எனது இலிங்கங்களும் மூலாதாரமாகிற பூலோகத்தில் எப்பொழுது மிருக்கைகொள்கின்றன. என்றும், பிரம்மனது மூலாதாரம் கமலாலயமெனும் திருவாரூர். அங்கு நான் தியாகராசமூர்த்தியாய் உறைகின்றேன். அவரது சுவாதிஷ்டானம் திருவானைக்காத்தலம். அங்கு சம்புநாதமூர்த்தியாய்த் திகழ்கின்றேன். அவரது மணிபூரம் திருவண்ணாமலை. அங்கு அருணாசலமூர்த்தியாயிருக்கின்றேன். அவரது அநாகதச்சக்கரம் சிதம்பரம். அங்கு சபாபதியாய் அன்பர்க்கருள்கின்றேன். அவரது விசுத்தித்தானம் தக்கினை கைலாயமென்ற திருக்காளத்தித்தலம். அங்குக் காளத்திநாதனாய் விளங்குகின்றேன். காசித்தலம் பிரம்மதேவரது ஆக்ஞாத்தானம். அங்கு விசுவநாதமூர்த்தியாய்நின்று முத்தியளிக்கின்றேன். திருக்கைலாயத்தலம் அவரது பிரம்மாந்திரத்தானமாகும் அங்கே சிரீசண்டபரமேசனாய் நிற்கின்றேன். ஆலவாய்த்தலமோ வென்றால் ஆதாரத்திற்கு மேம்பட்ட தெளிவுறுத்த துவாதசாந்தம். அங்கே சுந்தரலிங்கமூர்த்தியாய் விளங்குகின்றேன். துவாதசாந்தமாகும் எனது தானத்திலிருக்கும் இந்த சிவன் முத்தித்தலமானது எல்லாத் தானங்களுக்கும் ஆதியாயிருத்தல்பற்றி மிகச்சிறந்தது. அற்புதமானது எவ்வாறு பரசிவனான நான் உலகத்திற்கு முதற்காரணமோ அவ்வாறே சிவத்தலங்களனைத்திற்கும் ஆலவாய்தலம் முதற்காரணம். எனது மூர்த்திகளுள் தாண்டவமூர்த்தி விசேடமானது. அதிலும் தலத்தைப்பொறுத்துப் புனிதத்தன்மை மேம்படும். ஆதாரங்களனைத்திலும் துவாதசாந்தம் மேலானது. அதன் நுய்மை வேதாந்த சாத்திரங்களில் கூறப்பட்டுளது. ஆதலால் துவாதசாந்தத்தலத்தில் கடைபெறும் தாண்டவம் அனைத்திலும் மேலானது. அது அவ்வியக்தமானது. ஒளிமயமானது. ஆதியற்றது. யோகிகள்தான் அறியக்கூடியது அதனை தியானம் செய்யவேண்டும்.

இவ்விதமான எனது ஆட்டம் தத்துவங்களுக்கு மேற்போனது. மிக்கமேலானது. கலைகளுடனும் கலைகளற்றதுமாக அது இருக்கும். பாரும் பாரும். பதஞ்சலிமுனிவரே!! என்றுகூறியவண்ணமாய் தாண்டவத்தில் திருவுளங்கொண்டு நிஷேத்தமாத்திரத்திலேயே கோயில் முற்புறத்தில் இரத்தினமேடையுடன் கூடிய வெள்ளியம்பலமொன்றைத் தோற்றுவித்து அதிலமைந்த பொன்மயமான பீடத்தில் நின்று, சினத்தால் சிவந்த கண்களுடைய அபசுமாரம் என்ற அரக்கனைத் தலைகீழாகி, அவனது உடலின் மேல் அபயம் வழங்கும் வலதுகாலினைவத்து அருள் வழங்கும் இடதுகாலைத் தூக்கிக் கொஞ்சம் வளைத்துப் பத்துப் புயங்களுடன் பேரழகுடையத் திகழ்ந்தார். அபயமளிக்கும் கையில் சூலமும், அருள்அளிக்கும் கையில் நாகபாசமும், மற்றை நான்கு வலக்கைகளில் உடுக்கு, அம்பு, கத்தி, கோடரியும் மற்ற நான்கு இடக்கைகளில் மழு, வில், கேடயம், கோலும் விளங்கின. சடையும், கெங்கையும், பிறையும் முடியில் இலங்கின. நாகப்பூணூலுடன் மூக்கண்ணனாய், இலயதிர் காலமதிபோல் வெளுப்பாய், ஆபரணங்களனைத்தும்பூண்டு, அச்சத்துடன் தேவியார் தாளம்போட்டுக்கொண்டு பார்த்திருக்கப், பதஞ்சலி முதலான முனிவர்க்குப் பேரிறைவன் திருத்தாண்டவக் காட்சியளித்தார். அவர்கள் உரோமம் சிலிர்ப்ப, ஆனந்தக்கண்ணீர் சொரியப் பேருவகை எய்தினர்.

அப்பொழுது அன்புமேலிட்டுக் குரல்குளற பதஞ்சலிமுனிவர் பேரிறைவனைப் பார்த்துப் ''பெருமானே! பொற்றூமரைக் கையிலுள்ள சிறப்புப் படைத்த திருக்கோயிலிலுறைபவனும், புள்வாகனனுல் வணங்கப் பெறுகிறவனும், கோடிக்கதிரவனெளியுடையனும், உமாதேவியுடன் களிப் பவனும், நாகங்களையணிந்தவனும், மங்களமூர்த்தியும் சம்புவுமான உனக்கு வணக்கம். கெங்கையையும் பிறையையும் சூடியவனும், கதிரவன், திங்கள், அக்கினி இவர்களைக் கண்களாகவுடையவனும், நாககுண்டலங்களணிந்த வனும் புண்ணியம் செய்தோர்க்கு நண்பனுமான உனக்கு வணக்கம். நான் முகக்கடவுளால் மறைகள் கூறித்துதிக்கப்பெற்றவனும், நாற்புயக்கடவுளின் தங்கையாற் பொலிவுறும் மேனியின் ஒருபக்கத்தையுடையவனும், நால்விதக் குறிக்கோள்களையும் பயக்கும் திருத்தாண்டவவடிவனுமான உனக்கு வணக் கம் உனது திருமுகம் இலையதிர்காலத் திங்களது ஒளிபோல் வெளுத்த புன்முறுவலுடன் விளங்குகின்றது. கையில் கபாலமேந்தி அதினின்று வீழும் திருமாலது உதிரத்தை நீ பருகுவாய் உனக்கு வணக்கம். ஆயிரம் தாமரைமலர்களைக்கொண்டு பூசித்தும் ஒன்றும்காணுது பொறுக்க முடியா மல் பரிவுடன் தனது கண்மலர்களால் பூசைசெய்த விஷ்ணுவிற்கு ஆயிரம் கதிரவனது ஒளிவீசும் சக்கராயுதத்தை அருளினாய் உனக்கு வணக்கம். (திரிபுரம்எரித்த) உனக்குப் பூமியானது தேராகவும், மகாவிஷ்ணு அம்பாக வும், மகாமேரு வில்லாகவும், பாம்பரசனான வாசுகி நாணாகவும், பிரம்ம தேவர் தேர்ப்பாகனாகவும், மறைகள் புரவிகளாகவும் விளங்கின, உனக்கு வணக்கம். தக்சயாகத்தில் மிகத் துணிச்சலுடைய வீரபத்திரரது சிங்க நாதத்தைக்கேட்டுத் திகிலடைந்த தேவர் முதலியோருக்கு அருள்புரிந்தாய் உலகனைத்திற்கும் சாட்சியாய்நிற்கின்றாய் உனக்கு வணக்கம். மார்க்கண் டேயனைக்காக்கக் காலனைக் காலாலுதைத்தாய் வெண்ணிலாப்போன்ற கன்னத்தொளியால் திங்களை வெல்கின்றாய். குறைவற்ற செல்வத்தைப் பெறுதற்கு அன்பர்கள் உன்னை எப்பொழுதும் நினைக்கின்றார்கள். உனக்கு வணக்கம். திருமால் பிரம்மன், இந்திரன் முதலான தேவர்கள் உனது திருவடித்தாமரை மலர்களை வணங்குகின்றனர். மகாமேரு உனது வில், அப்பேர்ப்பட்ட வெள்ளியம்பலப்பதியான உனக்கு வணக்கம். ஆலவாய்ப் பெருமானே போற்றி! பேரிறைவனே போற்றி! ஆலாலக்கண்டனே போற்றி! கயக்கண்ணிமணாளா போற்றி! சுந்தரத்தாண்டவா போற்றி'' என்று துதித்து இறைவனது முன்னிலையில் வீழ்ந்து வணங்கி மெய்மறந்து விட்டார்.

உடனே சிவபெருமான் அவரை எழுப்பி வேண்டும் வரத்தைக் கேட்கும்படி ஆணையிட்டார். அதற்குப் பதஞ்சலிமுனிவர் இறைவனிடம் 'பெருமானே! இந்த அற்புதத்தாண்டவத்தை எப்பொழுதுமே நான் பார்க்க விரும்புகின்றேன். ஆதலால் அதை ஒடுக்கிக்கொள்ளாமல் இங்கேயே இருக் கச்செய்யவேண்டும். முன்னம் நான் சிதம்பரத்தலத்தில் வியாக்கிரபாதரு டன் சிவகெங்கைத் தீர்த்தத்தில் நீராடி, நித்தியகருமங்களை முடித்து, மூலமூர்த்தியான பேரிலிங்கத்தை அன்புடன் வழிபட்டு, அம்பலத்தாடியை இதயவெளியில் நிறுத்திக் களிப்புற்றிருந்தேன். அந்தபுண்ணியத்தின் பய னாக எனது நண்பனுடன் மற்ற முனிவருடனும் இந்த மேலான தாண்ட வத்தைக் கண்ணுற்றேன். நான் பாக்கியம் பெற்றுவிட்டேன் ஐயமில்லை''

என்று தெரிவித்தார். உடனே இறைவன் அவரை அருளுடன் நோக்கி 'அன்பனே! நீர் கோரியபடியே ஆகக்கடவது. நீர் என்னிடம் பேரன்பு கொண்டவர். எனது அன்பர்களில் முதலிடத்தையடைவீர். முவ்வுல கிலும் எனதன்பர் கிடைத்தற்கரிய எதை விரும்பினாலும் நான் அதை உடனே நிறைவேற்றிவைப்பேன். அது எனது விரதம். துவாதசாந்தத் திலுறையும் எனது இந்தப் பெரிய தாண்டவமூர்த்தியைத் தியானம் செய்து கொண்டு எனது முன்னிலையில் இரும். முனிவரே! உலகனைத்திலும் பெரியவர் பிரம்மதேவர். அவரினும் பெரியவர் மகாவிஷ்ணு, அவரினும் பெரியவர் அரன். அரனினும் பெரியவர் ஈசுவரன். ஈசுவரனினும் பெரி யவர் சதாசிவன். சதாசிவனினும் பெரிது பிந்து. பிந்துவிலும் பெரிது நாதம். நாதத்திலும் பெரியவள் பராசக்தி. பராசக்தியினும் பெரியவர் சிவபெருமான். இந்த ஒன்பது சக்திகளும் எத்தப்பொருளில் ஒடுங்குகின் றனவோ அத்தப்பொருள் துவாதசாந்தத்திலிருக்கும் திருக்களிக்கூத்தே. ஆனதுபற்றி அத்தத்தாண்டவ மூர்த்திக்கு மேம்பட்டது ஒன்றுமே கிடை யாது. இதுதிண்ணம். அறிவு படைத்தவன் இதைத்தெரிந்து மற்ற மூர்த்தி களைவிடுத்து இன்பம் வீடு இவற்றை யடைதற்குத் தாண்டவமூர்த்தியையே நெஞ்சில் கொள்ளவேண்டும். சுக்கும பஞ்சாக்கரமென்ற மாபெரும் மந் திரமாகிய பிரணவத்திற்கும் ஐந்தொழில்புரியும் மகாதாண்டவ மூர்த்திக்கும் உள்ள தொடர்பானது சொல்லுக்கும் பொருளுக்குமுடைய தொடர்புபோல் நித்தியமானது. ஆதலால் வேதத்தின் மூலமந்திரமாகின்ற பிரணவத்தின் மொத்தப்பொருள் நான், பிரம்மன் முதலான மற்றத் தெய்வங்கள் தனித் தனிப் பொருள். எனது தானமாகும் துவாதசாந்தத்தில் எவர் சிறிதுநேர மாவது எனது இந்தத் தாண்டவத்தை நெஞ்சில் நினைக்கின்றனரோ அவர் திண்ணமாய்ச் சிவன்முத்தாவர். எவனுவதொருவன் புண்ணியத்தின் பய னுய் வாணாளில் ஒருமுறை எனது திருத்தத்தைக் கண்ணுற்றவிட்டால் அவ னுக்கு இன்பமும் வீடும் கிட்டிவிடும். நீர் பாடிய தோத்திரப்பாக்களைப் பாடுகின்றவன் நீண்ட ஆயுளையும், நோயற்ற வாழ்வையும், செழிப்புகளையும் பெறுகின்றான். மாதங்களிற்சிறந்த மார்கழிமாதத்தில் புனிதமான திருவா திரையன்று பொற்சுமையில் சதாசிவன் தோன்றமுன் நீராடி எனதுதிருக் கூத்தைக் காண்பவன் பாவங்கள் நீங்கிச் செல்வங்கள் பெற்று இம்மையில் இன்பங்களனுபவித்து கடைசியில் ஐக்கியம் பெறுவான். காள்தோறும் பொற்சுமையில் குளித்து நீலுட்சியம்மையையும், எனது மூர்த்தியையும் வலம்வந்து வணங்கித் துதித்து என்னைக்களிப்பித்து வெள்ளியம்பலம் சென்று எனது தாண்டவமூர்த்தியை வணங்கி என் முன்னிலையில் அமர்ந்து பஞ்சாக்கர மந்திரத்தை ஆயிரத்தெட்டுமுறை செபிப்பவன் எல்லாப்பழிகளி னின்றும் விடுபடுவான். மார்கழிமாதத்தில் திருவாதிரையன்று தொடங்கி நோடல் முதலிய நியமங்களை விடாது அடுத்த திருவாதிரைவரை ஓராண்டு செய்துமுடித்தால் வித்தை விரும்புகின்றவன் வித்தையையும் பெண்விருப்ப முடையவன் பெண்ணையும், மக்களை விரும்புகின்றவன் மக்களையும், நோயுற் றவன் நோயின்மையையும், அடைவான். எந்த எந்த விருப்பத்துடன் இந்த ஆண்டுவிரதத்தை நடத்துகின்றானே அந்தந்த விருப்பம் நைகூடும். நீரும் என்னுடைய நகரமான இந்த மதுரை நகரில் வெகுகாலம் நிகரற்ற இன்பங்களைத்துய்த்துப் பின்னர் முத்திபெறுவீர். பிறவிக்கடலைத் தாண்டு தற்குக் காரணமானதும் ஒருமுறை காண்போர்க்கும் நலன்பயக்கக்கூடிய

தும் இதுவரை மறைபொருளாகவே யிருந்ததுமான இந்த எனது தாண்ட வமானது உம்மால் எப்பொழுதும் காணக்கூடியதாகவாயிற்று" என்று மொழிந்து கருணையுடன் நோக்கி பதஞ்சலிமுனிவரையும் மற்றுரையும் உண்டிக்கு அனுப்பினர். அன்றுமுதற்கொண்டு ஆலவாயில் வெள்ளியம்பலத் தில் சத்து, சித்து, ஆநந்தவடிவமான அந்தத் தாண்டவம் வெளிப்படை யாயிற்று. இந்த ஆரும் திருவிளையாடற் கதையைப் படிப்போரும் கேட் போரும் விருப்பமனேத்தையும் எய்துவர்.



பதினெழுவது அத்தியாயம்.

குண்டோதரனுக்கு உண்டியிடல்.

சிவனதிலிற்சிறந்த பதஞ்சலிமுனிவர்போன்ற முனிவரும் திரு மணவிழாவிற்கு வந்த மற்றை அரசரும் நாகரும் மற்றுமுள்ளோரும் நிலை மைக்குத்தக்கவாறு அளிக்கப்பட்ட இருக்கைகளில் போசனத்திற்கு அமர்ந் தனர். தனித்தனிப் பொற்கலங்களில் படைக்கப்பெற்ற மணமும் ருசியும் பொருந்திய பாற்சோறு முதலான பலவகை உண்டிகளையும் கனிகளையும், நெய், தேன், பால் முதலியவற்றுடன் அறுசுவையிளிர அருந்தினர். பின் னர் பச்சைக்கர்ப்பூரத்துடன் வழங்கபெற்ற தாம்பூலத்தைப் பெற்றுச், சந் தனம்பூசி, சுந்தரேசப்பெருமானே வணங்கி, விடைபெற்று, அளிக்கப்பட்ட ஆடை ஆபரணங்களையும் ஏற்றுக்கொண்டு, அவரவரது இருப்பிடம் சென் றனர்.

பேராசன் மகளும் ஆலவாய்ப்பெருமானின் தருமபத்தினியுமான தடாதகைப்பிராட்டி அகமகிழ்ந்து முகம் மலர்ந்து தனது பெருஞ்செல்வத் திற் பெருமைகொண்டு காஞ்சனமாலையம்மையுடன் இரத்தினமண்டபத்தில் வீற்றிருந்தாள். அப்பொழுது சமையல்செய்பவர் வந்து வணங்கி' 'அரசியே! உமது ஆணைப்படி பலவகையான உண்டிகள் எங்களால் தயாரிக்கப்பெற் றன. இதுவரை எண்ணற்றவரின் போசனம் முடிந்துவிட்டது. ஆயினும் குறையவில்லை. எல்லாம் மிஞ்சிக்கிடக்கின்றது. பூதகாதனுடன் பூதகணங் கள் பெருவாரியாக வருமென்று எண்ணி அதிகமாகவே சமையல் செய் தோம். இன்னும் போசனத்திற்கு வருவபர்கள் இருக்கின்றனரா! உத்த ரவாகவேண்டும், என்று விண்ணப்பித்துக்கொண்டனர்.

அதைக்கேட்டுத் தேவியானவள் உடனே மிகக் களிப்புடன் சேடி யரோடுப் போசனசாலைசென்றுப் பூதகணங்களுக்குக்கென்று தயாரிக்கப் பட்ட அன்னத்தைக்கண்ணுற்று இறைவனிடமணுகி அடக்கத்துடன் மெல்லிய இனியகுரலில் "எனது நாதனே! பூதகணங்களுக்கதிபனே! மன் னர்க்கெல்லாம் மன்னனே! மணவழகனே! எனது விண்ணப்பத்தைக் கருணைகூர்ந்து கேட்கவேண்டும் முனிவரும் மற்றோரும் போசனம் அருந்தி மகிழ்ச்சியுடன் சென்றுவிட்டனர். உங்களது பூதங்களுக்கும் பூதகணங் களுக்கும் ஆக்கப்பெற்ற பலவகை அன்னம் ஏராளமாக இருக்கின்றது. யாருக்கு அதை இடவேண்டும் கூறும் சீக்கிரத்தில் அதுகெட்டுவிடும். "என்று அறியப்படுத்தினாள். அதற்குப் பெருமான் பிராட்டியை நோக்கி "இங்கு ஒருவருக்கும் பசியில்லை. உனது பெருஞ்செல்வத்தின் பெருமை யால் நீ அதிகமாக ஏற்பாடு செய்திருந்தால் நான் யாருக்குக்கொடுக்கிறது" என்று பதில் உரைத்தார். உடனே உயிரனைத்திலும் உட்புகுந்துநிற்கும் அவர் பக்கத்திலிருந்த குண்டோதரனைக் கண்ணுற்று அவனது வயிற்றுத் தீயை வடவாமுகாக்கினியவ்வளவு வளர்த்தார். அக்கணமே அவனுக்குப்

பெரும்பசியும் தாகமும் கிளம்பிவிட்டது. மிக வலிமைபடைத்த அவன் உடல்கரைந்து இறைவனிடம் உணவு உணவு என்று ஓடிவணங்கிக் 'கலியா ணசுந்தரமூர்த்தியே! உமது குடையைப்பிடித்துக்கொண்டு உமது பின் புறமே ஓடிவந்ததாலோ அல்லது வேறு எக்காரணத்தாலோ இதுவரைக் கண்டறியாத ஓர் பசி எனக்குத்தோன்றியிருக்கின்றது. மட்டற்ற சோர்வும் உண்டாயிருக்கின்றது. பெரும்கருணையுடன் எனக்கு உண்ண அனுமதி தரவேண்டுகிறேன்" என்று அறிவித்தான்.

குண்டோதரனது இம்மொழிகளையும் கேட்டு அவளது செல்வச் செருக்கையும் நினைத்து இறைவன் சரியென்று அவனுக்குக் கடைகண் ணேக்கால் அனுமதியளித்தார். மிக்கத் தெம்புடையவனும், பூதங்களுக்குள் முதல்வனும், முழுங்காலுயரமுள்ள குட்டையனும், எப்பொழுதும் புருவங் களை நெறித்துப் பார்ப்போர்க்குத் திகில் ஊட்டுபவனுமான அவன் தேவி யிடமிருந்தும் கண்ணேக்கால் ஆணைபெற்றுக் கடிதில் சமையலகம் சென் றான். அங்குக் கணக்கற்ற வெண்கும்பாகளுடன் திகழும் இமயமலைபோன்ற கிடக்கும் சோற்றுக்குவியல்களைநோக்கி, வியப்பெய்தி, ஊழிக்காலத்தில் சங்காரருத்திரன் தனது இருகைகளால் பிரம்மாண்டங்களைவாரி விழுங்கியது போல் பெரும் குகைபோன்ற தனது வாயைத்திறந்து ஆத்திரத்துடன் அன்னக்குவியல்களனைத்தையும் மிச்சமில்லாமல் விழுங்கிவிட்டான். பருப்பு, கறிவகைகள், நெய், பால், தயிர், தேன் முதலான எல்லாப் பண்டங்களும் அவை வைத்திருந்த பாத்திரங்களுடன் விழுங்கப்பெற்றன. பக்குவமா காமற்கிடந்த பூசனிக்காய் முதலியனவும் அருந்தப்பட்டன. ஆனால் பசி தீரவில்லை. மூட்டைகளிலிருந்த அரிசி, கோதுமை, உளுந்து முதலான பயிறுகள், உள்ளே களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த தானியங்கள் இவை யனைத்தையும் புசித்தபின்னரும் குண்டோதரன் சாப்பிடாதவன்போலவே காணப்பட்டான். இந்த குள்ளனது செயல்கண்டு அரண்மனை மங்கைய ரெல்லோரும் வியப்படைந்தனர்.

தடாதகைத்தேவி வெட்கமும் வியப்புமுற்று இறைவனது அண் மையில்வந்து தலைகுனிந்து நின்றாள். அப்பொழுது எல்லாமறிந்த இறை வனான கடம்பவனப்பெருமான் குண்டோதரனது செயல் ஒன்றும் அறியாத வர்போல், பேசாமல்வெட்கிவியப்புற்று நின்றுகொண்டிருந்த தடாதகையை நோக்கி "மகாராணியான உனதுசெல்வம்படைத்த அரண்மனையில் இப்படி ஏராளமான அன்னம் கிடைக்குமென்று தெரியாமல் எனது பூதங்களனைத் தையும் நான் அழைக்கவில்லை. குடையைத் தாங்கிக்கொண்டு ஒரே ஒரு பூதம்தான் வந்தது. அது உண்ட மிச்சத்தை அருந்துதற்கு மற்றைப் பூதங்களை உடனே வரவழைக்கின்றேன்" என்று பகர்ந்தார். இறைவனது மொழிகளைக்கேட்ட தடாதகை புன்னகைபூத்து இனியகுரலில் "எம்பெரு மானே! நீரோ எல்லாமறிந்தவர். அப்படியிருந்தும் இது என்ன பேச்சு, கருணைக்கடலேயே பூதங்களைக் கூப்பிடுதல்வேண்டாம்! வேண்டாம்! குட்டைப்பூதத்தின் செயலே பார்ப்போர்க்கு விசித்திரமாயிருந்தது. இன் னும் பூதகணங்கள் இங்குவருமேயால் சங்காரருத்திரன் என்ற திருநாமம் உமக்கு உண்மையாகிவிடும். அந்தப்பூதத்தின் செய்கைகளனைத்தும் உமக் குத்தெரியும், நான் சொல்லப்போவதில்லை. அவனே சொல்வான்" என்று கூறி அந்தப்பூதத்திற்கு எப்படித் திருப்திஉண்டாக்குவதென்ற கவலையுடன்

இறைவனது முகத்தைத் திரும்பத்திரும்பப் பார்த்தவண்ணமாய் நின்றனள், நகரிலுள்ள மக்களெல்லோரும்கூடி அந்தப்பூதம் உண்டதையும் அதன்வயிறு இன்னும் பள்ளமாயிருப்பதையும் கண்ணுற்று ஆச்சரியமடைந்து இறைவனது மாட்சியால் இந்த ஒரு பூதமானது இதுவரை நிகழாத செயலைப் புரியுமாகில் இன்னும் ஒரு பூதம் வந்தால் மக்களனைவரையுமே புசித்துவிடும் என்று பேசிக்கொண்டனர். இந்தத்திருவிளையாடலை ஒருமுறைகேட்டால் பாவங்கள் அகலும்.



பன்னிரெண்டாவது அத்தியாயம்.

அன்னக்குழி, வைகையழைத்தல்.

இவ்வாறு எவ்வளவோ நின்றும் குண்டோதரனுக்குப் பசி தணியவில்லை. அவன் உதரத்துள் வடவாமுகாக்கினிபோல் ஓர் அனல் மென்மேலும் எரிந்துகொண்டேயிருந்தது. அந்த வெப்பத்தால் பூதத்தின் மேனி வாடி வதங்கிவிட்டது. இக்நிலைமையில் அவன் ஆலவாய்நாதனை அணுகி வணங்கி "பூதங்களுக்காக்கும் கருணாநிதியான தேவர்க்கிறைவ! அருள்புரியவேண்டும். பேராசனே! பெருந்தேவனே! எனது விண்ணப்பத்தைக் கேட்டல்வேண்டும். நான் அருந்திய அற்ப உணவானது நெருப்பில் விழுந்த பஞ்சுப்பொதிபோலவும், எரிநெறியில் ஊற்றிய எண்ணெய் போலவும் எனது பசியை அதிகமாக்கிவிட்டது. அன்னக்குவியல்களை விழுங்கினேன். அதன்பின் அரிசிமூட்டைகளையும் அருந்தினேன். என்றாலும் நிறைவு ஏற்படவில்லை. காரணமும் புலப்படவில்லை. காட்டுதீயிலகப்பட்ட மரங்கள்போல் எனது புலன்கள் வயிற்றுத்தீயால் எரிக்கப்பெறுகின்றன. முன்னாளில் திரிபுரத்தை அம்பு எரித்ததுபோல் இத்தக்கொடும்பசி என்னை எரிக்கின்றது. பேரிறைவனே! காப்பாற்றும். கருணைப் பொக்கிஷமே! காப்பாற்றும். முப்புரமெரித்தவனே! காப்பாற்றும். சுந்தரமூர்த்தியே காப்பாற்றும்" என்று அலறினான்.

குள்ளப்பூதம் இவ்வண்ணம் வயிற்றிலொன்றுமில்லாது பெரும் பசியால் துடிப்பதைக் கண்ணுற்றுத் தடாதகைதேவி பெருமானிடம் "என்னரசே! பூதங்களுக்கதிபனே! உலகத்திற்கருள்பவனே! எந்த வழியிலாவது இப்பூதத்தின் பசிதீரவேண்டும். அதற்கேற்றவாறு புரிந்தருளவேண்டும்" என்று கெஞ்சினாள். உடனே அந்தச்சக்திசதாசிவக்கடவுள் தன்னிலும் பிரிதிலாத அன்னபூரணித்தாயாரை நினைத்து மூன்புரத்தில் என்றும் குறையாத தயிர்ச்சோறுடைய நான்கு குழிகளைத் தோற்றுவித்து மிகப் பள்ளமான வயிற்றைக் காட்டிக்கொண்டு எதிரில் நிற்கும் குண்டோதரனையழைத்துச் சாப்பிடச்சொன்னார்.

உடனே அவன் உவகையடைந்து, வலிவுமபெற்றுச் சோற்றுக் குழிகளை நெருங்கி, வாயைத்திறந்து அக்குமலைகள்போல் குவிந்துகிடந்த சோறனைத்தையும் நான்குவாயாக விழுங்கினான். அப்பொழுது ஓர் கடும் தாகம் எற்பட்டது. குளங்கள் கிணறுகளிலுள்ள நீரனைத்தையும் பருகியும் அது தணியாமல் நீர் நீர் என்று கூவிக்கொண்டு பூதநாதனிடம் ஓடினான். எல்லாம்வல்ல இறைவன் ஆற்றுப்பெருக்கன்றி இப்பூதத்தின் நீர்வேட்கை நீராதென்று கண்டு மதுரைநகரில் வாழ்வோர்க்கும் தண்ணீர்வசதி போதாதென்றும் நினைத்து உலகாலவையும் குண்டோதரனது தேவையையும் கருதித் தனது முடியிலிருக்கும் கெங்கையை ஆலவாயில் ஆற்றுவடிவமாய் கரைபுரண்டுஓடும்படி உத்தரவிட்டார். இட்டபணி செய்யுமுன் கெங்காதேவி

பெருமானிடம் "இறைவனே முன்னுளில் பகீரதனது வேண்டுகோளுக் கிணங்கி மாபாதகங்களையகற்றும் பொருட்டு அடியேனை பூவுலகில் ஆறாக ஓடும் படி ஆணையிட்டீர். இப்பொழுதும் பூதத்தின்மேலுள்ள கருணையாலும் உல கத்தோரனைவரின் கலன்கருதியும் அடியேனுக்கு உத்தரவாயிருக்கின்றது. உமது ஆக்ஞைப்படி எனக்கு எங்குமே பழிகளைப்போக்கும் திறன் அமைக் திருக்கின்றது. ஆயினும் காசித்தலத்தில் விசேடமாக உம்மோடு ஒன்று படும்நிலையான சாயுச்சியத்தையும் அளிக்க எனக்கு ஆற்றலுண்டென்று ஓர் பெயர் வழங்குகின்றது. அதேபோல் இங்கும் பாவங்களை நீக்கவும் சாயுச் சியத்தைக் கொடுக்கவும் எனக்கு வல்லமைதந்து அருளல் வேண்டும்" என்று தெரிவித்தனள். உடனே சோமசுந்தரக்கடவுள் கெங்கையைப் பார்த்து 'நன்கு உரைத்தனை! நன்கு உரைத்தனை! அஞ்ஞானமென்ற இருளை யகற்றும் இத்த மதுரைமாநகரில் உன்னைப்பார்த்தமே பாவங்கள்போம். உனது நீரில் குளிக்க, கலன்களைத்தும் கெருங்கும். உனது நீரைப்பருக நல்வித்தைகள் அணுகும். எனது மூலலிங்கத்தை வணங்குவோர்க்கு எல்லா விருப்பங்களையும் உன்னால் அளிக்கமுடியும் உனதுகரையில் புரியப்படும் நற்கருமங்கள் சாயுச்சியத்தையும் தரும். காசித்தலத்தில் விசவேசுவரன் என்ற பெயருடன்விளங்கும் எனது முன்னிலையில் நீராடினால் என்ன பயன் கிட்டுமோ அதினும் அதிகமானபயன் இங்கு நீராட உண்டாம்." என்ற வரங்களை ஈந்தார்.

உடனே கெங்கை மிக்க வேகங்கொண்டு பெரும் வெள்ளமாகக் கரையில்நின்ற மரங்களைப்பிடுங்கி உருட்டிக்கொண்டு ஓடத்தொடங்கினள். தான் வெளுப்பாயினும் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்படும் னுரைகள் மீதுள்ள கருநாகங்களின் படங்களாலும் அவற்றினின்று கக்கப்பெறும் இரத்தினங்களாலும் யமுனை சரச்சுதி இவ்விருவருடன் கலந்து ஓடுவது போல் தோற்றமளித்தாள். விழுந்துகிடக்கும் பூக்களால் சுட்சத்திரம் சித றிய வானம்போலிருந்தாள். அப்பொழுது பாண்டியமூர்த்தி குண்டோ தரனைப்பார்த்துக் குறுகைகைகைத்து கண்ணேக்கால் ஆற்றுநீரையருந்தும் படி ஏவல்செய்தார். உடனே அவன் வியப்பெய்திப் பேரிறைவனை வணங் கிக்குநித்துக் குநித்து ஆற்றுக்குச்சென்று பெருவெள்ளத்திற்கெதிராக நின்றுகொண்டு பார்க்கும் மக்கள் வியக்கும்படி தனது உருவத்தைப் பெரு கச்செய்து, குகைபோன்ற வாயைத்திறந்து, இருபுயங்களாலும் தண்ணீரை மறித்து நிறுத்தி எராளமான ஆற்றுநீரனைத்தையும் மணல்நீங்கலாகப் பருகி னான். இந்த அற்புதச்செயலைக் கண்ணுற்று எல்லோரும் வியப்படைந்தனர். உடனே குண்டோதரன் எழுந்து இறைவன் முன்னிலை சேர்ந்து பரனை போன்ற தன் வயிற்றை நேரானதாக மாற்றிக்கொண்டு கெங்கைநீரையருந் தியதால் அறிவுபெற்று கைகூப்பிமனமகிழ்ந்து "மலைமகன் மணாளனே! மாயையை நீக்கியவனே! அந்தக அவுணனைக்கொன்றவனே! காலத்திற்கு மேம்பட்டவனே! கலைகள் நிறைந்தவனே! ஆலவாய்ப்பெருமானே! துயரி லமிழ்ந்திருக்கும் என்னைக் கடைக்கண்நோக்கால் காப்பாற்றும்! பன்றியுரு வில் மகாவிஷ்ணுவிற்கும் அன்னப்புள்ளுருவில் பிரம்மதேவனுக்கும் எட் டாத வடிவனே! ஒருபாகம்முழுதும் கருமேனியனே! கெங்கையையும் திங்க ளையும் சடையில் தாங்குவோனே! கைலாயத்திலுறையும் கடவுளே! வில்லே ந்தியவனே. ஆலவாய்மூர்த்தியே! துயரிலமிழ்ந்திருக்கும் என்னைக்கடைக் கண்நோக்கால் காப்பாற்றும். மன்மதனை அனற்கண்ணால் எரித்தவனே!

கட்டழகியான மீனாட்சியின் மணாளனே! சுந்தரேசுவர் முதலான கணங்களால் துதிபாடப்பெறுகின்றவனே! துயரிலமிழ்ந்திருக்கும் என்னைக் கடைக்கண்நோக்கால் காப்பாற்றும்! மாலையாய் அணிந்திருக்கும் நாகங்களது மாணிக்கவொளியால் பொலிவுற்ற மேனியனே! மூவுலகிற்கும் முதற்காரணனே! மகாவிஷ்ணுவால் தனது கண்மலர் சொண்டு பூசிக்கப்பெற்றவனே! சால மரங்கள்போன்ற தூயிரம் புயங்களுடையவனே! மலையில்வாழ்பவனே! ஆலவாய்மூர்த்தியே! துயரிலமிழ்ந்திருக்கும் என்னைக் கடைக்கண்நோக்கால் காப்பாற்றும்! ஆயிரமிளங்கதிரவரது ஒளிபெற்றவனே! வையை ஆற்றின் கரையில் அமர்ந்தவனே! கெண்டையை முடியிலுடையவனே! மேனியழகால் கவித்திறன் அளிப்பவரே! ஆலவாய்மூர்த்தியே! துயரிலமிழ்ந்திருக்கும் என்னைக் கடைக்கண்நோக்கால் காப்பாற்றும்! புனல், பூமி, அனல், காற்று, ஆகாயம், திங்கள், பருதி, வேள்வி நோற்போன் ஆகிய எட்டுமூர்த்திகளாய்த் திகழ்பவனே! அநேகமான கீல்கள்நிறைந்த அனல்தூண் வடிவனே! அளவிடமுடியாதவனே! ஆலவாய்மூர்த்தியே! துயருக்குறைவிடமாயிருக்கும் என்னைக் கடைக்கண்நோக்கால் காப்பாற்றும்! சுந்தரேசுவர்க்குகந்தவனே! மனை, மனைவி, செல்வம்தருபவனே! வினையாட்டிற்காக வேலும் ஒருமூறை கைகூப்புபவனுக்குப் பேரரசன்நிலை அளிப்பவனே! அசைவதும் அசைவற்றதுமான எல்லாத்தாயப்பொருள் வடிவமானவனே! உலகைத்தாங்கும் தூணே! எட்டு உருவங்களாகத்திகழ்பவனே! குருமூர்த்தியே! ஆலவாய் மூர்த்தியே! துயரனைத்திற்கும் உறைவிடமாயிருக்கும் என்னைக் கடைக்கண் நோக்கால் காப்பாற்றும். ஆலவாய்த்தலத்திற்குவரும், தேவர், அவுணர், முனிவர் இவர்களால் புகழப்படும் குணங்கள் வாய்ந்தவனே! சதங்கைகள் ஒலிப்பதால் இனிப்புடன்விளங்கும் அடிமலர்களையுடையவனே! பேரின்பம், சிற்றின்பம்! இவையிரண்டையும் அளிப்பவனே! மகாவிஷ்ணுவிற்கு வரம் கொடுத்தவனே! ஆலவாய்மூர்த்தியே! துயர்க்குறைவிடமாயிருக்கும் என்னைக் கடைக்கண்நோக்கால் காப்பாற்றும். வினையாட்டாகவோ அல்லது மதிப்பின்றியோ, அல்லது அறிவீனத்தாலோ அல்லது எமாற்றுவதற்கோ எவ்விதத்திலாவது வீண்பேச்சைவிடுத்து கடம்பக்காட்டின் மத்தியிலுள்ள ஆலவாய்க்கடவுளின்மேல் பாடிய இந்த எட்டை (அட்டகம்) எவர் சொல்கின்றனரோ அவர்க்குப் பெண்கள்முதலான இன்பகளனைத்தும் பெருகும்'' என்றவாறு இறைவனைப் புகழ்ந்தவண்ணமாய் அவரதுதிருவடிகளில்வீழ்ந்து வணங்கிக் கைகூப்பி அவற்றையே நோக்கிக்கொண்டு நின்றனன்.

தேவர்களுக்குத்தேவரான சுந்தரமூர்த்தி மகிழ்ச்சியுடன் குண்டோதரனைப் பார்த்துக் ''குண்டோதரா! உனது அன்பாலும் துதியாலும் மகிழ்வுற்றேன். எனது பூதகணங்களின் தலைவன் இனி நீயே. உனது பெயரைக் கூறுதலால் மனிதரின் பசியும் நீர்வேட்கையும் பறந்துபோம். நீ எப்பொழுதும் கணங்களின் தலைவனாக எனது முன்னிலையில்நில்'' என்று மொழிந்து அவனை அனுப்பிவிட்டுத் தடாதகையுடன் கலியாணமண்டபத்தில் இசைவிருந்தருந்தினர். இவ்வாறு மணவிழாவை நடத்தியபின் சோமசுந்தரக்கடவுளாகும் பாண்டியமன்னன் நெறிதவறாது செங்கோல்செலுத்தி வந்தார்.

இனி, வையையாறு தோன்றிய காரணம்பற்றி அத்தற்குச் சிவகெங்கையென்று பெயர் வரலாயிற்று அதற்கு வேகவதியென்றும், சிவஞான நதியென்றும் விளம்பியதை (மெதுவாய் ஓடுபவள்) யென்றும் கிருதமாலை யென்றும் வேறு பெயர்களும் உண்டு. அந்த ஆற்றில் ஒருமுறையேனும் நீராடுபவன் சிவனறிவு எனும் தோணிபெற்றுப் பிறவிசாகடலைத்தாண்டிச் சிவனோடு ஒன்றுதல் எய்துவான். தயிரன்னமானத்தையும் தான்குவாயாக விழுங்கிக் குண்டோதரன் பெரும் நீர்வேட்கையால் வருந்தும்பொழுது எந்த ஆலவாய்மூர்த்தி அவனுக்காக வையையை அழைத்தனரோ அவர் நம்மைக் காப்பாற்றுவாராக!

இத்தக்கதையைப் படிப்போரும் கேட்போரும் பரிதாகம் நீங்கி எல்லா இன்பங்களையும் துய்ப்பர்.



பதிமூன்றாவது அத்தியாயம்.

எழுகடலழைத்தல்.

சோமசுந்தரப்பெருமானை பாண்டியராசன் அரசுபுரிகையில், காலத்தில் மழைபெய்தது, பூமியில் பயிர்கள் மல்கிக்கிடந்தன, மக்கள் தீயவழிநீக்கி அறவழிகளில் ஒழுகினர். அந்தணர் அவரது தெறியில் நின்று மறைகளையும் மறையங்கங்களையும் பயின்றனர். பேரன்புடன் சிவபூசை செய்தனர் வேள்விமுதலான நற்செய்கைகளை மகிழ்ச்சியுடன் புரிந்தனர். காமம் முதலிய உள்ளெதிரிகள் தங்களைச்செயிக்க அவர்கள் இடம்தரவில்லை. மறைமுடிகள் முதலானவற்றைக் கேட்டும் இயமம் முதலிய அட்டாங்க யோகங்களைப்பழகியும் புலன்களைவென்ற அவர்கள் சிவவுருவம் அறியமுயன்றனர். அரசவருணத்தாரும் மற்றோரும் அவரவரது அறங்களை முறைப்படி நிறைவேற்றி மகிழ்வுற்று எல்லாச்செல்வங்களுடன் அந்த ப்பூலோக சிவலோகத்தில் வாழ்ந்துவந்தனர். அதிக மழையோ அல்லது மழையின்மையோ அந்த இராச்சியத்தில் கிடையாது. தகப்பனிருக்கமகன் சாவது மில்லை இயமனது தொந்தரவும் கிடையாது. எல்லோரும் இறந்தபின் சிவலோகமே சேர்ந்தனர். அந்தநாட்டில் இயமன் என்ற பேச்சே கிடையாது. மேலாம் சிவலோகத்திற்கும் ஆலவாய்ப்பெருமானின் அந்த நாட்டிற்கும் வேற்றுமையேயில்லை. எப்பொழுதும் இறைவன் அந்தநகரில் குடிகொண்டமையால் நந்திகேசுரர் முதலான அனைவரும் மனிதவுருவெடுத்து அவருக்குத் தொண்டாற்றிவந்தனர். இறைவன் நவரத்தினங்களாலாக்கப்பெற்ற இருக்கையில் அமர்ந்து, இரத்தினமயமான முடியேற்று, எதிரிகளைவென்று, எப்பொழுதும் மக்களுக்கு அருள்புரிந்துவந்தார். அவரது தருமபத்தினியான தடாதகைப்பிராட்டியும் மனிலியினது அறத்திலிருந்து சிறிதுமழுவவில்லை. அவளது தாயாரான காஞ்சனமாலைத்தேவி சிறந்த அறிவும் தவமுமுடையவளாய் எப்பொழுதும் புராணம் கேட்பதில்ஈடுபட்டு இறைவனைக் காணவரும் பெரியோர்களிடமிருந்து நற்கதைகளைக்கேட்டனன்.

ஒருநாள் நூல்கள் கற்றுணர்ந்த கௌதமமுனிவர் மற்றை முனிவருடன் ஆலவாய்மூர்த்தியைக் காணவந்தார். அப்பொழுது காஞ்சனமாலையம்மை அவரை அழைத்து பரிவுடன் வணங்கி பெருநிலை அளிக்கும் அறங்களைத் தனக்குப் பகரவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். உடனே பேரறிவாளியான கௌதமர் அவளைநோக்கி 'தடாதகைப்பிராட்டியின் தாயாரான உமக்கு அறங்களனைத்தும் தெரியும். இருந்தாலும் நான் கூறுகின்றேன். மறைமுடியறிந்தோர் அறங்களை நெஞ்சத்தைப்பொறுத்தவையென்றும், காவைப்பொறுத்தவையென்றும், உடலைப்பொறுத்தவையென்றும் மூன்றுவிதமாகக் கூறுகின்றனர். உண்மையுரைத்தல், பொறுமை, சிவநினைவு, புலன்களையடக்குதல், பிராணிகளிடத்திரக்கம், உவகை, நேர்மை, அறநினைவு, பற்றுகளிலிருந்து விலகிய மனத்தூய்மை இவையனைத்தும் நெஞ்சைச்சார்ந்தவை. நெஞ்சத்தறங்களிற் சிறந்தது நெஞ்சிலுள் ஐந்

தெழுத்து மந்திரத்தை நினைத்தல்தான். அது மனத்தூய்மைக்குக் காரண மாகும். மனத்தூய்மையால் எவ்வாறு உடனே இன்பமுய்வீடும் கிடைக்கின் றனவோ அவ்வாறு மற்ற முறைகளால் கெடுகாட்களுக்குப்பின்னரும் கிடைப்பதில்லை. உருத்திரம், சமகம், புருடசூக்தம் முதலான வேதமந் திரங்கள் ஆகமமந்திரங்கள், துதிகள், பாடல்கள் இவற்றைச்செபித்தல் காலைச்சார்ந்த அறம். சிவலிங்கபூசை, வலம்வரல், பூசைக்குரிய பூக்கள், நீர் முதலியன கொணர்தல், இடத்தைப்பெருக்குதல், மெழுகுதல், பூசைக்கு மேண்டிய மலர்த்தோட்டங்கள் நிறுவல், சிவத்தலங்கள் செல்லல், தீர்த்தங் களில் நீராடல் இவையெல்லாம் உடலைச்சார்ந்த அறமாகும்.

இம்மூவகைப்பட்ட அறங்களில் உடன் பயனளிக்கவல்லதும்மிகச் சிறந்ததுமானது தீர்த்தங்களில் ஆடல். அதைக் கைப்பிடிக்கப் பாவங்கள னைத்தும் தொலையும். பெருஞ்செல்வங்கள் கிட்டும். புலனடக்குதல் வேள்வி புரிதல்முதலியவற்றால் கிடைத்தற்கரிய வீட்டுப்பேறானது தீர்த்தயாத்திரை மூலம் கிடைக்கும். ஆனதுபற்றி உடன் உயர்நிலைபெற விரும்புவோன் தீர்த்தயாத்திரையை மேற்கொள்தல் நலம். கெங்கை முதலான தீர்த்தங்க ளவற்றின் வடிவாய் சிவபெருமான் விளங்குகின்றான். எல்லாத் தீர்த்தங்களி லும் நீராடுவதென்பது ஒருவராலும் முடியாதசெயல். எல்லாவற்றின் பய னைக்கடல் நீராடலால் பெறமுடியுமென்று கூறப்பட்டிருக்கிறது மகாமேரு வைச் சுற்றிலும் ஓடுகின்ற ஆறுகளனைத்தும் கடலில் சேர்கின்றன. ஆத லால் எல்லாப்புண்ணிய தீர்த்தங்களிலும் கடல் சிறந்தது. கடலில் நீராடு வோர்க்கு மிகுந்த புண்ணியம் உண்டாகின்றது. ஆதலின் நீரும் கடலில் நீராடி எல்லாத்தீர்த்தப்பயனையும் பெற்றுக் கணவனுடன் சிவலோகம் செல் லலாம்" என்று உரைத்தார்.

முனிவர் மொழிந்ததைச்கேட்ட காஞ்சனமாலை அவருக்கு ஆடை முதலியன கொடுத்து உபசாரம்செய்தனள். உடனே கடல் நீராடலில் ஆசைகொண்டவளாய் செல்வப் புதல்வியிடம் தான் கடல்தீர்த்தத்தில் நீராடிப் பாவங்களைக்களைந்து கணவருடன் சிவலோகம்எய்தவிரும்புவதாய்க் கூறினாள். தாயின் இம்மொழிகளைக்கேட்டுத் தடாதகைப்பிராட்டிச் சிந் தனையில் ஆழ்ந்தாள். பின்னர் வெகுநாட்கள் பெருமானுக்குப் பணியாற்றி அவர்களின்புற்நிருக்கையில் மற்றவர்க்குத்தெரியாமல் அவரிடம் தாயாருக் குக் கடல்நீராடலில் அவா இருக்கிறதென்றும் அதற்கு என்னசெய்தல் வேண்டுமென்று கூறவேண்டுமென்றும் தெரிவிக்கலானாள். உடனே இறை வன் அவளது முகத்தை நோக்கி, உன் தாயாருக்கு ஒரு கடலில்லையா நீராட விருப்பமிருக்கின்றது. நான் எழுகடல்களையும் இங்கு கொண்டுவரு கின்றேன்" என்று மொழிந்து தனது வலிமையால் எழுகடல்களையும் அழைத்தார். பலவகை மீன்களும் பாம்புகளும் தலைநீட்ட, பவளக்கொடி கள், பாசங்கள் மிளிர, சுழல்களுடனும் அலைகளுடனும் அவை உடனே தோன்றின. அவற்றைக்கண்டு நகரிலுள்ள மக்கள் ஆச்சரியமடைந்தனர். அங்கு ஏற்கனவே கடல்போல் பெரியகுளம் ஒன்று இருந்தது. அக்கு ளத்தூநீரோடு எழுகடல்களின் நீர்களும் ஒன்றுசேர்ந்தன. உடனே அறியாத மக்கள் எட்டுக்கடல்கள் கூடியிருப்பதாகக் கூறினர். ஆனால் அன்றுமுதற்கொண்டு அத்தப் பொய்கையில் எழுகடல்களும் இருக்கை கொள்ளலால் அதற்கு எழுகடல் என்று பெயர்வந்தது. அப்பொய்கையில்

கடலரசனுன வருணத்தெய்வமும் மற்றைத் தேவர்களும் இருந்துகொண் டிருப்பதாகப் பெரியோர் கூறுகின்றனர். எழுகடலில் நீராடுபவர் பாவங் களொழிந்து பிறவிக்கடலைத்தாண்டுவர். அமாவாசை முதலிய புண்ணிய காலங்களில் எழுகடலில் குளித்துத் தேவர்முதலோர்க்குத் தர்ப்பணம் செய் தால் முக்கடலெழிந்து எல்லா விருப்பங்களையும் பெறலாம். இத்தத் திரு விளையாடலைக்கேட்கப் பேறுகளனைத்தும் கிட்டும்.

எந்தப்பெருமான் தேவியினது மகிழ்ச்சியின்பொருட்டுத் தன் முகத்திலுள்ள குளத்திற்கு எழுகடல்களையும் அழைத்தாரோ அவர் அனை வரையும் காப்பாற்றுவாராக!



பதினான்காவது அத்தியாயம்,

மழயத்துவசனை யழைத்தல்.

நகருக்கு வந்துள்ள கடல்களின் முழக்கத்தைக்கேட்டுச் சோம சுந்தரப்பெருமான் அத்தப்புரத்திலிருந்து பிராட்டியுடன் வெளியேறி மனித வுருவிலுள்ள நந்திகேசுரர் முதலான இராச்சியஅலுவலானருடன் பொய்கை யின் கரைசென்று கடல்களைக்கண்டு தடாதகையிடம் இதோ பார்? உனது மகிழ்ச்சியின்பொருட்டு எனது ஆற்றலால் இங்கு ஏழுகடல்களையும் அழைத் துள்ளேன். சீக்கிரமே உனது அருமைத்தாயாரிடம் சொல்லித் தீர்த்த மாடும்படி செய்து பின்னர் என்னிடம்வா என்று மிகப்பரிவுடன் மொழிந் தார்.

இவ்வாறு பிராட்டியிடம்கூறி அனுப்பிவிட்டுப் பெருமான் தனது ஆற்றலால் கடல்களை அமைதிப்படுத்திக் குளத்தின்கரையிலுள்ள மணல் கமழும் பூக்களைக்கொய்து முகர்ந்துகொண்டே அவணிருந்த பலவகை மரங் கள் நிறைந்த பூங்காவிற்புகுந்து உலாவினர்.

பிராட்டியும் இறைவனது ஆணையைசிரமேற்கொண்டு அப்படியே செய்கின்றேன் என்று உரைத்து உடனே தாயாரிடம்சென்று, அம்மா? நீங்கள் ஒரு கடலில் நீராடவிரும்பினீர்கள். இப்பொழுது இறைவனது திரு வருளால் இங்கு ஏழுகடல்களும் வந்திருக்கின்றன. விருப்பம்போல் நீரா டுங்கள், என்று மொழிந்தாள். மட்டற்ற உவகையடைந்த தாயார் பேரன் புடன் மகளைக்கட்டித்தழுவி அழகியமுகத்தைமுகர்ந்து உடனே மறுபடியும் சாத்திரமறிந்தோரை அழைத்துக் கடலில் தீர்த்தமாடும்முறை என்ன வென்றுவினவினள். அதற்கு அவர்கள் ஆய்ந்த கணவனற்றவள் தனியாகக் கடலில் நீராடுதல் கூடாதென்றும் மகனுடனே அல்லது கணவனுடனே தான் நீராடவேண்டுமென்றும் இருவரும் இல்லையெனில் ஆவின்கன்றொடு நீராடவேண்டுமென்றும் உரைத்தனர். இதைக்கேட்டதும் அம்மையார் பெரும் துயரில் ஆழ்ந்து பிராட்டியின் முகத்தைப்பார்த்து நான் என்ன செய்வேன் என்று ஏங்கினள். துன்பம் நிறைந்த அவளது சொற்களைக் கேட்ட தடாதகை உடனே பெருமானிடமேகி 'இறைவனே! மகனுடனே அல்லது கணவனுடனேதான் எனது தாயார் கடலில் நீராடலாமென்று பெரியோர் கூறிவிட்டனர். அவளுக்கோ மகன் இல்லை. கணவனோ விண் ணுலகம் சென்றுவிட்டார். அவள் என்னசெய்யவேண்டும்? வழிகளறிந்த தாம்தான் செப்பவேண்டும், என்று விண்ணப்பித்தாள்.

இறைவன் சரிதான் என்றுசொல்லிச் சற்றுநேரம் சிந்தையில் ஆழ்ந்து தனது நற்செயல்களால் அற்புதப்பொலிவுடன் இந்திரனது அரசு வீற்றிருக்கையிலமர்ந்திருக்கும் மலயத்துவசபாண்டியனை நினைத்தார். உட

னேயே அரயன்தன் வயமற்றுத் தனது மாசற்ற விமானமேறி எல்லோரும் பார்க்க வானில்வந்து கீழே கீழே இறங்கிக் கணநேரத்தில் பெருமானது அண்மைசேர்ந்து வணங்கினான். அற்குள் இறைவன் எதிர்சென்று வேண்டாம் வேண்டாமென்று கூறி, அவரை எழச்செய்து, தழுவிப், புத்திரியான தடாதகைப்பிராட்டிக்கு தந்தையைக்காண்பித்து அவரை அவரைவணங்கும் படிசெய்து, மாமியான காஞ்சனமாலைத்தேவியை மாமனான மலயத்துவச மன்னனுடன் சேர்த்து, முறைப்படி இருவரையும் ஒன்றுசேர்த்து எழுகடலில் நீராடும்படி செய்தார். அக்கணமே அவ்விருவரும் உமை சிவபெருமான் இவரது சாரூப்பியம்பெற்று தெய்வஉலகத்து ஆடை முதலியன அணிந்து மிக்கபொலிவுடன் சிவலோகத்தினின்றும் வந்திருந்த விமானத்தில் பெருமானது ஆணைப்படி ஏறி பொற்கலயத்தோடு இலங்கும் மூலலிங்க விமானத்தைத் திரும்பித்திரும்பிப் பார்த்து வணங்கியவண்ணமாய் பிரம்மாண்டத்திற்கும்மேல் திகழும் நித்தியமான சிவலோகத்தை அடைந்தனர்.

அப்பொழுது உலகையடைந்த தடாதகைப்பிராட்டி தனதுவிருப்பங்களை நிறைவேற்றிவைத்த இறைவனைப் பார்த்து, எனது நாதனே! உலகின் நாதனே! உண்மை அறிவு, இன்பவடிவனே! பேரிறைவனே! என்னைக் காப்பாற்றும். பெரிதினும் பெரியவனே! உமக்கு வணக்கம். எனக்கின்பமிழைப்பவனே! தக்கவேள்வியையழித்தவனே! காமனையெரித்தவனே! என்னிடன்புகொண்டவனே! எனது ஆணைப்படி நடப்பவனே! வேதங்களிலும் ஆகமங்களிலும் உறையும் அடித்தாமரைகளையுடையனே! மூவுலகையும் படைத்துக் காத்தழிப்பவனே! அன்னவருவெடுத்துப் பிரமனால் காணமுடியாத முடியுடையவனே! பன்றியுருவில் திருமாலால் காணற்கரிய தாள்களையுடையவனே! உமக்கு வணக்கம். மேலும் கீழும் அறிந்தவனே! பரமான்மவடிவனே! முத்தியளிப்பவனே! மூவுலகிற்கும் இறைவனே! பிறைசூடியே! உமக்கு வணக்கம். நீறணிந்து தோலுடைகட்டியிருப்பவனே! கருநிறத்த பாதியுடலுடையவனே, நாகராசனை அணியாகப்பூண்டவனே! உமக்கு வணக்கம். பூமி, நீர், காற்று, அனல், திங்கள், கதிரவன், ஆகாயம், தான் ஆகிய எண்மூர்த்திவடிவனே போற்றி! மறைமுடிகளால் அறியப்படுபவனே போற்றி! நாதத்தின் முடிவான மூர்த்தியே போற்றி! திருமால், வழிபடும்தெய்வமே போற்றி! நரகனையழித்தவனே போற்றி! சிவன்முத்தி நகரதிபனே போற்றி! ஆலவாய்ப்பெருமானே போற்றி! போற்றி! என்று துதிபாடினாள். பின்னர்பிராட்டி பெருமானது திருவருளை எப்பொழுதினும் அதிகமாகப்பெற்று, விருப்பங்களனைத்தையுமடைந்து கருப்பவதியானாள். ஆலவாய்மூர்த்தி சுந்தரபாண்டிய உருவில் அறுபத்தாறாயிரம் ஆண்டுகள் பூமியை ஆண்டார். அவரது ஆச்சரியச்செயல்களைக்கண்டு மதுரைநகர் வாழ்வோர் மகிழ்ந்து புகழ்ந்தனர்.

இந்தத் திருவிளையாடலைக் கேட்போரும் படிப்போரும் விரும்பியவற்றையெல்லாம் பெறுவார். விண்ணுலகிலிருந்த அரசனை இவ்வுலகிற்கழைத்து அவனது மனைவியுடன்கூட்டிப் பின்னர் அவ்விருவர்க்கும் சாரூப்பிய முத்தியளித்த எம்பெருமானுக்கு வணக்கம்.

பதினேந்தாவது அத்தியாயம்.

உக்கிரபாண்டியன் பிறப்பு.

கருப்பிணியான தடாதகைப்பிராட்டிஎப்பொருளேவிரும்பினும் அதைப் பரிவுடன் இறைவனை சுந்தரபாண்டியனது பணியாட்கள் கொணர்ந்துகொடுத்தனர். நாளுக்குநாள் கருப்பம் முறைப்படி வளச்சியடைதற்பொருட்டு அரசன் ஆயுள்நூல் வல்லுனரக்கொண்டு பிராட்டியைக் கவனிக்கும்படி செய்தார். கருப்பாதானம் முதலான ஆய்மைக்கருமங்களை குறிப்பிட்டகாலத்தில் முனிவருதவியுடன் சாத்திரப்படி செய்தார்.

பத்தாம்மாதத்தில் திருவாதிரை நட்சத்திரமும் திங்கட்கிழமையும் கூடிய நன்னாளில் வியாழன் கேந்திரத்திலிருக்கையில் அரயர்க்கரயர் நிலைகாட்டும் இலக்கினத்தில் ஆலவாய்ப்பெருமானின் திருஆணையால் முருகக்கடவுள் ஒரு முகத்துடன் இடமனைத்தையும் பொலியும்படிசெய்து கொண்டு தோன்றினர். உடனே மூவுலகிலுள்ள யாவரும் மகிழ்வுற்றனர். அம்மாபுருடன் பிறந்ததும் வலிமையாலோ அல்லது செல்வத்தாலோ செருக்குற்றுச் சிறையிலடைக்கப்பெற்றிருந்த மன்னசெல்லோரும் விடுதலை பெற்றனர். தெய்வலோகத்தில் துந்துபிகள் முழங்கின. திசைகள் தெளிந்தன. தென்றல் வீசிற்று. முகில்கள் கற்பகமலர்களைப் பொழிந்தன. சுற்றிலுமுள்ள ஆறுகள் மக்களின் மனத்துடன் தெளிவுபெற்று விளங்கின. அனல் வலம்சுழித்து அவியையேற்றது. திசைபாலர்களும் விண்ணவரும் களிப்பெய்தினர். ஆலவாய்நகரில் வாழும் குடிகள் உவகைக்கடலில் மூழ்கினர் ஒவ்வொருவரும் தத்தம் இல்லத்தில் ஓர்விழாவாகக்கொண்டாடினர். வாத்தியங்கள் முழங்கின. மூவுலகிலும் எவர்க்கும் துன்பம் காணவில்லை. தமோகுணமென்ற இருள் ஒழிந்தது. ரசோகுணமென்ற ஞாயிறு ஒளியிழந்தது. சத்துவகுணமென்ற பொலிவு உயிர்பெற்றது. பூவுலகு அமுதமயமாயிற்று. எங்கும் மங்களச்சொற்களே நிலவின. திலோத்தமை, ஊருவசி, அரம்பை முதலான அப்சாமகளிர் மங்களப்பொருள்களைக் கையிலெடுத்துக்கொண்டு மகிழ்வுடன் வந்தனர், இயக்கர், கந்தருவர், நாகர் இவரது மனைவிமார் ஒன்று கூடி இன்னிசை பாடியவண்ணம் அங்கு குழுமினர், இருசியமூகர், மரீசி முதலிய முனிவர் விசயம்செய்தனர், பிருகர்பதியுடன் கூடிய பிரம்மா, திருமால், இந்திரன் முதலான தேவர் எல்லோரும் அங்குக்கூடினர்.

பெருமானை சுந்தரபாண்டியமன்னன் வந்திருந்ததேவர் முனிவர் இவரொடு சாதகருமம் நடத்திக் கடனிலிருந்து விடுபட்டவர்போல் விளங்கினர். மாரிக்காலத்தின் இறுதியில் மேகங்களினின்று விடுபட்ட மதிபோலும் இலங்கினர். அந்தணர் கைகளில் இடப்பட்டதான நீர்பெருகி வைகை ஆறு இல்லாமலே ஆருகடிற்று. அரசன், வந்திருந்த படிப்பாளிகள், மங்களம் கூறுவோர் இவர்க்கு வேறுஎவரிடமும் சென்று இரவாமலிருக்கும்படி அத்தனை பொன்களையும் இரத்தினங்களையும் ஆடைகளையும் அளித்தார்.

அங்கம் குறைந்தவர், பிணியாளர், வலிமையற்றவர், உதவியற்றவர், பாக்கிய மிழந்தோர் இவர்யாவரும் அவரது கருணையால் நலன்பெற்றனர்.

பன்னிரண்டாம்நாளில் அரசன்கூடிய அனைவருடன் தனது பெயருக்கு ஒத்ததான உக்கிரன் என்ற திருநாமத்தைக் குழந்தைக்குச் சூட்டினார். பிரமன், விஷ்ணு, பிருகஸ்பதி முதலானவர் குழந்தைக்கு வேண்டிய காப்புகளைச்செய்துவிட்டு ஆலவாய்ப்பெருமானை சோமசுந்தர பாண்டியனை வணங்கி விடைபெற்றுக்கொண்டு வாகனங்களில் சென்றனர். பார்த்த நல்லோரெல்லாம் என்ன அழகு! என்ன ஒளி! என்ன இலக்கணப் படியான உறுப்பமைப்பு, ஆச்சரியம்! ஆச்சரியம்! தடாதகைப்பிராட்டியின் நல்வினைப்பயனால் முருகக்கடவுளே தோன்றியிருக்கின்றான்! என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டனர்.

நான்காம்மாதத்தில் நிட்கிரமணம் என்ற சடங்கை நடத்தி குழந்தையை வெளிக்கொணர்ந்தனர். ஆறும்மாதத்தில் சோறூட்டற் சடங்கு நடைபெற்றது. மூன்றும் பிராயத்தில் குடுமிவைத்து பொலிவுப்பெருக்குக்காக ஐந்தாம் பிராயத்திலேயே உபநயனம் நடந்தது. குருவினதுவாயினின்றுவரும் சொல்லைக்கேட்டுக் கற்கவேண்டுமென்ற முறைக்கேற்பக் குழந்தை குருவினிடமேற்பிக்கப்பட்டான். ஒருமுறை கேட்டவுடனேயே உள்ளிருந்த மறைகளும், வித்தைகளும் கலைகளும் அனைத்தும் வந்துவிட்டன. பற்பல அத்திரவித்தை யனைத்தையும் இறைவன் தானேகற்பித்துக் கொடுத்தான். மந்திரங்களுடன்கூடிய வில்வித்தை முழுதையும் பாசுபதாத்திரத்தையும்பெற்றுக் குழந்தை நிகரற்ற ஆற்றலுடையவனாய் விளங்கினான். பெருமானது திருக்குமாரன் எட்டுப்பிராயத்திற்குள்ளேயே எல்லா வித்தைகளையும் கற்று எல்லாமறிந்தவனாய்த் திகழ்ந்தான். அமைதியுடன் தாய் தந்தையர்க்குத் தொண்டாற்றி அவர்களது கருணை நோக்குக்காளாகிக் கொண்டு மற்றை அரசகுமாரருடன் மிகுந்தவலியுடன் விளையாடினான்.

நாளடையில் சுந்தரபாண்டியனது குங்குமநிறமுள்ள திருக்குமாரன் அழகர்க்கு மழகளிக்கும் காளையின்பிராயத்தை எய்தினன். ஒளி மிளிரும் கால்களிலும், தடிக்கைபோன்ற தொடைகளிலும், குறுகிய இடுப்பிலும், தாழ்ப்பாள்போன்ற தோள்களிலும், கதவுபோன்ற மார்பிலும், அழகிய நீண்டவிழிகளிலும், இலக்குமிவாழும் முகத்திலும், எங்கும் அழகு இலக்கியது. பொலிவுற்று விளங்கும் உக்கிரனைத் தந்தை கண்ணுற்று இவன் எச்செயலுக்கும் தக்கவன் என்று கருதினான். பின்னர் அரசன் அவனிடம் மூப்பத்திரண்டு இலக்கணங்களையும் பரிசோதனைசெய்தான். நீண்டவை ஐந்து, குறுகியவை நான்கு, மெல்லியவை ஐந்து, உயர்ந்தவை ஆறு, சிவந்தவை ஏழு, ஆழ்ந்தவை மூன்று, பரந்தவை இரண்டு, இவ்வாறு அமைந்திருக்கும் உறுப்புக்கள் மேலானவையென்று சாத்திரம் கூறுகின்றது. உக்கிரனுக்கு இரண்டு புயங்களும், விழிகளின் பரப்பும் நாடியும், தனங்களுக்குமத்தியிலிருக்கும் இடமும் ஆக ஐந்து அங்கங்கள் நீண்டவை. நா, குறி, புட்டம், கணைக்கால் இவை நான்கும் குறுகியவை, அதரஞ்சிறந்தவை, இவற்றையுடையவன் பாக்கியவானாவான்; விரல்களின் கணுக்கள், உரோமம், பல், நகம், தோல் இவை ஐந்தும் சூக்குமமாயிருக்கின்றன, அகலம் நீண்ட ஆயுள்உண்டு கக்கம், வயிறு, விரல், புயம், மூக்கு, மார்பு, இவை

ஆறும் உயர்ந்திருக்கின்றன. பெருஞ்செல்வம் திட்டம்; உள்ளங்கால், உள்ளங்கை, கடைக்கண், நகம், கன்னம், நாக்கு கீழுதடு இவை எழும் சிவந்தவை, இன்பம்தரும்; குரல், பலம், தொப்புள் இவைமூன்றும் ஆழமானவை; சிரமும், நெற்றியும் பரந்தவை. நற்குணமுடைய இவனிடம் இம்முப்பத்திரண்டு இலக்கணங்களும் பொருந்தியிருக்கின்றன. ஆனது பற்றி இவன் அரசர்க்கரசனாகி நெடுநாள் வாழ்வான். என்று தீர்மானித்து தனது புத்திரன் இலக்கணங்கள்யாவும் பொருந்தியவனாகவும், எல்லா நற்குணங்களுமுடையவனாகவும், அமைதியும், மாசற்ற உள்ளமும், சாத்திர அறிவும் படைத்தவனாகவும், அருள் நிறைந்த நெஞ்சத்தனாகவும், உலகத்தைக்களிப்பிப்பவனாகவும், பெரிதான அரசுப்பளுவை எளிதில்தாங்கக்கூடியவனாகவும் இருத்தல்கண்டு முதலில் இவனுக்கு மணம்செய்வித்துப் பின்னர் முடிசூட்டவேண்டுமென்றும் முடிவுசெய்து சுந்தரபாண்டியமன்னன் புத்திரனது மணம்குறித்து அமைச்சருடன் யோசிக்கலானான்.

இத்தத்திருவிளையாடலைப் படித்தலும் கேட்டலும் பிள்ளைப்பேற்றையும் நீண்ட ஆயுள் முதலியவற்றையும் பயக்கும்.



பதினேழாவது அத்தியாயம்,

உக்கிரபாண்டியனுக்கு வளையம், வேல், சண்டாயுதம் கொடுத்தல்.

இவ்வாறு புதல்வனின் திருமணம்பற்றிச் சுந்தரபாண்டிய ராசன் சிந்தித்துக்கொண்டிருக்கையில், இறைவனுல் கனவில் தூண்டப் பெற்றுச் சூரியமிசத்தைச்சேர்ந்த மணலூராசரான சோமசேகரர் என்பவர் கடும் தவத்தால்பெற்ற இலக்கணமனைத்தும் பொருந்திய காந்திமதியெனும் புதல்வியை விமானத்தில் ஏற்றிக்கொண்டு மனத்திலும் வேகமாய் மதுரை நகர் வந்துசேர்ந்தார். பெருமானது ஆணையின்பேரில் அவர் வந்திருக்கிறு என்ற தகவல் தெரிந்ததும் அமைச்சர் வியந்து எதிர்கோக்கிச்சென்று வரவேற்று இனியமொழிகள் பேசி அவரை அரசனிடம் சேர்ப்பித்தனர். பரம பொருளான ஆலவாய்மூர்த்தியே அரசன்கோலத்திலிருப்பதால் மிகப் பொலிவுடன்விளங்கும் சுந்தரபாண்டியராசனைக்கண்டு களிப்புற்றுப் பொன் மயமான மலர்களாலும் இரத்தினங்களாலும் பூசித்து அவரது அடிகளைச் சோமசேகரர் வணங்கினர். உடனே பாண்டியமன்னன் அவரை எழுப்பிக் கட்டித்தழுவி, அருள்மொழிகள் பகர்ந்து, ஆடைஅணி வரிசைகள் தந்து, தக்கதொரு இருப்பிடத்திற்கு அனுப்பினர்.

பின்னர் அமைச்சர் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளிலிறங்கி ஏற்றாசர்க்கெல்லாம் அழைப்பு அனுப்பினர். அவர்களும் உடனே மதுரைக்கு வந்துவிட்டனர் அதற்குள்ளாகக் கடம்பவநப்பெருமான்பிருகற் பதியை அழைத்து கன்னியின் இலக்கணங்களைப் பார்த்துவரும்படி பணியிட்டார். உடனே தேவகுருவானவர் இரகசியமாகச் சென்று நீராடிக் கொண்டிருக்கும்வேளையில் கன்னியாகும் காந்திமதியின் உச்சிமுதல் உள்ளங்கால்வரையுள்ள அங்கங்களின் இலக்கணங்களை ஆய்ந்துபார்த்துப் பெருமானிடம் "எல்லாமறிந்த கடவுளே! உமக்குத்தெரியாததொன்றுமில்லை. ஆயினும் ஆணையேற்கொண்டு சாத்திரம்கூறிய வண்ணம் அவயவங்கள் யாவற்றையும் நன்முய்ப் பரிசோதித்தேன். காந்திமதியின் இலக்கணங்களைக் கூறுகின்றேன். தேவலோகத்திலும் அவளுக்கு நிகரான மங்கை கிடையாது. தலை உரோமம், தலை, நெற்றி, கண்கள், மூக்கு, செவி, கன்னம், உதடு, பற்கள், நாக்கு, மோவாய், கழுத்து, மார்பு, புயங்கள், உள்ளங்கை, விரல்கள், நகங்கள், தனங்கள், வயிறு, தொப்புள், புட்டம், தொடை, முழங்கால், கணைக்கால், கணுக்கால் படம், கால்விரலகள், கால்நகங்கள், உள்ளங்கால், மணம், குரல், நிறம் இவைபற்றித்தான் மங்கையரது முப்பத்திரண்டு இலக்கணங்கள்.

காந்திமதியினது குழல்கள் நீருண்ட முகில்போலும் வண்டுகள் போலும் கருநிறமாய் மிருதுவானவையாய் மெல்லியனவாய் கொஞ்சம்

வசுவுபெற்றனவாய் இருந்துகொண்டு பாக்கியத்தையும் செல்வத்தையும் குறிக்கின்றன. யானையினது மத்தகம்போன்று உருண்டையாயும் உயர்ந்து மிருக்கின்ற சிரம்கணவனின் நீண்ட ஆயுளையும் சக்கரவர்த்தி நிலையையும் காட்டுகின்றது. அரைமதிபோல் பள்ளமற்று மூன்று அங்குல அகலத்தில் உரோமம் நரம்புகள் இல்லாமல் விளங்கும் நெற்றி பாக்கியத்தையும் உடல் நலனையும் தெரிவிக்கின்றது. கடையில் சிவப்பும், மணியில் கருப்பும், ஆவின்பால்போன்ற தெளிவும். கருத்த இமை உரோமங்களும்பெற்ற கண்கள். எள்ளுப்பூப்போன்று ஒத்தவட்டமான மூக்கு. நீண்டவையும் நல்ல சுழலோடு கூடியவையுமான செவிகள். கன்னங்களோ உருண்டு வட்டமாய் உயர்ந்து இலங்குகின்றன, அவளது கீழுதடு சிவப்புநிறத்தொடு உருண்டு மத்தியில் ஓர் இரேகையுடன் பொலிகின்றது. கணவனுக்கு அவளிடம் அதிகமான அன்பு ஏற்படும். ஆவின்பால்போன்ற வெளுத்த முப்பத்திரண்டு பற்களும் மேல்வரிசையினும் கீழ்வரிசையினும் ஒத்தவையாகவும் கொஞ்சம் நிமிர்ந்தவையாகவும் திகழ்கின்றன. மிருதுவான சிவந்த நாக்கு. இரண்டுஅங்குல நீளத்தில் உருண்டு பருத்திருக்குமோவாய். திரண்ட வட்டமான கான்கு அங்குலமுள்ள கழுத்து. மூன்று இரேகைகளுடன் கூடியது. கணவனுக்குப் பேரரசன் நிலையத்தரத்தக்கது. மார்பு பதினெட்டு அங்குலமுடையதாய் நிமிர்ந்து சதைப்பற்றுடன் உரோமம் நரம்புகளின்றி விளங்குகின்றது. எலும்புக்கட்டுகள் தோன்றுத குற்றமற்ற திரண்ட புயங்கள். மெதுவானதும் மத்தியில் உயர்ந்ததும், சிவப்புநிறத்ததும், சிறந்த இரேகைகளுடன் கூடியதும் ஆனால் அதிகமான இரேகைகளுமில்லாததுமான உள்ளங்கை, நல்ல கணுக்களுடன்கூடிய, உருண்ட, நீண்ட, போகப் போக மெலிந்த கைவிரல்கள், ஒத்த உயர்ந்த, சிவந்த வட்டமான நகங்கள். வட்டமான கட்டுடைய, திரண்டதனங்கள் நரம்புகள் தெரியாதசிற்றிடை ஆழமான வலச்சுழியுள்ள தொப்புள், ஆமைமுதுகு யானைமத்தகம்போன்ற பின்புறம், யானைத்துதிக்கை, வாழையின் அடிப்பாகம் இவைபோன்று உரோமம், நரம்பு தோன்றுத தொடைகள். உருண்டும் சதைக்குள் மறைந்தவையுமான முழங்கால்கள். உரோமமற்றதும், ஒத்ததும், வரவர வட்டமானதும் நரம்புகள் தெரியாததுமான கணைக்கால்கள். இந்த இலக்கணமுடைய மங்கை அரசன் மனைவியாவாள். அழகான மறைந்த நரம்பு வெளிப்படாத வட்டமான கணுக்கால்கள். மேற்பாதம் சதைப்பற்றுடன் கூடி நரம்புகள் தோற்றுமல்நிமிர்ந்து ஆமையோடுபோன்றுவிளங்கிக்கொண்டு அரசன்மனைவியாவாளென்பதைத் தோற்றுவிக்கின்றது. விரல்கள் தடித்து உருண்டு நிமிர்ந்து தோற்றமளிக்கின்றன. மாசற்ற அழகான அரைமதி வடிவான நகங்கள். உள்ளங்கால் இரண்டு வியர்வையற்று குளிர்ந்து சிவந்து மென்மையாயிருக்கின்றது. அவளது உடலிலிருந்து தோன்றும் மணமோ மலர்ந்ததாமரை, பாடலி, செண்பகம் முதலான பூக்களிலிருந்துண்டாம் மணம்போன்று நெஞ்சைப்பறிக்கின்றது. குரலோ குயில், கிளி, வீணை இவற்றின் நாதம்போல் இனிமைபொருந்தியது. நிறமோ உருக்கிய பொன்னொளியோவொத்தது. மேற்கூறிய நல்லிலக்கணங்களைப் பார்ப்பதுடன் அவலக்கணங்கள் எவையேனுமிருந்தால் அவற்றையும்பார்க்க வேண்டியது முறை. முன்னே நாளில் இறைவனால் இந்த இலக்கணங்கள் எனக்குக்கற்பிக்கப்பெற்றன. அவற்றை நான் மனதில் வைத்திருந்தேன். இப்பொழுது காந்திமதியை முற்றிலும் பரிசோதித்துவிட்டேன். அவளிடத்

நில் இலக்கணங்கள்யாவும் காணப்படுகின்றன. இறைவனது திருவருளின் பேரில் அவளுக்கு அரசகுமாரனோடு திருமணம் கடைபெறுதல்வேண்டும் என்று விரிலாய்க் கூறிவிட்டு இறைவனது தாள்களில் உளத்தையும் கண் களையும் இருத்திச்சும்மா அசையாமல்நின்றார்.

பின்னர் எல்லாமறிந்தவரும் எல்லாச்செயல்களிலும் வல்லவரு மான சுந்தரபாண்டியன் நன்னுளில் நல்ல முகூர்த்தத்தில் பிரமா, திருமால் இந்திரன்முதலான தேவரும்பிறரும் பார்த்திருக்க, முனிவர்களோக்கொண்டு விரதங்களனைத்தையும் முடித்துக் குளிப்பித்துத் தனது மனைவியுடன்கூடி சோமசேகர அரசரால் தாரைத்தானம்செய்து கொடுக்கபெற்ற புதல்வியை முறைப்படி உக்கிரபாண்டியனுக்குத் திருமணம் நடத்தி, மணக்கோலத் துடன் புதல்வனை யானைமேலேற்றி நகரில் வலம் சுற்றிக் குலதெய்வமான இராபீட்டபலப்பிரத மூர்த்தியைவணங்கச்செய்து, அரண்மனை திரும்பி அங்கு மங்கள இருக்கையில் அவனையும் காந்திமதியையும் இருத்தி பொற் குடங்களில் கங்கை முதலான புண்ணியதீர்த்தங்களிலிருந்து கொணரப் பெற்ற நீரால் அபிடேகம்செய்து அவனுக்கு வெண்குடையும் சாமரங்களும் பிற அரசடையாளங்களும் கொடுத்தார். அவற்றுடன் உக்கிரத மூர்த்தி யான பாண்டியன் உக்கிரனுக்கு வலையம்,வேல், சண்டாயுதமெனும் மூன்று ஆயுதங்களையும் தந்தார்.

முன்னொருகாலத்தில் இந்திரனும், வருணனும், மாமேருவும்; பெருமானிடத்தில் மதிப்புக்குறைவாய் நடந்துகொண்டனர். அதற்காக அவர்களைத் தன்புறுத்தற்கே இவ்வாயுதங்கள் புதல்வனை உக்கிரனுக்கு அளிக்கப்பட்டன. கொடுக்கும்பொழுது அவர் ஆயிரம் பரிதிகள்போல் மிளிரும் வலையம் இந்திரனது முடியைத்தட்டவும், அனல்போல் எரிக்கும் சண்மையாய்ந்ததும், கூரானதும், மந்திரங்கள் ஓதப்பெற்றதுமான வேல் ஆயுதம் கடலை வற்றடித்தற்கும், பார்ப்போர் நடுங்கும்படியானதும் ஒளி நிறைந்ததுமான சண்டாயுதம் மாமேருமலையைப் பந்துபோல் ஆடச்செய்ய வும் கையாளப்படுதல் வேண்டுமென்று சொல்லி அவற்றை அவனிடம் ஏற் பித்தார். உக்கிரபாண்டியன் மிக்க வணக்கத்துடன் அவற்றை ஏற்றுக் கொண்டு இறைவனை தந்தையை வணங்கினான். அரசன் அவனை எழுப் பித்தழுவி உச்சிமுகர்ந்து அரசியற்றவல்லவனென்று கண்டார். உடனே அவரது மனம் தனது அகத்தைதினைத்தது. அறுபத்தாருயிரம் ஆண்டுகள் ஆலவாயில் அரசுசெலுத்தி மக்களையும் உலகத்தையும் காப்பாற்றியபின் இறைவன் தருதிபெற்ற உக்கிரபாண்டியனிடம் செவ்வனே காப்பாற்று என்று அருளிச்செய்து இராச்சியத்தை ஏற்பித்துத் தடாதகைப்பிராட்டி யுடனும் தனது கணங்களுடன் பேரிலிங்கத்தில் மறைந்தார்.



பதினேழாவது அத்தியாயம்.

கடலை வற்றடித்தல்.

—:o:—

உக்கிரபாண்டியன் அரசையேற்று நெறிதவறாது செங்கோல் செலுத்தினர். குடிகள் சீரும்செழிப்புமாய் மகிழ்ந்தனர். அவரவர் ஏற்பட்ட தொழிலை சிறப்புறும்படி செய்தான். அரசன் எப்பொழுதும் குடிகளின் நலம் ஒன்றிலேயே கண்ணும்கருத்துமாயிருந்தார். காடெங்கும் பயிர்களும் சால்நடைகளும் செழித்தோங்கின. மக்கள் ஆபரணம் முதலியன பூண்டு களிப்புடன் விளங்கினர். குடிகளின் எண்ணிக்கைபெருகி பட்டிகளும் நகரங்களும் சனமயமாகவிருந்தன. எங்கும் கோயில்கள். எப்பொழுதும் விழாக்கள். இவ்வண்ணம் உக்கிரபாண்டியனது இராச்சியம் ஒப்பற்றதாய் இலங்கிற்று.

அந்த நாட்டில் கோணற்போக்கு குடிகளிடத்தில்லை ஆறுகளிடத் தில்தான். தமம் (இருள்) இரவில்தான். ரசம் (மாதவிடாய்) மகளிரிடத் தில். தண்டத்தின் (தண்டனை, கம்பு) பேச்சு கோடரி கூந்தலம், விசிறி, இவற்றில். வீப்பிரமம் (தளுக்கு, ஜயம்) மங்கையரிடத்தே இருந்தது; படித் தவரிடமில்லை. தானக்குறைவு (கொடை, மதம் பொழிதல்) யானைகளி டத்தும் கண்டகங்கள் (சத்துருக்கள், முட்கள்) மரங்களிடத்தும் தென் பட்டன.

கிராமங்களில் கணக்கற்ற வேள்விகள் நடந்தன. படித்தோர் மகிழ்வுற்றிருந்தனர். செடிகொடிமரங்கள் காலங்களில் பூத்துப்பழுத்தன. பூங்காவனங்களில் நறுமண மலர்கள் கொஞ்சின. எங்கும் பெருக்கு, எங்கும் நிறைவு, எங்கும் மகிழ்ச்சி.

உக்கிரபாண்டிய மன்னன் பலவகை வேள்விகள் நடத்திக் கடைசியில் அசுவமேதயாகங்கள் தொடங்கி அவற்றில் தொண்ணூற்றுறைச் செய்துமுடித்தான். தேவேந்திரன் இதுகண்டு பயந்து பெரும் பொறாமை யுற்றான். உக்கிரபாண்டியராசனது நாடு செழித்திருத்தற்குக் காரணம் அவனது அறச்செயல்கள். நாட்டின்வளம் குன்றவும் அவனது அறம் குறுக வும் ஏற்பாடு செய்தல்வேண்டும் என்று யோசித்தான். உடனே வருணனை அழைத்துப் பேரலைகளுடன் பாண்டியநாட்டினுள்புகுந்து அமராவதியினும் மேம்பட்ட மதுரைமாநகரை விழுங்கிவிடவேண்டுமென்று பணியிட்டான் இந்திரன். அக்கணமே கடலானது பயமடைந்து ஆலவாய்மூர்த்தியின் பெருமையறியாது ஆர்ப்பாட்டத்துடன் வந்துவிட்டது. கடுஞ்சி. மலை போன்ற அலைகள். நகரெங்கும் தண்ணீர். சனங்கள் விழித்து அலறி அடித்துக்கொண்டு பலதிசைகளிலும் ஓட ஆரம்பித்தனர்.

இத்தருணத்தில் பெருமான் இரங்கி அசரீரியாக வின்றி "உக்கிரபாண்டியமன்னனே! என்ன உறங்குகின்றாய்! நகர்முழுதும் கடல்

நீரில் மூழ்கித்தத்தளிக்கின்றதே! குடிகளைக் காப்பாற்றுதலல்லவா அரசனுக்கு அரசனெனப்பெயர். அதிலும் போராபத்து சூழ்ந்திருக்கும்சமயம். அதினின்றும் அவர்களைக் காக்கவேண்டாமா? அதற்கு நான் ஒரு வழி சொல்கின்றேன். அப்படிச்செய். முன்னே நான்உனக்கு ஒருவேல் அளித்திருக்கின்றேன். அதை முழுமூச்சுடன் கடலைநோக்கிவீசு. அதன் வெப்பத்தில் நீரனைத்தும் வற்றிப்போம். இல்லையேல் உன்னையும் மதுரைநகரையும் அது விழுங்கிவிடும். உடனே எழுந்திரு என்று திருவாய்மலர்ந்து, எழுப்பி, அவனது செற்றியில் அருட்கையால் திருநீறு பூசி மறைந்தார்.

உடனே அரசன் விழித்து எழுந்து அமைச்சரை அழைத்துக் கனவிற்கண்டவற்றைக் கூறினன். அவர்கள் அதைக்கேட்டு "அரசனே! இறைவனே யாவற்றையும் நடத்துகின்றான். அவன் கனவில் கூறியவண்ணம் செய்" என்று மொழிந்தார்கள். உடனே பெரும்வலிமைபெற்ற உக்கிரபாண்டியன் வேலையெடுத்துக்கொண்டு பரபரப்புடன் கடலை அணுகி சுந்தரமூர்த்திகடவுளின் பொன்மொழிகளை நினைந்து ஒருகணநேரம் கடலை நோக்கியவனுய் பயம் நீங்கின்றான். ஆர்ப்பரித்துக்கொண்டிருந்த கடலானது நான்குவிதப்படைகளை திரட்டிக்கொண்டு போர்முழக்கத்துடன் தனது நாட்டைப் பிடிப்பதற்கு வந்த ஓர் பேரெதிரிபோன்று தோன்றிற்று. அதற்குள் ஆலவாய் வள்ளல் சித்தர்கோலத்தில் தனது திருக்குமாரன் பக்கத்திற்கு விரைந்து வந்துவிட்டார். அவரது அருள்நோக்கால் தூண்டப்பெற்று அரசன் ஊழிக்கால அனலைக்கக்குவதும் மந்திர ஆற்றல் பெற்றதுமான வேலாயுதத்தை கடலின்மீது எறிந்தான். அத்தக்கணமே கடலானது சுரீரென்று கண்டையளவிற்கு வறண்டுவிட்டது.

அதுகண்ட சித்தவேடத்திலிருந்த சுந்தரேசப்பெருமான் பெருமகிழ்ச்சியெய்தி அரசனுக்கு வரங்கள் பலதந்தார். பின்னர் புலவர்களது சங்கமொன்றை நிருவி, இம்மதுரையில் முதல் இடைச்சங்கங்கள் இருந்தன. இந்த மூன்றும் சங்கம் வைகைக்கரையில் இருக்கட்டும், என்று அருள்மொழிகூறி சோதிவடிவாய் மாறி அனைவரும்கண்டு வியந்துநிற்க ஆகாயவழியாகச்சென்று மூலலிங்கத்தில் ஒடுங்கினர். இதைக்கண்ணுற்ற அரசன் அமைச்சருடன் திருக்கோயில் சென்று பெருமானை வணங்கித்துதித்தார். உடனே ஆலயத்திற்குக் கிழக்கே கடல்வரையுள்ள பயிருடன் கூடிய நிலங்களையும், தோட்டங்களையும் குளங்களையும் யாவற்றையும் இறைவனுக்குக் காணிக்கையாக்கினர்.

இந்தப் பதின்மூன்றுவது திருவிளையாடலைக் கேட்டால் இருகண்கள் தீர்ந்து நன்மைகள் உண்டாம்.



பதினெட்டாவது அத்தியாயம்.

இந்திரன் முடி தகர்த்தல்.

ஏற்கனவே தேவேந்திரனுக்கும் உக்கிரபாண்டிய ராசனுக்கும் கொஞ்சம் மனத்தாங்கல் உண்டு. அப்படியிருக்கையில் சேரசோளபாண்டியவேந்தர்களின் இராச்சியங்களில் கிரஹங்களின் நிலை தவறியதால் மழை இல்லாமற்போய் ஓர் கடும்பஞ்சம் ஏற்பட்டது. நெல் முதலான தானியங்கள் ஒன்றும் விளையவில்லை. புல்லும்கூடக் கருகிவிட்டபடியால் ஆடுமாடுகள் தினியின்றிவதங்கின. நீரில்லாது மரங்கள் வாடின. விலங்குகள், பறவைகள், மானிடர் எல்லோரும் மிகுதியாவ தன்புற்றனர்.

இக்கொடிய நிலைமையை அறிந்து மூன்றுமன்னரும் ஒன்றுகூடி ஆலோசித்து பொதிகையிலிருக்கும் அகத்தியர் இருப்பிடத்திற்குச் சென்றனர். அவ்வமயம் அவர் தவாதசாந்தத்தலத்திலுறையும் கடம்பவன நாதனை ஆலவாய்மூர்த்தியைத் தியானிப்பதில் ஈடுபட்டிருந்தார். சற்றுப் பொறுத்து மூன்று மன்னர்களும் தமது நாடுகளில் மழையின்மை குறித்து அவரிடம் விண்ணப்பித்துக்கொண்டனர். உடனே அவர் அறிவுக்கண்ணால் காரணங்களை நோக்கி அவர்களிடம் "வேந்தரே! கிரகங்கள் மாறுபட்ட நிலையிலிருக்கின்றன. செவ்வாய்க்கு முன்னால் சூரியனும் பின்னால் சுக்கிரனும் இருக்கின்றார்கள். இன்று தலைகியுள்ள பஞ்சம் பன்னிரண்டு ஆண்டுகள் நீடிக்கும். அதற்கு முன்னதாக மழைபெய்ய காரணம் ஒன்றும் தென்படவில்லை. இந்த மழையின்மை உங்கள் நாடுகளில்மட்டுமல்லாது எங்குமே பரவிஇருக்கும். ஆயினும் உங்கள் மூவரதுநாடுகளில் மழைஉண்டாவதற்கு வழி கூறுகின்றேன். கேளுங்கள். ஆலவாய்ப்பெருமான் இருக்கின்றாரே, அவருக்கு அண்டினவர்களைக் காப்பதில் எப்பொழுதும் பெரியதோர் இன்பம். சுகம் விரும்புவோரும், வீடு விரும்புவோரும், பெரும் உற்பாதங்களிலகப்பட்டோரும், பிணிகளில் தன்புறுவோரும், சாவுக்கஞ்சியோரும் பிறரும் அவரைத் தொழவேண்டும். திண்ணமாய் அவர் அவரவரது விருப்பத்தை நிறைவேற்றிவைப்பார். மார்க்கண்டேயமுனிவரை இயமனிடமிருந்து காத்து அவருக்கு மூத்தியளித்தார். கடலில் தோன்றிய மிகக் கொடியதான ஆலம் என்ற நஞ்சை உண்டு மூவ்வுலகத்தையும் காப்பாற்றி ஆலவாயன் என்ற பெயரையும் பெற்றார். கந்திகேசுரர் அவரைத் தொழுது சிவசாரூப்பியமடைந்து பலதாப்பட்ட கணங்களுக்குத் தலைவரானார். தேவர்கள், அவுணர்கள், கந்தருவர் கிம்புருடர், மனிதர் முதலிய எல்லோரும் ஆலவாய்மூர்த்திலைய வழிபட்டு வேண்டுவன பெற்றிருக்கின்றனர். ஆதலால் அப்பெருமானையே அடைந்து மழையைப் பெறுங்கள், என்று மொழிந்தார். அவர்கள் அதைக்கேட்டு மகிழ்ந்து மறுபடியும் அகத்தியரைநோக்கி ஆலவாய்ப்பெருமானை எந்த விதமாக எப்பொழுது வழிபட்டால் விரும்பிய பயனை எய்தலாமென்று கூறியருளவேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில் அவர் இறைவனுக்கு உகந்தது சோமவார நோன்பென்றும் அதை எவ்வாறு நூற்கவேண்டுமென்றும் விரிவாகக்கூறினர்.

அவர்கள் உடனே ஆலவாய்த்தலம்சென்று பொற்றாமரையில் நீராடி, திருநீறுபூசி, உருத்திராக்கமாலைகளணிந்து, நித்தியகருமங்களை முடித்து, சிவநோன்புகளிற் சிறந்ததான சோமவார நோன்பைப் பேரிலிங்கத்தில் நிறைவேற்றி, இறைவனை வணங்கி மழை பெய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். உடனே ''வேந்தரே! மழைக்குக்காரணமானவன் இந்திரன். ஆதலால் விண்ணுலகேகி மழை வேண்டுமென்று அவனைத் தொழுங்கள். வானில் செல்வதற்கு உங்களுக்கு ஆற்றல் உண்டாகும்'' என்று பெருமானது திருவுளம் ஆகாயவாணியின்மூலம வெளியாயிற்று.

உடனே மூன்று அரசர்களும் வான்வழியாகத் தேவலோகம் சென்று இந்திரனது அண்மையை அடைந்தனர். இவரது வருகையைத் தேவராசன் அறிவு நோக்கால்அறிந்து மூன்று தாழ்ந்த இருக்கைகளை அவர்க்கு ஏற்படுத்தியிருந்தான். சோணும் சோழனும் முன்னதாகவே சென்று இந்திரனை வணங்கி அவன் காட்டிய இரண்டு இருக்கைகளில் அமர்ந்தனர். பாண்டியமன்னனேவென்றால் இந்திரனையும் வணங்காது, அவன் தந்தாழ்ந்த இருக்கையையும் ஏற்காது, உயர்ந்திருக்கும் இந்திரனது இருக்கையில்போய் அமர்ந்தான். தேவராசன் அவர்களை வரவேற்று அவர்களோடு அளவளாவினான். சோணும் சோழனும் அதற்குத்தகுந்தாற்போல் அவனோடு வேடிக்கையாகப்பேசினர். வந்தகாரணம் யாதென இந்திரன் வினவ, அவர்கள் தங்களது நாடுகளில் மழையில்லாமற்போய் மக்கள்வருந்துவதாகச்சொல்லி, மழைதரவேண்டுமென்று விண்ணப்பித்தனர். அதன் பேரில் இந்திரன் அவ்விருவரது நாடுகளில் மழைபொழியும்படியாய் மேகங்களைக் கட்டளையிட்டான். பாண்டியனை செருக்குக்காரணமாய்த் தன் குறையை அவனிடம் தெரிவிக்கவில்லை. இந்திரன் அழுக்காறடைந்தான். ஆனால் அதைக் காட்டிக்கொள்ளவில்லை. சோணுக்கும் சோழனுக்கும் இலேசான ஆபரணம் முதலான வரிசைகளையளித்தான். பாண்டியனுக்கு வேண்டுமென்றே தாங்கமுடியாத பளுவான ஆபரணத்தைக் கொடுத்தான். ஆனால் பாண்டியன் அதை ஒரு மலர்மாலைபோல் எளிதாக அணிந்தான். பொறுமையுற்ற தேவராசன், அதை வெளிக்காட்டாது, பாண்டியனை நோக்கிப் 'பாண்டிய மன்னனே! நீ ஓர் பெரியவன். உக்கிரமூர்த்தியான சிவனது வழித்தோன்றினவனென்பது திண்ணம். இனி உனக்கு ஆரம் பூண்ட பாண்டியராசன் என்ற புகழ் உண்டு.'' என்று கூறினன். பின்னர் சிறிதுநேரம் இருவரும் இனியவார்த்தைகள் பேசினர். அதன்பின் இந்திரன் அந்த மூன்றுவேந்தரையும் அவரவரது நாட்டிற்கு அனுப்பினன். சோசோழமன்னரது இராச்சியங்களில் மாரிக்காலத்தில் போதுமான மழை பெய்து கணி சமாகத்தானியங்கள் விளைந்தன. பாண்டியநாட்டிலே ஒரு சொட்டு மழைகூடக்கிடையாது. பாண்டியராசன் வெட்கினன். ஆனால் மனம் தளரவில்லை.

இவ்விதமாக இந்திரனுக்கும்உக்கிரபாண்டியனுக்கும் மனதிற்குள் ஓர் கசப்பு இருந்துகொண்டேயிருந்தது. இந்நிலையில் ஒருநாள் உக்கிரபாண்டியன் வேட்டைக்குப் புறப்பட்டுக் காடுகளில்புலிபோன்ற கொடிய விலங்குகள் அகப்படாமையால் பொதியமலைக்குச்சென்றான். அங்கு விலங்குகளைத் தேடித்திரியுங்கால் மலையின் பக்கங்களில் தங்கியிருந்த புட்கரம் ஆவர்த்தகம் முதலான நான்கு மேகங்களைப் படைவீரரைக்கொண்டு பிடித்

துக் கைதுசெய்து விலங்குமாட்டிச் சிறையிலடைத்தான். இதையறிந்த இந்திரன் சினமுற்றுப் போருக்குக் கிளம்பிவிட்டான். மிக்க வலிமை படைத்த பாண்டியராசன் உடனே வெளியேறித் திருக்கோயில் சென்று சுயக்கண்ணியம்மையையும் ஆலவாய்மூர்த்தியையும் அன்புடன் வலம்வந்து துதித்து கன்முய் வணங்கி மீன்கொடியோடு இலங்கும் விமானத்திலேறி இந்திரனே எதிர்நோக்கி ஆகாயத்தில்சென்முன்.

இந்திரனுக்கும் பாண்டியராசனுக்கும், போர் நிகழ்ந்தது அப் பொழுது இருவரும் ஒருவரையொருவர் வெல்ல முயற்சிக்கையில் அனல் அத்திரத்தை நீர் அத்திரத்தாலும், நீர் அத்திரத்தைக் காற்று அத்திரத் தாலும், காற்றை நாசத்தாலும், நாகத்தைக் கருடாத்திரத்தாலும், கருடாத் திரத்தை மகாபாசத்தாலும், மகாபாசத்தை யானை அத்திரத்தாலும், யானை அத்திரத்தை சிங்க அத்திரத்தாலும், சிங்க அத்திரத்தை சரப அத்திரத்தா லும் இவ்வாறு ஒவ்வொரு அத்திரத்தையும் அதற்கு எதிரி அத்திரத்தால் மடக்கிப் பின்னர் ஆயுதப்போரும் அதன்பின் விற்போரும் புரிந்தனர். பிறகு முத்துச்சண்டை கடைபெற்றது. ஒவ்வொருமுத்தும் இடிவீழ்ந்தாற் போல் வலியை உண்டாக்கியது. ஆயிரம் கண்களுடைய இந்திரனது உட லில் பாண்டியராசன் விடுத்த குத்துகள் சொல்லொணாத் துன்பத்தை விளை வித்தன. கடைசியாக இந்திரன் வச்சிராயுதத்தை வீசினான். அதற்கு எதிராக அஞ்சா நெஞ்சம்படைத்த பாண்டியமன்னன் தன்னிடமிருந்த வேலாயுதத்தைப் பன்முறை சுழற்றி வேகமாய் எறிந்தான். அது வச்சிரா யுதத்தை வீழ்த்தித் தேவராசனது முடியையும் தகர்த்தது. உடனே அவன் தனக்குள்ளாக "இந்தப் பாண்டியமன்னனை வெல்வது என்பது முடியாத காரியம். இவன் சோமசுந்தரமூர்த்தியிடம் பேரன்புகொண்டவன். இவன் பெருமானது திருக்குமாரனே" என்று நினைந்து வெட்கத்துடன் தேவ லோகம் திரும்பினான்.

உக்கிரபாண்டியன் நால்விதப்படைசூழ வெற்றிமுழக்கத்துடன் மதுரைநகர் வந்து தனது மாளிகைக்குள் சென்முன். அங்கு ஆரத்தி எடுத்தார்கள். இந்திரன் முடியிழந்து வெறும் சிரத்துடன் நீலகுனிந்து அமராவதிநகருள் புகுந்தான் பெருமானது அருளால் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்று கருதினான். பின்னர் சிறையிலிருக் கும் மேகங்களை விடுவித்தல்வேண்டி பாண்டியமன்னனுக்கு ஓர்கடிதம்எழுதி அதன்மூலம் அனுப்பினான். கடிதம் வந்துசேர்ந்ததும் பாண்டியன் அதைப் படிக்கச்சொன்னான். அதில் 'பாண்டியமகாராசாவே நீர் பிக்கப் பெரியவர். பிரபுசக்தி, உற்சாகசக்தி, மந்திரசக்தி இம்மூன்று சக்திகளும் உம்மிடத் திற்போல் வேறு யாரிடத்திலும் விளக்கப்பெறவில்லை. என்னைச்சார்ந்தவர் களான அந்த நான்குமேகங்களையும் விடுதலைசெய்து என்னிடம் அனுப்ப வேண்டிக்கொள்கிறேன். இனிமேல் தக்ககாலங்களில் உமது இராச்சியத் தில் மழைபெய்யும் என்று கண்டிருந்தது. அதைக்கேட்டவுடனே நீதி சாத்திரம் கற்ற அரசன் மழைக்கு யார்பிணை? என்று உரைத்தான். உடனே, நான்தான்பிணை என்று மொழிந்துகொண்டு ஒரு மனிதன்முன் வந்தான். இந்தச்செயல் இந்திரனுக்கு மிகுந்த உவகையை அளித்தது. அந்தமனிதன் ஏழு கிராமத்தலைவர்களில் ஒருவன். பெரும் சிவபோசன்.

அன்பிலும் ஆற்றலிலும் பெயர்பெற்றவன். ஒண்டிவீரன் எனப்பெயர். பெயருக்கேற்ற செயலுடையவன். பின்னர் மன்னன் அந்த நான்கு மேகங் களையும் விடுவித்தான். அதுமுதற்கொண்டு பாண்டியநாட்டில் நல்லமழை. எங்கும் செழிப்பு. மக்களின் களிப்பு.

இத்தத்திருவிளையாடல் எவ்விதத் துன்பத்தையும் நீக்கும். மழை தரும். சுகம்தரும்.



பத்தொன்பதாவது அத்தியாயம்.

சோமவாரநோன்பு நோற்றல் முறை.



இக்ஷ்வாகுபாண்டிய ராசன் சோமவாரவிரதத்தை மேற்கொண்டும் காள்தோறும் காலையிலும் மாலையிலும் ஆலவாய்மூர்த்தியைத் தொழுதும் செல்வங்களனேத்தையும் பெற்றுவந்தான். சோமவார விரதத்தை ஒழுகவேண்டியமுறை இங்குக் கூறப்படுகின்றது.

சோமவாரவிரதத்தை அனுட்டித்தால் சாரூப்பிய முத்தியை அளிக்கும் சிலனன்பு எளிதில் ஏற்படும். தெய்வங்களுக்குள் உமாதேவி போல் விரதங்களுக்குள் சோமவாரவிரதம் சிறந்தது. ஆற்றலுக்குத்தக்க வாறு அந்தப் பெரிய விரதத்தை அனுட்டிக்கப் பிணிகள் நீங்கும் அதே போல் எதிரிகள் மடிவர். அமாவாசையுடன்கூடிய சோமவார பூசையானது அளவிடமுடியாத பயனைப் பயக்கும். மேரு முதலிய சிவத்தலங்களில் செய்யும் சோமவாரவிரதத்திலும் ஆலவாய்ச் சிவத்தலத்தில் புரியும் விரதம் கோடிமடங்கு பயனை அளிக்கவல்லது. ஆதலால் தனதுதலத்தை விரும்பும் ஒவ்வொருவனும் ஆலவாயில் பேரிலிங்கத்தின் முன்னிலையில் சோமவார விரதம் செய்யவேண்டும். உமையுடன்கூடி இருத்தலால் இறைவனுக்குச் சோமன் எனப்பெயர். அந்தநாளுக்குச் சோமவாரம் எனப்பெயர். அதாவது இறைவனது நாள் என்பது பொருள். அந்நாளில் முழுப்பட்டினியோ, அல்லது இரவில்ஒருபோது உண்டியோ இவற்றுள் எதாவது ஒருமுறையைக் கைக்கொண்டுவிடாது கட்டுப்பாடாக ஒழுகவேண்டும். அப்படிச் செய்தால் பயன் கண்டிப்பாய்க் கிடைக்கும். மிகப் புனிதமான சோமவாரத்தன்று இறைவனுக்காகச் செய்யப்படும் எந்த நற்காரியமும் மட்டற்றபயனைத்தரும்.

கார்த்திகைமாதத்திலோ அல்லது மார்கழிமாதத்திலோ அல்லது வேறு எந்த மாதத்திலோ மலம் முதலான குற்றமில்லாதமாதத்தில் விரதத்தைத் தொடங்கவேண்டும். சோமவாரவிரதம் அனுட்டித்தற்குச் சாந்திரமானப்படி மாதங்களைக் கணக்கிடுதல் நலம். எந்தமாதத்தில் விரதம் தொடக்கப்படுகின்றதோ அந்த மாதத்தில் முதலாம் சோமவாரத்தன்று தொடங்கவேண்டும். விரதம்பூண்பவன் அன்று காலையில்எழுந்து ஆலவாயில் எழுந்தருளியிருக்கும் பராசக்தியான கயற்கண்ணியுடன் ஆலவாய்ப்பெருமானை அன்புடன் மனத்தில் நினைக்கவேண்டும் பின்னர் பல் துலக்குதல் முதலான நித்தியகருமங்களை முடித்து அதன்பின் குளித்தல்முதலான நைமித்திக கருமங்களை தொடங்கவேண்டும்.

குளிக்குமுன்கையில் பவித்திரம்பூண்டு சங்கற்பம்செய்து சாம்பல், வில்வமரத்தடியிலிருக்கும் மண், சாணம், எள், தருப்பைப் புல் இவற்றைச் சிரத்தில் வைத்துக்கொண்டு பொற்முமரை நீரின்முன்பு நின்று, சுந்தரேசா, என்று துலங்கும் மந்திரங்களைச் சொல்லி, அனுமதிபெற்று, உருத்திரம்

முதலான வேதமந்திரங்களை முணுத்துக்கொண்டு நீராடவேண்டும். பின்னர் வெண்மையான ஆடையணிந்து மனத்தில் அமைதி நிலவ, பற்று, வெகுளி, ஆணவம், வெறுப்பு, கோட்சொல்லல் முதலிய தீயகுணங்களற்று, மல்லிகை முல்லை இருவாட்சி தாமரை முதலான மலர்களாலும், முழுதான வில்வஇலைகளாலும், அக்கதை, எள் இவற்றாலும் இறைவனை ஆலவாய்ப் பெருமானை வழிபடவேண்டும். தீக்கைபெறாத பிராமணரும், பேரிலிங்கத்தை கோயில் வழிபடக்கூடாத மற்றோரும் சிவத்துவிசர்களிடம் தொழுதற்பண்டங்களைக் கொடுத்து வழிபாட்டை நடப்பிக்கவேண்டும். அல்லது தங்களுடைய பூசை மூர்த்திகளில் ஆலவாய்மூர்த்தியை ஆவாகனம் செய்து வழிபடவேண்டும். ஒருவேளை உண்டியருந்துவோன் பகலில் பூசைசெய்ய வேண்டும். மற்றவன் இரவில், மந்திரங்களுக்குள் மேலானது ஐந்தெழுத்து; இலை பூக்களில் மேலானது வில்வம்; ஆதலால்அறிவாளி இவ்விரண்டையும் கொண்டு பிறைசூடியை வழிபடவேண்டும். சிவபெருமானது திருவாயிலிருந்து ஏழுகோடி மகாமந்திரங்கள் வெளிவந்தன; அவை யாவும் ஐந்தெழுத்து மந்திரத்தின் பதினேழில் ஒன்றிற்கு நிகராகா. தீக்கை பெற்றவனை அல்லது தீக்கை பெறாதவனை, முறைப்படியோ அல்லது முறையில்லாமலோ ஐந்தெழுத்தைச் செபித்தால் அவன் சிவகணங்களிலொருவனாவது திண்ணம். பிராம்மணக்கொலை முதலான பெரும் பழிகள் இயற்றியவனும் ஐந்தெழுத்து செபத்தால் விடுதலைபெறுவான். ஐந்தெழுத்தினும் சிறந்தது உலகத்தில் பிரிதொன்றுமில்லையென்று உணர்ந்து அறிவுடையோருவன் அதைச் செபித்தல்வேண்டும். அந்த மந்திரத்தைப் பெண்பாலாக்கி 'நமச்சிவாயை' என்று கூறினால் அது தேவியினது மந்திரமாகவும் ஆய்விடும். ஆகவே இந்த மந்திரத்தைக்கொண்டே இறைவி இறைவன் இருவரையும் பூசிக்கலாம். ஐந்தெழுத்து மந்திரத்தைச் சொல்லி வில்வ இலைகளைக்கொண்டு சிவபூசை புரிபவன் தெய்வத்தன்மை எய்துகின்றான். வில்வமரத்தைப் பார்த்தலாலும் தொடுதலாலும், வழிபடுதலாலும் அன்றுசெய்த பாவம் தொலையும் இறக்கும்தருவாயில் ஒருவன் வில்வமரத்து மண்ணைப் பூசிக்கொண்டால் மேலான நிலையையடைவான். பிராம்மணக்கொலைபுரிந்தவன் பன்னிரண்டுநாட்கள் வில்வமரத்தடியிலிருந்து பட்டினிகிடந்தால், அந்தக் கொலைப்பழி நீங்கும். வில்வமரத்தடியில் மூன்றுநாட்கள் உணவின்றிச் சிவபெருமானது திருநாமங்களைச் செபிக்கக் கருக்கொலைபழி விலகும். சோமவாரத்தன்று சோமசுந்தரக்கடவுளைச் சிதைவுறாத வில்வஇலைகளால் பூசிப்பவன் பிரம்மகொலைப் பாவத்திலிருந்தும் விடுபடுவான். தாய்க்கொலை, தந்தைக்கொலை முதலான எவ்விதமான பெரும்பழிகள் செய்தவனும் வாய்பேசாது வில்வஇலைகளால் மதிசூடியைப் பூசித்தால் அவற்றினின்றும் விடுபட்டு நற்கதிபெறுவான். உலர்ந்தவையோ அல்லது பழையவையோ எப்படியிருந்தபோதிலும் வில்வஇலைகளால் மலைமகள் மணாளனைப் பூசிப்பவன் பாவங்களனைத்திலிருந்தும் மீளுவான். பூச்சியரித்தவையும், வண்டுகள் துளைத்தவையும், சிலந்திநூல் படிந்தவையும், தானே உதிர்ந்தவையுமான வில்வஇலைகள் பூசைக்கு ஆகாதவை. ஆதலால் இறைவனை வில்வஇலைகளால் அவசியம் பூசிக்கவேண்டும்.

வழிபாடு தவங்குமுன் கைகால்களைக்கழுவி, திருநீறு உருத்திராக்கம் அணிந்து, பிராணயாமம் செய்து, சங்கற்பம் புரிந்து, புண்ணியாகவாசனம் நிறைவேற்றி, விநாயகக்கடவுளைத் தொழுதுத் தடைகள் நீங்க

வேண்டுமென்று வேண்டிக்கொண்டு, உளமொருபாகனே வணங்கி, இறைவனது முன்னிலையில் கைகூப்பிநின்று 'சோமசுந்தர' என்ற மந்திரத்தைச் சொல்லிப் பூசைசெய்தற்கு உத்தரவு பெற்றுத்தியானம் முதலான வரிசைகளுடன் இறைவனை வழிபடவேண்டும்.

"கோடிக்கதிரவரது ஒளியுடையனும், கோடிமதிகள்போன்று குளிர்ந்தவனும், பிரம்மன் முதலான ஐந்துபிரேதங்களின்மீது வீற்றிருப்பவனும், ஐந்து முகங்களுடையவனும், பெரிதிலும் பெரியவனும், பத்துப் புயங்கள், பதினைந்து கண்கள் இவற்றையுடையவனும், சூலம், கோடரி, கத்தி, வச்சிராயுதம். அபயம் இவ்வைந்தையும் வலது கைகளிலும், கயிறு, பாம்பு, தாறட்டி, மண், மழு, இவ்வைந்தையும் இடது கைகளிலும் ஏந்தியிருப்பவனும், நாகப்பூணூலுடையவனும், திவ்வியமான ஆடை, மணிகள் மலர் இவற்றைப் பூண்டவனும், முடி, முத்துமாலை, தோள்வளை குண்டலங்கள் இவற்றை அணிந்தவனும், பேரிறைவனும், மனோன்மணி தேவியுடன் கூடியவனும் பதினாறுபிராயத்தானும், சுந்தரவடிவனும், உலகத்தின்குருவும் சோமஸ்கந்தனுமான சோமசுந்தர மூர்த்தியைத்தானே தோன்றியதான பேரிலிங்கத்தில் தியானம் செய்கின்றேன்" என்று பொருள்படும்படியான மந்திரங்களைச் சொல்லித் தியானம்செய்து பூக்களால் பூசித்துத் தியான உபசாரத்தைச் சேர்ப்பிக்கவேண்டும்.

"இறைவனே! மனோன்மணிதேவியுடன் தயவுசெய்து எழுந்தருள வேண்டும், என்று ஆவாகனம். "உலகவடிவனே! கடம்பவன நாதனே! உமக்கு வணக்கம். இரத்தினமயமான சிங்காதனம் போடுகின்றேன் என்று ஆசனம். "பிஞ்ஞக போற்றி! உமையுடன் கூடியவனே போற்றி! கலன்களனைத்திற்கும் காரணனே போற்றி! ஆலவாய்ப்பெருமானனே உமக்கு இதோ கால்கழுவுநீர்" என்று பாத்தியம். "உலகம் முழுமைக்கும் அடிப்படையே! அடிப்படையற்றவனே! பேரிறைவனே! ஆசமனம்தருகின்றேன்" என்று ஆசமனம். "விலமதிக்கமுடியாத கலன்களைப் பயக்குபவரும், காலனைச் சிதைத்தவரும், துவாதசாந்தத்தலத்தில் உறைபவருமான உமக்கு அருக்கியநீர் அளிக்கின்றேன்" என்று அருக்கியம். "பார்த்தவுடனேயே அனைவர்க்கும் எல்லாவிருப்பங்களையும் தருபவரே! தேவர்களால் பூசிக்கப் பெற்றவரே! உமக்கு பஞ்சாமிருத ஸ்நானம் அளிக்கின்றேன் "என்று பஞ்சாமிருதஸ்நானம். "ஆடையற்றவனே! உமக்கு வணக்கம். அரையில் யானைத்தோலையும் மேலே புலித்தோலையும் அணிந்திருக்கும் உமக்குஇதோ இரண்டு ஆடைகள் என்று வஸ்திரம். "அசைவதும் அசைவற்றதுமான பொருள்களியாவும் கோர்த்திருக்கின்ற இரத்தினமயமான நூலே! நாகப் பூணூலுடைய உமக்குப் பூணூல் எற்பிக்கின்றேன். என்று யக்ஞோபவீதம். நாகங்களை ஆபரணங்களாகவுடைய ஆலவாய்மூர்த்தியே! உமக்கு ஆபரணம் சேர்ப்பிக்கின்றேன் என்று ஆபரணம். "கறுமணம்கமழும் மேனியரே! நிலத்திருக்கும் பயன்களைக்கொடுப்பவரே! அந்தகஅவுணனை முறித்தவரே! உமக்கு மணங்கள் சாத்துகின்றேன் என்று கந்தம். "தேவர், கந்தருவரால் வணங்கப்பெற்றவரே! உமக்கு வெளுப்பான அக்கதைகள் சேர்ப்பிக்கின்றேன். ஏற்றுக்கொண்டு, வேண்டும் வரங்களைத்தரும் என்று அக்ஷதை. கதிரவன் திங்கள், அனல் இவற்றை கண்களாயுடையவரே! மாலனைவென்றவரே! திரிபுரமெரித்தவரே! உமக்கு மலர்கள் என்று புட்பம். பின்னர்

இறைவனது ஆயிரம் திருநாமங்களைச்சொல்லி வில்வங்களாலும் மலர்களாலும் அருச்சனை. பிறகு இந்திரனது பழியைப்போக்கினவரே! முக்காரணங்களுக்கும் காரணனே! உமக்கு இந்தப்புகை என்று தூபம். சுடர்மயமான இலிங்கவடிவனே! ஒளிகட்கெல்லாம் மூலமே! அறிவு ஒளிதருபவரே! உமக்கு இதோ ஒளி என்று தீபம். சுந்தரமூர்த்தியே! அறுசுவையுடையதும், ஊறுகாய்களோடு கூடியதும், நெய், பழம், பால், வடை இவற்றுடன் சேர்ந்ததுமான இந்த உண்டிப்பொருள்களை ஏற்கவேண்டும் என்று நைவேத்தியம். குளிர்ந்த தெளிந்த மணமுள்ள இந்தக் குடிநீரைக்கொடுக்கின்றேன், இறைவனே! ஏற்றுக்கொள்ளும் என்று பானீயம். ''சுந்தரமூர்த்தியே! பச்சைக்கர்ப்பூரம் கலந்த பாக்குப்பொடியுடன் இதோ வெற்றிலை'' என்று தாம்பூலம். 'பேரிறைவனே! பெரும்பழிகள் தீருமபொருட்டும் சிறந்த பயன்கள் கிட்டும்பொருட்டும் உம்மை வலம் வருகின்றேன்'' என்று பிரதட்சிணம். ''சிவனே போற்றி! உமையொடுகூடியவரே போற்றி! சம்புவே போற்றி! சங்கரனே போற்றி! ஆலவாய்மூர்த்தியே போற்றி! சத்து, சித்து, ஆனந்த வடிவனே போற்றி!'' என்று நமஸ்காரம்.

பின்னர் அங்கபூசை—பவானிக்கு வணக்கம்! பவனுக்கு வணக்கம் என்று இறைவி இறைவனது தாள்களை. உலகத்தின் தாய்க்கு வணக்கம்! உலகத்தின் தந்தைக்கு வணக்கம் என்று இருவரது கணைக்கால்களை. மிருடானிக்கு வணக்கம் மிருடனுக்கு வணக்கம் என்று முழங்கால்களை. உருத்திராணிக்குவணக்கம் உருத்திரனுக்கு வணக்கம் என்று தொடைகளை. காளிக்கு வணக்கம், காலனை உதைத்தவனுக்கு வணக்கம் என்று இடுப்பிற்குக்கீழே. மலையரசன்மகளுக்கு வணக்கம், நாகாபரணமுடையவனுக்கு வணக்கம், என்று தொப்புள்களை. துதியில் பிரியமுடையவளுக்கு வணக்கம்! துதிக்கப்பெறுபவனுக்கு வணக்கம் என்று தனங்களை. பவக்கினிக்கு (பிறப்பை ஒழிக்கின்றவன்) வணக்கம். பவநாசனுக்கு வணக்கம் என்று புயங்களை. கம்புகண்டிக்கு (அழகான கழுத்துடையவள்) வணக்கம். கம்பு கண்டனுக்கு வணக்கம் என்று முகங்களை. மாயைக்கு வணக்கம் மகேசுரனுக்கு வணக்கம் என்று முகங்களை. லலிதைக்கு வணக்கம் லாசியப் பிரியனுக்கு வணக்கம் (லாசியம்—ஆடல்) என்று நெற்றிகளை. சிவைக்கு வணக்கம் சிவனுக்கு வணக்கம் என்று சிரங்களை. பிரணதார்த்திகரைக்கு வணக்கம் (அண்டியவர் துயர்தீர்க்குபவன்) பிரணதார்த்திகனுக்கு வணக்கம் என்று எல்லா அங்கங்களையும் பூசிக்கவேண்டும்.

மறுபடியும் தேவி இறைவன் இவரது திருப்பெயர்களை நான்காம் வேற்றுமையில் ஓம் என்பதை முன்னும் நம என்பதைப் பின்னுமாகச் சேர்த்துப் பாதம்முதல் சிரம்வரையுள்ள அங்கங்களின் பெயரோடு பூசயாமி என்ற சொல்லைச்சேர்த்துப் பூசிக்கவேண்டும். பின்னர் அறுகம்புல் பூசை. புல்லுடன் வில்வ இலைகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். மகாதேவாய நம,, மகேசாய நம., சங்கராயநம., விருஷபத்துவசாயநம, (இடபக் கொடியோன்) சூலினேநம, காமாந்தகாயநம, (மாரனை மாய்த்தவன்,) தேவதேவாயநம, சிரீகண்டாயநம, ஈசுவராயநம, அம்பிகாநாதாயநம, ருத்திராயநம, சிவாயநம, என்று இறைவனது பன்னிரண்டு பெயர்களையும் சொல்லி அருச்சிக்கவேண்டும்.

இவ்வாறு இறைவனைவழிட்ட, விரும்பியனயாவும் கிட்டும், ஆயுள், பிணியின்மை எற்படும். அகாலத்தில் சாவுவராது. மேற்கூறிய பூசைக்கும் பின் "உமையுடன் கூடிய இறைவனே! உலகத்துக்கு நாதனே! எல்லாச் செல்வங்களையுமளிப்பவனே! எனது வறுமையைப்போக்கி விருப்பங்களை நிறைவேற்றும்! நிறைவேற்றும்" என்று வேண்டிக்கொள்ளவேண்டும். பின்னர் பவ, சருவ, ஈசானசுபதி, ருத்திர, உக்கிர, பீம, மகத் என்ற எட்டுத் திருநாமங்களையும், சிவ, ருத்திர, பசுபதி, நீலகண்ட, மகேசுவர, அரிகேச, விருப்பாட்சா, கபர்த்தி, பிரமதாதிப, ஹர, சம்பு, பிநாகி, சங்கர, சந்திரசேகர, ஸமஷ்டிவித்யாகரீசர, ஸதாசிவ என்றதிருநாமங்களையும் சொல்லி அருச்சனை செய்யவேண்டும். பின்பு சிவபெருமானே! ஆகாயம் திசைகள் இவற்றை உடலாயுடையவனும், கிரகங்கள் நட்சத்திரங்கள் இவற்றை மாலையாயுடையவனும், தேவர் சித்தர் இவர்களுக்கு உறைவிடமானவனுமான உமக்கு அருக்கியம் விடுகின்றேன்" என்ற பொருளுடைய மந்திரத்தைச் சொல்லி மூன்று முறை அருக்கியம் தரவேண்டும். அதன்பின் சோமசுந்தர மூர்த்தியை நோக்கி "பெரும் தெய்வமே! யான் செய்தவற்றில் கூடுதல் குறைவு இருக்கலாம். அருளுடன் யாவற்றையும் நிறைவுடையதாகச் செய்ய வேணும். இடைவிடாது யான் ஆயிரக்கணக்கான குற்றங்களைப் புரிகின்றேன். அவையனைத்தையும் பொறுத்துத் தந்தை புதல்வனைப்போல் என்னைக் காத்தருளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டு பூசையை முடிவித்துக் கொண்டுவரவேண்டும். வித்தை விரும்புவோன் வித்தையையும், செல்வம் விரும்புவோன் செல்வத்தையும், புதல்வனை விரும்புவோன் புதல்வனையும், வெற்றி விரும்புவோன் வெற்றியையும், இராச்சியம் விரும்புவோன் இராச்சியத்தையும், வீடு விரும்புவோன் வீட்டையும் அடைவான். உலகத்தில் எதை எதை விரும்பினாலும் அது கிட்டுவது திண்ணம்.

சோமவாரவிரதத்தின் அனுட்டான முறையைப் படிப்போரும் கேட்போரும் பாவங்கள்நீங்கிப் பேறுகளைப்பெறுவர்,



இருபதாவது அத்தியாயம்.

சோமவாரநோன்பு முடித்தல் முறை.

சோமவாரவிரதத்தை எடுத்துக்கொண்டவர் தமதுபொருள் நிலைமைக்கேற்ப சிலகாரியங்களாச் செய்யவேண்டும். சோமவாரத்தன்று சோமசுந்தரமூர்த்தியை வெண்மையான ஆடைகளாலும், மணப் பண்டங்களாலும், மலர்களாலும், நைவேத்தியங்களாலும் விசேடமாக வழிபட வேண்டும். நேர்மையாக ஈட்டிய பொருளாக்கொண்டு வேறுபல வரிசைகளையும் செய்யலாம். தியவழியில் கிடைத்த பொருளை விலக்கிவிடவேண்டும். சோமவாரத்தன்று இறைவனது திருமாளிகையை மெழுகிச் சுத்தம் செய்பவன் நல்ல பயனை அடைவான். அந்தகாளில் பலவிதத் தூணிகள் கட்டிக் கோயிலை அழகுசெய்பவனிடம் இறைவனுக்கு மிகுந்த அன்பு அந்தகாளில் எட்டு யானைகளால் தாங்கப்பெறும் பெருமானது கருப்பக் கிருகத்தை உள்ளும் புறமும் நன்றாய்த்தேய்த்துக் கழுவி சந்தனகுழம்புகள் பூசி மணமூள்ள புகைகள் படும்படிசெய்தால் பாவங்கள் யாவும் தொலைத்து விருப்பங்களனைத்தும் கைகூடும். அந்தகாளில் ஆலவாய் இலிங்கத்திற்கு அன்புடன் எண்ணெய்காப்போ அல்லது நெய்க்காப்போ சாத்துகின்றவனது செல்வங்கள் தழைக்கும். பஞ்சாமிருத ஸ்நானம் செய்துவைப்பவன் ஏழுபிறப்புகளில் செய்த பாவங்களிலிருந்து விடுபடுகிறான். பால் அபிஷேகம செய்கின்றவன் எதிரிகளேவென்று பேறுகளனைத்தையும் எய்துவான். அந்தச் சிறந்தகாளில் மூர்த்திக்குத் தயிர் அபிஷேகம் செய்தால் நற்குணங்களேற்பட்டு விருப்பங்கள் நிறைவுறும். காராம்பசு நெய்யினால் அபிஷேகம் நடத்த, இம்மையில் சுகங்களேத்துய்த்து மறுமையில் இறைவனது சாரூப்பியம் பெறலாம். தேன் அபிஷேகம் செய்தால் மிக்க மாண்புபெற்று எல்லோர்க்கும் மேலாக விளங்கலாம். சர்க்கரையால் அபிஷேகம் செய்ய, வெற்றிகிடைக்கும். கருப்பஞ்சாற்றபிஷேகம் செய்பவன் சக்கரவர்த்தியாவான். இளநீர் அபிஷேகம்செய்தால் விரும்பியதெல்லாம் கிடைக்கும். வாழை, மா, முந்திரி, பலா, இந்தப் பழங்களோடு வெல்லம் கலந்து அபிஷேகம் செய்தால் பூமியை ஆளலாம். பன்னீரபிஷேகத்தின் பயனைத் துயர்கள் நீங்கிச் சுகம்பெறலாம். அந்தச் சோம வாரத்தன்று உருத்திர மந்திரங்கள் செபித்த நீரால் அபிஷேகம் செய்தால் எல்லா விருப்பங்களேயும் எய்தலாம். அன்று மூர்த்திக்குச் சந்தனக்காப்பு சாத்தினால் எப்பொழுதும் சுகம்பெறலாம்.

சோமவாரத்தன்று மூர்த்திக்குப் பலவகையான ஆடை ஆபரணங்கள் சாத்திமலர் மாலைகள்சூட்டி வழிபட்டால் செல்வவான் ஆகலாம். அந்தகாளில் இறைவனுக்கு வில்வார்ச்சனை நடத்தினால் நீண்டஆயுள், உடல் வலிமை, செல்வம் பசுக்கள் முதலியன கிடைக்கும். சோமவாரத்தன்று நெய்புடன் கலந்த சாம்பிராணிப்புகை மணத்தை இறைவனுக்கு ஏற்பித்தால் செய்தகுற்றங்களெல்லாம் மன்னிக்கப்பெறும். நெய்விளக்கேற்றினால்

நிலையான செல்வம்பெற்று இலங்கலாம். தின்பண்டங்களுடன் நைவேத்தி யம் கொடுத்தலால் அரசனுகலாம். சோமவாரத்தன்று இறைவனுக்கு பச் சைச்கர்ப்பூரத்துடன் தாம்பூலம் நிவேதனம்செய்ய, அழகும் மணமும் உண் டாம். அன்று ஆலவாய்மூர்த்தியை அன்னம், பாற்சோறு, வெல்லம், சினி, எள், பூவுடன் கூடிய அருகம்முலை, முழுதாயிருக்கும் வில்வ இலை, பூக்கள்கலந்த கோதுளம், யவம், அரிசி, இவற்றுள் ஏதாவதொன்றால் நிறைத்தால் ராச்சியத்திற்குத் தலைவனுகலாம். அரிசி முதலானது எத்த னையோ, அத்தனை ஆயிரம் யுகங்கள் சிவலோகத்தில் பெருமையுடனிருக் கலாம். இலிங்கத்திற்கு முழுதும் சந்தனம்பூசி மண்முழுள்ள மலர்மாலை கள் சாத்திச் சொல்லப்பட்டிருக்கும் பூக்களால் சோமவாரத்தன்று பூசிக்க வேண்டும். இலை, பூ, பழம் முதலியவற்றோடு தவறுது அன்று செய்யும் பூசை விசேடமான பயன்களை அளிக்கும். பிக்கப் புனிதமானதாகக்கருதப் படும் நிரகணம் முதலான புண்ணியகாலங்களில் ஆலவாய்ப்பெருமானை வழி படுதலால் உண்டாகும் பெரும்பயன் சோமவாரத்தன்று செய்யப்படும் பூசையின் பயனில் கோடியில் ஒருபங்கு அளவிற்குக்கூட நிகராகாது. அதிகமாய்ச்சொல்வானேன். சோமவாரநோன்பு எடுத்துத்தன்னை கூடு மானவரை சோமசுந்தரமூர்த்திக்குப் பூசைசெய்ய, ஒருவன் மாடுகன்று நிலம் தானியங்கள் பெற்று இன்பத்துடன் வாழலாம். சோமவாரத்தன்று சகச் சிரநாம அர்ச்சனையுடன் இறைவனை வழிபட்டால் பாவங்களைக்களைந்து எதிரிகளை வெல்லலாம். அன்று பேரிலிங்கத்திற்கு விசேடமாக வலம்வரல், வணக்கம், துதி முதலியவற்றைச் செய்தால் மா சித்திகளைட்டும் கிட்டும். அன்புடன் இலைகளாலும், மலர்களாலும், பழங்களாலும், நீராலும், பெரு மானை வணங்கினாலும், எல்லையில்லாத பயன்பெறலாம். அதற்கு அன்பு தான் காரணம். பிரம்மஹத்திபுரிந்தவன், கள்குடியன், பொன்திருடிய வன், குரு மனைவியோடு சென்றவன் இவர்கள்போன்ற மாபாதகம் செய்த வரும் சோமவாரத்தன்று பேரிறைவனை வழிபட்டால் தூயவராய்விடுவர்.

சிவ நிர்மால்லியத்தை சிரத்தில் சூட்டிக்கொண்டால், ராசசூய வேள்வியாலடையும் பயனைப்பெறலாம். அவ்வாறு செய்பவன் தூய்மை யெய்தி சுகத்தையும் வீட்டையும் அடைவான். இறைவனது அபிடேக நீரில் கெங்கை முதலான எல்லாப் புண்ணியதீர்த்தங்களும் இருக்கின்றன. ஆதலின் அபிடேகமான நீரை எற்கவேண்டும். அதில் நீராடினால் பாவங் களனைத்தும் ஒழியும். ஆதலால் நிர்மால்லியத்தையும் அபிடேக நீரையும் எப்படியாவது பெறுதல் இன்றியமையாதது. அவற்றை வணங்குபவனை உள்ளம், பேச்சு, செயல் இவை தொடர்புள்ள பாவங்கள் அணுகா.

சோமவாரத்தன்று ஒருவேளைச்சாப்பாடு சிறந்தது. அதினும் சிறந்தது இரவில்மாத்திரம் சாப்பிடுதல். அதிலும்மேலானது பட்டினிகிடத் தல். அதிலும் சிறந்தது இரவு விழித்தல். அதிலும் மேலானது இரவில் நான்கு சாமங்களிலும் இறைவனை வழிபடுதல். இவ்வாறு சோமவாரநோன்பு ஐந்துவகைப்பட்டது. ஓராண்டோ, இரண்டு ஆண்டுகளோ, மூன்று ஆண்டு களோ, பன்னிரண்டு ஆண்டுகளோ, எதாம் ஒருவகையில், நோன்பு தவங் கும்பொழுது சங்கற்பித்துக்கொள்ளவேண்டும். ஆயுள் விரதமாயிருத்தல் மேலானது.

சங்கற்பித்திருந்த ஆண்டுகள் நிறைந்ததும் நோன்பை முடிக்க வேண்டும். ஆயுள்விரதம் பூண்டவன் முடிக்கவேண்டியதில்லை. நோன்பை முடிவிற்குக்கொண்டுவரும் முறை சுருக்கமாகக் கீழே காட்டப்படுகின்றது.

நோன்பின் முடிவில் வெள்ளித்தகட்டில் உமையொடுகூடிய பெருமானது பிரதிமையொன்றைச் செய்விக்கவேண்டும். குறைந்தது பத்துநிட்க இடையாவது தகடு இருக்கவேண்டும். அதற்குமேல் இருபது, முப்பது நிட்க இடை இருக்கலாம். இறைவனது உருவத்தில் மூன்றுகண்களும், மான், கோடாரி, அபயம், வரம் இவற்றை ஏந்திய நான்குபுயங்களும். சிரத்தில் பிறையும், இருத்தல்வேண்டும். இடதுபுறத்தில் ஒருகையில் கல்லாரமலரையும் மற்றொன்றை விரித்ததாகவும் வைத்துக்கொண்டிருக்கும் இரண்டு கைகளுடைய உமாதேவி இருத்தல்வேண்டும். பிரதிமை உண்டாக்கியபின் முடிவிற்குரிய சடங்குகளைத் தொடங்கவேண்டும்.

முந்தினநாளில் ஒருவேளை உண்டியருந்தி அகச்சுத்தத்துடனிருக்கவேண்டும். நோன்பு முடிக்கும் நாளான சோமவாரத்தன்று முழுப்பட்டினி. ஒன்பது முழமுள்ள பதினாறுகால் மண்டபம் ஒன்றை அமைக்கவேண்டும். அதற்கு நான்குபக்கங்களிலும் வாயில்கள் இருக்கவேண்டும். அதன்மத்தியில் ஒரு திண்ணை அமைக்கவேண்டும். மண்டபத்தில் மேற்கட்டிகள் தோரணங்கள் முதலியனகட்டி அழகுபடுத்தவேண்டும். அதன் கீழ்புறத்திலோ அல்லது வடகீழ்புறத்திலோ மூன்று அரைஞாண்களோடு கூடிய வட்டமாகவோ அல்லது சவுக்கமாகவோ ஓர் ஓமக்குண்டம் கட்டவேண்டும்.

காலையில் குளித்து, நித்தியகருமங்களை முடித்து, விரதம் முடிப்பதன், புராணம் கேட்டல் முதலானவற்றில் மீதமுள்ள நேரத்தைப்போக்கி இரவில் ஒவ்வொரு சாமத்திலும் சிவவழிபாடு செய்தல்வேண்டும். திண்ணையின்மேல் பீடத்திலிருக்கும் இலிங்கத்திலோ, அல்லது கீழே கெங்கைநீர் நிறப்பிவைத்திருக்கும் கும்பத்திலோ, அல்லது மண்டபத்திலோ வைக்கப்பட்ட பொன் முதலியவற்றால் ஆக்கிய பெருமானது பிரதிமைகளில் சோமசுந்தரமூர்த்தியை எழுந்தருளச்செய்து இறைவனைப் பூசிக்கவேண்டும். அவரது முன்னிலையில் முதலில் கூறப்பட்ட பிரதிமையையும் வைத்துப் பூசை செய்யவேண்டும். பஞ்சகவ்வியம் பஞ்சாமிருதம் முதலான நீராடல்கள் முடித்து சந்தனம் முதலிய வரிசைகளுடன் முன்கூறிய முறைப்படி பூசையை நடத்தவேண்டும். அனல் மூட்டல் முதலியவற்றை அவரவர்தம் சூத்திரப்படி நிகழ்த்தி அனலின் மத்தியில் மனத்தால் கற்பிக்கப்பட்ட இருக்கையில் உமையுடன்கூடிய இறைவனை எழுந்தருளச்செய்து சந்தனம் முதலிய வரிசைகளுடன் பூசைநடத்தி நிரியம்பக மந்திரத்தால் நூற்றெட்டு முறையும், கௌரீபிமாய என்ற இருக்குவேத மந்திரத்தால் நூற்றெட்டு முறையும் ஓமம் செய்யவேண்டும். ஓமப்பொருள் முதல் சாமத்திற்கு நெய், இரண்டாவது சாமத்திற்கு வெல்லம், மூன்றாவது சாமத்திற்கு நெய்யில் நனைத்த எள், நான்காவது சாமத்திற்குப் பாயாசம். இவ்வண்ணம் நான்கு சாமங்களிலும் ஓமம் நடைபெறவேண்டும்.

காலையில் நீராடல் முதலான நித்தியகருமங்களை முடித்து சோமசுந்தரமூர்த்தியின் பூசையை நிகழ்த்தி, நெய்புடன்கலந்த அன்னத்தால்

முன்கூறிய இரண்டு மந்திரங்களையும் சொல்லி ஒவ்வொன்றிற்கும் தனித் தனியாக நூற்றெட்டுமுறை ஓமம் செய்து ஆனந்தடங்குகளை முடிக்கவேண்டும். சிவசாத்திரங்கள் கற்றுணர்ந்த நற்குணங்கள் நிறைந்த பிராம்மணர் ஒருவரைக் குருவாக வைத்துக்கொண்டு அவர் சொல்கின்ற முறைப்படி காரியங்களை நிகழ்த்தவேண்டும். பதின்மூன்று குடங்களில் பால் நிறப்பி ஒவ்வொன்றிலும் இரண்டு வெண்நிறமான ஆடைகள் கட்டித் தரையில் வைக்கவேண்டும். பதின்மூன்று முறங்களில் அன்னம், செய், கறிவகைகள், வெல்லம், தின்பண்டங்கள் இவற்றை வைத்து அந்தமுறங்களால் குடங்களை மூடவேண்டும். இவ்வாறு செய்துவைத்துக்கொண்டு முன்கூறியகாள் முழுதும் பட்டினியிருக்கும்படி செய்விக்கப்பெற்ற நல்ல சிவனன்பர்களான பதின் மூன்று பிராம்மணர்களுக்கு சந்தனம் ஆடை முதலியன தந்து, வணங்கி, மேற்கூறிய குடங்களைக் கொடுக்கவேண்டும். அத்துடன் நோன்பு முற்றுப் பெறுவதற்காக பதின்மூன்று வெண்பசுக்களையும், குடம், செருப்பு, சொம்பு முதலியவற்றையும் அவர்களுக்கு அளிக்கவேண்டும். பின்னர் குருவிற்கு ஆடை ஆபரணங்கள் தந்து வணக்கம் தெரிவிக்கவேண்டும். தாயும் தந்தை யும் குருவிற்கு நிகராகார். ஏனெனில் குருவானவர் விரதத்தின் முறை களைக்கூறி வாழ்க்கையினின்றும் கைதூக்கிவிடுகிறார். குருவைப் பூசிக்கி றவன் உமையோடுகூடிய பெருமானைப் பூசிக்கிறவனுவான். குருவணக்கம் நடந்தபின்னர் மண்டபத்தில் வைத்து வெள்ளப்பிரதிமையின் வழிபாடு நடக்கவேண்டும். முறைப்படி அது நடந்தேறியபின் அந்தப்பிரதிமையைக் குருவிற்கு ஆடை, தட்சிணையுடன் 'சோமசுந்தராக்கடவுள் மகிழட்டும்' என்று பொருள் படும்படியான மந்திரத்தைச் சொல்லிக் கொடுக்கவேண்டும். அம் மையோடுகூடிய சுந்தரேசமூர்த்தியை எவ்வாறு வழிபடுவானே அவ்வாறே மனைவியுடன்கூடிய குருவையணங்கவேண்டும். அவருக்கு ஆடைஆபரணம் முதற்கொண்டு, யானை குதிரை இராச்சியம்வரையுள்ள எந்தப்பொருளையும் அந்தச்சமயத்தில் கொடுக்கலாம். கன்றுடன்கூடிய பால் பசுவைக் கொம் புகளுக்குத் தங்கக்குப்பி முதலான அணிகளுடன், கறப்பதற்குப் பாத்திரத் தோடு, குருவிற்குக் கொடுக்கலாம். தானியங்கள் எல்லாவற்றிலும் கூடிய அளவு தரலாம். அறிவு ஒளிதந்த குருவிற்கு விளக்குக்கொடுக்கலாம். எந்த எந்த நியமங்கள் ஒழுகப்படுகின்றனவோ அந்த அந்த நியமங்கள் முற் றுப்பெருதற்பொருட்டு சோமசுந்தரப்பெருமானை நினைந்து கொடைகள் கொடுக்கவேண்டும். இதுதான் பழமையானமுறை.

பஞ்சாமிருத நியமத்திற்குப் பசுத்தானம் செய்யவேண்டும். மலர் களின் நியமத்திற்குப் பொன்மலர் தரவேண்டும். தானியநியமங்கள் முற்றுப் பெறத்தானியங்கள் கொடுக்கவேண்டும். பழங்களைச்சார்ந்த நியமத்தில் பொற்பழங்களை ஈதல்வேண்டும். நெய்யைச்சார்ந்த நியமத்தில் நெய் விளக் குக் கொடுக்கவேண்டும். எந்தவகையான நியமத்திற்கும் பொன்னையோ அல்லது பசுவையோ கொடுத்தால் விரதம் முற்றுப்பெற்றுவிடும். இவ்வாறு செல்வநிலைக்கேற்றபடி விரதத்தை முடித்தல்வேண்டும். அப்படிச் செய்யப் பயன் எற்படும். ஆயுள் முழுதும் நோன்பு பூண்டவர்க்கு முடிப்பதென்பது கிடையாது. விரதத்தை முடித்தபின்னர் உறவினருடனும் பிராம்மணருட னும் உண்டியருந்த வேண்டும்.

முறைப்படி சோமவாரநோன்பு நூற்றுமுடித்தவன் எல்லா உலகங்களிலும் மதிக்கப்பெற்று சுவர்க்கலோகத்தில் எத்தனையோ கோடி யுகங்கள் அப்சரமகளிருடன் இன்புற்று முடிவில் வீடு எய்துவான். முன்னுள்ள் கிருஷ்ணபரமன், பிரமன், தேவர், அசுரர், கந்தருவர், சாரணர், முனிவர், மனுக்கள், தெய்வநம்பிக்கையுள்ள புனிதமான மனிதர் இவர்கள் எல்லோரும் இந்தச் சோமவாரநோன்பை நோற்றிருக்கின்றார்கள். இதைத் தீயவனுக்கும், நம்பிக்கையற்றவனுக்கும், சாத்திரம், அறம் இவற்றை இகழ்பவனுக்கும், இழிந்து பேசுபவனுக்கும், ஆசான், மறைகள், பிராம்மணர், நோன்பு நூற்பவர், அலை, தெய்வம், தீர்த்தம் இவற்றை இகழ்ச்சிபுரிபவனுக்கும் கொடுத்தல்கூடாது. நோன்பு தொடங்குபவன் எக்காரணம் பற்றியும் அதை விடுதல்கூடாது. நோன்பைப் பாதியில்விடுத்தல் பெரும் குற்றமென்று மனத்து அதை விடாமலிருக்கவேண்டும். குருவின் அண்மையில் எப்பொழுதும் நோன்பு நோற்கப்படவேண்டும். இல்லையேல் அது பயனற்றுப்போம். எந்தக் காரியங்களிலும் ஐயம் ஏற்படுதல் இயல்பு. ஆதலின் குருவை வைத்துக்கொண்டே காரியங்களை நிகழ்த்துதல் நலம்.

சோமவாரநோன்பின் சிறப்பு என்னவெனில், அதை நோற்கும் ஆணை பெண்ணை ஆயிரக்கணக்கான பிறப்புகளில் துயரம் அடையார். அவர்க்கு வறுமை, பிணி இவை கிடையா. மக்கள் உண்டாவர். அவர் குலத்தோரைத் தூக்கிவிட்டு சுவர்க்கத்தில் வாழவைப்பர்.

இந்த நோன்பின் மாண்பைக் கேட்போரும், கேட்பிப்போரும், இதை அனுட்டிப்போரும், அனுட்டிக்கச்செய்விப்போரும், அனுட்டிப்பதைக் காண்போரும், அனுட்டானத்திற்கு உதவுவோரும் அனைவரும் பதினாங்கு இந்திரர் உள்ளமட்டும் சுவர்க்கத்தில் வாழ்வர்.



இருபத்தோராவது அத்தியாயம்.

மேருவினின்று பொன்பறித்தல்.

இத்தகைதான பெருமையையுடைய சோமவார விரதத்தை சுந்தரமூர்த்தியாய் வினங்கும் சிவபெருமானது புதல்வனான உக்கிரபாண்டியன் ஆலவாய்மூர்த்தியின் முன்னிலையில் முறைப்படி கோற்றுவந்தார். இதனால் அவருக்கு இறைவனிடத்தில் நிலையான அன்பு உண்டாயிற்று. பிறர்க்கு முடியாத இந்தச் சிவனன்பினால் உக்கிரபாண்டிய மன்னருக்குக் காந்திமதியம்மையிடத்தில் வீரபாண்டியன் என்ற குமாரன் பிறந்தான். அவனைப்பெற்றதால் அந்தத் தேவிக்கு வீரனை ஈன்றவள் எனப்புகழ் தோன்றிற்று.

அன்பின் பெருமைதான்என்ன! அதைச்செலுத்தித் தேவரும் அவுணரும் எத்தனை செல்வம் எய்தினர்! ஆலவாயப்பெருமானது திருவடிகளில் அன்பு ஏற்படுவது அரிது! ஏற்பட்டுவிட்டால் அதை உடையோர்க்குக் கிட்டாதபொருள் அரிது. சிவனன்புடையவன் இராச்சியத்தையும், இறைத்தன்மையையும், இந்திரன், பிரமன், விட்ணு, இவர்களின் நிலையையும் ஐயமின்றிப்பெறுவான். சிவனன்பானது நற்செயல் தீச்செயல் இரண்டையும் அனலானது கட்டையைப்போல் எரித்துவிடும். மிலேச்சனுயினும் சிவனன்பனுயிருந்தால் அவனுக்குநிகராக ஞான்மறை ஓதியவரும் அக்கினிட்டோமம் முதலான வேள்விகள் புரிந்தோரும் ஆகார். முதல் மத்தி முடிவு அற்ற ஆலவாய்மூர்த்தியிடம் அறிவாளிகள் . அன்பு செலுத்தவேண்டும். கொடிய பாவங்கள் இழைத்தாலும் சிவதேசமிருக்குமானுல் அவை ஒருவனிடம் ஒட்டா. சிவனன்பில் ஈடுபட்ட பெரியோர் முத்திபெறுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை; எப்பொழுதும் தீயசெயல்கள் புரிகின்றவன் ஒருமுறை அன்புசெலுத்தி முத்தியடைகின்றன். அதுவே ஆச்சரியம். அன்புடன் ஒருமுறை ஆலவாய்ப்பெருமானை வழிபடுதலால் அசுவமேதவேள்வி வேட்டலால் அடையும்பயனினும் அதிகமான பயனை அடையலாம். குருக்கேத்திரம், கைலிசக்காடு, பிரயாகம், பிரபாசம், கெங்கையும் கடலும் கூடுமிடம், உருத்திரகோடி, கயை, சாலக்கிராமம், அமரேச்சுரம், புட்கரம், பாரபூதீசம், கோகருணம், மண்டலேச்சுரம், காசி, சிரீசைலம், வைக்கம், திருக்காளத்தி முதலான புண்ணியத்தலங்களில் எப்பொழுதும் வாழும்பயன் ஆலவாய்த்தலத்தில் தங்குவோர்க்கு ஒருநாளிலேயே கிடைக்கும். இது உண்மை. மூவுலகிலும் ஆலவாய்ப்பெருமானை வழிபடுதலினும் சிறந்ததொரு புண்ணியமில்லையெனக் கருதி கூடுமானவரை அவரைப் பூசிக்கவேண்டும். உலகிலுள்ள தீர்த்தங்களனைத்தும் தலங்களனைத்தும் ஆலவாய்மூர்த்தியில் அடங்கியிருக்கின்றன. அந்த மூர்த்தியை அன்புடன் ஒருமுறை வழிபடுகின்றவன் எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடியவனுகின்றன். எல்லா வேள்விகளும் புரிந்தவனுகின்றன். அவன் இம்மையில் எல்லாச் சுகங்களையும்

துய்த்து முடிவில் சாயுச்சிய முத்தியை எய்துகின்றான். சதுர்த்தசி, அட்டமி, பூரணை, அமாவாசை, சூரியக்கிரகணம், சந்திரக்கிரகணம், வியதிபாதம், மாதப்பிறப்பு, முதலான சிறந்த புண்ணியகாலங்களிலும் சோமவாரத்தன்றும் சோமசுந்தரக்கடவுளை அன்புடன் வழிபட்டால் பெரும்பழிகள் நீங்கி பெரும் நிலையை அடையலாம்.

இந்தப் புண்ணியகாலங்களிலெல்லாம் உக்கிரபாண்டியராசன் இறைவனைத் தவறாது வழிபட்டு விருப்பங்களனைத்தையும் பெற்று, எதிரிகளை வென்று, இரப்போர்க்கு குபேரன்போன்று வாரிக்கொடுத்து புதல்வனான வீரபாண்டியனோடு நெடுநாள் செழிப்புடன் வாழ்ந்தான்.

இப்படிபிருந்துகொண்டிருக்கையில் ஒருசமயம் நாட்டில் மறுபடியும் மழையில்லாமல் கொடிய பஞ்சம் வந்துவிட்டது. உடனே அரசன் பிராம்மணரைஅழைத்து மழையின்மைக்குக் காரணத்தைவினவினான். அவர்கள் கிரகங்கள் ஒன்றுக்கொன்று பிணக்கிலிருக்கிறபடியால் மழை இல்லையென்று மறுமொழி தந்தனர். பின்னர் அரசனிடம் விடைபெற்று அவர்கள் வேறுநாட்டிற்குச் சென்றனர். தானியங்கள் கிடையாது. அவர்கள் வெளியேறிவிட்டதை கண்டு அரசன் மிக்கக் கவலைகொண்டு அமைச்சரிடம் செல்வத்துடன் பிராம்மணர் தேவர்களைப் பூசித்தால் மழைபெய்யுமென்று பழமை தெரிந்தோர் கூறுகின்றனர். அவர்களோ தானியங்கள் இல்லாது வெளிச்சென்றுவிட்டனர். பரிகாரம் செய்வதற்கும் ஒருவருமில்லையே யாதுசெய்வேன். அங்கயக்கண்ணியம்மையும் சோமசுந்தரமூர்த்தியும் அன்பர்களுக்குக் கற்பகத்தருபோன்று வினங்குகின்றார்கள். அவர்களது அருள் இருக்கும்வரை துயர் கிடையாது என்றவாறு புலம்பிக்கொண்டே வெறும் தரையில் படுத்து உறங்கிவிட்டார்

உடனே அன்பர்க்கருளும் இறைவன் கனவில் தோன்றி 'அரசனே! உனது படைகளையும் உன்னைச் சார்ந்தவர்களையும் காப்பதற்கு ஒருவழி சொல்கின்றேன். உன்னிடத்தில் எனக்கு மிகுதியான நேசம் உண்டு. நீ கடிதில் மேருமலைக்குச்சென்று அதைச் சண்டாயுதத்தால் அடித்து, வேண்டும் பொருளை எடுத்துக்கொண்டு மறுபடியும் முத்திரையிட்டு வந்துவிடு. கொணர்ந்த பணத்தை எல்லோருக்கும் கொடு. நீயும் வைத்துக்கொள். இந்த மழையின்மை ஓராண்டில் தீர்ந்துவிடும். ஒரே ஒரு பிராம்மணரை இருக்கும்படிசெய்து என்னைப்போல் அவரை வணங்கு என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தார்

அரசன் உடன் எழுந்து, யாருக்கும்சொல்லாமல் படைகளையிட்டுக்கொண்டு, ஆறுகளைத்தாண்டி, மேருவின் அண்மையிலுள்ள நகரில் படையை இருக்கச்செய்து, சண்டாயுதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, மலையை வலமாய்ச்சுற்றி, அதன் கிழக்குப்பக்கத்தில் நின்றார். மேரு ஒன்றும் செய்யாததுகண்டு, மிக்கத் திறமைவாய்ந்த உக்கிரபாண்டியன் தனது முழுவேகத்துடன் அதைச் சண்டாயுதத்தால் அடித்தார். உடனே அது பந்துபோன்று சுற்றிற்று. சற்றுநேரத்தில் மேருவின் உருவம் பயத்துடன் அரசனது முன்னிலையில் நின்றது. மேரு மூர்த்தியிடம் அரசன் இறைவன் கூறியவற்றைத் தெரிவித்தார். அதைக்கேட்டுத் தெய்வவடிவத்தில் வினங்

கும் மேரு அரசனைப்பார்த்துப் "பாண்டியமகாராசனே! எனக்கு அசையும் வடிவம் அசையா வடிவம் இரண்டுமுண்டு. அசையும் வடிவத்தில் நான் தோறும் அதிகாலையில் ஆலவாய்சென்று நியமமாகப் பெருமானை வழிபடு வது வழக்கம். இப்பொழுது சின்னளாக அறிவு மயக்கத்தால் அவண் செல்வதை நிறுத்திவிட்டேன். அதன்பயன் இதோ தெளிவாய்த் தெரிந்து விட்டது. மன்னனே! நீர் இறைவனது திருப்புதல்வன். ஆற்றலிலும், புகழிலும், செல்வத்திலும் விசேடமான சிவனன்பிலும் மூவுலகிலும் உன் போன்றோர் எவருமில்லை. அன்புடையோர்க்கு எதுவும் அரிதில்லை. எனது தாவர உடலில் மாசுடையதும் மாசற்றதுமாக இரண்டு பாகங்கள் உண்டு. அதிலும் மிகத்தூயதும் சுதரவன்போல் ஒளியுடன் மிளிர்கின் றதுமான ஓர் இடம் இருக்கின்றது. அதினின்று எவ்வளவு பொன்வேண் டுமானாலும் வெட்டி எடுக்கலாம். முதலாக கற்கொல்லரைக்கொண்டு அதன்மேலே மூடிக்கொண்டிருக்கும் பாறையை உடைக்கவேண்டும். பின் னர் வேண்டுமளவுப் பொன்னை எடுத்துக்கொள்ளலாம் என்று மொழிந்து மறைந்தான்.


அதைக்கேட்ட மன்னன் மகிழ்ந்து,பாறையை உடைத்து, கிழி ருந்த பொன்னை வெட்டிக் கட்டிகட்டியாக எடுத்துப் போதுமான அளவு வெளியேற்றி வலிமை படைத்த மனிதரைக்கொண்டு சுமக்கச்செய்து அறை யின்வாயிலை மறுபடியும் பாறைகொண்டு அடைத்துச் சண்டாயுதம் இரண்டு மீன்கள் இலைகொண்ட முத்திரையால் அடையாளம் வைத்துப் பொன் மூட்டைகளை வாகனங்களிலேற்றிக்கொண்டு படைகளிருந்த விடத்திற்குச் சென்றான். அங்கிருந்த அனைவரும் மலைபோன்ற பொற்குவியல்களைக் கண்ணுற்று ஆச்சரியப்பட்டு மகிழ்ந்தனர். அரசன் ஒவ்வொருவருக்கும் ஒரு ஆண்டு உண்டிக்குப்போதுமான பொன்னைக் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டு அவர்கள் ஆலவாய்ப்பெருமானது பெருமையைப் புகழ்ந் தனர்.

பின்னர் அரசன் பொன்னைச் சாக்குகளிற் போட்டுக்கட்டி யானை ஒட்டகம் குதிரை இவற்றின்மீது ஏற்றிவிட்டுத் தான் விமானமூலம் மதுரை வந்துசேர்ந்தார். உடனே சோமசுந்தரமூர்த்தியின் திருக்கோயிலுக்கு விமானம் கோபுரம் முதலானவற்றைக் கட்டுவித்தார். பிராம்மணரையும் மகிழ்வித்தார். கிரகங்களது நிலையுமாறி, மழையும் வேண்டுமளவிற்குப் பெய்தது. பஞ்சம் போய்விட்டது. குடிகள் உவகையுடன் வாழ்ந்தனர்.

நற்குணமனைத்தும் வாய்ந்த உக்கிரபாண்டிய மன்னன் தனது விருப்பங்களெல்லாம் நிறைவேறிவிட்டபடியால் தனது புதல்வனிடத்தில் இராச்சியத்தை ஏற்பித்துச் சோமசுந்தரமூர்த்தியின் திருவருளால் அவ ரோடு ஐக்கியமானார்.

இந்தப்பதினைந்தாம் திருவிளையாடலைப் படிப்போரும் கேட்போ ரும் பாவங்களகன்று இன்பத்தைப் பெறுவர்.

———



வேதப்பொருளுரைத்தல்

இருபத்திரெண்டாவது அத்தியாயம்.

வேதப்பொருளுரைத்தல்.

பிரம்மாண்டம் படைக்கப்பெற்றுக் கிருதயுகத் தொடக்கத்தில் சிவபெருமானது திருவாயினின்றும் பிறந்த பிரணவத்திலிருந்து வேதங்களனைத்தும் உண்டாயின. பெருமானது திருவருளால் பிராம்மணர் எல்லோரும் அவற்றைக்கற்றனர். ஆனால் அவற்றின் பொருளை அம்முனிவர் அறியவில்லை.

ஒருசமயம் கைமிசக்காட்டில்வாழ்ந்த கண்ணுவர், சாண்டில்லியர், கருக்கர் முதலான முனிவர் ஒன்றுகூடி, 'இலக்கணங்களுடன் வேதங்கள் யாவையும் நாம் கற்றிருக்கின்றோம். ஆனால் நல்ல குரு கிடையாமையால் அவற்றின் பொருளைத் தெரியமுடியாமலிருக்கின்றோம். அப்பேர்ப்பட்ட ஒரு குருவைக்கண்டு நாம் எங்ஙனம் பொருளைத் தெரிந்துகொள்ளப்போகின்றோம், என்று கூறியவண்ணமாய் ஏக்கமுற்றனர்.

இவ்வாறு முனிவர் கவலையுற்றிருக்கையில் மிக்கப்பொலிவுபெற்ற அரபத்தர்எனும் இருடி அவர்களது முன்னிலையில் தோன்றினர். அவரைக் கண்டதும் இருக்கையளிக்கப்பட்டது. அரபத்தர் இருக்கையில் அமர்ந்து அவர்களது முகநிலையைக் கண்ணுற்று "முனிவரே! நீவீர் அனைவரும் மிக்கப் பெரியோர்! எச்செயலிலும் வல்லவர். அப்படியிருந்தும் என் கவலையுடன் காணப்படுகிறீர்" எனக்கேட்டார். அதன்பேரில் முனிவர் மகிழ்ச்சியுடன் அரபத்தரை நோக்கிப்பெரியோய்! எங்களுக்கு வேதத்தின்பொருளை அறிந்துகொள்வதில் மிக்க அவா இருக்கின்றது. அது எங்ஙனம் நிறைவேறுமென்று கூறியருளவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டனர். உடனே அரபத்தர் 'முனிவரே! கேளுங்கள். பிறவழிகளால் அடையமுடியாததையும் தவத்தால் அடைந்துவிடலாம். தவம்புரிவோர்க்கு சித்திகள்யாவும் எளிதில் கிட்டும். பிறவிடங்களில் செய்யும் தவத்தினும் புண்ணியத்தலங்களில் செய்யும் தவம் கடிதில் பயனைப்பயக்கும். ஆனதுபற்றி நீங்கள் தவத்தில் ஈடுபடுங்கள். ஒப்பிட்டுப்பார்க்கையில் புண்ணியத்தலங்கள் யாவற்றிலும் சிவத்தலங்களே சிறந்தவை. வேதாந்த நூல்களில் புகழப்பெற்ற அச்சிவத்தலங்களுள் திருவாலவாய்த்தலம் முதன்மையானது. அங்கு அறம் முதலிய நான்கு கூறிக்கோள்களும் உடனே கைகூடுகின்றன. அங்கு யோகமும், வித்தையும் விசேடமாகப் பயனுறுகின்றது. அந்த நகருக்குச் சமட்டிவித்தியா நகரி எனப்பெயர். அங்கு பலர் தக்ஷிணமூர்த்திக்கடவுளின் திருவருளால் பல அரிய வித்தைகளைக்கற்று விருப்பங்களைப்பெற்றிருக்கின்றனர் அங்கயக்கண்ணியம்மையாரும் சோமசுந்தரப்பெருமானும் அன்பர்க்கு அருளும்பொருட்டு அங்கு எப்பொழுதும் இருந்துகொண்டேயிருக்கின்றனர். ஆதலால் நீங்களும் அவண்சென்று இறைவனையும் இறைவியையும்

வணங்கி, கருப்பக்கிருகத்திற்குத் தென்பக்கமிருக்கும் தக்கிணமூர்த்தியின் முன்னிலையில் வேதத்தின்பொருள் தெரியும்பொருட்டுத் தவம்புரியுங்கள். எல்லா வேதங்களின் பொருளும் உங்களுக்கு வெளிப்படும்' என்று மொழிந்தார்.

இதைக்கேட்ட முனிவர் உடனே அரபத்தரை வணங்கி அவரை முன்னிட்டுக்கொண்டு ஆலவாய்த்தலம் சென்று பொற்றாமரையில் மூழ்கி பெருந்தேவியாரையும் பெருந்தேவரையும் வணங்கித் துதித்துப் பின்னர் விமானத்திற்குத் தென்புறமேகித் தாயபடிகம்போலிருப்பவரும் ஆலமரத்தடியிலமர்ந்தவரும் பிரம்மன் முதலான தேவராலும் முனிவராலும் சூழப் பெற்றவரும் உரையுரைக்கும் பீடத்திலிருப்பவரும் வேதத்தின் பொருளேயே உரைக்கின்றவரும் நான்கு புயங்களும் மூன்று கண்களுமுடையவரும், முத்தமயமான செபமாலை, அமுதம்நிறைந்த பொற்கலம், அறிவுக்குறி, ஏடு இவற்றைக் கைகளிலேந்தியவரும் வரமளிப்போரும், அழிவற்றவருமான தக்கிணமூர்த்திக் கடவுளைக்கண்டு ஆச்சரியமடைந்து மீள மீள வணங்கிப் பலவகையான புகழ்கள் கூறித்துதித்து, மூர்த்தியின் முன்னிலையிலமர்ந்து அரபத்தரால் அருளப்பட்ட இருபத்திரண்டு எழுத்துக்களாலான தக்கிணமூர்த்திக்கடவுளது மேதாவித்தை என்ற அரிய மந்திரத்தைச் செபித்தார்கள். முப்பொழுதும் பூசை செய்தார்கள். சொல்லிய எண்ணிக்கைப்படி தருப்பணம், ஓமம், பிராம்மணருக்கு அன்னமளித்தல் இவையும் கடைபெற்றன. இவ்வாறு ஐந்து அங்கங்கள் (செபம், பூசை, தருப்பணம், ஓமம் அன்னமளித்தல்) கொண்ட கடும்தவத்தைப் பட்டினியுடன் புரிந்தார்கள். கார்த்திகைமாதம் பூர்ணிமையன்று தொடங்கி மறு கார்த்திகைமாதம் பூரணிமை ஈருக ஒரு ஆண்டுகாலம் இதேமுறையில் இடையூறின்றி அனைத்தும் கடைபெற்றது.

தவத்தால் மகிழ்வுற்ற சிவபெருமான் பதினாறுவயதுள்ள பிராம்மணப்பையனது கோலத்தில் தலைப்பாகை மேலாடை அணிந்து, சிரம், நெற்றி, மார்பு, புயங்கள் இவற்றில் நீறுபூசி, உருத்திராக்கங்கள்பூண்டு, முறுவல்பூத்த முகத்துடன், குண்டலம் முதலான ஆபரணங்கள் பூட்டி, உயர்ந்த குரலில் சுரம் தவறாது வேதமந்திரங்களோச் சொல்லிக்கொண்டு, தவம்புரியும் கண்ணுவர் முதலிய முனிவரின்முன் தோன்றினர். அவரைக் கண்ணுற்றதும் முனிவர் பெருமகிழ்ச்சியால் தன்வயமற்று ''வணங்குவோரின் துயரனைத்தையும் போக்க வல்லமையுடையவையும் வித்தையை அளிக்கக் கூடியவையுமான உமது திருவடிகளுக்கு வணக்கம்'' என்று கூறியவண்ணம் அவரது தாள்களில் வீழ்ந்து வணங்கினர். உடனே இறைவன் அவர்களை அருள்நோக்குடன்பார்த்துக் குளிர்ந்தமொழிகளில் 'முனிவரே! நீங்கள் வேண்டுவது என்ன! அதைக்கேளுங்கள்' என்று அருளிச்செய்தார். இறைவன் சொற்களைக்கேட்டதும் முனிவர் எழுந்து கைகூப்பி உவகையுடன் பெருமானே! எல்லோருக்கும் உலகத்திற்கும் அருள் உண்டாம் பொருட்டு எல்லா வேதங்களின் பொருளையும் எங்களுக்கு உரைத்தருளவேண்டும், என்று கேட்டுக்கொண்டனர். உடனே பெருமான் எல்லோரையும் மகாலிங்க வடிவாய்நிற்கும் ஆலவாயுடையானது திருமுன்பு அழைத்துச்சென்று மிக அரிய வேதப்பொருளை உரைக்கத்தொடங்கினர்.

முனிவரே! வேதங்களின் மறைபொருளைக் கூறுகின்றேன் கேளுங்கள். அதைக்கேட்டதுமே துயர்யாவும் நீங்கும். இந்தத்தானே தோன்றிய இலிங்கம் மிக மேலானது. அதுவே வேதங்களின் காரணமானது. வேதங்களின் பொருளும் அதுவே. ஒன்றுயும், இரண்டற்றதாயும், பரப்பிரம்மமாயும், மேலிலும்மேலானதாயும், சத்து அறிவு, இன்பம் இவைவடிவானதாயும், முழுதானதாயும், பேரொளியாயும், இருக்கும் பொருள் எது உண்டோ அது இந்த சோமசுந்தர மூர்த்திதானென்று வேதாந்தநூல்கள் கூறுகின்றன. வேதம் ஒன்றே. வேதத்தின்பொருளும் ஒன்றே. ஆயினும் கிளைகளின் பிரிவினால் வேதங்களும் அவற்றின் பொருள்களும் வேறுபட்டன. இதுவும் சுந்தரேசனது மாயையே.

ஆலவாய்மூர்த்தி பிரம்மனைப்படைத்து தன்னிடமிருந்து தோன்றியதான எல்லா வேதங்களையும் அவரிடம் ஒப்படைத்தார். அதன்பிறகே முழுலகிற்கும் வேதஅறிவு கிடைத்தது. சுடர்மயமான இந்த இலிங்கம் முதல், இடை கடையற்றது. ஆகாயவடிவான அதற்குப் பிரமம் எனப்பெயர். படைத்தல் முதலான காரணம்பற்றி மூவ்வருவமாகப்பிரிந்தது. ஆன்ம தத்துவம் அடிப்பாகத்திலும் வித்தியாதத்துவம் மத்தியிலும் சிவத்தத்துவம் நுனியிலுமாக இருக்கின்றது. இந்த எல்லா பாகங்களிலும் எல்லாத் தத்துவங்களுமிருக்கின்றன. ஆன்ம தத்துவத்திற்கு பிரம்மனும், வித்தியாதத்துவத்திற்கு விட்ணுவும், சிவதத்துவத்திற்கு உருத்திரனும் முறையே அதிபர் ஆவர். எல்லாத் தத்துவங்களுக்கும் ஈசுவரன் அதிபதி. ஆன்ம தத்துவத்திலிருந்து அ எனும் எழுத்தும் வித்தியாதத்துவத்திலிருந்து உ எனும் எழுத்தும சிவதத்துவத்திலிருந்து ம் எனும் எழுத்தும் ஒரு தத்துவத்திலிருந்து பிந்துவுடன்கூடிய நாதமும் எழுந்து பிரணவம் எனும் ஓம் என்ற ஒலி அமைந்திருக்கின்றது. பிரிந்த பிரணவத்தினின்று பூ; புவ; சுவ; என்ற பிரிந்த வியாகுருதிகளும் சேர்ந்த பிரணவத்தினின்று பூர்புவச்சுவ; என்ற சேர்ந்த வியாகுருதிகளும் சிவனது ஆணையால் தோன்றின. மறுபடியும் அவற்றினின்றும் நினைத்ததைத் தரக்கூடியதும், வேதங்களை ஈன்ற தாயுமான காயத்திரி சேர்ந்த உருவிலும் பிரிந்த உருவிலும் தோன்றிற்று. அந்தக் காயத்திரியினின்றும் ஆலவாய்ப்பெருமானது திரு ஆணையால் இருக்கு, இயசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களும் உண்டாயின. மீளவும் பல பிரிவுகளாக வேதங்கள் விரிந்தன.

பிரணவம் முதலான மகாமந்திரங்களும், அகரம் முதலிய எழுத்துக்களும், காமிகம் முதலான ஆகமங்களும் ஆலவாயுடையானது. உச்சி முகத்தினின்றும் வந்தன. இருபத்தொன்று சாகைகளுடன் கூடிய இருக்கு வேதம் தற்புருஷமுகத்தினின்றும், நூற்றொன்று பிரிவுகளுடைய இயசுர் வேதம் அகோரமுகத்தினின்றும், ஆயிரம் பிரிவுகளுடைய சாமவேதம் வாமதேவ முகத்தினின்றும் ஒன்பதுபிரிவுகளுடைய அதர்வணவேதம்சத்தியோசாத முகத்தினின்றுவரலாயின. நான்குவேதங்களுடன் வருணங்களும், ஆச்சிரமங்களும், தருமங்களும், வேள்விகளும் இறைவனிடமிருந்தே தோன்றின. அவை வேதங்களின் பொருளாயிருப்பதால் முனிவர்அவற்றை நிகழ்த்துகின்றனர். வேதங்கள் முழுதையும் இரண்டு பாகங்களாகப் பிரிக்கலாம். ஒன்று கருமகாண்டம் மற்றொன்று ஞானகாண்டம். பேரிலிங்கத்தின் இந்தப் பூசையானது கருமகாண்ட வாக்கியங்களில் கூறப்பட்டுள்ளது.

ஞானகாண்ட வாக்கியங்கள் ஆலவாய்ப்பெருமானது உண்மை, அறிவு, இன்பவடிவத்தை விவரிக்கின்றன. விட்டுணு முதலானவர் பெருமானது அமிசங்கள். பெருமான் அமிசி. எல்லாத் தேவதைகளுக்கும் அளிக்கப் பெறும் அவியானது அமிசியான இறைவனையேசேரும். அவனே பயன் அளிப்பவன். அக்கினிட்டோமம் முதல் அசுவமேதம் ஈறுகளுள்ள வேள்வி கள், நித்திய நைமித்திக காமிய கருமங்கள், வேதங்களில் கூறப்பட்ட பிறபலவகையான கருமங்கள் இவையனைத்தும் எல்லாத் தத்துவங்களுக்கும் இருப்பிடமான ஆலவாய்மூர்த்தியின் பூசைகளாகவே ஆகும். இரண்டற்ற ஒரே பிரம்மமாயும், உண்மை அறிவு இன்பவடிவாயும், கலைகளற்றதாயும், மாசற்றதும், தூயதும், மங்களவடிவானதும், சூக்குமமானதும், பூச்சற்ற தும், தேவர்களுக்கும் முதலானதும், உருத்திரவடிவானதும், உலகத்திற்கு மேற்போனதும், இறைவனுயிருப்பதும், எல்லாமறிந்ததும், எல்லாவற்றை யும் இயக்குகின்றதும், யாவற்றிற்கும் காரணமானதும், முதல் மத்தி முடிவு இல்லாததும், தனக்கு மேற்பட்டதும், கீழ்ப்பட்டதும், இல்லாததும், பர மான்ம வடிவானதும், மேலாம் சுடர்வடிவானதும், மேலிலும் மேலானதும், யோகநிட்டையில் அடையக்கூடியதும், அளவில் அடங்காததும் ஒப்பற்றது மான பெரும்தத்துவப் பொருளானது சிவன்முத்திபுரத்திறைவனுன சோம சுந்தரமூர்த்தியே என்று வேதாந்தநூல்கள் கூறுகின்றன. எவர்கள் குருவி னது கருணையால் தத்துவமசி முதலான மகாவாக்கியங்களால் குறிக்கப்படும் பொருள் பேரிலிங்கவடிவில் இலங்கும் ஆலவாய்ப்பெருமானே என்று அறி கின்றனரோ அவர்கள் பெருமானது அருளால் துன்பத்தைக் கடக்கின் றனர். ஆதலால் வேதத்தின் இரண்டு காண்டங்களின் பொருள் அங்கயக் கண்ணியின் மணாளனே. அந்த மூர்த்தியானது எல்லா இலிங்கங்களும் உண்டாவதற்கு முன்பாகவே தோன்றியது

வேதங்களில் கூறப்பட்ட கருமங்களனைத்தையும் செய்வதால் ஏற்படும் பயன் ஆலவாய்மூர்த்தியை வழிபடுதலால் கிடைக்கும். வேதாந்த அறிவால் பெறப்படும் பயனே இந்த இலிங்கத்தின் தியானத்தால் பெறலாம்.

கருமங்களை அனுட்டிப்பதால் உளத்தூய்மை உண்டாம். உளத் தூய்மையால் ஞானங்கங்கள் உண்டாம். அமைதி, ஒழுக்கம் முதலான அற குணங்களும், இயமம் நியமம் முதலான எட்டு அங்கங்களையுடைய யோகமும் ஞானங்கங்களென்று வேதங்களில் கூறப்பட்டுளது. ஞானங்கங்கள் யாவற்றிலும் சிவலிங்கத்தில் சிவ பூசை செய்தல், சிவலிங்கப் பிரதிட்டை, சிவத்தலங்களைக் கண்டால், சிவனடியாரை வழிபடுதல், பெரியோரிலும் பெரியனனை சிவனிடத்தில் அன்பு செலுத்துதல், தலை, காதுகள் கழுத்து இவற்றில் உருத்திராக்கம் அணிந்துகொள்ளல், 'அக்கினி ரிதி' என்ற மந் திரத்தைச்சொல்லி நீறு பூசுதல், நெற்றி முதலான இடங்களில் நீரில் குழைத்தநீற்றை மூன்று வரிகளாக இட்டுக்கொள்ளல், வேதம், வேதாந்தம் இவற்றைக் கற்றுணர்ந்த குருவைப் பேணுதல் இவைகள் சிறந்தவை. அறிவுடையவன் இதை அறிந்து ஞானங்கங்களை எப்பொழுதும் செய்ய வேண்டும்.

வேறு மார்க்கங்களில் கூறப்பட்ட அறங்களைக்காட்டிலும் சிருதி களில் கூறப்பட்டவை சிறப்புற்றவை. அவற்றினும் சுருதிகளில் கூறப்பட்

டவை மேலானவை. இவற்றிற்கு மேலானது இடையாது. திருமம் அதிருமம் எனப்பாகுபாடு செய்தற்குச் சுருதியே பிரமாணம். மிருதியும்சுருதியை ஒத்துச்சொல்வதால் பிரமாணம்தான். சகம்அனைத்தும் சிவன்என்ற அறிவு இன்பத்தையும் வீட்டையும் அளிக்கும். அந்த அறிவிற்கு விகாரானது பிரிது ஒன்று'மில்லை என்றுஉரைத்து முனிவரின் நெஞ்சைத்தொட்டு வேதத்தின் பொருள் உண்டாகட்டும் என்று அருளிச்செய்து இலிங்கத்தில் மறைந்தார். உடனே கண்ணுவர் முதலான முனிவர்வேதத்தின் ஆச்சரியமானபொருளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிந்தனர்.

இத்தப்பதினாறுவது திருலீலையாடலைப் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் சிவஞானமுபிறக்கும்



இருபத்திமூன்றுவது அத்தியாயம்.

நவரத்தினங்கள் விற்றல்.

வீரபாண்டியராசனுக்குக் குலமங்கையர் பலர் மனைவிகளாக விருந்தனர். ஆயினும் அவர்களிடத்தே புதல்வன் தோன்றவில்லை. போக மங்கையரிடம் தீயகுணமுள்ள பல புதல்வர்கள் பிறந்தனர். குலமகளிரிடத்தே மகவு பிறக்கவில்லையென்று எக்கமுற்று அரசன் மனைவியருடன் அட்டமி நோன்பு, சதுர்தசி நோன்பு, சோமவார நோன்பு முதலான நோன்புகளை நோற்றுச் சிவபெருமானை வழிபட்டுவந்தான். இறுதியில் இறைவனது அருளால் பட்டத்து ராணியிடத்தே ஓர் புதல்வன் பிறந்தான்.

அவன் ஐந்துவயதுச் சிறுவனாயிருக்கும்பொழுது அரசன் ஒரு நாள் வேட்டையாடச்சென்று புலிகளால் கொல்லப்பட்டு இறந்தான். போக மங்கையரின் மக்கள் உடனே பொக்கிஷசாலைக்குச் சென்று விலையுயர்ந்த இரத்தினங்கள் முதலான பொருள்களைக்கவர்ந்து எங்கெங்கோ ஓடி ஒளிந்து கொண்டனர்.

அமைச்சரில் சிலர் இளம் ராசகுமாரனை மறைவில் வைத்துக் காப்பாற்றிக் குழப்பங்கள் அடங்கியபிறகு வெளியே கொணர்ந்து அவனுக்கு முடிசூட்ட எத்தனித்தனர். நான்குவிதப் படைகளும் ஓரளவு திரட்டப் பெற்றனர். முடிசெய்வதற்கு வேண்டிய பணமும் இரத்தினங்களும் எடுப்பதற்காக அவர்கள் பொக்கிஷ சாலைக்குச் சென்றனர். அங்கு ஒன்றும் காணாது 'என் செய்வோம்? பணத்தையாவது எவனிருந்தும் திரட்டிவிடலாம். இரத்தினங்களுக்கு என்னசெய்வோம்? ஒன்றும் தெரியவில்லையே! இவனுக்கு முடிசூட்டாவிடில் இராச்சியம் அரசனற்று அழிந்துவிடுமே! இக்குழந்தை ஆலவாயுடையானது திருவருளால் பிறந்தவன். பெருமான் என்னசெய்ய நினைத்திருக்கிறாரோ! தெரியவில்லை' என்றவாறு கவலையுடன் பேசிக்கொண்டு ராசகுமாரனைக் கூட்டிக்கொண்டு எல்லோருமாய்த் திருக்கோயிலுக்கேகினர். கோபுரம் சேர்ந்ததும் யாவரும் வணங்கி குழந்தையையும் வணங்கச்செய்து முகப்பில் இறைவன் முன்னிலை நோக்கி நின்றனர்.

திடீரென்று அவர்கள்முன்பு வைசியன் உருவத்தில் அழகான ஆடை ஆபரணங்கள்பூண்டு இரத்தினப்பையை முதுகில் போட்டுக்கொண்டு பெருமான் தோன்றினார்.

திகைப்படைந்த அமைச்சரை நோக்கி அவர் 'நீங்கள் என் கவலையுற்றிருக்கின்றீர்! 'என வினவினர். அவர்கள் தமது விருப்பத்தைத் தெரி

வித்தனர். உடனே வைசிய வடிவத்திலிருக்கும் பெருமான் அவர்களிடம் உங்களுக்கு எந்தவிதமான இரத்தினங்கள் வேண்டுமானாலும் தரலாம், என்றுரைத்தார். அதுகேட்ட அமைச்சர் மனமகிழ்ந்து 'வணிகரே! முடி செய்வதற்குவேண்டிய இரத்தினங்கள் தேவை, என்று பதிலளித்தனர். உடனே வைசியர் அதிகவிலையுள்ளவையும் பெரியவையுமான கற்களை எடுத்துக் காண்பித்து இரத்தினங்களின் இலக்கணங்களைக் கூறத்தொடங்கினர்.

முன்னாளில் வலன் என்ற ஓர் அவுணன் மிக்கவலிமை பெற்று யாவரையும் வென்று மூவுலகத்திற்கும் இறைவனாய் பெரும்புகழுடனும் செல்வத்துடனும் வாழ்ந்தான். அவனது எலும்புதான் வைரம்; பற்கள் முத்து; உதிரம் சிவப்புக்கல்; உரோமம் வைடூரியம்; ஊன் பவளம்; கண் நீலக்கல்; பித்தநீர் பச்சைக்கல்; கபம் புட்பராகம்; கொழுப்பு கோமேதகம்; என்று அறிந்துகொள்ளுங்கள். வைரமும் முத்தும் பிராம்மண வருணம், மாணிக்கமும் பவளமும் அரசவருணம்; புட்பராகமும் கோமேதகமும்; வைடூரியமும் வைசியவருணம்; நீலமும் பச்சையும் சூன்காம்வருணம். வலனது சத்துவகுணத்தினின்று படிகவகையைச்சார்ந்த முத்தும் ரசோகுணத்தினின்று கோமேதகம் சிவப்பு, பவளமும், தமோகுணத்தினின்று நீலம் முதலான கற்களும் தோன்றின. வைரம், புட்பராகம் வைடூரியம் இவை மூன்றும் ரசோகுணத்தினின்றும் உண்டாயினும் ஸத்துவம் கலந்தவை. பச்சை தமோகுணம் மேம்பட்ட ரசோகுணம் பொருந்தியது. இவ்விதவேற்றுமைகளுடன் இரத்தினங்கள் வலனுடைய உறுப்புக்களிலிருந்து தோன்றியவை என்று கூறி முடித்தார்.

அமைச்சர் இதைக்கேட்டு ஆச்சரியமடைந்து, 'வணிகரே! வலிமைபெற்றவலனுக்கு எங்ஙனம் மரணம் நேர்ந்தது? அவனது அங்கங்களிலிருந்து எவ்வாறு இரத்தினங்கள் பிறந்தன? இதைத் தெரிந்து கொள்ள எங்களுக்கு மிகுந்த ஆவல். சொல்லவேண்டும்' என்று வேண்டிக்கொண்டனர். உடனே வணிகர் அவரைநோக்கி:- வலன் என்ற அவுணராசன் இரம்பருலத்தில் மிகுந்த சிவனன்பில் ஈடுபட்டுப் பின்னர் பார்க்கவமுனிவர் காட்டிக்கொடுத்த வழிப்படி கைலாயமலையில் சிவபெருமானைக் களிப்பிக்கும்பொருட்டுக் கடுந்தவம் புரிந்தான். வரிசைகள் அனைவற்றுடன் வழிபாடும் நடத்தினன். பெருமான் உடனே தோன்றி 'உனது தவத்தாலும், பூசையாலும், அன்பாலும் மிகமகிழ்ந்தேன். வேண்டும் வரத்தைக் கேள், என்றார். அதன்பேரில் அவுணராசன் தனக்குப் போரில் எதிரிகளால் சாவுஏற்படக்கூடாதென்றும் தனது அங்கங்களனைத்தும் இரத்தினங்களாக வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டான். அப்படியே யாகுக என்று இறைவன் மொழிந்துமறைந்தார்.

அதன்படியே வலனை யாரும் கொல்லமுடியாமலிருந்தது. இந்திரனும்பலமுறை அவனிடமிருந்து தோல்வியடைந்தான். வீரனது மனைவியென்ற இந்திராணியின் செருக்கும் சிதைந்தது. வலாசுரனைப் போரில் கொல்லமுடியாததுகண்டு இந்திரன் முதலான தேவர்கள் அவனை வேறுவழியில் கொல்லமுயன்றனர். போர் கடைபெறும்பொழுது ஆயுதங்களைஎரிந்துவிட்டு அவனது அண்மையிற்சென்று, 'மிக்க வலிமைபெற்ற வலாசுரனே! உனது வீரச்செயல்களையும் புயங்களின் தெம்பையும் கண்டு மகிழ்ந்தோம்.

உனக்குவேண்டிய வரங்களைக்கேட்டுப் பெற்றுக்கொள், என்றனர். தேவர் களது இந்த மொழிகளைக்கேட்டுச் சிரித்தவண்ணமாய், தேவர்களே! போர் முனையில் சண்டையிடுவதற்கு உங்களுக்கு எவ்வளவு ஆற்றல் உண்டோ அவ்வளவு ஆற்றல்தான் வரம் அளிப்பதற்கும் இருக்கும். வேண்டுமானால் உங்களுக்கு நான் வரம் அளிக்கின்றேன், பெறுங்கள்; என்றான் வலாசுரன். அதற்குத் தேவர்கள், நாங்கள் நடத்தும் பெரும் வேள்வியில் நீ பசுவா யிருக்கவேண்டும் (பலியிடும் பொருள்) என்று வேண்டிக்கொண்டனர். அவர்களது இந்த வரத்தைச் செவியுற்ற வலாசுரன், தேவர்கள் எண்ணிய வரமாகக் கேட்டுவிட்டனர். இந்த அழியும் உடலைக்கொடுத்து அழியாத புகழைத் தேடுகின்றேன் என்றுதனக்குள்ளே சொல்லிக்கொண்டு, "தேவர் களே! நீவிர் கேட்டவரத்தைத் தந்து விட்டேன். உங்களது வேள்விக்கு நானே பசுவாகவருகின்றேன். வேள்வியைத் தொடங்குங்கள் என்று மறு மொழி கூறினான். உடனே புதல்வனிடத்தில் தனது ஆசியத்தை ஒப்பித்துவிட்டு தேவர்கள் வேள்வி நடத்தும் இடமாகிய கைலாயமலையின் உச்சிக்குச்சென்றான். அங்கே தேவர்களைப்பார்த்து பெரும் வள்ளலான அந்த வலாசுரன், தேவர்களே! உங்களுடைய விசேடமான இந்தவேள்விக்கு இதோ நான் பசுவாக வந்துவிட்டேன். என்னைக் கட்டுதற்கு யூபம் (கட்டுமரம்) தயாரியுங்கள், என்று மகிழ்ச்சியோடு உரைத்தான். உடனே அவர்கள் வலாசுரா! நீ உண்மை பேசுகின்றவன் உன்னைப்போல் உண்மை யாளிகள் எங்குமே கிடையாது. நீ மிகப் பெரியவன், என்று சொல்லி அவனை மிகவும் கொண்டாடினார்கள்.

அந்த நரவேள்வியில் இந்திரன் யசமானன். எழு இருடிகளும், மற்ற முனிவரும் இருத்துவிசர். அவர்கள், வேதங்களில் கூறப்பட்ட கரு மங்களைத் தொடங்கினர். யூபத்தில் கட்டுவதற்கு வலாசுரனைக் கொண்டு போகும்பொழுது அவன் வேள்விக்கிறைவனும், மூவேதவடிவமானவனும், மூக்கண்ணனும், உருத்திரனும், விட்டுணு பிரம்மன் முதலான தேவரால் வணங்கப்பெற்றவனும் ஆன பரம்பொருளை நினைந்தான். உடனே பசுக் களுக்குப் பதியான சிவபெருமான் அவனைத் தோன்றி அவனைக் கட்டுதற்கு அனுமதி தந்து மறைந்தார். தருப்பைக் கயிற்றால் கட்டுண்ட அசுராசன் சிலந்திநூலால் சுட்டப்பட்ட சிங்கம்போன்று அவ்வமயம் காட்சியளித்தான். வச்சிராயுதத்தால் உயிர் எடுக்கப்பட்டபின்பும் அவனது உடல் பெருந்தன் மையுடையதாகவே விளங்கிற்று. வேரறுந்த கற்பகத்தருபோல் கீழே விழுந்ததும் ஆகாயத்திலின்று மலர்மாரி பொழிந்தது. அவனது உடலி லிருந்து வேள்விக்கு வேண்டிய உறுப்புகள் அகற்றப்பட்டன. அவனை ஒளி வடிவாகி அப்சரமங்கையரால் சூழப்பெற்று விமானத்தில் பிரம்மலோகம் சென்றான்.

நற்செயல்களால் தூய்மை பெற்று சத்துவகுணம் நிரைந்த மீளி ரும், அவனது உடலின் உறுப்புக்களனைத்தும் ஓரத்தினங்களின் விதை களாயிற்று. இவ்வண்ணம் அவனது உடலினின்றும் தோன்றித் தூய்மை யுடன்விளங்குவதால் இரத்தினங்களை அரசர்கள் அணிகின்றார்கள். எலும்பு முதலிய தூய்மையற்ற பொருள்களிலிருந்து அவை உண்டாயிருந்தபோதி லும் இந்தகாரணத்தால்தான் தொடக்கூடியனவாகின்றன. அந்த அவுணன் போன்று ஓர் அறச்செயலின்பொருட்டு உயிரை எவன் கொடுப்பான்?

அதனால் அவனது உடல் ஐயமின்றித் தூய்மையானதே. இரத்தினங்களைப் பார்ப்பதற்கு நாள்முறை உண்டு. ஞாயிற்றுக்கிழமையில் மாணிக்கத்தையும், திங்கட்கிழமையில் முத்தையும், செவ்வாயில் பவளத்தையும், புதனில் பச்சையையும், வியாழனில் புட்பராகத்தையும், வெள்ளியில் வைரத்தையும், சனியில் நீலத்தையும், பார்க்கவேண்டும். இரத்தினங்களைப் பார்ப்பவன் வெண்மையான உடையணிந்து தாமரை, மல்லிகை, முல்லை முதலான மலர்களைத் தலையில் வைத்துக்கொண்டு புனிதமான இடத்தில் பலகைமேல் துணிவிரித்து அதன்மேல் கற்களை முறைப்படி வட்டமாக வைத்து பூசை செய்து பின்னர் பார்க்கவேண்டும். அவன் நாள்தோறும் கதிரவன் முதலான ஒன்பது கிரகங்களையும் அவரவர்க்கு ஏற்பட்ட மலர்களைக்கொண்டு வழிபடல்வேண்டும். ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வொரு இரத்தினம் இருக்கின்றது. சூரியனது சிவப்பு, சந்திரனது முத்து, செவ்வாயினது பவளம், புதனது பச்சை, வியாழனது புட்பராகம், சுக்கிரனது வைரம், சனியினது நீலம், ராகுவினது கோமேதகம், கேதுவினது வைடூரியம்.

இப்பொழுது கற்களின் இலக்கணங்களைக் கூறுகின்றேன. வைரமானது உலகத்திலுள்ள எந்த உலோகத்தையும் பிளக்கும் தன்மையாய்க் கூறியது. ஆனால் வைரத்தை எதும் பிளக்கமுடியாது. ஆனதுபற்றி கற்களுக்குள் வைரம் சிறந்ததென்று கூறுகின்றார்கள். ததீசி முனிவருடையவும், வலாசுரனுடையவும் என்புகள் எங்கு எங்கு உலகத்தில் வீழ்ந்தனவோ அங்கெல்லாம் வைரம் விளைகின்றது. கோசலம் முதலிய நாடுகளை வைத்து வைரங்களில் பாகுபாடு செய்யப்படுகின்றது. கோசல வைரம் வாகைப்பூ போன்றும், கலிங்கவைரம் மஞ்சள்நிறமாயும், மதங்கநாட்டு வைரம் மல்லிகைமலர்போன்றும், இமயமலை வைரம் வெளுப்பாயும், மகாராட்டிர வைரம் சிவப்புநிறமாயும், சௌவீரநாட்டு வைரம் கருப்பாயும் பௌண்டிரநாட்டு வைரம் நீலோற்பலம் போன்றும், மகதநாட்டு வைரம் பொன்நிறமாயும் இருக்கும்.

தெய்வங்களைவைத்தும் வைரங்களைப் பிரிப்பதுண்டு. வாகைப்பூ, வாழை, மூங்கில் இவை போன்றது. விட்டுணு வைரமென்றும், வெள்ளை நிறமாய் ஆறுபட்டமுடையது. இந்திர வைரமென்றும், வண்டு, நீலோத்பல மலர் போன்றது இயம வைரமென்றும், இலவம்பஞ்சு போன்றது வாயு வைரமென்றும், கர்ணிகாரப் பூப்போன்றது வருண வைரமென்றும், நீரின் நிறமுடையது. சந்திர வைரமென்றும், வண்ணத்திப்பூச்சி நிறத்தது சூரிய வைரமென்றும், அனல் நிறமுடையது அக்கினி வைரமென்றும், சொல்வார்கள். படிகம்போன்றது பிரம்மவைருணமென்றும், முயற்கண் போன்றது அரசர் வருணமென்றும், வாழைஇலை போன்றது வைசியவருணமென்றும், பன்றிவால் போன்றது சூத்திரவருணமென்றும், சொல்வதுமுண்டு. அந்தந்த வருணத்தார் அந்தந்த வருணத்து வைரங்களை அணியவேண்டும். முதல்வருணத்தார் எதையும் அணியலாம். சூரியனைத் தேவதையாகவுடையதும் வண்ணத்திப்பூச்சி நிறமுடையதுமான வைரம் அரசர்க்குச் சிறந்தது. மங்களம், ஆரோக்கியம், வெற்றி இவை உண்டாம். மங்கையர்தம் திருமங்கலியத்தில் வைரத்தைச் சேர்த்தல்கூடாது.

நிறக்குறைவு, கோடு, நுக்கம், காக்கைக்கால், சொட்டு இவை ஐந்தும் வைரத்தின் குற்றங்கள். வைரம்பதித்த ஆபரணம் பூண்டு போர்க்

களம் செல்லும் அரசன் காயமின்றி வெற்றியுடன் திரும்புவான். சிற்றர சனுயிருந்தால் பேரரசனுவான். ஏழ்மை, பாம்பு, நெருப்பு, பிசாசு, பூதம், அகாலமரணம் இவை அவனைக்கண்டு விலகிவிடும்

இனி முத்துக்களது இலக்கணம். முத்துக்கள் நீரிலுண்டா னவை, தரையிலுண்டானவை என இருவகைப்படும். வச்சிராயுதத்தால் பிளக்கப்பட்ட வலாசுரனது எந்தப் பல்வரிசை உண்டோ அது பதிமூன்று இடங்களில் சிதறுண்டு விழுந்தது. சங்கு, மீனின் தலைப்பாகம், மேகம், மங்கையரது கழுத்து, மூங்கில், பன்றியின்பல், பாம்பின்படம், யானையினது தந்தம், கொக்கின் கழுத்து, காமக்கரும்பின் கணுக்கள், நெற்கதிர், முத்துச் சிப்பி, கோவேறுகழுதையின் புயம் இவை மேற்கூறிய இடங்களாகும். மாடப்புறு முட்டைபோல் வெளுத்த சங்கினின்றும் உண்டான முத்து மேன்மைபெற்றது மீன்தலையிலிருந்து உண்டாகும் முத்து பாடலிப்பூ போன்றிருக்கும். மேகமுத்து இளம்கதிரவனது ஒளிக்கு மேம்பட்டிருக் கும். மங்கையர் கழுத்து, கொக்கின் கழுத்து கோவேறுகழுதையின் புயம் இவற்றிருந்து உண்டாகின்ற முத்து அனேகமாக இல்லையென்றே சொல்ல லாம். அத்தனை அபூருவமானது. மூங்கில் முத்து மிகச் சிறப்புற்றது. ஆலங்கட்டி நிறமுடையது. பன்றிப்பல் முத்து சிவப்பு நிறத்தது. பாம்பு முத்து நீலஒளி உடைத்தது. யானைமுத்து மஞ்சள்நிறம். காமக்கரும்பு முத்தும் நெல்முத்தும் அப்படியே. சிப்பிமுத்து சந்திரன்போன்றது. இவ்விதம் முத்துக்களில் பதின்மூன்று சாதிகளிருக்கின்றன. சிப்பிமுத்துக் களும் மூங்கில் முத்துக்களும்தான் அதிகம். அதிகமாய்க் கிடைத்தலாலும், குணங்கள் அதிகமாக இருத்தலாலும் சிப்பிமுத்துக்களே சிறந்தவை. விட்டுணு முத்து நீலநிறம். இந்திரமுத்து மஞ்சள்நிறம். இயமமுத்து மேக நிறம். வாயுமுத்து இரத்தச் சிவப்புநிறம். வருணமுத்து வெண்மைநிறம். அக்கினிமுத்து செந்நிறம்.

நல்ல உயரம்செல்லும் தன்மை, நல்ல உருண்டையாயிருத்தல், மாசின்மை, கனம், வழுவழுப்பு, நல்லஒளிஇவை ஆறும் முத்தின்குணங்களா கும். இக்குணங்கள் படைத்த முத்தையணிதலால் ஆயுள் பெருகும். செல் வம்தழைக்கும், கெடுதல்கள் நீங்கும்.

மாணிக்கத்தின் இலக்கணம் இப்பொழுது கூறப்படுகின்றது. கிருதயுகத்தில் மக்கத்திலும், திரேதாயுகத்தில் காளபுரத்திலும், துவாபர யுகத்தில் தும்புரு என்னுமிடத்திலும், கலியுகத்தில் சிங்களத்தீவிலும் மாணிக்கச்சுரங்கங்கள் இருக்கும். தாமரைப்பூ, செங்கழுனிப்பூ, மின்மினிப் பூச்சி, நட்சத்திரம், அனல், விளக்குவெளிச்சம், மாதுளவிதை, சூரியன், மாதுளம்பூ, பட்டுப்பூச்சி இவைபோன்ற நிறமுடைய மாணிக்கம் சிறந்தது பிராம்மண மாணிக்கத்திற்கு சாதவெங்கமென்றும், சத்திரியத்திற்குக் குரு விந்தமென்றும், வைசியத்திற்கு சௌகந்திகமென்றும் பெயர். நான்காம் வருணத்திற்கு கவாங்கம், நீலகந்தி என இரண்டுபெயர்கள். ஒன்றுவதின் சாயைகள் பத்து, இரண்டாவதின் சாயைகள் எட்டு, மூன்றுவதின் சாயை கள் ஆறு, நான்காவதின் சாயைகள் நான்கு. முதற்சாதி மாணிக்கத்தின் சாயைகள் தாமரைப்பூ, செங்கழுனிப்பூ, மின்மினிப்பூச்சி, அனல், குயிற் கண்கள், விளக்குவெளிச்சம், மாதுளவிதை, சூரியன், மாதுளம்பூ, பட்டுப்

பூச்சி இவைபோன்றிருக்கும். இரண்டாம்சாதி மாணிக்கத்தின் சாயைகள் செம்பரத்தைப்பூ, கிம்சுகப்பூ, உலோத்திரப்பூ, பந்துகப்பூ, குன்றிமணி, முயல்இரத்தம், செந்தூரம் இவைபோன்றிருக்கும். மூன்றாம்சாதி மாணிக்கத்தின் சாயைகள் செம்பஞ்சுக்குழம்பு, குயிற்கண், இலவுப்பூ. ஐந்திலைப்பூ, பழுக்கக்காய்ச்சின உலோகம் இவைபோன்றிருக்கும், நாலாம்சாதி மாணிக்கத்தின் சாயைகள் குசும்பப்பூ, கோவைப்பழம், மருதோன்றிப்பூ, மஞ்ஞிலை இவைபோன்றிருக்கும். கனத்திருக்கும் மாணிக்கக்கல்லை சிறுவரென்று புகழ்வதுண்டு. மாணிக்கத்தில் மேல்நோக்கி ஒளிவீசுவது உத்தமம், கீழ்நோக்கி ஒளிவீசுவது மத்திமம், பக்கத்தில் ஒளிவீசுவது மட்டம். முதல்தரமான சாதிலெங்க மாணிக்கத்தை அணிபவன் பசு, பூமி, வித்தை, கன்னி இவற்றை அரிப்பவனுடையவும் அசுவமேத வேள்வி கடத்தியவனுடையவும் புண்ணியத்தை எய்துகின்றான். குருவிந்தத்தை அணிபவன் அரசருக்கு அரசனாவான். சௌகந்திகம் பூண்பவன் ஒப்பற்ற செல்வத்தையும் புகழையும் பெறுவான். சுவாங்க மாணிக்கமணிபவன் பால், தானியங்கள் இவையுடன் செழிப்புற்றிருப்பான். குற்றமற்றதும் குணங்கள் நிறைந்ததுமான மாணிக்கக்கல்லைப் பூணுபவர் இன்னும் அதிகமான இரத்தினங்கள் பெற்று நிலையான செல்வத்தையும் கல்வியையும் அடைவர்-

இனிப் பச்சையின் இலக்கணம். பச்சையானது வலாசுரனது பித்தநீரினின்றும் உண்டாயது. பறவைகள் அந்தநீரைக் கொத்திக் கொண்டு போகும்போது தில்லிநாட்டு வட்டாரங்களில் அது சிந்தியது. ஆதலால் அந்த நாட்டைச்சுற்றிலும் பச்சைக்கல் சுரங்கங்கள் காணப்படுகின்றன. கருடனது தாயாரான விந்தையென்பாள் அருணனது முட்டை உடைந்ததும் அன்பின்பேரில் அந்தக்கருநிறமான ஓட்டை கருடனின் இடுப்பில் கட்டினாள். அந்த முட்டையோட்டின் சிறு துண்டுகள் எங்கெங்கு விழுந்தனவோ, அங்கெல்லாம் பச்சைக்கல் கனிகள் இருக்கின்றன. மந்தர மலையில் மோகினி உருவெடுத்த விட்டுணுவைக்கண்ணுற்று மயங்கிப்பின் னெடுசென்ற சிவபெருமானது விந்துக்கள் விழுந்த இடங்களெல்லாம் பச்சைக்கனிகள் காணப்படுகின்றன. அந்த வீரியத்தினின்று ஐயனரும் பிற காட்டுத்தெய்வங்களும் தோன்றினர். கருடனும் அந்த வீரியத்தைத்தின்று கடலிற்கப்பாலுள்ள துருக்கர் காட்டில் உமிழ்ந்தது. அங்கும் பச்சைக்கல் கனிகள் இருக்கின்றன. அக்காரணம்பற்றி பச்சைக்கு காருத்துமதம் எனப்பெயர். இறகுலாகவும், அறுகம்புல்லின் நிறமுடையதாகவும் துளசி இலைபோன்றும் தினைஇலை நுனிபோன்றும் பச்சைக்கல் இருக்கும். பச்சையில் குணமுடையதென்றும் குணமற்றதென்றும் இருவகை. குணமுள்ளது காடம், உல்லசிதம், பேசலம், பித்தகம், முத்தம், பிருதுகம் என ஆறுவகைப்படும். காடம் என்பது அறுகம்புல் நிறமுடையது. உல்லசிதம் தளர்ந்த பசுமைநிறத்தது. பேசலத்தின் நிறம் தினைஇலையின் நுனியினதுபோன்றது. பித்தகம் கிளி இறகுபோன்ற பசுமையானது. முத்தமென்பது துளசிப்பச்சை. பிருதுகம் தாமரைஇலைப்பச்சை. குற்றங்கள் ஐந்துவிதம். தோஷலேசாந்விதம், துஷ்டம், தோஷமூர்ச்சிதம், தோஷலேசம், மந்ததோஷம் என அவற்றின் பெயர்கள். தோஷலேசாந்துவிதம் என்பது எலுமிச்சஇலைப் பச்சை. துஷ்டம் என்பது அரளிஇலைநிறம். தோஷமூர்ச்சிதம் என்பது செந்தாமரை இலைநிறம். தோஷலேசம் என்பது பனிதோய்ந்த தாமரைஇலை நிறம். மந்ததோஷம் என்பது மயில்தோகைநிறம்.

மேலேகூறிய குணங்கள்நிறைந்ததும் குற்றங்கள்அற்றதுமானபச்சைக்கல்லை அணியும் அரசன் எதிரிகளை வெல்வான்.

நீலக்கல் வலாசுரன் கண்ணினின்றும் தோன்றியது. சிவபெருமானது கழுத்தினின்றும் தோன்றியது என இருவகைப்படும். விசுவரூபரைக் கொலைசெய்த பழிநீங்குதற்காக இந்திரன் அசுவமேதவேள்வி நடத்தினான். வேள்வி முடிந்ததும் புரவியினது கண்மலம் எங்கெங்கு வீழ்ந்ததோ அங்கெல்லாம் இந்திரநீலம் என்ற பெயர்பெற்ற நீலக்கல்கள் உண்டாயின. துவட்டாவின் மகளான சமிஞ்ஞை என்பவள் சூரியனது மனைவி. அவனது சூட்டைப் பொறுக்கமுடியாமல் சாயை என்ற தனது நிழலை வைத்துவிட்டு அவன் தவத்திற்குச் சென்றனள். சூரியன் அங்குசென்று, அவளைக்கண்டு, அவளது அழகில் மயங்கிக் குதிரை உருவம் எடுத்த அவளைக் குதிரைஉருவத்தில் தழுவிக்கொண்டு ஒடுகையில் எந்த எந்த இடங்களில் விந்துக்கள் வீழ்ந்தனவோ அங்கு நீலக்கல்கள் விளைந்தன. அந்தக்கற்கள் தேவராலும் மனிதராலும் அணியத்தக்கவை. நீலத்தில் நான்குசாதிகள். கொஞ்சம் வெளுத்தது பிராம்மணசாதி, கொஞ்சம் சிவந்தது சத்திரியசாதி, வெளுப்பும் கருப்பும் கலந்தது வைசியசாதி, மிகக்கருத்தது நாலாவதுசாதி. சொல்லிய குணங்களுடைய நீலத்தை அணிவதால் மங்களம் உண்டாகும். எந்த நீலத்தின் மத்தியில் வானவில்லினது ஒளி வீசுகின்றதோ அந்த நீலத்திற்கு இந்திரநீலமெனப்பெயர். கிடைத்தல் மிகவும் அரிது. பாலில் போடும்பொழுது எந்த நீலக்கல் நூறுமடங்கு அதிகமான நீலஒளியை அளிக்கின்றதோ அதற்கு மகாநீலமெனப்பெயர். வைரம், முத்து, மாணிக்கம், பச்சை இந்திரநீலம் இவற்றால்செய்யப்பட்ட ஆபரணங்களையே நலம்நோரும் அரசர் அணியவேண்டும். மற்ற இரத்தினங்களால் செய்தவற்றை நீக்கவேண்டும் வைடூரியம், கோமேதகம், புட்பராகம், பவளம், இந்த இரத்தினங்களால்செய்த கொஞ்ச ஒளியையுடைய ஆபரணங்களோ மேற்கூறிய ஆபரணங்களுடன் சேர்த்து அணிந்தால் அரசர்க்கு நன்மையுண்டு.

இனி கோமேதகத்தின் இலக்கணங்கள். வலாசுரனது கொழுப்பு வீழ்ந்த இடங்களிலெல்லாம் கோமேதகக்கல்லின் கனிகள் தோன்றின. கோமேதகக்கல்லானது தேன்சொட்டுப் போன்றும், பசுவின் நீர், நெய், இலைபோன்றும் மிகத் தெளிவானதுமாய் இருந்தால் சிறந்தது. அந்தக் கல்லை அணிதலால் பாவங்கள் ஒளிந்து தூய்மை ஏற்படும்.

அடுத்தபடியாக புட்பராகக்கல்லின் இலக்கணம். முன்னாளில் இரண்ணியாக்கனை கொல்வதற்காக விட்டுணு பன்றிஉருவம் எடுத்து உம் என்று கூவியபொழுது பன்றியின் மூக்குத்துவாரங்களின் வழியாய்க் கபம் வெளியேவீழ்ந்தது. அந்தக்கபம் வீழ்ந்த இடங்களில் புட்பராகக் கனிகள் உண்டாயின. வலாசுரனது அங்கத்தினின்றும் பலசுரங்கங்கள் தோன்றின. பொன்னொளியுடன் மேல்பாகம் உருண்டு செவ்வாய்க் கிரகம்போல் மாசற்றதாய் மனத்தைக்கவர்க்கூடியதாய் இருக்கும் புட்பராகம் சிறந்தது. பாரியாத்திர மலையின் உச்சிகளிலும், மந்தரமலையின் ஓங்கல்களிலும், இந்திரனது நகராகிய அமராவதியிலும், இந்திரனது அலையிலும் புட்பராகங்கள் இருக்கின்றன. அவற்றை அணிகின்றவன், வெற்றிபெரும் அரசனாவான்.

பின்னர் வைடூரியக்கல்லின் இலக்கணங்கள். வலாசுரனதுஉரோமங்கள் வைடூரியக்கற்களாயின. இளாவிருதம் என்ற நாட்டிலும், மகாமேருவின், மேற்குப்பக்கங்களிலும் முற்காலத்தில் வைடூரியங்கள் இருந்தன. இப்பொழுது பூலோகத்தில் கோசக்கத்திலும் மகதநாட்டிலும், பாரசீகத்திலும்,சிங்களத்தீவிலும், மலயம்,திரிகூடம்இந்தமலைகளிலும்பிறதீவுகளிலும் வைடூரியக்கனிகள் இருக்கின்றன. ஊழிக்காலத்தில் கொந்தளிக்கும் கடலினது முழக்கம்போன்ற மேக ஒலியிலிருந்தும் உண்டான வைடூரியங்கள் பூமியில் சிலஇடங்களில் கிடைக்கின்றன. மூங்கில்இலை, பூனையினதுகண், மயில்கழுத்து இவைபோன்ற நிறமுடையதும், வழுகுகின்றதும், நிறைந்த ஒளியுடையதுமான வைடூரியம் சிறந்தது. வலதுபுரம ஒளிவீசினால் பிராம்மணசாதி என்றும் இடதுபுரம் சாயை ஒடினால் சத்திரியசாதியென்றும், பின்புறம் சாயை ஒடினால் வைசிய சாதியென்றும், முன்புரம் சாயை வீசினால், நாலாம்சாதியென்றும், சொல்வார்கள். வைடூரியக்கல்கள் எப்பொழுதும் பேணுதற்குரியவை. அறிவுடையஅரசன் அவற்றை அணிந்துகொள்ள வேண்டும்.

இனிப்பவளத்தின் இலக்சுணம். வலாசுரனது உடல் மாமிசம் பவளமாயிற்று. அந்தப்பவளத்தின் சுரங்கங்கள் பலஉள. முன்னம் பிரம்மதேவர் எந்த உடலைக்கொண்டு பிதுருக்களைப் படைத்தாரோ அந்த உடலினின்று, பலவிடங்களில் மலங்கள் விடப்பெற்றன. அவ்விடங்களிலெல்லாம் இடப்புறச் சாயையுடன் கூடிய பவளங்களின் கனிகள் ஏற்பட்டன. ஒருகாலத்தில் மலைகள் இறக்கைகளுடன் பறந்து மக்களுக்கு இன்னலை விளைவித்தன. இந்திரன அவைகளது இறக்கைகளை வெட்டினவே அவை கடலில் வீழ்ந்தன. வெட்டுண்ட இடத்திலிருந்து பெருகிய உதிரம்விழுந்த இடங்களிலெல்லாம் பவளக்கனிகள் முளைத்தன. மலந்த கிம்சுகப்பூப் போன்ற பவளங்கள் அங்கு உண்டாகின்றன. தாயால் பிளக்கப்பட்ட அருணனது உடலிலிருந்து எந்தஎந்த இடங்களில் உதிரம்சிந்தியதோ அந்த இடங்களிலும் பவளங்கள் விளைகின்றன. மகாவிட்டுணு மதுகைடப அவுணர்களைக்கொன்றபொழுது அவ்விருவரது ஊன் எவ்விடங்களில் ஒட்டியதோ அவ்விடங்களிலும் பவளங்கள் உண்டாகின்றன. கோவைப்பழம் போன்றதும், செம்பருத்திப்பூப்போன்றதும், கிளிமூக்குப்போல் சிவந்ததுமான பவளமே சிறந்தது. மண் ஒட்டி இருத்தல், ஓட்டையுள்ள முகம், பூச்சியரிப்பு இம்மூன்றும் பவளத்திற்கேற்படும் குற்றங்கள். குற்றமற்ற பவளத்தைப் பூணுதலால் மங்கையர் இன்பம், ஆயுள், மக்கள், பிணியின்மை முதலான நலன்களைப்பெறுவர்.

சூரியனது கதிர்கள்பட்டதும் அனலைக்கக்கும் படிகக்கல்லிற்குச் சூரியகாந்தக்கல் என்றும், சந்திரனது கதிர்கள் பட்டதும் அமுதைப்பெருக்கும் கல்லிற்கு சந்திரகாந்தக்கல் என்றும்பெயர். இந்தக்கல் கலியுகத்தில் அரிது. ரத்தினசாத்திரம் அறிந்தோர் இந்தஇருகல்களையும் ரத்தினக்கூட்டத்தில் சேர்த்திருக்கின்றனர். என்று மொழிந்தார்.

பின்னர் பீடம் ஒன்று செய்வித்து லைசியர் வடக்குமுகமாய் உட்கார்ந்து பீடத்தின்மேல் புதுத்துணி விரித்து மத்தியில் மாணிக்கத்தையும் முறைப்படி கிழக்குமுதல் எட்டுதிசைகளில் முத்துமுதற்கொண்டு எட்டு

இரத்தினங்களையும் வைத்து நவக்கிரக பூசை செய்து சுந்தரேசமூர்த்தியைப் பார்த்துக்கொண்டு இந்த சிறுவனுக்கு எல்லாமங்களங்களும் உண்டாகட்டும் என்ற அருள்மொழியுடன் பலபெரிய உயர்தரமான இரத்தினங்களைக் கொடுத்தார். அமைச்சரனைவரும் இன்பக்கடலில்மூழ்கி வைசியர்தந்தருளிய விலை மதிக்கமுடியாத இரத்தினங்களைப் பெற்றுக்கொண்டு, அவரை அங்கு வீற்றிருக்கும்படியாகக் கேட்டுக்கொண்டனர். பின்னர் சாத்திரப்படி ஓர் அழகான முடியைச் செய்வித்து ஓமங்கள் செய்து, தானங்கள் கொடுத்து, படித்த பிராம்மணரைக்கொண்டு ராசகுமாரனுக்கு அபிஷேகம் நடத்தி, சோதிஷில் முடிசூட்டி குடை சாமரம் முதலான அரசர்க்குரிய குறிகள் கொடுத்து வணங்கி அபிஷேக பாண்டியன் என்ற பெயருமிட்டனர். சனங்கள் களிப்புற்று பெருமானைத்துதித்தனர்.

அமைச்சர் வைசியரைப் பேணுதற்காகப் பொன், ஆடைகள் முதலானவற்றை எடுத்துக்கொண்டு அவரது அண்மையில் சென்றனர். வைசியர் அவர்கள் வருவதைக்கண்டு புன்முறுவல் பூத்து அருளுடன் நோக்கி ஒளி உருவமெடுத்து மூலலிங்கத்தில் கலந்தார். இதைக்கண்ட அமைச்சர் திகைப்படைந்து, இரத்தினங்கள் கொடுத்த வைசியர் ஐயமின்றிச் சிவபெருமானே! ராசகுமாரன் நீண்ட ஆயுளுடனிருப்பான், என்று சொல்லியவண்ணமாய் மனமகிழ்ச்சியுடன் இல்லம் சென்றனர். சிறுவனுயிருந்தபோதிலும் ராசகுமாரன் இறைவனருளால் சிக்கிரத்திலேயே முழுப்படையையும் பெற்றுப் பொக்கிஷத்தைக் கொள்ளையிட்டவரிடமிருந்து பொருள்களை மீட்டிஞன். நாற்படையுடன் மதுரைச்சக்கரவர்த்திபோன்று நெறியுடன் வெகுகாலம் நாட்டை ஆண்டான்.

இந்தப் பதினேழாம் திருவிளையாடற் கதையைப் படிப்போரும் கேட்போரும் இரத்தினங்கள் முற்றும்பெற்று எல்லாச்செல்வங்களுடன் வாழ்வர்.



இருபத்திநான்காம் அத்தியாயம்.

மேகங்கள் கடலைப் பருகுதல்.

அபிஷேக பாண்டியன் ஆலவாய்ப்பெருமானிடத்தே அதிக அன்புகொண்டு அபிஷேகத்தில் மிக்க உவகைகொள்ளும் மூர்த்திக்கு நாள் தோறும் பால், பஞ்சாமிருதம், சந்தனம், மலர்கள், இரத்தினம் நீர், பழச் சத்து, கருப்பஞ்சாறு வடிகட்டின நீர் இவற்றால் முறைப்படி அபிஷேகம் செய்வித்து, பனிநீருடன் கலந்த கர்ப்பூரக்குழம்பைப் பூசி, தூபம் முதலான வரிசைகள் கொடுத்து, பாயசம், வடை, பழங்கள் முதலியவற்றை நைவேத்தியம் செய்து, வெவ்வேறு பாத்திரங்களில் பால், தயிர், தேன் முதலிய குடிக்கும் பொருள்களைத் தந்து, தாம்பூலம் கொடுத்துக் கர்பூரம் காட்டி வழிபாடு நடத்தினான். ஒருநாள் அரசன் கர்ப்பூரம் பூசியிருந்த மூர்த்தியைக் கண்ணுற்று மகிழ்ச்சியடைந்து மூர்த்தியைக் கர்ப்பூரசுந்தரமென்று அழைக்கத்தொடங்கினான்.

ஒருசமயம் சித்திரைமாதத்துப் பூர்ணிமையன்று பாண்டியன் பச்சைக்கர்ப்பூரம், சந்தனம், கஸ்தூரி, கோரோசனை முதலான மணப்பண்டங்களாலும், பலவகை மலர்களாலும் இறைவனது வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தபொழுது, பெரும் சிவனன்பனான தேவேந்திரன் வழக்கம்போல் தனது வழிபாட்டை அங்கு நடத்துதற்காக வந்து, இடம் கிடையாமல் காத்து நின்று பாண்டியன் நடத்தியபூசையைக்கண்டு ஆச்சரியமெய்தி அது முடிந்தபிறகுத் தனது பூசையை நிகழ்த்திவிட்டுச் சுவர்க்கம் சென்று சுதருமை எனும் தனது அவையில் வீற்றிருந்தான்.

அப்பொழுது வருணன் இந்திரனைக்காண்பதற்கு வந்து வணங்கி இருக்கையிலமர்ந்து குசலம் வினவித் தேவராசனைத் துதித்தான். மீண்டும் இந்திரனை உற்றுநோக்கவே அவனது முகத்தில் வியர்வைத்துளிகள் இருக்கக்கண்டான். உடனே காரணம் என்னவென வினவினான். அப்பொழுது இந்திரன் வருணனிடத்தில் ஆலவாயுடையாரது பெருமையைச் சொல்லத் தொடங்கி, 'வருணு! பூலோகத்தில் பாண்டியநாட்டில் கடம்பவனமத்தியில் சுந்தரேசமூர்த்தி இருக்கின்றார். அந்த மூல லிங்கத்தை முதலில் கிருத யுகத்தில் நான் வணங்கி விமானமும் கட்டுவித்தேன். மூர்த்தியைக்கண்டதுமே விருத்திரனைக் கொன்ற எனது பழி நீங்கிற்று. பாண்டியராசனது சிவனன்புபோல் எங்குமே கிடையாது. அதேபோல் ஆலவாய்மூர்த்தி போன்ற சிவலிங்கமும் எங்கும் கிடையாது. பூர்ணிமையன்று அவரை வழிபடுதற்காக அங்கு சென்று பொன்மயமான தாமரைமலர்களால் பூசித்து வணங்கித் துதித்துப் பின்னர் இங்குவந்தேன். அந்த மூர்த்தியை வணங்குதலால் எல்லாப் பழிகளும் தொலைந்து செல்வங்களனைத்தும் பெருகும். அங்கே அங்கயக்கண்ணியென்றும் அம்மன் இருக்கின்றாள். அந்த அம்மையை வழிபட்டாள் ஆயுள், பிணியின்மை முதலிய எல்லா நலன்களும் கிட்டும். அம்

மனது முன்னிலையில் பொற்றூமரைப்பொய்கை என்ற ஒரு தீர்த்தம் இருக்கின்றது. அதில் நீராடித் தொலையாத பழியே இல்லை. அந்தத்தலம் மூர்த்தி, தீருத்தம் இவைகளின் மாண்பை பிரகர்ப்பதியும் கூறமுடியாது,'' என்று பகர்ந்து முடித்தான். அதுகேட்ட வருணன் மீண்டும் இந்திரனை நோக்கித் 'தேவராசனே! இன்று இங்கு அவைக்கு வரும்பொழுதே கன்று டன்கூடிய காமதேனுவைக்கண்டேன். பிற நல்ல சகுனங்களும் எற்பட்டன. ஆதலால் இத்தகாள் எனக்கு நன்னாளென்றே கருதுகின்றேன். எனக்கு ஒருவகையிலும் தீராத ஓர் வயிற்றுநோவு இருந்துகொண்டிருக்கின்றது. அது தீருவதற்கு ஏதாவது வழி கூறவேண்டும் ஐயனே!'' என்று கேட்டுக்கொண்டான்.

உடனே இந்திரன், 'வருணதேவனே! தீராதநோய்கள் தீர்வதற்கும், தீராத பாவங்கள் தொலைவதற்கும் ஆலவாய்ப்பெருமான் ஒருவரேதான் கதி. உளம், பேச்சு, செயல், இம்மூன்றினது தூய்மையுடன் செல்வத்திற் கேற்ற வரிசைகளுடன் அவரை வழிபடுதல்வேண்டும். சலாசனே! முதலில் இலிங்கத்தின் மாட்சியையும் பாண்டியமன்னனது அன்பையும் சோதித்தப்பின்னர் இலிங்கத்தின் வழிபாட்டை நிகழ்த்தலாம். சலோதரமென்ற கொடிய நோய் தீர்ந்துவிடும்'' என்று உரைத்தான். உடனே இந்திரனிடம் விடைபெற்றுப் பெரு மகிழ்ச்சியுடன் வருணன் தன்னிடத்திற்கேகினான்.

ஒருநாள் வருணன் இறைவனது பெருமையையும் அரசனது சிவனன்பையும் சோதித்தற்பொருட்டுக் கடலைப்பார்த்து, 'மதுரையை வீழுங்கிவிடு' எனப்பணித்தான். சலாசனது உத்தரவை ஏற்றுக் கடலானது மலைபோன்ற அலைகளுடன் பேரிரைச்சல் செய்துகொண்டு மதுரையை சூழ்ந்துவிட்டது. பெரும் இன்னல் வந்துவிட்டதே என்று தேவர், கந்தருவர், இயக்கர் முதலான எல்லோரும் அலறிக்கொண்டு ஆலவாய்ப்பெருமானிடம் 'கடவுளே! துயர்தீர்ப்பவரே! நீர்தான் மதுரையைக் காக்கவேண்டும்' என்று முறையிட்டனர். இதற்குள்ளாக பாண்டியராசனும் எழுந்து திருக்கோயிலுக்கு ஓடி இறைவனது திருவடிகளில் வீழ்ந்து 'வணங்குவோர்க்கு அபயம்கொடுக்கும் அண்ணலே! மதுரையையும் எனது குடிகளையும் என்னையும் காப்பாற்றியருளவேண்டும்'' என்று வேண்டினன். ஆலவாய்ப்பெருமான் உடனே தனது சடைமுடியினின்று ஈன்கு மேகங்களை உண்டாக்கி கடல்நீரனைத்தையும் உறிஞ்சும்படி கட்டளையிட்டார். அவ்வண்ணமே நீர் உறிஞ்சப்பட்டு நகர் முன்போல் ஆய்விட்டது. பெருமானது இந்த அற்புதச் செயலை கண்ணுற்ற குடிகளும் அரசனும் அவரை வணங்கி வெகுவாகப் புகழ்ந்தனர்.

இது இறைவனது பதினெட்டாம் திருவிளையாடல். இதைப் படிப்போரும் கேட்போரும் இன்னல்களினின்றும் விடுபடுவர்.

இருபத்தைந்தாவது அத்தியாயம்.

பெருமழையினின்று காத்தல்.



கடல்நீர் உறிஞ்சபட்டது கண்டு வருணன் கடும்சினம்கொண்டான். கண்கள் சிவந்தன. புருவங்கள் நெறிந்தன. நிகில், நாணம், துயர் லியப்பு முதலானபலவகை உணர்ச்சிகள் அவன் உள்ளத்தில் எழுந்தன. உடனே புட்கரம் ஆவருத்தகம்முதலிய நான்கு மேகங்களையழைத்து மதுரைநகரில்சொரியுங்கள் என்று அவன்பணித்தான். நான்கு மேகங்களும்ஆணைக்குப் பயந்து நடுங்கி உலகத்தின் கண்ணிருக்கும் மேகக்கூட்டங்கள் யாவற்றையும் திரட்டிக்கொண்டு பொழியத்தொடங்கின. நகமெங்கும் காதகளைச் செலிடுபடுத்தும் மேகமுழக்கம். அடுத்தடுத்து மிளிரும் மின்னல்களின் ஒளி கண்களைப் பரித்தது. ஜலவீழ்ச்சியின் வன்மையோ சொல்லமுடியாதது. ஆலங்கட்டிகள் பெரும் கற்றுண்டுகள்போன்று விழுந்தன. ஒரே சலப்பிரளயம்.

பேரின்னலைக்கண்டு குடிகளும் அரசனும் நிகிலடைந்து கலக்கமுற்று முன்போலவே ஆலவாயுடையானது திருத்தாள்களைச் சரண்புகுந்தனர். பெருமழையால் வருந்துகின்றோம் காக்கவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டனர். கருணைக்கடலான பெருமான் அன்பரது பேரச்சத்தைக்கேட்டு அதற்கு என்னவகை செய்வதென்று நினைந்து முன்னம் கடலை உறிஞ்சின நான்கு மேகங்களையும் அழைத்து பெரும் உருவங்களை எடுத்துக்கொண்டு நகரைச்சுற்றி நான்குபக்கங்களிலும் மேலிலும் கூடாரம்போன்று நின்று நகருக்குள் மேகங்கள் புகவொட்டாது செய்யும்வண்ணம் உத்தரவிட்டார். சடையினின்றும் தோன்றிய அலை உடனே ஓர் பெரிய மண்டபம்போல் தங்களை ஆக்கிக்கொண்டு நகரினுள்ளே ஒருசொட்டு நீர்கூட மேலிருந்து விழமுடியாதபடி புட்கரம் ஆவர்த்தகம் முதலான மேகங்களைத் தடுத்துவிட்டன. அரசனும் குடிகளும் அச்சம்நீங்கி மகிழ்ந்தனர். நீரலைத்தும் வெளிப்புரங்களிலேயே ஓடப் பெரியகோபுரங்களும் கூடங்களும் தூண்களாகத்தோன்ற மேலே மேகங்கள் மூடிக்கொண்டிருக்க, ஆலவாய்த்தலமே ஓர் பெரிய மண்டபம்போன்று விளங்கிற்று. தேவர் முதலியோரும் ஆலவாயின் கலத்தை விரும்புவோரும் இந்த அற்புதத்தைக்கண்டு களித்தனர். குடிகள் இன்புற்று வாழ்ந்தனர்.

வருணனும் பயந்து மேகங்களைப் பொழியாமலிருக்கும்படி உத்தரவிட்டான். மின்னல்களுடன் கூடிய பெருமழை நின்றது. தேவர் முதலான அனைவரும் பெருமானை வணங்கித்துதித்து தம்மகம் சென்றனர். வருணன் தனது சலோதர நோய்தீரவேண்டுமென்ற அவாவுடன் அச்சத்துடனும் அன்புடனும், கடல்களும், ஆறுகளும், சூழ்ந்தவர, ஆலவாய்த்தலம் வந்தான். உடனே சங்கற்பம்செய்து ஆடையுடன் பொற்றாமரையில் நீராடினான். அக்கணத்திலேயே ஜலோதரநோய் தீர்ந்து உடல் இலேசாய்

விட்டது. சொல்லொணா மகிழ்வுற்று, நீரினின்று வெளியேறி, உலர்ந்த ஆடை அணிந்து, நீறுபூசி, உருத்திராக்கமாலைகள் பூண்டு, அங்கயக்கண்ணி அம்மையை வணங்கி, வலமாக வந்து இந்திரவிமானத்தின்கீழ் உறைந்திருக்கும் மூர்த்தியைக்கண்டு, திருவடிகளில் வீழ்ந்து மயங்கிவிட்டான். பின்னர் எழுந்து இறைவனின் வழிபாட்டில் ஈடுபட்டான். கெங்கை முதலான புண்ணிய நதிகள் அபிஷேகத்திற்கு வேண்டிய நீரை தங்கக்குடங்களில் கொடுத்தன. காமதேனுவானது மெல்லிய அழகான ஆடைகளையும், பற்பல விசித்திரமான ஆபரணங்களையும், முடிகளையும், நறுமணமுள்ள சந்தன வகைகளையும், பல நிறங்களுடன் கன்றுய் மணக்கும் மலர்களையும் கொடுத்தது. மேலும் தூபம், தீபம் முதலான பூசைவஸ்துக்களையும், பழம் பஞ்சாமிருதம்போன்ற நைவேத்தியவகைகளையும் அதுவே கொடுத்தது. இவ்விதமாக வழிபாட்டிற்கு வேண்டிய பொருள்கள் யாவற்றையும் சேர்த்துக் கொண்டு வருணன் முறைப்படி தனது கிரிகரணங்களாலும் இறைவனை வணங்கினான். பின்னர் சுக்கிரன்போன்ற ஐவகும் பருத்தமுத்துக்களால் இறைவனது ஆயிரம் திருநாமங்களைச் சொல்லி அருச்சனைசெய்து மேருவை வில்லாகவும், வாசுகியை நாணுகவும், பூமியைத் தேராகவும் விட்டுணுவை அம்பாகவும் ஆக்கிக்கொண்டஆலவாயுடையாராகிய சிவபெருமானுக்குவணக்கம். அன்பாகிய துயரை நீக்கி மேலாய் நிற்பவரும் கார்மேகம்போன்று கருத்த கழுத்துடையவரும், பூதங்களுக்கிறைவரும் முல்வுலகிற்கும் காரணமானவருமான ஆலவாயுடையாராகிய சிவபெருமானுக்கு வணக்கம். பன்றி வடிவெடுத்து விட்டுணுவால் தேடப்பெறும் அடிப்பாகத்தையுடையரும் அன்ன உருவில் பிரம்மனுக்கு எட்டாத முடியுடையரும் ஒளிமயமாய் இலிங்கவடிவுடையவருமான ஆலவாயுடையாராகிய சிவபெருமானுக்கு வணக்கம். கடம்பக்காட்டிலுறைபவரும், உமையொருபாக உருவமுடையவரும் காலனை உதைத்தவரும் கருணைக்கடலுமான ஆலவாயுடையாராகிய சிவபெருமானுக்கு வணக்கம். உலகத்திற்கிறைவரும், தேவேந்திரனால் பூசிக்கப்பெற்றவரும், ஸ்ரீவித்தையினால் அறியப்பெரும் சிறப்புடையவரும், வித்தைகளை அளிப்பவரும், இந்திர விமானத்தில் வீற்றிருப்பவருமான ஆலவாயுடையாராகிய சிவபெருமானுக்கு வணக்கம். செல்வம் கொடுப்பவரும் வேதாந்த சாத்திரங்களில் பறைசாற்றப்படும் பெருமையுடையவரும், எல்லாமாயிருப்பவரும், இன்னல்களை அகற்றுபவருமான ஆலவாயுடையாராகிய சிவபெருமானுக்கு வணக்கம். கெங்கையணிந்தவரும், விட்டுணுவால் வணங்கப்பெற்றவரும், கன்னங்களில் இலங்கும் தாடகக்குண்டலங்கள் பூண்டவரும், கந்தருவர், கிங்கரர் முதலானவர்களால் பகழப்பெற்ற கணத்தலைவருமான ஆலவாயுடையாராகிய சிவபெருமானுக்கு வணக்கம். மலயத்துவச பாண்டியனது திருக்குமாரியின் கையைப்பிடித்து சுந்தரபாண்டியன் எனத் திருநாமத்துடன் பாண்டியநாட்டு மன்னனாய் விளங்கிய ஆலவாயுடையாராகிய சிவபெருமானுக்கு வணக்கம். எவரது மாண்பு பிரகர்ப்பதியாலும் கூறமுடியாததோ அப்பேர்ப்பட்ட உம்மைப்பற்றி அன்பு மேலீட்டால் இத்தப்புகழ் மொழிகள் கூறிவிட்டேன். மன்னித்தருளவேண்டும் சுந்தர மூர்த்தியே,'' எனத் துதித்தான். பின்னர் மீண்டும்மீண்டும் திருவடிகளில் வணங்கி அன்பேற்பட்டுக் கைகூப்பியவண்ணமாய் நின்றான்.

உடனே இறைவன் ஆபரணங்களனைத்தும் பூண்ட சுந்தரவடிவலனாய் காட்சி அளித்தார். மனம் வாக்குக்கெட்டாத அந்த மூர்த்தியைக்

கண்டதும் வருணன் திகைப்புற்று சித்திரப்பதுமைபோன்று நின்றனன். இறைவன் அவனை வேண்டும்வரத்தைக் கேட்கும்படி ஆணை கொடுத்தார். வருணன் பெருமானைநோக்கி "மலைமகள் மணாளனே! கடவுளே! அறியாமையால் கடலை கருள் புகவிட்டும் பெருமழை பெய்யச்செய்தும் இரண்டு குற்றங்கள் புரிந்துவிட்டேன். அவ்விரண்டையும் மன்னித்தருளவேண்டும். எனது கடுமையான நோய் உமது மூர்த்தியையும் கண்டு பொற்றுமையில் நீராடியதுமே தீர்ந்து விட்டது." என்று அறிவித்துக்கொண்டான். அதைக் கேட்ட பெருமான், "வருணா! உனக்குச் செல்வம்யாவும் உண்டாகிப்பெருகட்டும். நீ மொழிந்த இந்த ஆலவாயட்டகத்தோத்திரத்தைப் படித்தாலும் செபித்தாலும் பாவங்கள் தொலைந்து நால்விதக் குறிக்கோள்களும் கைகூடும்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தார்.

பின்னர் வருணன் பேரிலிங்கத்தை மறபடியும்வணங்கி "சிவனே போற்றி! கடம்பவனக்கடவுளே போற்றி! பெரும்தேவனே போற்றி! பிஞ்ஞக போற்றி! கறைகண்டனே போற்றி! சூலமுடையனே போற்றி! ஓடுடையனே போற்றி! கொடியவனே போற்றி! கொன்றைமாலை அணிந்தவனே போற்றி! யோகவடிவனே போற்றி! யோகத்தால் அடையபெறுபவனே போற்றி! யோகினின்தலைவனே போற்றி! காலவடிவனே போற்றி! காலனைமடித்தவனே போற்றி! பிறைசூடியே போற்றி! விரும்பியதருபவனே போற்றி! மங்களவடிவனே போற்றி! மங்களம்தருபவனே போற்றி! வெள்ளைமேகஒளியனே போற்றி! வீட்டுணு பிரம்மன் முதலான தேவரால் வணங்கப்பெறுபவனே போற்றி! தாமரைமுகத்தனே போற்றி!" என்று துதித்துக் குற்றங்களைப் பொறுத்தருளவேண்டுமென்று மீளமீள வேண்டிக் கொண்டு மட்டற்ற மகிழ்ச்சியுடன் தனது உலகத்திற்குச் சென்றனன். அன்று முதற்கொண்டு மதுரைக்கு நாற்கூடற்புரம் எனப் பெயர்வந்தது.

இத்தப் பத்தொன்பதாவது திருவிளையாடலைப் படிப்போரும் கேட்போரும் பெருமழை முதலான இன்னல்களிலிருந்து தப்பிச் செல்வங்கள் யாவும்பெற்று, நெடுநாள் வாழ்ந்து, இறுதியில் சாயுச்சியம் பெருவர்.



இருபத்தாருவது அத்தியாயம்.

சித்தர் விளையாட்டு.

மதுரைகரில் வாழ்ந்த மக்களுக்குப் பெருஞ் செல்வங்களைத் தருதற்பொருட்டும் பேரன்பனை அபிஷேகபாண்டியனது காரியங்களை சரிவர முடித்தற்கும் ஆலவாயுடையான் திருவுளங்கொண்டு சித்தரின் கோலத்தைப்பூண்டார். கால்களில் தண்டையும் நூபுரமும், புலித்தோல் ஆடை கௌபீனம், கையில் யோகதண்டம். மேனியிலும் புயங்களிலும் திரு நீறுப்பூச்சு, மேருமலைபோன்று உயரம், நாகத்தால் கட்டப்பெற்ற கொஞ்சம் வளர்ந்தசடை, மிக்க வெளுப்பான படிகக்கல்லாலாகிய குண்டலங்கள், சிறுநகை பூத்தவாய், மல்லிகைபொட்டுப்போன்ற பற்கள், உடலில் தூய்மை யான என்பு மாலைகள், இடுப்பில் விசித்திரமான ஒட்டியாணம், வயது பதி னாறு, நெற்றியில் யோகத்தகடு, வலதுகையில் தங்கப்பிரம்பு, இந்த வேடத் தில் மதுரைநகரிலுள்ள தெருக்களில் திரிந்தார்.

எந்த எந்த சனங்கள் அவரை அழைத்துப் பேணினரோ அவர் கட்கு அவரவர் வேண்டியதைத்தந்தார் இளம்பிராயம் விரும்பிய கிழ வர்க்கு அவரது சிரத்தில் பிரம்பால் தொட்டு இளம்பிராயத்தைக் கொடுத் தார். மலடான மங்கையர்க்கு அவரது நெற்றியில் நீறுபூசி பிள்ளைவரமளித் தார். குருடரும் செவிடரும் ஆத்திரத்துடன் அவரை அணுகினர். மை தடவி அக்குறைகளைப்போக்கினர். கை முடவர் கால் முடவர் கூனர் முதலானவர் வந்தனர். நீறுபூசிப் பிரம்பாலடித்து அவர்களைக் குணப்படுத் தினர். பூதம் பேய் முதலானது பிடித்தபலர் அவரையடைந்து அத்தத் துன்பங்களிலிருந்து விடுதலைபெற்றனர். பதினெட்டுவகைப் பெருநோயை யும் திருநீற்றால் குணப்படுத்தி அந்நோயுற்றோரையும் களிப்பித்தார். அவ ரது கடைக்கண்ணோக்கால் காது கண்களிலுள்ள நோய்களும், காய்ச்சல், வயிற்றுவலி முதலான பிணிகளும் உடனே தீர்ந்தன. அந்த சித்தர் ஏழை களின் வீடுகளில் பொன்னையும் தானியங்களையும் கொணர்ந்து நிறப்பினர். வசியம், ரசவாதம் முதலியவற்றைச் செய்தார். இவ்வாறு பல அற்புதச் செயல்களைச் செய்துகாட்டி ஊரிலுள்ள சிறுவர்களை மயக்கினர். அடிக்கடி இந்திரசால வித்தையையும் மகேந்திரசால வித்தையையும் காண்பித்தார். வசியம், ஆகர்ஷணம் முதலான மந்திரவேலைகள் பலவற்றைக்காட்டி நகரி லுள்ள சனங்களனைவரையும் தன்வயப்படுத்திவிட்டார்.

கழுதைகளைக் குதிரைகளாகவும், குதிரைகளைக் கழுதைகளாக வும் மாற்றினர். பூனைகளைப் புலிகளாக்கி மீண்டும் பூனைகளாகவே ஆக்கி னர். நகரிலிருக்கும் தோட்டங்களுக்குச்சென்று தென்னைமரங்கள் யாவற் றையும் பனைமரங்களாக்கினர். மறுபடியும் பனைமரங்களை தென்னைமரங் களாக மாற்றினர். இவ்விதமாக மரங்களில் பல வேடிக்கைகளைப்புரிந்தார்



சித்தர் விளையாட்டு

பூக்காதமரங்களைப் பூக்கும்படிக்கும் பழம்தராதமரங்களைப் பழம்தரும்படிக்கும், உயர்ந்த மரங்களைக் குட்டைமரங்களாகவும், குட்டைமரங்களை உயர்ந்த மரங்களாகவும் ஆக்கினர். வைகையாற்றில் நீரை வற்றவைத்தார். நீர்வரும்படியும் செய்தார். தொலைவிலிருக்கும் மலையை அண்மையிலிருப்பதுபோலவும், அண்மையிலிருப்பதைத் தொலைவிலிருப்பதுபோலவும் தோற்றுவித்தார். இரவைப் பகல்போலவும் பகலை இரவுபோலவும் மாற்றினர். ஆகாயத்தில் யோகதண்டத்தை நிறுத்தி அதன்மேல் ஊசியை நிறுத்தி ஊசியின் முனையில் கால் கட்டைவிரலால் நின்றுகொண்டு சுற்றினர். மீண்டும் ஊசி நுனியில் தலையவைத்து காலகளை மேலே தூக்கிகொண்டு சுற்றினர். சனங்கள் மிக்க வியப்பெய்தினர். பின்னர் மேகமண்டலம் சென்று இரு புயங்களால் ஓர் மேகத்தை இழுத்து பூமிக்குக் கொணர்ந்து மின்னலோடு சனங்களுக்கு அதைக் காண்பித்து மறுபடியும் போகும்படிவிடுத்தார். அதுவும் அப்படியே தனது இடத்திற்குச்சென்றது. சித்தர் பின்னர் ஆகாயத்தில் நிற்பவர்களைப் பிடித்து இழுத்து பூமிக்குக் கொண்டுவந்து மீண்டும் திரும்பப் போகச்செய்தார். அவர்களும் பயந்து ஓடினர். மைவேலையால் ஆகாயத்தில் பொன், இரத்தினம், வெள்ளி இவற்றையும் இவைபோன்றபிற பொருள்களையும் வரச்செய்தார். அக்கினிதம்பம் சலத்தம்பம் வாயுத்தம்பம் இவையும் அறுபத்துநான்கு கலைகளும் மற்ற வித்தைகள் யாவும் காட்டப் பெற்றன. இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய எந்தப்பொருளையும் யார் கேட்பினும் சித்தர் முயற்சி எடுத்து, வரவழைத்துக்கொடுத்தார். வேதம் சாத்திரம் புராணம் முதலான வித்தைகள் யாவும் இலக்கணங்களுடன் எங்களது நாக்களில் வாட்டும் என்று கோரிய பிராம்மணருக்கு அவரது நாக்களில் துளியளவு திருநீற்றைத்தூவி எல்லாவித்தைகளையும் வரும்படி செய்தார். இதிலும்ஆச்சரியம்வேறு என்ன இருக்கின்றது? எந்தக்கிழவர்க்கு இளம்பிராயம் அளிக்கப்பட்டதோ அவர்களது மனைவிகள் வந்து தங்களுக்கும் இளம்வயதைக் கோரினர். அப்படியே அளிக்கப்பட்டது. அவர்கள் கருப்பவதிகளாயும் ஆயினர். இவ்விதமாய் சித்தர் எத்தனையோ அற்புதங்களைக்காட்டினர். அவற்றை பிரகர்ப்பதிதவிர வேறு யாரே சொல்லமுடியும்? ஒருசமயம் பருத்தும் மற்றொரு சமயம் மெலிந்தும், ஒருசமயம் உயரமாயும், மற்றொருசமயம் குள்ளமாகவும், ஒருசமயம் கண்ணிற்குப் புலப்பட்டும் மற்றொருசமயம் புலப்படாமலும் சித்தர் தனது மாயை ஆற்றலால் தன்னைக் காண்பித்துக்கொண்டார். கருணைவள்ளலான அவர் மக்கள் எதைக்கேட்டாலும் அதைக்கொடுத்தார். யாவற்றையும் தேடிக்கொடுப்பவரும், நற்குணங்கள் யாவும் பொருந்தியவரும், அமைதியும் கருணையும் நிறைந்தவருமான அந்த அதிசயச் சித்தரைப்பார்த்துச் சனங்கள் திகைப்புற்றனர். எப்பொழுதும் அவரது பக்கத்திலேயே இருந்தனர். அபிஷேகப் பாண்டியனது செவிக்கும் சித்தரதுபெருமை எட்டியது. எவ்விதத்திலாவது அவரைக் கொணர்ந்து தனக்குக் காட்டவேண்டுமென்று அரசன் தனது சொந்தக்காரரையும் சில வேலைக்காரச் சிறுவர்களையும் அனுப்பினன். சித்தரைப் பிடிப்பதற்காக சென்ற அவர்கள் அவரது அற்புதச் செயல்களைக் கண்டு அவற்றில் ஈடுபட்டு சித்தரது பின்னேயே ஏகினர்.

இறைவனது இருபதாம் திருவிளையாடலாகிய இதைப் படித்தும் கேட்டும் எல்லா நன்மைகளையும் பெறலாம்.

— — —

இருபத்தேழாவது அத்தியாயம்.

கல்லானைக்குக் கரும்பு கொடுத்தல்.


சித்தரை அழைக்கச்சென்ற மனிதர்கள் வராமையால் பாண்டிய ராசன் தனது அமைச்சர்களில் மிகத் திறமைவாய்ந்த சிலரை சித்தரைக் கொணர்தற்கனுப்பினன். அவர்கள் சித்தரிடம் சென்று, 'பெரியோய்! எங்களது மகாராசன் தங்களைக்காண விரும்புகின்றார். வந்தருளவேண்டு மென்று கேட்டுக்கொண்டனர். அதற்குச் சித்தர் சிரித்துக்கொண்டு அமைச்சரே! அபிஷேகபாண்டியன் பெரிய மகாராசன்தான். ஆயினும் எனக்கு அவரிடம் காரியம் ஒன்றுமில்லை என்று பதில்உரைத்தார். உடனே அமைச்சர் அரசனிடம் சென்று நடந்தவற்றைக் கூறினர். அதைக்கேட்டு அரசன் 'இந்தச்சித்தர் மிகச் செருக்குடையவர், அவரால் என்ன ஆகவேண்டும்' என்று நினைந்து சும்மாயிருந்துவிட்டான்.

ஒருநாள் சித்தர் ஆலவாயுடையாரது திருக்கோயில் சென்று பல வற்றைப் பார்த்துவரும்பொழுது இந்திரவிமானத் தைத்தாங்கிநிற்கும் கல் லானைகளைக் கவனிக்கையில் வடமேற்கு மூலையிலிருக்கும் யானையை உற்று நோக்கிக்கொண்டிருந்தார். அன்று வைகாசிப் பிறப்பு. அபிஷேகப்பாண் டியன் இறைவனைக் காண்டற்பொருட்டுப் பொற்றாமரையில் நீராடி வலம் சுற்றிவந்தான். அதற்குள்ளாக அரண்மனை வேலையாட்கள் முன்னதாகச் சென்று சித்தர் அசைவற்று உட்கார்ந்திருப்பதைப்பார்த்து, மகாராசன் வரு கின்றார். இங்கு யாரும் இருக்கக்கூடாது, எழுந்துசெல்லும், என்று இரு மாப்புடன் கூறினர். சித்தர் ஒன்றிற்கும் அசையவில்லை. முன்னிலும் அதிகமாகக் கெட்டியாக உட்கார்ந்துகொண்டார்.

அப்பொழுது மகாராசன் சித்தரது அண்மைக்கு வந்துவிட்டார் சித்தர் சித்திரப்பதுமைபோன்று அசைவற்றிருந்தார். அரசன் திகைப் புடன் அவரை நோக்கி "நீர் யார், எங்கிருந்து வந்திருக்கிறீர், இங்கு என்ன செய்கிறீர், உமக்கு என்ன வித்தைகள் வரும், உமது ஆற்றல்கள் என்ன, யாது உமதுபெயர்" என்று வினவினர். உடனேசித்தர் அரசனைநோக்கிப் பாண்டியகுலத்திலகமே! இதெல்லாம் உமக்குத் தெரியவேண்டியதுதான். கூறுகின்றேன் கேளும். நான் ஓர் அநாதச்சித்தன் பிச்சையெடுத்துண்டு விருப்பம்போல் திரிபவன். எனது நாடு காச்சுமீரம் ஊர்காசி. சிவத் தலங்களைக் காண்டதற்காக அங்கிருந்து சிலமாதங்களுக்குமுன் புறப்பட்டு மெதுவாக ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டு உலகத்திற்கும் காரணனான ஆலவாயுடையானது மூலலிங்கத்தைப் பார்த்தற்கும், மதுரையில் வாழ் கின்ற மக்களுக்கு எனது அற்புதத் திறமைகளைக்காட்டவும், அவர்கட்குக் கேட்பவை யாவையும் கொடுக்கவும் இந்தநகருக்கு வந்திருக்கிறேன், உல கில் எனக்குத் தெரியாத வித்தைகள் கிடையா, எனக்கு எல்லாவிதத் திற மைகளுமுண்டு. ஆக்கினைச்சித்தன் என்பது என்பெயர். உமக்கு நான்



கல்லானைக்கு கரும்பு கொடுத்தல்



ஏதாவது செய்யவேண்டுமா, என்றவாறு மொழிந்து முன்போலவே சிரித்த முகமாய் துணிச்சலுடன் அமர்ந்திருந்தார். சித்தரது பற்றின்மையையும், இறுமாப்பையும், துணிவையும்கண்டு அரசன் என்னசெய்வதென்று ஆயந்த வண்ணமாயிருந்தான்.

அந்த சமயத்தில் குடியானவனொருவன் அரசனைக்காண்பதற்காக அங்கு வந்து நீண்டு நிரண்டிருந்த கரும்பொன்றை அரசனிடம் கொடுத்தான். அரசன் அதைக் கையில்வாங்கி மிக அபூருவமான கரும்பென்று சொல்லிக்கொண்டு சித்தரை நோக்கிப் 'பெரியவரே! ஆக்கினைச்சித்தன் என்பது உமது பெயராலல் இந்தக் கல்லானையை இந்தக்கரும்பை தின்னச் செய்யும். அது தின்னுமேயாகில் நான் உமக்குஎன்ன வேண்டுமென்றாலும் தருகின்றேன். நானும உமக்கு அடிமையாகிவிடுகின்றேன்' என்று கூறினான். அரசனது மொழிகளைக்கேட்ட சித்தர் புன்முறுவலுடன் அரசே! எல்லாம் தருவேன் என்று நீர் சொல்லிய வார்த்தை பொருளற்றது. ஒரு நல்ல வித்தைஒருவனிடம் இருந்தாலே அவன் மாந்தரின் தலைவனாகின்றான். அப்படியிருக்க எல்லாவித்தைகளையும் கற்ற என்னை உலகம் தின்னமாய்ப் பணமே செய்யும். எல்லோராலும் விரும்பப்படும் பொருள் என்பது என்னிடம் ஏராளமாய் இருக்கின்றது. ஆதலால் உம்மிடமிருந்து நான் பெற விரும்பக்கூடியது ஒன்றுமே இல்லை. இதோபாரும்! இந்தக்கல்லானையைக் கரும்பைத் தின்னசொல்கின்றேன்' என்று சொல்லி கண்ணைக்கால் யானைக்கு ஆக்கினையிட்டு அரசனது கையிலிருக்கும் கரும்பைத்தின் இது சுந்தரமூர்த்தியின் ஆணை என்று மொழிந்தார்.

மாசித்தரது இம்மொழிகளைக்கேட்ட யானை உடனே ஊழிக்கால மேகம்போன்று பேரிரைச்சல் செய்துகொண்டு அரசனது கையிலிருந்த கரும்பை வாங்கித்தின்று பின்னர் தாமரைத்தண்டு என்று ஐயமுற்று அரசனிடமிருந்த வீலையுயர்ந்த அரசனுக்குப் பிரியமான முத்துமாலையை இழுத்துத் தின்ன தொடங்கிற்று. பக்கத்திலிருந்தவர்கள் கூச்சலிட்டு யானையிடமிருந்து அதைப்பிடுங்க எத்தனித்தனர். சித்தர் சினங்கொண்டு யானையைத் தின்னும்படி எவினர். யானையும் அவரது ஆக்கினைப்படி அதைத்தின்று விட்டது.

அரசன் துயறுற்றுச் சினத்துடன் சித்தரைக் கொடூரமாகப்பார்த்தான். அவரது படையினர் சித்தரை அடித்தற்கு அவரது அருகே சென்றனர். சித்தர் உடனே எழுந்து அவயமாக வலக்கையைத் தூக்கித் தனது ஆற்றலால் அவர்களை அசைவற்றிருக்கச் செய்து நில் நில் என்று மொழிந்து அதட்டிச் சிரித்தவண்ணமாய் அங்கேயே நின்றார். சினத்தை விடுத்து அரசன் சித்தரது பெருமையையுணர்ந்து அமைச்சருடன்கூட அவரது திருவடி மலர்களைத் தலையால் வணங்கி மயிர்சிலிர்ப்பக் குற்றத்தை மன்னித்தருள வேண்டுமென்று மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டு மிகவும் தன்னிலை மையற்றவனாய் மரம்போன்று அசைவற்று நின்றான். உடனே சித்தர் அரசனது அன்பையும் ஆர்வத்தையும்கண்டு மகிழ்ந்து வேண்டும் வரத்தைக் கேட்கும்படி பணித்தார். சித்தரது அருள்மொழிகளைக் கேட்டு வணங்கி கூப்பிய கைகளுடன் நற்குணமுடைய புதல்வன் வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். சித்தசுவாமி அப்படியே உமக்குப் புதல்வன் உண்டாவான்.

அத்துடன் சீரும், செல்வமும், புகழும் நீண்ட ஆயுளும் உண்டாகும். இறுதியில் முத்தியும் கிடைக்கும்; என்று கூறி, யானைவாயிலகப்பட்ட முத்து மாலையை வாங்கி, அருள்மொழிகளுடன் அரசனிடம் கொடுத்து, வாழ்த்தித் தனது இருகைகளாலும் அவனைத் தடவிக்கொடுத்துச் சிறிது நேரத்திற் கெல்லாம் மறைந்துவிட்டார். சித்த சுவாமியின் அற்புதச் செயல்களைப் பார்த்த அரசன் திண்ணமாய் இதுசுந்தரேசமூர்த்தியின் திருவிளையாடலே; என்று தினைந்து கடிநில் இறைவனது முன்னிலைக்குச்சென்று பேரன்புடன் வணங்கி முழுகுகடவுளே! உண்மை, அறிவு, இன்பவடிவனே! எல்லாமறிந்த சுந்தரேசமூர்த்தியே! குற்றம்புரிந்த என்னைக் காப்பாற்றும். நெற்றிக்கண் நெருப்பினால் மாரனை எரித்தவரே! சிவன்முத்திநகரின் இறைவனே! குற்றம் புரிந்த என்னைக் காப்பாற்றும்! கற்பகத்தருவினும் மேம்பட்ட பெருமையுடைய திருவடிகளையுடையரே! கடம்பக்காட்டில் மகிழ்பவரே! குற்றம் புரிந்த என்னைக் காப்பாற்றும். அன்பர் வேண்டுவதையளிக்கும் காமதேனுவே! திரிபுரம் எரித்தவரே! கருணைக்கடலே! குற்றம்புரிந்த என்னைக் காப்பாற்றும். முத்தியளிப்பதில் வளிப்பவரே! ஆலாலச்சின் வேகத்தைப் போக்கியவரே! கன்னியின் நகருக்கு அரசனே! குற்றம் புரிந்த என்னைக் காப்பாற்றும். மகாவிட்டுணு, பிரம்மன், இந்திரன் முதலான தேவர்களால் வணங்கப்பெற்ற திருவடி மலர்களுடையவரே! குற்றம்புரிந்த என்னைக் காப்பாற்றும். ஐந்து முகத்தோனே! காகாபரணங்களணிந்தவரே! பேரன்பளிப்போரே! மலையரசனின் மணவாளனே! குற்றம்புரிந்த என்னைக்காப்பாற்றும். பெரிதினும் பெரியோனே! திருவடி மலர்களை நினைப்போரின் விருப்பங்களையளிப்போனே! குற்றம் புரிந்த என்னைக் காப்பாற்றும். கருணைக்களஞ்சியமே! உமது முன்னிலையில் இந்த அபராதாட்டகத்தைப் படிப்போரின் குற்றங்களைப் பொறுத்தருளும்" என்று துதித்துப் பேரிலிங்கத்தைத் திரும்பத் தீரும்ப வணங்கி, மீண்டும் இறைவனைப்பார்த்து ஆலவாயுடையானே! நீர் எப்பொழுதுமே அன்பரது குற்றங்களைப் பொறுக்கும் இயல்புடையவர். காலை உமது திருவடிகளைச் சரண்புகுந்தவன். என்னைக் காப்பாற்றும். கடம்பக்காட்டில் தேவேந்திரனால் அமைக்கப்பெற்ற விமானத்தில் உறைபவனே! அறியாமையால் நான்செய்தகுற்றங்கள் யாவற்றையும் மன்னித்தருள வேண்டும். என்றவாறான புகழ்களைப்பாடி வியப்புடன் மறுபடியும்வணங்கி அரண்மனை சென்றனன்.

பின்னர் அபிஷேகபாண்டியராசன் மிகப்பொலிவுபெற்ற விக்கிரம பாண்டியனென்னும் புதல்வனைப் பெற்று, அவனிடம் அரசுச்சுமையை ஒப்பித்து, வெகுகாலம் இன்பத்துடன் பூமியில் வாழ்ந்து, இறுதியில் இறைவனிடம் சேர்ந்தான். விக்கிரமபாண்டியராசன் ஆலவாய்ப்பெருமானது திருவருளால் தந்தையினும் அதிகமான செல்வங்களையெய்தி, படிப்பு, ஒழுக்கம், அழகு முதலான எல்லா நற்குணங்களுடன் நெறிதவறுதுயாவரும் கொண்டாடும்படியாய் அரசியற்றினான்.

எந்த இறைவனது ஆக்ஞையால் கல்யானையானது உயர்ந்திய நிக்கையுடன் கரும்பை வாங்கியருந்தியதோ அவருக்கு வணக்கம். சித்தர் கோலத்தில் ஆலவாயுடையான் புரிந்த இந்தத்திருவிளையாடலைக் கேட்டலாலேயே பாவங்களனைத்தும் தொலையும். இருபத்தோராம் திருவிளையாடலாகிய இதைக்கேட்டுப் பேரறிவுபெற்று எல்லா நலன்களையும் பெறலாம்.

———

இருபத்தெட்டாவது அத்தியாயம்.

சமணரேவிய யானை வதம்.

சிவனன்பிற் சிறந்து, தனது பெயருக்கேற்றவாறு வீரச்செயல்கள் புரிந்து, குபேரனுக்கு நிகராகச் செல்வம்படைத்துச் சிற்றரசரால் வணங்கப்பெற்று நீதிநெறியுடன் விக்கிரமபாண்டியன் அரசு செலுத்திய காலத்தில், நாடெங்கும் வேதமார்க்கங்கள் ஓங்கின; வேதத்திற்குப் புறம்பான மார்க்கங்களில் ஒழுகுவோர் அயல்நாடுகளுக்கேகிவிட்டனர். பிராம்மணர் முதலான யாவரும் திருநீறு பூசி, உருத்திராக்கம் பூண்டு, சிவலிங்க வழிபாட்டில் ஈடுபட்டனர். இடைவிடாது வேதங்களில் கூறப்பட்ட கருமங்களையும் செய்தனர். இந்திரனுக்கு நிகரான பொலிவுடன் புண்ணியத்திற்கிருப்பிடமாய் விளங்கும் அரசனும் முன்னளில் தேவேந்திரனுல் தனது பழி நீங்குதற்காகப் பூசிக்கப்பெற்று மிகப் பழமையுடன் இலங்கும் சுந்தரேச மூர்த்தியின் பேரிலிங்கத்தை நான்தோறும் வணங்கிவந்தான். தந்தையின் உத்தரவுப்படி கருப்பகிருகத்தின் வடமேற்கில் சித்தசுவாமிக்கு ஆலயமொன்றுகட்டி, ஆக்கினேச்சித்தேசுரர் எனப்பெயருமிட்டு, வெகுசிறப்போடு வழிபாடு நடத்தினன். தான்செய்த புண்ணியத்தாலும், குடிகளின் புண்ணியத்தாலும், ஆக்கினேச்சித்தேசரது கடைக்கண்ணோக்காலும் அரசன் ஆயுள், ஆற்றல், செல்வம், பிணியின்மை, புகழ், பொலிவு, புத்தி, வீறு இவற்றைப் பெற்று விளங்கினன்.

எப்பொழுதும் சைவசாத்திரங்களையும் புராணங்களையும் பிராம்மணரைக்கொண்டு படிக்கச்சொல்லி சுவனமாய்க்கேட்டான். ஆலவாய் மூர்த்தியின் திருவருளால் அரசன் ஒருபொழுதும் எதிரிகட்கு இலக்காகவில்லை.

இப்படியிருக்கையில் காஞ்சிபுரத்தரசனன சோழமன்னன் விக்கிரமபாண்டியராசனது பெரும் வலிமையைக் கேள்வியுற்று அவனை எவ்வகையால் வெல்லலாமென்று பலவாருகச் சிந்தனைசெய்து உலகத்தில் வாதங்களிலெல்லாம் பெரிது மந்திரவாதம். ஆதலால் அதைக்கடைப்பிடித்து பாண்டியனை வெல்வதென்று நிர்மானித்தான். உடனே சக்கியம், கோவர்த்தனம், திகம்பரஞ்சம், திரிகூடம், அஞ்சனம், விந்தியம், ஏமகூடம், காஞ்சிகுஞ்சரம் என்ற எட்டு மலைகளிலுள்ள சமணர்களில் பெயர்பெற்றவரும் ஆசிரியராயிருப்பவருமான எண்ணுயிரம் பேர்களுக்குத் தனித்தனியாகக் கடிதம்அனுப்பினன். அவர்களும் காஞ்சிநகர் வந்து அரசனிடம் சென்று அவனது சித்தத்தை மயில்தோகையால் தொட்டு வாழ்த்தினர்கள். சோழமன்னன் உடனே அவர்களைநோக்கிப்,, பெரியோர்களே! என்னைக் காத்து எனது வைரியான விக்கிரமபாண்டியனை அழித்தற்பொருட்டு வேலைகளில் திறமைவாய்ந்த உங்களை இங்கு கூட்டியிருக்கின்றேன். எனது நலனை விரும்பும் நீங்கள் அபிசாரப்பிரயோகம் செய்யவேண்டும். அதற்கு வேண்டும் ஏற்பாடு

க்ஷச் செய்யுங்கள். உங்களது வேலை பயன்பயக்குமேயாகில் எனது இராச்சியத்தில் பாதியை உங்களுக்குத்தருவேன். இது உண்மையான வார்த்தை என்று கூறினன்.

உடனே சமணகுருக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் சைவர்கள் நிறைந்த மதுரை நகரையும் அதன் அரசனை விக்கிரமபாண்டியனையும் அழிப்பதற்காகப் பாலாற்றின் கரையில் மிகப் பெரியதொரு ஓமசாலையும் ஓமகுண்டத்தையும் அமைத்து கச்சமரங்களின் கட்டைகளைப் போட்டுத் தீவளர்த்து வேப்பெண்ணெயிவ் தோய்த்த உப்பாலும், கல்லெண்ணெயில நனைத்த மிளகாயாலும், விலங்குகள் பறவைகள் இவைகளது ஊனாலும்ஓமம் செய்தனர். கடலிலிருந்து ஆலாலஞ்ச கிளம்பியதுபோல் தீயிலிருந்து மலைபோன்ற மதயானையொன்று கிளம்பிற்று. அது பேரொலியுடன் முறம் போன்ற காதுகளை வீசுகையிலுண்டான காற்றால் மேகங்கள் பொடிப் பொடியாயின. கொம்புகளின் அடியினால் மலைகள் பிளந்தன. கால்களை வைக்கும்பொழுது பூமி நடுங்கிற்று. அதன் துதிக்கையில் ஓர் உலக்கை. அதைக்கண்டு புற்பூண்டுகளும் பிராணிகளும் எல்லாம் திகிலடைந்தன. சமணர்கள் மகிழ்ச்சியுடன் யானையைப் பார்த்து, "மதுரைநகரையும் அதன் அரசனையும் அழிப்பாயாக! அழிப்பாயாக" என்று மொழிந்து அதை ஏவினர்.

உடனே அந்தமதங்கொண்ட யானை தெற்குநோக்கி விரைந்தது. அதன்வருகையைச் சனங்கள்மூலம் அரசன் அறிந்து, மிக்க மனதெம்புடையனாயினும் பயந்து, ஆலவாயுடையானது ஆலயத்திற்கு ஓடி இறைவனை வணங்கிதுதித்து மூர்த்தியின் முன்னிலையில் கைகூப்பி நின்று "இறைவனே! கருணைவள்ளலே! உமதுதிருவருளால் போரில் வைரிகளை என்னால் வெல்லமுடியும். ஆனால் இப்பொழுது சமணரால் ஏவுதல் செய்யப்பட்ட ஓர் மதயானை மதுரைநகரையும் என்னையும் அழிக்கும் நோக்கத்துடன் ஓடி வந்துகொண்டிருக்கின்றது. உம்மைத்தவிற எனக்கு வேறு சரண் இல்லை. இத்தப்பெரின்னலிலிருந்தும் நகரையும் என்னையும் காத்தருளவேண்டும்" என்று விண்ணப்பித்துக்கொண்டான். இறைவன் இரக்கம்கொண்டு ஆகாயவாணிமூலமாய் "அரசனே! வெளிச்சுவரின் உட்புறம் கிழ்பக்கமாக பதினாறுகால்கொண்ட அட்டாள மண்டபமொன்றை சிற்பிகளைக்கொண்டு சாத்திரமுறைப்படிக் கட்டில் கட்டுவி. நான் ஓர் வில்வீரனாக வந்து அந்த மண்டபத்தின்மேலிருந்துகொண்டு அந்தமத யானையைக் கொல்வேன்" என்று மொழிந்தார்.

அரசன் ஊக்கமடைந்து, அமைச்சரையழைத்து, இறைவனது ஆணைப்படி அட்டாளமண்டபத்தைக் கட்டுவித்து அதன்மேலே ஓர் இரத்தின மிழைத்த பொன்பீடத்தை நிறுவினன். அக்கணமே ஆலவாய்மூர்த்தி உதயமலையில் கதிரவன்போன்று மிகுந்த பொலிவுடன் ஓர் வில்வீரனாக அந்தப்பீடத்தே தோன்றினார். வீரன், கருநிறமாய் சிவந்த பட்டுடுத்தி பதினாறுபிராயம் மதிக்கும்படியாய் இடக்கையில் காணேற்றிய வில்லும் வலக்கையில் கூரான அம்பும் இடுப்பில் கத்தியும் வைத்துக்கொண்டு காதுகளில் சங்குமயமான குண்டலங்களும் கழுத்தில் முத்தாரங்களும் அணிந்து வேடன்கோலத்தில் அழகுக்கடலில் தோன்றிய மதிபோன்ற முகத்துடன் இலங்கினர். உடனே பெரும் வில்லாளியான அவர் வலதுகாலைப் பின்

னும் இடதுகாலை முன்னும்வைத்து, ஐந்துகூப்பிடுதூரத்தொலைவிலிருக்கும் யானையைக் குறிபார்த்து, நாசிங்கமென்ற விட்டுணுசக்தியை அம்பில் வருவித்து அதை விடுத்தார். அம்பு சென்று யானையினது உயிரைவாங்கி சிவபெருமானது ஆக்ஞையால் நாசிங்க வடிவமெடுத்து அங்கேயே நின்றது. அந்த நான்முகற்கொண்டு யானைவடிவில் ஆனைமலையும் அங்குஉண்டாயிற்று. நாசிங்கக்கடவுளும் அங்கு எப்பொழுதும் இருக்கைகொள்கின்றார். அங்கே உரோம இருடி தன் பெயர்கொண்ட பொய்கையொன்றை நிறுவி, அதில் நீராடிக் கடும்தவம்புரிந்து, பெரும் சித்திபெற்றார். பிரகலாதரும் பிறரும் அங்குசென்று சித்திகூப்பெற்றனர். செத்துக்கிடந்த யானையை பார்த்தற்கு விக்கிரமபாண்டியன் அங்கு சென்றார். அவண் சோழராசனது படைவீரரும் சமணரும் இருந்தனர். அவர்களை விக்கிரமனது ஆட்கள் கன்னத்திலடித்து வெருட்டவே அவர்கள் பலதிசைகளிலும் ஓடியொளித்தனர்.

பாண்டியராசன் வியப்பும் களிப்பும் எய்தி அட்டாள வீரனைத்துதிப்பதற்காக விரைந்துவந்து வீரன் கோலத்திலிருக்கும் ஆலவாய்மூர்த்தியைப்பார்த்துப் பேருவகையுடன் "மாமேருவை வில்லாகவும் மகாவிட்டுணுவை அம்பாகவும் கொண்ட அட்டாளசுந்தரமூர்த்தியைத் தியானிக்கின்றேன். ஆலாலநஞ்சின் ஒளிபூண்ட கழுத்துடையானும் மதிசூடியுமான அட்டாளசுந்தரமூர்த்தியைத் தியானிக்கின்றேன். காலனுக்காலனும், காலகளுக்கு மேம்பட்டவனும், காலகளுடையவனும், காலகளற்றவனும், விட்டுணுவால் துதிக்கப்பெற்றவனுவான அட்டாளசுந்தரமூர்த்தியைத் தியானிக்கின்றேன். உமையொருபாகனும், கருணைக்கடலும், கலியுகத்தின் மாசுகளைக் களைபவனும் ஆன அட்டாளசுந்தரமூர்த்தியைத் தியானிக்கின்றேன். கடம்பவனவாசனும், விரும்பியவற்றை யளிப்பவனும், காமனைவென்றவனுமான அட்டாளசுந்தரமூர்த்தியைத் தியானிக்கின்றேன். எவன் பிரம்மாண்டங்களைப் படைத்துக் காத்து அழிக்கின்றானோ அந்த அட்டாளசுந்தரமூர்த்தியைத் தியானிக்கின்றேன். தனது அன்பர்களின் துயரையும் பாவங்களையும் போக்குகின்றவனும் உலகத்தின் காரணமானவனுமான அட்டாளசுந்தரமூர்த்தியைத் தியானிக்கின்றேன். குலசேகரபாண்டியனது குலத்தில் தோன்றிய அரசர்க்குக் குலதெய்வமானதம், முழுஞான அறிவு இன்பவடிவமானதுமான அட்டாளசுந்தரமூர்த்தியைத் தியானிக்கின்றேன். இந்த அட்டாளவீர அட்டகமானது கேட்போருக்குப் பெரும் நன்மையைப் பயக்கட்டும்" என்று துதித்தான். உடனே இறைவன் அவனது விருப்பங்களையளித்துவிட்டு மறைய எத்தனித்தார். அவ்வமயம் பாண்டியராசன் அவரது இருகால்களையும் கெட்டியாய்பிடித்துக்கொண்டு "அட்டாளவீரமூர்த்தியே! உலகத்தார்க்கு அருளும்பொருட்டு இந்த அட்டாள மண்டபத்தில் எப்பொழுதும் இருக்கைகொள்ளவேண்டும்" என்று வேண்டினான். அதற்கேற்ப இறைவனும் அந்த மண்டபத்தில் எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கின்றார். விக்கிரமபாண்டியன் பெருமானுடைய கருணை நிறைந்த கடைக்கண் நோக்கால் "சேகர பாண்டியன் எனும் புதல்வனைப்பெற்று அவனுடன் இராச்சியத்தை வெகுகாள் ஆண்டான்.

கேட்கும் வாசகர்களையும் அட்டாளவீரமூர்த்தியை ஒருகணமேனும் நினைத்தால் தின்மைகள் நீங்கி நன்மைகள் பெருகும்.

ஆலவாயுடையானது இந்த இருபத்திரண்டாம் திருவிளையாடலைப் படிப்போரும் கேட்போரும் நலன்களனைத்தையும் பெறுவர்.

———

இருபத்தொன்பதாவது அத்தியாயம்.

பிராம்மணப்பெண்ணின் துயர் தீர்த்தல்.

மதுரைநகரில் விருபாக்கன் என்ற சிறந்த ஒழுக்கமும் உயர்ந்த கல்வியுமுடைய பிராமணன் ஒருவர் இருந்தார். அவருக்கு சுவீரதை என்ற மனைவி. அந்த அம்மை எப்பொழுதும் கணவன்சொற்கேட்டு அவருக்குப் பிரியமான காரியங்களையே செய்துவந்தாள். அவர்களுக்குப் புதல்வன் உண்டாகாமையால் கணவனும் மனைவியுமாக கடும்நோன்புகள் நோற்றனர். விசேடமான சிவவிரதங்களை அனுட்டித்தனர். நான்தோறும் பொற்றமரையில்நீராடி, மீனாட்சியம்மையையும் சுந்தரேசுரப்பெருமானையும் வணங்கினர். உமையாரை மனத்தில் நினைந்துகொண்டு சத்தமாதாக்களின் அண்மையில் கடினமான தவம் புரிந்தனர்.

ஆலவாயுடையார் அவர்களது அன்பில் வியப்படைந்து மூன்வினைப்பயனால் புதல்வனில்லாமையால் அவர்கட்கு ஓர் புதல்வியைத் தந்தார். குழந்தை மிக்க அழகாகவும் எல்லா இலக்கணங்களும் பொருந்தியவளாகவும் இருந்தாள். கௌரி என்ற அவளுக்குப் பெயர் அமைத்தனர். அவளுக்கு ஐந்துவயதாயிற்று. மிகப் புத்திக் கூர்மையுடைய அவள் ஒரு நாள் சக்தி வீழ்ச்சி பெற்று உள்ளங்கனிந்தவளாய், சிட்டையிலிருந்து கொண்டு பிரகர்ப்பதிபோன்று விளங்கும் தனது தந்தையை அணுகி, தந்தையே! உலக வாழ்க்கையின் துன்பங்களைத் தவிர்க்கக்கூடிய உமது அறவழியை எனக்குச் சொல்லியருளவேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். தந்தை குழந்தையினது வேண்டுகோளைக்கேட்டு ஆச்சரியமெய்தி அதிலிருந்து இவளுக்குச் சக்திவீழ்ச்சி யேற்பட்டுவிட்டதென்று கண்டுகொண்டு, நான்கு குறிக்கோள்களையும் பயக்க வல்லதும் இன்னல்கள் யாவையும் போக்கடித்து சித்திகளனைத்தையும் தரக்கூடியதுமான அறவழியைச் சொல்ல தொடங்கி, "புண்ணியவருவான மகளே! நீ கேட்டுகொண்ட தருமத்தைச் சொல்கின்றேன்கேள். இறைவனின் இடப்பாகமாகும் சக்திவடிவான உமாதேவியின் பீசமந்திரம் உலகில் மிகச்சிறப்புவாய்ந்தது. உலகத்திற்கே அது தான் காரணம். க்ரீம் என்பது அதன் உருவம். அந்த மந்திரத்திற்கு இருடி தக்ஷிணமூர்த்தி, சந்தம்காயத்திரி, தேவதை பெரும்தேவியான கௌரி, க்ராம் க்ரீம் முதலானவற்றால் ஆறு நியாசங்களைச் செய்யவேண்டும். இந்த பீச மந்திரமானது ஒருமுத்துடையது. இதைச் செபிக்கத்துவங்குமுன் மகாஆகாசத்திற்கும் காரணமான இதயவெளியில் தேவியை அமுதக்கடலின் மத்தியிலுள்ள இரத்தினத்தீவில் பீடத்தில் பத்மாசனம் பூண்டு வீற்றிருக்கும் அழகுமயமான சிவபெருமானது மடியில் அழகின் உருவாய் அமர்ந்து, வலப்புறமுள்ள விநாயகரையும் இடப்புறமுள்ள முருகனையும் கண்டு மகிழ்பவளாகத் தியானம் செய்யவேண்டும். பின்னர் செபம், ஒரு இலக்கம் செபிக்கச் சாலோக்கியமும், இரண்டு லக்கங்கள் செபிக்க சாமீப்பியமும், மூன்று இலக்கங்கள் செபிக்கச் சாரூப்பியமும் நான்கு இலக்கங்கள் செபிக்கச் சாயுச்சியமும் இட்டும். குருவானவர் எத்தனை எண் செபிக்கவேண்டு

மென்று சொல்லியிருக்கின்றாரோ அத்தனை எண் செபிக்கவேண்டும். அதன்பிறகு பீசமந்திரத்தைச் சொல்லித் தேவியின் வழிபாட்டை நிகழ்த்த வேண்டும். அடுத்தாற்போல், செப எண்ணில் பத்திலொரு பங்கு தருப் பணமும், அதில் பத்திலொருபங்கு பிராமணருக்கு அன்னமிடலும் செய்ய வேண்டும். இவ்வாறு செய்ய, மந்திரம் சித்தியாகும்'' என்று மொழிந்து அவளுக்கு தேவியினது பெரும் மந்திரத்தைச் சொல்லிவைத்தார். பின்னர் விரூபாக்கர் வழக்கம்போல் வீட்டையில் புகுந்து கற்போன்றிருந்தார்.

கௌரியோ தந்தையிடமிருந்து பெற்ற மாமந்திரத்தை உளத்தூய் மையுடன் இடைவிடாது செபித்துவந்தாள். அவளுக்கு எட்டுப் பிராய மாயிற்று. அவள் கன்னியாகிவிட்டாள். விரூபாக்கர் அவளது திருமணத் தைப்பற்றிக் கவலைப்படத்தொடங்கி, இவளை யாருக்குக் கொடுப்பதென்று ஆய்ந்து, இறுதியில் பிட்சைக்குவரும் வேதம் கற்கும் ஒரு வாலிபனுக்குக் கொடுத்துவிடுவதென்ற முடிவிற்கு வந்தார்.

அப்படியிருக்கையில், ஒருநாள் நல்ல சுரத்தில் வேதக்கனைச்சொல் லிக்கொண்டு ஒரு வாலிபன் விரூபாக்கரது வீட்டிற்குப் பிட்சையின் பொருட்டு வந்தான். அவர் அவனைக்கண்டதும் அவனது அழகிலும் படிப் பிலும் ஈடுபட்டு, அவனைப்பற்றி ஒன்றும் தெரிந்துகொள்ளாமலே, தனது புதல்வியான கௌரியை அவனுக்குத் தாரைவார்த்துக்கொடுத்துவிட்டார். அவரது மனைவியும் சொந்தக்காரரும் கடும் சினத்துடன் வந்து ஒன்றும் கேளாமலே ''கன்னியை என் கொடுத்தீர்'' என்று கன்னத்திலிடித்து அதட்டி ''அழகிற்காகவா, செல்வத்திற்காகவா, படிப்பிற்காகவா அல்லது சுந்தரேசமூர்த்தியே வந்துவிட்டார் என்பதற்காகவா எதற்காகக் குலம் கோத்திரம் தெரியாமல் பெண்ணைக்கொடுத்தீர்? இப்படி அறிவுகெட்டவர் உம்போல் இந்நகரிலேயே ஒருவருமில்லை'' என்று மொழிந்து வாலிபனை நோக்கி அவனது குலம் முதலியவற்றைச் சொல்லும்படி கேட்டனர். வாலி பன் திகைப்படைந்து தனது குலம், கோத்திரம், நட்சத்திரம் ஊர்த்துவ புண்டிரம் (மேல் நோக்கிய குறி) முதலானதைக் கூறினான். அவர்கள் கேட்டு ஒப்புக்கொண்டு மகிழ்ந்தனர். ஆனால் ஊர்த்துவ புண்டிரத்தைக் குறித்து சிறிது வருத்தம் ஆயினும் பல குணங்களுக்கிடையே ஒரு குற்ற மிருந்தால் அது தோற்றமென்று தேறுதல் அடைந்தனர். பின்பு முறைப் படி சீர்வரிசைகளுடன் திருமணம் நடைபெற்றது. வாலிபன் பெண்ணை அழைத்துக்கொண்டு கொடுத்த பொருள்களையும் எடுத்துக்கொண்டு தனது ஊர்சென்று வீட்டிற்கேகினான். அவனது பெற்றோரும் உறவினரும் அய லிடம் சென்றிருந்த புதல்வன் பெண்ணோடும் பொருள்களோடும் வந்திருப் பது கண்டு பிகவும் மகிழ்ந்தனர். ஆனால் பெண்ணின் மாமியார்மட்டும் அவள் சிவனன்பன் மகள் என்ற காரணத்தால் அவளை நேசிக்கவில்லை. பையனுக்கும் அவளிடத்தில் யாதொருவிதமான ஒட்டுதலும் ஏற்படவில்லை. அவர்களது வீட்டிற்கு வைணவர் மாத்திரமே பிட்சைக்கு வந்தனர். சிவ னன்பருக்கு எப்பொழுது அன்னமிடப்போகின்றேன் என்று ஏங்கியவண் ணமாயிருந்தாள் கௌரி. ஆனால் அவளது நாவில் இடைவிடாது தேவியின் பீசமந்திரம் ஒலித்துக்கொண்டேயிருந்தது.


ஒருநாள் வீட்டிலுள்ள அனைவரும் ஒரு கலியாணத்திற்கு வேறு ஊர் சென்றிருந்தனர். சிவனன்பன் மகளான கௌரி மாத்திரம் வீட்டில்

தனியாகவிருந்தாள். அப்பொழுது அலவாய்மூர்த்தி ஓர் கிழப்பிராமண ரது கோலத்தில் அந்த வீட்டிற்கு வந்து பிட்சை கேட்டார். மேனியில் நீறு பூசி, நெற்றியில் திரிபுண்டரமுமணிந்து, வெள்ளையாடையுடுத்தி, பிரமப்பொலிவுடன்விளங்கும் அந்த எண்பதுபிராயக் கிழவரைக்கண்டதும் கௌரி உவகையுடன் வணங்கிப் பெரியோரே! பெரியோரே எனது மாமனாரும் மாமியாரும் கதவை நன்றாகத் தாழிட்டு அயலூர் சென்றிருக்கின்றனர். இந்த வீட்டில் அரிசி முதலானது வெளியில் ஒன்றுமில்லை. ஐயனே! நான் என்னசெய்யவேண்டும் சொல்லும்" என்று மொழிந்தாள். அதுகேட்ட கிழவர் கௌரியைப்பார்த்து "அந்தக்கதவு திறந்திருந்தாலே! நீ போய்ச் சாமானறைக்குள்ளிருந்து அரிசி பருப்பு முதலான பண்டங்களை எடுத்து சீக்கிரம் சமையல்செய்" என்றார். "அப்படியே செய்கின்றேன்" என்று சொல்லி அவள் விரைவாகக் கதவண்டை சென்று கதவு திறந்திருப்பதைக்கண்டு மிக்க மகிழ்சியடைந்து அரிசி, பருப்பு, பால், தயிர், சர்க்கரை, நெய், பழவகைகள் முதலியவற்றை எடுத்து, கொடிப்பொழுதில் சமையல் செய்து கிழவரையழைத்து, வாழையிலையில் யாவற்றையும் படைத்து அவருக்கு அன்னமிட்டாள்.


உண்டி முடிந்தவுடன், கிழவர் பதினாறுவயதுக் கூலோயாயத் தோற்றமளித்தார். இந்த அற்புதத்தைக்கண்டு கௌரி நடுங்கிக்கொண்டிருந்தாள். இதற்குள்ளாக ஊர் போயிருந்த மாமியார் திரும்பவந்து கதவைத்தட்டித் திறதிறவென்று கூவினாள். மாமியாரது வார்த்தையையும் கேட்டுக் காலை அங்கு நிற்பதையும் பார்த்து அவள் திகிலடைந்து அசைவற்றுப்போனாள். மாமியார் பலாத்காரமாகக் கதவைக் காலாலுதைத்து உடைத்துத் திறந்தாள். அதற்கிடையில் காலை குழந்தையாக மாறிவிட அது சிறுபடுக்கையில் படுத்து இருகைகளால் கால்கட்டைவிரலை வாயில்போட்டுக் கொண்டு, கௌரியினது முகத்தைப் பார்த்துப் புன்முறுவல் பூத்துக் கொண்டிருந்தது. மாமியார் சினத்துடன் அவளை நோக்கி 'மணுட்டுப் பெண்ணே! இது யாரது குழந்தை!" என்று வினவக் கௌரியானவள், இது தேவதத்தசிரீ தேவியென்ற மங்கை. கணவனுடன் இங்கு வந்து, இவனைப் பார்த்துக்கொள்ளென்று மொழிந்து, இந்தச் சிறுபடுக்கையில் விடுத்துச்சென்றாள்" என்று பதிலுரைத்தாள். உடனே மாமியார் மற்றவர் குழந்தையை நீ என்ன பார்க்கிறது" என்றுசொல்லி குழந்தையைக்கையில் எடுக்கசெய்து பிடரியைப்பிடித்து வெளியில் தள்ளி இனிஇங்கே வரக்கூடாதென்று கதவைத் தாழிட்டு வீட்டுகுள்ளேசென்று தனியாகச் சொக்கியமாயிருந்தாள். கௌரியோ கையிலிருக்கும் குழந்தையின் அழகைப் பார்த்துக்கொண்டு மனத்தில் தேவி பீசமந்திரத்தைத் தியானம் செய்துகொண்டு மிக்க வருத்தத்துடன் தெருவில் நின்றாள். குழந்தை சிவபெருமானாக மாறி, விடையின்மீது ஏறி, அவளை உமாதேவியாக்கி விடையில் ஏற்றிக் கொண்டு ஆகாயத்தில் சென்றது. கண்டோரெல்லாம் இதுஎன்ன புதுமை, இது என்ன புதுமை என்று கூறியலராய்க் கௌரியைப்போற்றி அவளது மாமியாரை இகழ்ந்தனர்.

இந்த இருபத்து மூன்றும் திருவிளையாடலை ஒருமுறையேனும் படித்தலாலும் கேட்டலாலும் துயரனைத்தும் தீரும்.

———



காள் மாறியாடல்



மூப்பதாவது அத்தியாயம்.

கால்மாறியாடல்.

விக்கிரமபாண்டியன் சிவலோகம் சேர்ந்தும் ராசசேகரபாண்டியன் இராச்சியத்தை ஆட்சி புரிந்துவந்தான். தந்தையினும் அதிகச்சிரும் சிறப்பு முடையனாய் எல்லா வித்தைகளையும் கலைகளையும் கற்றிருந்தான். பெருஞ் சிவனன்பனாதால் சிவபெருமான் ஆடும் நிருத்தத்தைத் தானும் கற்றல் சரியல்லவென்று நினைந்து அவன் நிருத்தக்கலையில் பயிற்சி பெறவில்லை. மற்றெல்லாக் கலைகளிலும் சிறந்த வல்லமைபெற்றிருந்ததால் அவனுக்கு அறுபத்துநான்கு கலைவல்லான் என்று உலகெங்கும் புகழ்பரவியது.

அந்தச்சமயத்தில் சோழ இராச்சியத்தில் கரிக்கால்சோழன் என் பவன் அரசன். அவன் திருவானைக்காச்சம்புகேசுரக் கடவுளிடம் அன்பு கொண்டவன். அவ்வேந்தன் பாண்டியராசனது புகழைக்கேட்டுத் தானும் கலைகளனைத்தையும் கற்று அறுபத்துநான்கு கலைவல்லான் எனும் பெயரையும் பெற்றான்.

இவ்வாறிருக்கையில் கலைவாணர் ஒருவர் சோழராசனைக்கண்டு வெகுமதிகள்பெற்றுப் பாண்டிய வேந்தனையும் பார்க்க வந்து, 'ராசசேகரப் பாண்டியனே! சோழராசன் நிருத்தம் உள்பட எல்லாக் கலைகளையும் கற்றிருக்கின்றான். உமக்கோ அந்தக்கலையில் பயிற்சி கிடையாது. சனங்கள் இதை ஓர் குறையாகக் கூறுகின்றனர். சோழராசனும் அவ்வண்ணமே சொல்லிக்கொண்டிருக்கின்றான்" என்று உரைத்தார். அதைக்கேட்ட பாண்டியமன்னன் வெட்கமடைந்து "எல்லோர்க்கும் எல்லாம் தெரியாது, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றுதான் தெரியும்" என்று மொழிந்து தலை குனிந்து பூமியைக் கீறிக்கொண்டிருந்தான். கவிவாணரும் "அரசே! அப்படித்தான்" என்று கூறினர். பின்னர் அரசன் அவருக்குச் சிறந்த வெகுமதிகள் கொடுத்தனுப்பினன்.

உடனே அரசன் நிருத்தம் கற்பதில் மனதைச்செலுத்தினன். ஆனால் சிவபெருமான்போன்று வலதுகாலை ஊன்றி இடதுகாலைத் தூக்கி ஆடுவதில் அவனுக்கு விருப்பமில்லை. ஆயினும் சோழராசன்போன்று ஆக வேண்டுமென்ற எண்ணத்தால் அவ்வகையான ஆடலையேகற்றான். இப்படியிருக்கும்பொழுது ஒருநாள் அரசனது மனதில் ஒரு கணநேரம் ஒருகாலை ஊன்றி மற்றொரு காலைத்தூக்கி ஆடுவதற்குள்ளாகவே எனக்கு எத்தனை நோவு உண்டாகின்றதே! சிவபெருமான் ஓயாது அல்லும் பகலும் இந்த ஆட்டம் ஆடுகின்றாரே! அவருக்கு எவ்வளவுநோவு உண்டாகும்! ஒருவேளை எல்லாப்பிறவியும் தாங்கும் அவருக்கு இது ஒரு நோவாகத்தோன்றாது போலும்" என்றவாறு எண்ணமுண்டாகி அவன் வருத்தப்பட்டான்.

சிவராத்திரி வந்தது. அன்று பாண்டியராசன் நடுராத்திரியில் திருக்கோயில் சென்று, வெள்ளியம்பலத்தின் முன்னிலையில் உட்கார்ந்து,

உவகையுடன் ஐந்தெழுத்து மந்திரத்தைச் செபித்துப் போற்றிகளும் புகழ்களும் பாடி நேரத்தைப் போக்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது திருத்தம கற்பதில் ஏற்பட்ட நோவு நினைவிற்கு வந்தது. உடனே அதிகமான அன்புகொண்ட அந்த மன்னன் பெருமானை நோக்கி "இன்பவடிவான பெரியோனே! பெருங்கூத்தில் வல்லவனே! ஐந்தொழிலை அருமையாய் நிகழ்த்துபவனே! ஒரே காலால் வெகுகாலமாக ஆடி உண்டான கோவைத் தீர்த்தற்பொருட்டுக் காலமாற்றி மற்றைக்காலால் நீர் அற்புதத்தாண்டவம் ஆடவேண்டும். அப்படிக் கால்மாற்றாட்டம் ஆடாவிடில் இத்தக்கத்தியால் எனது சிரத்தை வெட்டிக்கொள்வேன்" என்று பிரதிக்ஞை பண்ணி, உறையினின்றும் கத்தியை உருவி இறைவனது முன்னிலையில் காட்டி உயிரில் விருப்பற்றவனாய் நின்றான். முன்னாளில் ஆலவாயுடையான் பதஞ்சலி வியாக்ரபாதர் இந்த இருமுனிவர்க்காகத் தவாதசாந்த மகாநடனத்தை ஆடிக்காட்டினார். அதுபோன்று இப்பொழுது பேரன்பனான பாண்டியராசனது விருப்பத்தையறிந்து கருணைக்கடலான பெருமான் வலதுகாலைத் தூக்கி மிக அற்புதமாக ஆடினார். உடனே விட்டுணு முதலான தேவர்கள் அங்கு வந்து கூடிவிட்டனர். அப்சரமங்கையர் ஆடல் பாடல் முதலியவற்றைப் புரிந்தனர். பாண்டியராசனும், அவனது அமைச்சரும், சிவராத்திரி நோன்பிற்காக வெளியிடங்களிலிருந்து வந்தவரும், பாவங்களனைத்தையும் போக்கி நன்மையைப்பயக்கும் இறைவனது அத்தத் திருதாண்டவத்தை நேரில் பார்த்துப் பேருவகை எய்திப் பரவசமாயினர். சிலர் விழுந்து வணங்கினர். சிலர் துதித்தனர். சிலர் எதிரில் நின்று ஐந்தெழுத்தைச் செபித்தனர். சிலர் கூத்தாடினர். சிலர் தியானத்தில் ஆழ்ந்தனர். சிலர் ஆடை முதலானது கொடுத்து பூசை செய்தனர். அரசனும் அண்மையிற் சென்றுபார்த்து, வியப்பெய்தி, மயிர்சிலிர்ப்ப, தனக்கிறைவனும் தனக்கின்பமளிக்கின்றவனும் எட்டுப்பொருள் வடிவனுமான தாண்டவமூர்த்தியை நோக்கி:- முழுமையான இன்பம் உண்மை அறிவு இவை வடிவமானவனும், இரண்டாவதற்றவனும், அற்புத ஆடல் புரிபவனுமான சுந்தரேசப்பெருமானை வணங்குகின்றேன். ஐந்தெழுத்து வடிவனும் ஐந்தொழிற்கு ஒரே காரணமானவனும் அற்புத ஆடல்புரிபவனுமான சுந்தரேசப்பெருமானை வணங்குகின்றேன். உலகிற்கு மேற்பட்டவனும் உலகவடிவனும் உலகின் ஆன்மாவாயிருப்பவனும், பெரிதினும் பெரியவனுமான அற்புத ஆடல் புரியும் சுந்தரேசப்பெருமானை வணங்குகின்றேன். யோகப் பயிற்சி செய்பவரின் தியானத்திற்குப் பொருளானவனும் யோகசித்திகள் தருபவனும் அற்புத ஆடல் புரிபவனுமான சுந்தரேசப்பெருமானை வணங்குகின்றேன். அன்பால் அடையத்தக்கவனும் அன்பரின் இக்கட்டுகளைத் தவிர்ப்பவனும் பிறப்பையொழிப்பவனும் அற்புத ஆடல் புரிபவனுமான சுந்தரேசப்பெருமானை வணங்குகின்றேன். மக்கட்கு இன்பம் வீடு இவ்விரண்டையும் அளிப்பவனும் மறைமுடிகளால் கூறப்பட்டவனும் அற்புதஆடல் புரிபவனுமான சுந்தரேசப்பெருமானை வணங்குகின்றேன். தவாதசாந்த நிலையில் சூக்குமமாய் நிற்பவனும், திங்கள், கதிரவன், அனல் இவற்றைக் கண்களாயுடையவனும் அற்புத ஆடல்புரிபவனுமான சுந்தரேசமூர்த்தியை வணங்குகின்றேன். முப்பத்தாறு தத்துவங்களாகின்ற படிகளையுடைய பெரும் மாளிகையின் மத்தியில் உறைகின்றவனும், அற்புத ஆடல்புரிபவனுமான சுந்தரேசப்பெருமானை வணங்குகின்றேன். காலத்திற்கு மேம்பட்ட

வனும் காலனுக்குக் காலனானவனும் பிறைசூடியும் அற்புத ஆடல் புரிபவனுமான சுந்தரேசப்பெருமானே வணங்குகின்றேன். சூக்கும ஐந்தெழுத்தான பிரணவத்தின் மத்தியிலிருப்பவனும் அற்புத ஆடல் புரிபவனுமான சுந்தரேசப்பெருமானே வணங்குகின்றேன். கிவிருத்தி முதலான கலைகளுக்கு மேம்பட்டவனும், என்றுமிருப்பவனும், கலைகளற்றவனும், கலைகளுடையவனும் அற்புத ஆடல் புரிபவனுமான சுந்தரேசப்பெருமானே வணங்குகின்றேன். செல்வமனைத்தையும் பயக்குபவனும் உடனே இன்னல்களையகற்றுபவனும் அற்புத ஆடல் புரிபவனுமான சுந்தரேசப்பெருமானே வணங்குகின்றேன். பாவங்களைக்களைந்த பெரியோரால் விசேடமான வித்தைகளின் மூலம் வணங்கப்பெற்ற திருவடிகளையுடைய ஆலவாயுடையானே! உமக்கு வணக்கம். அற்புதத் தாண்டவம்புரியும் சுந்தரேசப்பெருமானே! உமக்கு வணக்கம்" என்று துதித்து, மீண்டும் மீண்டும் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, பேறுபெற்றேன், பேறுபெற்றேன், பேறுபெற்றேன் என்று சொல்லிக்கொண்டு எழுந்து இறைவனைப் "பெருமானே! உலக நலத்தின் பொருட்டு நீர் இடதுகால் தூக்கி ஆடுவதை எங்குமே காணலாம். அதில் ஆச்சரியமொன்றுமில்லை. இத்தக் கால் மாறிய ஆட்டமே புதிது. அற்புதமானது. மற்றெங்கும் இல்லாதது. ஆதலால் எனது குலத்தில் தோன்றும் யாவரும் அதைக்கண்டு நலன்பெறுதற் பொருட்டும் உலகத்தாரின் நன்மைக்காகவும் எப்பொழுதுமே இந்த நிருத்தம் செய்தருளவேண்டும்" என்று வேண்டினான். உடனே ஆகாயவாணி சரிசரி என்று உரைத்தது. அதைக் கேட்டு அரசன் பேரின்பமடைந்து இறைவனுக்குத் தன்பாலிருக்கும் அருளையும் அன்பையும் நினைந்து முன்னிலும் அதிகமான அன்பை இறைவனிடம் செலுத்தலானான். குடை, சாமரம், சிங்காதனம், முத்தாரம் முதலானவற்றைக் கொடுத்தான். அப்பொழுது முதற்கொண்டு ஆலவாயுடையானுக்கு கால்மாறியாடியவன் எனப்பெயர்வந்தது.

கால்மாறியாடிய சுந்தரேசமூர்த்தியைத் தியானம் செய்வோருக்குக் காரியங்கள்யாவும் கைகூடும். இடையூறுகள் விலகும். ராசசேகர பாண்டியனும் அன்று முதல் இரவும் பகலும் அந்த மூர்த்தியை நினைந்தான். சிவராத்திரியாகிய அன்று அரசன் இரவு முழுவதும் அங்கு தங்கி விழித்திருந்து காலையில் அரண்மனை சென்றான்.

வெளியூர்ச் சனங்கள் அற்புதத்தாண்டவத்தைப்பற்றி கேள்வியுற்று கூட்டம் கூட்டமாக வந்து பார்த்துப்பெரும் பேறு எய்தினர். ராசசேகரவேந்தனுக்குக் குலோத்துங்கபாண்டியன் என்று எல்லா நற்குணங்களும் நிறைந்த ஒரு புதல்வன் பிறந்தான். அவனுடன் அரசன் வெகுகாலம் காட்டை ஆண்டான்.

இந்த இருபத்துநான்காவது திருவிளையாடல் பேறுகள் நான்கையும் பயக்கும். அதைக்கேட்டலால் மிகுதியான புண்ணியம் கிடைக்கும்.



மூப்பத்தோராவது அத்தியாயம்.

பிராமண மங்கையின் கொலையைக் கண்டுபிடித்தல்.

இராசசேகர பாண்டியனுக்குப் பின்னர் குலோத்துங்க பாண்டியன் அரசனானன். ஆலவாயுடையார் அற்புதத்தாண்டவத்தை எப்பொழுதும் மனத்தில் நினைத்துகொண்டு இராச்சியகாரியங்களைச் செவ்வனே கவனித்துவந்தான். குடிகள் செல்வத்துடன் வாழ்ந்தனர்.

பாண்டியனுக்கு ஆயிரம் மனைவிகள். ஒவ்வொருவரிடத்திலும் ஆறு புதல்வர்கள் தோன்றினர். ஆறாயிரம் புதல்வருடனும் மனைவிமாருடனும் களித்து அரசன் இன்புற்றிருந்தான். அப்புதல்வருள் முதன்மையானவனும் எல்லையற்ற நற்குணங்களுடையவனுமானவன் அநந்தகுண பாண்டியன்.

புனூர் என்ற கிராமத்திலிருந்து பிராமணன் ஒருவன் தனது மனைவியுடனும் கைக்குழந்தையுடனும் மதுரையிலிருக்கும் தனது மாமனார் அகத்திற்கு வந்துகொண்டிருந்தார். வரும் வழியில் கோப்புற்று மூவரும் ஓர் ஆலாமரத்தடியில் தங்கினர். தண்ணீர் கொணர்தற் பொருட்டு பிராமணன் வெளிச்சென்றார். மனைவியும் குழந்தையும் உறங்கிவிட்டனர். அந்தச் சமயத்தில் வேடனொருவனால் ஓர் கிளியின்பேரில் விடப்பெற்ற அம்பு குறிதவறி பறவையின்மேல் பாயாது ஆலமரத்து இலையொன்றில் ஒட்டிக் கொண்டிருந்தது. வினையின்பயனுகக் காற்றாலசைக்கப்பட்ட அது கீழே படுத்திருந்த அந்தப் பிராமணமங்கையின்மீது வேகத்துடன் விழுந்து அவளைக்கொன்றது. இதற்குள்ளாகப் பிராமணன் தண்ணீருடன் விரைந்து வந்தார். மனைவி உயிரற்றிருப்பைக்கண்டு மிகவும் வருந்தி மார்பில் அடித்துக்கொண்டு அழுதார்.

அப்பொழுது ஓர் வேடன் அங்கு வந்தான். பிராமணன் அவனைப்பார்த்ததும் சினந்து 'ஏ வேடா! நீதான் என் மனைவியைக்கொன்ற பாவி' என்று கூறி அவனது கன்னத்தில் அடித்தார். வேடன் தனக்கொன்றும் தெரியாதென்று சொன்னான். பிராமணன் அது பொய். நீதான் கொன்றாய் என்று பலமுறை சொல்லி வேடனை கன்றுகட்டி குழந்தையையும் கொலையுண்ட மனைவியையும் எடுத்துக்கொண்டு மதுரை சேர்ந்து அரண்மனையில் முறையிட்டார்.

அமைச்சர் விசாரித்தனர். உண்மை தலங்கவில்லை பின்னர் அரசனிடம் தெரிவித்தனர். அரசன் வெளிவந்து பிராமணனையும் மரித்த

மனைவியையும் குழந்தையையும் கண்டு இரக்கமுற்று பிராமணனை விசாரணை செய்தான். ஒரே பிடிவாதமாக வேடன்தான் தனது மனைவியைக் கொன்றவனென்று பிராமணன் கூறினார். அப்படியே வேடனும் தனக்கு இதில் தொடர்பில்லையென்று முன்பு கூறியதையே கூறினான். அரசன் கடைசியாக வேடனை நோக்கி 'உண்மையைச் சொல்லிவிடு. நான் உன்னைக் கொல்ல மாட்டேன்' என்று உறுதி கூறினான். அதன்பேரில் வேடன்தான் கிளியின்மேல் அம்பு தொடுத்ததையும், அம்பு குறிதவறி, இலையில் தங்கியிருந்து, பின்னர் காற்றில் அசைந்து பிராமணமங்கையின்மேல் பாய்ந்து அவளைக் கொன்றதையும் விவரமாகச் சொன்னான். பிராமணன் அதைத்தான் நம்பவில்லையென்றும் வேடன்தான் கொன்றானென்றும் அவனைத் தக்கவாறு சிட்சை செய்யவேண்டுமென்றும் அரசனிடம் தெரிவித்தார். அதற்கு அரசன் பிராமணனைப்பார்த்துச் சமாதானமாய் 'ஐயா! நான் தீர விசாரித்து வேடனைக் கொல்கின்றேன். அதற்குள்ளாக உமது மனைவியின் உடலை எரித்து வேண்டியகாரியங்களை நடத்தும்' என்று மொழிந்து அவரை அனுப்பினான். வேடனை அடிக்கச்செய்து விலங்கிட்டுச் சிறையில் வைத்தான்.

பின்னர் அரசன் மேற் செய்யவேண்டியது குறித்து அமைச்சருடன் ஆய்ந்தான். யாரும் முடிவாக ஒன்றும் சொல்ல இயலவில்லை. இந்த நிலைமையில் அரசன் ஆழ்ந்த கவலையுடன் "நமது குலதெய்வான ஆலவாயுடையான் எனது தந்தையின் விருப்பத்திற்கேற்ப அற்புதத்தாண்டவமாடினார். எனக்கும் எல்லாமறிந்த அவர் இந்த இக்கட்டான நிலையில் நிச்சயமாக ஓர் வழி காட்டுவார்" என்று மொழிந்துகொண்டு திருக்கோயிலுக்குப் புறப்பட்டான். அங்கு சென்று பொற்றாமரையில் நீராடி அங்கயக்கண்ணி யம்மையையும் மூல லிங்கத்தையும் வணங்கி வெள்ளியம்பலம் வந்து கால் மாறியாடிய பெருமானது திருத்தாள்களில் வீழ்ந்து எட்டு உறுப்புகளுடனும் ஐந்து உறுப்புக்களுடனும் மூன்று உறுப்புகளுடனும் மீண்டும் மீண்டும் வணங்கிப் பலவகையாகத் துதித்து, விசேடமான பீச வெழுத்துடன்கூடிய ஐந்தெழுத்து மந்திரத்தைச் செபித்துப் பெருமானைநோக்கி "இறைவனே, இதுவரை யாதொரு பழிச்சொல்லுமில்லாது வாழ்ந்து வந்த எனக்கு இன்னது செய்வதென்று முடிவுசெய்ய முடியாத ஓர் இடைஞ்சலான நிலை இன்று ஏற்பட்டிருக்கின்றது. உண்மையென்னவென்று நிரூபித்தருள வேண்டுமென்று, வேண்டிக் கைகூப்பியவண்ணமாய் நின்றான். அப்பொழுது ஆகாயவாணி பிறந்து 'இராசசேகர வேந்தனது புதல்வனான குலோத்துங்க பாண்டியனே! நீ இன்று நடுநிசியில் கையில் வாளெடுத்து நகர்சோதனைக் கென்று புறப்பட்டு என்னை நினைந்துகொண்டு அச்சமின்றி நகருக்கு வெளியில் வர உனது ஐயத்தைத் தீர்க்கின்றேன்" என்று கூறிற்று.

இதைக்கேட்டு மகிழ்ந்து அரசன் அரண்மனைக்கு சென்றான். இரவில் மாறுவேடத்துடன் பிராமணனை இட்டுக்கொண்டு நகருக்கு வெளிப் புறம் சென்று அங்குள்ள வையத்தெருப்பக்கம் சுற்றினான் அங்கே ஒரு வீட்டில் கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் வெகு முமரமாய்நடந்து கொண்டிருந்தன. அரசனும் பிராமணனும் அந்த வீட்டுத்திண்ணையில் போய் உட்கார்ந்தனர் அங்கு மணமகனின் உயிரைக் கொண்டுபோவதற்காக வந்திருந்த இரண்டு இயமதூதர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தனர். மிக்க கருப்பாயும் பனைமரம்போல் உயர்ந்துமிருக்கும் இவ்

விருவரும் யாவர் என்று அறிந்துகொள்ளும்பொருட்டு அரசன் மறைவிலி
ருந்து அவர்கள் பேசிக்கொள்வதைக் கேட்டான். எவ்வளவோ பழம்கதை
பேசினர். இறுதியில் 'நாம் இந்த மணமகனை இப்பொழுது யமலோகம்
சேர்க்கவேண்டும்' என்றனர். உடனே அரசன் மாறியாடிய தாண்டவ
மூர்த்தியை உளத்தில் நினைத்து அச்சம் சிறிதுமின்றி அவர்களது அண்மை
யில் சென்று ''கலியாண மாப்பிள்ளையின் உயிரை நீங்கள் இப்பொழுது
எடுக்கப்போவதற்காகப் பேசிக்கொண்ட மொழிகளைக் கேட்டேன். அதை
எவ்வாறு செய்யப்போகிறீர்கள்'' என்று கேட்டான். அந்த இரண்டு இயம
தூதர்களும் அவனைப்பார்த்து வியப்படைந்து அரசனே! சொல்கின்றோம்,
கேள். மகிழ்ச்சியுடன் மணமகன் கன்னியின் கையைப் பிடித்திருக்கும்
பொழுது அதோ கட்டியிருக்கும் கூரான குட்டைக்கொம்புகளுடைய பசு
வைக் கட்டினின்றும் அவிழ்த்துவிடுவோம. அது சென்று மணமகன்
பேரில் பாய்ந்து அவனைக் குத்திக்கொன்றுவிடும். அவனது உயிரை காங்
கள் கொண்டுபோவோம். அரசனே! சாகும்தருவாய் வந்துவிட்டால் புல்
லும் வச்சிராயுதமாகிவிடும். இன்றுகாலையில் ஆலமரத்தடியில் படுத்திருந்த
பிராமண மங்கையினது உயிரை முன்னர் வேடனால் விடப்பட்டு மரத்திலே
யில் தங்கியிருந்த ஓர் அம்பின்மூலம் எடுத்தோம். அவளது கணவன் அப்
பொழுது தண்ணீர் கொணரப்போயிருந்தார் என்று சொல்லுகையில் அர
சன் விரைந்து பிராமணனை அங்கு கூட்டிவந்து மறைவில் இருக்கச்செய்
தான். பிராமணனும் மனம் கலங்காமல் அங்கு நின்றார். ஆலவாயுடை
யானால் தண்டப்பெற்று இயமதூதரிருவரும் மீண்டும் தங்களது செயல்
களைச் சொல்லிக்கொள்ளத் தொடங்கினர். அவர்களில் ஒருவன் மற்றவனை
நோக்கி, 'நண்பனே! பெரும் கொம்பானை யொன்றையும், சிங்கமொன்றை
யும், அரசனொருவனையும், சக்கரவர்த்தியொருவனையும் நான் கொன்றிருக்
கின்றேன் என்றதும் மற்றவன் தனது வீரச்செயல்களைக்கூற விரும்பி
'முன்னளில் அசமகாராசனது மனைவியான இந்துமதியின் உயிரையும் மற்
றும் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் மற்றச் சாதியினர், இவர்
களது உயிரையும், விலங்குகள், பறவைகள் மற்றைச்சென்துக்கள் இவை
களது உயிரையும் எடுத்திருக்கின்றேன். இன்று காலையில்கூட பிராமண
னது மனைவியின் உயிரை வேடனால் முன்னரே விடப்பட்டு இலையில் தங்கி
யிருந்து பின்னர் விழுந்த அம்பின் காரணமாய் எடுத்தேன். கடைசிக்காலம்
வந்துவிட்டால் அழுதும் நஞ்சாகும். இந்தப்பசுவின்மூலம் மணமகனின்
உயிரை எடுத்து நாம் சீக்கிரம் செல்லவேண்டும். இல்லாவிடில் சித்திரகுப்
தனும் நமது இறைவனை இயமனும் சினம்கொள்வர்'' என்றுமொழிந்தான்.
அப்பொழுது அரசன் பிராமணனை நோக்கி ''பிராமணரே! இயமதூதரது
வார்த்தைகளை நீர் கேட்டீர். அவற்றில் எவ்வளவு உண்மையிருக்கிற
தென்று தெரிந்துகொள்ள மணமகனது முடிவு எவ்வாறுகின்றதென்று
பார்த்துப் பின்னர் செல்வோம் என்று கூறிப்பிராமணனுடன் அங்கு
தங்கினன். இயமதூதர் மறுபடியும் ஒருவருக்கொருவர் நமது இறைவனு
கிய தர்மராசரது ஆக்கினைப்படி நாம ஐந்து குரோசம் (கூப்பிடு தூரம்)
பரப்புள்ள காசித்தலத்திலும், அதே பரப்புள்ள தக்கிணகைலாசமெனும்
திருக்காளத்தியிலும், ஒன்றரை யோசனம் (எட்டு மைல்) பரப்புள்ள புண்ட
ரீகபுரமென்ற வைக்கத்திலும், பூலோக சிவலோகமென்று பெயர்பெற்ற
இரண்டு யோசனம் பரப்புள்ள மிகப் புனிதமான ஆலவாய்த்தலத்திலும்
புகவேகூடாது. மற்றை சிவத்தலங்களில் இலிங்கமிருக்குமிடத்திற்கு ஒரு

குரோசம் தொலைவிற்குப்புறம்பே நாம் செல்லலாம்" என்று தலங்களின் மாண்பைப்பற்றிப் பேசிக்கொண்டனர். குலோத்துங்க பாண்டியனும் பிராமணனும் அதைக்கேட்டு மகிழ்ந்து கைமேல் கைபோட்டுக்கொண்டு அங்கு நின்றனர்.

கலியாண வீட்டில் வாத்தியங்கள் முழங்கத்தொடங்கின. மாடு சத்தத்தைக்கேட்டுக் கலங்கி முளையைப் பிடுங்கிக்கொண்டு ஓடி மணமகன் மீது பாய்ந்தது. உடனே அவனது உயிர்போயிற்று. கலியாணத்திற்கு வந்த அனைவரும் ஐயோ! ஐயோ! என்று அலறினர். இயமதூதர் மறைந்தனர். பிராமணன் ஆச்சரியப்பட்டார். உடனே அரசனும் அவரும் தத்தம் இல்லத்திற்கேகினர்.

பொழுது விடிந்ததும் அரசன் அமைச்சரை அழைத்து இரவில் இறைவன் நடத்திய செயல் யாவற்றையும் விரிவாகப்பகர்ந்தான். அதைக் கேட்டு அவர்கள் மனமகிழ்ந்து அரசனைப்பார்த்து "உயர்குணங்கள் யாவையும் பெற்ற குலோத்துங்க மன்னனே! உமக்கு நிகரான சிவனன்பர் கிடையவே கிடையாது. உமது தந்தையின்பொருட்டு ஆலவாயுடையான் அற்புதத்தாண்டவமாடினர். உமக்கும் இன்று அருள் புரிந்தார்" என்றனர். அதன்மேல் அரசன் 'அமைச்சரே! எனக்கு வாய்ப்பார்த்த பழிச்சொல்லைப் பெருமான் அகற்றிவிட்டார். அவரை நம்பியதன்பயனே நான் இப்பொழுது பெற்றுவிட்டேன்" என்று மொழிந்து அமைச்சருடன் சிறையினின்று வேடனை விடுவித்து அவனை நோக்கி 'அறியாமையால் நாங்கள் உனக்கிழைத்த கொடுமையை மன்னிக்கவேண்டும்" என்று கேட்டுகொண்டு அவனுக்கு வேண்டிய பொருள் கொடுத்து அவனை அனுப்பினான். பின்னர் பிராமணனை அழைத்துக் கலியாணம் செய்துகொள்ளற்குப் போதுமான பொருள் தந்தான். பிராமணனும் அதைப்பெற்றுக் கலியாணம் செய்துகொண்டு இன்பமாக வாழ்ந்தான்.

அரசன் அகமகிழ்ந்து, வெள்ளியம்பலம் சென்று அற்புதத்தாண்டவத்திற்கு வணக்கம் செய்து, விசித்திரமான முடிகளையும், ஆபரணங்களையும் இறைவனுக்குச் சமர்ப்பித்து, உலக நலத்தின்பொருட்டு உயர்த்தப்பட்ட வலக்காலிற்கு அழகான தண்டையும், சதங்கையும் பூட்டுவித்து, இரத்தினங்களிழைத்த கொடித்துணியும் கொடுத்துப் பேரன்புடன், செல்வமனைத்தும்பெற்று மனைவிமார் மக்களுடன், இன்பமாய் மதுரையில் வெகுகாலம் ஆட்சி புரிந்தான்.

இருபத்தைந்தாம் திருவிளையாடலாகிய இதைப் படிப்போரும் கேட்போரும் இம்மையின்றி வாழ்வர்.



மூப்பத்திரண்டாவது அத்தியாயம்.

மாபாதகந் தீர்த்தல்.

அவந்தியென்ற நகரில் ஒரு பிராமணன் இருந்தார். அவருக்கு ஓர் அழகான மனைவி. சிறு பிராயத்திலேயே அவள் ஒரு புதல்வனைப் பெற்றாள். அவன் நாளடைவில் வளர்ந்து காளைப்பருவத்தையுமடைந்தான். காமவெறி பிடித்து அவன் தாயிடமே கட்டாயப்படுத்திப்புகுந்தான். தந்தைக்கு இது தெரியவந்தது. ஆனால் அவர் ஏமாற்றத்தையும் அவமானத்தையும் வெளிப்படுத்தக்கூடாதென்ற முதியோர் மொழியைப் பின்பற்றி அறியாததுபோலவே இருந்தார்.

ஒருநாள் தாயும் மகனும் ஒன்றுயிருப்பதைத் தகப்பன் பார்த்து விட்டார். மகன் அதைத்தெரிந்து, சினம்கொண்டு, வேண்டாமென்று தாய் தடுத்தும் தகப்பனுரின் சிரத்தை ஓர் மண்வெட்டியால் சிதைத்தான். தாய் வருத்தமுற்றிருப்பதைப் பார்த்து அவன் காமவெறி பிடித்தவர்க்கு அறமேது, அன்பேது, இரக்கமேது, தந்தையேது, தாயேது, நற்செயலேது?? என்று மொழிந்தான். பின்னர் கடுங்கியில் தகப்பனது உடலை எரித்து, வீட்டிலுள்ள பொருள்கள் யாவற்றையும் திரட்டிக்கொண்டு, யார்கண்ணிலும் படாது தாயுடன் வேறு ஊருக்குச்சென்றான்.

பாதி வழியில் திருடர்கள் அவர்களைக்கண்டு உவகையுடன் மகனை அடித்து அவனிடமிருந்த பொருளனைத்தையும் பறித்துக்கொண்டு அழகாயிருந்த தாயையும் கவர்ந்து ஓடிவிட்டனர்.

நாமொன்று நினைக்கத் தெய்வம் வேறுவிதமாய் நினைக்கின்றது. பிராமணரின் மகன் கோவணத்துடன் விடப்பட்டு உடுக்கத் துணிக்குத் திண்டாடிப் பிச்சை எடுத்தான். அழுக்குத் துணியும் சிக்குப்பிடித்த தலையுமாய் ஊரூராய்த்திரிந்தான். தாயும் போய்விட்டாள். பொருளும் போய்விட்டது ஊழின் போக்கு இவ்வாறு இருக்கிறதென்று அவனுக்கு அறிவு வந்தது. கெங்கை முதலான புண்ணியதீர்த்தங்களில் நீராடிப் பாவங்களைத் தொலைக்கலாமென்றெண்ணிப் புறப்பட்டான். ஆனால் மாபாவியான அவனது பின்னே கொலைப்பேய் எப்பொழுதும் கூடவே சென்றது. பின்னே என்ன வருகின்றது என்று அவன் திரும்பிப்பார்ப்பான். ஒன்றுமே புலப்படாது. தீர்த்தங்களின் அண்மைக்கு நீராடச்செல்வான். ஆனால் பேய் அவனைப் பின்னிருந்து இழுத்துவிடும். குளிக்காமல் திரும்புவான். இவ்வண்ணம் புண்ணிய தீர்த்தங்களில் நீராடல் கிடையாமலே அவன் வெகுகாலம் பூமியில் அலைந்தான்.

தேவர்கள் இரக்கம்கொண்டு தந்தையைக் கொன்றவனும் தாயுடன் கூடினவனுமான இந்த மாபாவியைக் காக்கவேண்டுமென்று நெஞ்சில்

நினைந்தனர். உடனே அவன் வினையின்பயனால் மதுரை நகர் நோக்கி ஓடினான். அவன் வந்தநேரம் அவனுக்கு அனுகூலமாயிருந்தது. அப்பொழுது இறைவியும் இறைவனும் இன்பச்சுவையிலீடுபட்டு வேடத்தி வேடம் பூண்டு கோபுரவாயிலில் நின்று நீயதாயிருக்கும் காமத்தின் பேராற்றல் பற்றிப் பேசியவராய் இன்பம் விரும்பினால் அதைத் தன் மனைவியிடத்தே சுவைக்கவேண்டும், பிறர் மனைவியிடம் புகுதல் பாவமான செயல். உலகத்திற்கே காமம்தான் காரணம். நமக்கும் அது பிரியமானதுதான். இருந்தாலும் அது இப்பொழுது இருக்கும் நிலையில் வெறுக்கத்தக்கதாகவே இருக்கின்றது, என்று மொழிந்தனர்.

இதற்குள்ளாக அவன் அவர்களது கண்ணில்பட்டான். அவனைப் பார்த்ததும் அவனது வரலாறு முழுதும் தெரிந்தமையால் அவர்கள் சிரித்து என்று உரைத்தனர். ஆயினும் அவனுக்கு வேறு புகலில்லாமையாலும் அவன் அறியாமையாலும் முன்வினைப்பயனாலும் அவ்வாறு நடந்துவிட்டான் என்று கருதியதாலும் இறைவன் அவனிடம் இரக்கம்கொண்டு அவனை நோக்கி "மாபாவியே! நீ செய்த பாவத்திற்குப் போக்கும் வழியே கிடையாது. ஆயினும் எங்களது நோக்கில் நீ வந்துவிட்டபடியால் நான் கூறுகின்றேன் உண்மையாகவே நீ ஏழையாயிருத்தலால் கொடையென்பது உன்னால் இயலாதகாரியம். ஆதலால் நான் அதுபற்றிச் சொல்லப்போவதில்லை. நாள்தோறும் பசுவிற்கு நல்ல புல்லும் தண்ணீரும் கொடு. அன்புடன் அங்கப்பிரதக்ஷிணம்புரி. முந்நேரமும் இறைவனது அபிஷேநீரில் குளி. கடவுளன்பர்க்கு அதிகமான தொண்டுசெய். பிச்சையன்னம் கொண்டு புலன்களையடக்கியவனாய் நாளில் ஒருமுறை உண்டியருந்து. இவ்வாறு மூன்று மாதகாலம் செய்வாயேயாகில் உன்னைப் பாவம் நீங்கினவனாக சனங்கள் கருதுவர்" என்று கூறினர். உடனே கயக்கண்ணியம்மை ஆலவாயுடையானது அற்புதக் கருணையை நினைந்து வேதங்கள் சொல்லியும் பண்கள் பாடியும் துதித்தாள். உடனே பெருமான் பெருமாட்டியைப் பார்த்து "உமையே! படித்து நற்குணங்கள் பெற்று நற்செயல்கள் புரிவோரை நாம் காப்பாற்றுகின்றோம். இதில் எனக்கு ஆச்சரியம் ஒன்றும் தோன்றவில்லை. படிப்பின்றிக் குணமின்றி நடத்தையின்றி இருப்பவனை மீட்பதேஆச்சரியம். அதனால்தான் நான் இவன்பால் கருணைகாட்டினேன்" என்றார். இவ்வாறு ஒருவரோடொருவர் அளவளாவிக்கொண்டு மறைந்தனர். அவனும் இறைவன் கூறிய பிராயச்சித்தத்தைச் செய்து மாபாதகத்தினின்றும் விடுபட்டுத் தூயனாகி இன்பமாய் வாழ்ந்தான்.

இந்த இருபத்தாறும் திருவிளையாடலைப் படித்தோரும் கேட்போரும் பழிகள் நீங்கி நற்கதியடைவர்.



மூப்பத்துமூன்றுவது அத்தியாயம்.

அங்கம் வெட்டுதல்.

மதுரைகரில் ஆயுதங்களில் பயிற்சியளிக்கும் ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவர் காள்தோறும் ஒரு சாமநேரம் மாணவர்க்குப் பயிற்சி கொடுத்து மீதி நேரத்தையெல்லாம் இறைவன் வழிபாட்டிலேயே செலவிட்டார். அடிக்கடி கோயில் சென்று, வலம்சுற்றி, வணங்கி தோத்திரங்கள் பாடுவார்.

அவ்வாசிரியரிடமிருந்து வித்தை கற்றுக் கூடுமான காணிக்கை செலுத்திவிட்டு வெளியேறிப்பிழைத்த மாணவர் பலர். அவருள் நீக்குண முடைய சித்தன் என்று ஒருவன் வித்தை முழுதையும் மற்றவரைவிட அதிகமாகவே கற்று அவருக்குப் போட்டியாக வேறு ஒரு பயிற்சிக்கூடம் அமைத்து ஆசிரியரிடம் செல்ல நினைத்த அனேகமாணவரை தனது கூடத்திற்கே இழுத்துப் பயிற்சியளித்தான். ஆசிரியரின் பழைய மாணவரிற் சிலர் அவரிடம் வந்து இதைத் தெரிவித்தனர். உயர்குணம் படைத்த அவர் இதைச் சற்றும் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. அவரது மனம் எப்பொழுதும் இறைவன் நினைப்பிலேயே ஈடுபட்டிருந்தது.

சித்தன் போட்டிப் பள்ளிக்கூடத்தோடு நிற்காமல் கெட்ட நோக்கத்துடன் திருட்டுத்தனமாக அடுத்தடுத்து ஆசிரியரது மனைவியிடம் வந்து எனக்கு இடமுண்டோ எனக்கு இடமுண்டோ, எனக்கேட்டான். அய நினைப்புடன் கூடிய அந்த அம்மை அவனது வார்த்தைகளின் கருத்தை அறியாது "எனக்குத் தெரியாது. எனக்குத் தெரியாது" என்றே சொல்லிவந்தாள். ஒருநாள் வீட்டில் யாரும் இல்லாத சமயத்தில் சித்தன் மிகுந்த காமவேட்கையுடன் அந்த அம்மையை அணுகிக்கையைப்பிடித்தான். அவள் மீறிக்கொண்டு அவனே வெளியேதள்ளிக் கதவை தாழிட்டு இறைவனையே நினைத்தவளாயிருந்தாள். ஆசிரியரிடம் இந்த அவமானத்தைச் சொல்லவில்லை.

அன்பர்க்கு உதவுவதையே தொழிலாயுடைய ஆலவாயுடையான் அந்த அம்மையின் வருத்தத்தைக் கண்டு மனம்தாங்காது ஆசிரியர்போன்று உருமாறிக்கொண்டு சித்தனிடம் சென்று 'சித்தா! நான் கிழவன். நீயோ வாலிபன் ஆயினும் நாமிருவரும் கத்திப்போர் ஒன்று நிகழ்த்துவோம். உனக்கோ அல்லது எனக்கோ சண்டிகைத்தேவி வெற்றி கொடுக்கட்டும். பெண் பிள்ளையானால் இங்கேயே இருந்துவிடு. ஆண் பிள்ளையானால் வெளியே வா" என்று சவால்விடுத்தார். சித்தன் இதைக்கேட்டுக் கோபமடைந்து ஆசிரியரைக் கொன்றுவிடவேண்டுமென்று பலகையையும் வாளையும் தயாரித்தான். அதற்குள் இறைவன் பலகையும் வாளும் கையிலெடுத்து முன்னதாகவே குறிப்பிட்ட இடம் சென்று, முறைப்படி சண்டிகை வணக்

கம்செய்து சித்தன் வரும்வரைக் கூடியிருந்த சனங்களுக்கு வாள்வீச்சின் வரிசைகளைக் காண்பித்துக் கொண்டிருந்தார்.

சித்தன் ஓடி, உண்டியருந்தி, ஆடம்பரமான உடை அணிந்து, பலகை கத்தியுடன் வந்தான். கடும்வாட்போர் நடந்தது. இறைவன் உடனே யடித்திருப்பார். ஆயினும் உலக ஒப்பனைக்காக வெகுநேரம் போர் நடத்தினர். இடது சாரியாகவும் வலது சாரியாகவும் கத்தியை வீசினர். இறுதியில் சித்தனைக்கொல்லும் எண்ணத்துடன் முதலாவதாக ஆசிரியரின் மனைவியை நினைத்த நெஞ்சத்தில் ஒரு குத்துக்குத்தினர். பிறகு அந்த அம்மையைத் தொட்டனைகளைத் துணித்தார். பின்னர் அந்த அம்மை யிடம் கெட்டசொற்கள் பேசிய நாக்கை அறுத்தார். கடைசியாகச் செருக்குடன் நிமிர்ந்த அவனது தலையை வாளால் கொய்தார். சனங்கள் மகிழ்ச்சி யுடன் ஆரவாரம் செய்தனர். ஆசிரியரது கைத்திறனை மிகவும் மெச்சினர். அப்பொழுது எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே இறைவனு கிய ஆசிரியர் மறைந்துவிட்டார். எல்லோரும் திகைத்தனர்.

உடனே அவர்கள் ஆசிரியரது இல்லம் சென்று மனைவியாரிடம் ஆசிரியர் எங்கே என வினவினர். சுந்தரமூர்த்தியை வணங்கச்சென்றிருக் கின்றார் என்று அந்த அம்மாள் பதிலுரைத்தார். அனைவரும் அளவற்ற ஆச்சரியமெய்தி அவர் வரும்வரை அங்கு காத்து நின்றனர். ஆசிரியர் வந் தார். கூட்டத்தைக் கண்ணுற்று, நீவீர் இங்கு ஏன் கூடியிருக்கின்றீர், என வினவினர். அதற்கு அவர்கள் 'உம்மைப்போல் ஒருவர் வந்து உமது வைரியான சித்தனைக்கொன்றுவிட்டு மறைந்துவிட்டார்' என்றனர். ஆசி ரியர் அதைக்கேட்டுக் காரணம் அறியாதவராய் ஒன்றும்—பதில்உரையாமல் நின்றார். அப்பொழுது அவரது மனைவியார் பிறர் காதில் விழாதவாறு ஆசிரியரிடம் சித்தனது நீய நடத்தையைப்பற்றிக் கூறலானார்.

அதைக்கேட்டதும் ஆசிரியர் வெளியேறி நேராகத் திருக்கோயில் சென்று சுந்தரமூர்த்தியின் முன்னிலையடைந்து திரும்பத் திரும்ப வீழ்ந்து வணங்கி எம்பெருமானைப் பார்த்து "பெரும் கடவுளான சுந்தரமூர்த்தியே! அன்பர்க்கன்பனே! உமது திருவடிகளில் இடையுறாத அன்பை எனக்கருளி என்னைக் காப்பாற்றும். இன்பத்தையும் வீட்டையும் அளிப்பதும், இன்ன லனத்தையும் விலக்குவதும், எதிரிகளை ஒடுக்குவதுமான அன்பை எனக் கருளிக் காப்பாற்றும். அறியாமையை யொழித்து நல்லறிவைப் புகட்டும் உமது திருவடியன்பை எனக்கு அருளி என்னைக் காப்பாற்றும். சாயுச்சியம் முதலான முத்திகளுக்குக் காரணமானதும் புண்ணியத்தை யளிக்கக்கூடிய தும் மாபாதங்களை யொழிக்கக்கூடியதுமான அன்பை எனக்குநீந்து என்னை காப்பாற்றும். அறம், பொருள், இன்பம், வீடு இந்நான்கையும் பயக்கும் உமது திருவடியன்பை எனக்குக் கொடுத்து என்னைக் காப்பாற்றும். இறைவனே!" என்று வேண்டிக்கொண்டு மீண்டும் பெருமானது தாள்களில் வீழ்ந்து வணங்கித் தன்பால் அவர் காட்டிய கருணையை நினைந்து, "பெரு மானே! உம்மிடத்தில் எனக்கிருக்கும் அன்பு மிகச் சிறிது. நீர் காட்டிய கருணையோ மட்டற்றது. இதனால் நான் சிறியனென்பதும் நீர் பெரியவ னென்பதும் பெரியோர்களுக்குத் தெளிவாக்கப் பட்டுவிட்டது. ஆதலால் நிறைந்த கருணையுடைய நீர் துளியளவு அன்புள்ள என்னைக் காப்பாற்ற

வேணும். உமது அருள்நிறைந்த கடைக்கண் நோக்கால் எனது குலத்தோரையும் காப்பாற்றியருளவேணும்" என்று விண்ணப்பித்துக்கொண்டு ஐந்தெழுத்து மந்திரத்தை செபித்து பின்னர் தன் வீடுசெல்லப் புறப்பட்டார். இதற்குள்ளாக இந்த நிகழ்ச்சிகள்யெல்லாம் சனங்கள் மூலம் அரசனது செவிக்கெட்டின. உடனே ஆர்வத்துடன் அவன்வந்து ஆசிரியாரை யானை மேல் ஏற்றிக் கடவுளைப்போன்று பேணிப் பலவகையான இரத்தினங்களும், ஆடைகளும், ஆபரணங்களும் அவருக்கும் அவரது மனைவியாருக்கும் தந்து அவரது பெருமையைப் புகழ்ந்து பின்னர் அரண்மனைக்குத் திரும்பினன். ஆயுத ஆசிரியரும் தனதுவீடு சேர்ந்து மனைவியாருடன் சுகமாக வாழ்ந்தார்.

இந்த இருபத்தேழாவது திருவிளையாடல் படிப்போருக்கும் கேட்போருக்கும் எல்லாப் பேறுகளையும் பயக்கும்.



மூப்பத்துநான்காவது அத்தியாயம்.

சமணரேவிய சருப்பத்தை வதைத்தல்.

குலோத்துங்க பாண்டியன் சிவசாயுச்சியமடைந்ததும் அவனது புதல்வனன அனந்தகுண பாண்டியன் இராச்சியத்தை ஏற்றுப் பரிவுடன் குடிகளைக் காப்பாற்றினான். அவன் சிறந்த சிவனன்பன். எப்பொழுதும் திருநீறும் உருத்திராக்கமும் அணிந்து ஐந்தெழுத்து மந்திரம் செபித்து இலிங்க வழிபாடு செய்தான். அவனைப்போலவே நாடு முழுதும் எங்கும் மக்கள் சிவனன்பர்களாயினர்.

அதைக்கண்டு சமணர்கள் பொறாமை கொண்டு, தங்களது சமயமும் கொள்கைகளும் அழிந்துபோயினவே என்று கலங்கி, அரசனை எப்படியாவது கொன்றுவிட வேண்டுமென்று முடிவுகட்டி, அவர்கள் அனைவரும் ஓரிடத்தில் ஒன்று கூடி அதற்கு வேண்டிய அபிசார வேலைகளிலிறங்கி ஓமங்களை வளர்த்தனர். ஓம அனலிலிருந்து மிகப்பெரிய உடலுடன் ஓர் அரக்கன் குதித்தான். அவன் ஆகாயத்திற்கும் பூமிக்கும் ஒன்றாயிருந்தான். அவனது இருகண்களும் நெருப்புத் தழல்கள்போல் எரிந்தன. வாய் குகை போலிருந்தது. பற்களைப் பார்த்ததுமே அச்சம் உண்டாயிற்று. பருத்த தொந்தி, ஆகாயத்தை நோக்கும் தடித்த தலைமயிர், இப்பேர்ப்பட்ட கொடூரமான தோற்றமுடைய அவன் சமணரை நோக்கி, என்னை எதற்காக இங்கு அழைத்தீர்கள்? நான் செய்யவேண்டிய செயல் என்ன? கடிதில் கூறுங்கள். எனது வயிற்றில் பெரும் தீ எரிந்துகொண்டிருக்கின்றது'' என்று சொன்னன். சமணர்கள் அதைக்கேட்டு மகிழ்வுற்று அவனிடம் 'அரக்கனே! பாண்டியராசன் சிவனன்பனாயிருந்துகொண்டு எங்களுக்குத் தொந்தரவளிக்கின்றான். நீ ஓர் பெரும் சருப்பவடிவெடுத்து மதுரைக்குச் சென்று நச்சாகின்ற அனலைக்கக்கி அவ்வரசனையும் அவனது குடிகளையும் அழிக்கவேண்டும்' எனப் பதிலுரைத்தனர்.

எனவே அரக்கன் அவ்வுருவம் பூண்டு, அனல் போன்ற ஒளியை வீசிக்கொண்டு, விரித்தபடத்துடனும் வெளிவீட்டிய இரண்டுநாவுகளுடனும் பயங்கரமாய்ச் சீறிக்கொண்டு மதுரைநகர் நோக்கி வந்தான். ஜனங்கள் அதைக்கண்டு பயந்து அரசனிடம் தெரியப்படுத்தினர். உடனே அரசன் வெம்பி அதைத் தடுக்கும் நோக்கத்துடன் செல்லுகையில் மலைபோல் பெரிதாக சருப்பம் இருப்பதைக்கண்டு ஐயப்பட்டுச் சுந்தரமூர்த்திப் பெருமானை மனத்திலிருத்திச் சருப்பத்தின்மீது குத்துக்கம்பொன்றை வீசினன். சருப்பம் கம்பைக் கடித்துத்தின்னத் தொடங்கிற்று. அரசன் மென்மேலும் குத்துக்கம்புகளை வீசி அதன் உடலைச் சிதைத்தான். உடனே சருப்பம் ஏராளமாக நஞ்சைக் கக்கிற்று. நஞ்சின் வேகம் ஆற்று வெள்ளம்போன்று விரைவாய்ப் பரவிற்று. நஞ்சின் வெப்பம் பொறுக்கமுடியாது அரசன் முதலான அனைவரும் ஐயோ! ஐயோவென்று கூவிக்கொண்டு ஆலவாயுடை

யானிடம் சரண்புகுந்து "கருணைக்கலஞ்சியமான சுந்தரமூர்த்தியே! ஆலால நச்சைப் போக்கியவனே! நச்சில் அகப்பட்டு உம்மை சரண்புகுந்த எங்களை முன்னளில் தேவர்களைக் காத்ததுபோல் காத்தருளும். காலனுக்கு காலனே! திரிபுரமெரித்தவனே! மாரனை மாய்த்தவனே! உம்மைச் சரண் புகுந்த எங்களைக் காத்தருளும். கடம்பக்காட்டில் உறைபவனே! விட்டு ணுவால் வணங்கப்பெற்றவனே! உம்மைச் சரண்புகுந்த எங்களைக் காத்தரு ளும் "கர்ப்பூர சுந்தரப்பெருமானே! கர்ப்பூரம்போன்று குளிர்ந்தவனே! உம்மைச் சரண்புகுந்த எங்களைச் சருப்பத்தின் நச்சினின்றும் காத்தருளும். சிவன்முத்தி நகரின் இறைவனே! சிவன் முத்தியளிப்பவனே! உயிருடன் செத்திருக்கும் எங்களை இந்த நச்சின் வேகத்தினின்று காத்து உயிர்ப்பித் தருளும். பூலோக சிவலோகமாம் இம்மதுரையின் இறைவனே! பூவுல கிலுள்ளோரின் கற்பகத்தருவே! பூவுலகை அழிக்கப்புறப்பட்டிருக்கும் இந்த நச்சினின்றும் பூவுலகைக் காத்தருளும். கலியாணசுந்தரமூர்த்தியே! கலியாண மலையை (மேருவை) வில்லாய் வளைத்தவனே! காலனுக்குக் காலனே! மங்களம் பயக்குபவனே! எங்களுக்குக் கலியாணத்தை (மங்க ளத்தை) ச்செய்தருளும். கடம்பக்காடனின்ற இதயவெளியில் மிளிரும் ஒளியே! மங்கையை இடப்புறம் வைத்திருப்போனே! திசைகளை ஆடையா யுடையவனே! உமக்கு வணக்கம்" என்று விண்ணப்பித்து இறைவனது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி மூல இலிங்கத்தின் முன்னிலையில் கலக்க முற்ற நெஞ்சினராய் நின்றனர்.

உடனே ஆலவாய்ப்பெருமான் அரசனுடையவும் குடிகளுடைய வும் துயரையும், நச்சின் வேகத்தையும் கண்டு இலிங்கத்தினின்று சித்த வடி வில் தோன்றிச் சடையிலிருக்கும் மதியினது குளிர்ந்த வொளியால் நச்சின் வெப்பத்தைத் தணித்து, அரசன்முதலான எல்லோரையும் தெளியச்செய்து கருணைபொழியும் கடைக்கண்ணால் அனந்தகுண பாண்டியனையும் அங்கு வந் திருந்த மற்றோரையும் அருளிசெய்து மறைந்தார்.

முதலில் அரசனால் கொடுக்கப்பட்ட கம்புக்குத்துக்களால் சிதைந் திருந்த சருப்பம் இப்பொழுது நச்சும்போய் விட்டபடிபால் உயிர் துறந்தது. பெருமானது ஆக்கினையால் அதன் உடல் ஓர் மலையாகி இப்பொழுது நாக மலையென்ற பெயருடன் விளங்குகின்றது. சருப்பத்தின் நச்சனைத்தையும் மதுரமான அமுதமாக்கி என்று பெருமான் நகரைக்காத்தாரோ அன்று முதல் நகருக்கு மதுரையெனும் பெயர் வந்தது. நகரின் எல்லைப்புறத்தில் நஞ்சுடைய சருப்பம் கிடத்தலால் நகருக்கு ஆலவாய் (நஞ்சைவாய்ப்புறத்தி லுடையது) எனப்பெயர் வந்ததாகச் சிலா கூறுகின்றனர். அரசனும் சனங் களும் சித்தாது அற்புதச்செயலைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் பேருவகை யெய்தினர்.

இது இருபத்தெட்டாவது திருவிளையாடல். இதைப் படித்தும் கேட்டும் எல்லா நலன்களையும் பெறலாம்.

———

மூப்பத்தைந்தாவது அத்தியாயம்.

சமணரேவிய பசுவை வீழ்த்தல்.

ஆதிசேடன்போன்று மிகப் பயங்கரமான உருவத்துடன் சென்ற அரவமும் மடிந்ததைக்கண்டு சொம்பவும் மனக் கலக்கமுற்ற சமணர்மறுபடியும் கூடிப் பாண்டியராசனைக் கொல்வதற்குச் சதிசெய்தனர். அபிசார முறைதான் சிறந்ததெனத் தீர்மானித்து ஓமங்கள் வளர்த்தனர். இம்முறை பாண்டியராசன் கொல்லுதற்கஞ்சக்கூடிய பசுவுருவம் கொண்ட ஓர் அவுணனைத் தீயினின்றும் தோற்றுவித்தனர்.

அந்தப்பசு அரசனையும் மதுரை நகரையும் அழிக்கும் நோக்கத்துடன் விரைந்து வந்துகொண்டிருந்தது. வரும் வழியில் குன்றுகளையும் மலைகளையும் அசைத்தது. பெரும் வடிவத்திலிருக்கும் அந்தப் பசு தனது கூரான கொம்புகளால் மேகங்களை முட்டி அங்குமிங்கும் போம்படியாய்ச் செய்தது. மலைகளையும் மரங்களையும் தனது குளம்புகளால் அடித்துத் துகள் துகளாக்கி தன் மூச்சுக்காற்றால் அந்தத் துள்களை வெகுதூலவிற்கு வீசியெறிந்தது. அதன் கொம்புகளால் உடைக்கப்பெற்ற பெரும் பாறைத் துண்டுகள் சனங்கள்மீது விழுந்து அவர்களைக் கொன்றன.

உடனே கிராம மக்களும் நகரமக்களும் வியப்பெய்திப் பசுவின் செயல்களைப்பற்றி பாண்டியராசனிடம் முறையிட்டனர். அதைக்கேட்ட அரசன் திகிலுற்றுப் பெருமானது முன்னிலைக்குச் சென்று வணங்கித் துதித்துக் "கடம்பக்காட்டிலுறைபவனே. கருணைக்கடலே! சரண்புகுந்த அன்பரின் துயர் தீர்ப்பவனே! இடபக்கொடியோனே! உலகனைத்திற்கும் ஓர் தலைவனே! எல்லாம் அறிந்தவனே! மதிசூடியே! உலகம் உய்யும் பொருட்டு ஆலால நஞ்சையும் அந்தகன் என்ற அவுணனையும், இயமனையும், திரிபுரத்தையும், மாரன் முதலான தீயோரையும் முன்னுளில் அடக்கினீர். இவ்வண்ணம் உம்மால் காக்கப்பெறும் மக்களுக்கு இப்பொழுது மலை போன்ற உடலுடையதும் மாயாமயமானதுமான ஓர் பசு மிக்கவேகத்துடன் வந்து அச்சத்தை ஊட்டுகின்றது. நீர் ஒருவர்தான் அதை வதைக்கமுடியும். வேறு யாராலும் முடியாது. மங்களம் பயக்கும் சங்கரனே! எவ்வகையிலேனும் அந்தப் பசுவைத் தொலைக்கவேணும் என்று வேண்டிக்கொண்டான்.

அன்பனது இந்த முறையீட்டைக்கேட்டு அன்பர்க்கருளும் சுந்தர மூர்த்திப்பெருமான் உடனே ஒரு செயல் புரிந்தார். முன்னால் நிற்கின்றதும், பேணுதற்குரியதும், தேவேந்திரன் முதலானவரால் பேணப்பெற்றதான்குதிருவடிகளுடையதுமான இடபத்தை நோக்கி, அத்தீய பசுவை வீரியமற்றதாகச் செய்யும்படி கட்டளையிட்டார். உடனே இடபம் மகிழ்ச்சியுடன் பெருமானது ஆக்கினைக்குப் பணிந்து, ஒரு சொடிப்பொழுதில் உயரத்திலும் வெளுப்பிலும் வெள்ளிமலை போன்றதோர் உருவத்தையேற்று,

ஆகாயத்தையளாவிக் காமம் கொண்டதுபோல் கதறிக்கொண்டு மிக்கப் பொலிவுடன் அந்தப் பசுவின் முன்னர் தோன்றிற்று. காலையைக் கண்டதும் பசுவானது சாமமுற்றுக் கோபத்தைவிடுத்து, அதன் அண்மையிற் சென்று நின்றது. பூதங்களுக்கிறைவனை சிவபெருமானின் திருவடிகள் பட்டுத் தாய்மைபெற்றிருக்கும் முதுகுடையதும், மணிமாலைகள் கட்டிய கழுத்துடையதும், வெள்ளிமலையுச்சிபோன்ற திமிழுடையதும், காமச் சுவையை ஊட்டுகின்றதும், சிறப்புற்ற உறுப்புகளுடையதும், துறவறம் பூண்டவரால் வணங்கப்பெற்றதும், உலகைக் காக்கும் குணமுடையதும், தூய உடலுடையதும், அற்புத அழகு வாய்ந்ததுமான அந்த இடபத்தைக் கண்ணுற்ற மாயப்பசுவானது தனது வீரியத்தைச் சிந்திற்று. வீரியம் விழுந்ததும் அது கண்கள்மூடிக் கீழேவிழுந்தது. கூடவந்திருந்த சமணர் ஓடிவிட்டனர். பசுவும் உயிரைவிட்டது. மரித்த அந்தப் பசுவானது மலையாகிப் பசுமலையென்ற பெயரைப் பெற்றிருக்கின்றது. ஆலவாயுடையான் தனது நற்செயல் நன்றாய்த் தெரியும்பொருட்டு மதுரைக்கு வடக்கில் இடபத்தை இடபகிரியாய்ச் சமைத்தார். இடபமானது தனது அலவுருவத்தை அங்கே விடுத்து, சூக்கும உருவத்தில் இறைவன் முன்பு எப்பொழுதும் போல் இருந்தது. மூர்த்தியினது முன்னர் உறைந்திருக்கும் இடபத்தை அரசன் முதலானவர் வணங்கித் துதித்துச்சென்றனர். பெருமான் தேவியிடத்தே இந்தச் செயலைப்பற்றி மொழிந்து இடபத்தைப் பார்த்துக் கொண்டே தனதிடத்தில் இருந்தார்.

எந்தக்காலத்தில் மிகப்புனிதமான இடபகிரியானது தோன்றினதோ, அப்பொழுது சீராமனும் இலக்குமணனும் அனுமன்மூலமாய்ச் சீதைப்பிராட்டி இலங்கையிலிருப்பதாகத் தெரிந்து, சுக்கிரீவனுடனும் அலனது படைகளுடனும் இடபகிரிக்கு வந்தனர். இராமனைக் காண்டற்பொருட்டு அந்த சமயத்தில் அகத்தியரும் பொதிகைமலையினின்று இடபகிரிக்கு வந்தார். அவரிடமிருந்து இராமன் ஆலவாயுடையானது பெருமையைத் தெரிந்துகொண்டு, பொற்றாமரைக்குச் சென்று அதில் நீராடி, அன்புடன் பெரும்தேவியான மீனாட்சியம்மையை வணங்கித்துதித்து, மூலலிங்கத்திற்கு வரிசைகளுடன் வழிபாடுசெய்து வணங்கித் தனதுவிருப்பம் ஈடேறவேண்டுமாய் மூர்த்தியை நோக்கிச் சம்புவே! சங்கரனே! எல்லாமறிந்தவனே! மங்களங்களனைத்திற்கும் காரணனே! கருணைக்கடலே! காமத்தை வென்றவனே! விரும்பும்பொருளை யளிப்பவனே! ஆலாலம் மிளிர்கின்றகழுத்தனே! கடம்பக்காட்டு நாயகனே! பூலோக சிவலோகநாதனே! இந்திர விமானத்தடியிலுறைபவனே! உலகில் சிவத்தலங்கள் பலவுள, ஆயினும் இந்த ஆலவாய்த்தலம் மிக அற்புதமானது. உலகத்திற்கருளும் பொருட்டு நீர்புரிந்த அருட்செயல்கள் மலைவடிவமாய் நகரைச் சுற்றிலும் இருந்துகொண்டு உமது மாட்சியை நேருக்குநேராகக் காட்டிக்கொடுக்கின்றன. பார்த்தமாத்திரத்திலேயே துயரை அகற்றி நலனைத்தரும் உமது லிங்கத்திற்கு நிகரான லிங்கமே கிடையாது. பெரும்பழிகளைப் போக்கி எல்லாச் சித்திகளையும் தரக்கூடிய இந்தத் தீருத்தத்திற்கு நிகரான தீருத்தமும் கிடையாது. சில விடங்களில் தலத்தின் பெருமையிருக்கும்; சிலவிடங்களில் மூர்த்தியின் பெருமையிருக்கும், சிலவிடங்களில் தீருத்தத்தின் பெருமையிருக்கும், ஆலவாயிலோ மூன்றும் சேர்ந்திருக்கின்றது. ஆனதுபற்றி மக்களுக்கு இவண் பெரும்பேறுகள் கிட்டும். எங்களுடைய காரியங்களும் ஜயமின்றிக் கைகூடும்

ஆல்வாயுடையானே! தேவர்களுக்கும் தேவனே! எனது காரியம் மிக்க அரியது, அது கைகூடுமாறு செய்தருளவேணும் என்று வேண்டிக் கொண்டு மூர்த்தியின் முன்னிலையில் கைகூப்பியவண்ணமாய் மூர்த்தியை நோக்கிக்கொண்டு நின்றார். அப்பொழுது பெருமானுடைய திருவாயினின் றும் "பெருவீரனே! பெருமாற்றல் படைத்தவனே! அரசருள் தலைசிறந்த வனே! ரகுகுலத்தில் தோன்றியவனே! இந்த இலங்கத்திற்குத் தென் கிழக்கே படையோடு சென்று, கடலில் அணைகட்டி, இலங்கையிற் புகுந்து, இராவணன் கும்பகருணன் முதலான அரக்கரனைவரையும் கொன்று, உத் தமபத்தினியான சீதைப்பிராட்டியை இட்டுக்கொண்டு, அயோத்தியடைந்து செல்வத்தில் குபேரனுக்கு நிகராகி, வெகுகாலம் பூமியை ஆண்டு மீண்டும் வைகுண்டம் சேர்வாயாக" என்ற இனிமையான மொழிகள் பிறந்தன. இராமன் இத்திருமொழிகளைக் கேட்டுத் தணியில் மூடித்துக்கொண்டு இலக்குமணன் சுக்கிரீவன் இவர்களுடன் நேராகத் தென்கிழக்கிற் சென்று, கடலில் மலைகளையும் மணலையும் போட்டு, அணையைக்கட்டி, வரம் பெற்றி ருந்தமையால் இறுமாப்புக்கொண்டிருந்த இராவணனையும், அவனது உடன் பிறந்தாரையும், சுற்றத்தாரையும் கொன்று, இராவணனது செல்வம் யாவற் றையும் விபீடணனிடத்தே ஒப்பித்து, இராமநாத மூர்த்தியைப் பிரதிட்டை செய்து பாவங்களைக் களைந்து, சுந்தரேசப்பெருமானை மீண்டும் வணங்கிப் பேறுகளனைத்தையும் பெற்று அயோத்திசென்று, வெகுகாலம் இன்பங்கள் யாவையும் துய்த்து, இறுதியில் வைகுண்டமேகினார்.

இந்த இருபத்தொன்பதாம் திருவிளையாடலைக் கேட்கப் பாவங் கள் விலகி நன்மைகள் பெருங்கும்.



மூப்பத்தாருவது அத்தியாயம்.

படை காட்டல்.

அனந்த குணபாண்டியனுக்குப்பின் குலபூடண பாண்டியன் பட்டத்திற்கு வந்து நெறியுடன் அரசுபுரிந்தான். அவன் ஒப்பற்ற சிவனன்பன். அவனுக்குச் சுந்தரசாமந்தனன் என ஓர் படைத்தலைவன் இருந்தான். இவன் சிறந்த போர்வீரன். இவனுக்குச் சுந்தரமூர்த்திக்கடவுளிடம் விசேடமான அன்பு எப்பொழுதும் அவரையே நினைந்து கொண்டிருப்பான்.

அந்நாளில் சேதிராயன் என்ற வேடுவவேந்தன் மிகுந்த வலிமை பெற்றுப் பாண்டிய நாட்டைப் படையெடுக்கப்போவதாகவிருந்தது. குலபூடணன் அதையறிந்து படைத்தலைவனை யழைத்து பிறநாடுகளிலிருந்தும் எல்லா சாதியிலிருந்தும் பெரும் படையொன்றைத் திரட்டும்படிக்கும் அதற்கு வேண்டும் பொன்னைப் பொக்கிஷசாலையைத் திறந்து எடுத்துக் கொள்ளும்படிக்கும் பணித்தான். சேனபதி அப்படியே செய்கின்றேன் என்று கூறிச்சென்றான். அதுகண்டு மன்னன் மிக மகிழ்ந்தான்.

சேனபதி உடனே பொக்கிஷவறை சென்று, அங்கிருந்த பொன் அனைத்தையும் எடுத்துக்கொண்டு அமைச்சரிடம் படைதிரட்டப்போவதாகச்சொல்லி விடைபெற்று கோராகச் சோமசுந்தரமூர்த்தியின் திருக்கோவிலுக்குச்சென்றுப் பெருமானை வணங்கி "ஐயனே! உலகத்துக்கிறைவனே! எனக்கிறைவனே! பெரும்கடவுளே! உம்மை வணங்குகின்றேன். நீரே எனக்கு அடைக்கலம். பணம் யாவையும் உமதடியார் பொருட்டும் உம் பொருட்டும்செலவிட்டு அதன்மூலம் அரசனது பகைவனைக்கொல்லவேண்டுமென்பது எனது முயற்சி. அதற்குப் பொருத்தமாகப் பெருமான் அருளுக்குப் படையைக்காட்டி வெரியை வதைத்தல் முதலான காரியங்களைச் செய்தருளவேண்டும்" என்று தெரிவித்துக்கொண்டான். பின்னர் ஏராளமான செலவு செய்து இறைவனுக்கு வழிபாடு நடத்தினான். அதன்பின் வீடுசென்று அடியார்க்கு அன்னமிட்டு எஞ்சியதைத் தானுமருந்தினான்.

பிறகு சுந்தரசாமந்தன் மறைவான இடத்திற்கு அழைத்துச் சிவனடியாரான வேதியருக்கு வேள்வி புரிதற்கும், மணம் செய்தற்கும், பூணூல் போடுதற்கும், எழ்மை நீக்குதற்கும் போதுமான பொருளை அரசன் பணத்திலிருந்து அள்ளியள்ளியளித்தான். நாடோறும் சிவனடியார்களுக்கு அமுது செய்வித்தான். திருக்கோயிலில் கோபுரம் முதலானவற்றிற் சிதைந்துபோயிருந்ததைப் பழுதுபார்த்தான். நூற்றுக்கால் மண்டபமொன்றையும் ஆயிரக்கால் மண்டபமொன்றையும் கட்டுவித்தான். சாத்திரமுறைப்படி தேர் ஒன்றை அமைப்பித்தான். ஒவ்வொருநாளும் நூறு, ஆயிரம், பதினாயிரமென்று அரசன் பணத்தை அறச்செயல்களில் தாராளமாய்ச் செலவிட்டான். அமைச்சரிடம் படைதிரட்டுதற்காகத்தான் ஆட்களை

யனுப்பியிருப்பதாக அவன் கூறியதை அவர்கள் பொய்யென்று அறிந்து கொள்ளவில்லை. இவ்விதமாகச் சுந்தரசாமந்தன் பொக்கிஷச்சாலைப் பணத்தை இறைவன்பாலும் அவனடியார்பாலும் செலவிட்டு அவர்களை மகிழ்வித்துக்கொண்டிருந்தான்.

ஆறுமாதங்களாயின. அரசன் சேனாபதியை அழைத்து எவ்வளவு படை சேர்க்கப்பட்டிருக்கிறதென்று வினவினான். அதற்குச் சேனாபதி சோமசுந்தரமூர்த்தியை மனதில் நினைந்து 'அரசனே! போதுமான படையைத் திரட்டிவிட்டேன். எனது காரியங்களையெல்லாம் ஆலவாயுடையானே பார்த்துக்கொள்வார்" எனப் பதிலுரைத்தான். அதைக்கேட்ட அரசன் "ஆமாம்! அன்பர்க்கன்பனான ஆலவாயுடையான் இருக்கின்றார். அவர் உனதுகாரியங்களை முடித்துவைப்பார் என்ற எனக்குத் தெரியும். சேனாபதியே! நீர் திரட்டியிருக்கும் படையை எனக்கு நாளைக்குக் காட்ட வேண்டும்" என்று கட்டளையிட்டார். 'உத்தரவு' என்று சொல்லிக் கலக்க மொன்றின்றிச் சேனாபதி வெளியேறி நேராகப்பெற்றாமரைக்குச்சென்று, ஆசமனம் செய்து, நீறணிந்து, இறைவன் முன்னிலைக்கேகி, வணங்கித் துதித்துப் 'பெருமானே! உமது பணிவிடையிலும் அடியாரது பணிவிடையிலும் அரசனது பணமனைத்தையும் செலவிட்டுவிட்டேன். அரசன் பணித்தபடி படைதிரட்டப் பணமொன்றும் மீதியில்லை. இதற்குமேல் யான் செய்யவேண்டுவதென்ன?" என்று விண்ணப்பித்து நிற்கவே, ஆகாயத்திலிருந்து 'புத்திமானனை சுந்தரசாமந்தனே! அன்பாகும் இரத்தினம் வீளையும் கடலே! உறுதியாயிரு. கலக்கமுறாதே. நாளை பற்பல ஆபரணங்கள்பூண்டு, விதவிதமான ஆயுதங்கள் தாங்கி, எண்ணற்ற படைவீரர் தயாராய் நிற்பர். குலபூட்டண பாண்டியன் கண்டு களிப்பான். உன்னையும் அவ்வீரர்க்கும் தலைவனாக ஆக்குவான்' என்று தெளிவானதும் தைரியமூட்டக்கூடியதுமான பெருமானது சொல்வந்தது. இதைக்கேட்டுச் சேனாபதி மனமகிழ்ந்து மூர்த்தியை வணங்கித் துதித்து தனதில்லம் சென்றனன். அங்கு மனைவியிடம் நிகழ்ந்தது யாவற்றையும் கூறினான். நெஞ்சமுத்தம்படைத்த அவள் உள்ளச்சம் தவிர்த்துக் கணவனை நோக்கி 'உறுதியுடன் நில்லும். அறம் அறமுடையோனைக் காக்கும். சோமசுந்தரக்கடவுள் உமக்குத் திண்ணமாக உதவிபுரிவார் என்றனள். அவளது மொழிகளைக் கேட்டு மகிழ்ச்சியும் தைரியமுமெய்தி, அடியாருடன் அன்னமருந்திப் பெருமானது சொல்லை நினைந்து கொண்டிருந்தான்.

மறுநாள் காலையில் சேனாபதி விடியுமுன் உமையுடன் கூடிய ஆலவாயுடையானை வணங்கி வேண்டிக்கொண்டு களிப்புடன் ஆபரணங்கள் பூண்டு சிலபோர் வீரருடன் உள்ளத்தில் இறைவனைத் தியானம் செய்து கொண்டு வீட்டிலிருந்து மெதுவாக அரண்மனையை நோக்கிச்சென்றான். போகும்வழியில் இனியென்ன நடக்கப்போகின்றதோவென்று பெரும் கவலையுற்றான். அப்பொழுதுக் கருணைவடிவான கடம்பவனநாதன் சந்திகேசுவர் முதலான பிரமதர்களையும் குண்டோதரன் முதலான பூதங்களையும் மற்றும் பிறரையும் அன்பனது காரியத்தை முடிப்பதற்காக அனுப்பினார். அவர்கள் உடனே களிப்புடன் போர்வீரர் கோலமேற்று அதற்கேற்ற ஆடை, ஆபரணங்கள், ஆயுதங்கள் முதலானவற்றை அணிந்து வந்தனர். முன்பாக முரசுகள் முழங்கிக்கொண்டு சென்றன. அதன்பின் கொடிகளும் மற்றைப்

போர்க்குறிகளும் போயின! அதற்குப்பின் வீரர்கள் சென்றனர். அவருள் தடிக்காரரும், ஈட்டிக்காரரும், வில்லாளிகளும், வாளுடையோரும், கோடரியேந்தியோரும் இம்மாதிரிப்பலவகையான ஆயுதந்தாங்கியோர் இருந்தனர். அவர்கள் பற்பல ஒட்டங்களையும் கடைகளையும் காட்டினர். கந்தி, பிருங்கி, மகாகாளர் முதலான கணத்தலைவரைச் சுற்றி புரவிப்படை வந்தது. சுந்தரசாமந்தன் அவர்களெல்லோரையும் பார்த்ததும் வியப்பும் மகிழ்ச்சியுமடைந்தான்.

எங்கு பார்த்தாலும் படை; பூமியே படைமயமாய்த் தோன்றிற்று. எங்கும் கலகலவென்ற ஓசை. அதைக்கேட்டு உடனே அரசன் உள்ளிருந்து வந்து கொலுமண்டபத்தின் வெளிப்புறம் ஓர் ஆசனத்தில் அமர்ந்தான். படைகளைப் பார்க்கவேண்டுமென்ற அவாவுடன் அமைச்சர் அவனது அண்மையில் நின்றனர். சேனபதி படைகளின் மத்தியில் தங்கப் பிரம்புடன் நின்று இங்கு நில், இங்கு நில் என்று சொல்லிக்கொண்டு படைகளை அணிவகுத்தான். அரசன் அவற்றைக் கண்டு மகிழ்ந்து சுந்தரசாமந்தனைக் கூப்பிட்டுச் 'சேனபதியே! நீ மிகவும் கெட்டிக்காரன்? இத்தப் பல தரப்பட்ட படைகளை ஒவ்வொன்றையும் எனக்குத் தனியாகக் காண்பிப்பாய்' என ஆக்ஞை செய்தான். சேனபதி உடனே சோமசுந்தரப்பெருமானை நினைத்து படைகளை வரிசையாகச் சுட்டிக்காட்டினன். அப்பொழுது அரசனை நோக்கி 'குலபூடண மகாராசனே! இவர்கள் களிங்கதேசத்தவர். இவர்கள் ஆந்திரர். இவர்கள் கருநாட தேசத்தைச் சேர்ந்தவர். இவர்கள் நம்நாட்டவர். வலிமை பெற்றவர். இவர்கள் காஞ்சி நாட்டினர். வீர முடையவர். இவர்கள் பராக்கிரமம் படைத்த மகாராட்டிர தேசத்தவர். இவர்கள் மகதநாட்டினர். இவர்களது நாடு மாளவம். இவர்கள் துளுவர். இவர்கள் வங்காள நாட்டார். இவர்கள் மிகப் பயங்கரமானவர். வேடுவர். உயர்ந்து பருத்திருக்கும் இவர்கள் காசுமீரத்திலிருந்து வந்தவர். மிக வீர முடையவர். பணத்திற்காக வந்தவர். இவர்கள் விந்தியமலையிலிருந்து வந்திருக்கும் கிராதசாதியினர். வலிமையில் ஒப்பற்றவர். இவர்களனைவரையும் தங்கள் கொடுத்த பணத்தைக்கொண்டு திரட்டினேன்.' என்று ஒவ்வொரு படையைப்பற்றியும் கூறினன். அரசனும் அமைச்சரும் வியந்தனர். சுந்தரசாமந்தனும் அளவிலா ஆச்சரியமெய்தினன்.

அந்தச்சமயத்தில் சோமசுந்தரமூர்த்தி ஓர் குதிரை வீரர் கோலத்தில் கந்தீகேசுரர் முதலானவரால் சூழப்பெற்றுக் கையில் ஈட்டியேந்திப் புரவிமீதேறிக் குடைபிடித்து ஓர் பக்கத்தில் நின்றார். அரசன் அதிசய வழகுடன் இலங்கும் அவரைக்கண்ணுற்றுச் சேனபதியிடம் 'இவர் யார்?' என்று கேட்டான். சுந்தரசாமந்தன் மகிழ்ச்சிமேலிட்டு அறிவு கலங்கினவனாய் "எனது அரசனே! மந்திரிகளுடன் யான் சொல்வதைக்கேளும் இப்படையைப்பற்றியோ அல்லது இவ்வழகனைப்பற்றியோ யான் ஒன்றும் அறியேன்" என்று பதிலுரைத்தான். உடனே பாண்டியராசன் வியந்து "அப்படியானால் படையினது உண்மை யாருக்குத்தான் தெரியும்?" என்று மொழிந்து, தளகர்த்தர்களுடன் குதிரைவீரனை யழைத்து, மிகச் சிறந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் கொடுத்தான். அன்பரை மகிழ்விப்பதில் கைதேர்ந்த சுந்தரமூர்த்தி அவற்றைப்பெற்றுக் கணத்தலைவர்களை அணியும்

படி செய்து தானும் அணிந்து தனது புரவியை ஐம்போக்கில் (பஞ்சகதி) ஓடச்செய்து படையின் மத்திசென்று மறைந்தார்.

அதேசமயத்தில் ஒற்றன் ஒருவன் அரசனிடம் வந்து 'ஐயனே! உமது பகைவனை வேடர் வேந்தன் வேட்டைக்குச் சென்றவிடத்தில் ஓர் சிங்கத்தாற் கொல்லப்பட்டு மடிந்தான்' என்று தெரிவித்தான். அதைக் கேட்டு அரசனும் அமைச்சரும் ஆச்சரியமடைந்தனர். பின்னர் பாண்டிய மன்னன் சுந்தரசாமந்தனை அழைத்து, அவனுக்கு மிக உயர்ந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் வெகுமதியாகத் தந்து, அவனை எல்லோர்க்கும் தலைவனுக்கி அவனை நோக்கி 'போரின் காரியம் இப்பொழுது தீர்ந்துவிட்டது. ஆதலால் படைவீரர்களை அவரவரது காட்டிற்கு அனுப்புவாயாக' என்று பணித்தான். சேனாபதி உடனே அரசனது அண்மையிலிருந்து வெளிவந்து படையினரைப் பார்த்து 'போங்கள் போங்கள்' என்று சொன்னான். ஒரு நொடிப்பொழுதில் அத்தனைபேரும்மறைந்தனர். அப்படி மறைந்ததைக்கண்ணுற்று வியப்படைந்து அரசன் முதலிய அனைவரும் "இது திண்ணமாக ஆலவாயுடையானது திருவிளையாடலே" என்று உரைத்தனர். சேனாபதியைச் சோமசுந்தாமூர்த்தியாகவே கருதிப் பேணினர். அவனும் இன்பக் கடலில் மூழ்கியவனாய் பெருமானிடம் சென்று வணங்கித் தோத்திரங்கள் பாடி வெகுநேரம் நின்று காப்புநீறு பெற்றுப் பின்னர் வீட்டுக்கேகினான். அந்த அற்புதத்தைப் பார்த்த எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். குலசேகரபாண்டியமாகும் கடலில் தோன்றிய முத்தான குணபூடணப் பாண்டியராசன் ஆலவாயுடையானிடத்தே பொன்பு பூண்டு, இலிங்கத்திற்குக் கவசம்முதல் பிரபைமுடிய யாவற்றையும் இரத்தினங்களால் சமைத்து, அன்பர்க்கடிமையான அவரிடம் சேர்ப்பித்தான்.

இது மூப்பதாம் திருவிளையாடல். இதைப் படிப்போரும் கேட்போரும் இம்மையிலேயே விருப்பங்களைப் பெறுவர்.



மூப்பத்தேழாவது அத்தியாயம்.

குறையாக்கிழி கொடுத்தல்.

குலவொழுக்கப்படிக் குலபூடண பாண்டியன் சிவபெருமானிடத்தே விசேடமான அன்பு செலுத்தினன். சிவநோன்புகள் யாவற்றையும் நோற்றுச் சோமவார நோன்பையும் நிறைவேற்றினன். வெகு விழிப்புடன் நெறிதவறாது குடிகளைக் காப்பாற்றினன். நாடோறும் ஆலவாயுடையாரை வழிபட்டான். ஆனால் பிராமணரைக் கவனிக்கவில்லை. அவர்கள் ஏழ்மையினல் வேள்வி முதலியன செய்ய இயலாது தங்களது காரியங்களாமாத்திரம் கவனித்துகொண்டு வருத்தத்திடன் வாழ்ந்தனர்.

நாளடைவில் வேள்விகள் குறைந்தமையால் நாட்டில் மழையும் இல்லாமற்போய்விட்டது. பூமி விளையவில்லை. எங்கும் தானியப் பஞ்சம். விலங்குகட்குப் புல் கிடையாது. குடிதண்ணீருமில்லை. அவை வெகுவாக மடிந்தன

குலபூடண மன்னன் நாட்டில் பெரும்கேடு வந்துவிட்டதே யென்று நிழமைகட்குள் சிறந்ததான ஒரு திங்கட்கிழமையன்று சோமசுந்தரமூர்த்தியின் திருக்கோயில் சென்று பொற்றமரையில் நீராடித் திருநீறு பூசி நித்தியகருமங்களை முடித்து இடுக்கண்களில்லாது காரியங்கள் முடிதற் பொருட்டு ஆயிரம் தேங்காய்களுடன் விநாயகக்கடவுளை வணங்கி, கயக்கண்ணி அம்மைக்கும் சோமசுந்தரப்பெருமானுக்கும் அதிகப்படியான வழிபாடுகள் நிகழ்த்தி மூல இலிங்கத்தின் முன்னிலையில் "சுந்தரமூர்த்தியே! அவுணரை வதைத்தவனே! திரிபுரம் எரித்தவனே! திங்கள், பரிதி, அனல் இவற்றைக் கண்களாயுடையவனே! மந்திரம், சொல், எழுத்து முதலான ஆறு வழிகள் மயமானவனே! அங்கயக்கண்ணியம்மையாரின் நாயகனே! மங்களமானவனே! தேவரது தேவனே! கருணைக்களஞ்சியமே! யான் உனது அடியான். நீரோ அடியார்க்கடியான். இதுவரை உமதுஆணையை மேற்கொண்டே இராச்சியத்தை நடத்தினேன். இப்பொழுது மழையில்லாமல் பஞ்சம் வந்திருக்கின்றது. குடிகள் வருந்துகின்றனர். பொக்கிஷசாலையிலிருந்த பணம் முழுதும் படைதிரட்டுதல் என்ற பெயரால் சேனபதியான சுந்தரசாமந்தனல் பலவித அறவழிகளில் செலவிடப்பட்டுவிட்டது. தானியங்களில்லாமலும் தனமில்லாமலும் துன்புறுகின்றேன். எனக்குத் தானியமும் தனமும் கொடுத்து இன்பமளித்தருளவேண்டும்" என்று விண்ணப்பித்துக்கொண்டான். பின்னர் அரண்மனைக்குத் திரும்பி, உண்டியருந்தாமல் இனி என்னசெய்வதென்று கவலைப்பட்டுக்கொண்டு ஆலவாயுடையாரை நினைந்துகொண்டே ஒரு கணநேரம் தரையின்மீது கண்அயர்ந்தான். உயிர் யாவற்றிலும் உறையும் மங்களமூர்த்தியான சிவபெருமான் அன்பனுக்கருளும்பொருட்டு உடனே சித்தர் கோலத்தில் அவனதுகனவில் தோன்றி "குலபூடண வேந்தனே! நீ எனது அடியார்களில் முதல்வன்.

ஆனதுபற்றி நான் உனக்கு நல்லம் கூறுகின்றேன். வேதங்கள் எனது உரு வம். வேதங்களுக்கு எவர், வேண்டியவரோ அவரே எனக்கும் வேண்டிய வர். அப்பேர்ப்பட்ட வேதமுடையோரை நீ சட்டை செய்யவில்லை. அத னால்தான் உனது இராச்சியத்தில் மழை இல்லை. அவர்களை நீ பேணுவா யாகில் மழை நன்றாய்ப் பெய்யும். வேதமோதும் வேதியர், செல்வங்களை யும், வித்தையையும், வேதங்கள் முதல்யாவற்றையும், பிணியின்மையை யும், நீண்ட ஆயுளையும் எப்பொழுதும் தரக்கூடியவர். நான் உனக்குப் பொன் நாணயங்கள் நிறைந்த ஒரு கிழி தரப்போகின்றேன். அதிலிருந்து எவ்வளவு எடுத்தாலும் அது எப்பொழுதும் நிறைந்தே இருக்கும். அதை வைத்துக்கொண்டு பேராசை துளிக்கூட இல்லாமல் உனது விருப்பம்போல் பணம் எடுத்துத் தானங்கள்கொடு இன்பங்களையும் நாடு. இக்கக்கிழியில் இன்னொரு அற்புதமென்னவெனில் அதிலிருந்து எடுக்கஎடுக்க அதிலுள்ள பொன் பெருகும். கோடியெடுத்தாலும் எனது அருளால் அதுகுறையாது. என்று திருவாய்மலர்ந்தருளி, அவனது கற்றியில் நீறுதடவி, பொன் நாண யங்கள் நிறைந்த கிழியை அவனிடம் கொடுத்து மறைந்தார். உடனே அர சன் விழித்தெழுந்து, பொற்கிழியைக்கண்டு ஆச்சரியமெய்தி, களிப்புடன் அதைத் தலைமேல்வைத்துச் சிறிது நேரம் கூத்தாடினன்.

பின்னர்ப் பொழுது விடிந்ததும் அரசன் அமைச்சரை வரவழைத் துக் கிழியைக் காண்பித்துக் கனவு வரலாறு முழுதையும் உரைத்தான். அவர்கள் அதைக்கேட்டு வியந்து உவகையுற்று அரசனை நோக்கி "மன் னரே! இக்கக்கிழியினால் உமக்கு மேலான செல்வங்கள் ஏற்படப்போகின் றன. ஆனதுபற்றி அதைச் சிங்காதனத்திலேற்றி நாடோறும் பூசித்துப் பின்னர் வேண்டும் பொருளெடுத்து வேதியரைப்பேணும். பெரும் பொருள் கொடுத்துப் பேரிலிங்கத்திற்கு வ்ராளமாய்ச் செலவு செய்து மகாபிடேகம் நடத்தும். கவக்கிரகங்களுக்கும், இந்திரன் முதலான தேவர்க்கும், முனிவர் க்கும், பூதாதையர்க்கும் பூசை செய்து அவர்களை மகிழ்வியும். வேதியரைப் பேணுதலாலேயே தேவரும், முனிவரும், பிதிருக்களும் மகிழ்வெய்தி விடு கின்றனர். ஆதலால் அவர்களையே வணங்கும்" என்று மொழிந்தனர். அரசன் சாத்திரங்களில் வல்லவரான அவர்கள் எவ்விதம் கூறினரோ அப் படியே அனைத்தையும் நிகழ்த்தினன். எங்கும் நல்லமழை பெய்து நாட்டில் செழிப்பு இலங்கிற்று. பாண்டியராசன் அன்பொடு வேதியரையும் தேவ ரையும் பூசித்தான். அப்பொழுது முதல் எங்குமே அதிலும் விசேடமாகப் பாண்டியநாட்டில் சுருதியிலும், மிருதியிலும் கூறப்பட்டுள்ள கருமங்கள் செவ்வனே அனுட்டிக்கப்பட்டன. அரசனது சிவனன்பையும், வேத அன் பையும் சனங்கள் புகழ்ந்துகொண்டு இன்புற்று வாழ்ந்தனர். அரசன் பெரு மான் அருளிய குறைவுறாத செல்வத்தைக்கொண்டு திருக்கோயிலை உள்ளும் புறமும் பொன்மயமாயும் இரத்தினமயமாயும் ஆக்கினன். வறுமையென்பது அந்த நாட்டில் இல்லை. குடிகள் குபேரன்போன்று செல்வமுடையராய் வேதநெறியிலும் சிவனன்பிலும் பற்றுடையராய் விளங்கினர்.

கடம்பவனநாதனது இந்த முப்பத்தொன்றும் திருவிளையாடற் கதையைப் படிப்போரும் கேட்போரும் செழிப்புகள் யாவையும் பெறுவர்.

———

மூப்பத்தெட்டாவது அத்தியாயம்.

வளையல் விற்றல்.

சோமசுந்தரப் பெருமான் பிட்சாடனமூர்த்தியாகத் தேவதாரு வனத்தையடைந்தபொழுது, இருடி பத்தினிகள் காமனையும் வெல்லும் அவரது அதிசய அழகில் மயங்கி, அவரால் தொடப்பெறவேண்டுமென்று விரும்பினர். ஆனால் பயன்படவில்லை. இழகிய தனங்களும் அழகிய மேனியுமுடைய அவர்கள் வளையல் நழுவப், புடவை அவிழக் கூந்தல் குலையக் காமனது கணைகள் தைத்துத் தனங்கள் துடிக்க, அவரது பின்னேயும், முன்னேயும் பக்கங்களிலும் ஓடினர். சிலர் தவசியே நில்லும் நில்லும் என்றனர். அவரது அழகைக்கண்டு அவர்களுக்கு மனநிறைவு ஏற்படவில்லை. சிலர் அவரது அடிகளை வணங்கினர். சிலர் மலர்களைத் தூவினர், சிலர் பிட்சை கொடுத்தனர். சிலர் அவருக்கு ஆபரணங்கள் தந்தனர். சிலர் பால், தயிர், நெய், தேன், சர்க்கரை முதலானவற்றை ஈந்தனர் சிலர் அவரைத் தழுவ முயன்றபோது, அவர் எட்டிப்போய் அவர்கள் தன்னைத் தொடுவதற்கு இடமளிக்கவில்லை.

இவ்வாறிருந்த அவரது பற்றின்மையையும், பத்தினிகளின் காமவேட்கையையும் நிட்டையிலிருந்த முனிவர் கண்டு, இது ஐயமின்றி ஆலவாயுடையானது திருவிளையாடல் என்று அறிந்து, கற்பிற் சிறந்த தங்களது பத்தினிமாரின் மனவேற்றுமையை நினைந்து, சினமடைந்து அவரைநோக்கி 'நீங்கள் மதுரை நகரிலுள்ள வைசியரது குலங்களில் பெண்களாகப்பிறந்து சோமசுந்தரப் பெருமானின் பரிசத்தை (தொடுகையை) அடைவீர்களாக' என்று சபித்தனர். அவ்வாறே அப்பெண்டிர் வைசியகுலங்களிற் பிறந்து, நாளடைவில் வளர்ந்து, அழகான கன்னிகளாக விளங்கினர். அவர்களது தேவத்தன்மை பொருந்திய பொலிவைக் கண்ணுற்று அனைவரும் வியந்தனர்,

பிட்சாடன மூர்த்தியாகத்தான் தேவதாரு வனம் சென்றிருந்த காலத்தில் எவர்கள் தனது பரிசத்தை விரும்பினரோ, அவர்களுக்கு அந்த இன்பத்தையளித்தற்பொருட்டு சோமசுந்தரப்பெருமான் ஓர் வயதான வளையற்காரர் வடிவமெடுத்து வெளுத்த ஆடையுடுத்துத் தலைப்பாகையும் மேலாடையும்மணிந்து, மணமுள்ள சந்தனம் பூசிக், குங்குமப்பொட்டிட்டு, மேலே வெண்பட்டு போர்த்தி, கால்களிற் பாதுகைமாட்டிக், கையில் குடைப் பிடித்து, காப்பு, கடுக்கன், மோதிரம் பூண்டு தாம்பூலம் சுவைத்து மணக்கும் வாயுடன், பட்டுக்கயிறுகளில் பலநிற வளையல்களைக் கோர்த்துத் தோளில் போட்டுக்கொண்டு வைசியத் தெருக்களிற் சென்று 'வளையல் வளையல்' என்று கூவினர். சனங்கள் அவரைப் பார்த்து ஆச்சரியப்பட்டனர். வளையல் அணிந்தோரும், அணியாதோரும் எல்லாப் பெண்களும் எனக்குப் போடும் எனக்குப் போடும் என்று மொழிந்துகொண்டு அவரிடம்

சென்றனர். வளையற்காரர் 'நில்லம்மா போடுகின்றேன் நில்லம்மா போடு கின்றேன்' என்று சொல்லிக்கொண்டு மெதுவாக ஒவ்வொருவரது கைகளை யும் பிடித்து வளையல்களைப் பூட்டினர். அவர் பிடித்த கைகளை எளிதில் விடுவதில்லை. அது பெண்களுக்கு இன்பத்தை அளித்தது. ஆனால் அவர் கள் வெட்கப்படுவதுபோல் வெளிக்குக் காட்டிக்கொண்டு அவரை நோக்கிச் 'செட்டியாரே! என் எனது கையைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறீர். எனது தாயிடத்திற் சொல்லப்போகின்றேன். விடும் விடும்!' என்பார்கள். அதற்கு அவர் 'பெண்ணே! வளையற்காரர் தொட்டால் ஒன் றுமில்லை. சும்மா போய் அம்மாவிடம் சொல். பயமில்லை என்று பதில் உரைப்பார்.

இம்மாதிரியாகக் கருணைக்கடலான சிவபெருமான் வளையற்கார ரது உருவத்தில் வீடு வீடாகச்சென்று பெண்களுக்கு வளையல் கொடுத்தார். பெண்களனைவரும் வெளிக்கு வேண்டாமென்பதுபோல் மொழிந்துகொண்டு அந்த மாயச்செட்டியாரின் பரிசத்தை மீண்டும் மீண்டும் வேண்டினர். ஒரு முறை பூட்டிய வளையல்களை உடைத்தலிட்டு மறுபடியும் போடச்செய்தனர். பெருமானது சூழ்ச்சியைக் கொஞ்சமும் அறியாமல் அவர்கள் எல்லோரும் வளைச் செட்டியாரிடம் சிக்குண்டு எத்தனைமுறை அவரது பரிசத்தையடைந் தாலும் மீளவும் அடைய விரும்பினர். வளை போடாமற் சென்றால் உம்மை சோமசுந்தரக்கடவுள் கெடுத்துவிடுவார்' என்றனர். உள்ளே சிரித்த வாய்ச் செட்டியார் மறுபடியும் வளையல்களைக் கொடுத்தார். இவர் இவ்வ ளவு நல்லவராயிருக்கின்றாரே என்று அவர்கள் வியப்பெய்தினர். செட்டி யார் தங்களது கையைப் பிடித்ததனாலுண்டான இன்பத்தை மனத்தில் நினைந்து கொண்டவராய் அவர்கள் அவரைப்பார்த்து 'நாளை வாரும், நாளன் றைக்குவாரும் நாள்தோறும் வாரும்' என்று கெஞ்சினர். செட்டியார் 'அப்படியே செய்கின்றேன்' என்று சொல்லியவண்ணமாய்த் தெருத்தெரு வாய்ச் சுற்றினர். பெண்கள் வளையலுக்குக் கொடுத்த பணத்தை அவர் பெற்றுக்கொள்ளவில்லை வாங்கிக்கொள்ளத்தான் வேண்டுமென்று அவர் கள் கட்டாயப்படுத்தியதற்கு அவர் 'இன்றைக்குப் பெற்றுக்கொள்ளமாட் டேன், நாளைக்குப் பெற்றுக்கொள்கின்றேன்' என்று பதிலுரைத்தார். இதுபோலவே தெருத்தோறும் சொல்லிக்கொண்டு உலகத்திற்கிறைவனை ஆலவாயுடையான் வளையல் விற்றார். பின்னர் கருப்பக்கிருகம் சென்று மூலஇலிங்கத்தில் மறைந்தார்.

வைசியப்பெண்கள் இறைவனது கைத்தொடலாலும் திருவருளா லும், பிள்ளைகள் பெற்று வெகுகாலம் வாழ்ந்திருந்துப் பின்னர் வீட்டை யடைந்தனர். அவர்களுடைய புதல்வரும், பேரன்மாரும், அவரதுவழியில் தோன்றியவரும் பெருமானது ஆணையால் நற்குணம் படைத்தவராய் நல்ல செல்வ முடையராய்ப் பூமியில் விளங்கினர். இவ்விதமாய்ப் பெரும் வைசிய குலம் உலகில் தோன்றிற்று. சோமசுந்தரக்கடவுள் இவ்வாறு வைசிய குருவமெடுத்துச் சாபம் காரணமாய் வைசியகுலத்தில் பிறந்த பெண்களைக் கருணையுடன் காப்பாற்றினர்.

பெருமானது இந்த வளையல்விற்றற் கதையைக் கேட்போர் பிள் ளைப்பேறு பெற்று இன்பமடைவர். இது முப்பத்திரண்டாம் திருவிளை யாடல்.

மூப்பத்தொன்பதாவது அத்தியாயம்.

அட்டமாசித்தி யுபதேசித்தல்.

திருக்கைலாயம் முதலான சிறந்த சிவத்தலங்களில் இலிங்கங்கள் தோன்றுதற்கு முன்னரே சோமசுந்தரமூர்த்தி கீழேழு உலகங்களிற்கும் மூலத்திலிருந்து அந்த இலிங்கவடிவமாய்த் தோன்றிவிட்டார். அதனால் தான் சனகர் முதலியோர் அதை மூலஇலிங்கமென்று கூறுகின்றனர். அந்த மூலத்திலிருந்து முளைத்தலைதான் கைலாயம் முதலான தலங்களிலிருக்கும் இலிங்கங்கள். ஆதலால் அந்த மூல இலிங்கத்தில் உறையும் சிவபெருமானே இலிங்கங்கள் யாவற்றிலும் உறைகின்றான். அதாவது முழுமுதற்கடவுளான சோமசுந்தரப்பெருமானே கைலாயம் முதலான தலங்களிலும் எப்பொழுதும் இருக்கை செய்கின்றான்.

ஒருசமயம் கைலாயத்திலுறையும் கடம்பவனநாதன் ஆலமரத்தடியிலிருந்துகொண்டு இன்மொழிகளால் சிவதருமங்களையும், ஆகமங்களையும், தத்துவ முணர்த்தும் சாத்திரங்களையும் நந்தி, பிருங்கி, மகாகாளர், கும்போதரர், நிகும்பர், மற்றைக் கணத்தலைவர் இவர்களுக்குச் சொல்வதுபோல் தானுகவே வெளிப்படுத்தினர். வணங்கிய சிவனன்பரான சனத்குமாரர், சனகர், சனாதனர், சனந்தனர் இவர்கட்கு மங்களம்பயக்கும் செய்வக் கதைகளை கூறினர். அப்பொழுது முருகபிரானுக்குத் தாய்முறையாகும் ஆறு இயக்கினிகள் (இயக்க மங்கையர்) மேனிமுழுதும் திருநீறுபூசி உருத்திராக்கம் பூண்டு சடைதரித்துச் சிவலிங்க பூசை செய்து அன்பும் ஆவலுமுடைய ராய்ப் பெருமானை வணங்கிப் பிறவிக்கடலையொழிக்கும் திருவடிப்பொடிகளுடைய பெரியபிரானே! கருணைக்கடலே! கிருபைகூர்ந்து அட்டமாசித்திகளை எங்களுக்கு உபதேசித்தருளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர். உடனே எல்லாமறிந்தவரும் பிரமத கணங்களுக்குத் தலைவராய் பிரகாசவில்தாங்கிப் பயங்கரமாய் காணப்படுபவருமான இறைவன் மலர்ந்த முகத்தளுய் ஆகட்டுமென்றுசொல்லிச் சித்திகளைப் பெறுதற்குரிய வழிகளை யுரைக்கத்தொடங்கி "இயக்கினிகளே! மூழுமையானவளும், மேலாம்சக்திவடிவமானவளும், என்றோடு ஒன்றுனவளுமான உமாதேவி தன்னை நினைத்தலாலேயே மகிழ்வுற்று எட்டுசித்திகளையும் தருவாள். ஒன்பது ஆவரணங்களோடு கூடியவளும் ஒன்பது நாதவடிவினளுமான தேவியே நான் என்று உறுதியுடன் நினைக்கவேண்டும். தேவியை அணிமா முதலான எட்டுச் சக்திகளாலும் மற்றைச் சக்திகளாலும் சூழபெற்றவளாயும் எனது மடிமேலிருப்பவளாயும் பூசிக்கவேண்டும். தேவியை அறிபவள், அறிவு அறியப்படு பொருள் இம்மூன்று மயமானவளாயும், உலகத்தின் மூதல் காரணமாயும், முழு ஆனவ வடிவான சோதியாயும் எண்ணிப் பழகவேண்டும். துயர் யாவையும் நீக்கி இன்பமனைத்தையும் கொடுக்கும் உமையாரது மூலமந்திரமான சக்தி பஞ்சசாக்கரியெனும் பதினைந்தெழுத்து மந்திரத்தை நீங்கள் செபிக்கவேண்டும்" என்றவாறு விரித்துக் கொண்டிருக்கையில் அந்த

இயக்கிணிகள் ஊழ்வினையால் கவனக்குறைவா யிருந்தனர். உடனே அந்தக் குற்றத்திற்காக இறைவன் அவர்களை நோக்கி நான் சொல்லும் பொழுது நீங்கள் கவனிக்கவில்லை. உங்களுக்கு அறிவு உண்டாகாது. ஆதலால் புவியில் கற்களாகி அறிவற்றுக்கிடக்கக்கடவீர் என்று சபித்தார்.

இங்ஙனம் சபிக்கப்பெற்ற இயக்கிணிகள் உருமாறி, உடல்நடுங்கி, பயந்து, மனம்நொந்து, புலன்கள் ஒடுங்கி, ஆலமரப்பெருமானை நோக்கி அவருக்கு உவகையளிக்கும் பல புகழ்களைப்பாடி "இறைவனே! இந்தச் சாபம் தீர்ந்து உமது திருவடிகளை வணங்க நாங்கள் மீண்டும் எப்பொழுது வருவோம்? எவ்விடத்தில் கல்லாகக் கிடக்கவேண்டும்?" என்று வினவினர். அப்பொழுது பசுக்களுக்குப் பதியான சிவபெருமான் சிரித்துக்கொண்டு கருணையுடன் அவர்களிடம் "பாண்டியநாட்டில் புட்டமங்கலம் என்று ஓர் கிராமம் இருக்கின்றது. அங்கு ஆலமரம் ஒன்று வெகுகாலமிருக்கவைப் பரப்பிக்கொண்டு, திவ்வியத் தன்மைபெற்று, மேகமண்டலமளாவி எண்ணிறந்த விழுதுகளுடன் விளங்குகின்றது. அதனடியிற் கல்வடிவாய் அறிவிழந்து உள்ளும்புறமும் இருள்குழ்ந்து ஆயிரமாண்டுகள் கிடக்கவேண்டும். பூலோகத்தில் மதுரையென்ற பெயருடன் அனுதியாய் மிகப் புனிதமாக எனது தலமொன்றிருக்கின்றது. அவண் சோமசுந்தரமூர்த்தியென்று எனது மூலலிங்கம் விளங்குகின்றது. அதில் எண்ணமுடியாத காலமாக நான் இருக்கைகொள்கின்றேன். அந்த மூலலிங்கத்தினின்றும் கிளம்பி ஓர் ஆசிரியன் உருவத்தில் அங்குவந்து உங்களுக்கு அட்டமாசித்திகளைச் சொல்லிவைப்பேன். நீங்கள் சாபம்தீர்ந்து மீண்டும் உங்களது செவ்விய வடிவங்களைப்பெற்று எனது அண்மைக்குவருவீர்எனச் சாபம்தீரும்வகையை விவரித்தார். உடனே வருத்தமடைந்திருந்த இயக்கிணிகள் மகிழ்ச்சியெய்தி ஆலமரம் சேர்ந்து அதனடியில் கல்லுருவாய் வீழ்ந்தனர். பின்னர் பெருமான் கணத்தலைவருடனும் முனிவருடனும் பேசியபின், நந்திகேசரது கையைப் பற்றிக்கொண்டு உமையார் இருக்குமிடம் சென்றார்.

ஓராயிரமாண்டுகள் கழிந்தன. இரக்கவடிவாம் சோமசுந்தரமூர்த்தி இயக்கிணிகள் கற்களாய்க்கிடந்தவிடம் எகி அவர்களைச் சாபத்தினின்று விடுவித்து, ஆசிரியன் உருவங்கொண்டு அவர்கட்கு லட்டுச் சித்திகளையும் சொல்லியருளினர். அவர்கள் மறுபடியும் தங்களது பழைய உருவம் பெற்று, அறிவுடையராகிச் சித்திகளின் மாட்சியால் எங்கும் சென்று, ஆகாயத்தில் உலாவுதல் முதலான திறன்களை அடிக்கடி காண்பித்துக் கொண்டு, கைலாயமலையடைந்து, பெருமானது அண்மைசேர்ந்தனர்.

இங்ஙனம் இறைவனது முப்பத்துமூன்றும் திருவிளையாடல் இத்திக்கதையைப் படிப்போரும் கேட்போரும் சித்திகள் யாவையும் பெறுவர்.

நாற்பதாவது அத்தியாயம்.

காடுவெட்டின சோழராசன் பொருட்டுக் கதவுடைத்தல்.

காஞ்சிபுரத்தில் காடு வெட்டின சோழன் என்ற பெயருடன் ஓர் சோழமன்னனிருந்தான். அவன் சிறந்த சிவனன்பன். நல்ல படிப்பாளி. எல்லாச் சாத்திரங்களும் கற்றவன். தனது நிலைமைக்கும் செல்வத்திற்கு முகந்த முத்துமாலை, தோள்வளை, மோதிரம் முதலான ஆபரணங்களைத் துறந்து அவன் எப்பொழுதும் நீறுபூசி, உருத்திராக்கமணிந்து, சிவபூசை செய்வதும் திருவையெழுத்துச் செபிப்பதுமாகவே இருந்தான். வெகுகால மாகச் சுவனிக்கப்படாது காடு மூடிக்கிடந்த காமாட்சியம்மன் திருக்கோயிலைப் புதுப்பிக்கும் நோக்கத்துடன் காட்டை வெட்டிச் சீராக்கினன். அதுமுதற்கொண்டு அந்த வேந்தனுக்குக் காடுவெட்டினசோழனெனும் பெயர் வரலாயிற்று.

ஒருசமயத்தில் முனிவர் ஒருவர் கம்பையாற்றில் நீராடிக்காமாட்சியம்மனது திருவடிகளை வணங்குதற்பொருட்டுக் காஞ்சிக்குவந்தார். அவர் புராணங்களெல்லாம் கற்றவர். அரசனைக்கண்டு பேசிகொண்டிருக்கையில் அவர் திருவாலவாய்த்தலத்தின் மாட்சியையும், அங்குள்ள நீருத்தத்தின் ஏற்றத்தையும், மூலலிங்கத்தின் பெருமையையும் விரிவாகக்கூறினர். அரசன் கேட்டு ஆச்சரியப்பட்டு எப்பொழுது ஆலவாய் சென்று சுந்தரேசுவரமூர்த்தியைக்கண்டு பயனெய்தப்போகின்றேனென்று கவலையுற்றான். ஆலவாயுடையான் அவனது கனவில் தோன்றித் தனியாகவந்து என்னைக்கண்டுவிட்டு திரும்பிவிடு என்று அருளினர்.

சோழராசன் விழித்து எழுந்து மாறுவேடம்பூண்டு எவருக்கும் தெரியாமல் மதுரைக்கு வந்தான். வைகாயாற்றில் வெள்ளப்பெருக்கு அதிகமாகவிருந்தது. அப்பொழுது ஆற்றைக்கடக்கும் ஆற்றலுள்ள அவன் எப்படியாவது ஆற்றைக்கடந்து அக்கரை சென்றிருக்கையில் எனது பகைவனும் என்னிடத்தே அழுக்காறு கொண்டவனுமான பாண்டியராசன் நான் வந்திருப்பதை அறிந்துவிட்டால் உடனே என்மீது போர் தொடுப்பான். ஆற்று வெள்ளம் ஒன்று, அரசன் இரண்டு ஆக இருபகைவரை நான் எங்ஙனம் வெல்வேன்?? என்றவாறு தனக்குள்ளே சொல்லிக்கொண்டு ஆற்றின் வடகரையில் நின்றவண்ணம் அன்புடன் சோமசுந்தரக்கடவுளிடம் "ஆலவாயுடையானே! ஆலாலசுசைப் போக்கியவனே! தேவேந்திரன் முதலான தேவரால் வணங்கப்பெற்றவனே! உமது மிகப் பெருமைவாய்ந்தத் திருக்கோயிலும், யானைகளாலும் சிங்கங்களாலும் தாங்கப்பெற்ற விமானத்தையும், தானே தோன்றிய அமுதமயமான அற்புதப் பேரிலிங்கத்தையும்

கரண்டற்கு வந்திருக்கின்றேன். அது ஆற்றுவெள்ளத்திற்கும் அரசனுக்கும் பொறுக்கவில்லை. கான் யாதுசெய்வேன்! நீர்தான் சொல்லவேண்டும். நீரேதான் எனக்குத்தஞ்சம்'' என்று முறையிட்டான். பெருமான் அவனது எழ்மையான இம்மொழிகளைக் கேட்டு அவன்பால் இரக்கம்கொண்டு அவனைக் காப்பாற்றுதற்காக ஒரு செயல்புரிந்தார்.

நள்ளிரவு, காவற்காரர் கோட்டை வாயில்களை அடைத்துத் தாளிட்டு மீன் குறியையும் வைத்து அவரது வீடுகளுக்குச் சென்றுவிட்டனர். பெருமான் வடக்குக்கோட்டை வாயிலை உடைத்துவைத்து ஓர் அதிசயமான சித்தக்கோலம் பூண்டு கொடிப்பொழுதில் ஆற்றுநீரை மணல்தெரியும்படி வற்றடித்து அக்கரையிலிருந்த காடுவெட்டின ராசனை இட்டுக்கொண்டு பொற்றமரைப் பொய்கையில் நீராட்டுவித்து எங்கும் இருள்மயமாயிருந்தபடியால் அவனது கண்களுக்கு இருட்டிலும் காணும் திறனருளி முதலாவதாகக் கருணைவடிவான கயற்கண்ணம்மையைக் காண்பித்துப் பின்னர் விமானத்தையும் கருப்பக்கிருகத்தையும் அங்குறைந்துள்ள அற்புத லிங்கத்தையும் காண்பித்தார். இலிங்கத்தைக் கண்ணுற்றதும் அரசனுக்கு உரோமம் சிலிர்த்தது. குரல் குளறிற்று. இன்பக்கண்ணீர் சுரந்தது. அன்புமேலிட்டுப்பரவயனாய்த் தோத்திரங்கள் பாடி, ஐயெழுத்தச்செபித்து, ஆடி, அவன் அதன் முன்னிலையில் நின்றான். அன்பர்க்கு எண்ணியதையருளும் ஆலவாயுடையான் அவனது அளவிற்கரிய அன்பைக்கண்டு, அவன் நினைத்தது யாவற்றையும் அவனுக்கு கொடுத்து ''அரசனே! என்னவனை பாண்டிய மன்னனுடன் போர்புரிய உனக்கு இப்பொழுது போதிய ஆற்றல் இல்லை. ஆனதுபற்றி நீ உடனே சென்றுவிடு'' என்று மொழிந்து அவனை அக்கரை சேர்த்து, அவனது நெற்றியில் திருநீறு இட்டு மறைந்தார். அவனும் ஆச்சரியமடைந்தவனாய் சுந்தரேசமூர்த்தியினது திருவருளை நினைந்து கொண்டுத் தனது இராச்சியத்திற்குச் சென்றான். பெருமான், அன்பனின் துயர்தீர்க்கும் பொருட்டுத்தான் உடைத்த கோட்டைவாயிற் கதவை மறுபடியும் அடைத்துத் தனது விடைக்குறியை அதன்பேரில் வைத்துவிட்டுத் தனதிடம் சென்று, உமையாருடன் சுளித்திருந்தார்.

அப்பொழுது பாண்டிய நாட்டின் மன்னன் குலபூடணப்பாண்டியன், அவனது காவலாளி கதவுடைக்கப்பட்டுக் குறிமாறியிருப்பதை அவனிடம் தெரியப்படுத்தினான். அரசன் திகைத்துப்போய்க் காவலாளிகளை ன்றாய் ஆராயும்படி கட்டளையிட்டான். அவர்கள் பலவிதத்திலும் ஆராய்ந்து ஒன்றும் அறியமுடியாமல் வேந்தனிடம் வந்து ''அரசனே! இது யார் செய்ததென்று அறிந்தவர் யாராவது உளரேல் அது சோமசுந்தரமூர்த்தி தான்'' என்று அறிவித்தனர். அதைக்கேட்ட அரசன் மிகத் துயருற்று, உண்டியருந்தாது இறைவனை நெஞ்சில் நினைந்துகொண்டு, தரையில் படுத்தான். பூலோகசிவலோக நாதனான பெருமான் அவனதுகனவில் தோன்றி உள்ளதையுரைத்தார். உடனே அரசன் அமைச்சரிடம் இறைவன் கூறியதைத் தெரிவித்தான். எல்லோரும் சோமசுந்தரமூர்த்தியின் அடியாரிடத்தே உள்ள அன்பைப்போற்றினர். குலபூடணப்பாண்டியன் முன்னிலும் அதிகமாகப் பெருமானிடம் அன்பு செலுத்தினான். பெருமான், அரசனுக்கு நீண்ட ஆயுளையும் அவன் வேண்டியயாவற்றையும் அளித்தருளினர்.

காடுவெட்டின சோழனுக்காக இறைவன் செய்தருளிய இத்தத் திருச்செயலின் வரலாற்றைப் படிப்போரும் கேட்போரும் காட்டினின்று உண்டாகும் அச்சத்தையடையார். இது ஆலவாயுடையாரது மூப்பத்து நான்காம் திருவிளையாடல்.



நாற்பத்தொன்றுவது அத்தியாயம்.

பாண்டியனது படைக்குத் தண்ணீரளித்தல்.

குணபூடண பாண்டியன் சிவலோகம் சென்றதம் அவனது புதல்வனான இராசேந்திர பாண்டியன் அரசியலேற்றான். சிறந்த வீர குணங்களுடன் சிற்றரசரால் வணங்கப்பெற்று, நீதி செறியுடன் சனங்களைக் காத்தான்.

காடுவெட்டின சோழன் இராசேந்திரனது கல்லுறவைப் பெறுதற்காகத் தனது புதல்வியை அவனுக்கு மணம்செய்விக்கவெண்ணி தனக்கு வேண்டிய அமைச்சர் ஒருவரை அனுப்பினான். அதன்பேரில் பெரும்புத்தியுடைய பாண்டியன் அன்பளிப்பாகச் சோழராசனுக்குப் பலசிறந்தபொருள்களை அவர்மூலம் கொடுத்தான். சோழனும் பதில் மரியாதை செய்தான்.

இங்ஙனமிருந்து கொண்டிருக்கையில், பாண்டியராசனது தம்பியான ராசசிங்கப்பாண்டியன் சோழவேந்தனது புதல்வியைத் தானேயடையும்பொருட்டுப் பெரும் படையுடன் சோழனின் தலைநகராகும் காஞ்சியை நோக்கிச்சென்றான். சோழராசன் அதைத்தெரிந்து, தனது பலத்தையும் ராசசிங்கனது பலத்தையும் சீர்தூக்கி ஆய்ந்து, அவனுக்குப் புதல்வியைக் கொடுக்கத் தீர்மானித்து, எதிர்கொண்டழைத்து, முறைப்படி பொன்னாலும் மூத்தாலும் அவனைப் பூசித்து, அவனுடன் காஞ்சிநகர் வந்தான். தன்னுடையவும் அவனுடையவும் மாண்பிற்குகந்தவாறு திருமணவிழாவைச் சிறப்பாக நிகழ்த்திச் சோழராசன் தனது புதல்வியை ராசசிங்கனுக்குக் கலியாணம் செய்துவைத்தான்.

சின்னாட்செல்லச் சோழன் மருமகனுடன்கூடிப்பாண்டியராசனை வெல்லவிரும்பினான். மூத்தவனுக்குப் பேசிய பெண்ணைக் கவர்ந்த தீக்குணமுடைய இளையவனும் அவ்விருப்பத்திற்கிணங்கினான். இருவரும் சேர்ந்து தக்க எற்பாடுகளுடன் நால்வகைப்படையுடன் மதுரை நோக்கிப் புறப்பட்டு சுகருக்கு இரண்டு யோசனையண்மைக்கு வந்துவிட்டனர். பாண்டியராசன் இதையறிந்ததும் மனக்கலங்கினான். தம்பியான இராசசிங்கன் தானே பெருஞ்சூரன். அதோடு படையுமிருக்கின்றது. அதுவோடும் நில்லாமல் சோழராசனும் சேர்ந்திருக்கின்றான். தனது படையோ சிறிது. சூரத்தனமும் அங்ஙனமே. இக்கிலேயில் அவன் மனஞ் சோர்ந்து மிகுந்த ஆர்வத்துடனும் அன்புடனும் சோமசுந்தரமூர்த்தியை அடைந்து வலம்சுற்றி, வணங்கிப் பாடித் திருவையெழுத்து மந்திரத்தைச் செபித்து இறைவனிடம் தனக்கு வெற்றியும் எதிரிக்குத் தோல்வியும் நேரவேண்டுமென விண்ணப்

பித்தான். அன்பர்க்கருளும் கருணைவடிவமான பெருமான் உடனே ஆகாய மொழிமூலமாய் 'இராசேந்திரனே! கவலைப்படாதே. உனது விருப்பப்படி நடக்கும். துயரை நீக்கு. காலையில் அவ்விருவருடன் போர்புரி. என்று பணித்தருளினர்

பெருமானது இம்மொழிகளைக் கேட்டு அரசன் மனமகிழ்ந்தான். மறுநாட் காலையில் திருநீற்றாலும் உருத்திராக்கங்களாலும் தனது மேனியைப்போர்த்து, அப்பொழுது தரிக்கக்கூடிய படையாவற்றையும் தரித்துக்கொண்டு பெருமானது முன்னிலையில் மீண்டும் மீண்டும் தொழுது, வலமாக, எதிரியை நோக்கிச்சென்றான். இளையவனான தீய இராசசிங்கன் சோழவேந்தனுடைன் வேகமாக எதிர்த்துவந்தான். அவன் பார்வையிற் பட்டதும், இராசேந்திரன் சிங்க முழக்கத்துடன் போரைத்தொடங்கினன். பெருத்த படையுடனிருக்கும் தம்பி அண்ணனது போரைக்கண்டு சிரித்துக் கொண்டு நால்வகைப் படையுடனும் எதிர்த்தான். இரண்டு படைகளுக்கு மிடையே கடும்போர் நடந்தது. ஆட்களும், புரவிகளும், யானைகளும், தேர்களும் இரக்கமின்றிச் சிதைக்கப்பெற்றன. சாமத்தில் தலங்கிய போர் சாமம்வரை நிகழ்ந்தது. உச்சி நேரமாகிவிட்டது. கதிரவனது கதிர்கள் தழல்கள்போன்று வீழ்ந்தன. இருபடையினரும் தாங்கமுடியாத நீர்வேட்கையுற்றுத் தண்ணீர் கிடையாது சோர்வுடன் கீழேவிழத்தொடங்கினர்.

பாண்டியராசனது படைவீரர் எங்கே தண்ணீர் எங்கே தண்ணீர் என்று கூலியவண்ணமாய்ப் போரைவிடுத்து, அங்குமிங்கும் அலைந்தனர். அப்பொழுது கருணைவள்ளலான இறைவன் இரங்கிப் போர்க்களத்தில் ஓர் பெரிய தண்ணீர்பந்தலமைத்தார். அப்பந்தலுக்கு நான்கு வேதங்களும் நான்கு தூண்கள். அதன் மத்தியில் கட்டிலொன்று போட்டுப் பெருமான் ஓர் தவசிக்கோலத்தில் அதில் உட்கார்ந்துகொண்டார். அவரது திருத்தாள்களில் அழகான சிலம்பு. இடுப்பிற் புலித்தோல். மேனி முழுதும் திருநீறும் உருத்திராக்கமும். முகம் அழகுக்கடலிற்றோன்றிய மதிபோன்றது. பழுக்கக் காய்ச்சின தங்கநிறமுடைய சடை. மேருமலையினது போன்ற பொலிவு. அரையில் தங்க ஒட்டியாணம். இந்த வேடத்திலிருக்கும் அவரது முன்பு அவரால் தோற்றுவிக்கப்பெற்ற ஒரு மிகப்பெரிய மாயப்பானை. அதில் அவரது சடையில் மிளிரும் கங்கையினது நீர் பெருகியிருந்தது. அந்த நீரைப் பெருமான் பாண்டியனது படையினருக்குக் கொடுத்தார். பானையின் கழுத்துப்பக்கத்தில் ஓட்டை ஒன்றுதான் இருந்தது. ஆனால் அதன்வழி வெளியேறிய நீர்த்தாரைகள் நூறுகவும் ஆயிரமாகவு மிருந்தன. அமுதத்தைப் பழிக்கும் அந்தப்புனிதமான நீரைப் பருகியதும் போர்வீரரது தாகம் தணிந்துப் புது வலிமையும் வீரியமும் பெற்று அவர்கள் உவகையுடன் மீண்டும் போர்புரிதற்குப் புறப்பட்டனர். சோழனது படை பெரிதாயிருந்தும் தண்ணீர் கிடையாமல், அவனும் இராசசிங்கனும் எவ்வளவு தடுத்தும், நாலாபக்கங்களிலும் ஓடத்தலைப்பட்டது. சோழனும் இராசசிங்கனும் சிறிது தனித்துப் போராடிப் பின்னர் இராசேந்திரனால் உயிருடன் பிடிக்கப்பெற்று சோமசுந்தரமூர்த்தியின் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர். பெருமான் ஆகாயமொழியில் இராசேந்திரனைப் பார்த்து ,அரசனே! போரில் நான் செய்யவேண்டிய காரியம் செய்தாய் விட்டது. இவ்விருவரையும் உனது விருப்பம்போல் நடத்திக்கொள்வா

யர்கா என்று பணித்தருளினார். இச்சொற்கள் அனைவரின் காதுகளிலும் வீழ்ந்தன. இராசேந்திரன் சிறந்த சிவனன்பும் அறவொழுக்கமும் உடையனுதல் பற்றி அவ்விருவர்பால் இரக்கம்காட்டி ஐந்துநாட்களுக்குப்பின் சோழராசனை அவனது படையுடன் போதுமான பொருள் கொடுத்து அவனது இராச்சியத்திற்கனுப்பிவிட்டுக் கயவனை தனது தம்பியைச் சிறிய அலுவல்களில் ஈடுபடுத்தினான். தானும் சுந்தரேசப்பெருமானிடம் அதிகமான அன்பைச்செலுத்தினான். தண்ணீர்ப்பந்தல் நிறுவிய இறைவனையும் அவரது அன்பனை அரசனையும் யாவரும் போற்றினர்.

கடம்பவன நாதனின் இந்த முப்பத்தைந்தாம் திருவிளையாடலைப் படிப்போரும் கேட்போரும் மங்களங்கள் யாவற்றையும் அடைவர்.



நாற்பத்திரண்டாவது அத்தியாயம்.

ரசவாதம் புரிதல்.

திருப்பூவணமென்று ஓர் சிவத்தலம் உண்டு. அதன் பெருமையைத் தேவரும் முனிவரும் புகழ்வர். அவ்வூரில் ஏமநாதை யென்றொரு தேவதாசி. அவள் சீரிய அழகும் குணமும் பொருந்தியவள். எப்பொழுதும் சிலபெருமானையும் சிவனடியாரையும் பேணுவதில் அவளுக்குப் பேருவகை. பூவணநாத மூர்த்தியின் பூசைமுடித்து பலிபோட்டபின் அவள் காள்தோறும் கோயிலில் நய நிருத்தம் புரிவாள். அதிகாலையில் எழுந்து, நீராடி, நீறணிந்து, சித்தியகருமங்களை முடித்து, சிவபூசை செய்வாள். ஆதியில் சூரியனால் தொழப்பெற்று அக்காரணத்தால் சூரியநாதன் என்ற பெயருடன் விளங்கும் அவ்வூர்ச் சிவபெருமானது இலிங்கத்தை வலம் சுற்றி வணங்கித் துதிப்பாள். அந்தத் தலத்தின் மாட்சியை யாரே செப்பவல்லவர். அங்குள்ள ஒவ்வொரு தூசியும் ஒவ்வொரு சிவலிங்கம். இந்திரன் முதலான தேவர் அத்தலத்தைக் காலால் மிதியாமல் தொலைவிலிருந்தே மூர்த்தியைத் தொழுது வரப்பங்களை பெறுகின்றனர். சூரியன் முதலான நவக்கிரகங்களும் நட்சத்திரங்களும் திருப்பூவணநாதருக்குப் பிரதக்கிணம் புரிகின்றன. அங்குள்ள உமையம்மைக்கு அன்னபூரணேசுரியென திருப்பெயர். அந்த அம்மையின் ஆணைதலால்தான் ஏமநாதை சிவனடியார்க்கு அன்னமிட்டாள். அவ்வூர் வாலிபரிடமிருந்து எவ்வளவு பணம் கிடைத்தாலும் அது முழுதையும் இந்தத் தருமகாரியத்திலேயே செலவிட்டாள்.

இங்ஙனம் நடந்துகொண்டிருக்கையில் ஏமநாதையின் மனதில் இறைவனுக்கு உற்சவப் பதுமையொன்று செய்துவைக்கவேணுமென்ற எண்ணம் உண்டாயிற்று. அதற்காகச் சிற்பியைக்கொண்டு கருவும் கட்டுவித்தாள். ஆனால் அதற்கு மேற்கொண்டு விக்கிரகம் வார்ப்பதற்குப் போதுமான பணம் அவளிடமில்லை. அன்றுடம் கிடைக்கும் பணம் அடியார்க்கு அமுது செய்விப்பதிலேயே சரியாய்ப்போயிற்று. சோராசைப்பட்டுப் பணம் பிடுங்குவதிலும் அவளது மனம் செல்லவில்லை. விக்கிரகம் வார்க்கவேண்டுமென்ற அவாவோ அதிகமாயிருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் ஏக்கமுற்றிருந்தாள்.

இந்நிலைமையில் எங்கணுமிருக்கும் கருணைக் களஞ்சியமான சோமசுந்தரப்பெருமான் ஏமநாதையின் விருப்பத்தை நிறைவேற்றிவைப்பதற்காக சித்தவேடம் பூண்டு அவளது வீட்டிற்கு அமுதுசெய்ய வந்திருக்கும் சிவனடியார் குழாமில் தானும் ஒருவராக நின்றார். அப்பொழுது ஏமநாதைக்குத் திருநோக்குமூலம் சிவதீக்கை கொடுத்தருளவேணுமென்ற கருத்துடன் அவளை அங்கமங்கமாக உற்று நோக்கினார். அந்தப் புண்ணியவதியும் கையிற் கோல்தரித்துக் காதுகளில் படிகக்கடுக்கன் பூண்டு அற்புதப் பொலிவுடன் இலங்கும் அந்தச் சித்தப்புருடரைக் கூர்ந்து பார்த்தாள்.

பின்னர் அடியார்களுக்குக் கால் கழுவுநீர் முதலானது கொடுக்கப்பெற்று முறைப்படி உண்டி கடைபெற்றது. எல்லோரும் அமுது செய்தாயிற்று. சித்தர்மாத்திரம் அருந்தாமல் நின்றுகொண்டிருந்தார். சேடியர் சென்று ஏமநாதையிடம் தெரிவித்தனர். அவள் உடனே சித்தரிடம் வந்தாள். அவர் புன்னகை பூத்தார். அவளும் அங்ஙனமே செய்து பெரியவர்க்குத் தனது உடலின்பம் பெற விருப்பமிருந்தால் அங்ஙனம் செய்துகொள்ளலாமென்று கூறினாள். அடியாரது விருப்பம் யாதாயினும் அதை நிறைவேற்றுவதென்பது அன்பின் மூட்பமறிந்த அவளது விரதம். சித்தவுருவிலிருக்கும் இறைவன் அவளது இன்மொழிகளைக்கேட்டு அவளோடுகூடி அன்பருட்சிறந்த ஏமநாதையே! மங்களவடிவினளே! உன்போன்ற அற வொழுக்கம் பெற்ற மங்கையர் கிடைப்பதரிது. நிலையற்ற உடலின்மூலம் அன்னமிடல், ஈகை, உடலைக் கொடுத்தல், கருணை, மெய்பேசுதல் முதலான நல்லறங்களால் நிலையுற்ற புண்ணியத்தை நீ ஈட்டினாய். அறங்களுள் சிவவதம் சிறந்தது. அதிலும் சிவலிங்கபூசை மிக்கமேலானது. அதைக்காட்டிலும் மேம்பட்டது அவரது அடியார்களோப் பேணுதல். கூறப்பட்ட அறங்கள் யாவும் உன்னிடமிருக்கின்றன. நீபூவணநாதருக்கு உற்சவப்பதுமை செய்துவைக்க விரும்புகின்றாய். அதை நீ உன் பெயருக்கேற்றவாறு பொன்மயமாகவே செய். நான் ஆலவாயில் வாழும் ஓர் சித்தன். உனதெண்ணம் தெரிந்து இரக்கமுற்று அதை நிறைவேற்றுதற்காக இவண் வந்திருக்கின்றேன். எனக்கு ரசவாதம் தெரியும். வெள்ளி, செம்பு, முதல் ஈயிவரையுமுள்ள உலோகப்பொருள் யாவற்றையும் கொண்டுவா என்றார். உடனே ஏமநாதை எல்லாவற்றையும் கொணர்ந்து சித்தரதுஅண்மையில் வைத்தாள். அவர் ஒவ்வொன்றிலும் திருநீறு தடவி அவளைப்பார்த்து 'ஏமநாதையே! நீ இவற்றைத் தீயிலிட்டுவைத்து நாளைக்காலையிற்பார். அப்பொழுது எல்லாம் பொன்மயமாகவிருக்கும். அந்தப் பொன்னைக்கொண்டு உற்சவபதுமை செய்வித்து உனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்'' எனச்சொல்லவும், ஏமநாதை அவரை வணங்கிப் ''பெரியவரே! இங்கு அமுது செய்தருள வேண்டும். இங்கு ஒரிரவாவது தங்கவேண்டும்'' எனக் கெஞ்சிக்கேட்டாள். சித்தர் அதைச்செவியுற்றுப் புன்னகைபுரிந்து சோதிவடிவமாய் ஆகாயத்தில் மறைந்தருளினார்.

ஏமநாதை வருத்தமும் மகிழ்ச்சியுமடைந்து அவர் கூறியபடி அனைத்தையும் செய்தாள். மறுநாட்காலையில் அத்தனையும் பொன்னுகமாறியிருந்தது. அதை எடுத்து அவள் சிற்பிகளிடம் கொடுத்து முன்னர் கருக்கட்டியபடியே உமையுடன் கூடிய மதிசூடிப் பதுமையைச் செய்வித்தாள். அதன்பின் ஆகம விதிப்படி அருச்சகர்களைக்கொண்டு நல்ல நேரத்தில் பிரதிட்டையையும் நடப்பித்தாள். அளவிறந்த அன்புடன் விழுந்து வணங்கி, எழுந்து, பதுமையின் வனப்பை உற்றநோக்கி இதுபோன்ற பதுமை எங்குமே கிடையாதென்றாள். அதற்குச் சுந்தரநாதனெனப் பெயரும் புனைந்தாள். உருவத்தைக் கன்னத்தில் தொட்டு முத்தமிட்டாள். அப்பொழுது ஏற்பட்ட நகக்குறி இன்றும் காணப்படுகின்றது. எல்லோரும் சிவனடியார்பால் அவளுக்கிருந்த அன்புபற்றி அவளைப்புகழ்ந்தனர். அவள் வேண்டாம் வேண்டாமென்று தடுத்தாள். அந்த விக்கிரகத்திற்கு உற்சவத்திற்கு ஏற்பாடு செய்ததுடன் ஆபரணங்களும் கொடுத்தாள். அவரது திருவருளால் ஏமநாதை தேவியின் சாயுச்சியத்தையடைந்தாள்.

நம்பி அன்புசெலுத்தும் அனைவர்க்கும் சிவபெருமான் திண்ணமாக இம்மையில் இன்பங்களையும் மறுமையில் வீட்டையுமளித்தருள்கின்றான். அன்பரது விருப்பங்களை நிறைவேற்றியருளும் சோமசுந்தரக்கடவுளையும் அவரிடம் அன்பு செலுத்திய எமகாதையையும் யாபேரும் போற்றுகின்றனர்.

கடம்பவனப் பெருமானது இந்த முப்பத்தாறும் திருவிளையாடல், படிப்போருடையவும் கேட்போருடையவும் பாவங்களையழித்து அவர்கள் விரும்பியவற்றையெல்லாம் பயக்கும்.



நாற்பத்துமூன்றுவது அத்தியாயம்.

படையுடன் சோழனை மடுவில் வீழ்த்தல்.

இராசேந்திர பாண்டியனது புதல்வனான ராசேசன் வெகுகாலம் பூமியை ஆண்டான். அவனது புதல்வன் ராசகம்பீரன் இராச்சியத்தை யேற்று நடத்துங்கால் கிராமந்தோறும் வீடுதோறும் சிவலிங்க வழிபாட்டை நிலைப்பித்தான். அவனது குமாரன் பாண்டியவமிசப் பிரதீபன் அரசனாகி வெகுநாட்களிருந்தான். அவன்பின் வந்த அவனது புதல்வன் தேவேந்திரனென்னும் புருகூதசித்து என்னும் பெயருடன் விளங்கினான். அவனது குமாரனான பாண்டியவமிச பதாகன் என்பான் பட்டத்திற்கு வந்து சிவனன்பை நாட்டில் மிகுதியாகப் பரப்பினான். அவனுக்குப்பின் அவனது புதல்வன் சுந்தரேசபதசேகரன் என்பவன் பாண்டிநாட்டு மன்னனானான். சிவனன்பில் அவனுக்கு நிகரானவர் யாருமில்லை.

அவன் அரசுபுரியும்காலத்தில் சகச்சைகதுரங்கமன் அதாவது ஆயிரம்பேருக்கொருவன் என்ற பெயருடையொருவன் சோழநாட்டின் வேந்தனாயிருந்தான். அவனிடம் மிகப்பெரிய படையிருந்தது. புரவிகளுக்கும், யானைகளுக்கும், தேர்களுக்கும் எண்ணிக்கை கிடையாது. இவ்வளவு வலிமையுடன் சோழராசன் பாண்டியவேந்தனைத் தோற்கடிக்க வேண்டுமென்றெண்ணி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவந்தான்.

இது இங்ஙனமிருக்க, மெய்யன்பனான பாண்டியன் படைபலத்தைப் பொருட்படுத்தாது சோமசுந்தரக்கடவுளையே நம்பி அவரிடம் அதிகமான அன்பைச் செலுத்தினான். அவன் அமைச்சரிடம் "தெய்வ பலமே பெரிது; மானிட முயற்சி வீண் என்ற முதுமொழியே எனக்குச் சான்று. அரசடையாளத்திற்கு வேண்டும் படையே போதுமானது. காலாட்களில் பதினாயிரவரும். புரவிகளில் ஆயிரமும், யானைகளில் நூறும், தேர்களில் பத்தும் இருக்கட்டும். அதற்கு மேலே வேண்டாம். எனக்குத் தெய்வம் தான் உதவி. போர் நிகழ்ந்தால் அவர்கள் எனது எதிரிகளை எதிர்த்துச் சண்டை போடுவர். எண்ணிறந்த சோழப்படைகள் வந்து இன்று போரிடுமேயாகில், ஆலவாயுடையான் எனக்குஎவ்விதமான உதவியுரிவாரென்பதை நீங்கள் ஆச்சரியத்துடன் பார்க்கப்போகின்றீர்கள். இப்பொழுது கூறிய அளவிலடங்கிய படையைப் பராமரிப்பதற்கு எந்த அளவு பணம் வேண்டுமோ அதைமாத்திரம் வைத்துக்கொண்டு பொக்கிஷசாலையிலிருக்கும் எஞ்சிய பணத்தை சுந்தரேசப்பெருமானுக்கும் வேதியர்க்கும் படித்தோர்க்கும் கொடுங்கள்" என்று உத்தரவிட்டு உறுதியுடனிருந்தான்.

அப்படியிருக்கையில் சோழன் படையெடுத்துவருகிறானென்ற செய்தி அவனை யெட்டிற்று. சோழராசன் புரவிமீதேறித்தான் ஒருவனாகவே நின்று ஆயிரம் குதிரைவீரர்களுடன் போர்புரிவான் என்று சனங்கள்

பேசிக்கொள்வதும் அவனுக்குத் தெரியவந்தது. ஆயினும் அவன் தைரியத்தை யிழவாது கடம்பவனகாதனையணுகித் தனது படை சுருங்கியிருப்பதையும் எதிரியினது படை மிகப் பெரிதாயிருப்பதையும் விண்ணப்பித்தான். உடனே பெருமான் பாண்டியனது உட்கவலையையும் வெளியுறுதியையும் கவனித்து, மனமிரங்கி, அவனுக்குத் தைரியமுண்டாகும்வண்ணம் ஆகாயவாணியின் மூலம் "அரசனே! சோழன் எல்லையற்ற படையுடன் போருக்கு வரும்பொழுது நீ உனது சிறியபடையுடன் எதிர்சென்று, எனது வார்த்தையை நம்பி நெஞ்சழுத்தத்துடன் போராடு. நான் உனக்கு வெற்றி தருவேன்" என்று அருளினர். இவ்வருள் மொழிகளைக்கேட்டு ஆடையில் முடித்துக்கொண்டு அவன் அரண்மனைக்குத் திரும்பினன்.

சிலநாட்கள் கழிந்தபின் சோழராசன் தனது பெரும்படையுடன் பூமியை அதிரச்செய்துகொண்டு போருக்கு வந்துவிட்டான். பாண்டியன் சிறிதும் அஞ்சாது தனது சிறுபடைக்குத் தலைவனாய், எதிர்த்துச் சண்டை செய்யப் பகைவனது படையைநோக்கிச் சென்றான். படைகள் மைகலந்தன. சோமசுந்தரப்பெருமானது திருவாணையால் பாண்டியன் படை சிறிதாயிருந்தும் பகைவர்க்கு மிகப் பெரிதாய்த் தோன்றிற்று. அதுபோலவே, சோழனது படை எண்ணற்றதாகவிருந்தும் பாண்டியன் படையினர்க்கு மிகச் சிறிதாகவே தோன்றிற்று. சோழனது படையிற் பெரும்பாகமழிந்தது, சோழன் கோபம்கொண்டவனாய்த் தனது மூலப்படையுடன் 'ஆயிரம்பேர்களை ஒருவனுகவே கொல்லக்கூடியதான் இதோவந்திருக்கின்றேன்" என்று உரக்கக் கூறிக்கொண்டு போர் முன்னணிக்கு வந்தான். சிறந்த புரவிமீதேறி முழு வேகத்துடன் அவன் வருவதைக் கண்ணுற்ற பாண்டியராசன் மனம் கலங்கி என்னசெய்வதென்ற கவலையுடன்நின்றான்.

அப்பொழுது கருணைமூர்த்தியான கடம்பவனகாதன் வேதங்களாகும் பெரும் புரவிமீதேறி கருநிறத்தவராய், தழல்போன்று சிவந்த கண்களுடன், விசித்திரமான சட்டை, தலைப்பாகையணிந்து. யானைக்கொம்பிலிருந்து செய்த காதாபரணம் பூண்டு, சுண்டுமுத்துக் கோர்த்த ஆரமும், தோள்வளையும், கைக்காப்பும் தரித்து, தலைப்பாகையில் மயில்தோகை சொருகி, வேடக்கோலத்தில் பாண்டியனது படைமத்தியினின்று கிளம்பிச் சோழனது எதிரில் சென்று 'ஆயிரமல்ல, கணக்கற்றபேரைக்கொல்லும் நான் இதோ வந்திருக்கின்றேன். என்னுடன் சண்டைசெய்' என்று முழங்கினர். உடனே மின்னல்போன்று ஒளித்துக்கொண்டிருக்கும் வேலாயுதத்தை சோழனது புரவிமீது எறிவதற்காகச் சுழற்றினர். அதைக்கண்ட சோழன் நம்பிக்கையிழந்து, நிண்ணமாய் அடி விழுந்துவிடுமென்று அஞ்சிக் குதிரையைத் திருப்பி ஓட்டத்தொடங்கினன். உடனே வேடக்கோலத்திலிருந்த பெருமான் மறைந்தருளினர்,

சோழன் பயந்தோடுவதைப்பார்த்த பாண்டியராசன் மகிழ்ச்சியெய்திக் கடும்வேகத்தோடு அவனைப் பின்தொடர்ந்து விரட்டினன். சிறிது நேரத்திற்கெல்லாம் விரட்டிவருவது பாண்டியன்தானென்று தெரிந்துகொண்ட சோழன் குதிரையைத் திருப்பிப் பாண்டியனை விரட்டினன். பாண்டியன் இந்திரனது குதிரைக்குச்சமமான தனது, புரவியை விரட்டி ஓடுவதும் திரும்புவதும், ஓடுவதும் திரும்புவதுமாகச் சோழனை வெகுதொலை

வீற்கு இழுத்து, நகரின் மேற்குப்பக்கத்தில் ஓடும்பொழுது தானும் தன தாட்களும் ஆழமான மடுவொன்றில் குதிரையுடன் விழுந்து பெருமானது திருவருளால் அதினின்றும், அனைவருடன் வெளியேறிச்சென்றான். பின்னல் வெகுவேகத்தில் துறத்திவந்த சோழராசன் தனது மூலப்படையுடன் அந்த மடுவில் விழுந்து மீளமுடியாது மடிந்தான். பார்த்த சனங்கள் யாவரும் ஆச்சரியப்பட்டனர். பகைவனது சில யானைகளும், குதிரைகளும், காலாமாடுகளும் மற்றைப் பொருள்களும் பிடிபட்டன. அவையனைத்தையும் ஆலவாயுடையரது திருமுன்பு அரசன் சேர்ததுக் கோயிலுக்கு உகந்தவற்றை அங்கு கொடுத்துவிட்டு எஞ்சியதை அரண்மனைக்கு அனுப்பினான். பின்னர் பாண்டியன் பெருமானை மீண்டும் மீண்டும் வணங்கி 'இறைவனே! பகைவனைக் கொன்று எங்களைக் காப்பாற்றினீர். இதுபோலவே எங்களை எப்பொழுதும் காத்தருளும், எங்களது பகைவரை அடக்கியருளும்" என்று வேண்டிக்கொண்டு அரண்மனை சென்றான். சனங்கள் களிப்புடன் சோமசுந்தரக்கடவுளை ஆக்கினைத் தெய்வமென்றும் நமபாண்டியனென்றும் (பாண்டிய உருவிலுள்ள மனிதன்) சொல்லிக்கொண்டு வீடுகளுக்கேகினர்.

தெய்வங்களையும் வேதியரையும் வணங்குவோர்க்குப் புவியில் ஆகாதது ஒன்றுமேயில்லை. நம்புகின்றவர் எதையும் பெறுவர். நம்பாதவர் வீணாவரே. சுந்தரமூர்த்தியிடத்தேயன்பு தேவர்க்கும் எளிதில் கிட்டுகின்றதில்லை. அவரது திருவருளால் அது எற்படுமேயாகில், இன்பமும் வீடும் பெறுவதுதிண்ணம்.

முப்பத்தேழாம் திருவிளையாடலாகும். இந்தக் கதையை ஒருமுறையேனும் கேட்கும் அரசர் போரில் வெற்றியெய்துவர்.

நாற்பத்துநான்காவது அத்தியாயம்.

குறையாத அரிசிமூட்டை யளித்தல்.

மதுரைமாநகரில் நற்குணங்களனைத்தும் நிறைந்த அடியார்க்கு நல்லானென்றவொரு வேளாளர் இருந்தார். அவர் ஒரு பெரும் சிவனன்பன். சிவனடியார்க்கு எப்பொழுதும் அன்னமளித்தார். அவரது மனைவி ஓர் கற்புடைய மங்கை. கணவனது சொற்படி அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் அன்னமிடுபவள். அவ்விருவரும் சிவனருள் பெற்றுச் சிவனன்பிலீடுபட்டுச் சிவபூசை செய்தனர். நிலத்தைப் பயிர்செய்து தானியங்களையுண்டாக்கி வாழ்க்கையை நடத்தினர். அறவழியிலொழுகும் அவர்கள் எப்பொழுதும் திருநீறும் உருத்திராக்கமும் பூண்டு, அடியார்களுக்கு அமுது செய்வித்துப் பின்னரே உண்டியருந்தி வாழ்ந்துவந்தனர்.

ஒருசமயம் இறைவன் அவர்களது அன்பைச் சோதிக்கும் பொருட்டுப் பெரும்பான்மையான நிலங்களிற் பயிர் விளையாதிருக்கும்படி செய்துவிட்டார். அடியார்க்கு நல்லான் வட்டிக்குக் கொடுப்போரிடமிருந்து அடுத்த போகத்தில் திரும்பத் தருவதாகக் கூறிக் கடனாகத் தானியங்களைப் பெற்றுச் சிவனடியார்க்கு அமுதளித்தார். பின்னர்ப் பொதுவாகவே விளைச்சல் குறைவாயிருந்தபடியால் கடனாகவும் தானியம் கிடைப்பது அரிதாயிற்று.

அப்பொழுது இருவரும் மனம் சோர்ந்து பட்டினியால் வாடிய வாய்ப் பொற்றாமரையில் நீராடி சுந்தரேசப்பெருமானிடம் சென்று, மும்முறை வலம்சுற்றி, ஐந்து முறை வணங்கி, ஐந்தெழுத்தைச் செபித்துத் தோத்திரங்களைப் பாடி, இறைவனிடம் அன்னம் செலுத்தினர். பின்னர் கைகூப்பி இன்பக்கண்ணீர் சொரிய, உரோமம் சிலிர்ப்ப, நாக்குளறக் கருணை வடிவாட ஆலவாய்மூர்த்தியை நோக்கி "கடம்பவனநாதனே! மேருமலையை வில்லாய் வளைத்தவனே! மகாவிட்டுணுவால் வணங்கித் துதிக்கப்பெற்றவனே! நாடோறும் நியமமாக உமது திருவடிகளைப் பூசித்து, உமது அடியார்க்கு அன்னம் கொடுத்து, எஞ்சியதை அருந்தி, உமது கடைக்கண்ணைக்கால் அன்பர்கள் நிறைந்த இத்தலமது முன்னிலைக்குவந்து வணங்கிக்கொண்டு இவ்வூரில் முன்பு வாழ்ந்தோம். இப்பொழுது ஐந்தாறுமாதகாலமாகப் பணமும் தானியமும் கடன் வாங்கி அடியார்களுக்கு அமுது செய்வித்தோம். நேற்றுவரை இந்த முறை கடைபெற்றது. இன்று கடன் கொடுப்பாரும் இல்லை. நான்யாதுசெய்வேன். கடன் கொடுப்பவர் எவரையாவது எங்களுக்குக் காண்பித்தருளவேண்டும். இல்லையேல் இக்கணத்திலேயே உயிரை விட்டுவிடுவோம். அடியார்க்கன்னமிடுதல் என்பது எங்களிருவர்க்கும் பிறப்புவிரதம். அதைவிடுத்து எங்களால் வாழமுடியாது" என்று அழுது கொண்டே விண்ணப்பித்தனர். உடனே பெருமான் ஆகாயமொழிமூலமாய், 'வேளாளர்குலதிலகமே! நீ அடியார்க்கு அன்னம்கொடுத்தாய்! நான்

அதைக்கண்டு மகிழ்வுற்றேன். அப்பேர்ப்பட்ட ஒருவனை நான்கண்டதில்லை. அரிசிமூட்டையொன்றை நீ உனது வீட்டில் காண்பாய். அதிலிருந்து அதிகமான அரிசியை எடுத்து நீ உனது விரதத்தை நிறைவேற்று. என தருளால் எவ்வளவெடுத்தாலும் மூட்டை குறையாது. எப்பொழுதும் நிறைந்தே இருக்கும். பணம் தேவையாயிருக்கும்பொழுது மூட்டையிலி ருந்து அரிசியை எடுத்து பணத்திற்கு விற்பனைசெய். அதைவைத்துக் கொண்டு அடியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து மகிழ்வி. இங்ஙனம் புரிந்துகொண்டு மனப்பிணி உடற்பிணி யிரண்டுமற்று நூறுண்டு வாழ்ந்த பின்னர் உங்களிருவருக்கும் எனது லோகம் தருவேன். அடியார்க்கு விசே டமாக அன்னம்கொடு. அதற்கு மேற்பட்ட அறமில்லையென்று அறிந்து எப்பொழுதும் சோம்பரின்றி அன்னத்தையே கொடு" என்று அருளினர். அவ்விருவரும் பெருமானது தெளிவுற்ற சொற்களைக்கேட்டு ஆச்சரியப்பட்டு ஆகமகிழ்ந்து மீண்டும் பெருமானை வணங்கித்துதித்துவிட்டு வீடுசென்றனர்.

வீட்டின் மத்தியில் ஓர் பெரிய அரிசிமூட்டை கிடந்தது. அதைக் கண்ணுற்றதும் அவ்விருவரும் அளவுகடந்த மகிழ்ச்சியடைந்து அதை நற் பீடமொன்றிலேற்றிச் சந்தனம் முதலானவற்றால் பூசைசெய்து வலம்சுற்றி வணங்கிப் பின்னர் அதனின்று போதுமான அரிசியைஎடுத்துப் பெருமான் பணித்தமுறைப்படி யாவற்றையும் செய்தார். இந்த அதிசயத்தைக் கேள்வி யுற்று சனங்களெல்லாம்கூடி, யாவையும் கண்டு, வியப்புடன் இறைவனது அன்பரிடத்தேயுள்ள திருவருளைப் போற்றினர். செல்வமிழந்தவர் ஆலவா யுடையானையண்டி மீண்டும் செல்வங்களைப்பெற்றுச் சுகமாகவாழ்கின்றனர். அடியார்க்கு நல்லானும் அவரது மனைவியாரும் அற்புத மூட்டையினின்றும் அரிசியெடுத்து இறைவனுக்கும் அடியார்க்கும் அமுதுசெய்வித்தனர். அரி சியை விற்றுப் பணம்பெற்று நெய், பால், தேன் முதலிய பண்டங்களையும் வாங்கி அடியார்க்கு மகிழ்வுடன் தந்தனர். அடியாரின் மிச்சத்தையே புசித்து வலிமையும், அறிவும், ஆரோக்கியமும் பெற்றுச் சீருடன் வாழ்ந் தனர். அன்னக்கொடைக்கு மேற்பட்ட கொடை உண்டானதுமில்லை உண்டாகப்போவதுமில்லை யென்பதுதான் சாத்திரங்களின் உட்கருத் தென்று அவர்கள் உணர்ந்து, அக்கொடையிலேயே வாழ்நாள் முழுதும் ஈடுபட்டு, நற்குணமுள்ள புதல்வர் பேரன்மாருடனும் வேலைக்காரருடனும் வாழ்ந்து இறுதியில் பெருமானது சாரூப்பியத்தையடைந்தனர்.

அடியார்க்கு நல்லானது மெய்யன்பைக்கண்டு அவனுக்கு உலவா மூட்டையருளிய ஆலவாய்நாதனுக்கு வணக்கம்.

இறைவனது இந்த மூப்பத்தெட்டாம் திருவிளையாடல் துயரை நீக்கி செல்வத்தையளிக்கும்.

நாற்பத்தைந்தாவது அத்தியாயம்.

வைசிய குழந்தைக்கு மாமனுக வருதல்.

முன்னொருகாலத்தில் மதுரையில் தனபதிசெட்டியார் என்று பெருஞ் செல்வம் படைத்த ஓர் வணிகர் இருந்தார். மிகத் திறமையுடன் வாணிபம் நடத்தி மென்மேலும் செல்வமீட்டிச் சுசீலை என்ற உத்தமமனைவியுடன் அறவழிகளில் ஒழுகிவந்தார். முன்செய்த வினையின் பயனால் அவருக்குப் புதல்வப்பேறு ஏற்படவில்லை. ஆனதால் செட்டியார் தனது தங்கையின் குழந்தையொன்றை எடுத்துத்தத் தன் மகனுகவே கருதிவளர்த்தார்.

ஒருநாள் தங்கை கோபத்துடன் வந்து தமையனை நோக்கிக் குழந்தையில்லாத பாவி நீ. என்னுல்தான் உனக்குக் குழந்தை" என்று கூறினுள். இக்கடுஞ் சொற்களைக்கேட்ட செட்டியார் மிகவும் மனவருத்தப்பட்டு வரப்போகும் பிறவியிலாவது தனக்குப் பிள்ளைப்பேறு கிடைக்கட்டுமென்று நினைத்துத் தவம்புரிவதில் நாட்டங்கொண்டார். உடனே தழுத்தனமடைந்த அவர் மருமகக் குழந்தைக்கு வீடுமுதலான சொத்துயாவற்றையும் கொடுத்துவிட்டு மனைவியுடன் காட்டுக்குப்போயினர்.

செட்டியார் சென்றதும், அவரது பங்காளிகள் அனைத்தையும் பறித்துக்கொண்டு தங்கைக்கும் மருமகனுக்கும் சாப்பாட்டுக்குக்கூட ஒன்றும் தரவில்லை. அவள் கோபங்கொண்டு தாயாதிகளை மறித்தாள். வலுத்தோரின் சார்பு அவர்களுக்கிருந்தமையால் அவர்கள் அவளையடக்கியடித்து நிலம் வீடு நகை ரொக்கம் முதலான எதிலும் அவளுக்கும் குழந்தைக்கும் ஒருதுளிகூடக் கொடுக்கவில்லை.

பின்னர் தங்கையானவள் தெய்வ உதவியைக்கொண்டுதான் பங்காளிகளை வெல்லமுடியுமென்று தெளிந்து சோமசுந்தரப்பெருமானது திருவாலயம் சென்று பொற்றூமரைத் தீர்த்தத்தில் குழந்தையை நீராட்டித் தானும் நீராடிப் பெருமானது திருவடிகளில் அதிகமான அன்புகொண்டு புனிதமான ஐந்தெழுத்து மந்திரத்தை அடிக்கடி செபித்தவளாய் மூர்த்தியின் முன்பு குழந்தையை தொழச்செய்து, 'கருணைக்கடலே! அறவழியை நிலைநாட்டுபவரே! இறைவனே! என்னைக் காத்தருளும்" என்று மொழிந்து கொண்டு தானும் தொழுது அப்படியே கண்ணயர்ந்துவிட்டாள். அப்பொழுது அவளது கனவில் இறைவன் பிராமணவுருவத்தில் தோன்றிப் "பெண்ணே! எழுந்திரு! குழந்தையுடன் வீட்டுக்குப்போ! பங்காளிகளின் வீட்டிற்குள் தைரியமாய்ப் புகுந்து சமையலறையருகே சென்று சமையல் செய்யக்கூடாதென்று மறியல்நடத்து. அதன்மூலம் அவர்களை வழக்கிற்கிழு. அவர்களால் பிடுங்கப்பட்டிருக்கும் உனது தமையனரின் வீடு முதலானவற்றை நான் வழக்கில் வென்று மீட்டித்தருகின்றேன்" என்று மொழிந்து மறைந்தார். அந்த மங்கை உடனே விழித்து வியந்து உரோமம்

சிலிர்ப்ப, அதிசயக்கன்வை நினைந்து, இன்பக்கண்ணீர் சொரிந்து, மீண்டும் மீண்டும் மூர்த்தியை வணங்கிக் குழந்தையை யெடுத்துக்கொண்டு தனது காரியம் நிறைவேற வேண்டுமென்று இறைவனிடம் வேண்டிக்கொண்டு தான் குடியிருக்கும் வீட்டிற்குச் சென்றாள்.

மறுகாட்காலையில் எழுந்தவுடன் குழந்தையைக்கூட்டிக்கொண்டு கோயிலுக்குப்போய், இறைவியையும் இறைவனையும் முறைப்படி தொழுது, பங்காளிகளது வீடுகளுக்குச் சென்று இறைவன் சொல்லியருளிய வண்ணம் உமையுடன் கூடிய அவரை மனத்தில் நினைந்து சிறிதும் அச்சமின்றிச் சமையற்கட்டுகளுக்கு மூன்பு சமையல் செய்யக்கூடாதென்று மறித்தாள். அனேகம்பேர்கள்கொண்ட தாயாதிகள் ஒன்றுசேர்ந்து, அவளையும் குழந்தையையும் பிடித்துத்தள்ளி, அதட்டி, மூரட்டுத்தனமாக நீதிமன்றத்திற்கு இழுத்துக்கொண்டுபோய்க் கடுஞ்சொற்கள் பேசி கைகளாலும் கால்களாலும் அடித்தும் மிதித்தும் அவளைக்குறைவுபடுத்தினர்.

அப்பொழுது அன்பரின் துயர்தீர்க்கும் முழுமுதற் கடவுளான கடம்பவனப்பெருமான் மிகப் பரிவுடன் உதவியற்று நிற்கும் அந்தக் குழந்தையினது மாமன் வேடத்தில் கிழச்செட்டியாராக, உடல் கடுங்கிக்கொண்டு, தங்கையும் மருமகனு மிருந்தவிடத்திற்கு வந்து, அவர்களைக் கட்டிக் கொண்டு, பார்த்தோர் உள்ளமுருகவழுதார். குழந்தை மாமனைக்கண்டதும் கண்ணீர் ததும்ப மகிழ்ச்சியடைந்தான். தங்கை தமையனரிடம் பங்காளிகளின் செயல்களை விவரமாக எடுத்துரைத்தாள். உடனே மாமன் வருத்தம் வேண்டாம். நான் வந்துவிட்டேன். பொருமை பூண்ட இந்தக் கயவர்களை மன்றத்தில் தோற்கடித்து வழக்கில் உங்களுக்கு வெற்றியுண்டாக்குவேன்" என்று தேறுதல் கூறி அவர்களிருவருடன் நீதிமன்றத்துக்குச்சென்றார். அவரைப் பார்த்ததும் பங்காளிகட்கு உள்நடுக்கம் கண்டது. ஆயினும் வெளியில் உறுதியுடையவர்போன்று காட்டிக்கொண்டு "இவர் எங்களது தாயாதியல்ல" என்று மன்றத்தாரிடம் தெரிவித்தனர். அவர்கள் அதைக்கேட்டு அவரிடம் 'முதலில் நீர் மாமன்தான்என்று ருசுப்படுத்த வேண்டும். பின்னர் வழக்குமுழுதையும் ஆய்வோம்' என்று மொழிந்தனர். அங்ஙனமே செய்கின்றேன் என்று மாமன்வேடத்திலிருக்கும் சோமசுந்தர மூர்த்தி கூறி வீடுகள், நிலங்கள் முதலான சொத்துக்கள் யாவற்றையும் பற்றிப் பெயர்கள் அடையாளங்கள் முதலியவற்றைப் பங்காளிகள் நம்பும்விதமாக எடுத்துரைத்தார். அவற்றைக் கேட்டவுடனே தாயாதிகள் அரசனது தண்டனைக்கு பயந்து மறைந்துவிட்டனர்.

பின்னர் மாமனாக வினையாடுமிறைவன் மன்றத்தாரை நோக்கி இனிமையான சொற்களில் 'நீதியரே! இத்தப் பங்காளிகளின் நெறியற்ற தன்மையைக் கவனியுங்கள். எனது மருமகனை இந்தக் குழந்தையை நான் முன்னரே எனது புதல்வனாக எடுத்துக்கொண்டேன். அந்த ஏற்பாடு இந்தப் பங்காளிகளனைவருக்கும் தெரியும். அப்படியிருந்தும் பேராசையால் இந்தப்பொய் வழக்கைக் தொடர்ந்திருக்கின்றார்கள். அறிவாளிகளான மன்றத்தார் இதைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்" என்றார். செட்டியாருருவத்திலிருக்கும் பெருமானது இம்மொழிகளைக் கேட்டும், பங்காளிகள் சொல்லாமலும் தெரியாமலும் ஓடிவிட்டதைப் பார்த்தும், நீதியர், வியப்

பட்டந்து வயதால் தள்ளாடி நிற்கும் கிழவரை நோக்கிச் "செட்டியாரே! உமது பங்காளிகள் செய்த குற்றத்தை மன்னித்துவிடும். தங்கையையும் குழந்தையையும் கூட்டிக்கொண்டு உமது வீட்டிற்குச் செல்லும். புதல்வ னுக முறைப்படி நீர் எடுத்துக்கொண்ட இந்தப் பையனுக்கு உமது வீடு, நிலம் யாவற்றையும் கொடும்" என்று உரைத்தனர்.

உடனே கிழவர் தங்கையையும் மருமகனையுமிட்டுக்கொண்டு, மெதுவாகத் தனதில்லம் சென்று சொத்துக்களெல்லாவற்றுடன் அவர்களை அங்கே நிலைநிறுத்திவிட்டு மறைந்தருளினர். இங்ஙனம் மாமன் வேடத்தில் வந்து செருக்குகொண்டிருந்த பங்காளிகளை வழக்கில் வென்று, வைசிய குழந்தைக்கு வீடு முதலானவற்றைப் பெருமான் வாங்கிவைத்தார். அவர் மறைந்தற்குப்பின் கிழச்செட்டியார் சோமசுந்தரக்கடவுளே யென்று எல் லாச் சனங்களும் அறிந்துகொண்டனர். பாண்டியராசன் இந்த வரலாற் றைக் கேள்வியுற்று அவ்வீரண்டு சிவனன்பர்களையும் பேணி அவர்கட்கு கிராமம் முதலியன கொடுத்தான். சுந்தரேசப்பெருமான் அன்பரிடத்தே செய்யும் அருளைக்கண்டு, அனைவரும் அவரிடத்தில் அதிகமான அன்பைச் செலுத்தினர். அரசன் யாவரினும் விசேடமாக அன்புகாட்டி கோபுரம் முதலானவற்றைப் பொன்மயமாகவும் இரத்தினமயமாகவும் செய்வித்து, நாடோறும் காலையிலும் மாலையிலும் திருக்கோயிலுக்குச் சென்று பெரு மானைத் தொழுதான். தொண்டில் மகிழ்ச்சிகொள்ளும் ஆலவாயுடையான் அரசனுக்கு எராளமான செல்வங்களைத் தந்து சிறந்தகுணங்கள் நிறைந்த வரகுணன் எனும் புதல்வனையும் அளித்தார். பாண்டியன் புதல்வன் கிடைத் ததுபற்றி மொம்பவும் களித்து, வெகுகாலம் இராச்சியத்தையாண்டு இறுதி யில் சிவசாரூப்பியம் எய்தினன்.

இந்த மூப்பத்தொன்பதாம் திருவிளையாடல் எல்லாவித துன்பத் தையும் விலக்கும்.



நாற்பத்தாருவது அத்தியாயம்.

வரகுண பாண்டியனது பிரமகத்திப் பழியை யொழித்தல்.

வரகுணபாண்டியன் தந்தையால் தரப்பெற்ற பூமியையும் இராச் சியலக்குமியையுமடைந்து மற்றோர் மகாவிட்டுணுபோன்று விளங்கினன். வேதவித்தை வடிவமான சரஸ்வதித்தேவி காவில் இலங்க, மற்றோர் பிரம தேவன் போன்று மிளிர்ந்தான். உண்மையானவனும், எல்லாமறிந்தவ னும், புலன்களை வென்றவனுமிருந்துகொண்டு அரசரால் வணங்கப்பெற் றவனுய்ச் சிவபெருமான்போன்று தோன்றினன். வீரியத்தில் இந்திரனை யும், செல்வத்தில் குபேரனையும், பொலிவில் காமனையும். ஒளியில் சதிரவ னையும் ஒத்தவனுக விளங்கினன். தேர், யானை, புரவி, காலாள் என நால் வகைப்பட்ட படையுடன் கூடிப் பேறிறையாய் நீதி நெறியுடன் அரசியற் றினன். ஒவ்வொருகாலும் முதலில் தேவர்களின்தலைவனும், செல்வமனைத் தையும் பயக்குபவனும், தயர்யாவையுமகற்றுபவனுமான ஆலவாயுடையானை வணங்கிப் பின்னர் தான் வரகுணபாண்டியராசன் மற்றைக் காரியங்களைக் கவனித்தான்.

ஒருசமயம் அரசன் வேட்டைக்காகக் கானகமேகி, இங்குமங்கும் திரிந்து, பகற்பொழுது முழுதும் கழிந்துபோயிற்று. இரவில் நகரை நோக் கித் திரும்பவருகையில் அவனது குதிரை மிதித்து வழியில் படுத்திருந்த ஒரு பிராமணன் உயிர்துறந்தான். இதையறியாத அரசன் அரண்மனைக்கு வந்து இன்பமாகவிருந்தான்.

பொழுது புலர்ந்ததும் பிராமணர் கூடி அரண்மனை வாயிலில் அந்தப் பிரேதத்தைப் போட்டுக்கொண்டு கூக்குரல் செய்தனர். இதைக் கேட்ட அரசன் அருகிலிருந்த அமைச்சரிடம் இது என்னவென்று வினவி னன். அவர்கள் வெளியேவந்து, பிராமணர் கூறியதைக்கேட்டுச் சமாதா னமாகப் பேசி, அவர்களிடம் பணம், தானி முதலானவை கொடுத்துப் பிரேதத்தின் ஈமச்சடங்குகளை நடத்தச்சொல்லி அவர்களை அனுப்பிவிட்டு மனவருத்தத்துடன் அரசனிடம் நடந்தவற்றைக் கூறினர்கள். இதைக் கேட்டதும் அரசன் சித்தையிலாழ்ந்தான். இதுகண்டு அமைச்சரும் கவலை யால் வாடினர். உடனே சாத்திரங்களறிந்த புரோகிதர் வந்து அரசனது பழி நீங்குவதற்கு வழிகளை யுரைக்கத்தொடங்கி பசு, பூமி முதலிய பத்துத் தானங்கள் உடனே செய்யப்படவேண்டும். அகமர்ஷணம் (பாவந் தொலைக் கும்) முதலான மந்திரங்களைச் சொல்லி எள், நெய் இவற்றால் ஓமம் செய் தல்வேண்டும். ஆற்றின் கரையில் அன்னசாலைகளமைத்துப் பிராமணருக் கன்னம் போடவேண்டும். பசுக்களுக்குப் புல்லளித்தல், அதன் கொம்பு

நீரால் தெளித்துக்கொள்ளுதல், பசுவினது ஐம்பொருள்களை அருந்துதல், அரசமரத்தை வலம் சுற்றுதல் இவையாவையும் அரசன் செய்தல்வேண்டும். இங்ஙனம் நடத்தத் தவறுதாலேற்பட்ட அவனது பிரமகத்திப்பழி நீங்கு மென்றனர். அவர்கள் கூறிய இவையனைத்தையும் பழியைத்தொலைப்பதற் காக அரசன் உடனே செய்தான். அவ்வாறு செய்தும் கருநிறமான ஓர் நிழல் அவனை எப்பொழுதும் சுற்றிக்கொண்டே இருந்தது. அரசன் மிக மிகத் திகிலடைந்து இன்னது செய்வதென்று தெரியாமல் ஏங்கினான்.

இங்கு ஐயமொன்று எழுகின்றது. தேவேந்திரனது பிரமகத்திப் பழி அவன் ஆலவாயிலடிவைத்ததுமே பழம்பாவங்களுடன் தீர்ந்தது. அப் படியிருக்க எப்பொழுதுமே அங்கு குடியிருந்துவரும் வரகுணபாண்டியனது பழி என் தீரவில்லை? இதற்குப்பதில் என்னவென்றால் பொதுவாக வேறு இடங்களில் செய்யும் பாவம் புண்ணியத்தலங்களில்தீரும். புண்ணியத்தலங் களில் புரியும் பாவம் சிவத்தலங்களில் நீங்கும். சிவத்தலங்களில் செய்யும் பாவம் ஆலவாய்தலத்தில் நீங்கும். ஆலவாயில் செய்யும் பாவம் அனுபவித்துத் தான்தொலையும். துவாதசாந்த தலமான ஆலவாயில்செய்யும் புண்ணியத் திற்கோ பாவத்திற்கோ முடிவென்பது கிடையாது. அங்ஙனமிருந்தபோதி லும் எல்லையற்ற கருணைவடிவமான ஆலவாயுடையானது திருவருளால் வரகுணனது பழி நீங்கிற்று. சிவபெருமானதருள்பெற்றவர்க்கு மூவ் வுலகிலும் ஆகாத காரியமேது! ஆதலால் ஒவ்வொருவரும் அவரையண்ட அவரது திருவருளைப் பெறவேண்டும். சோமசுந்தரப்பெருமானது திருவரு ளால் சித்திகள் யாவற்றையும் பெறலாம். வேறு இடங்களில் வெகுகாலம் பெரும் தவம்புரிந்து நிறைவேறக்கூடிய விருப்பங்கள் குறுகிய காலத்தில் சிறுதவத்தால் ஆலவாய்த்தலத்தில் கைகூடும். சிற்க.

புரோகிதர் கூறிய பிராயச்சித்தங்களால் பாண்டியனது பழி தீரா திருக்கையில், கருணையோடு சிவனன்பர் ஒருவர் சொல்லியதன்பேரில் அவன் சோம சுந்தரமூர்த்தியைப் பிரதக்கிணம் செய்யத்தொடங்கி, அதி லேயே மூற்றிலுமீடுபட்டு, இரவும் பகலும் சுற்றிப் பத்துநாட்களிலேயே ஆயிரத்தியெட்டு சுற்று சுற்றிவிட்டான். அதானது தம் பெருமானை வணங்கித் தொழுது பாடி அவனது முன்னிலையில் நின்றான். அன்பர் துயர்தீர்க்கும் பெருமான் அவனிடமிரக்கப்பட்டு ஆகாயவாணிமூலம் 'வரகுணபாண்டி யனே! புண்ணியபாவங்களின் பயனைக் கூறுகின்றேன், கேள். நீ செய் திருக்கும் பிரமகத்திப்பழியின் பயனுக்கு முடிவே கிடையாது. அது போலவே நீ செய்திருக்கும் லிங்கப்பிரதக்கிணப் புண்ணியத்தின்பயனுக்கும் முடிவில்லை. அசுவமேதம் முதலான புண்ணியங்களின் பயன் அவ்வப் போது ஏற்படும். லிங்கப்பிரதக்கிணத்திற்கு நிகரான புண்ணியங்களே கிடையாது. மேரு, மந்தரம், கைலாயம் முதலான மலைகளிலும், சிதம்பரம் முதலிய சிவத்தலங்களிலுமுள்ள லிங்கங்களில் தானே இருக்கைகொள் கின்றேன். ஆனதுபற்றி இவையனைத்தும் எனது லிங்கங்களே. அவற் றுள் திருவிடைமருதூரிலுறையும் மகாலிங்கமூர்த்தி உடனே மாபாவத்தை யொழித்துப் புண்ணியத்தின் பயனையளிக்கவல்லது. அந்தத்தலத்திலேயே உனது பிரமகத்திப்பழியைத் தீர்க்கவிருக்கின்றேன். உன்னோடு போருக்கு வரும் சோழராசனை எனதருளால் வென்று நீ இடைமருதூருக்கு வருவா யாக'' என்று பணித்தார். இறைவனது இம்மொழிகளைக்கேட்டு அரசன்

லியப்பெய்தி ஹ்தெழுத்துமந்திரத்தைச் சொல்லி திரும்பத்திரும்ப வணங்கி இன்பக்கடலில் மூழ்கியவனாய் அரண்மனை சென்றான்.

பின்னர் சோழனது வருகையைப் பாண்டியன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில் அவ்வரசன் காஞ்சிநகரினின்று புறப்பட்டுப் படையுடன் போருக்கு வந்தான். நெஞ்சுறுதியும் ஆலவாயானிடத்தே அசைக்க முடியாத அன்புங்கொண்ட பாண்டியராசன் எதிர்சென்று பகைவனை முறியடித்தான். சோழன் இவனது போர்முறையைக்கண்டு சுந்தரேசப்பெருமானைப் புகழ்ந்துகொண்டு, தனது படைகளுடன் அதிவேகமாகக் காஞ்சிக்குத் திரும்பினான். வரகுணபாண்டியன் அவனைப் பின்தொடர்ந்து செல்வதுபோல் பழிகளைத்தீர்க்கும் பெரும் தலமாகிய திருவிடைமருதூருக்குச் சென்றான். அன்று தைப்பூசம். பாண்டியராசனுக்குப் புண்ணியதலமும் புண்ணியகாலமும் ஒன்றுசேர்ந்தன. அவன் காவேரியாற்றில் நீராடி மகாலிங்கமூர்த்தியைக் காண்டற்பொருட்டுத் திருவாலயத்திற்குப் போயினான். இடைவிடாது தொடர்ந்துகொண்டிருந்த பிரமகத்தி நிழல் அவனை விட்டுவிட்டு மதிலிற்கு வெளியே நின்றது. அரசன் பலநீங்கியவனாய் மகிழ்ச்சியுடன் மகாலிங்கமூர்த்தியை வணங்கி "உமையாரின் காதனே! கருணைக்கடலே! பழியால் துயருறும் என்னைக் காத்தருளவேண்டும். நீரே எனக்குத் தஞ்சம். வேறு யாருமில்லை" என்று விண்ணப்பம் செய்துகொண்டான். உடனே ஆகாயத்தினின்று, பாண்டியராசனே! நீ என்பாலன்புகொண்டவன். அதேபோன்று பிராமணரிடமும் உனக்கு அன்புண்டு. ஆயினும் முன்வினைப்பயனால் உனக்கு இந்தப் பிரமகத்திப்பழி நேர்ந்தது. அது இக்கணமே தீர்ந்துவிட்டது" என அரசனுக்கின்பமளிக்கும் சொற்கள் கிளம்பின. பாண்டியன் அவற்றைக்கேட்டுமகிழ்ந்து, மறுபடியும் இறைவனை வணங்கி, நிழற்பிடிப்பினின்றும் விடுபட்டவனாய் மேற்குவாயில் வழியாக வெளியேறிக் கருங்கல்லால் திருமதில்களைக் கட்டுவித்துக் கோபுரமும் கட்டிப் பொன்னாலும், இரத்தினத்தாலும் கோயிலையழகுபடுத்தி மதுரையம்பதி வந்துசேர்ந்தான்.

வந்ததும் இறைவனும், இறைவர்க்கிறைவனும், தனக்கிறைவனும் அறிவுவடிவனும், உலகிற்குகாதனும், இன்பமயமனுமான ஆலவாயுடையானுக்கு முத்துப்பதித்த மேற்கட்டியும், அற்புதமான குடைகளும், தங்கப்பிடிவைத்த சாமரங்களும், பட்டாடைகளும், பலவகையான திருவாபரணங்களும் காணிக்கையாகக் கொடுத்தான். இலிங்கத்திற்குக் கவசமும் இரத்தினமயமான பிரபையும் செய்துவைத்தான். பின்னர்ப் பெருமானைத் தொழுது வணங்கி பல்வேறுபட்ட தோத்திரங்கள் சொல்லிப்பாடி அரண்மனை சென்று மனக்கவலை நீங்கியவனாய் இன்பமாக வாழ்ந்தான்.

எப்பொழுதும் புராணம் கேட்கும் வழக்கமுடைய வரகுணபாண்டியன் வேதசாத்திரங்களில் சிவலோகம்தான் மிகச்சிறந்ததாகக் கூறப்பட்டிருக்கின்றதென்றறிந்துச் சிவபெருமானது ஆக்ஞைபெற்று இம்மையிலேயே சிவலோகத்தைக் காணவேணுமென்று அவாக்கொண்டு ஒரு சிவராத்திரியன்றுச் சோமசுந்தரமூர்த்தியையணுகி "கடம்பவனநாதனே! கருணைக்கடலே! உண்மையறிவின்பவடிவனே! இலிங்கவுருவிலிருக்கும் சதாசிவப்பெருமானே! பிரமாண்டத்திற்குள்ளே யிருப்பதும், என்றுமுளதும், பிர

மத கணங்கள் நிறைந்ததும், பேறுகளையளிப்பதுமான உமதுசிவலோகத்தை இங்கேயே எனக்குக் காண்பித்தருளவேண்டும்'' என்று வேண்டினன். உடனே அன்பர்க்கெளியனான பெருமான் மனங்கசிந்து, அவனுக்கு இப் பூலோகத்திலேயே மிக அற்புதமான சிவலோகத்தைக் காண்பித்தார். பாண்டியராசன் அவ்வுலகில் அப்சாமங்கையர் வாழும் அதிசய விமானங்களையும், கற்பகத்தருக் கானகங்களையும், காமதேனு மந்தைகளையும், சிந்தாமணி மலைகளையும், அமுதம் நிறைந்த ஏரிகளையும், மகாமேருபோன்று விளங்கும் கணகாதர்களின் மாளிகைகளையும், கோபுரங்களோடு கூடி இரத்தினம் பொன் இவற்றால் அழகுபடுத்தப்பட்டிருக்கும் கோட்டை மதில்களையும் பார்த்துக்கொண்டு உள்ளே சென்றுச் சுடர்மயமான சிவபெருமானது விமானத்தைக்கண்டு வியந்து நின்றனன். உடனே நந்திகேசுரர் வந்து கையைப் பிடித்துக்கொண்டு மெய்மறந்திருக்கும் அரசனுக்குப் பெருமானைக்காட்டினார். அப்பொழுது பெருமான் சுடர்மயமான விமானத்தின் மத்தியில் முத்தாரம், தோள்வளை, கைக்காப்பு முதலான அணிகள் பூண்டு இடப்புறமிருக்கும் உமையாரைப்பார்த்துச் சிறுநகை செய்துகொண்டு, இருபக்கங்களிலும் விநாயகரும், முருகனும் அமர்ந்திருக்கப் பிரம்மன் மகாவிட்டுணு முதலான தேவரும் கணத்தலைவர்களும் வணங்கிக்கொண்டிருக்க, அரியிருக்கையில் வீற்றிருந்தார். அவரைக் கண்டதும் அரசன் அன்பாற் பரவயமடைந்துத் துதிகள் பாடி, வணங்கிப் பெருமானிடம் ''இறைவனே! எல்லையற்ற புண்ணியங்கள் செய்து பெறுதற்குரிய உமது லோகத்தைக்கண்டு பேறுபெற்றேன். பேறுபெற்றேன். பேறுபெற்றேன். உமது மூர்த்தியைத் தொழுததாலேயே இவையனைத்தையும் பார்க்கக் கிடைத்தது. ஆனந்தசுந்தரக்கடவுளே! உமது இலிங்கத்தைப் பூசித்தற்கு எனக்கு அருள் புரியும்'' என்று வேண்டிக்கொண்டதும் சிவலோகம் மறைந்துவிட்டது. வரகுணபாண்டியன் ஆச்சரியமடைந்து இலிங்கத்திலுறையும் அவரை வழிபட்டு அங்குக் கூடியிருந்த அன்பர்களிடம் தான்கண்ட காட்சிகளைத் தெரிவித்தான். அவர்களனைவரும் வியப்பெய்தி சோமசுந்தரப்பெருமானைப் போற்றினர். மூவுலகிலும் சனங்கள் இந்த நிகழ்ச்சியைக் கேள்வியுற்று, சிவலோகத்தைக்காட்டிய தங்களது சுந்தரமூர்த்தியையும், அந்த லோகத்தைக் காணக் கொடுத்துவைத்த பாண்டியராசனையும் புகழ்கின்றனர். அதுமுதற் கொண்டு ஆலவாய்ப் புண்ணியத்தலமானது பிரிதெதும் பெறுத பூலோக சிவலோகமெனும் பெயரைத் தாங்குகின்றது. வரகுண பாண்டியனது பிரமகத்திப் பழியைத் தீர்த்து அவனுக்குச் சிவலோகம் காட்டியருளிய ஆலவாயடையாருக்கு வணக்கம்.

கடம்பவனநாதனது இந்த காற்பதாம் திருவிளையாடல் கேட்போரது பிரமகத்திப்பழியைத் தீர்த்து, மற்றைப் பாவங்களையுமகற்றிப்பெரும் வெற்றியையும் செழிப்பையும் பயக்கும்.

நாற்பத்தேழாவது அத்தியாயம்.

விறகு விற்றல்.

வரகுணபாண்டியன் பாண்டிநாட்டரசனாக வீருக்கையில், சோழ வேந்தனாலனுப்பப்பெற்ற இசைவாணனொருவன் பாண்டியனிடம் பரிசுபெறும் நோக்கத்துடன் மதுரைப்பதிக்கு வந்தான். அவனதுபெயர் ஏமநாதன். யாழுடன் சேர்ந்த அவனது இன்னிசையைக்கேட்டு எல்லோரும் வியந்தனர். ஏமநாதன் அரசனிடம் சென்று அற்புதமாகப் பாடினான். பாட்டைக்கேட்டு மகிழ்ந்து அரசன் இசைவாணனுக்கு ஆடை ஆபரணம் முதலானவை கொடுத்துப் பெருமைப்படுத்தி நகரிலேயே ஓர் இடம் பார்த்துத் தங்கியிருக்கும்படி உத்தரவிட்டான். அதற்கியைந்து அவன் ஓரிடத்தில் தனது பின்பாட்டுக்காரருடன் தங்கினான்.

அரசன் உடனே ஆட்களனுப்பித் தனது பாணனான பத்திரன் என்பவனை வரவழைத்துப் "பத்திரனே! யாழுடன் ஓர் இசைவாணன் வந்திருக்கின்றான். அவனை உன்னால் வெல்லமுடியுமா? யோசித்துச்சொல் வருத்தமடையாதே" என்று கூறினான். அதற்குப் பத்திரன் 'வேந்தனே! வெல்லமுடியுமா அல்லது முடியாதாவென்று என்னைக் கேட்கின்றீர். அன்பர்க்கருளும் சுந்தரமூர்த்தி எனக்குமிருக்கின்றார். செருக்குற்ற அந்த இசைவாணனை வென்று விரட்டியடிக்கின்றேன். அவனது யாழையும் அவையில் உடைத்தெறிகின்றேன் என்றான். அரசன் இப்பதிலுரையைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து இன்றுபோ" என்று பத்திரனுக்கு ஆக்கினை செய்தான்.

பத்திரன் திரும்பிச்செல்லும் வழியில் ஏமநாதனுடன் கூட வந்திருக்கும் பாட்டுக்காரர்கள் தெருக்களில் பாடிக்கொண்டிருந்ததைக் கேட்டான். உடனே அச்சத்தால் மனங்கலங்கி 'என்னசெய்யப்போகிறேன்' என்று சோர்வுடன் ஆலவாயுடையானை நெஞ்சத்தில் நினைந்து வணங்கித் "தேவருக்கெல்லாம் தேவனே! அடியாரது துயரை நீக்குபவனே! கருணைக் கடலே! இந்த எனது இன்னலைப் போக்கியருளும்" என்று வேண்டிக் கொண்டு வீடு போய்ச்சேர்ந்தான்.

சிறிதுநேரத்திற்கெல்லாம் கடம்பவனநாதன் ஓர் கிழட்டு விறகுக் கட்டுக்காரன் கோலத்தில் தலையில் விறகுக்கட்டும் தோளில் யாழுமாகக் கிழிந்த தலைத்துணியுடன் பல்லும் தலையுரோமமு முதிர்ந்து வீதிகளில் விறகு, 'விறகு' என்று கூவிக்கொண்டு காட்சியளித்தார். பின்னர் ஏமநாதன் இருக்கும் வீட்டிற்கு வந்து, விறகுக்கட்டை யிறக்கிவைத்துவிட்டு, நாரதர், தும்புரு இவர்கட்கு மேம்பட்டு ஒப்பற்றிருக்கும்படியாய் மற்றை இராகங்களுடன் காந்தார இராகத்தைப் பாடினார். குரலைக்கேட்டு இது யாரது என்று தெரிய விரும்பி வெளியேவந்து பார்க்கவே விறகுக்கட்டுக்காரனது என்று தெரிந்து தாழ்மையாக 'நீர் யார்' என்று கேட்டான்.

அதற்கு விறகாளர் தன்புற்றவர்போல் 'ஐயா! இப்பொழுது என்னையா கேட்கிறீர்! நானு, பாட்டுக்காரருள் தலைசிறந்து நிற்கும் பத்திரன் என்பவ ரது அடிமை'' என்றார். இதைக்கேட்டதும் ஏமநாதர் மனமுடைந்து 'சிவனே' என்று சொல்லிக்கொண்டு வீட்டிற்குள் சென்று தனக்குள்ளா கவே ஆய்ந்து 'மாணவனது இசையே இங்ஙனமிருக்குமாகில், ஆசிரியனது இசை எங்ஙனமிருக்கவேண்டும்! ஆதலால் உடனே இங்கிருந்து போய்விட வேண்டும்'' என்ற முடிவிற்குவந்து, தனதுபண்டங்களைச் சுருட்டிக்கொண்டு கூட வந்தோருடன் ஒருவருக்கும் தெரியாது ஓடிவிட்டான். சுந்தரேசப் பெருமான் இவ்வாறு விளையாடிவிட்டுப் பத்திரனிடம் அவனது கனவில் தோன்றி வந்திருந்த பாட்டுக்காரன் ஓடிப்போன செய்தியை அறிவித்தார்.

பத்திரன் காலையில் எழுந்து சோமசுந்தரமூர்த்தியைத் தொழுது, அரசனிடம் சென்று பெருமையுடன் 'அந்தப் பாட்டுக்காரரை வரவழையுங் கள்' என்று விண்ணப்பித்தான். உடனே அரசன் ஏமநாதனைக் கொண்டு வர ஆட்களை அனுப்பினன் அவர்கள் அவனது சாலையில் அவன் இல்லா தது கண்டு, விரைவுடன் அரசனிடம் வந்து ''வேந்தே! அந்தப் பாட்டுக் காரன் பயந்து ஒருவருக்கும் தெரியாமல் ஓடிவிட்டான்'' என்று தெரியப் படுத்தினர். அதுகேட்டுப் பாண்டியராசன் அளவிறந்த மகிழ்ச்சியடைந்து, தனது இசைவாணனான பத்திரனையழைத்துச் சிறந்த ஆடைகளையும் ஆப ரணங்களையுமணிவித்து, அவனை யானைமேலேற்றி, நகர் வலம்வந்து, தனது பொக்கிஷச்சாலையிலுள்ள தனமனைத்தையும் அவனுக் குக்கொடுத்தான். பின்னர் பத்திரன் யானைமீதேறி தனது வீட்டுக்குச் சென்றான். கர்ப்பூரம் காட்டப்பட்டது. கட்டியக்காரர் கட்டியம் கூறினர். அவனது பேற்றை யாரே உரைக்கவல்லவர்? அப்பொழுது தனக்குக்கிடைத்த ஆடைஆபரணம் முதலான யாவற்றையும் பத்திரன் இறைவனது முன்னிலையில் வைத்து ஒருபங்கைக் கோயிலுக்கும் மற்றைப்பங்கை வேதியர்க்குமளித்தான். இது தவிர அவன் எப்பொழுதும் தனது நிலைமையைக் கவனியாமலே கொடை கள் கொடுத்தான்.

பத்திரனுக்கருளிய எம்பெருமானைச் சனங்கள் வியப்புடன் போற் றினர்.

இதுபெருமானது நாற்பத்தொன்றும் திருவிளையாடல். இன்னல் களைப் போக்கிச் செல்வங்களைப்பெருக்கும்.



நாற்பத்தெட்டாவது அத்தியாயம்.

சேரனுக்கு நிருபம் கொடுத்தல்.

பாணரினத்தைச்சேர்ந்த அந்தப்பத்திரன் எப்பொழுதும் சிவபெருமானையே நினைந்துகொண்டு, அரசனைப் பார்ப்பதை நிறுத்தி, மூர்த்தியினது முன்னிலையில் பாடிக்கொண்டிருந்தான். இசைவடிவினனும் இசையில் களிப்பவனும், இசையினருள் முதல்வனுமாயிருந்தும் அடியார்க்கெளியனும், மலைமகள் மணவாளனுமான சுந்தரேசப்பெருமான் பத்திரனது கண்டத்தினின்று பெருகும் இராகத்திலீடுபட்டு, அவனருகிற்சென்று, மகிழ்ச்சியுடன் பாட்டைக் கேட்டுக்கொண்டேயிருந்தார். அவன் பாடி முடித்து வெளியேற நினைக்கையில் எம்பெருமான் ஒருசமயம் அவன்முன்பு பணத்தை வைத்தார், மற்றொரு சமயம் அரசனிடமிருப்பதைக்காட்டிலும் மேலான ஆபரணங்களை வைத்தார், இன்னொரு சமயம் இரத்தினமாலையையும் பொன்னையும் வைத்தார். இதுமாதிரியாக தங்கக்கிண்ணி, இரத்தினங்கள் பதித்த கண்ணாடி, வெள்ளிப்பாத்திரங்கள், செப்புப்பாத்திரங்கள் முதலான பண்டங்கள் யாவற்றையும் பெருமான் பத்திரனுக்குக் கொடுத்தார். ஒவ்வொரு சமயத்திலும் அவன் அவற்றை வீட்டுக்குக் கொண்டுபோய் உவகையுடன் மற்றைப் பாட்டுக்காரர்க்கு கொடுத்தான்.

இவ்வாறு நடந்துகொண்டிருக்கையில் பத்திரனது கையில் ஒன்றுமில்லாமற்போய்விட்டது. என்றாலும் அரசனிடம் பணத்திற்குச் செல்லவில்லை. எப்போதும்போல் அவன் இறைவனது முன்னிலையில் பாடி அவரைக் களிப்பித்தான். அங்ஙனமவன் செய்வதைக்குறித்து அவனது பாட்டுக்காரர்கள் புகழ்ந்தனர். அவர்களுக்கு கொடுப்பதற்குத் தன்னிடமொன்றுமில்லையேயென்ற எக்கத்துடன் அவன் ஒருசமயம் உறங்கிவிட்டான். சிவபெருமான் அவனது மெய்யன்பையும், கொடையாளித்தன்மையையுங்கண்டு, அவனது கனவில் தானே தோன்றி "பத்திரப்பாணனே! நீ அளவிற்கு மிஞ்சிய கொடையில் உன்னை ஈடுபடுத்திக்கொண்டிருக்கின்றாய். அரண்மனையிலுள்ளேயிருக்கும் பொருள்களனைத்தையும் ஒவ்வொரு நாளில் ஒவ்வொன்றாக யாருக்கும் தெரியாமல் உனக்குக் கொடுத்தேன். இரத்தினம், பொன், வெள்ளி எல்லாம் வெளிவந்துவிட்டது. பொக்கிஷ அலுவலாளிகள் கூப்பாடு போடுகின்றனர். வைத்திருந்த விலையுயர்ந்த பொருள்கள் யாவும் ஒவ்வொன்றாய்க் காணமற்போயின. பெட்டிகளும் பூட்டியபடி இருக்கின்றன. யாரோ மாயதிருடன் வந்துபோகின்றான். அவனை நமக்குத் தெரியவில்லை. ஒருவேளை சுந்தரேசப்பெருமானுக்குத் தெரியுமோ என்னவோ என்றெல்லாம் பேசிக்கொள்கின்றனர். இந்த நிலைமையில் நான் இன்னும் ஏதாவது எடுத்துக்கொடுத்தால் உன்னைக் கண்டுபிடித்து அரசன் இடைஞ்சல் விளைவிப்பான். தற்சமயம் சேரராசன்தான் சிவனடியார்களைப் பேணுகின்றான். விரைந்து சென்று இந்த நிருபத்தை அவனிடம் கொடு" என்று திருவாய்மலர்ந்து, ஆனையெனும் விருத்தத்தில் வரையப்பெற்ற ஓர்

கடிதத்தை பத்திரனிடம் கொடுத்தார். "உமது தொண்டைவிடுத்து நான் செல்லமாட்டேன்" என அவன் விண்ணப்பித்தான். "நான் பணிக்கும் பொழுது, நீ போகத்தான் வேண்டும்" என்றருளினர் இறைவன். உடனே, பெருமானது ஆணையை மீறுதல் பாவமென்று அவன் உணர்ந்து, எவருக்குமே தெரியாமல், சேரமன்னரைக் காணச்சென்றான்.

சில நாட்களில் அவன் அரசனது நகரையடைந்து, நெற்றிமுதலான இடங்களில் நீறு பூசியவனாய்த் தண்ணீர்ப்பந்தலொன்றில் ஓர்மூலையில் நின்றுகொண்டிருந்தான். அங்குள்ள சனங்கள் மேனி முழுதும் விபூதி பூசியிருந்த அவனை உற்றுநோக்கினர். இதற்குள்ளாகச் சோமசுந்தரக்கடவுள் சேரவேந்தனின் கனவிற்றோன்றித் தனது அடியானொருவன் வருவானென்றும் அவனை மகிழ்விக்கவேண்டுமென்றும் ஆக்ஞை செய்தார். உடனே அரசன் பரபரப்புடன் எழுந்து, அமைச்சரையழைத்துக் கனவிற் கேட்டதைச் செப்பி, சிவனடியான் யாராவது நகருக்குப் புதிதாக வந்திருந்தால், அவனைத் தன்னிடம் கூட்டிவரும்படியாகச் சனங்களுக்கு உத்தரவிட்டான். அவர்கள் உடனே சென்றுதேடி தண்ணீர்ப்பந்தலருகே மோசமான கோலத்திலிருக்கும் பத்திரனைக்கண்டு அரசனிடம் தெரிவித்தனர்.

உடனே சேரராசன் கால்நடையாய் அவனிருக்குமிடம் சென்றான். அப்பொழுது அவன் கண்களை மூடிக்கொண்டு சிவபெருமானை நினைந்து பாடிக்கொண்டு தன்முன் வந்து நிற்கும் அரசனைக்கூடப் பாராமல் சிலிர்த்த உரோமங்களுடன் இன்பக்கடலில் ஆழ்ந்திருந்தான். நோயுற்றவனையினும், வறுமையுற்றவனையினும், பசியுற்றவனையினும் எம்பெருமானிடத்தே ஒருவனது உள்ளம் பற்றிவிடுமேயாகில் அவனே புண்ணியம் செய்தவன் என்று மனதாற் புகழ்ந்துகொண்டு உடம்பு முற்றிலும் நீறு பூசிய அந்தச் சிவனடியானைப் பார்த்துச் "சங்கரனன்பனே! எங்கிருந்து வந்திருக்கின்றீர். சொல்லவேணும்" என வேண்டிக்கொள்ளப் பத்திரன் "அரசனே! நான் சோமசுந்தரமூர்த்தியின் திரு ஆக்ஞையின்பேரில் மதுரையம்பதியிலிருந்து சிவநேசச் செல்வனை உம்மைக் காணவந்திருக்கின்றேன். இதோ பாரும்" என்று சொல்லிப் பெருமானது திருபத்தை நீட்டினான், அரசன் வணக்கம் செய்து, அதைப்பெற்று, தனக்குள்ளாக வாசித்துக்கொண்டான். அதில் "இவன் பற்பல அற்புதங்கள் நிறைந்த மதுரையிலிருந்து உன்னிடம் வருகின்றான். இவனது பெயர் பத்திரன் என்பது. இவன் என்பால் அன்பு செலுத்துகின்றவன். இவனுக்கு ஏராளமான பொருள் கொடுத்துச் சீக்கிரம் என்னிடம் அனுப்பு" என்று கண்டிருந்தது. தெய்வ எழுத்துக்களில் வரையப்பட்டிருந்த அந்தக் கடிதத்தைப் பார்த்துச் சிவபெருமானுக்குத் தன்பால் அதிகமான அருள் இருக்கின்றதென்று நினைந்து அரசன் பத்திரனை யானைமீதேற்றி நகருக்குக் கொணர்ந்து, எண்ணெய் ஸ்நானம் செய்வித்துச் சிவபெருமானுகவே கருதி, அவனுக்கு அறுசுவையுடன்அமுது செய்வித்தான். பின்னர் உயர்ந்த ஆடை முதலானவையும், ஆயுள்வரை போதுமான தனமும் கொடுத்து வணக்கத்துடன் அவனது வரவால்தான் பேறடைந்ததாகத் தெரிவித்தான். அதற்குப் பத்திரன் அரசனை நோக்கி, 'வேந்தனே! நானோ ஒரு பாணன், நீயோ ஒரு பேரரசன்" என்று மீண்டும் மீண்டும் சொல்லிப் புகழ்ந்தான். அதைக் கேட்டுச் சேரராசன், பிரமன் முதல் திரும்பு ஈறாக யாவற்றிலும் இறைவன் ஆன்மவடிவாயுறைகின்றான்.

அதில் சாதிவேற்றுமையில்லை. நீர் என் இங்ஙனம் கூறவேண்டும்'' என்ற வாறு மொழிந்து கால தாமதமேற்படுதல் கூடாதென்று பயந்து, பத்திரனிடம் மறுபடியும் ''பாணரே! நான் உம்மை வற்புறுத்த இயலாதவனாய் இருக்கின்றேன். பெருமானது திருவாணைப்படி நீர் செல்லும்'' என்று கூறிக் காவலாட்களுடன், சுமையாளர் பணமூட்டைகளை எடுத்துவர, அவனை மகிழ்வுடன் ஊருக்கனுப்பினன். பாணனும் மதுரையையடைந்து, பிணியில்லாமல் நல்ல ஆடைமுதலானவையணிந்து, வேண்டுவனவளிக்கும் ஆலவாயுடையாரை அவரது பெருமைகளையுரைக்கும் பாக்களாற்பாடி, சுற்றத்தாராலும் பிறராலும் புகழ்பெற்றுக் கேட்போருக்குக் கொடுத்துக்கொண்டு, தனதில்லம் சேர்ந்தான். பின்னர் முன்போலவே, பெருமானது முன்னிலையிற் பாடுவதும், கொடைகள் கொடுப்பதுமாக வெகுகாலம் அவன் இன்பமாக வாழ்ந்தான்

இது நாற்பத்திரண்டாம் திருவிளையாடல். கேட்போருக்கு எல்லா நலன்களையும் பயக்கும்.



நாற்பத்தொன்பதாவது அத்தியாயம்.

பத்திரனுக்குப் பலகையிடல்.

இங்ஙனம் பத்திரன் பெருமையுடனிருக்கையில், அவனதினத் தாரான மற்றைப் பாணர்கள் அவனிடம் அழுக்காறுகொண்டு அவனது செல்வம் எப்பொழுது சிதைவுற்றுப்போகின்றதென்று பேசிக்கொண்டனர். பத்திரன் இதையறிந்து மிக்க மேலான நியமமொன்றைத் தன்மீது ஏற் படுத்திக்கொண்டான். இதுவரைக் காலையிலும், உச்சிகாலத்திலும், மாலை யிலுமாக மூன்றுவேளைகள்தான் இறைவனைக் காண்டல் செய்தான். இனி மேல் விருப்பங்களையளிக்கக்கூடியதும், இன்பம், சுவர்க்கம், வீடு இவற் றைத் தரவல்லதும், புனிதமானதும், மனப்பிணி உடற்பிணி இவை யிரண் டையும் அகற்றுவதும், இன்னல்கள் யாவையும் தொலைப்பதுமான அர்த்த யாம தரிசனத்தையும் செய்யப்போவதாக உறுதி பூண்டு அப்படியே நடத்தி வந்தான். சிவனடியாரெல்லோரும் அவனைப் புகழ்ந்தனர். பள்ளியறைப் பூசை நடக்கும்பொழுது சுந்தரேசப்பெருமானை ஒரு முறையேனும் காண்ட லாலேயே பாவங்கள் தீர்ந்து மனிதன் இன்பத்தை யெய்துகின்றான். அப் பூசை வேளையில் பத்திரன் தனது இசையினால் எம்பெருமானைத் தொழு தான். அதன் புண்ணியத்தால் அவன் சித்திகள் யாவற்றையும் பெற்றான்.

ஒரு நாள் திருவிளையாட்டில் பிரியமுள்ள ஆலவாயுடையான் செல் வத்தால் திகழும் பத்திரனைச் சோதித்தற்கு ஒரு செயல் புரிந்தார். அர்த்த சாமவேளையில் இடிமுழக்கத்தோடு கூடிய ஓர் பெருமழையைப் பெய்வித் தார். வீடுகளிலிருந்து ஒரு சுடு குஞ்சுகூட வெளியேறவில்லை. பத்திரனை வெல்லுதல் மெய்யன்பின் அழுத்தத்தால் மழைச்சொரிவுகளே மலர்ச்சொரிவு களாக நினைந்து, பள்ளியறைப்பூசை நடக்கும்பொழுது திருவாலவத்திற்கு வந்து உமையொடு இலங்கும் சோமசுந்தரமூர்த்தியையடைந்து மிகவற்புத மாகப் பாடினான். உலகம் யாவைக்கும் இறைவனான எம்பெருமான் முகில் களே இன்னும் அதிகமாகப் பொழியும்படி ஏவினான். கும் கும் கும் என்று முழங்கிக்கொண்டு, காற்றுடன் கலந்து, ஆலங்கட்டிகளையும் வீசிக்கொண்டு அவை மேலைக் கொட்டின. பத்திரன் நந்திகேசுரரது பின்னே அசையாமல் நின்றுகொண்டு முன்னிலும் அதிகமாகப் பாடினான். அவன் நின்றவிடத் தில் மழை பெய்துகொண்டிருந்தமையால் யாழின் நரம்புகள் நனைந்தன; நகங்கள் ஈரமாயின; விரல்கள் விறைத்தன; எராளமான சேறும்உண்டா யிற்று. மழையில் நனைந்த பத்திரன் சேற்றில் உட்கார்ந்துகொண்டு பாடிய பொழுதுசேற்றுரல் மூடப்பெற்றான். நரம்பு முதலியன சிதைந்திருந்தும், அன்பிலூறிய அவன் சிறிதும் தளராமல் மிக்க இனிமையாய்ப் பாடினான். அன்பரிடத்தே அன்புள்ள சோமசுந்தரக்கடவுள் உடனே கருணைகூர்ந்து சேற்றில் வீற்றிருக்கும் பத்திரனுக்கு அடியில் ஓர் பொன்மயமானதும் இரத் தின மயமானதுமான பலகையைச் சொருகியருளினார். அவன் இது எங்கிருந்து வந்ததென்று ஆச்சரியம் கொண்டவனாய் அந்தப் பீடத்தின்மீது

அமர்ந்து பாடினன். பாட்டு முடிந்து புறப்படும்பொழுது மழை நின்று ஆகாயம் தெளிந்தது. நட்சத்திரங்கள் பிரகாசித்தன. யார் எனக்கு இந்தப் பலகையைக் கொடுத்தது என்று ஆய்ந்தவண்ணமாய் அறவடிவினனான பத்திரன் பலகையை எடுத்துக்கொண்டு தனது அகம் சென்று சுற்றத்தார்க்குக் கதையை முழுதும் சொன்னன். அவர்கள் கன்றாய் ஆலோசித்து ஆலவாயுடையான் தான் இதைக் கொடுத்திருக்கவேண்டுமென்றும் அதில் ஐயமில்லை யென்றும்கூறினர். பத்திரன் உவகையடைந்து, அங்ஙனமேதான் என்று நிச்சயித்துக்கொண்டு, சிவன்முத்திபுரி நாதனை சோமசுந்தரக்கடவுளிடம் மனத்தை வைத்தவனாய் வீட்டிலிருந்தான்.

மறுநாட்காலையில் பாண்டியராசன் பத்திரனது சமாசாரத்தைக் கேள்விப்பட்டு அவனை வரவழைத்துத் தெய்வீகபலகையைப்பார்த்து, அதை ஓரிடத்தில் வைத்துச் சிவபெருமானே நேரில்வந்தாற்போல் பூசை செய்து, பத்திரனுக்குத் தனதானியங்கள் நிறைந்த கல்லகிராமங்களைச் சாரி செய்து மகிழ்ச்சியுடன் அவனைப்பார்த்துப் "பத்திரனே! கன்றைக்கண்டதும் பசுபின்னே ஓடுவதுபோன்று, எம்பெருமான் சோமசுந்தரமூர்த்தி உன்னைக்கண்டதும் உடனே பின்தொடர்ந்து ஓடுகின்றார். அவரது திருவருளுக்குப் பாத்திரமானவர் உன்னைத்தவிர வேறுயாருமில்லை. இத்தகாதிரியான தெய்வீகப்பலகையை உன்னைத்தவிர வேறெவர் பெற்றிருக்கின்றனர். சிவனடியார் யாவரும் சிவபெருமான்களேயென்று எல்லாவேதங்களும் ஆகமங்களும் கூறுகின்றன. அவர்களைத் தொழுதலால் பாவஞ்செய்தோர் அதினின்றும் விடுபடுகின்றனர். ஆதலால் உலகில், உன்னை வணங்குதல் பெருமானை வணங்குதலே என்று மொழிந்து அவனை வீட்டிற்கனுப்பினன். வழிநெடுகக் கட்டியக்காரர்கள் கட்டியம்கூறப் பத்திரன் இரப்போர்க்கெல்லாம் போதுமானவரை கொடுத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

சிவனன்பர் அனைவரும் அவனது வியக்கத்தக்க மெய்யன்பையும், பெருமானது அடியாரிடத்தேயுள்ள அருளையும் பாராட்டினர். ஓயாது கொடுத்துக்கொண்டிருக்கும் அவனது செல்வங்கள் திங்களைக்கண்ட கடல்நீர் போன்று பொங்கின. சோமசுந்தரப்பெருமானை நம்பி நெஞ்சில் உறுதிகொண்டவராய் எவர்கள் அவரை நினைந்து, பூசித்துப் பாடுகின்றனரோ அவர்கள் நீண்ட ஆயுள், பிணியின்மை, செல்வம் இவை நிறைந்துவாழ்வர்.

ஆலவாயுடையாரின் திருவருள் பெறுதற்கு இந்த நாற்பத்துமூன்றும் திருவிளையாடலைச் சிவனன்பர் கேட்டல் செய்யவேண்டும்.

ஐம்பதாவது அத்தியாயம்.

பத்திரனது மனைவிக்கு வெற்றி யளித்தல்.

வரகுணபாண்டியனுக்குப் பின்னர், இராசராசபாண்டியன் இராச்சியத்தையேற்று, அரசுபுரிந்துகொண்டிருக்கையில், பத்திரனைப்போன்று மிகுந்த சிவனன்புகொண்ட பத்திரனது மனைவியான பத்திரை என்பவள், ஒருநாள் அரசனது மனைவியைப் பார்ப்பதற்குச் சென்றிருந்தாள். அப்பொழுது அங்கு இசைக்கலையில் தேர்ச்சிபெற்றிருந்த அவளுக்கும் அவளைப் போன்றே அக்கலையினது நுணுக்கங்களையறிந்திருந்த அரசனுடைய அன்பிற்கு மிகப் பாத்திரமாயிருந்த பரத்தையொருத்திக்கும் இசையில் நான் தான் பெரியவன் நான்தான் பெரியவள் என்று ஒருவருக்கொருவர் சண்டை உண்டாயிற்று.

அரசன் பரத்தையின் சொல்லை நம்பி, பத்திரையை எங்ஙனம் இசை வாதில் தோல்வியுறச்செய்து சிறுமைப்படுத்தலாமென்று சிந்தித்தான். அப்பொழுது அவனது நண்பர்கள் தீவில் கைதேர்ந்தவள் ஒருவள் இருக்கின்றாள் என்று சொல்லி அவளைக் கொணர்ந்தார்கள். உடனே அரசன் மற்றவர்க்குத் தெரியாமல் அவளையும் பத்திரையையும் அழைத்துப் பத்திரையிடம் வந்திருப்பவளை வாதில் வெல்லமுடியுமாவென்று வினவினான். அதற்கு முடியுமென்று பதிலுரைத்தாள் பத்திரனது மனைவி. உடனே அரசன் வந்தவளுக்கு இருக்குமிடமொன்று ஏற்பாடு செய்து அவளை அங்கு போகும் படி கட்டளையிட்டான். அவள் சென்றதும் அரசன் பத்திரையை நோக்கி "பத்திரனது மனைவியே! உனக்கு வரும் தோல்வி எனக்கே! ஆனதுபற்றி வந்தவளை வெல்வதற்கு உடனே வழி தேடிக்கொள்" என்றான். அதைக் கேட்டுப் பத்திரை 'அரசனே! நான் கற்புநோன்பு பூண்டவள். கற்பு என்னைக் காக்கும். தவிர அடியார்க்குக் கட்டுப்பட்டிருக்கும் சோமசுந்தரப் பெருமானும் இருக்கிறார்! ஆதலால் எனக்கு அவளிடமிருந்து தோல்வியென்ற பேச்சுக்கே இடமில்லை" என்று பதில் கூறினாள். உடனே அரசன் எவளாளியிடம், இருவரையும் நாளை அழைத்துவா' என்று பணித்துப் பத்திரைக்கு விடைகொடுத்து வீட்டிற்கனுப்பினான்.

பின்னர்ப் பொறுமைமூண்ட அரசன் சூதுசெய்ய நினைத்து, வந்தவளை மறைவாக வரவழைத்து அவளிடம் "பத்திரையை ஏமாளமாக எசிப் பேசு. வேண்டாமென்று நான் தடுப்பேன். அதையும் பொருட்படுத்தாது மென்மேலும் திட்டு" எனச் சொல்லிவைத்தான். புதிதாய் வந்தவள் இதிலிருந்து அரசனது மனப்பான்மையை யறிந்தவளாய் பத்திரையைத் திட்டுவதென்று உறுதிபூண்டாள்.

மறுநாள் புதியவள், வரப்போவதை அறியாது அரசனது அவையில் பத்திரையைக் கண்டபடி திட்டிப்பேசினாள். அரசன் அவளைப்

பார்த்து "பத்திரை எங்களது ஆள் அவளை நீ எசக்கூடாது" என்றான். அதையும் மதிக்காது வந்தவள், மேலுமேசினாள். உடனே அரசன் கடு நிலைமை வகிப்பவன்போல் இரு பாடகிகளையுமழைத்து "நீங்கள் இருவரும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு இங்கு பாடவேண்டும். இங்குள்ள இசை வல்லுனர் இன்னாள் வென்றாள் என்று கூறியதும் வென்றவளுக்குத் தோற் றவள் அடிமையாகவேண்டும்" என்றான். அதற்கொப்புக்கொண்டு, வந்த வள் மிகவற்புதமாகப் பாடினாள். குயிலோசையுடைய பத்திரையும் பாடி னாள். அனைவரும் பத்திரையின் பாட்டை மெச்சினர். ஆனால் பட்ச பாதம்கொண்ட அரசன்மட்டும் வந்தவளது பாட்டைப் பாராட்டினான். உடனே எல்லோருமமாறி, வந்தவளது பாட்டையே புகழத்தொடங்கினர். நல்லதோ கெட்டதோ அரசனது வார்த்தையை யார் மறுக்கமுடியும்! பின் னர் அரசன் சந்தேகத்துடன் அவ்விருவரையும் நோக்கி "வித்தை விஷயத் தில் வெற்றியும் தோல்வியும் ஏற்படுவதுதான். நீ போகலாம். நீயும் போக லாம்" என்றார். வந்தவள் மிக்க உவகையுடன் வீடுசென்று கட்டிலில் படுத்தாள். பத்திரை அரசனது ஓரவஞ்சனையைக்கண்டு, மனம் நொந்து, சோமசுந்தரக்கடவுளிடம் சென்று, கண்ணும் கண்ணீருமாய், "எம்பெரு மானே! மதுரேசனே! கடம்பவனநாதனே! கருணைக்கடலே! யாவர்க்கும் நீரே நாதன். எங்களுக்கு அதிகப்படியாக நீர் நாதன். பாண்டியராசன் பச்சபாதத்துடன் நெறிதவறி எனக்குத் தோல்வியைத் தோற்றுவிக்க முயல் கின்றான். அந்தக் கேட்டினின்றும் என்னைக் காத்தருளும்" என்று கெஞ் சியவண்ணமாய் இடிந்த நெஞ்சுடன் தரையில் விழுந்து வணங்கினாள். 'அஞ்சவேண்டாம்' என்று வானினின்று சொற்பிறந்தது. அதைக்கேட்டுப் பத்திரை மனம் தெளிந்து தன்வீட்டிற்குச்சென்று அந்நாளைக் கழித்தாள்.

மறுநாள், அரசன் அவர்களது பாட்டைக்கேட்டான். அறிந்த வர்கள் முன்போலச் சொன்னார்கள். அரசனும் முன்போலவே சொன்னான். இங்ஙனம பலமுறை அரசன் பத்திரையை சிறுமைப்படுத்தினான். இறுதி யில் பத்திரை அவனை நோக்கி "அரசனே! நீர் ஓரவஞ்சனையாகப் பேசுகின் றீர். அவையிலுள்ள பெரியோர்களுக்கு உண்மை தெரியும். நாங்களிரு வரும் சுந்தரேசப்பெருமானது முன்னிலையில் மண்டபத்தில் பாடுகின்றோம். அப்பொழுது அவையிலிருக்கும் அறிவாளிகள் எவனை வென்றவளென்று கூறுகின்றனரோ அவளுக்கு மற்றவள் அடிமையாவாள்" என்றனள். அர சன் அதற்கு மனமில்லாமலே இசைந்தான். சரிசரி யென்று அனைவரும் அரசனை மெச்சினர்.

அடுத்தநாள், இறைவனது முன்னிலையில் பெரிய மண்டபத்தில் அரசன் ஓர் அவையைக்கூட்டி அங்கேயே இருந்தான். பத்திரை ஐயமின் றித் தனது அடிமையாய்விடுவாளென்ற உறுதியுடன் புதியவள் விரைந்து வந்தாள். பத்திரை இறைவனது சொல்லை நினைந்துகொண்டு மெதுவாக அவைக்கு வந்தனள். கருணைவடிவமாம் சோமசுந்தரமூர்த்தி ஓர் புலவர் கோலத்தில் அவையின் மத்தியில் மறைவாக அமர்ந்திருந்தார். முதலில் வந்தவள் தனது முழு ஆற்றலுடன் வெகுநேரம் பாடினாள். அரசனும் அவையிலுள்ளோரும் பாட்டைக் கேட்டு மெய்ம்மறந்துபோயினர். பின்னர், பத்திரை பெருமானை நினைந்துகொண்டு பாடினாள். "ஆ! ஆ! அற்புதப் பாட்டு" என்று அரசன் முதலில் மெச்சினான். உடனே அமைச்சரும் பிற

ரும் முகமலர்ந்து அங்கனமே மெச்சினர். அவளோ வந்தவளது தோளின் மீதேற்றிக் கெக்கலி கொட்டினர். அரசன் தன்னை யறியாமலே பத்திரை பாடியபொழுது பேஷ் பேஷ் என்று சொல்லிவிட்டான். அதற்குக் காரணம் அண்மையில் புலவர் வேடத்தில் வீற்றிருந்த சோமசுந்தரப்பெருமானது திருவாக்கினைதான். அரசனுக்கு அவனையறியாமலே பத்திரைபால் ஏற்பட்ட அன்பைக்கண்டு கல்லோனைவரும் ஒரேபோல், விரும்பியதற்கு மேலளிப்பவரும் விரும்பியதையறிகின்றவனுமான சுந்தரமூர்த்திக்கடவுளைப் போற்றி விரும்பியதையளிக்கும் தெய்வங்களுள் சோமசுந்தரப்பெருமான் ஒருவனே அண்டுதற்குரியவன். மற்றவையல்ல என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு வலம் வந்து வணங்கிச்சென்றனர். அப்பொழுது அரசன் 'பத்திரன் பெரும் சிவனடியான். பத்திரையோ அவனுக்குமேற்பட்ட சிவனடியாள். அவள் வென்றதில் ஆச்சரியம் என்ன இருக்கின்றது' என்று உரைத்தான். பின்னர் பத்திரையை வந்தவளது தோளின் மீதினின்று இறக்கி, அவளுக்குச் சிறந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் தந்து, அனுப்பிவிட்டு, மற்றவளுக்குச் செலவிற்குப் பணம் முதலானது கொடுத்து ஊருக்குச் செல்லும்படி உத்தரவிட்டான். அதன்பின், அரசன் 'தெய்வமே வலியது. மனிதயத்தனம் பயனற்றது. இறைவனே அண்டினால் பயன்பெறலாம்; பிறரை அண்டுவதில் பயனில்லை' என்றமாதிரியான பேச்சுக்களைப் பேசிக்கொண்டு பெருமானுக்குப் பட்டாடைகளையும் முத்தாபரணங்களையும் சமர்ப்பித்து வலம் வந்து பேரிலிங்கத்தைத் தொழுது வாத்தியங்கள் முழங்கச் சுந்தரேசக்கடவுளிடம் எல்லையற்ற அன்புகொண்டவனாய் அரண்மனைக்குச் சென்றான்.

குபேரனுக்கு நிகரான செல்வத்துடன் நற்குணங்கள் படைத்த சுகுணன் என்ற புதல்வனையும் பெற்று ராச ராச பாண்டியன் மிக்கவிளங்கினான்.

இது நாற்பத்தெட்டாம் திருவிளையாடல். படிப்போருடையவும் கேட்போருடையவும் இன்னல்களை விலக்கி நன்மையைப் பயக்கும்.



ஐம்பத்தொன்றுவது அத்தியாயம்.

பன்றிக்குட்டிகளுக்குத் தாய்ப்பால் கொடுத்தல்.

வைகையாற்றின் கரையில் குருதீர்த்தம் என்று ஓர் ஊர் இருக்கிறது. அது ஒரு பெயர்பெற்ற புண்ணியத்தலம். அங்கு முனிவர் வருவது வழக்கம். ஒருகால் பிருகற்பதி அங்கு சென்று கடும்தவம் புரிந்தார். அந்தத் தலத்தில் சிவபெருமான் குருநாதராயும் மகாவிட்டுணு சித்திரரதராயும் தோன்றியிருக்கின்றனர். அவ்விருவரையும் கண்டலால் பாவங்கள் தொலைந்து முத்தியெய்தலாம்.

அந்தக் குருதீர்த்தமெனும் குருவிருந்த துறையில் சுகலன் என்ற வேளாளன் ஒருவன் இருந்தான். அவன் நிலத்தை உழுது பயிர் செய்து தானியங்களைப் பெற்றுச் செழிப்புடன் வாழ்ந்தான். அவனது மனைவிக்குச் சுகலை யெனப்பெயர். அவள் மிகப் புனிதமான ஓர் கற்புடைய மங்கை. அவர்களுக்கு வெகுகாட்களுக்குப்பிறகு பன்னிரண்டு பையன்கள் வரிசையாகப் பிறந்தனர். அவர்கள் குணம்கெட்டு முறடராயிருந்தனர். பெற்றோர் அவர்களை அவர்களது போக்குப் போலவே விட்டு வளர்த்தனர். கடிந்து பேசுவதே கிடையாது. இவ்விதமாக வளர்ந்து அந்தப் புதல்வர் காளைப் பருவமெய்தினர்.

இப்படியிருக்கையில் பெற்றோர் இருவரும் காலமாயினர். பிள்ளைகள் ஒழுக்கம் குன்றிக் கருத்து வேற்றுமையுடன் கல்நெஞ்சத்தராய் விளங்கினர். அவர்கட்கு நற்செயல்களில் தேட்டமேயின்றித் தீய செயல்களில் அளவற்ற விருப்பமிருந்தது. அவரவர் மனதில் தோன்றியவாறு அவர்கள் நடந்துவந்தனர். நிலத்தை மேடுபள்ளமாக உழுது பயிர் கன்றாய் வராமல் வருந்தினர்.

ஒருசமயம், அவர்கள் வினையின்பயனாக வேட்டைக்கென்று காட்டிற்குச்சென்று வேடர்களுடன் சேர்ந்து விலங்குகளைக் கொன்றுகொண்டு அங்கு மிங்கும் திரிந்தனர். அப்பொழுது ஓர் புதரின் மத்தியில் மரவுரி தரித்துச் சடையுடன் கண்கள் மூடிக் கட்டைபோன்றசைவற்றுத் தவநிட்டையிலிருந்த முனிவரொருவரை அவர்கள் கண்டனர். உடனே அவர்கள் அவரைச்சுற்றி நின்றுகொண்டு கைகொட்டிக் கலகலவென்று சிரித்துக் கூத்தாடிக் கேலி செய்தனர். அத்துடன் நில்லாது, சிறுபிள்ளைத்தனமாய்ப் பெரியவர்மீது புல்லையும் கல்லையும் மண்ணையும் மணலையும் வாரிவீசினர். இங்ஙனம், அவர்கள் மீண்டும் மீண்டும் துன்புறுத்தப் பெரியவரது நிட்டை கலைந்தது. அவர் விழித்துப் பார்த்து அந்தப் பையன்கள்மீது சினங் கொண்டு "மண்ணைக்கிளறும் மரபில்தோன்றிய நீங்கள் மண்ணைத்தோண்

டும் பன்றிகளாகப் பிறக்கக்கடவீர். நீங்கள் பிறந்ததும் உங்களது தாய் தந்தையர் இறப்பர், நீங்கள் வெயிலிலடிபட்டுப் பசியுடன் வருந்துவீர்" எனச் சாபமிட்டார். உடனே அவர்கள் அவரை அணுகி வணங்கிப் 'பெரியவரே! அறியாமையால் நாங்கள் இழைத்த குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும். தூணையற்றிருக்கும் எங்களை காத்தருளும்" என்று வேண்டிக்கொண்டனர். உடனே பொறுமை நிறைந்த முனிவர் மிகுந்த பரிவுடன் அக்குழந்தைகள் பால் இரங்கி, அவர்களது வேண்டுகோளுக்கிணங்கிக் "குழந்தைகளே! ஆலவாயுடையான் உங்களது தாயாக வந்து உங்களுக்குப் பாலூட்டுவார். அப்பொழுது பெருமானுல் தொடப்பெற்று நீங்கள் அந்தப்புனிதவான் ஞானப்பாலை அருந்தியதும் உங்களது சாபம் தீர்ந்து மனித உடலைப் பெறுவீர். ஆனுல் உங்களது முகம் பன்றியதுபோன்றே இருக்கும். நீங்கள் பாண்டிய வேந்தனுக்கு அமைச்சராகி வேண்டுமின்பங்களைத் துய்த்துப் பின்னர் சோமசுந்தரக் கடவுளது திருவருளால் சிவசாயுச்சிய மெய்துவீர்" என்றவாறு சாபம் தீரும்முறையை மொழிந்து மீண்டும் மிட்டையில் புகுந்தார். சிறிதுகாலமானபின், அந்தப்பிள்ளைகள் தங்களது திமிரால் பெற்ற சாபத்தின் பயனைக் காட்டில் பன்றிகளாகப் பிறந்தனர்.

அப்பொழுது அரசன் அந்தக்காட்டிற்கு வேட்டையின்பொருட்டுச் சென்று பன்றிகளையும் மான்களையும் எருமைகளையும் மற்றைக் கொடிய விலங்குகளையும் அம்பை எய்து மாய்த்தான். இங்ஙனம் அவன் வேட்டையாடிக்கொண்டிருக்கையில் பெரும் பன்றியொன்று தனது இராணியுடன் ஓர் பன்றிக்கூட்டத்தின் தலைமையில் அரசன் இருந்தபக்கமாக வந்தது. அரசன் அந்தக் கொம்பன்பன்றியைப் பார்த்ததும் திகைத்துப்போனன். அப்பொழுது பன்றியரசு அரசனைச் சுட்டிக்காட்டி தன் பெட்டையிடம் "மனைவியே! மதுராபுரி யரசன் வேட்டையாடுகின்றன். எனது கூட்டத்தைக் கண்டதும் கொல்லவருவான். என்ன பாவம் செய்தேனே தெரியவில்லை இந்தப் பன்றிப்பிறவியை எடுத்திருக்கின்றேன். போரில் அவனது அன்புகளாகின்ற நீரால் அந்தப்பாவம் கழுவப்பெற்று, நான் தூயனாகி, எனக்காகத் திறந்துவைக்கப்பட்டிருக்கும் சுவர்க்கவாயிலுள் இன்றேசென்று விடுவேன். ஆதலால் இப்பொழுதுதான் ஈன்றிருக்கும் நீ, வீணனை ஆசையைவிடுத்துக், குட்டிகளுக்குப் பால் கொடுத்தற்காக உடனே மலைப் பக்கங்களுக்குச் சென்றுவிடு" என்றது. பெட்டை அதைக்கேட்டு வியந்து 'நாதனே! கணவனையிழந்த ஓர் மங்கை எங்ஙனம் உயர்ந்த ஆடைகளாலும் மாணிக்கம் முதலான ஆபரணங்களாலும் பொலிவுறமாட்டாளோ அங்ஙனமே நான் மக்களால் பொலிவுறமாட்டேன். புவியோ சுவர்க்கமோ நீர் எங்கு செல்கின்றீரோ அங்கு நானும் கூடவருவேன், நீரில்லாமல் ஒரு கணமேனும் நான் உயிர்தரியேன். ஆகையால் நானும் உம்முடன் போர்க்களம் வந்து உமது வீரச்செயல்களைப் பார்க்கின்றேன்" என்று மொழிந்து குட்டிகளை விடுத்துக் கணவனே பெரிதென்று கருதியதாய், அரசை முன்னேவிட்டுத் தான் பின்னே நின்றது.

உடனே தலைமைப்பன்றி தனது படையை அணிவகுத்துப் போருக்குத் தயாராக்கிக்கொண்டது அரசன் பன்றிகளது எற்பாட்டைக் கண்ணுற்றுத் தனது படையினருடன் உயரமான குதிரைமீதேறித் தாக்குதற்கு முனைந்தான். சிறிதுநேரத்திற்குள் இருதரப்பினரும் மிகைத்தாலும்

நடுக்கமுண்டாக்கும் மிகப் பயங்கரமான மல்யுத்தத்தில் ஈடுபட்டனர். மனிதர் கூர்மையான ஆயுதங்களைக் கையாண்டனர். பன்றிகள் பற்களை உபயோகித்தன. இருபக்கத்தினரும் அடிபட்டு மாண்டு விண்ணுலகம் சேர்ந்தனர். பன்றிகள் படையில் தலைமைப்பன்றி மாத்திரம் எஞ்சியது. அதுவும் பொருதற்குப் புறப்பட்டதைக்கண்ட பெட்டை அதை நோக்கி "நாதனே! போகலாம் வாரும்! நீர் சாவதால் என்ன பயன்?" என்றது. உடனே பன்றியரசு பெட்டையிடம் "இரண்டு சிங்கங்களின் கூடே சென்று ஒரு பன்றி தண்ணீர் பருகும்; இரண்டு பன்றிகளுக்கூடே சென்று ஒரு சிங்கம் தண்ணீர் பருகமுடியாது. இங்ஙனம் எங்களது மாபினர்க்கு ஓர் தனியான வீரம். போரில் எதிர்க்கு நேராக நின்று சண்டைசெய்து உயிர்விடுபவன் சிவபெருமானது மேலாம் உலகத்தை எய்துகின்றான். இங்ஙனம் அறமுறை தெரிந்த நான் போரின் மத்தியில் எங்ஙனம் வெளியேறுவேன்? ஆனதுபற்றி எதிர்த்து நின்று அரசனுடன் போராடப் போகின்றேன்" என்று மொழிந்து, உறுமிக்கொண்டு, அரசனை நோக்கி, நடக்கும் மலைபோன்று விரைந்தது. அரசன் நால்வகைப் படைகளையும் ஒன்றின்பின்னொன்றாக ஏவினான். காலாட்களைப் பன்றி மூச்சுக்காற்றால் விரட்டிற்று. தேர்களைத் தனது கோரப் பல்லால் உடைத்துத் தூக்கியெறிந்தது. குதிரைகளைக் குளம்படிகளால் கீழே வீழ்த்தியது. யானைகளது துதிக்கைகளைப் பற்களைக்கொண்டு வெட்டிற்று. இப்படியாகத் தனது படை முழுதும் பன்றியால் தோற்கடிக்கப்பட்டது கண்டு அரசன் நாணேற்றிய வில்லுடன் ஓர் பெரிய புரவிமீதேறிக்கொண்டு பன்றியின்மீது அம்புகளைப் பொழிந்தான். பன்றி அம்புகளைப் பற்களால் ஒதுக்கித் தள்ளிக்கொண்டு விரைந்து சென்று குதிரையைக் கொன்றது. அரசன் குதித்து உடனே தேரொன்றில் ஏறிக்கொண்டு பன்றியின்மீது அம்புகளைத் தொடுத்தான். பன்றி இரண்டு பற்களாலும், முகத்தாலும், குளம்புகளாலும் தாக்கித் தேரையும், தேரோட்டியையும், தேர்க் குதிரைகளையும் பொடிப் பொடியாக்கிற்று. அரசன் கீழே யிறங்கி மிகுந்த கோபத்துடன் பன்றியைத் தலையிலடித்தான். அது மண்டையுடைந்து இரத்தம் பீறிடக் கீழேவிழுந்தது. அரசன் பார்க்கவே, அது தேவஉடல் பெற்றுத் தேவ ஆடைகளணிந்து தேவ விமானத்திலேறித் தேவலோகம் சென்றது. பெட்டை தனது கணவன் தெய்வ உடலெய்திச் சென்றதைக் கண்ணுற்றுத் தானும் கூடவே போய்விட வேண்டுமென்று தெளிந்து, அச்சத்தை நீக்கிக் காலாலே வீழ்த்தியும், தேரையும், புரவியையும் யானையையும் பற்களால் நொறுக்கியும் அற்புதப்போர் நிகழ்த்தியது. பின்னர் சர்ச்சரனெனும் ஓர் வேடன் பெட்டையின்மீது அம்புகளையெய்தான். அது அவனைப் பற்களால் இரண்டாகக் கிழித்தெறிந்தது. கீழே விழும்பொழுது அவன் பெட்டையைக் கத்தியால் வெட்டினான். இரத்தம் பீறிட்டோட அது செத்து விழுந்தது. சனங்கள் பார்க்க, அதுவும் கணவப் பன்றிபோன்று தேவஉடல் பெற்றுத் தேவ விமானமேறித் தேவலோகம் சேர்ந்தது. அரசனும் திகைப்புற்று எஞ்சிய படைகளுடன் மதுரை நோக்கிச் சென்றான்.

கடாப்பன்றியின் மலைபோன்ற உடல் விழுந்த இடத்தில் தோன்றிய மலைக்குப் பன்றிமலை யெனப்பெயர். அந்தப் புனிதமான மலையில் சித்தரும் யோகிகளும் அட்டமாசித்திகளைப் பெறுதற்குத் தவம் புரிகின்றனர். முன்னொருகாலத்தில் இரங்கவித்தியாதரன் எனப் பெயருடைய

கந்தருவனொருவன் முந்திய பிறவியில் புலத்தியமுனிவரால் சபிக்கப்பெற்று பன்றியாகப் பிறந்து சோமசுந்தரக்கடவுளின் அபிசமான பாண்டியராசனால் கொல்லப்பட்டு மீண்டும் சுவர்க்கத்தையடைந்தான். அவளது மாசற்ற உடலே பன்றியுருவமானபடியால் பன்றிமலையானது பிரகத் தூய்மையுடையது. அதற்கு நிகரான தலமேயில்லை. ஆனதுபற்றியே, தேவரும் அவுணரும் அவண் தவம்புரிகின்றனர். அவர்களுக் கருளும்பொருட்டே சிவபெருமான் சித்தர் கோலத்தில் அங்கு இருக்கைகொள்கின்றார்.

முனிவரின் சாபத்தால் வேளாளக்குழந்தைகள் பன்றிக்குட்டிகளாகப் பிறந்தனவல்லவா? அந்தக் குட்டிகள், தந்தையும் தாயும் வேட்டைக்கு வந்திருந்த பாண்டியமன்னனுடன் வீரமாகப் போர்புரிந்து விண்ணுலகம் சென்றதும், தாய்ப்பால் குடியாது காப்பாரற்று வெயிலில் காய்ந்தன. அந்த சமயத்தில் அனைவரையும் காக்கும் கருணைவடிவமான சோமசுந்தரக்கடவுள் உமையாருடன் விடைக்கொடியோடு இலங்கும் விமானமொன்றில் ஏறிக்கொண்டு தற்செயலாக அந்தக் காட்டிற்கு வந்தார். அப்பொழுது தேவியானவள் வெயிலில் காய்ந்துகொண்டிருந்த அந்தப் பன்றிக்குட்டிகளைக் கண்ணுற்றும் பெருமானிடம் "இதோ பாருங்கள் இதோபாருங்கள்" என்று அவற்றைக் காட்டினாள். பெருமான் அவைகளைப் பார்த்ததும் தாய்ப்பன்றி உருவெடுத்து அவைகளுக்குப் பால்கொடுத்தார். பாலுடன்கூட லிமையையும், அறிவையும், மெய்யறிவையும், திறமையையும், மனித உடலையும், வீரத்தையும் தந்தார். உடனே உமையாருடன் மறைந்தருளினார். பன்றிக்குட்டிகள் அந்தத் தாய்ப்பாலை யருந்தியவுடன் வலிமை அறிவு முதலானவை படைத்த மானுடப்பிள்ளைகளாக மாறிவிட்டனர். அவர்களது முகம்மாத்திரம் பன்றிமுகம் போன்றிருந்தது. இங்ஙனம், ஆலாலகண்டனை யுண்ட சிவபெருமான் பன்றிக்குட்டிகளுக்குத் தாய்பால் கொடுத்துக் காப்பாற்றினான்.

இது இறைவனது நாற்பத்தைந்தாம் திருவிளையாடல். பெரும் சாபங்களையும், பெரும் பாவங்களையும், பெரும் கொதிப்புகளையும் போக்கவல்லது.

ஐம்பத்திரண்டாவது அத்தியாயம்.

பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்குதல்.

பெருமானது திருவருளால் மறுபடியும் மானிடவடிவம் பெற்ற அந்த வேளாளவாலிபர் அவரது மூலப்பாலின் பெருமையால் உடனே உடல்வலிமை அதிகமாகப் பெற்றதுடன் சாத்திரங்கள் யாவற்றிலும் நுண்ணறிவும் பெற்று எல்லோருக்குமுடையராய் விளங்கினர். அவர்களது முகம் மாத்திரம் பன்றிமுகம்போலிருந்தது. அவர்கள் முன்போன்றில்லாது பன்னிருவரும் ஒத்தமனத்தராய் பன்னிருகதிரவர்போல் பொலிவுற்றிருந்தனர்.

இங்ஙனம் அந்தப்பிள்ளைகள்பால் இறைவனுல் காட்டப்பெற்ற கருணையைக்கண்டு வியந்து தேவியானவள் பெருமானே நோக்கிப் ''பேரிறைவனே! கருணைவடிவமானவனே! நான் ஒன்று தெரியப்படுத்திக் கொள்கின்றேன். கேட்கவேணும். காட்டிலுள்ள புலி முதலான விலங்குகளைக் கொல்லுதல்தான் வேட்டையாடுதல் என்பது. அது அரசருக்குத் தருமமென்று கூறப்பட்டுளது. ஆதலால் வேட்டையாடும் அரசனைப் பாவம் தீண்டாது. நீரோ தேவர் யாவரிலும் மிகப்பெரியவர். பன்றியோ பிராணிகள் யாவற்றிலும் மிகக் கீழானது. அப்படியிருக்கப் பன்றியுருவமேற்று இங்ஙனம் கிருபைபுரிந்ததேன்! விரும்பியதையளிக்கும் பெருமானே! இதன் காரணத்தை விளக்கியருளவேணும்'' என்று கேட்டுக்கொண்டனள். உடனே எல்லா ஆன்மாக்களாகவும், எங்குமுள்ளவராகவுமிருக்கும் சோமசுந்தரக்கடவுள் அம்மையை நோக்கி 'உமையே! பிரமன் முதல் புழு ஈறாக உள்ள இயங்குவதும் இயங்காததுமான உலகம்யாவிலும் நான் முழு ஆன்மவடிவமாக உறைகின்றேன். அந்தந்த உடலில் அந்தந்த ஆன்மாவாகப் புகுந்து அந்தந்தச் செயல்கள் யாவற்றையும் நானே புரிகின்றேன். நான் ஆகாயம்போன்று முடிவற்றவன், துண்டற்றவன், வேற்றுமையற்றவன். நான் அந்தந்த உடலையெடுத்துக்கொண்டு உலகைக் காப்பாற்றுகின்றேன். எங்ஙனம் ஒவ்வொரு உயிர்ப்பிராணிக்கும் தனது உறுப்புக்கள் யாவற்றும் ஏற்றம் தாழ்வின்று ஒன்றுபோன்றிருக்கின்றவோ அங்ஙனமே அமிசியாயிருக்கும் எனக்கு அம்சங்களாயிருக்கும் பிரமன் முதலான அனைவரும் ஒன்றே. பிராணிகளுக்கு எங்ஙனம் தத்தம் உடல்களில் பற்று இருக்கின்றதோ அங்ஙனமே எனது உடலாகின்ற உலகில் எனக்கும் பற்றுண்டு. தவிரவும், அந்த வாலிபரின் சாபவரலாற்றைச் சொல்கின்றேன் கேள். முனிவர் முதலில் கோபத்தில் குற்றத்திற்காகப் பன்றிகளாகப் பிறக்கும்படி சபித்தார்; பின்னர் கோபம் தணிந்ததும் கெஞ்சியதன்பேரில் சுந்தரப்பெருமான் வந்து மூலப்பால் கொடுத்துக் காப்பாற்றுவார் என்றுச் சாபம்தீரும் வழியையும் கூறினர். ஆனது பற்றியும் அவர்கள்பால் கருணைகாட்டினேன். அவர்கள் இப்பொழுது சாபம் தீர்ந்து பன்றிமூலியின் குகையில் இருக்கின்றார்கள். இன்று அவர்களைப் பாண்டியராசனது அமைச்சராக்கி இன்பங்களைத் துய்க்கச்செய்து இறுதியில் வீட்டுப்பேற்றையும் அளிக்கப்போகின்றேன்'' என்று திருவாய்மலர்ந்தருளினர்: கயக்கண்ணியம்மை பெருமானது

அன்பு கதும்பும் இம்மொழிகளைக்கேட்டு அளவற்ற உவகையடைந்து பெருமானது கருணையை உளத்தில் போற்றியவளாய் அவரைக் கட்டிக் கொண்டாள்.

பின்னர்இறைவன் அரசனைக் கனவிற்கண்டு ''பாண்டியராசனே! நீ வேட்டையாடும்பொழுது உன்னை எதிர்த்த பன்றிக்கூட்டத்தின் தலைமையில் வந்த பன்றியரசையும் அதன் பெட்டையையும் கொன்றாய். அதன் உடலே பன்றிமலையாக மாறியிருக்கின்றது. அதன் குட்டிகளை முனிவரது சாபத்தினின்று நான் இன்று விடுவித்தேன். அவை எனது மூலப்பாலையருந்தி மறுபடியும் மானிட உடலையடைந்தன. அந்த வாலிபர்கள் இப்பொழுது மேலான அறிவு பெற்று எனது கட்டளையின்பேரில் பன்றிமலைக் குகையில் இருக்கின்றனர். உடனே அவர்களை வரவழைத்து உனது அமைச்சர்களாக்கி அவர்களுடன் இராச்சிய காரியங்களை நடத்திக்கொள். அவர்களது திறமையால் இராச்சியத்திற்குப் பெருஞ்செல்வமீட்டிப் பூமி முழுதிலும் வெற்றிக்கொடி காட்டி, வெகுகாலம் நீ ஆட்சிபுரிவாயாக'' என்று அருளிச்செய்தார். அரசன் விழித்ததும் அமைச்சர்களைக்கொண்டு அந்த வாலிபர்களை இட்டுவரும்படி செய்து. அவர்களைப் பார்த்து ஆச்சரிய மெய்தி அறிவில் பிரகர்ப்பதிக்கு மிகமான அவர்களை அமைச்சராகச்செய்து கொண்டான். அப்பன்னிருவரும் அரசனது ஆலுவல்கள் யாவற்றையும் கவனித்தனர். அவர்கள் அரண்மனையிலுக்கு அண்மையிலிருந்த கட்டிடங்களிலேயே குடியிருந்தனர். எப்பொழுதும் இராச்சியகாரியங்களில் கண்ணுயிருந்து அரசனது செல்வத்தை பிகப்பெருக்கினர். பிற அரசருடன் செய்யவேண்டிய சமாதானம் முதலான முக்கியமான அரசாங்க அலுவல்களையும்கூட அவர்களிடத்தே ஒப்படைத்துவிட்டு அரசன்தேவேந்திரன் போன்று சுகமாகவிருந்தான்.

பின்னர்ராசராச பாண்டியன் அந்தப்பன்றிமுக அமைச்சருக்கு பழைய அமைச்சரின் புதல்விகளைத் திருமணம் செய்வித்தார். அவர்கள் மனைவிமாருடன் எல்லாவித இன்பங்களையும் அனுபவித்துக்கொண்டு வெகுகாலம் வாழ்ந்தனர். இறுதியில் அவர்கள் அவர்களது மாசுக்கள்யாவும் பெருமானது முலைப்பாலைப் பருகியதால் களையப்பட்டு விட்டபடியால் சிவசாயுச்சியம் பெற்றனர். பாண்டியராசனும் சிவலோகமடைந்தான்.

இங்ஙனம் பன்றிக்குட்டிகளை அரசனுடைய அமைச்சர்களாக்கிப் பெருமானும் கயக்கண்ணிப் பெருமாட்டியும் வேடிக்கை பார்த்தனர். ராசராசனுக்குப்பின் சுருணபாண்டியன் முன்னிலும் அதிகமான திருவுடன் அரசியற்றினான்.

எங்கும் நிறைந்தவனும் எல்லாமளிப்பவனுமான சோமசுந்தரப் பெருமானது காற்பத்தாரும் திருவிளையாடல் இப்பொழுது கூறப்பட்டது. அதைக்கேட்போர் நல்ல மனைவிகளையும் நற்புதல்வரையும் அடைவர்.



கரிக்குருவிக்கு உபதேசித்தல்



ஐம்பத்துமூன்றுவது அத்தியாயம்.

கரிக்குருவிக்கு உபதேசம் செய்தல்.

மூற்காலத்தில் காக்கைகள் தங்களதுவலிமைபெற்ற மூக்குகளால் கரிச்சான்குருவிகளைக் கொத்தித் துன்புறுத்தின. அவைகள் வலிக்குப் பயந்து ஊர்களைவிட்டுக் காடுகளுக்குச் சென்று மரப்பொந்துகளிலிருந்து கொண்டு காட்டிற் கிடைக்கும் இறைகளைத் தின்றுவந்தன.

அப்படியிருக்கையில் மும்மையிற் புனிந்த புண்ணியத்திரள்களுடன்கூடிய ஓர் ஆன்மா சிறிதுபாவத்தால் அந்தக் குருவிக்கூட்டத்தில் பிறந்திருந்தது. ஒருசமயம் அந்தக் கரிச்சான்குருவி புண்ணியத்தின்பயனால் தனக்குள்ளாக "உலகில் அனைவர்க்கும் பகைவர் இருக்கத்தான்செய்கின்றார்கள். ஆனால் சிலர்மாத்திரம் பகைவர் அடிக்கும்பொழுது எதிர்த்தடிக்கும் ஆற்றல்கொள்கின்றனர். இது எங்ஙனம்?" என்று அல்லும் பகலும் ஆய்ந்து வெகுகாலத்திற்குப்பிறகு "இதற்குச் சிவபெருமானே வழிபடுதல் தான் காரணம்" என்று தெளிந்து அவ்வழிபாட்டை எங்கு செய்வதென்று ஆலோசித்துக்கொண்டிருந்தது.

அப்பொழுது அதன் அண்மையில் தீருத்தயாத்திரையாய் போய்க்கொண்டிருந்த ஓர் முனிவர் உரத்த குரலில் "உலகில் மனப்பிணி, உடற்பிணி, பகைவர் பயம், சாலின்பயம் இவையாலோ அல்லது இதுபோன்ற பிரிதாலோ துன்புறுபவரின் அச்சத்தை நீக்கி இன்பத்தையளிப்பதற்குப் பெயர்பெற்றவரும் ஆற்றலுடையவருமாய் ஆலவாயுடையார் ஒருவர்தான் இருக்கின்றார். வேறு யாருமில்லை. சிவத்தலங்களில் தலைசிறந்ததும், தவத்திற்குக்கடிதில் பயன்தரவல்லதுமாய் விளங்குவது ஆலவாய்த்தலம் தான் என்று அறிந்தவர் கூறுகின்றனர். எத்தனையோ புண்ணிய தீர்த்தங்கள் இருந்தாலும், உடனே பாவங்களைப் போக்கக்கூடிய பொற்றாமரைப் பொய்கை அங்குதானிருக்கின்றது. சுக்குமங்களையறிந்த பெரியோர் அவண் உறையும் பேரிலிங்கத்தைத்தான் யாவற்றிலும் மேலானதென்று உரைக்கின்றனர். சோமசுந்தரப்பெருமானே எல்லா அறங்களையுமளிப்பவர்; அவரே விரும்பங்கள் யாவையும் நிறைவேற்றுபவர்; அவரே எல்லாப் பொருள்களையும் தருபவர்; அவரே வீட்டையும் கொடுப்பவர்; அவரே சித்திகள் யாவற்றையும் ஈபவர்; அவரே பாவங்களையொழிப்பவர்; அவரே பகைவரை வதைப்பவர்" என்று பத்தியால் பரவயராய் மொழிந்தார்.

அப்பொன்மொழிகளைக்கேட்ட கரிச்சான் ஆச்சரியப்பட்டுத்தானும் ஆலவாய்த்தலம் சென்று பொற்றாமரையில் நீராடிப்பேரிலிங்கத்தை வணங்கிப் பகைவராகும் காக்கைகளின்மீது வெற்றிபெற வேண்டுமென்று தீர்மானித்து நெடிப்பொழுதில் அங்கு பறந்து பொய்கையில் குளித்துச் சோமசுந்தரமூர்த்தியைத் தொழுது பன்முறை வலம் சுற்றி இலிங்கத்தின் முன்னர் நின்றுகொண்டு மூர்த்தியைப் பார்த்தவண்ணமாய் உளத்தால்


பூசித்தது. இங்ஙனம் கரிக்குருவியானது மூன்று வேளைகளிலும் தவம் புரிந்தது. எங்குமிருப்பவனும் எல்லாமறிந்தவனுமான ஆலவாயுடையான் குருவியின் புனிதமான செயல்கண்ணுற்று வியப்புடன் தேவியாரிடம் அடிக்கடி அதைப்பற்றிப் பேசியதுண்டு.


சின்னாட்கள் சென்றதும், கருணைவடிவமான பெருமான் அந்தக் கரிக்குருவிக்கு மிருத்யுஞ்செயமா மந்திரத்தை இருடி, சந்தம், தேவதை முதலானவையுடன் உபதேசித்து அதைநோக்கி "அதிகாலையில் எழுந்து மிகப்பரிவுடன் விரும்பியனயாவையும் கொடுக்கவல்ல அம்முவ்வெழுத்து மந்திரத்தைச் செபம்செய். அந்த மந்திரத்தின் ஆற்றலால் உனக்குக் காக்கைகளிடமிருந்துண்டாம் அச்சம் நீங்கிவிடும். மந்திரத்தை உனது இனத்தார்க்கும் உபதேசம் செய். அவர்களுக்கும் அந்த பயம் நீங்கும். உங்களது குலமும் பெருகும், என்று அருளினர்.

குருவியானது இறைவனது திருமொழிகளைக் கேட்டு, அக மகிழ்ந்து, வணங்கிக் கூறியகாலத்தில் மந்திரத்தைச் செபித்தது. கரிச் சானுக்குக் கடிதில் வலிமை பிறந்தது. அப்பொழுது முதல் அது காகங் களைச் சுற்றிப்பறந்து அவைகளின் தலையில் தனது மூக்கால் கொத்திற்று. சனங்கள் அதுகண்டு ஆச்சரியப்பட்டுச் சிறிது பலமுடைய கரிக்குருவியை, வலியான் என்று அழைக்கத் தொடங்கினர். மூக்காலமறிந்த யோகியர் இறைவனது சருவ வல்லமையைப் போற்றினர். இன்றும் வீடியற்காலத்தில் கேட்கப்படும் கரிக்குரிவியின் ஓசையானது மிருத்யுஞ்செய மந்திரம் போன்றதாகவே இருக்கின்றது. இந்த மந்திரத்தைச் செபித்ததால்தான் கரிக்குருவிக்கு வலியான் என்ற பெயர் வந்ததென்பது உலகறிந்தவிஷயம். கரிக்குருவிக்குச் சோமசுந்தரமூர்த்தி உபதேசம்செய்த இந்த மிருத்யுஞ்செய மந்திரத்தை அதிகாலையில் தெளிந்த மனதும் இருடி, சந்தம் முதலியவற் றுடன் செபிக்கும் ஒருவன் சாக்காட்டையும் பிணிகளையும் வெல்கின்றான். அந்த மந்திரத்தைச் செபித்தல் ஒன்றாலேயே நீண்ட ஆயுளையும், பிணியின் மையையும், செல்வத்தையும், போரில் வெற்றியையும் ஒருவன் பெறலாம்.


சோமசுந்தரக்கடவுள் உலகையின்பேரில் புரிந்த இத்தத்திரு விளையாடலைப் படிப்போரும் கேட்போரும் இம்மையில் இன்பங்களனைத தையும் அனுபவித்துக் கடைசியில் சத்திய உலகம் செல்வர்.

இந்த நாற்பத்தேழாம் திருவிளையாடல் பகைவர்மேல் வெற்றி யீந்து செல்வங்களைப் பயக்கக்கூடியது.





நாரைக்கு முத்தியளித்தல்



ஐம்பத்திநான்காவது அத்தியாயம்.

நாரைக்கு முத்தியளித்தல்.

மிகுந்த ஆழமும் அகலமுமுடைய ஓர் குளத்தில் நாரையொன்று தன் முன்பு ஓடும் மீன்களைப் பிடித்துத் தின்றுகொண்டு சுகமாகவிருந்தது. ஒரு சமயம்மழையில்லாமல் குளம் வறண்டுபோயிற்று. அப்பொழுது நாரை வருத்தத்துடன் மீன்களுக்காகத் தண்ணீர் இருக்கும் பல தவவனங்களில் திரிந்து, கடைசியாகச் சத்தியத்தவர் எனும் முனிவரின் ஆச்சிரமத்தைக் கண்ணுற்றது. அங்கு அச்சோதம் என ஓர் வாவியிருந்தது. சவுக்கமாக கூப்பிடுதொலைவு நீள அகலமுடையதாய் நான்கு பக்கங்களிலும் படித்துறைகளுடன் விளங்கிற்று. அதைச்சுற்றி நான்கு புறங்களிலும் எப்பொழுதும் பூவும் காயுமாயிருக்கின்ற மரங்கள் இருந்தன. மிக்க ஆழமும் தெளிவும் பெற்ற அதன் நீரில் குட்டிமீன்களும், நடுத்தர மீன்களும், பெரிய மீன்களும் கூட்டம் கூட்டமாகக் கூடித் துள்ளி விளையாடின. அவற்றைப் பார்த்து நாரை தண்ணீரின் அருகாமையில் வந்தது. அப்பொழுது முனிவர்கள் நீராடவந்து கழுத்தளவு நீரில் நின்றனர். பெரியமீன்கள் தொந்தரவு ஒன்றும் செய்யாமல் விலகிப்போய்விட்டன, குட்டிமீன்கள் அண்டையில் வந்து அவர்களைக் கடியாமலிருந்தன.

நாரை அதைக்கண்டு வியப்பெய்தி "இந்த மீன்கள் முனிவர்க்கு தொந்தரைகொடாமலிருப்பதுடன் அவர்களுக்குப் பணிவிடையும் செய்கின்றன. அவை நீரைமாத்திரம் அருந்துகின்றன. என்றாலும் மேனியில் வாட்டமில்லை. ஆச்சிரமத்தின் மாண்பால் அவை கொல்லாமை விரதம் பூண்டிருக்கின்றன போலும். ஆனதுபற்றிநான் அவற்றைத் தின்னப் போவதில்லை. இரக்கத்தின்பேரில் இந்தநோன்பை மேற்கொள்கின்றேன். பசியோ மிக அதிகமாயிருக்கின்றது. நான் என்னசெய்வதென்று தனக்குள்ளாகவோ சிந்தனைசெய்தது. பகற்பொழுது ஒரு நொடிப்போன்ற போயிற்று. இரவும் அங்ஙனமே. நாரையின் பசியும் பறந்துவிட்டது. அது அருந்தியதுபோன்று காணப்பட்டது.

ஆச்சரியத்துடன் மறுநாட்காலையில் அங்குமிங்கும் சுற்றுகையில் வாவியின் ஓர் மூலையில் தன் இனத்தைச்சேர்ந்த பறவைகள் இருக்கக்கண்டது. அவையாவும் வந்த சோலையைக் கண்ணுற்றுக் களித்தன. அது அவர்களது கூட்டத்தில் உவகையுடன் வெகுநாள் வசித்தது. வாவியின் மேல்புறத்தில் மிகப் புனிதமான ஓர் மண்டபத்தில் சத்தியத்தவமுனிவர் மற்ற முனிவர்க்குப் புராணம் சொல்லிவந்தார். அப்பொழுதெல்லாம் அந்த நாரையானது அவரது அண்மையிற் சென்று புராணச்சொற்களைக் கேட்டு வினையின்பயனால் பரவயமாயிற்று. தலங்களின் மாட்சியைச் சொல்லுங்கால் ஆலவாய்த்தலத்தின் பெருமை வந்தபொழுது முனிவரனைவரும் பேருவகையடைந்தனர். அங்ஙனமே நாரைப்புள்ளும் பேரானந்தமடைந்து அண்

போல் அசைவற்று நின்றது. மதுரையம்பதியில் உறையும் சோமசுந்தர மூர்த்திபோன்ற கருணையுடைய சிவபெருமான் மற்றைத்தலங்களில் இல்லை. தவத்தின்பயனை உடனே வீரும்புவோர் ஆலவாய்த்தலம் செல்லவேண்டும். பிறவிடங்களில் தவத்தின் இறுதியில் கிடைக்கும்பயன் ஆலவாய்த்தலத்தில் தவத்தின் தொடக்கத்திலேயே கிட்டும். ஆலவாய்த்தலத்தில் செய்யும் தவமோ, செபமோ, பூசையோ, ஓமமோ அல்லது பிற அறச்செயல்களோ கடிதில் பயனைத்தரும். தேவர்களுக்குள் எங்ஙனம் சிவபெருமான் பெரும் தேவரோ அங்ஙனமே தலங்களுக்குள் கடம்பவனத்தலம் பெரும்தலம். ஆதியான தீருத்தங்களுள் பொற்றாமரைப் பொய்கையானது முதன்மையாயிருத்தல் பற்றி அதற்குப் பெரும் தீருத்தமெனப்பெயர். பழமைபெற்ற இலிங்கங்களுள் மிகப் பழமையுடையது சோமசுந்தர லிங்கம். ஆனதுபற்றியே அதைப் பேரிலிங்மெனப் பெரியோர் கூறுகின்றனர். பெரும்தலமும், பெரும் தீருத்தமும், பெருமிலிங்கமும் உலகத்தாரின் உதவிக்காகவே ஒருங்கு கூடி ஓரிடத்தில் திகழ்கின்றன. ஆதலால் அங்குள்ளதற்குச் சமமான தலமோ, தீருத்தமோ, இலிங்கமோ மூவுலகிலும் வேறெங்கும் கிடையாது. இதையான் மீண்டும் மீண்டும் கூறுவேன். தன்னை நினைத்தமாத்திரத்திலேயே சுத்தசைவசமூர்த்தி எவ்வாறு அண்டினவர்பால் கருணைபுரிகின்றாரோ அவ்வாறு பிரிதிடங்களிலுள்ள பெருமானது மூர்த்திகள் செய்வதில்லை. ஆகவே, பிறைசூடியான சிவபெருமான் எங்கு சோமசுந்தரமூர்த்தியாய் விளங்குகின்றாரோ அந்த ஆலவாய்த்தலத்திற்கே இன்பமும் வீடும் வீரும்புவோர் செல்லவேண்டும். என்றிவ்விதமாகச் சத்தியத்தவமுனிவர் கூறினர்.

நாரைக்கு இவற்றைக் கேட்கும்பொழுது அடங்காதமனமகிழ்ச்சி. உடனே அது அச்சோதப் பொய்கையைவிட்டு மதுரைப்பதிக்குப் பறந்து சென்று புனிதமான பொற்றாமரையில் நீராடி, சோமசுந்தரமூர்த்தியின் திருவாலயம் அடைந்துப் பன்முறை வலம்சுற்றி விழுந்துவிழுந்து தொழுது பேரிலிங்கத்தைக்கண்டு அதன் முன்னிலையில் அசைவற்று நின்று, சிவபெருமானை நெஞ்சத்திருத்தி, அகவேள்வி முறைப்படி, அதற்குண்டான பண்டங்களைக்கொண்டு, உளத்தாலேயே, மூன்று நேரங்களிலும் பலகோடி இலிங்கங்களுக்கும் முதற் காரணமானவனும், இறைவனும், ஆலவாயுடையானும் உண்மை, அறிவு, இன்பவடிவானவனும், பேரிலிங்கமானவனும், பெருஞ் சித்திகளையளிப்பவனும், பாவங்களை நீக்குபவனும், நான்கு குறிக்கோள்களையும் தருபவனும், தேவேந்திரனால் வணங்கப்பெற்றவனும், உடனே பழிகளை யழிப்பவனும், இன்னல்களைப் போக்கித் திருவனைத்தையும் ஆக்குபவனும், பிறவியினின்று கடத்திவைப்பவனும், எல்லாத் தத்துவங்களிற்கும் காரணமானவனும், கருணையமுதக் கடலும், உலகனைத்திற்கும் பயத்தை யூட்டிய ஆலால கஞ்சையுண்டகற்கறியவனுமான அப்பெருமானை வழிபட்டது.

இங்ஙனம் பதினைந்து நாட்கள் கழிந்தன. பதினாறும்நாள் காலையில் நாரையானது வழக்கம்போன்றப் பொற்றாமரைக்கு நீராடச்சென்று கரையில் நின்றுகொண்டிருந்தது, அப்பொழுது பல மீன்கள் கண்ணிற்பட்டன. நாரைக்கோ மிகுதியான பசி. அவற்றைச்கொல்ல எண்ணினிற்று. ஆனால் அடுத்தகணத்தில் அந்தத்தீய நினைப்புப்போய் நல்லெண்ணம் வந்து விட்டது. மாறுதற்குக் காரணம் தோன்றும்போது மாறுதிருத்தலன்றே

பெரியோரின் இலக்கணம். அப்படிக்கின்றி மீன்கூக்கண்டதும் ஆசை கொண்டுவிட்டேனே! என்னே! எனது அசட்டுப்புத்தி என்று நாரை தனக்குத்தானே சொல்லிக்கொண்டது. இங்ஙனம் தன்னிடத்தே அன்புசெலுத்தும் அதற்குப் புத்திமாருட்டம் ஏற்படாதது கண்டுகளித்து இறைவன் அதற்கருளவேண்டுமென்ற நோக்கத்துடன் கயக்கண்ணியம்மையாரை யிட்டுக்கொண்டு பொற்றுமரை சென்று முதலில் அதிலிருந்த மீன்கூயும் மற்றை நீர்ச்செத்துக்கூயும் மறையும்படி செய்தார் பின்னர் நாரைக்கு முத்தியளித்தார். கொல்வதையே இயல்பாகவுடைய நாரை கொல்லாமை விரதம் பூண்டு ஒழுகியதாலும், பெருமானிடத்தே அன்பு செலுத்தியதாலும் பெருமானது உலகத்தையடைந்து கணங்களின் தலைமை நிலையைப்பெற்றது.

கடம்பவனகாதை நாற்பத்தெட்டாம் திருவிளையாடலாகின்ற இதைப் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் செல்வங்கள்யாவும் உண்டாம்.



ஐம்பத்தைந்தாவது அத்தியாயம்.

ஆலவாயின் எல்லை காட்டல்.

ராசராசபாண்டியனுக்குப் பின் புதல்வன் வழியே வரிசையாகச் சுகுணன், சித்திராதன், சித்திரபூடணன், சித்திரத்துவசன், சித்திரவருமன், சித்திரசேனன், சித்திரவிக்கிரமன், ராசமார்த்தாண்டன், ராசசூடாமணி, ராசசார்த்தூலன், ராசகுஞ்சரன், உக்கிரசேனன், மகாசேனன், சத்துருஞ்செயன், பீமரதன், பீமபராக்கிரமன், பிரதாபமார்த்தாண்டன், விக்கிரமகஞ்சுகன், உயுத்தகோலகன், அதுலவிக்கிரமன், அதுலகீர்த்தி, கீர்த்திலிபூடணன், என்ற பாண்டியமன்னர்கள் மதுரைகளில் அரசியற்றினர். இவர்களது பெயர்களே வரிசையாய்ச் சொன்னால் புண்ணியமுண்டு. இவர்கள் ஒவ்வொருவரும் வெகுகாலம் தெறிதவறாது அரசுபுரிந்து பின்னர் விண்ணுலகம் எய்தினர்.

பின்பு ஓர் மனுவினது காலம் முற்றுப்பெற, பேரலைகளுடன் கடலானது பொங்கி நாடுமுழுதையும் ஒரே நீராக்கிவிட்டது. எங்கும் நீர்மயம். ஆனால் மதுரையம்பதிக்கு மாத்திரம் கேடு நேரவில்லை. பேரூழிக் காலத்திலும் அழிவுறாத அந்தத் திருப்பதியா ஓர் மனுக்கால முடிவில் அழிவுறப்போகின்றது! சோமசுந்தரமூர்த்தியின் திருக்கோயிலும் பொற்றாமரைப் பொய்கையும், பெருந்தேவியாரது திருவாலயமும், ஆலவாய்த்தலமும் கடலால் கொள்ளப்படாமல் அப்படியே நின்றன. அதற்குக் காரணம் எப்பொழுதும் சுந்தரேசப்பெருமான் இலிங்கத்தில் இருக்கைகொள்ளலே. அவ்விலிங்கமானது பெரும் ஊழிக்காலங்களிலும் அழிவுறாத்தன்மையது. ஆலவாய்த்தலமென்ன, அதைச் சுற்றிலுமுள்ள பெருமானது பெருஞ்செயல்களாலேற்பட்ட மலைகளென்ன, பொற்றாமரை வாவியென்ன, அதைப் போலவே ஏழுகடலென்ன இவையாவும் கயக்கண்ணியம்மையால் இறைவனது மாட்சியைக் காட்டுதற்பொருட்டுக் காக்கப்பெற்றன. கொடிய வெயிலாலும், பெரும் காற்றாலும், அதிக மழையாலும், பொங்கிய கடலாலும் புவியனைத்தும் அழிந்துகிடந்தது.

ஊழி முடிவிற்குவந்து வெகுகாலத்திற்குப் பின்னர், காற்றும் மழையும் வெயிலும் தணிந்தன. பெருகிய கடலும் குறைந்தது. பூமிமுன்போல் காடுகளுடன் தென்பட்டது. தேவர், விலங்குகள், மக்கள் முதலான செந்தக்கோப் பிரமன் படைத்தார். முன்போலவே சூரியனிடத்திலிருந்தும் சந்திரனிடத்திலிருந்தும் மன்னர்கள் தோன்றினர். பாண்டியனும், சோழனும், சோழனும் வேந்தராய் விளங்கினர். பாண்டியநாட்டில் வமிச சேகர பாண்டியன் என்பவர் அரசுபுரிந்தான். அவன் சோமசுந்தரமூர்த்தியின் இந்திரவிமானத்தைச் சுற்றி சிறு நகரமொன்றையமைத்து அதில் சிலகாலம் குடியிருந்தான். கொஞ்ச காலத்திற்குள்ளேயே குடிகள் பெருகி ஊர் நெருக்கமாயிற்று. சனங்கள் பெருகிக்கொண்டு வருவதையும் நகர் சிறுத்திருப்பதையும் எண்ணி அரசன் அடிக்கடி கவலைகொண்டான்.

பின்புஒருநாள் வழிசசேகரபாண்டியன் கருணைக்கடலாம் ஆலவாய் நாதனையணுகி "பெரும்தேவனே! மதுரைக்கு இறைவனே! பிரமன் மகா விட்டுணு இவர்களால் வணங்கப் பெறுபவனே! தேவர்களுக்குத் தலைவரான உமது நகர் மிகப்பெரிது. என்போன்ற அறிவிலிகள் அதன் அளவை அறிந்துகொள்ள இயலவில்லை. கருணைக் களஞ்சியமே! அதைத் தெளிவாக் கியருளவேணும்" என வேண்டிக்கொண்டான். உடனே எம்பெருமான் இலிங்கத்தினின்றும் இளம்பி மேனிமுழுதும் அரவாபரணங்கள் பூண்ட ஓர் சித்த உருவில் மகாமண்டபத்திற்கு வந்து வழிசசேகரபாண்டியனை அருள் நோக்குடன் பார்த்துத் தனது தோளில் இலங்கிக்கொண்டிருக்கும் சருப்ப அரசரூன வாசுகியை நகரில் எல்லைகளைக் காட்டித்தரும்படியாய்ப் பணித் தார். வாசுகி புயத்தினின்று இறங்கிப் பெருமானைப்பார்த்து "இறைவனே! எனது உடல் வளைவுகளுடனிருப்பதால் அதனால் எல்லை காண்பிக்கப்பட்டு அதன்பேரில் கட்டப்பெறும் கோட்டையானது வளைவுகளுடன்தான் இருக் கும். அந்தக் கோட்டை எனது பெயரால் வழங்கப்படவேண்டும்" என விண்ணப்பித்துக்கொண்டு, பேரிலிங்கத்திற்கு நேரே கிழக்கில் ஒருயோச னைத் தொலைவு சென்று, வாலை அங்கேவைத்துத், தனது படத்தைவிரித்து, வலமாக நகரைச்சுற்றிலும் கொணர்ந்து, மீண்டும் வாலொடு சேர்த்து, இவ்விதமாகப் புரத்தின் எல்லையைக் காட்டிவிட்டு மறுபடியும் இறைவனது நேரேயடைந்தது. உடனே சித்தவேடத்திலிருக்கும் பெருமான் பாண் டியராசனைப்பார்த்து வாசுகி காட்டிய எல்லைகளை வைத்துக்கொண்டு நகரை அமைத்துக் குடிகளைக் காத்துக்கொண்டு வெகுகாலம் வாழ்வாயாக" என்று அருளிச்செய்து அலைகடலிற்போன்று இலிங்கத்தில் மறைந்தார். அரசன் மூர்த்தியை வணங்கி இலிங்கத்திற்கு இரத்தினமயமான கவசத்தையும் மற் றும் பல ஆபரணங்களையும் இறைவனிடத்தே எற்பித்துச் சருப்பம் காட்டிய வரைப்படியே கோணலாகக் கோட்டையைக் கட்டுவித்தான். அதுமுதல் கடம்பவனத் தலத்திற்கு ஆலவாய்நகர் எனப்பெயர் வந்தது.

நகரின் பரப்பு இரண்டுயோசனைத் தொலைவு. அதன் கிழக்கு வாயில் திருப்பூவணத்தலம். தெற்கே கந்தபெருமான் கோயில் கொண்டி ருக்கும் திருப்பரங்குன்றம். மேற்குவாயில் திருவேடகம். வடக்கு வாயில் பெயர்பெற்றதான இடபமலை. இங்ஙனம் நகரின் நான்கு எல்லைகளும் வகுக்கப் பட்டன. இந்த எல்லைக்குள் புகும் செந்துக்களும் புற்பூண்டுகளும் யாவும் பாவங்கள் நீங்கிச் சிவபெருமானது சாரூப்பியம் பெற்று முத்தியடை கின்றன. பெரும்பழிகளை யிழைத்தோரும் ஆலவாய்த்தலத்தில் மரித்த லால் முத்தி யெய்துகின்றனர். அறிவாளிகள் ஆலவாயின் மாண்மியத்தை யுணர்ந்து இம்மையிலும் மறுமையிலும் இன்பம்பெறுதற்பொருட்டு எப்பொ முதுமே அங்கு வாழ்கின்றனர்.

இவ்விதச் சிறப்புகள் வாய்ந்த ஆலவாய்க் கோட்டையைக் கட்டு வித்தபின் அரசன் நகரை அமைத்தான். எங்கும் மாடமாளிகை கூடகோ புரங்கள் தோன்றின. ஆகாயத்தைத் தொடும் கொடிகள் பறந்தன. நகர் முழுதிலும் வேள்வியியற்றும் வேதியரது தேவர்களையழைக்கும் ஒலிகள் முழங்கின. நகரின் பலபாகங்களில் நறுமணங் கமழும் பூங்காக்கள் தோற் றுவிக்கப்பெற்று விளங்கின. பின்னர் சுவாமி கோயிலும், அம்மன்கோயி லும், மதில்களும், மண்டபங்களும், பிறவும் கட்டுவிக்கப்பெற்றன. கோயி

றுச்சு வேண்டும் குடை, சாமரம், மேல்கட்டி முதலானபொருள்களை அரசன் இரத்தினத்தாலும் பொன்னாலும் ஆக்குவித்தான். கடல்கொண்டு போதற்குமுன்பு நகர் எங்ஙனம் விளங்கிற்றோ அங்ஙனமே மீண்டும் எல்லா விதப் பொலிவுகளுடன் விளங்கிற்று. அரசனும் உவகையுடன் தெய்வங்களிடத்தும் வேதியரிடத்தும் அன்பு செலுத்திக்கொண்டு மனுநெறிதவறாது அரசியற்றினான். சோமசுந்தரமூர்த்தி கயக்கண்ணியம்மையாருடன் எப்பொழுதும் இலிங்கத்தில் இருக்கைகொண்டு திருவருளைச் சொரிந்துகொண்டிருந்தார். அவரது பேரருளால் வமிசசேகரபாண்டியன் வமிசசூடாமணியெனும் புதல்வனைப் பெற்று அவனுடன் இன்பமாக வாழ்ந்தான்.

இது இறைவனது நாற்பத்தொன்பதாம் திருவிளையாடல். இதைப் படிப்போரும் கேட்போரும் சித்திகள் யாவையும் பெற்றுப் புவியில் நீண்ட காலம் வாழ்வர்.



ஐம்பத்தாருவது அத்தியாயம்.

சோழனது படையை முறியடித்தல்.

வம்மிசபாண்டியன் ஆட்சிபுரியும்காலத்தில் அவனுக்கு எதிராகப் பல மன்னர்கள் ஒன்றுகூடிப் போருக்கு வந்தனர். அவர்களின் தலைவன் வீரஞன விக்கிரமசோழன், ஈரேசன், கசேசன், சூரன், அசுவபதி இக்கால் வரும் சோழவேந்தனது முக்கியமான தூணவர். இவர்களுடனும், மற்றும் பல அரசர்களுடனும் சோழராசன் நால்வகை படைகளையும் திரட்டிக் கொண்டு வைகையாற்றின் கரையில் இருப்புவைத்துக்கொண்டான்.

அவனது படையினர் மதுரைக்குட் புகுந்து பல மாடுகளைக் கவர்ந்து சென்றனர். குளக்கரைகளை உடைத்தனர். வயல்களிலிருந்து கொண்டுவரும் நெல்லைச் சூழ்ந்துகொண்டு தடுத்தனர். தெய்வத்தையே நம்பிய பாண்டியவேந்தன் அமைச்சரை நோக்கி "சோழன் முதலான பல மன்னர் பெரும்படையொடு வந்திருக்கின்றனர். பலக்குறைவுடைய நாம் அதிகப்பலம் படைத்த அவர்களை வெல்லமுடியாது. அண்டினவர்க்கருள் புரியும் ஆலவாயுடையானொருவரே நமக்கு உற்றதுணை. வேறு யாருமில்லை" என்று கூறினன். அரசன் சொல்வது உண்மையேயென்று அவர்கள் மறு மொழியளித்தனர்.

உடனே அரசன் அட்டாளசுந்தரமூர்த்தியை அடைந்து "தேவர்க்குத் தேவனே! கருணைக்கடலே! அடைக்கலமென்றோரின் துயரைப்போக்குபவனே! இறைவனே! அட்டாளசுந்தரமூர்த்தியே! விரும்பியதளிப்போனே! மூவ்வுலகிற்கும் களிப்பூட்டுபவனே! நீதான் எனது தாய்! நீதான் எனது தந்தை! நீதான் எனது உற்றவன்! நீதான் எனது ஆசிரியன்! நீதான் எனது வித்தை! நீதான் எனது செல்வம்! நீதான் என்னைக் காப்பவன்! நீதான் எனக்கு எல்லாம்! சோழராசனை முன்னிட்டுக்கொண்டு பல அரசர் என்னுடன் போர்தொடுக்க வந்திருக்கின்றனர். அவர்களை வெல்வதற்கு எனக்குத் திறமை போதாது. நான் என்ன செய்வது? மேலிலும் மேலான தான இந்த ஆலவாய்த்தலம் உனதே! இங்கு வாழும் சனங்கள் அனைவரும் உன்னுடையவரே! காலை உனது அடிமை, இதிற் சிறிதும் ஐயமில்லை; உன தான தலத்திற்கோ, உன்னுடையவரான சனங்களுக்கோ, அல்லது எனக்கோ கேடு நேரிடுமாயின் அந்த இழிவு உன்னுடையதே!" என மொழிந்து கண்களிலிருந்து நீர் சொரியக் கட்டைபோன்று வீழ்ந்து வணங்கினன். உடனே 'அஞ்சவேண்டாம், பகைவருடன் உறுதியாய் நின்று போர்புரிவாயாக. நான் துணை செய்வேன்" என்று பெருமானது திருவாய்மொழி பிறந்தது. அதைக்கேட்டு வமிசசேகரபாண்டியன் வியந்து ஈடிலா உவகையெய்தி எட்டு உறுப்புக்களாலும், ஐந்து உறுப்புக்களாலும் மூன்று உறுப்புக்களாலும் மீண்டும் மீண்டும் வணங்கித் திருநீற்றை மேனிமுழுதும் பூசிக் கெட்டியாகக் கவசம்பூண்டு, நால்வகைப் படைகளிலும் நிறைதளவு எடுத்துக் கொண்டு, இறைவனை வலம்வந்து தொழுது, போருக்குக் கிளம்பினன்.

பாண்டியன் புறப்பட்டதைக் கேள்வியுற்ற சோழனும் மற்றை அரசர்களும் கூடிவிட்டனர். இரண்டு பக்கங்களும் கடிதில் கைகலந்தன. போர் இடபகிரியின் வடபுறத்தில் மூண்டது. முதன்மையான பாண்டியனும் சோழனும் நேருக்கு நேராகச் சண்டைபுரிந்தனர். சோழன் பக்கலில் நின்ற சில வில்வீரர் அம்புகளை எய்து பாண்டியனது படையினரைக் கொன்றனர். சோழப்படைகளின் சிங்கமுழக்கத்தைக் கேட்ட அட்டாள சுந்தரமூர்த்தி உடனே வில்வீரவேடம்பூண்டு, தனது பெயரைத்தாங்கும் பல அம்புகளையும் எடுத்துக்கொண்டு பாண்டியனது படைமத்தியில்தோன்றி அவனிருந்து அம்புகளைத் தொடுத்தார். ஒரு அம்பு சோழனது படையில் நூருபேர்களைக் கொன்றது. கூரான புத்தியுடைய சோழன் அந்த அம்பை எடுத்துப்பார்த்து அதில் பெருமானது பெயர் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்ணுற்றுச், சோமசுந்தரக் கடவுள் காமதேனுபோன்றுத் தனது அன்பர்களின் விருப்பங்களை நிறைவேற்றுகின்றார். சிந்தாமணிபோன்று நினைத்தவை யனைத்தையுமளிக்கின்றார். இங்ஙனம் மூன்று உலகங்களிலும் பெயர் விளங்கும் ஆலவாயுடையானை முன்னிட்டுக்கொண்டே பாண்டியன்போருக்குப் புறப்பட்டான். பெருமானது மாட்சியால் பாண்டியன் முன்பு நாம் நிற்கமுடியாது. அன்பனைக் காக்கும்பொருட்டு அவர் விறகு விற்றார். அவரோடு நாம் போர்புரிந்தால் மடிவது திண்ணம்' என்று தீர்மானித்துத் தனது வீரரிடம் உண்மையையுரைத்தான். பிற அரசர்களுக்கும் கூறினான். அவர்கள் உடனே சண்டை செய்வதை நிறுத்திவிட்டுச் சும்மா நின்றனர்.

ஆனால் தமது வலிமையில் செருக்குற்ற திருக்கர்போன்ற சில மிலேச்சமன்னர் போர் வேண்டாமென்று சோழராசன் உரைத்ததை ஏற்றுக்கொள்ளாது அவனைத்திட்டிவிட்டுப் போரைத் தொடர்ந்து நடத்தினர். பாண்டியன் அட்டாளமூர்த்தி கண்ணெதிரே நிற்பதைக் கண்டு மிகவும் உறுதிபெற்றுக் கொஞ்சமும் அச்சமின்றிப் போர்க்களத்தில் நின்றனன். உடனே அன்பர் துயர்தீர்க்கும் அட்டாளப்பெருமான் தனது பெயர்பூண்ட அம்பு ஒன்றைப் பகைவரை நோக்கி விடுத்தார். அது கதிரவன்போன்று ஆயிரம் கதிர்களாக வெடித்து ஆயிரக்கணக்கான திருக்கர் முதலியவரது நெஞ்சுகளைப் பிளந்தது. புரவி, யானை, தேர் இவற்றொடு அவர்கள் கீழே விழுந்தனர். சோழமன்னன், போர்க்களம் முழுதும் அவர்களது பிணங்களால் நிறைந்திருக்கக் கண்டு ஆலவாயுடையாரது பெருமையைப் புகழ்ந்து கொண்டு தொடிப் பொழுதில் அங்கிருந்து வெளியேறிவிட்டான். மற்றை வேந்தரும் அவனைப் பின்தொடர்ந்தனர். இவ்வாறு அட்டாளசுந்தரமூர்த்தி பாண்டியனுக்கு வெற்றியையும் சோழனுக்குத் தோல்வியையும் கொடுத்தார். பின்னர்ச் சிறுநகையுடன் அருள்நிறைந்த கடைக்கண்ணால் பாண்டியராசனை நோக்கிவிட்டுத் தனது உறைவிடமாகும் அட்டாள மண்டபத்திற் புகுந்தருளினார்.

அரசன் சிறிதும் சிதைவுறுத தனது படையுடன் அட்டாளமூர்த்தியை அன்புடன் போற்றி இறைவனுக்கு முத்துக்களையும், இரத்தினங்களையும் ஆடைகளையும் காணிக்கையாகச் செலுத்தினன். மதுரையம்பதியில் வாழும் சனங்கள் யாவரும்அட்டாளக்கடவுளின் வீரியத்தை நேரில் கண்ணுற்று 'இறைவனே! இறைவனே!' என்று புகழ்ந்தனர். புலவர்கள் அர

சன்து பெருமையைப்பாட அவன் உவகைக்கடலில் ஆழ்ந்தனன். அட்டமூர்த்தியின் அருளைப்பெற்றுப் பகைவரை வென்று அரசர்க்கரசனானன்.

கடம்பவனநாதனது இந்த ஐம்பதாம் திருவிளையாடல் விரும்பிய யாவற்றையும் தரும்.



ஐம்பத்தேழாவது அத்தியாயம்.

சங்கப்பலகையளித்தல்.

உலகத் தாத்தாவான பிரமதேவர் இயங்குகின்றதும் இயங்கியல் பற்றதுமான சகமனேத்தையும் படைத்துக் களிப்புற்றிருந்தார். ஒருகாலத்தில் காயத்திரி, சாவித்திரி, சரசுதி என்ற தனது மூன்று தேவிமாருடன் காசித்தலத்திற்கு பெரும் வேள்விகள் புரிதற்பொருட்டு வந்தார். அங்கு அவர் பிதாமகேசுர லிங்கத்தை நிறுவித்து அதன் முன்னிலையில் தசாசுவ மேதத் தீருத்தமொன்றையும் சமைத்தார். எம்பெருமானது முன்னர் அவர் ஒன்பது அசுவமேத வேள்விகளே முடித்து மூன்று மனைவியருடன் தீருத்தத்தில் அவபிருதமும் நீராடினர். பத்தாவது வேள்வியும் முடிந்தது. பிரமதேவன் முனிவருடன் நீராடற்குச் சென்றார். அனைவரும் வந்தனர். சரசுதிதேவிமட்டும் வரவில்லை. அந்த அம்மை கந்தருவமகளிரது பாட்டைக் கேட்டு அதில் ஈடுபட்டுப் பின் தங்கிவிட்டாள். பிரமன் அவளில்லாமலே மற்றைத் தேவியருடன் நீராடலை முடித்துக்கொண்டார். அதற்குள்ளாகச் சரசுதிதேவி வந்து தானில்லாமல் எப்படி நீராடலாமென்றுப் பலவாறு தேவனைக் கடிந்து பேசினாள். தேவன் அது பொறுக்கமாட்டாது அவளை நோக்கி 'நீ ஒவ்வாத சினங்கொண்டு என்னைக் கடிந்துபேசியதால் பூவுலகில் நாற்பத்தெட்டு முறை மானிடப்பிறவி யெய்துவாயாக' எனச் சாபமிட்டு அமைதியை அடைந்தார்.

உடனே சரசுதியம்மை பிரமனது தாள்களைப் பிடித்து வணங்கித் ''தேவனே! அறியாமையால் நான் கடிந்துபேசியதனேத்தையும் மன்னித் தருளவேண்டும்' என்று திரும்பத் திரும்ப மன்றாடி வேண்டிக்கொண் டாள். அதன்பேரில் தேவன் மனமிரங்கி அவளை நோக்கிச் 'சரசுதி! உனது உடலாகும் எழுத்துக்களில் அ முதல் ஸ ஈறாக உள்ள நாற்பத்தெட்டு எழுத்துக்களும் புவியில் வெவ்வேறான உருவங்களுடன் பெரும் புலவர் களாகத் தோன்றும். ஹகாரவடிவினரான சிவபெருமான் அவர்களது மத் தியில் தானும் ஒருவராக விளங்குவார். ஆகவே, மொத்தத்தில் நாற்பத் தொன்பது புலவர் இருப்பர். இவ்வாறு உனது உடலினின்றும் பிறந்த இந்த நாற்பத்தொன்பதின்மரும் பூலோக சிவலோகமானதும், தலங்களுள் தலைசிறந்ததும், தவாதசாந்த நிலையானதும், பிரமன், மகாவிட்ணு முத லான தேவர்களால் பூசிக்கப்பெற்றதும், எல்லாவகையான பழி, சாபம், பிணி இவற்றிற்குப் பெரும் தீப்போன்றதும், சுந்தரேசப்பெருமானது திரு நகரானதுமான ஆலவாய்த்தலத்தில் தோன்றி தமிழ் மக்களனேவரையும் களிப்பித்துச் சோமசுந்தரமூர்த்தியின்மீது புகழ்கள்பாடி அவரது திருவருள் பெற்றுப் புவியில் அடையக்கூடிய இன்பங்களைத் துய்த்துப் பல்வகை நூல் களியற்றி அரசரது மதிப்பை யெய்தி இறுதியில் பெருமானது அருளால் முத்தியடைவர். நீயும் எப்பொழுதும்போன்று எங்களுடன் இன்பங்களை யடைந்துகொண்டு தாயவளாய் எனது நாவில் உறைவாய்' எனச்சாபம்

நிரும் வழியை விளக்கியருளினர். பின்னர் அவர் உலகங்களிற்கெல்லாம் மேலிருக்கும் தனது இருப்பிடமாகின்ற சத்திய உலகத்திற்குச் சென்றார்.

இங்ஙனம் பிரமதேவனது சாபத்தால் சரசுதியம்மையின் உடலாகும் எழுத்துக்கள் புவியில் காற்பத்தெட்டுப் புலவர்களாகத் தோன்றின. நக்கீரர், கபிலர், பாணர்முதலான அச்சங்கப்புலவர்கள் அனைவரும் கெங்கை வெள்ளம்போன்ற சொற்பெருக்குடையராய், ஒப்பிலாத பெருமையுடன், சிறந்த பாக்களால் வேந்தர்களைப்பாடி, அவர்களிடமிருந்து பரிசுகள்பெற்று, சென்றவிடமெல்லாம் வெற்றிக்கொடி காட்டிக் களித்திருந்தனர். அவர்கள் வடமொழி முதலிய மொழிகள் யாவையிலும் எல்லாச்சாத்திரங்களிலும் மட்டிலாத் தேர்ச்சிபெற்றவர். சிவநெறியில் ஈடுபட்டவராய் எப்பொழுதும் அவனைத் தொழுதனர். தமிழ் மொழியில் மிக்கவல்லுனர்.

இப்புலவர்கள் ஒருசமயம் கயக்கண்ணியம்மையுடன் விளங்கும் சோமசுந்தரமூர்த்தியைக் காண்டற்பொருட்டு ஒன்றுகூடி மதுரைப்பதியை நோக்கி வந்தனர். விமானத்தின் உச்சியில் பொலியும் தங்கத் தூபி அவர்களது நோக்கில்பட்டது. உடனே அவர்களனைவரும் கீழே விழுந்து வணங்கி எழுந்து உலகமேலிட்டு, அசைவற்று, நின்றனர். அன்பர்க்கருளும் எம்பெருமான் ஓர் புலவர் கோலத்தில் அவர்களது முன்பு தோன்றி அருள்நோக்குடன் அவர்களைப் பார்த்து, "நீவிர் யாவர்? எவணிருந்து வருகின்றீர்கள்? உங்களது விருப்பம்யாது? உங்களுக்கு என்ன வித்தைகள் வரும்? இங்கு எதன்பொருட்டு வந்திருக்கின்றீர்கள்?" என வினவினர். துணிவு தழும்பும் அவரது மொழிகளைக் கேட்டுச் சங்கத்தார் "நாங்கள் நாமகளது உடலான எழுத்துவடிவினர். மிகப் புனிதமான தாமிரபருணியாற்றுக்கரைப்பக்கலிலிருந்து வருகின்றோம். அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு குறிக்கோள்களிலும் எங்களுக்கு வேட்கை. செய்யுளியற்றல் எங்களது தொழில். மணிக்கு நூறு பாக்கள் செய்வோம். திருவாலவாயுடையாரைக் காண்டற்கு இங்கு வந்தோம். தங்களைக் கண்டதுமே எம் பெருமானைக் கண்ட உவகை எங்களுக்கு ஏற்பட்டுவிட்டது. இதற்கு முன்னால் நாங்கள் சோமசுந்தரமூர்த்தியைக் கண்டதில்லை. தங்களைப் பார்த்தாலேயே எங்களது விருப்பங்கள் யாவும் நிறைவேறிவிடும். எங்களது கண் பராகிவிட்ட தாங்கள் எங்களில் ஒருவரே. அதில் ஐயமில்லை. ஆதலால் சோமசுந்தரக்கடவுளை நாங்கள் காண்டற்குத் துணைபுரிந்தருளவேணும்" எனப் பதில் கூறினர். பெருமான் அவர்களிடம் தனது புலமைத் திறனைக் காட்டிக் களிப்பித்து உலகங்களிற்குக் காரணமாயிருக்கும் மூலஇலிங்கத்தைக் காண்பித்து 'உங்களுக்கு அறம் முதலான நான்கு குறிக்கோள்களும் இப்பொழுதே உண்டாகட்டும்' என்று அருளிச் செய்து மறைந்தார்.

சங்கத்தார் வியந்தவராய்ப் பெருமானைப் பாக்களால் போற்றினர். பின்னர் அவர்கள் மதுரையம்பதியிலேயே தங்கிக்கொண்டு தங்களது புலமையால் சனங்களை மகிழ்வித்தனர். வடிசசேகரபாண்டியன் தானே ஓர் சிறந்த புலவன். ஒன்பது சுவைகளும் பொருந்திய இலக்கியங்களை இயற்றுவதில் வல்லவன். இலக்கியநயங்களையறிந்தவன். அத்தகையவன் சங்கத்தாரை நன்கு வரவேற்று, அவர்களுக்கு மிகுதியான பொருளைத் தந்தான். இறைவனைத் தொழுதற்குப்பின் அவர்கள் தங்குவதற்கு திருக்கோயிலின்

மத்தியில் ஓர் அழகான் மண்டபத்தைக் கட்டுவித்தான். புலவர்கள் அச்சங்கி மண்டபத்திலிருந்துகொண்டு ஓயாது கற்றவற்றைப்பற்றி அளவளாவினர். பேரிப்புலவர் சிலர் சங்கத்தாரது புலமையை இகழ்ந்து தங்களைத் தூக்கிப் பேசினர்.

கயவர்களது இச்செயலையறிந்த சங்கப்புலவர்கள் தங்களது அறிவின் மேன்மையை வெளிப்படுத்தற் பொருட்டு ஓர் திங்கட்கிழமையன்று எம்பெருமானையடைந்து புகழ்ப் பாக்கள் பாடிப் பெருமானிடம் "பேரிறைவனே! ஆன்மவடிவனே! உமது திருவடிமலர்களைத் தொழுதற்காக உமது அண்மையிலேயே தங்குகின்றோம். எங்களது அறிவின் பெருமையைப் பிறர் அறியும்படி செய்தற்கு எங்களுக்கு வித்தைப்பலகையொன்று கிடைக்கவில்லை. வித்தையை வெளிப்படுத்தும் வன்மை படைத்த ஓர் அற்புதப் பலகையை தந்தருளவேண்டும்' என விண்ணப்பித்தனர். உடனே சுந்தர மூர்த்தி எழுத்துக்கள் மயமான தனது அறிவுப் பலகையினின்றும் மிகத் தூயதும் அகரம்முதல் கூகரம் ஈறாக உள்ள எழுத்துக்கள் பொறிக்கப்பெற்றதும், சவுக்கமானதும், இலட்சுமிர்காலமதிபோன்று வெண்மை நிறமானதும், கதிரவ வட்டம்போன்று கண்களைப் பறிக்கக்கூடியதும், தெய்வத்தன்மையுடையதுமான ஓர் பலகையை எடுத்துக்கொண்டு மூல இலிங்கத்தினின்று ஓர் புலவர் வேடத்தில் வெளிவந்து 'இதில் உட்காருங்கள்' எனத் திருவாய்மலர்ந்தருளி ஒரு மூழத்திற்கும் குறைந்த அப்பலகையை அவர்களிடத்தே கொடுத்தார். அவர்கள் அதைப்பெற்று இன்பக்கடலில் ஆழ்ந்தனர். அவ்வற்புதப் பலகையை வித்தியாபீடமென்றும், வியாக்கியா பீடமென்றும், ஞான பீடமென்றும், சரசுவதி பீடமென்றும், மாதிருகா பீடமென்றும் பலவகையாய் வழங்குகின்றனர். சங்கப்புலவரால் அப்பீடம் சங்கப்பலகையென்றழைக்கப்பட்டது. உலகிலும் அதற்குச் சங்கப்பலகையெனவே பெயர்.

பலகை கிடைத்ததும் நக்கீரர் முதலான புலவர்கள் அதை மிகப் பரிவுடன் சங்கமண்டபத்திற்கு எடுத்துச்சென்றுத் தூய விரிப்புகள்மீது வைத்துச் சந்தனம் முதலிய வரிசைகளுடன் பூசித்து எழுத்துக்களைக் கூறி அருச்சனை செய்து முதலாவதாக நக்கீரர் அதன்மேல் உட்கார்ந்தார். ஒரு மூழத்திற்கும் குறைவான அந்தப்பலகை ஆலவாயுடையாரது திருவாணையால் நீண்டது. பின்பு கபிலர் அமர்ந்தார். முன்போலவே நீண்டது. பின்னர் பாணர் ஏறினர். பெருமானது மாட்சியால் பலகை இன்னும் நீண்டது. இங்ஙனம் மற்றைச் சங்கப்புலவர்களுக்கும் ஏற ஏற அது இடங் கொடுத்துக்கொண்டே போயிற்று. இவ்வாறு இறைவனால் அளிக்கப்பெற்ற பலகையின்மீது இருந்துகொண்டு சங்கப்புலவர்கள் வித்தைகள் பற்றிப் பேசுவதும் புதிது புதிதாக நூல்கள் இயற்றுவதுமாகவிருந்தது. சிறிது காலத்தில் அவர்கள் எழுதிப்போட்ட ஏடுகளால் சங்கமண்டபம் நிறைந்து விட்டது.

ஒரு சமயம் புலவர்களுக்குள் 'எனது நூல் மேலானது உனது நூல் தாழ்வானது' என்று வழக்குப் பிறந்தது. 'நான்தான் பெரியவன்! நான்தான் பெரியவன்' என்று ஒவ்வொருவரும் சொல்லத் தொடங்கினர். அதன்பேரில் அவர்கள் நாம் எல்லோரும் ஒன்றுகூடி நூல்களை ஆய்வோம்,

நல்லவற்றை வைத்துக்கொண்டு பிரியவற்றைக் கழந்துவிடுவோம்" என்று ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். எல்லோரும் மிக்கச் செருக்குடன் மண்டபத்திற்கு விரைந்தனர். அங்கு கீழும் மேலும் பக்கங்களிலும் குவிந்து கிடக்கும் சுவடிகளைப் பார்த்ததும் அவர்கள் வாட்டமடைந்தனர். அப்பொழுது ஹகாரவடிவான ஆலவாயுடையான் கருணைகூர்ந்து புலவர் வேடத்தில் சிறந்த ஆடைகளும் ஆபரணங்களும் தலைப்பாகையுமணிந்து தனது புலமையால் அங்குள்ளோரைத் திகைக்கச் செய்துகொண்டு மண்டபத்தின் மத்தியில் தோன்றினர். உடனே அவர் புலவர்களைக் கருணைநோக்குடன் பார்த்துப் "புலவர்காள்! நீங்கள் ஏன் இங்ஙனம் கவலையுற்றிருக்கின்றீர்கள். காரணம் யாது? சொல்லுங்கள். நான் உங்களது கவலையை அகற்றுகின்றேன்" என மொழிந்தார். புலவர்கள் அதைக்கேட்டுப் பெருமானை நோக்கிப் "பேரறிவுடைய கவிவாணரே! இலக்கிய இலக்கணம் கற்றவரே! நீர் எங்களது கண்பாய்விட்டீர்! எங்களது தலைவரும் நீரே! நாங்கள் இயற்றிய நூல்கள் இங்கு கலந்துகிடக்கின்றன. அவற்றைப் பிரித்துச் சேர்த்துத் தந்தருள வேண்டும். தவிரவும் நாங்கள் நாற்பதெட்டுப்பேர்கள். எங்களுக்குள்ளிருக்கும் சண்டையையும் நீர் விலக்கித்தரவேண்டும்" எனத் தெரிவித்துக்கொண்டனர். உடனே இறைவன் அப்படியே செய்கின்றேனென்று அருளிச்செய்து நூல்களை வெவ்வேறாகப் பிரித்துக்கொடுத்தார். எல்லாம் வல்ல பெருமான் இதைச் செய்ததில் என்ன ஆச்சரியம்! சங்கப்புலவர்கள் அவரது திறமையைக்கண்டு வியந்து களிப்புற்று மீண்டும் அவரை நோக்கி 'கவிவாணரே! நீரும் சங்கப்பலகையில் எங்களுடன் வீற்றிருந்து எங்களது நூல்களை ஆராயவேண்டும்' என வேண்டிக்கொண்டனர். எம்பெருமான் எழுத்துவடிவான அப்பலகையின்மீது புலவர்கள் மத்தியில் அமர்ந்ததும் ஆவணை தேவதைகளின் மத்தியிலிருக்கும் தக்ஷிணாமூர்த்திபோன்று விளங்கினர். கடிதில் புலவர்களது உளங்களில் குமைந்துகொண்டிருந்த இருளை நீக்கி ஒளி நிலவும்படி செய்தார். அவர்களனைவரும் புலவர்கோலத்தில் இலங்கும் பெருமானைக்கண்டு 'இவர் மனிதரா? அல்லது தேவரா?' என்று எண்ணலாயினர். இறைவன் அவர்களிலொருவராயிருந்துகொண்டு நூல்களை ஆய்ந்து குணங் குற்றங்களைக் கூறிவந்தார். பின்னர் அண்ணிய அறிவுடன் அதிகாரம் எனும் ஓர் சாத்திரத்தையும் இயற்றினர். புலவர்கள் தத்தம் நூல்களைப் பெற்றுக் களித்தனர். குணங்கள் குற்றங்கள் பற்றி ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர்.

அப்பொழுது மிக்க அழுக்காறுடைய நக்கீரர் எழுந்து தனது பாக்களிற்போன்று சொற்சுவையும் பொருட்சுவையும் ஐந்தாவது சாரமும் மற்றவாது செய்யுட்களில் இல்லையெனவுரைத்தார். இம்மொழிகளைக்கேட்ட இறைவன் சொல்லழகும் பொருளழகும் பண்ணழகும் பொருந்திய பாக்களை ஒரு கொடிப்பொழுதில் சமைத்து நக்கீரைநோக்கி, எனது செய்யுட்களுக்கு நிகராக உமது செய்யுட்களாகா. இங்குள்ள புலவர்கள் எவை மேலானவையென்று ஆய்ந்து கூறட்டும்" என்று புன்சிரிப்புடன் மொழிந்தவராய் அப்புலவர்களோடு விளையாடினர். அவர்கள் பெருமானது நெஞ்சையள்ளும் பாக்களைக்கேட்டு மீண்டும் மீண்டும் தலையசைத்தனர். அவற்றின் வியக்கத்தக்க இனிமையை மனத்துள் சுவைத்துக் களித்தனர். ஆசுகவியென்ற செருக்குடன் வெகுளியும் பொறுமையும் நிறைந்திருக்கும் நக்கீரரது முன்பு அவர்கள் ஒன்றும் உரையாது சும்மா நின்றனர். நக்கீரர் அறியாமையால்

இறைவனது பாட்டில் குற்றம்கண்டார். உடனேபெருமான் இனியமொழி களில் 'நீரோ பொருமை மூண்டவர்' என்று பெயர்பெற்றவர். நீர் உரைப் பது முழுதும் பிசகு. வேறு யாராவது புலவர் ஒருவர் எனது செய்யுள்மீது குறைகூறவாரேயாகில் அப்பொழுது உமது வார்த்தை உண்மையானது; என சுக்கீரரிடம் கூறிச் சும்மாவிருந்தார். வேறு யாரும் குற்றம் காண்க வில்லை. அப்பொழுது மயக்கம் தீர்த்தற்பொருட்டு ஆகாயத்தினின்று "உங்களது பிணக்குகளை முடித்தற்காக சோமசுந்தரப்பெருமான் உங்களில் ஒருவராக உங்களது மத்தியில் இருக்கின்றார். அவரை வணங்குவீராக" எனச்சிவபெருமானது திருமொழி கேட்டது. உடனே சங்கத்தாரனைவரும் திடுக்கிட்டு கடுங்கிப் பொருமையை விடுத்துப் புலவர்வேடத்தில் விளங்கும் எம்பெருமானை வணங்கிப் போற்றினர் இறைவன் கருணை நிறைந்த நோக் கொடு அப்புலவர்களை நோக்கி அருள் புரிந்தார். அவர்கள் எல்லோரும் திருவருள் பெற்றதால் பெறுதற்கரிய இன்பங்களுடன் புவியில் வெகுகாலம் வாழ்ந்தனர்.

ஆலவாயுடையாரது இந்த ஐம்பத்தொன்றும் திருவிளையாடலைப் படித்தாலும் கேட்டாலும் துயர், பழி, இருள், அச்சம் இவை விலகும்.



ஐம்பத்தெட்டாவது அத்தியாயம்.

சுந்தரநாதனுக்குப் பொற்கிளி கிடைப்பித்தல்.



வசிசசேகரனது புகழைச் சங்கப்புலவர்கள் பாடினர். கந்தரு வரும், கின்னரரும்கூட அதைப் போற்றினர். இவ்வாறு உலகெங்கும் பரவிய பெயருடன் அவன் வெகுகாலம் ஆட்சிபுரிந்தான். பின்னர் அவன் சிவசாயுச்சியம் பெற்றவுடன் அவனது புதல்வன் வசிசகுடாமணி பாண்டி நாட்டரசை ஏற்றான். அவன் வீரத்திலும், பொலிவிலும், கருணையிலும், திருவிலும், மனுநெறியிலும், சிவனடிப்பற்றிலும் தந்தைக்கு மேலாகவே விளங்கினான். சோமசுந்தரமூர்த்தியின் பூசைக்கு வேண்டும் மலர்கள் பெறும்பொருட்டு நகரில் பல நந்தவனங்களோ நிறவி அவற்றினின்று மலர்கள் கொய்து நாடோறும் சிவபெருமானுக்கு வழிபாடு நடத்திவந்தான்.

ஒருசமயம் சித்திரைமாதத்தில் பௌர்ணமியன்று பேரிலிங்கத்திற்கு எல்லாவிதமான அபிஷேகங்களும் செய்து, சந்தனக்காப்பு சாத்தி, முழுதும் செண்பகப் பூக்களால் நிறப்பி, வரிசைகள் அணிவற்றுடன் பூசை செய்து, அப்பொழுது இறைவன் காட்டிய அழகுக் காட்சியைக் கண்டு களித்துச் சுந்தரமூர்த்திக்குச் செண்பகசுந்தரமெனத் திருப்பெயர் சூட்டினான். அது முதற்கொண்டு சனங்களும் பெருமானை அப்பெயர் சொல்லி அழைக்க தொடங்கினர். பாண்டியன் நாள்தோறும் செண்பகமலர்களால் சுந்தரமூர்த்தியைப் பூசித்ததால் அவனுக்கும் செண்பக பாண்டியன் எனப் பெயர் வந்தது.

ஓரிரவு வெண்ணிலாக்காய்ந்துகொண்டிருந்தது. அரசன் மாடியிலிருந்துகொண்டு தேவியுடன் மதுரைநகரின் அழகைப்பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது தென்றல் வீசிற்று. பதுமினிவகைப் பெண்ணான தேவியின் கூந்தலினின்றும் ஓர் வாசம் வந்தது. அதற்கு நிகரான வாசமே கிடையாது. அது கூந்தலின் இயற்கையான வாசமா அல்லது அதில் சூட்டப்பெற்றிருக்கும் மலர்களது வாசமாவென்று அரசன் உளத்தில் ஐயமொன்று பிறந்தது. அப்பொழுது அவன் ஓர் செயல் புரிந்தான். அவனது உளநிலையை அப்படியே எழுத்துக்கூறும் செய்யுளைச் சமைப்போனுக்கு ஆயிரம்பொன் நிறைந்த பொற்கிழியொன்றைக் கொடுப்பதாகத் தெளிந்து கிழியை உண்டாக்கிச் சங்கமண்டபத்தின் முன்பு கட்டுவித்தான். சங்கப்புலவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே பாக்கள் செய்து அரசனிடம் படித்தனர். ஆனால் ஒருவராது செய்யுளாவது அவனது ஐயம்கொண்ட மனநிலையைக் காட்டுவதாயில்லை. புலவர்கள் வருத்தத்துடன் சென்றனர். கிழியும் அங்கேயே தொங்கிற்று.

அப்படியிருக்கையில், சிவநேசச் செல்வனான சுந்தரநாதன் எனும் பெயர்கொண்ட ஆதிசைவ வாலிபனொருவன் சோமசுந்தரமூர்த்தியை அணுகி "எம்பெருமானே! எனக்குத் தந்தையுமில்லை, தாயுமில்லை. திருமணம் செய்துகொள்ளவேண்டிய பிராயமும் கழிந்துவிட்டது. பணமும் கிடையாது. மற்றை மாணவர் மத்தியில் பழகவும் வெட்கமாயிருக்கின்றது. எனக்குத் தந்தையும், தாயும், செல்வமும், சுற்றமும் யாவும் நீரே. கோயிற் பூசை செய்தற்குரிய தீச்சை பெறுதற்கு எனக்கு மணமாகவேண்டும். ஆனதுபற்றி என்னைக் கருணையுடன் நோக்கி அருளவேண்டும். செயலாலும், எண்ணத்தாலும், சொல்லாலும் உம்மையே பேணுகின்றேன். அரசனது எண்ணத்தைக் காட்டும் பாவொன்று செய்துகொடுத்து, எனது கலியாணத்திற்கு அப்பொற்கிழி கிடைக்குமாறு அருளிச்செய்யவேண்டும்" என வேண்டிக்கொண்டான். உடனேபெருமான் மனமிரங்கி "வண்டே! மலர்களின் மணத்தை நீ நன்கு அறிவாய். தேவியது கூந்தலில் உண்டாம் நன்மணத்திற்கு ஒப்பான மணம் எதென்று கூறுவாயா?" எனப் பொருள்படும்படியாய் ஆரியை விருத்தத்தில் ஓர் செய்யுளை மனத்தில் கினைத்துப் புலவர் வேடத்தில் வெளித்தோன்றி அதை ஓர் ஓலையில் எழுதி அந்த வாலிபனிடம் தந்து "குழந்தாய்! இந்த ஓலையைச் சங்கப்புலவர்களிடம் காண்பித்து அவர்களை இட்டுக்கொண்டு பாண்டியனிடம் சென்று கிழியைப் பெறுதற் பொருட்டுப் படிப்பாயாக" எனப்பணித்து மறைந்தார். அங்ஙனமே செய்கின்றேன் என்று சொல்லி, வாலிபன் அதைப்பெற்று, இறைவனை வணங்கிச் சங்கப்புலவர்களிருந்தவிடம் சென்று, பலகையில் வீற்றிருந்த அவர்களிடம் பெருமானது திருவருளால் கிடைத்த ஓலையைக் காண்பித்தான். அவர்கள் அதில் வரைந்திருக்கும் பாட்டைப் படித்து வியப்பெய்தினர்.

பின்னர்ப் புலவர்கள் சண்பகபாண்டியனையடைந்து அவனிடம் பாட்டைப் படித்துக்காட்டினர். பாட்டின் கருத்துத் தனது எண்ணத்திற்கு ஒத்திருப்பதைக் கண்டு அச்செய்யுளையியற்றிய பெரியார் யார் என்று வினவி அது தனது எண்ணம் போன்றிருக்கிறதென்று கூறினான். உடனே புலவர்கள் 'இவனே இயற்றியவன்' என்று ஆதிசைவ வாலிபனைக்காட்டினர். சாத்திரங்கள் கற்று கல்லொழுக்கத்துடன் விளங்கும் சுந்தரநாதனைக் கண்ணுற்று ஆச்சரியமடைந்து அரசன் பாட்டையாக்கியோன் கிழியை எடுத்துக் கொள்ளட்டுமென்று மொழிந்து அனைவரையும் இருப்பிடத்திற்கனுப்பிவிட்டு கொலுமண்டபத்தினின்றும் சிந்தனையிலாழ்ந்தவனாய் உள்ளே சென்றார்.

பின்னர் சுந்தரநாதன் கிழியை எடுக்கச்சென்றபொழுது பொருமைகொண்ட நக்கீரர் பாட்டில் குற்றமிருப்பதாகக் கூறினர். உடனே அவன் பெருமானையடைந்து வணங்கித்துதித்துக் கூப்பியகைகளுடன் செய்யுளில் குறைவிருப்பதாக நக்கீரர் கூறுவதாகத் தெரிவித்தார் கருணைக் கடலான சிவபெருமான் கவிவேடம்பூண்டு சங்கமண்டபத்திற்சேகிப் புலவர்களை நோக்கிப் பாட்டிற் குற்றம்காணும் புலவர்யார் எனக் கேட்டார். அதற்கு நான்தான் என்று நக்கீரர் கோபத்துடன் பதிலுரைத்தார். உடனே இறைவன் அவரைப் பார்த்துக் "கவிப்பதரே! இதில் குற்றம் யாதென்று கூறும். நாமிருவரும் உரையாடுவோம். இவணிருக்கும் புலவர்கள் நம்மிருவரது மதிநுட்பத்தை ஆய்ந்து சொல்லட்டும்" என்றார். அவரது தைரியம்

நிறைந்த இம்மொழிகளைக் கேட்ட நக்கீரர் சினங்கொண்ட பாம்புபோல் சீறியவராய்க் 'கூந்தலுக்கு இயற்கையாக வாசம் இடையாதென்று நான் கூறினேன். வாசமிருப்பதாகக் கூறுதல்பொருட் குற்றமாகும்' எனவுரைத்தார். அதன்பேரில் ஆலவாயுடையான் அவரை நோக்கிப் 'பதுமினிப்பெண்களின் கூந்தலுக்குத் தாமரை செங்கழனி இம்மலர்களின் மணம் உண்டென்று உலகெலாமறிந்தது. உமக்கு என் தெரியாமற்போயிற்று?' எனக் கேட்டார். அதற்கு நக்கீரர் 'அது சேர்க்கையால்தான்' எனக் கூறினர். உடனே இறைவன் 'தேவமகளிரது கூந்தலுக்கு இயற்கையாகவே வாசமுண்டு; அதை யார் மறுக்கமுடியும்' என மறுமொழி தந்தார். இதைக் கேட்டு நக்கீரர் உதடுகள் துடிக்கப் பாரிசாதம் முதலான மலர்களாலும் கத்தூரி முதலிய வாசப் பண்டங்களாலுமே அவர்களது கூந்தலுக்கும் வாசம் வருகின்றதென்று தீர்மானமாகச் சொன்னர். அதற்குப் பெருமான் நக்கீரர் மேற்கொண்டு பதில்உரையாமலிருக்கும்பொருட்டு, உமாதேவியின் கூந்தல் இயற்கையிலேயே மணம் பெற்றதென்று மறைகள் கூறுகின்றன' என்று உரைத்தார். அதைக்கேட்டும் நில்லாது நக்கீரர் 'தேவியினது கூந்தலும் சேர்க்கைப் பொருள்களாலேயே வாசம்பெறுகின்றது' எனப் பிடிவாதமாகக் கூறினர். அம்புபோன்ற அம்மொழிகளைக் கேட்டதும் பெருமான் சிறிது சினங்கொண்டவராய் நக்கீரரை நெற்றிக்கண்ணால் நோக்கினர். அதுகண்டு மற்றைப் புலவர்கள் மிகவும் பயந்து தொலைவிற் சென்றனர். நெஞ்சழுத்தம் படைத்த நக்கீரர் கொஞ்சமும் அச்சமின்றிப் பெருமானைப்பார்த்து 'உமக்கு ஆயிரம் கண்கள் வேண்டுமானாலும் இருக்கட்டும். அதனால் என்ன? குற்றம் குற்றமே! பயமுறுத்தலுக்கஞ்சேன்' எனக் கடுப்புடன் கூறினர். அவரது இனத்தைக்கண்ட பெருமான் தனது சினத்தை விடுத்து அவரது மனவுறுதியைப்பார்த்து வெகுநேரம் சும்மாவே நின்றார்.

பின்னர், இறைவன் மீண்டும் தேவியின் குணங்களனைத்தையும் கூறி, யாவையும் அறியும் தன்மைபோன்று வாசமுடைய கூந்தலையுடைத் தாயிருத்தலும் அவளுக்கு எப்பொழுதும் கூடவேயிருக்கும் ஓர் பண்பு என்றும், தேவியைப் பூங்குழலால் எனச் சாத்திரங்கள் கூறுவதாயும் உறைத்தார். எல்லாப் புலவர்களும் அம்மொழிகளைச் செவியுற்றுச் சரியெனத் தலையசைத்து உவகையெய்தினர். நக்கீரர்மாத்திரம் மேற் பேசமுடியாது வாயைத் திறவாமல் வருத்தங்கொண்டவராய் நெற்றிக்கண் வெப்பால் சிறிது வெதும்பித் தண்ணீர் தண்ணீர் என்று கதறிக்கொண்டு பொற்றாமரைப் பொய்கையைச் சுற்றிச் சுற்றி ஓடிஇறுதியில் குளிர்ச்சிக்காக அதன்மத்தியில் விழுந்துவிட்டார். புலவர் வேடத்திலிருந்த பெருமானும் உடனே மறைந்தருளினர். சுந்தரநாதன் பொற்கிழியைப் பெற்று, நற்குலத்திற் பிறந்த ஓர் மங்கையை மணந்து, புதல்வனையுமடைந்து செழிப்புடன் வாழ்ந்தான். எப்பொழுதும் இறைவனை நினைந்து தொழுது இன்பங்களனைத்தையும் துய்த்தான். முத்தியையும் பெறுவான்.

கன்மை விரும்புவோர் ஆலவாயுடையானை எப்பொழுதும்நினைந்து கொண்டிருக்கவேண்டும். இது பெருமானது ஐம்பத்திரண்டாம் திருவிளையாடல். பெரும் மங்களத்தைப் பயக்கவல்லது.

ஐம்பத்தொன்பதாவது அத்தியாயம்.

நக்கீரரைக் காத்தருளல்

நக்கீரர் பொற்றாமரையில் மூழ்கிக்கொண்டிருந்தபொழுது அவரிடத்தே மிக்க அன்புகொண்ட கபிலர் முதலான புலவர்கள் மனம் புழுங்கிச் சங்க மண்டபத்தில் கூடுவதை நிறுத்தி இன்பங்களை வெறுத்து சங்கப்பலகையில் உட்காராமலும் இருந்தனர். தலைவரான நக்கீரரது பெரும் பிழையை எண்ணியெண்ணி அதைப்போக்கும் வழியை ஆய்ந்தனர். இறுதியாகச் சோமசுந்தரக்கடவுள் ஒருவரே அவரைக் காக்கக்கூடுமென்ற முடிவிற்கு வந்து அவரைக் களிப்பித்தற்பொருட்டுப் புதுப் புகழ்ப்பாக்களைச் சமைத்துக்கொண்டு அனைவரும் ஒன்றுகூடிப் பெருமானை அடைந்து 'சுந்தரமூர்த்தியே! எல்லோர்க்குமிறைவனே! எல்லாமறிந்தவனே! மதிசூடியே! திங்கள், கதிரவன், அனல் இவற்றைக் கண்களாகவுடையவனே! உமையார் நாதனே! எங்களைக் காத்தருளும். தேவர், அவுணர், மக்கள் இவர்களால் பூசிக்கப்பெற்றவனே! இந்திரவிமானத்தில் உறைபவனே! பாவத்தில் உழலும் எங்களைக் காத்தருளும். கருணைக்கடலே! காலனை உதைத்தவனே! காமனை வென்றவனே! ஆலாலநஞ்சை யுண்டவனே! பழிகளைத்தீர்ப்பவனே! எங்களைக் கடிதல் காத்தருளும். கயக்கண்ணம்மையாரின் பதியே! ஆலவாயுடையானே! உலகனைத்திற்கும் முதல்வனுய் நிற்பவனே! எங்களைக் காத்தருளும். உயிர்களுக்குப் பதியே! மெய்யன்பரின் விருப்பங்களைநிறைவேற்றுபவனே! துயர்க்கடலில் மூழ்கிக்கிடக்கும் எங்களைக் கைதூக்கியருளும். பூலோகசிவலோகமாகும் ஆலவாய்க்கதிபனே! சாலோக்கியம் முதலான முத்திகளையளிப்பவனே! மூவுலகையும் காக்க வல்லோனே! எங்களைக் கருணைநோக்குடன் பார்த்தருளும். சலங்கைகட்டியகாலால் இயமனை மடக்கியவனே! பிறவிப்பிணியினின்றும் எங்களை உயிர்ப்பித்தருளும். தோலாடையணிந்தவனே! அறம் முதலியவற்றைப் பயக்குபவனே! எங்களுக்கருள் புரியும். எப்பொழுதும் இன்பவடிவனே! ஆதாரமற்றவனே! தூயவனே! பலவகையான சுகங்களையளிப்பவனே! கலைகள் அற்றவனே! முடிவற்றவனே! கலைகளுடன் கூடினவனே! பரமான்ம வடிவனே! உமக்கு வணக்கம். கருணைக்கடலே! உலகிற்கிறைவனை உம்மிடம் உளத்தாலும், உடலாலும், பேச்சாலும் நாங்கள் இழைத்தபிழைகளை பொறுத்தருளவேணும்;; என்றவாறு பலவிதமான துதிகள்பாடி வணங்கிமீண்டும் பெருமானைநோக்கி, ''உமது திருவருளால் எவ்வளவோ சுகங்களை அனுபவித்தோம். நீர் அருளிய பலகையின்மீதமர்ந்து சங்கமண்டபத்தின்கண்ணே எத்தனையோ கூட்டங்கள் கூடினோம். இதன் முன்பு உமக்கு எவ்வளவோ தொண்டு புரிந்திருக்கிறோம். விளையாட்டாக உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கின்றவனே! கீரர் இல்லாது எங்களது அவையானது மதியில்லா இரவுபோன்று மங்கிக்கிடக்கின்றது. அறியாமையாலும் முன்வினைப் பயனாலும் கீரர் ஏதோ பிதற்றிவிட்டார். அப்பிழையைப் பொறுத்து அவரைக் காத்தருளும். நீரில் மூழ்கினபடியே அவர் ஓர் அந்தாதி பாடியிருக்கின்றார். பொய்கைக்

கரைக்கு எழுந்தருளி அதைக்கேட்டு அவரைக் காத்தருளல்வேண்டும்'' என விண்ணப்பித்துக்கொண்டனர்.

கருணைவள்ளலான ஆலவாயுடையான் மனமுருகித் தேவர்க்கு மரிய தனது திருவுருவை அப்புலவர்க்குக் காட்டி உமையாருடன் பொய்கைக் கரைக்குக்குச்சென்று அந்தாதியைக்கேட்டுக் களிப்படைந்து புன்னகைபூத்து நக்கீரர்பாலுள்ள சினத்தை விடுத்தார். பின்னர்பெருமான் கரையிலிருந்துகொண்டே மூழ்குவதும் எழுவதுமாயிருந்த நக்கீரருக்குத் தனது திருக்கைகளைக் கொடுத்து அவரைக் கரையேற்றினர். இறைவனது கை பட்டதும் புலவர் அவரது பாவங்கள் நீங்கித் தூய்மையடைந்து, மனவமைதி பெற்றுக் களிப்புற்றார். பின்னர் நக்கீரரது தலைமையில் சங்கத்தாரனைவரும் பேரிறைவனது திருவடிகளில் விழுந்து, வணங்கி, உமையாருடன் கூடி அற்புதவழகில் காட்சியளிக்கும் அவரை நோக்கிப் 'பிரமனது தலையை நகத்தால் கிள்ளிய பேர் இறைவனே! உமக்கு வணக்கம். உமக்கு வணக்கம். உமக்கு வணக்கம். மலையரசன் திருமகளே! பொன்போன்ற மேனியளே! பேரிறைவியே! உமக்கு வணக்கம். உமக்கு வணக்கம். உமக்கு வணக்கம். பூதங்களின் தலைவனே! மூப்புமெரித்தவனே! அரவங்களை ஆபரணமாய்க் கொண்ட பேரிறைவனே! உமக்கு வணக்கம். உமக்கு வணக்கம். உமக்கு வணக்கம். திருவடிகளை அண்டியோர்க்குக் கற்பகத்தருவினும் அதிகமாய்க் கொடுக்கும் பேரிறைவியே உமக்கு வணக்கம். உமக்கு வணக்கம். உமக்கு வணக்கம். ஆலவாய் நாதனே! கருணைவடிவனே! ஆலாலகச்சால் மிளிர்கின்ற கழுத்துடைய பேரிறைவனே! உமக்கு வணக்கம். உமக்கு வணக்கம். உமக்கு வணக்கம்! பேரிறைவனது மனைவியே! கடம்பவன நாயகியே! பேரிறைவியே! உமக்கு வணக்கம். உமக்கு வணக்கம். உமக்கு வணக்கம்'' என்ற விதமாய்ப் பிறமொழிகளில் வணக்கம் தெரிவித்து மீண்டும் மீண்டும் புகழ்ந்துமகிழ்ந்தனர். மதுரை நாயகனை பெருமான் அவர்களைப் பார்த்துப் 'புலவர்களே! நீங்கள் முன்போலவே மீண்டும் சங்கமண்டபத்தில்கூடி சங்கப்பலகையில் வீற்றிருந்து உங்களது அவைகளை நடத்துங்கள். உங்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் பேறுகள்யாவும் கிட்டும்' என்றருளிச்செய்துத் தேவியுடன் மறைந்தருளினர். இறைவர்க் கிறைவனது திருவருளால் சங்கத்தார் இன்பங்கள் யாவற்றுடன் வெகு காலம் வாழ்ந்திருந்தனர்.

நக்கீரருக்கு அருளும்பொருட்டு இறைவன் புரிந்த இத்திருவிளையாடலைக் கேட்போர் மயக்கம் தெளிந்துத் தூயராகி முத்தியெய்துவர். இது கடம்பவன சதனது ஐம்பத்து மூன்றும் திருவிளையாடல்.



அறுபதாவது அத்தியாயம்.

நக்கீரருக்கு இலக்கணமுபதேசித்தல்.

நக்கீரர் சிவனது அனல் மோக்கால் பொசுக்கப்பெற்றுச் சிவ நீருத்தத்தில் மூழ்கிச் சிவனைத் துதித்துச் சிவனைக்கண்டுச் சிவனது திரு வருள் பெற்றார். முன்னம் பெருமானது நெற்றிக்கண்ணால் நோக்கப்பட்ட காமனை மகாவீட்டினை முதலான தேவரும் காக்க இயலவில்லை. ஆலவா யுடையானது நெற்றிக்கண் பார்வையையடைந்த நக்கீரரைப் பொற்றாமறை வாவி காப்பாற்றியது. அதற்கு முன்பு பொறுக்கமுடியாத வெப்பமுற்றி ருந்த அவர் வாவியில் மூழ்கியதும் வெப்பம் தணிந்து குளிர்ச்சியெய்தினர். சிவனிடத்தே பிழையிழைத்தோர்க்குச் சிவதீருத்தத்தைத் தவிர்த்துப் பிரிது எது சிவத்தை (மங்களத்தை) ப்பயக்கவல்லது? இங்ஙனம் தீருத்தத் தின் மாட்சியையுணர்ந்த நக்கீரர் முந்நோமும் அதில் நீராடுவதென்று நியமம் செய்துகொண்டார். அவ்விதமே நீராடிக் கயக்கண்ணம்மையாரையும் சோமசுந்தரமூர்த்தியையும் வலம் சுற்றித்தொழுதுப் போற்றி கூறிக் களிப் பித்தார்.

பின்னர்ப் பெருமான் அவரிடத்தே அன்புகூர்ந்து அவரது அறி யாமையை நீக்கத் திருவுளங்கொண்டு 'இவருக்குத் தமிழ்மொழியின் இலக் கணம் தெரியாது. இவரால் வழுவு வழுவில்லையென்று கண்டுபிடிக்கக் கூடவில்லை. இடம் கருதிப் பொருள் கூறவும் இவர் அறிந்தாரில்லை. ஆகவே வீண்செருக்குக்கொண்டு சொல்லழகு, பொருளழகு இவையிரண்டும் கூடிய நல்ல செய்யுட்களையும் இவர் பழிக்கின்றார். இவருக்கு எங்ஙனம் அறிவு புகட்டுவது! உலகில் தமிழிலக்கணம் சொல்லிவைப்பதற்கு ஆள் இல்லையோ?' எனக் கவலையுற்றிருந்தார். அப்பொழுது அங்கயக்கண்ணி யம்மை இறைவனது நினைப்பையறிந்தவளாய் 'அன்பர்க்கெளிய பெருமானே! நக்கீரருக்கு அறிவுண்டாக்கும் வழியும் வகையும் எனக்குத்தெரியும்' என மொழிந்தாள். உடனே 'அப்படியானால் சொல்லேன்' என்று பெருமான் பரிவுடன் கூறினர்.

உண்மை, அறிவு, இன்பவடிவான உமையார் உடனே எல்லா மறிந்த இறைவனைநோக்கிப் பழையவரலாறொன்றைச் சொல்லத்தொடங்கி "மூப்புமரணித்தவனே! முன்னொருசமயம் நீர் கைலாயமலையிலிருந்த பொழுது முப்பத்துமுக்கோடி தேவரும் முனிவரும் கணங்களும் அவரது வாகனங்களுடன் உம்மைக் காண்டற்கு வந்திருந்தனர். அப்பொழுது பூமி யானது மலைகள் காடுகளுடன் வடகிழக்கில் உயர்ந்தது. தென்மேற்கில் தாழ்ந்தது. உடனே அனைவரும் திகிலுற்று உம்மை வணங்கித் துதித்துக் கூப்பிய கைகளுடன் 'கருணைக்கடலே! உமக்கொப்பான ஒருவரைக் கடி தில் பொதியமலைக்கு அனுப்பி இருக்கச்செய்து இருகோடிகளையும் ஒன்று போலாக்கியருளவேண்டும்' என விண்ணப்பித்துக்கொண்டனர். அவர் களது மொழிகளைகேட்டு, அந்த அச்சத்தையும் கண்டு, நீர் அவர்களை

நோக்கித் 'தேவர்களே! நான் கூறுவதைக்கேளுங்கள். தேவமுனிவரும் கேளுங்கள்! எனக்குச் சமமான புருடனே அல்லது தேவிக்குச்சமமான மங்கையோ கிடையாது. ஆயினும் தவவலிமையால் ஒருவர் எனக்கு நிகராக விளங்குகின்றார். அதேபோன்றுக் கற்பின்சிறப்பால் தேவிக்கு நிகராக மங்கையொருவளும் இருக்கின்றாள். எப்பொழுதும் எனது நினைவில் அழுத்திய அகத்தியர் அந்தப் புருடர். எப்பொழுதும் தேவியது தியானத்தில் ஈடுபட்ட உலோபாமுத்திரை அந்தமங்கை. இடைவிடாது அகத்தியருக்குச் சிவனே நான் என்ற எண்ணமும் உலோபாமுத்திரைக்குத் தேவியே நான் என்ற எண்ணமும் குடிகொண்டிருக்கின்றது. அகத்தியரது இதயத்தாமரையில் நான் உறையும்பொழுது எனக்குக் கிடைக்கும் களிப்பு மேரு, மந்தரம், கைலாயம், காசி முதலான தலங்களிலும் கிடைப்பதில்லை. ஆனது பற்றி உமையுடன்கூடிய எனக்கு நிகரானவர் அவரே. இதுக்கண் கூறத் தீர்த்தற்பொருட்டு அவர் பொதிகைமலைக்கேகட்டும்" எனப் பணித்தீர். உடனே அனைவரும் மகிழ்ச்சியுடன் 'நன்று நன்று' என்று ஆரவாரித்தனர். உமது திருநோக்கால் ஆக்கினைபெற்ற அகத்தியர் உமைநோக்கிப் "பெருமானே! உமது ஆணையைச் சிறத்தால் ஏற்று மாபெரும் பொதியமலைக்கு அடியேன் செல்கின்றேன். நான் அங்கு சென்றதும் அங்குள்ள தமிழ்மக்கள் தமிழ்ச் சொற்களே அறிந்துகொள்ள ஆவலுடையராயிருப்பார்கள். அவர்கட்கு உபதேசித்தற்பொருட்டும் அடியேனும் அறிந்துகொள்ளற்பொருட்டும் உடனே எனக்குத் தமிழ்மொழியின் இலக்கணத்தைச் சொல்லியருளவேணுமெனத் தெரிவித்துக்கொண்டார். இங்ஙனம் அகத்தியர் வேண்டிக்கொள்ளவே எல்லாமறிந்த இறைவனுகின்ற நீர் அக்குடமுனிவருக்குத் தமிழிலக்கணச் சூத்திரங்களைச் சொல்லியருளினீர். அத்தருவாயில் முனிவர் மீண்டும் உம்மை நோக்கி உம்மை மறுபடியும் எப்பொழுது காணக்கிடைக்குமென்று இன்பக்கண்ணீர் சொரிந்துகொண்டு கேட்கவே நீர் அவரிடம் "தென் மேற்குத் திசையில் வைகையாற்றின் கரையில் எழில் நிறைந்த கடம்பவனத்தில் மிகப் பெயர்பெற்ற ஆலவாயெனும் புனிதமான சிவத்தலமொன்றிருக்கின்றது. அது ஆதியில்லாதது. மாசற்றது. அனைவராலும் வணங்கப்பெற்றது. அவண் ஆதியற்ற, உண்மை அறிவு இன்பவடிவான இலிங்கம் இருக்கின்றது. அவ்விலிங்கத்தில் நான் மூக்காலத்திலும் இருக்கைகொள்கின்றேன். அதனின்றும் தோன்றி உமக்கு நேரில் காட்சியளிப்பேன். என்னிடமிருந்து இம்மைச் சுகங்களையும் இறுதி முத்தியையும் பெற்றுக்கொண்டு பொதிகைமலையில் தவம்புரியும். உடலுடையோர்க்கு எப்பொழுதும் இன்பம் தருவது தவம் ஒன்றுதான். தவத்தால் நான்கு குறிக்கோள்களையும் மனிதன் எய்துகின்றான். உலக நன்மையின் பொருட்டு நீர் பொதிகைமலைக்குச் செல்லும்" எனத் திருவாய்மலர்ந்தருளியதும் அவர் அங்ஙனமங்குச் சென்றுத் தவம்புரிந்துகொண்டிருக்கின்றார். அவர் அறிந்துகொண்டது போருக்குக் கிடைக்கட்டும். இது எனது வேண்டுகோள். இறைவன் திருமணம்போல் செய்து கொள்ளலாம்" எனக்கூறி முடித்தாள்.

உடனே பெருமான் தேவியது மலர்ந்த திருமுகத்தை நோக்கி 'உமையே! நீ பழையவரலாறு தெரிந்து கூறியது முற்றிலும் உண்மையே. பூவுலகில் தமிழிலக்கணம் அறிந்தவர் அகத்தியர் ஒருவரே! அவரைக் கொண்டு நக்கீரருக்குச் சொல்லிவைக்கச் செய்யலாமென்று நீ கூறியது

பொருத்தமே" என அருளிச்செய்துப் பொதிகைமலையிலிருக்கும் அகத்தியரை நினைந்தார். உடனே அகத்தியர் கொடிப்பொழுதில் உலோபாமுத்திரையுடன் விமானமூலமாய் ஆலவாயுடையாரது திருமுன்பு தோன்றினர். அப்பொழுது பெருமான் உமையாருடன் சுந்தரமூர்த்தியாய் அரங்கமண்டபத்தில் அவருக்குக் காட்சியளித்தார். உலகை மயங்கவைக்கும் இறைவனுடையவும் இறைவியுடையவும் திருவடிவழகைக்கண்ட அகத்தியர், தனது மனைவியாருடன் செய்யவேண்டியது இன்னதென்று அறியாதத் திகைத்துப்போய் கல்கட்டைபோன்று அசைவற்று வெகுநேரம் நின்றார். பின்னர் அவர் அவர்களது திருத்தாள்களில் வீழ்ந்து வணங்கி வேதமொழிகள் கூறிப் பாடி அவர்களைக்கண்டு களித்துக்கொண்டிருந்தார்.

அந்த சமயத்தில் கீரர் தனது நியமப்படி பொய்கையில் நீராடிச் சுத்தமான ஆடையணிந்து, நீறுபூசிப் பேரிறைவனைக் காண்டற்கு வந்தார். இறைவன் அவரை அருள்நிறைந்த கடைக்கண்ணால் நோக்கி அகத்தியரையும் பார்த்து "இவருக்குச் சூத்திரங்களைக் கற்பித்துக்கொடும்" எனப் பணித்தருளினர். உடனே அகத்தியர் தனக்கும் உலகிற்கும் குருவாய் விளங்கும் பெருமானது ஆக்ஞைப்படி கீரருக்குச் சூத்திரங்களைச் சொல்லிவைத்தார். சொல்லிவைக்கும் முறையைக்கண்ட பெருமான் மகிழ்ச்சியெய்தி தொழுத அகத்தியரைத் தொட்டு அவருக்கு வேண்டும் பேறுகளையளித்தார். கீரருக்கு இவ்வண்ணம் சூத்திரம் கற்பிக்கச்செய்துவிட்டு அகத்தியரை அவரது இருக்கைக்கு அனுப்பினர்.

பின்னர் கயக்கண்ணம்மையார் ஆலவாயுடையாரிடம் தனது ஐயம் நீரும்பொருட்டு 'இறைவனே! அன்பனை கீரருக்குச் சூத்திரங்களை நீரே ஏன் கற்பிக்கவில்லை" என வினவினள். உடனே மறைகளால் காணமுடியாதசோமசுந்தரமூர்த்தி புன்சிரிப்புடன் மலைமகளைநோக்கி "உமையே! சொன்னசொல்லைக் கேட்போனுக்கும், பொருள் கொடுப்போனுக்கும், அழுக்காறற்றோனுக்கும், கட்டளையை மீறுதோனுக்குமேயல்லாது பிறனுக்கு வித்தையைக் கற்பித்தல்கூடாது. நக்கீரர் பொறுமை கொண்டவர். அதனால்தான் நான் அவருக்குச் சொல்லிவைக்கவில்லை. மாணவனை கன்றாய் அறிந்தபின்னரே வித்தையைக் கற்பிக்கலாம்" என மொழிந்தார். உண்மையான இச்சொற்களைக் கேட்டுத் தேவி மனமகிழ்ந்து மேற்பேசாது நின்றாள். உடனே தேவரும் தேவியும் மறைந்தருளினர். அகத்தியரும் இலிங்கத்தைத் தொழுது பூசித்துப் பின்னர் பொதிகைமலை சென்றார்.

நக்கீரர் இலக்கணச் சூத்திரங்களையறிந்ததும் தனது செய்யுளையும் இறைவனது செய்யுளையும் சீர்தூக்கி இறைவன் சொற்களின் மேன்மையை கொண்டாடினர். தனது பாக்களை இகழ்ந்தார். இறைவனது செய்யுளை மீண்டும் மீண்டும் படித்து அதன் சொற்சுவை பொருட்சுவை இவற்றைத் துய்த்தார். பின்னர் இலிங்கவடிவில் திகழும் சோமசுந்தரக்கடவுளை வணங்கி கைகளைக் கூப்பிக்கொண்டு "பெருமானே! கருணைவடிவனே! கடம்பவன நாதனே! நான் இழைத்த பிழையாகும் கடலினின்று என்னைத்தூக்கியருளும். உமது திருமொழிகளை யிழிந்துபேசுதல் பெரும் பாவமன்றோ? அப்பாவமாகும் கயிற்றால் கட்டுண்ட என்னை விடுவித்தருளும். உலகில் நற்குணமுடையோர் அறியாமையால் ஒருமுறை செய்த பிழையைப்

பொறுக்கின்றனர். அதில் ஆச்சரியமொன்றுமில்லை. அறிவோடு நான் இழைத்த பெரும் பிழையை நீர் பொறுத்ததன்றே புவியில் பெரும் ஆச்சரியம்" என்றவாறு துதிகள் பாடிக் களிப்பித்தார்.

பின்னர் நக்கீரர் சங்கமண்டபம் சென்று அங்கு குழுமியிருந்த சங்கப்புலவர்களையடைந்து அகத்தியரிடமிருந்து தான் பெற்ற இலக்கணச் சூத்திரங்களைக் கபிலர் முதலான அறிவாளிகளுக்குக் கற்பித்தார். கூரான புத்தியுடைய கபிலர், பாணர் முதலியோர் அவற்றை ஒருமுறை கேட்டே தெரிந்துகொண்டனர். பின்னர் அவை சங்கப்புலவர்கள்மூலம் உலகத் தார்க்குக் கிடைத்தன.

இங்ஙனம் முதலில் அகத்தியருக்கு முற்காலத்தில் தாமே உபதேசித்த சூத்திரங்களை அகத்தியரைக்கொண்டு குற்றம்புரிந்த நக்கீரருக்குக் கற்பித்த சிவபெருமானுக்கு வணக்கம்.

இந்த ஐம்பத்துநான்காம் திருவிளையாடல் படிப்போர்க்கு அறம் முதலான நான்கு குறிக்கோள்களையும் பயக்கும்.



அறுபத்தோராவது அத்தியாயம்.

நூல்களின் ஏற்றத்தாழ்வு கண்டறிதல்.

சங்கப்புலவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே சூத்திரங்களுக்கு விருத்தியுரை யெழுதித் தனதுதான் மேலானதென்று சொல்லிக்கொண்டு சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். அவர்களுக்குள் ஒரு முடிவிற்கு வர முடியாது இறுதியில் எல்லாமறிந்த ஆலவாயுடையாரை யணுகுவதென்றும் அவரது சொல்லே அனைவரும் ஏற்றுக்கொள்வதென்றும் தீர்மானித்துக் காலை வழிபாடு கழிந்தவுடன் எல்லோருமாய் அவர்கள் பெருமானது முன்னிலைக்குச் சென்றனர். அங்கு இறைவனை வணங்கிக் 'கருணைக்கடலே! அழுக்காறற்றவனே! நாங்கள் ஒவ்வொருவரும் சூத்திரங்களுக்கு உரை இயற்றியிருக்கின்றோம். பொருமையினால் எது நல்லது மேலானதென்று எங்களுக்குள் ஒரு தீர்மானத்திற்கு வர இயலாமலிருக்கின்றோம். எங்களது பிணக்கைத் தீர்த்தருளல் வேண்டும்" என அவர்கள் வேண்டிக்கொண்டனர்.

உடனே எம்பெருமான் மேனி முழுதும் திருநீறும் உருத்திராக்கமுமணிந்து தலையில் பாகைகட்டி ஓர் புலவர் கோலத்தில் இலிங்கத்தினின்று வெளித்தோன்றிப் புலவர்களை நோக்கிப் 'புலவீர்! இந்நகரில் தனபதியெனும் பெயருடன் ஓர் வணிகன் இருக்கின்றான். அவன் எனதன்பன். நல்லொழுக்கமுடையவன். அவனது மனைவியும் அவன்போன்று சிவநேசமும் ஒழுக்கமும் பெற்றவள். அவர்கள் பிள்ளைப்பேறு இல்லாமல் வெகுகாலம் தவம்புரிந்தனர். ஓர் புதல்வன் பிறந்தான். ஆனால் அவன் கடும் சாபமொன்றின் பயனாக ஊமை. முருகனது அமிசம். நூல்களின் ஏற்றத்தாழ்வை அவனிடத்தே கேளுங்கள். அவன் எவற்றை ஏற்றுக் கொள்கின்றானோ அவையேமேலானவை" எனத் திருவாய்மலர்ந்தருளினார். புலவர்கள் அதைக்கேட்டு "ஊமை எங்ஙனம் கூறமுடியும்" என வினவினர். அதற்குக் கவிவேடத்திலிருக்கும் பெருமான் "எந்த நூலைக் கேட்கும்பொழுது அவனது உடல் சிலிர்த்து இன்பக்கண்ணீர் பெருகுகின்றதோ அந்நூலே பெரிதென்று அறிந்து செல்லுங்கள். அதன்பின் உங்களுக்குள் பிணக்கு ஒன்றும் இருத்தல் கூடாது" என மறுமொழிந்தார். உடனே அவர்களுக்கு விடைகொடுத்துவிட்டு மறைந்தார்.

புலவர்கள் பெருமானது ஆக்கினையென்று கூறியவராய் ஊமைப் பையனைக் கொணர்ந்து ஆடையாபரணங்களணிவித்து சங்கப்பலகையிலேற்றி நூல்களைப் படித்தனர். நக்கீரர், கபிலர், பாணர் இம்மூவரும் படித்தபொழுது இறைவன் கூறியபடி ஊமைப்பிள்ளைக்கு உரோமம் சிலிர்த்து இன்பக்கண்ணீர் வடிந்தது. அதிலிருந்தும் அவனது கருத்தை யறிந்து சங்கப்புலவர்கள் பொருமையையகற்றி அம்மூவரது நூல்களையும் ஏற்றுக்கொண்டனர்.



நூல்களின் ஏற்றத்தாழ்வு கண்டறிதல்



அழுக்காறுகொண்ட புல்வாது பிணக்கை இங்ஙனம் தீர்த்து வைத்த எம்பெருமான் உங்களுக்கு நலன் புரிவாராக.

இது ஐம்பத்தைத்தாம் திருவிளையாடல்.



அறுபத்திரண்டாவது அத்தியாயம்.

வட ஆலவாய் தோன்றல்.

செண்பக பாண்டியன் சிவசாயுச்சியம் பெற்றபின் அவனது புதல்வன் பிரதாபசூரியனும், அவனுக்குப்பின் வமிசத்துவசனும், பின்னர் ரீபுமருத்தனன், சோழவமிசாந்தகன், சேரவமிசாந்தகன், வமிசசிரோமணி, பாண்டியேசுவரன், குலத்துவசன், வமிசவிபூடணன், சோமசூடாமணி, குலசூடாமணி, ராசசூடாமணி, பூபசூடாமணி, இவர்களும் வழிவழியாகப் பாண்டிநாட்டு மன்னராய் விளங்கினர். ஒருசமயம் நற்கீரர் முதலான புலவர்கள் அகமர்ஷணம் முதலிய மந்திரங்களைச் சொல்லிப் பொற்முகரையில் நீரோடிப் பரப்பிரமத்தை நினைந்து கிட்டையிற் புகுந்தனர். அங்ஙனமிருக்கையில் கடல் புரியில் எறிவிட்டுப் பின்னர் அமைதிபெற்றது. அதற்குள்ளாக இரதந்தர கற்பமும் பதுமகற்பமும் வந்துபோயின. உருத்திரசாவருணி மனுவந்தரம் தொடங்கிற்று. அப்பொழுது பாண்டிநாட்டில் பொய்கையில் தாமரைமலர்கள் போன்றுப் பல புலவர்கள் தோன்றி பழையகாலத்திற்போல சங்கப்பலகையில் இடம் பெற்றனர்.

அந்த சமயத்தில் குலேசன் பாண்டிநாட்டை ஆண்டுவந்தான். அவனது நாவில் நாமகள் நடனம்புரிந்தாள். அவனுக்கும் சங்கப்பலகை இடமளித்தது. அவன் இலக்கிய இலக்கணங்கள் கற்றுக் கலிச்சுவையறியும் ஆற்றல் பெற்றவன். தானே ஓர் கவிஞன். அவன் சங்கப்புலவர்களுடன் இனிமையாகக் காலத்தைக் கழித்துவந்தான். அப்படியிருக்குங்கால் இடைக்காடர் என்று பெரும்புலவர் ஒருவர் இருந்தார். அவர் இயற்றிய நூல்கள் பல. அவர் சுவை, கருத்து இவைகளின் நுட்பங்களையறிந்தவர். அவருக்கு இலக்கிய இலக்கணங்களில் அழுத்தமான பயிற்சி. பிரபந்த வகைகள் கன்முய்த் தெரியும். தேனெழுகும் பாக்கள் பாடுவார். அவரது மாண்பு யாவரும் ஒப்புக்கொண்டது. இடைக்காடர் ஒப்பற்ற சிவனன்பர். எப்பொழுதும் சிவவழிபாட்டிலீடுபட்டவர். கவித்திறனால் கபிலரது உற்ற நண்பரானர்.

ஒருகால்அவர் குலேசபாண்டியனைக் காணவந்தார். அப்பொழுது ஆசுகவியான அவர் சொற்சுவை பொருட்சுவை நிறைந்த பல பாக்களை அரசனது முன்பு பாடினர். பாக்கள் மிகப் பெருமை வாய்ந்தவை. அரசன் அவற்றைக்கேட்டு அழுக்காறுகொண்டு புலவரை இகழ்ந்துபேசி அவருக்கு ஒன்றும் செய்யாது அனுப்பிவிட்டான்.

அவர் அரசன் தன்னை இங்ஙனம் சிறுமைப்படுத்தியதை நினைந்து மனம் நொந்தவராய் ஆலவாயுடையானையடைந்து வணங்கித் துதிகள்பாடிச் "சோமசுந்தரமூர்த்தியே! பிறைசூடியே! முக்கண்ணனே! அன்பர்துயர் தீர்ப்பவனே! அழிவற்றவனே! பிரமன் வீட்டினும் இவர்களது மண்டை

யோட்டையும் எலும்புகளையும் அணிந்தவனே! பூதகணாதர்களுக்கிறைவனே! எனது விண்ணப்பத்தைக் கேட்டருளும். நான் இன்று பாண்டியராசனிடம் சென்று சிலஅழகான பாக்களைப் பாடினேன். அரசன் அவற்றைப் புறக்கணித்து என்னையும் மகிழ்வியாது காரணமின்றிப் போவென்று கூறிவிட்டான். அவன் என்னை யிகழ்ந்தது சொல்வடிவான உண்மையும் பொருள்வடிவான உமையாரையும் இகழ்ந்ததேயாம். அனைத்தும் உமக்கே தெரியும். உமது மெய்யன்பரைச் சிறுமைப்படுத்தல் உம்மைச் சிறுமைப் படுத்தியதல்லவோ? அங்கயக்கண்ணம்மையின் நாயகனே! செய்யவேண்டியதைச் செய்தருளும்" என அறிவித்தார். உருக்கமான அவரது மொழி களைக்கேட்டு எம்பெருமானும் தேவியும் தங்களையே யடித்தது போன்று உணர்ந்தனர். பின்னர் இடைக்காடரையும் கபிலரையும் களிப்பிக்கவும் தனது மெய்யடியாரை மகிழ்விக்கவும் கயக்கண்ணியம்மையின் நாதனான பெருமான் குலேச பாண்டியன்மீது சினங்கொண்டுத் தானே தோன்றிய எல்லா இலிங்கங்களுக்கும் காரணமானதும் இலிங்கங்களின் தொகுதி வடிவானதுமான தனது பேரிலிங்கத்தை மறைத்துவிட்டுத் தனது விசித்திரமான மாயாசக்தியால் வடக்கே வைகையாற்றின் தென்கரையில் ஓர் அற்புதமான திருக்கோயிலை நொடிப்பொழுதில் தோற்றுவித்து அங்கே இலிங்க மூர்த்தியாய் எழுந்தருளினர். சங்கப்புலவரும் இறைவனது ஆக்ஞையின் பேரில் அவண் சென்றனர்.

காலையில் பட்டர்கள் பூசைக்காகக் கருப்பகிருகத்தினுட் சென்ற பொழுது இலிங்கத்தைக் காணவில்லை. அவர்கள் திடுக்கிட்டுத் தலத்தில் ஒருகாலும் இலிங்கமில்லாதிருந்ததில்லையே இப்பொழுது என்ன நேர்ந்து விட்டது என மொழிந்துகொண்டு வந்திருந்த சனங்களுடன் அரசனிடம் போய்த் தெரிவித்தனர். ஆச்சரியமான செய்தியைக்கேட்ட பாண்டியன் திகிலடைந்து வெகுநேரம் படத்தில் வரையப்பட்டவன்போன்று அசைவற்று நின்றான். பின்னர் அவன் தனக்குள் சோமசுந்தரமூர்த்திக்கு நான் என்ன பிழை இழைத்துவிட்டேன். குலசேகரபாண்டியன் முதலான வேந்தரது காலங்களில் இத்தகைய குற்றம் நேர்ந்ததில்லை. அது இப்பொழுது நிகழ்ந்துவிட்டதே. நாகத்தில் வீழ்த்தும் பெரும் இழிச்சொல் உண்டாய்விட்டது. தீரும் வகையில்லாத பெரிய தீங்கை எம்பெருமான்பாலோ அல்லது அவரது மெய்யன்பரிடத்தோ நான் இழைத்துவிட்டேன். அப் பழியினின்றும் என்னை விடுவித்ததற்கு என் உயிரை மாய்த்துக்கொள்கின்றேன்" எனத்தீர்மானித்து அதற்கு எத்தனிக்கையில் சனங்களில் சிலர் ஓடிவந்து 'வேந்தனே! அற்புதச் செய்தியைக்கேள். ஆற்றின் தெற்குக்கரையில் மேருவைப்போன்று உயர்ந்திருக்கும் புதிதான கோயிலொன்று காணப்படுகின்றது. சுந்தரேசமூர்த்தியும் அவண் இருக்கைகொள்கின்றார். சங்கப்புலவர்களும் அவருடன் அங்கு இருக்கின்றனர்" என மொழிந்தனர். அரசன் இவ்வாச்சரியச் செய்தியைக்கேட்டு மிகவதிகமாக அச்சமுற்று இதென்னவென்று நினைந்தவனுய்க் கால்நடையாகவே இறைவன் உறையுமிடத்திற்கேகி அமைச்சருடன் உட்சென்றுக் குலதெய்வமான சுந்தரமூர்த்தியைக் கண்ணுற்றுத் தொழுது அன்பினுல் உடல் முழுதும் உரோமம் சிலிர்ப்ப இன்பக்கண்ணீர் சொரிந்துகொண்டு குரல் குளறப் "பெருமை வாய்ந்த கடம்பக்காட்டு மத்தியில் பொற்றுமரைப் பொய்கையின் கரையில் தேவேந்திரனுல் கொண்டுவரப்பெற்ற எட்டு யானைகளால் தாங்கப்பட்ட

விமானத்தில் உறைபவனும், பெரும் திருவிளையாடல்கள் புரிந்து தனது மாட்சியை வெளிப்படுத்தியவனும், பேரிறைவனுமான அங்கயக்கண்ணம்மையாரின் நாதனை வணங்குகின்றேன். பெரும் யானையினது இரத்தம் தோய்ந்த தோலை யாடையாகவுடையவனும், மலையரசன் மகளின் பெரும் செல்வமானவனும், பெரும் மதம்கொண்ட அந்தகன் எனும் அவுணனுக்குச் சிங்கம்போன்றவனும், பூண்டிருக்கும் பெரும் அரவங்களது படங்களில் இலங்கும் இரத்தினங்களால் பொலிவுபெற்றவனும், பேரிறைவனுமான அங்கயக்கண்ணம்மையாரின் நாதனை வணங்குகின்றேன். பெரும் பாற்கடலைக் கடையும்பொழுது தோன்றிய கருநிறமான ஆலால நச்சை அனைவரின் அச்சத்தைப் போக்குதற்காக விழுங்கிக் கழுத்தில் வைத்தவனும், பெரும் கருணைக்கடலும், மதுவெனும் அவுணனைக்கொன்ற மகாவிட்டுணுவின் கண்ணிற்கெட்டாத திருவடிகளையுடையவனும், பேரிறைவனுமான அங்கயக்கண்ணம்மையாரின் நாதனை வணங்குகின்றேன். வணங்கும் மகாவிட்டுணு பிரமன், இந்திரன் இவர்களது முடியில் முளிரும் மாணிக்கங்களது கதிர்களால் சிவந்த திருத்தாள்களையுடையவனும், மட்டற்ற இன்பக்கடலும், விட்டுணுவால் கண்களாகும் தாமரை மலர்களால் பூசிக்கப்பெற்ற திருவடிகளையுடையவனும் பேரிறைவனுமான அங்கயக்கண்ணம்மையாரின் நாதனை வணங்குகின்றேன். அரவங்களைத் தோள்வளைகளாகப் பூண்டவனும், உலகத்தின் ஒரே தந்தையும், காற்றை உட்கொண்டு தவம் புரியும் தனது மெய்யன்பரின் உளத்தாமரையில் உறைபவனும், கயக்கண்ணியம்மையின் முகமாகும் தாமரைமலர்க்கு இளம்கதிரவன் போன்றவனும், நல்ல திருவுளமுடையவனும், பேரிறைவனுமான கயக்கண்ணம்மையாரின் நாதனை வணங்குகின்றேன். அடைக்கலம் புகுந்தோரின் பாவங்களுக்குக் காட்டுத்தீ போன்றவனும், அரவங்களை வளைகளாகப் பூண்டவனும், அரைமதியைக் கங்கையொடுச் சிரத்தில் சூடியவனும், வள்ளல்களுள் முதல்வனும், மேலான தேவரால் வணங்கப்பெற்றவனும், சிறந்த குணங்களுடையோனும், பேரிறைவனுமான கயக்கண்ணம்மையாரின் நாதனை வணங்குகின்றேன். இராவணனது ஆணவமாகும் மரத்தின் வச்சிராயுதமான கட்டைவிரலை யுடையவனும், சந்திரனது அழகை வெல்லும் முகமுடையவனும், முடிவற்றவனும், விரிந்த கண்களுடையவனும், உலகத்தின் படைப்பு, காத்தல், அழித்தல் இவற்றின் காரணமானவனும், பேரிறைவனுமான கயக்கண்ணம்மையாரின் நாதனை வணங்குகின்றேன். வடிவழகனும், அரவத்தை மாலையாகப் பூண்டவனும், திரிபுரத்தை எரித்தவனும், உமையொடு கூடியவனும், தாமரை மலர் போன்று மலர்ந்த கண்களுடையவனும், பதினாயிரம் விடியற்காலக் கதிர்வர்கள்போன்ற இன்பவடிவமான உடலுடையவனும், பேரிறைவனுமான கயக்கண்ணம்மையாரின் நாதனை வணங்குகின்றேன். உமையாரின் தனங்களது குங்குமம் தோய்ந்த மார்பையுடையவனும், இலக்குமி, சரசுவதி, இந்திராணி, ரதி இவர்களால் தொழப்பெற்றவனும், பேரிறைவனுமான கயக்கண்ணம்மையாரின் நாதனை வணங்குகின்றேன். பூமி, நீர், அனல், காற்று, மதி, ஆகாயம், கதிரவன், வேட்டல், புரிபவன் ஆகிய எட்டு வடிவங்களாகத் திகழ்பவனும், மகிழ்குடியும், அமுதத்திற்கும் மேம்பட்ட இனிமையுடையச் சொற்களையுடையவனும், இன்பத்தைப் பயக்குபவனும், பேரிறைவனுமான கயக்கண்ணம்மையாரின் நாதனை வணங்குகின்றேன். பூமியை இருக்கையாயுடையனும், முகிலைக்கலைய மாயுடையனும், ஆகாயத்தை உடலாகக் கொண்டவனும், மலைகளைப் புயங்களாகவுடையனும், கதிரவன், மதி, அனல்

இவற்றைக் கண்களாயுடையனும், மிளிர்கின்ற நட்சத்திரக்கூ மலர்களா யுடையனும், கடலே வயிறாகவுடையனும், பேரிறைவனுமான கயக்கண்ணம் மையாரின் காதலை வணங்குகின்றேன். மகாவிட்டுணுவாலும், பிரமனாலும் காணமுடியாத அடிகளையும் முடியையுமுடையனும், அரவங்களே மாலையா யுடையனும், கற்பகத்தருவின் கிளைகள்போன்று நீண்ட புயங்களுடையனும், உமையாரின் காலடியிலுல் அசைக்கப்பெற்ற முடிமீதுள்ள மதியுடையனும், பேரிறைவனுமான தித்திக்கும் கயக்கண்ணம்மையாரின் காதலை வணங்கு கின்றேன். தக்க யாகத்தை யழித்தவனும், புன்னகையால் இனிமை கொண்டதும், கோவைப்பழம் போன்றதுமான உதட்டால் இலங்கும் முக முடையனும், அழகிய மதியைத் தலையில் சூடாமணிபோல் பூண்டவனும், நகங்களால் இழுக்கப்பெற்ற யானைத்தோலால் போர்த்திய மேனியனும், உயிர்களின் தலைவனும், பேரிறைவனுமான தித்திக்கும் கயக்கண்ணம்மை யாரின் காதலை வணங்குகின்றேன். ஆயிரம் திருநாமங்கள் சொல்லி அருச் சனை செய்யுங்கால் ஆயிரம் தாமரைமலர்களில் ஒன்று குறைந்தபொழுது தனது ஓர் கண்மலரைப் பிடுங்கிய மகாவிட்டுணுவிற்குக் கருணைகூர்ந்து ஓர் தாமரை மலரையளித்தவனும், லட்சக்கணக்கான சுதிரவனெளியுடன் மிளிர்கின்றவனும், விருப்பங்களே யடையுமிடமும் பேரிறைவனுமான தித் திக்கும் கயக்கண்ணம்மையாரின் காதலைவணங்குகின்றேன். பூமியைத் தேராகவும், மறைகளைப் புரவிகளாகவும், பிரமதேவனைத் தேரோட்டியாக வும், சூரியனையும் சந்திரனையும் இரண்டுசக்கரங்களாகவும், மகாவிட்டுணுவை அம்பாகவும், மாமேருவை வில்லாகவும், சருப்பத்தைத் நாணாகவும் கொண்டு தேருடையோருள் தலைவனுய் விளங்கித் திறமையுடன் போர் நடத்தியவ னும், அழகான பயங்களைப் பயக்குபவனும், பேரிறைவனுமான தித்திக்கும் கயக்கண்ணம்மையாரின் காதலை வணங்குகின்றேன். சலந்தர அவுணனது வெற்றிச் சங்கையுடைத்து அதன்மூலம் மூவுலகத்தாருடையவும் பயத் தைப் போக்கியவனும், செற்றிக்கண் பொறிக்கு மாரனது உடலே இரையாக் கியவனும், பேரிறைவனுமான தித்திக்கும் கயக்கண்ணம்மையாரின் காதலை வணங்குகின்றேன்:: என்றவாறு துதி பாடினன். இத்தத் தோத்திரத்தை மெய்யன்புடனுன் படிப்போர் சிவபெருமானது திருவருள் பெற்று இறுதி யில் அவனது திருவடி சேர்வர்.

சோமசுந்தரமூர்த்தி குலேசபாண்டியனது இத்தப்புகழ்மாலையைக் கேட்டு மகிழ்ந்து ஆகாயக்குரல் மூலமாய்க் 'குலேசவேந்தனே கவனமாய்க் கேள்! இத்தத் திருக்கோயிலின் மாட்சியைக் கூறுகின்றேன். உலகில் எனது தலமாகும் திருவாலவாயானது பாவங்களனைத்தையும் போக்கவல் லது. எனது இலிங்கமும் அதைச்சுற்றி இரண்டு யோசனைத் தொலைவுள்ள இடமும் மிகப் புனிதமானது. மிகப் பெருமைவாய்ந்தது. இந்தத்தலத்திற் குச் சீவன்முத்திபுரமென்று எங்கும் பெயர்வழங்குகின்றது. இதில் சிறப்புற்ற பல இலிங்கங்கள் இருக்கின்றன. அவற்றுள் சில தானே தோன்றியவை; மற்றவை தேவர்களாலும், மனிதராலும், இருடிகளாலும் நிறுவப்பெற்றவை. அவைகளிலும் எட்டு இலிங்கங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. அவற்றை வரிசையாக உரைக்கின்றேன். அவை திசைபாலர்களால் நிறுவப்பட்டன. திருக்கோயிலின் மத்தியிலுள்ள எனது இலிங்கம் தானே தோன்றியது மிகப்பழமையானது. தானே தோன்றிய இவ்விலிங்கத்தின் முன்னர், இந் திரனுல் நிறுவப்பெற்ற இந்திரேசுவரம் எனப்பெயர் வாய்ந்த பழைய இலிங்

கம் ஒன்றுள்ளது. தென்கிழக்கில் கால்யோசனைத் தொலைவில் அக்கினித் தேவனால் வைக்கப்பெற்ற அக்கினீசுவரலிங்க முறைகின்றது. தெற்கில் நான்கு கூப்பிடு தொலைவில் இயமன் நிறுவிய இயமேசுரப் பேரிலிங்கமிருக்கின்றது. தென்மேற்கில் இரண்டு கூப்பிடு தொலைவில் நிருதி இலிங்க முள்ளது. மேற்கில் கூப்பிடு தொலைவில் வாருணேசுரலிங்கம் நிகழ்கின்றது. வடமேற்கில் இரண்டு கூப்பிடு தொலைவில் வாய்வீசுவர இலிங்கம் மிளிர்கின்றது. வடக்கில் வைகையாற்றின் கரையிலுள்ள இந்தக் குபேர இலிங்கமே எனக்கு மிக உவகையளிக்கக்கூடியது. வடகிழக்கில் ஆற்றின் கரையில் மூன்று கூப்பிடு தொலைவில் ஈசான இலிங்கம் இருக்கின்றது. எனது கண்பனான குபேரனால் மிக்க அன்புடன் எனது மூல இலிங்கத்தின் அளவுப்படி இந்த இலிங்கமானது அமைக்கப்பெற்றது. மூந்திய மனுவந்தரத்தில் கோயிலும் இலிங்கமும் மறைந்துபோயின. இப்பொழுது எனது விருப்பத்தின்பேரில் இரண்டும் தோன்றியிருக்கின்றன. இந்தத் தலமானது மிகவும் புனிதமானது. பாவங்களைக் கூறவல்லது. ஆனதுபற்றி இங்கேயும் இப்பொழுது வியோயாட்டாக இருக்கைகொள்கின்றேன். எனது பேரிலிங்கத்திற்கு வடக்கே யிருத்தலால் இந்தத் தலத்திற்கு வடஆலவாய் எனப் பெயர். வைகையாற்றின் தென்கரையில் நோடி இந்த மூர்த்தியை வணங்கும் தேவரும் மானுடரும் நயவர்களாகின்றனர். இந்த இடம் எனக்கு மிகப் பிடித்தமுடையது. கடம்பவனத்தின் மத்தியிலுள்ளதும் விசுவகருமனால் கட்டப்பெற்றதுமான இந்த விமானத்தை விட்டுவிட்டு நான் வெளிப் போய்விடவில்லை. உலகத்தின் துவக்கத்தில் தானே தோன்றி பாதாள உலகம்வரை புகுந்து நிற்கும் எனது இலிங்கமானது உலகம் அழிந்தபின்னரும் அழியாதிருக்கும் இது உண்மை. உண்மை. அது மூக்காலத்திலும் நிலைக்கக்கூடிய அற்புத இலிங்கம். எங்கும் இருக்கின்ற எனது இலிங்கம் காலத்திற்கும் இடத்திற்கும் எற்றவாறு தோன்றும். எனது மாயை வலிமையால் அது இப்பொழுது மறைவுற்றிருக்கின்றது. மறுபடியும் புலப்படும். உன்மீது எனக்குக் கோபமில்லை. எனது மெய்யன்பரான இடைக்காடரது சொல்நயம் பொருள்நயம் செறிந்த பாக்களைக் காரணமின்றி நீ இகழ்ந்தாய். அதுதான் எனது கோபத்திற்குக் காரணம். அவரைப் பெருமைப்படுத்தாது சிறுமைப்படுத்தியதாலேயே நான் எனது மாயையால் இலிங்கத்தைப் புலப்படாதிருக்கும்படி செய்தேன்" எனத் திருவாய்மலர்ந்தருளினார்.

எம்பெருமானது இத்திருமொழிகளைக்கேட்ட குலேசபாண்டியன் மிகமிகப் பயந்தான். அவனது உடல் முழுதும் நடுக்கிற்று. மீண்டும் மீண்டும் பலவகையான புகழ்ச்சொற்பாடி வணங்கி இறைவனை நோக்கி 'கருணைக்கடலே! ஆலவாயுடையாயே! அங்கயற்கண்ணம்மையாரின் நாதனே! அன்பர்க்கடங்கியவனே! அறியாமையால் நான் செய்த பிழையைப் பொறுத்தருளவேணும். முன்போன்று களிப்புற்று எனக்கு இலிங்கத்தைப் புலப்படச்செய்தருளவேணும். உலகத்தாரும் அன்பரும் உய்வர்" எனத் தாழ்மையாய்ப் பாண்டியராசன் விண்ணப்பித்தான். உடனே பெருமான் உவகையடைந்து மன்னனை நோக்கி ஆகாயத்தினின்று "நீ சென்று எப்பொழுதும் போன்று பேரிலிங்கத்தில் என்னை வழிபடுவாயாக" எனப் பணித்தருளினார். உடனே முன்போன்று இலிங்கம் கண்ணிற்குத் தெரிந்தது. இறைவனும் அதில் இருக்கை செய்தார்.

அரசன் இடைக்காடரையும் சங்கப்புலவர்களையும் அழைத்து உள் வீட்டில் வைத்து அவர்களைத் தொழுது அவர்களுக்கு ஆடையாபரணங்கள் பொன் முதலானவை தந்து அவர்களைப் பார்த்துப் "பெரும்புலவர்களே! இடைக்காடர்பால் நான் அறியாமையால் புரிந்த குற்றத்தை மன்னித்தருளல்வேண்டும்" என வேண்டிக்கொண்டு மீண்டும் மீண்டும் அவரது அடிகளில் பணிந்தான். புலவர்கள் உளமிரங்கி அவனை நோக்கி "அரசனே! எங்களது கோப அனல் உனது மொழியமுதால் ஆறிவிட்டது. உனக்கு எல்லா நலனும் உண்டாகும். சோமசுந்தரமூர்த்தி உனக்கு வரங்கள்யாவையும் கொடுத்து இறுதியில் சாயுச்சியமுத்திதந்து அருள்புரிவார்" என அன்பு மொழிகள் உரைத்தனர். அரசன் மகிழ்ந்து புலவருடன் திருக்கோயில் சென்று மூர்த்தியை வணங்கிப் புகழ்கள் பாடி எப்பொழுதும்போல் இறைவனது திருவருள் பெற்றுப் பெருமானுக்கு ஆடைகளும் ஆபரணங்களும் கொடுத்தான். சிக்கிரத்தில் அரசனுக்கு அரிமருத்தனன் எனப் புதல்வன் பிறந்தான். அவனெடும் சங்கப்புலவரோடும் இன்புற்று அரசன் வெகு காலம் அரசியற்றினன்.

அந்த நாள்முதல் வைகையாற்றின் தெற்குக்கரையிலுள்ள அந்தக் கோயிலுக்கு வடவாலவாயெனப்பெயர். இடைக்காடரின் பொருட்டு எம் பெருமான் புரிந்த இந்தத் திருவிளையாடலைப் படிப்போரும், கேட்போரும் எழுதுவோரும் இம்மையில் புதல்வர் செல்வம்முதலான பேறுகளைப்பெற்று மறுமையில் பூதகாதனுடன் கூடிக் கைலாயமலையில் களிப்பர்.

இது சுந்தரமூர்த்தியின் ஐம்பத்தாரும் திருவிளையாடல். எல்லா நலன்களையும் பயக்கும்.



அறுபத்திமூன்றுவது அத்தியாயம்.

வலையன் மகளை மணத்தல்.

ஒருகால் சூலவாயுடைய சிவபெருமான் கயக்கண்ணம்மைக்கு அவள் கேட்காமலிருக்கும்பொழுதே மறைமுடியறிவு புகட்டினார். தேவியானவள் அதுசமயம் வினோயாட்டில் ஈடுபட்டிருந்தமையால் சோம்பருடன் இறைவன் கூறியவற்றைக் கவனிக்கவில்லை. குழந்தைகளோக் கொஞ்சிக் கொண்டிருந்தாள். இதைக் காரணமாக வைத்துக்கொண்டு பெருமான் தனது மெய்யன்பனை சுதருமன் எனப்பெயருடைய பரதவ அரசனுக்குத் திருவருள் புரியும்பொருட்டுத் தேவியைநோக்கி 'நான் மறைகளின் பொருளை உனக்கு எடுத்துரைத்தபொழுது நீ கவனியாமல் இருந்தாய். உனக்குச் செருக்கு வந்துவிட்டது. நீ இழிகுலத்தில் பிறப்பாயாக" எனச் சாபமிட்டார். அப்பொழுது விநாயகர் ஓடிவந்து தனது துதிக்கையால் சாத்திரப் புத்தகங்களனைத்தையும் எடுத்துக் கடலில் எறிந்தார். பெருமான் சினங் கொண்டார். அத்தருவாயில் முருகக்கடவுள் வந்து, அன்னை சாபத்திற் குள்ளாயிருப்பதையறிந்து, மிகக் கடுந்த பெருமானைப் பார்த்து "பேரறி வைச்சொல்லுங்கால் உமது மாயையால் யாவர்க்கும் சிறிது சோம்பர் உண்டாவது இயல்பு. அங்ஙனமிருக்க அன்னையை ஏனைச் சபிப்பானேன்?" என மொழிந்து இறைவன் திருக்கையிலிருந்த புத்தகத்தைக் கிழித்தார். கோபங்கொண்ட முருகன்மீது பெருமானுக்குக் கோபம் வந்து திருப்புதல் வராகும் அவரையும் தனது அன்பனைக் காக்கும்பொருட்டு ஊமையாகக் கடவதெனச் சபித்தார். மயில்வாகனன் மதுரைநகரில் வாழும் ஓர் வணிகனின் புதல்வனுகப்பிறந்தார். அப்பொழுது அவரது பெயர் உருத்திர சருமனென்பது.

இங்ஙனம் தடபுடலாயிருக்கும்பொழுது கந்திகேசுரர் சமயம்தெரியாது இறைவனது அண்மையில் வந்தார். உடனே காமனைக்கண்டபோது போன்று அடங்காத கோபம் மூண்டுத் தனது வினோயாட்டு முற்றுப்பெறும் பொருட்டு அவரைக் கடலில் மீனுகப் பிறக்கும்படியாகச் சபித்தார். நொடிப்பொழுதில் கந்திகேசுரர் ராமரனைக் கட்டுக்கருகில் ஓர் பெரும் மீனுகப் பிறந்து சிறு மீன்களோத் தின்றுகொண்டு வாழ்ந்து வந்தார். அப்படியிருக்குங்கால் விநாயகரால் கடலில் எறியப்பட்ட மறைமுடிப் புத்தகங்களனைத்தையும் விழுங்கி எப்பொழுதும் சாபத்தின் முடிவைக்கருதிச் சிவபெருமானையே தினைத்துகொண்டிருந்தது.

தேவியானவள் சிவனன்பனும் அறவழியிலொழுகுபவனுமான கடலோரத்தில் வாழும் ஓர் பரதவனின் மகளாக தனதமிசமாய்த் தோன்றினுள். எங்ஙனமெனில் அந்தப் பரதவன் மீன்களின் பொருட்டுக் கடலில் வலையை வீசியபொழுது மீன்களுடன் ஓர் வலம்புரி சங்கும் வந்தது. பரதவன் அதைக் கையிலெடுத்ததும் அதினின்று அழகான பெண்குழந்தை

யொன்று வெளிவந்தது. அப்பெண்ணை அவன் தன்து மனைவியிடம் கொ டுத்தான். அவள் குழந்தையைப் பெற்றுக்கொண்டு "மகவில்லாத என் மீது கருணைகொண்டு தேவி எனக்குஇக்குழந்தையை அருளியிருக்கின்றாள். நான் பேறுபெற்றவளாய்விட்டேன்" எனக் கருதியவளாய்க் குழந்தையை மகிழ்ச்சியுடன் தழுவி உரோமம் சிலிர்ப்ப ஆவின் பால் கொடுத்து நாள் தோறும் வளர்த்துவந்தாள். பத்துநாட்களிலேயே பெண் நன்றாய் வளர்ந்து இளமைபபருவமெய்தினாள். அவளது அற்புத எழிலைக் கண்ணுற்ற யாவ ரும் மெச்சினர்.

எம்பெருமான் தேவியது பிரிவைப் பொறுக்கமுடியாது ஓர் வலை யன் வேடத்தில் அன்னையிருக்கும் வீட்டிற்கு வந்தார். அவ்வமயம் பாதவன் பெண்ணை யாருக்கு மணம்செய்து கொடுப்பதென்று கவலையுற்றிருந்தான். பெருமான் அவனது அண்மையில்சென்று அழகியைத் தனக்குத்தரவேண்டு மென்று கேட்டான். அதன்பேரில் பாதவராசன் பெருமானது ஊர் பெயர் என்ன வென்றும் எத்தகைய ஆற்றல் உடையவனென்றும் வினவி னான். அதற்குச் சோமசுந்தரமூர்த்தி பாதவனை நோக்கி 'நான் இருப்பது மங்களம் யாவும் தங்கும் மதுரையம்பதி. நான் பாதவகுலத்தின் தலைவன் கடலில் உலையும் எந்த உயிரையும் வலைவீசிப் பிடித்தற்கு எனக்கு வலிமை உண்டு. உலகனைத்தையும் படைத்துக் காத்து அழிக்கும் ஆற்றலுடையவன் யான். எனக்கு நிகர் கிடையாது. நான் என்றும் இருப்பவன். சாவற்ற வன். உனது பெண்ணுக்குச் சரியான கணவன். அவளது குணங்களையும் அழகையும் கேள்வியுற்று உன்னிடம் வந்திருக்கின்றேன்" எனப்பகர்ந்தார். உடனே பாதவன் அழகிற்குறைவிடமான எம்பெருமானுக்குப் புதல்வியைக் கொடுக்கத் தீர்மானித்துக் கொண்டு அவரிடம் "வெறும் பேச்சை நம்ப இயலாது. செய்து காட்டவேண்டும்" எனக் கூறினான். அதுகேட்ட இறைவன் அப்படியேஎனப் பதில் உரைத்துத் தனது ஆளின் தோளில் கிடந்த முக்குணமயமான மாயைவலையைக் கையில்எடுத்து அவனைநோக்கிப் "பாதவனே! உனது தகப்பன் பாட்டன் முதலான உனது இனத்தவராகிய எவராலும் இந்த வலையை எடுக்கக்கூட இயலாது. நான் ஒருவனே இதை வீச வல்லவன். இந்தக்கடலில் பெரிய மீன்கள் எவண் உறைகின்றன? கூறவேண்டும். கடுக்கடலேயாயினும் நான் பிடித்துக்கொணர்வேன்" என ஒன்றுமறியாதவர்போன்று மொழிந்தார். வலையால் அந்த வலையை அசைக்கக்கூட முடியவில்லை. உடனே அவர்கள் பெருமானிடம் "பாதவர் தலைவனே! கடலில் மீன்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று மிகப் பெரிது. மலைபோன்ற பெரிய உடலுடையது. மற்றை மீன்களனைத்தை யும் தின்றுவிடுகின்றது. வச்சிராயுதம் போலிருக்கும் தனது பற்களால் வர்த்தகரது கப்பல்களை அடிக்கடி துகள்துகளாக நொறுக்கிவிடுகின்றது. கொழுப்பு மிகுந்து மிக்க விசையுடன் அங்கு மிங்கும் சென்றுகொண்டிருக் கின்றது. அதைப் பிடித்துக்கொணர்ந்தால் பெண் உன்னுடையவளே. இது உண்மையான பேச்சு" என மொழிந்தனர்.

இதைக்கேட்டவுடனே இறைவன் வலையைத் தோளில் போட்டுக் கொண்டு அவ்வலையருடன் கடுக்கடலுக்கேகினான். அவர்கள் அப்பெரும் மீனை இதுதானெனக் காண்பித்தனர். இறைவன் வலையை வீசினார். சிவ னன்பரான நந்திகேசுவர் அதில் அகப்பட்டார். நொடிப்பொழுதில் அவ


ரைக் கரை சேர்த்தார். பெருமான் அவரை உற்று நோக்கி வியந்து கையால் தடவி வலேயர்களே நோக்கிச் 'சாபத்தால் இங்ஙனம் பிறந்தார்' என அருளினர். இறைவன் பார்த்துத் தொட்டதுமே மீன் உருவம் நீங்கிப் பழைய தன்னுருவத்தைப் பெற்றார் நந்திகேசுவரர். அவர் உடனே பெருமானே வலம் சுற்றித்தொழுது பாடிக் கைகூப்பியவராய் நின்றார்.

பெருமானது கைத்திறனேக்கண்ட வலேயர்கோமான் அவரை உடனே வீட்டிற்குள் அழைத்து மண்டபத்தில் அமரச்செய்துப் பூசைகள் செய்து மணமகள் கோலத்தில்விளங்கும் தனது புதல்வியை சாத்திரமுறைப் படி அவருக்குக் கொடுத்தான். மேலிலும் மேலான எம்பெருமான் அவளே ஏற்றுக்கொண்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் பெருமானது ஆக்ஞை யின்பேரில் கைலாயத்திலிருந்து விமானம் வந்தது. உடனே பெருமான் மெய்யன்பனை பரதவனுக்கும் அவனது மனைவிக்கும் சாரூப்பியமருளி விமானத்தில் அவ்விருவரையும் கைலாயத்திற்கனுப்பினன். அனைவரும் பார்க்கவே தானும் தேவியுடன் ஆகாயத்தையடைந்தார். நந்திகேசுவரர் புத்தகங்களுடன் அவர்களது பின்னே எகினர். வலேயரனைவரும் இது கனவா நனவாவென ஆச்சரியமுற்று நின்றனர்.

சுந்தரமூர்த்தி தனது கணங்களுடன் உத்தரகோசமங்கையெனும் தலத்திற்கு எழுந்தருளினர். அவண் சென்றதும் தேவி இறைவனிடம் தனக்கு மறைமுடியறிவு சொல்லிவைத்தருளவேண்டுமெனக் கேட்டுக் கொண்டாள். உடனே பெருமான் முறைப்படி தேவியாருக்கு அதைவடுத் துரைத்தார். அப்பொழுது அன்பர்களும் யோகியரும் அவண் வந்து தங்க ளுக்கும் அருளவேண்டுமெனத் தெரிவித்துக்கொண்டனர். ஆலவாயுடை யான் அவர்களுக்கும் முத்தி தரும் அவ்வறிவையும் அறுபத்துநான்கு கலை களேயும் சற்பித்தருளினர். பின்னர் ஆதிருருவான அவர் அவர்களுக்குச் சாயுச்சியம் தந்தார். இங்ஙனம் தேவியின் காரணமாகவும் அன்பரது காரண மாகவும் சிலகாலம் அங்கு தங்கியிருந்து பின்னர் தனது உறைவிடமான ஆல வாய் சென்றருளினர்.

இது சோமசுந்தர மூர்த்தியின் ஐம்பத்தேழாம் திருவிளையாடல். துயரை நீக்கி இன்பத்தைத் தரவல்லது.





திருவாதவூராருக்கு உபதேசித்தல்



அறுபத்திநான்காவது அத்தியாயம்.

திருவாதவூரருக்குத் தீக்கையளித்தல்.

திருவாதவூரில் ஆதிசைவப் பிராமணகுலத்தில் சுந்தரநாதர் என்றொருவர் இருந்தார். நற்குண நல்லொழுக்கமுடையவர். அவருக்குத் திருவாதவூரர் எனப் பெயர்கொண்ட ஓர் புதல்வன் இருந்தார். அவர் சிறுவயதிலேயே வேதங்களையும், அவற்றின் பொருளையும், தருமசாத்திரங்கள், புராணங்கள், சிக்கை முதலான ஆறு அங்கங்கள், தருக்கம், மீமாம்ஸை, வேதாந்தம், ஆயுள்வேதம், வில்வித்தை, காட்டிய வேதம் இவையனேத்தையும் கற்றார். பொருள் நூல்கள் பலவற்றையும் கற்று யானையிலக்கணம், குதிரையிலக்கணம், கலைகள் மந்திர சாத்திரங்கள் இவற்றிலும் தேர்ச்சிபெற்றார். அவர் பல நாட்டு மொழிகளிலும் பலவகை எழுத்துக்களிலும் வல்லமையடைந்தார். அரசியல் நூல்களில் அவருக்கு மிக்க மேலான அறிவு. இவ்வாறுகப் பதினாறு பிராயத்தில் அவர் எல்லாமறிந்த வராய்விட்டார்.

பாண்டியராசன் வாதவூரரின் அறிவுத்திறனை யறிந்து அவரைத் தனது முதல் அமைச்சனுகச் செய்துகொண்டார். யானைகள், குதிரைகள் முதலானவற்றை மேற்பார்க்கும் பொறுப்பு அவரிடம் ஏற்பிக்கப்பட்டது. வெளித்தீவுகளின்று வரும் பொருள்களை நிதானிப்பதும் அவருடைய அலுவலாயிருந்தது. இடைவிடாது வேலை செய்து அவர் அரசனது அன்பைப் பெற்றார். அரிமர்த்தனபாண்டியன் அவருக்கு வீடு, தோட்டம், ஆடை ஆபரணம் முதலானவை தந்து அவரை மகிழ்வுடன் இருக்கச் செய்தான். அத்தகைய மந்திரியைப்பெற்றுத் தானும் இன்புற்றிருந்தான். வாதவூர் பிருந்த செல்வத்தின் மத்தியிலும் தனது முன்னோர் தெறியினின்று சிறிதும் தழுவவில்லை. தனது சுற்றத்தாருக்கும் மற்றை வேதியருக்கும் ஏராளமான பொருள் கொடுத்தார். அவர் ஓயாது அறத்தையே செய்தார். அவரிடத்தே சிறிதளவும் கயவர் வழிகிடையாது. நாள்தோறும் அவர் அன்புடன் சிவனடியார்க்கு உண்டியளித்தார். சோமசுந்தரமூர்த்திக்கு அவ்வப் பொழுது பொருளாலான தொண்டுகளையாற்றினர். அவரது ஆலோசனைத்திறனுல் அரசனது பொருள் சிலவாண்டுகளுக்குள் பன்மடங்காய்ப் பெருகிற்று.

இங்ஙனமிருக்கையில் ஒருநாள் குதிரைத்தலைவர் அரசனிடம் வந்து குதிரைகள் காய்ச்சல் முதலான நோயுற்றுப் பலவாக மரித்தனவென்றும் உடனே புதுக் குதிரைகள் வாங்கப்படவேண்டுமென்றும், பிறநாடுகளின்மீது வெற்றிபெற விரும்பும் வேந்தர்க்குக் குதிரைப்படை மிகவும் இன்றியமையாத தென்றும் ஆனதுபற்றி வெளியிடங்களினின்றேனும் குதிரைகளைப் பெறவேண்டுமென்றும் தெரிவித்தனர். இதைக்கேட்டதும் அரசன் வாதவூரரை வரவழைத்து "மந்திரியே! நீர்தான் எனது உண்மையான கண். ஆதலால் உமது மூலமாகவே இராச்சிய அலுவல்களனேத்தையும் நான் பார்க்கின்றேன். குதிரைத் தலைவர்கள் குதிரைகள் மாள்கின்றன

வென்று கூறுகின்றார்கள். ஆனதுபற்றி உமது விருப்பம்போல் பொக்கிஷ் வறையினின்று பணத்தை யெடுத்துக்கொண்டு, குதிரை வர்த்தகர்கள் குதி ரைவாங்குமிடமாகும் கடற்கரைக்கு சென்று இலக்கணப்படியுள்ள சிறந்த குதிரைகளை வாங்கும். நீர்தான் எனது நம்பிக்கைக்கிடமானவர். இந்தக் காரியத்தைச் செய்து தரவேண்டுமென; உரைத்தார். உடனே வாதவூர் பொன்னறைசென்று, கணக்கர் கணக்கெழுதிகொள்ள, அங்குள்ள பொரு ளனைத்தையும் எடுத்துக்கொண்டார். ஏராளமான பொருளைக்கண்டதும் அவர் சிவவறங்கள் நிகழ்த்துதற்கு இதுவே தக்கதருணமென நினைந்து அதைப் பெட்டிகளிற் போட்டுப் பூட்டி முத்திரையிட்டு வண்டிகளிலேற் றிக்கொண்டு அவணிருந்து வெளிப்போந்தார். பெட்டிகளை வீட்டில் வைத்துக் காவலாளிகளைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டுப் பொற்ரு மரை வாவிக்கேகி நீராடி திருநீர் உருத்திராக்கமணிந்து நித்தியகருமங்களை முடித்துக் கரையின்மீதுள்ள விநாயகரையும் முருகனையும் வழிபட்டுப் பின் னா கயக்கண்ணம்மையை வணங்கித் துதித்துத் 'தாயே! இந்தப் பொருள் முழுதையும் அறச்செயல்களில் செலவிட நினைத்திருக்கின்றேன். துருக்க ரிடம் அதைக் கொடுத்துவிட விரும்பவில்லை. என்னையும் அரசனையும் காத்தருளல்வேண்டும்' என வேண்டிக்கொண்டார். அப்பால் பேரிலிங் கத்திடமணுகி, வலம்சுற்றி, வணங்கி, மலர் முதலியவற்றுல் பூசித்து எல்லா மறிந்தவனே! கருணைக்கடலே! உலகனைத்திற்கும் ஒரே தலைவனே! உல கைப்படைத்துக் காத்தழிப்பவனே! இறைவனே! உமது திருவருளால் நான் போகும் காரியம் கைகூடட்டும். என் வயமிருக்கும் அரசனது பொருள் முழுதையும் உமது அடியார்களுக்கும் உமக்குமாகக் கொடுத்து விடப்போகின்றேன். நான் ஏற்றுக்கொண்டிருக்கும் இராச்சிய காரியத்தை நீரே செய்துவைக்கவேணும்" என விண்ணப்பித்து அவர் வெளியே செல் லவிருக்கையில் ஓர் அந்தணர் எதிரே வந்து 'திருநீறு வாங்கிக்கொள்' என மொழிந்து நீறுகும் காப்பை அவருக்கருளினர். வாதவூரர் அதைப்பெற்று மகிழ்வுற்றுக் காரியம் கைகூடிவிட்டதெனக் கருதியவராய்க் கிழக்குக்கடற் கரையை நோக்கிச் சென்றார்.

எண்ணிறந்த பொருளுடன் படைகள் சூழ்ந்துவர அவர் தங்கித் தங்கிச் செல்கையில் வழியில் திருப்பெருந்துறையெனும் பெயர்பெற்ற சிவத் தலத்தையடைந்தார். உள்ளே புகுந்ததும் அவரது மனம் அழலிலிட்ட மெழுகுபோன்று உருகிற்று. அப்பொழுது இறைவனது திருவருளால் அவர் 'உலகில் எத்தனையோ சிவத்தலங்கள் கண்டுளேன். இத்தத் தலத்தைக் கண்டதும் எனது உளம் கரைகின்றது. நலன் பெறுதற்கு நான் இங்கே தங்கப்போகின்றேன். வேறிடம் செல்லப்போவதில்லை' எனத் தீர்மானித் துக்கொண்டு தன்னுடன் வந்த படையினரையும் மற்றுரையுமழைத்து இறைவனது திருவடிகளை மனத்தில் நினைந்தவராய் அவர்களை நோக்கி 'ஆடிமாதத்தில்தான் இங்கு குதிரைகள் வரும். அதுவரை காத்திருந்து நான் குதிரைகள் வாங்கிக்கொண்டு ஆவணிமாதம் வருகின்றேன். அதில் ஐயமில்லை. பெருமான் என்னசெய்யப்போகின்றரோ தெரியவில்லை. இங்ஙனம் அரசனிடம் தெரிவியுங்கள்" எனமொழிந்து அவர்களுக்குமதுரை செல்வதற்கு விடையளித்தார். அவர்களும் அப்படியே மதுரை சென் றனர்.

அப்பால் வாதவூர் சன்வந்தர் என்ற திருப்பெயர்பூண்ட அந்தலத்துப் பெருமானே வணங்குதற்குத் திருக்குளத்தில் நீராடித் திருநீறு உருத்திராக்கமணிந்து திருக்கோயிலுக்குட் செல்லுகையில் கருணைவடிவமான சோமசுந்தரமூர்த்தி அவ்வூர்ப் பெருமானின் திருவுருவத்தில் அவர் முன்பு தோன்றினர். அப்பொழுது பெருமான் குரு வடிவத்தில் குருந்த மர நிழலில் அமர்ந்து பல மாணவர்க்கு வேதத்தின் உட்பொருளை ஞான முத்திரையால் விளக்கிக்கொண்டிருந்தார். அவரைக்கண்ணுற்று வாதவூரர் வியந்து நின்றார். பெருமானது திருநோக்கு அவர்மீது வீழ்ந்தது. சுந்தரேசன் என்ற நினைவுடன் வாதவூரர் அக்குருமூர்த்தியை வணங்கினர். அன்பர்க்கருளும் எம்பெருமான் திருநோக்கால் அவருக்குத் தீக்கையருளி வாவெனமொழிந்தார். அவர் கூப்பிய கைகளுடன் மிக்க வணக்கமுடைய வராய் மெதுவாகப் பெருமானது அண்மையையடைந்தார். அவரது ஒழுக்கத்தையும் அன்பையும் கண்ட குருமூர்த்தியவருக்குச்சுக்கும பஞ்சாக்கரத்தையும் மூல பஞ்சாக்கரத்தையும் கற்பித்தருளினர். நொடிப்பொழுதில் உளத்தில் ஞானமும் காவில் புலமையும் உண்டாயின. வாதவூருக்குப் பிறப்பு இறப்பு இவற்றின் மணம் அறுந்தது. குருமூர்த்தியால் கற்பிக்கப் பெற்ற வேதங்களை மாணவர் உடன் சொல்வதைப் பார்த்துக்கொண்டு அவரது அருகே அன்புடன் நின்றார். குருமூர்த்தி அவரை மீண்டும் நோக்கி 'குழந்தாய்! எனது காரியம் இங்கு கொஞ்சம் இருக்கின்றது. இங்கேயே இரு எனப் பணித்துச் சீடருடன் மறைந்தருளினர்.

வாதவூரர் குருமூர்த்தியைக் காணாது, சோமசுந்தரமூர்த்தியை நினைந்து. குருமூர்த்தியாய்த் தோன்றிய எம்பெருமானைப் பல திருவாசகங்கள் பாடித் துதித்துச் சிறிதுநேரத்தைக் கழித்துப் பின்னர்ப் புழுங்கிய மனத்துடன் உண்டி உறக்கம் தவிர்த்துப் பித்துப்பிடித்தவன்போன்று திரிந்தார். அவர் பாடிய தேனினுமினிய திருவாசகங்களைக் கேட்ட மெய்யன்பர் அவற்றை மிக மெச்சினர். வாதவூரர் சிவனை நினைந்துகொண்டு அவர்கட்கும் பெருவாரியாகப் பணம் கொடுத்தார். அங்குள்ள கோயிலின் திருப்பணி முதலான காரியங்களில் வரப்போகும் நிலைமையைக் கருதாது பெருஞ் செல்வத்தைச் செலவிட்டார். சோமசுந்தரமூர்த்தியின் காரியங்களுக்கும் அவர் பணம் அனுப்பினர். சின்னாட்களிலேயே அரசனது பொருள் முழுதும் கரைந்துவிட்டது. அவர் திருவாசகங்கள் பாடிக்கொண்டுக் கவலையின்றித் திரிந்தார்.

அவ்வமயத்தில் பாண்டியமரசனது மற்றை அமைச்சர் அவரிடம் வாதவூரரது வரலாற்றை அறிவித்தனர். அரசன் உடனே சினங்கொண்டு 'பொக்கிஷச்சாலையிலுள்ள பணமனைத்தையும்குதிரைகள் வாங்குவதற்கென எடுத்துச் சென்றீர். அவை இன்னும் வந்தசேரவில்லை. உடன் குதிரைகளுடன் இங்கு வந்துசேரவும் எனக் கடிதம் வரைந்தனுப்பினன். கடிதத்தைப் பிரித்துப் படித்ததும் அவர் இன்னது செய்வதென்று அறியாது ஓரிடத்தில் அசைவற்று நின்றார். சோமசுந்தரமூர்த்தியையும் கயக்கண்ணம்மையாரையும் அவர் அன்போடு நினைந்து, சனவந்நாதப்பெருமானையணுகித் துதித்து வணங்கி, அதிகமான அச்சமுற்றவனுய்க் கைகளைக் கூப்பிக்கொண்டுக் கண்களினின்று நீர் சொரியச் "சனவந்நாதக்கடவுளே! எனது விண்ணப்பத்தைக் கேட்டருளும். இன்றே குதிரைகளுடன் வந்து சேரு

மென அரசன் நிருபம் எழுதியிருக்கின்றான். அவனது பணத்தைக்கொண்டு நான் குதிரைகள் வாங்கவில்லை. உமது அடியார்கள்பற்றியும் சோமசுந்தர மூர்த்தியுடையவும் உம்முடையவும் திருக்கோயிற் திருப்பணிபற்றியும் அப் பொருள் முழுதும் செலவாய்விட்டது. அறிவிலியான யான் இப்பொழுது என்ன செய்யவேண்டும்! என்னைக் கடைக்கண்ணேக்கால் காப்பாற்றியருள வேணும். நான் புறப்படுங்கால் எனக்குத் திருநீறு கொடுத்து காப்பளித் திருக்கின்றீர். நீரே எனக்குத் தஞ்சம்'' எனத் தெரிவித்தான். உடனே வானில் 'அன்பனே! வணக்கமாக அரசனுக்குப் பதில் வரைந்தனுப்பு. அஞ்சவேண்டாம். உனக்கு நானிருக்கின்றேன். பொருளனைத்தையும் எனதன்பர்பாலும் திருப்பணி வேலைகளிலும் செலவிட்டிருக்கின்றாய். நான் உன்னிடத்தே மிகுந்த அன்புகொண்டிருக்கிறேன்' என்றவாறு அலரது மனத்துயரை நீக்கும் மொழிகள் ஒலித்தன. வாதவூர் களிப்பெய்தி அரச னுக்குப் பதில் வரைந்தார். அந்த நிருபத்தில் ''பாண்டியமன்னனே! ஐந் தாறு காட்களில் குதிரைகளுடன் வந்து சேர்கின்றேன். குதிரை லாயங்கள் தயாராகட்டும். குடிதண்ணீருக்குக் குளங்கள் வெட்டப்படவேண்டும். நகர் முழுதும் அலங்கரிக்கப்படவேண்டும். கோள்சொல்வோரின் சொற் களுக்குச் செவிசாய்த்தல் வேண்டாம். எனக்கு அங்குபகைவர் இருக்கின் றனர்' என்று மகாராசா தெரிந்துகொள்ளவேண்டும். என்பால் முன் போன்றிருந்து மகாராசா இன்புற்றிருக்க வேண்டும்'' என்று எழுதப்பட் டிருந்தது. எப்பொழுதும் பெருமானையே நினைந்துகொண்டிருந்த அவர் அன்பும் அறிவும் நிறைந்திருந்தும் கவலையுற்றார்.

அப்பால் அவர் உறங்குகையில் கருணைமிக்க பெருமான் அவரது கனவில் நேராகத் தோன்றி 'அன்பனே! என்னிடத்தே அன்புகொண்ட வரில் உனக்கு நிகரானவர் எவருமேயில்லை. உனதுவிருப்பம் ஈடேறும். மகிழ்ச்சியுடன் நீ அரசனிடம் செல்லலாம். மனோவேகமுடைய புரவிகளை நான் அரசனுக்குக் கொடுப்பேன். உனக்கு எப்பொழுதும் சுதந்திரமும் களிப்பும் உண்டாகும்'' எனத் திருவாய் மலர்ந்தருளினார். வாதவூர் உடனே எழுந்து மேனி முழுதும் நீறு பூசிக்கொண்டு சனவந்காதப்பெரு மானை வணங்கி மதுரைக்கேகினார்.

உடனே அவர் அரண்மனைக்குச்சென்று கொலுவில் களிப்புடன் வீற்றிருக்கும் பாண்டியராசனைக் கண்டார். அரசனும் அவரைப் பார்த்து மகிழ்ந்தார். பின்னர் பிறரனைவரையும் வெளிப் போகச்செய்து அரசன் அவரிடம் தனியாக 'வாதவூரரே! எவ்வளவு பணம் கொடுத்து எத்தனை பரிகள் வாங்கியிருக்கின்றீர்? அவை எந்தெந்த நாடுகளில் பிறந்தவை! அவைகளின் இலக்கணங்கள் எங்ஙனமிருக்கின்றன? அவைகளுள் கல்ல இலக்கணங்களுடன்கூடி எனக்கு நன்மை பயக்கக்கூடியவை எத்தனை?'' எனப் பரிவுடன் வினவினார். அதற்கு மந்திரி எம்பெருமானை நினைந்து கொண்டு 'அரசனே! எண்ணிக்கையற்ற வீலை கொடுத்திருக்கின்றேன். குதிரைகள் பல நாடுகளைச் சேர்ந்தவை. குதிரைகளின் எண்கணக்கிலடங் காது. அவை நல்ல இலக்கணமுடையவை. அற்புதமான அக்குதிரை களின் பெருமையை என்னால் கூறமுடியாது. அவைகளை நேரில் பார்த் தால் அவைகளது மேன்மை தெரியவரும். பாண்டியமன்னனுக்கு இனி மேல் அசுவபதி யெனும் புதுப்பெயரும் உண்டாம். இதில் ஐயமொன்று

பில்லை. நான் கூறுவது முற்றிலும் உண்மையே. எனது திறமை நானே சொல்லிக்கொள்வதற்கில்லை'' என மறுமொழியுரைத்தார். அதுகேட்ட அரசன் மிக மகிழ்ந்து அவருக்கு ஆடையாபரணங்கள் தந்து இனிய சொற்களில் இல்லத்திற்குப்போக வணுமதியளித்தார்.

அப்பால் வாதவூரர் அவணிருந்து வெளியேறிப் பொற்றமரையில் நீராடி நீறு உருத்திராக்கமணிந்து காலைக்கடன்களை முடித்துக் கரையில் வீற்றிருக்கும் சித்தி விநாயகரையும் முருகனையும் வணங்கிப் பின்னர் தனது விருப்பம் நிறைவேறும்பொருட்டுக் கயக்கண்ணம்மையாரையும் ஆலவாயுடையாரையும் வணங்கி வலம் வந்து மீண்டும் தொழுதுப் பெருமானிடம் தனது எண்ணத்தை விண்ணப்பித்துக்கொண்டார். உடனே ஆகாயத்தினின்று 'சிறிதும் தயர்வேண்டாம்' என வரமளிக்கும் பெருமானது தெளிவான சொல் பிறந்தது. வான்மொழியைச் செவியுற்று வாதவூரர் வலம் சுற்றி, வணங்கி, உவகையுடன் வீடு சேர்ந்து எம்பெருமான் அரசனுக்குத் திண்ணமாக நற்குதிரைகளையளிப்பான் தனக்கும் அருள்புரிவான் எனத் தெளிந்துச் சிவனடியார்க்கும் சுற்றத்தார்க்கும் மற்றைவேதியர்க்கும் அமுது செய்வித்துப் பின்னர்த் தானும் உண்டியருந்தி ஐயம் நீங்கி மனக்கலக்கமற்றுக் கட்டில்மீது இன்பமாக வீற்றிருந்தார். அப்பொழுது அவரது இனத்தைச்சேர்ந்த அந்தணர் நடுக்கத்துடன் அவரையணுகிக் கைகளை விரித்துக் கொண்டு ''நல்லோரது வழியை விடுத்து அரசனிடம் அலுவல் புரிகின்றீர். அரசனது மந்திரியாகவமர்ந்தீர். ஆனால் அவருக்கே கேடு விளைவித்தீர். ஆலவாயானது ஆக்கினையால் அது அவருக்குத் தெரியாது. நீர் புரிந்திருக்கும் குற்றத்தை அவர் தெரிந்தவுடன் திண்ணமாக உமக்கும் எங்களுக்கும் தீங்கிழைப்பார்'' எனவுரைத்தனர்.

இங்ஙனம் மனவருத்தத்துடன் அவர்கள் உரையாடியதைக்கேட்ட வாதவூரர் சிறிதேனும் பற்றற்றவராய் மிகுந்த உறுதியுடன் அவர்களை நோகி ''அறியவேண்டியதை யறிந்த என்னை உங்களுக்கு என்னவேலை? எனக்கு நீங்கள் யாவர்? உங்களுக்கு நான்யார்? அரசனுக்கு கெடுதல் புரியக் கூடாதென்ற எண்ணங்கொண்டே இவண் வந்திருக்கின்றேன். ஏதாவது ஒருவழி செய்து அவரது கடனைத் தீர்த்துவிட்டு இங்கிருந்து எனது விருப்பம்போன்று செல்லப்போகின்றேன்'' எனக் கூறினர். அவர்கள் உடனே போய்விட்டனர். தாமரையிலைக்கும் தண்ணீருக்குமிருப்பதுபோன்றே அவருக்கும் அவரது உறவினருக்கும் ஒட்டு இருந்தது.

மறுநாள் பாண்டியராசன் வாதவூரை அழைத்துக் குதிரைகள் எப்பொழுது வருமென வினவினான். அதன்பேரில் அவர் எம்பெருமானை உளத்தில் நினைந்து அரசனே! இன்றோ, நாளையோ, நாளைமறுநாளோ குதிரைகள் வந்துவிடும். நகர் செப்பனிடப்படட்டும்' எனத் தெரிவித்தார். அரிமர்த்தன பாண்டியன் உடனே நகரெங்கும் நீர் தெளித்து வாழைகளும் கமுகுகளும் கொடிகளும் தோரணங்களும் கட்டுவித்தான். நகரத்தாரனைவரும் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு குதிரைகள் வருவதைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் கூட்டம் கூட்டமாகக் களிப்புற்று நின்றனர்.

இது ஆலவாயானது ஐம்பத்தெட்டாம் திருவிளையாடல். பெருமானது திருவருளைத் தந்து இன்பத்தையும் வீட்டையும்பயக்கும்.

———


அறுபத்தைந்தாவது அத்தியாயம்.

மாயக் குதிரைகள் விற்றல்.

இன்றோ நாளையோ நாளைமின்றோ புரவிகள் வந்துவிடுமென்ற வார்த்தைகளை நம்பியவனுய் அரசன் பல குளங்களை வெட்டி அவற்றில் நன்னீரை நிறப்பினன். பேருவகையுடன் மூன்று நாட்களைக் கழித்தான். நான்காம்நாள் வந்தது. குதிரைகள் வரவில்லை. மந்திரி எம்பெருமானது சொல்லை நம்பிச் சிறிதும் மனம் தளராமலிருந்தார். அரசனுக்கு அடங்காத கோபம் உண்டாயிற்று. கோட்சொல்லிகள் அதை வளர்த்தனர்.

அங்ஙனமிருக்கையில் வாதவூர் எம்பெருமானை நினைந்தவராய் அரசனைக் காண்டற்கு வந்தார். அவரைப் பார்த்தவுடன் அரசனுடைய கோபத்தீ கொழுந்து விட்டெரிந்தது. மந்திரியைப் பொசுக்கிவிடும் போலிருந்தது. அரசன் பக்கத்தில் நின்ற வேலையாளர்களிடம் குதிரைகள் வராததால் பணம் முற்றிலும் மந்திரியிடமிருந்து திரும்பப் பெறவேண்டுமெனக் கூறி மந்திரியைத் தன்புறத்தும்படி அவர்களை ஏவினன். அவர்கள் மிகச்சினம் கொண்டு மந்திரியின் அண்மையில் சென்று அவரை இழுத்து முதுகின் மீதுபெரியசல்லை வைத்தனர். பெருமனதுடைய வாதவூர் அதை ஏற்றுக் கொண்டார். வலியாவற்றையும் போக்கவல்ல இறைவனையே அவர் எப் பொழுதும் நெஞ்சத்து நினைத்தாராதலால் கல்லின் பளுவை உணரவே யில்லை. வலுவுடைய இவர் பாராங்கல்லை பஞ்சுப்பொதியைப்போல் இலே சாகச் சுமக்கின்றார் என்று அழுத்தமான தடிகளால் அவரைப்புடைத்தனர். அப்பொழுது அவர் சிவனே என்றலறினர். மீண்டும் அவரது முதுகோரத் தில் மிகப் பெரியகல்லை யேற்றினர். சிவபெருமானை நினைந்தவராய் வாத வூர் கதறிக்கொண்டு அதையும் தாங்கினர். இங்ஙனம் பலவகையான துன்புறுத்தல்களைப் பொறுத்துச்கொண்டு உணவின்றி அன்றுபகலைக் கழித்தார். அரசனது ஆக்ஞையின்பேரில் எவலாளர் இரவில் அவரைச் சிறையிலிட்டனர். சிறையிலுவலாளரும் அவரை வெகுவாக வெருட்டினர். அவர்களது மிரட்டல்களைக் காதுகொண்டு கேட்கமுடியாமல் 'சங்கரனே! வேலையாட்கள் என்னை மூட்டாளே என்றழைக்கின்றனர். புரவிகளைக் கடிதில் கொண்டுவரவேண்டும். என்னுல் பொறுக்கமுடியவில்லை. உயிரை விடப்போகின்றேன். நீர் காக்கின்றவனுல் உடன் என்னைக் காத்தரு ளும் என்று பொருள் படுகின்ற ஓர் செய்யுளைப் புனைந்து அதையே மீண் டும் மீண்டும் கூறிக்கொண்டு இரவையும் போக்கினர்.

அப்பால் கதிரவன் தோன்றியதும் சுந்தரமூர்த்தியின் திருக் கோயில் விமானத்துச்சியில் மிளிரும் தங்கத் தூபியைக்கண்டுகொண்டு காத்தருளவேண்டுமென வேண்டிக்கொண்டார். புதிதாய்ப் பாடிய திரு வாசகங்களாலும் பெருமானைப் புகழ்ந்தார். சோமசுந்தரமூர்த்தியும் அப் பாடல்களைச் செவியுற்று மகிழ்ந்தார். உடனே கந்திகேசுவர் முதலான



மாயக்குதிரைகள் விற்றல்

கணநாதர்களுக்கு நரிக்கூட்டங்களோ பரிக்கூட்டங்களுக்குமாறு உத்தரவிட்டார். கொடிப்பொழுதில் உலகின்கண் இருக்கும் நரிகளாவும் பரிகளாகிவிட்டன. கணத்தலைவரனைவரும் மாயாமானுட வடிவத்தில் குதிரைவீரராகப் புரவிகள்மீதேறிக்கொண்டு வாத்தியங்கள் முழங்க மதுரையம்பதியை நோக்கிப் புறப்பட்டனர். மிகுதியான புழுதி ஆகாயத்தில் பரவியது. வீரர்கள் ஏறின குதிரைகள் வந்துகொண்டிருக்கின்றன. குளம்படியால் ஏற்பட்ட புழுதி ஆகாயதத்தில் தெரிகின்றது; என்றவாறு சனங்கள் பரிவுடன் முதன் மந்திரியிடத்தே தெரிவித்தனர். இவைதயறிந்துகொள்ளாது அவர் மனங்கசங்கிப் பெருமானைநோக்கிச் "சனவன்காதனே! உமது வார்த்தையை நம்பி உறுதியாகயேயிருக்கின்றேன். புரவிகளுடன் உடனே தோன்றி என்னை உண்மையுரைப்போலுக்கவேணும்; என்ற பொருளுடையசெய்யுளை உரைத்தார். அப்பொழுது சனங்களில் சிலர் அவரிடம்வந்து மந்திரிகளின் தலைவரே! பெரியவரே! குதிரைகள் வந்துகொண்டிருக்கின்றன. வருத்தத்தை விடுத்து அரசனிடம் சென்று தெரியப்படுத்துங்கள்; எனக் கூறினர். அவர்களது மொழிகளைச் செவியுற்று வாதவூர் அகமகிழ்ந்து அரசனிடம் தெரிவித்தார். காவலாளிகள் அவரை விடுத்தனர். பாண்டியராசன் மந்திரியின் கூற்றைக்கேட்டு மகிழ்வுற்று முன்மூற்ற மண்டபத்திற்கு வந்து மந்திரிகள் யாவரும் சூழ்ந்துநிற்க, வேசியர் விசித்திரமாகச் சாமரங்கள் வீச, மேலான ஆபரணங்களணிந்தவனாய், வேடிக்கைகள் பார்த்துக்கொண்டு அங்கு வெகுநேரம் நின்றனன். சுந்தரமூர்த்தியின் லீலையாட்டால் குதிரைகள் கடலில் வாவில்லை. அரசன் உடனே கோபங்கொண்டு ஏவலாளரிடம் இந்த மந்திரி உளறுகின்றார். அவரை அழுத்தமாக அடியுங்கள் எனப் பணித்தான். அவர்கள் புளியம் விளார்களுடன் அவரை அடிப்பதற்கு வந்தனர் அவர்கள் வருவதை நோக்கிய வாதவூர் திருவாசகங்களும் ஆரியாவிருத்தச் செய்யுளும் பாடிப் பெருமானைத்துதித்தார். தமிழ்ப் புலவரும் மற்றோரும் மனமுருகினர். செய்யுளின் பொருள் "அன்பரது துயர்தீர்க்கும் சிவபெருமானே! உடனே குதிரைகளுடன் தோன்றியருளவேணும். அரசனது ஆட்கள் குதிரைகள் எங்கே! குதிரைகள் எங்கேயென வடிக்கின்றனர். சனமுடைநாதனே! உமது வார்த்தையை நம்பி உறுதியுடனிருக்கின்றேன். உடனே தோன்றும்! அரசன் குதிரைகளைப் பார்க்கத் துடிக்கின்றான்" என்றிருந்தது.

அவர் இங்ஙனம் துதித்துக்கொண்டிருக்கையில் வாத்தியங்களின் ஓசை ஒலித்தது. பின்னர்க் குதிரைக்குளம்புத் தூசிகள் கிளம்பின. அரசன் பித்துப்பிடித்தவன்போன்றிருக்கும் மந்திரியை வரவழைத்து அழவேண்டாமெனக் கூறிக் குதிரைகளின் வருகையைக் கவனித்தான். பல வகையான பாகைகளும் ஆடைகளும் ஆபரணங்களுமணிந்து தோன்றும் கதிரவன், பின்னொளி, காய்ச்சின தங்கம் இவைபோன்று இலங்கும் சங்கு கருணன் முதலான கணத்தலைவர்கள் பற்பல ஆடைக்கவன்கள் தாங்கிய வராய்க் குதிரைகளைத் தொடைகளால் அழுத்திக்கொண்டு அரசன் முன்பு தோன்றினர். உலகத்திற்கெல்லாம் ஓர் குதிரைவீரனை சிவபெருமானும் குண்டலம் கவசம் முதலியன பூண்டு வேதமாகும் புரவிமீதேறிக் கடிவாளங்களை இறுக்கப் பிடித்து இடப்பக்கமும்வலபக்கமும் ஓட்டிக்கொண்டு அவண் காட்சியளித்தார்.

ஒரே உருவம், ஒரே வயது, ஒரே ஆயுதம், ஒரே ஆபரணம் இவற்றையுடைய குதிரைவீரர்களைக்கண்ட அரசன் வியப்படைந்து அருகேயிருந்த வாதவூரரிடம் இவர்களின் தலைவர்யார் என வினவினர். அதற்கு மந்திரி "அரசனே! தலைவரை நான் ஒருமுறைதான் கண்டுளேன். அவரிடத்தே பணமனைத்தையும் கொடுத்துவிட்டேன். இப்பொழுது தாங்கள் அடித்த அடியால் மூளை கலங்கியிருக்கின்றது. இந்தப் பெருங்கூட்டத்தில் என்னால் அவரை எங்ஙனம் காணமுடியும்?" எனப் பதிலுரைத்தார். இது கேட்ட அரசன் மீண்டும் மந்திரியைநோக்கி மனவருத்தத்தை விடுத்துத் தலைவரைக் காண்பிக்கும்படி பணித்தார். உடனே மந்திரி எம்பெருமானை நினைந்தார். அண்டமெலாம் படைக்கும் பெருமான் கடிவாளக்கயிற்றைப்பிடித்தவராய்க் குதிரையின்மீது 'அரசனே! என்னைப்பார். என மொழிந்துகொண்டு வந்தார். மற்றைக் குதிரையோட்டிகளும் அங்கு வந்தனர். அரசன் அவர்களை நோக்கி 'உங்களது தலைவன் யார்? என வினவினன். அவர்கள் விரலால் காட்டினர். படையின் மத்தியிலிலங்கும் சோமசுந்தரமூர்த்தியை அரசன் பார்த்தான். ஒளிமயமாய் விளங்கும் அவரது உருவத்தை அவனால் கண்கொண்டு காண இயலவில்லை. அப்பால் இறைவனது திருவருளால் அவன் பார்த்தான். காமனை வென்ற பெருமான் அரசனது மனத்தை மயக்கிக் கொண்டு மனதினும் விரைவாய் அழகான புரவிமீதேறி வந்தார். சுடர் வடிவைக்கண்டதும் அரசன் அஞ்சி மதியிழந்து எழுந்து நின்றான். அவனை அறியாமலே அவனது கைகள் சிரம்சென்றன. தலையில் கூப்பிய கைகளுடன் அவன் படத்தில் வரையப்பட்டவன்போன்று அசைவற்றிருந்தான். மற்றவரும் இறைவனைக்கண்டு கைகூப்பி வணங்கினர். தான் நிற்பது பொருத்தமற்ற செயலென்று அரசன் உணர்ந்தும் வெட்கத்தால் உட்காராது நிற்கவே செய்தான். முன்னே நிற்கும் அரசனை நோக்கிப் பெருமான் 'பாண்டியராசனே! கேள். எப்போழுதும் உனது நலத்தையே புரிகின்ற இந்த மந்திரியானவர் உனது பொக்கிஷச்சாலையினின்று எவ்வளவுபொருளை யெடுத்தாரோ அது முழுதையும் என்னைச் சார்ந்தவரிடத்தும் என்னிடத்தும் சேர்த்துவிட்டார். சோமசுந்தரக்கடவுளின் அன்பனை உன்னையும் இவரையும் மதித்தேகான் அதை ஏற்றுக்கொண்டேன். பணத்தின்மீதுள்ள ஆசையாலல்ல. உனது செல்வத்தினும் அதிகமான செல்வம் என்னிடத்துளது. என்றாலும் இந்த மந்திரியை நீ துன்பப்படுத்தினாய். அவரது வருத்தத்தால் எனக்கும் வருத்தமே. அவரைத் துன்புறுத்தியது என்னைத் துன்புறுத்தியதே. உனது பணம் சிறிதேனும் அவரது கையிலில்லை. நீ கொடுத்திருக்கும் விலையினும் அதிகம் பெறுமானமுடைய சிறந்த இலக்கணங்கள் பொருந்திய நல்ல புரவிகள் இவை வந்திருக்கின்றன. அசுவ என்ற சொல்லின் பொருள் (ந சு வ:) நாளையிராதென்பது. இந்த அசுவங்களை நீ எடுத்துக்கொள்ள விரும்பினால் இப்பொழுது உடனே கயிறு மாற்றிக்கொள்ளவேண்டும். கயிறு மாற்றிக்கொண்ட பிறகு ஏற்படும் நன்மை தீமைகளைப்பற்றி எனக்குத் தெரியாது. இல்லை. பணத்தைத்தான் வாங்கிக்கொள்ளவேண்டுமென்ற விருப்பமிருக்குமாகில், இருமடங்கு தருகின்றேன். யோசனையின்றி உடன் பதில் உரைக்கவேண்டும் என மொழிந்தார்.

இது கேட்டு அரசன் உவகையுடன் "குதிரைவீரத் தலைவரே! உமக்குத்தெரியாதது ஒன்றுமில்லை. கயிறுமாற்றிய பின்னர் குதிரைகளது

நன்மை தீமைகள் என்னைச் சேர்ந்தவையே. உமக்குக் குதிரைகளின் தொடர்பு அற்றுப்போகின்றது. எனக்குப் பணம் தேவையில்லை குதிரைகளே வேண்டும். உண்மையாகச் சொல்லுகின்றேன். நல்ல இலக்கணங்களும் வீரமும் படைத்த குதிரைகளை உடனே எனக்குக் கொடுத்துதவும். இத்தப் பேருதவியால் நான் போரில் பகைவரை வெல்வேன். வாதவூரர் இப்பொழுது எனது அமைச்சருக்கு அமைச்சர். இனிமேல் அவர் எனது செயல்களை நடத்துவோருள் முதல்வராய் விளங்குவார். எனது மந்திரியான இவ் வாதவூரரை நான் தொழுகின்றேன். மற்றை அமைச்சருள் இவர் போன்ற எவர் எனக்குக் காரியங்களை முடித்துகொடுக்கின்றனர்! குதிரைகள் பார்த்ததுமே ஆச்சரியத்தை விளைவிக்கின்றன. நீரும் மகிழ்ச்சியை உண்டாக்குகின்றீர். தயவுசெய்து குதிரைகளைத் தரவேணும்" என வேண்டிக்கொண்டு முன்போலவே அசைவற்று நின்றனன்.

அப்பால் குதிரைவீரரின் தலைவரான சோமசுந்தரமூர்த்தி குதிரைகளை கொடுக்குமுன் அவற்றின் இலக்கணங்களை அரசனுக்குக்கூறவிரும்பி "பாண்டியராசனே! பூலோக இந்திரனே! மகிழ்ச்சிக்கும் மங்களத்துக்குமாக முதலில் குதிரைகளின் இலக்கணங்களைக் கேட்டுப் பின்னர், அவற்றை வாங்கிக்கொள். எவனிடத்தே எல்லா இலக்கணங்களும் பொருந்திய புரவிகள் இருக்கின்றனவோ அவனுக்கு இராச்சியமும், புகழும், திருவும், வெற்றியும் உண்டாகும். கத்திகளின் ஒளையால் அச்சம்பயக்கும் போர்க்களத்தில் வீர இலக்குமி புகழ்மாலையைக் குதிரைத்தலைவனின் கழுத்தில் தானே வந்து போடுகின்றாள். முன்னே நிற்கும் சிங்கப்பாய்ச்சலும் புலிப் பாய்ச்சலும்மானது வீரமுடைய எனது குதிரைகளைப் பார். விலாவில் யானைகளையும், முயல்களையும், குரங்குகளையும், சர்பங்களையும், அம்புகளையும், காற்றையும், மனத்தையுமொத்த எனது குதிரைகளைப்பார். அவை நீண்டும், உயர்ந்தும் அகன்றும் உடற்கட்டுடனும் விளங்குகின்றன. ஒன்று முதல் ஐந்துவரையுள்ள நிறங்களுடன் அவை பலவிதமாக மிளிர்கின்றன. சங்கு, சுவத்திகம், வட்டம் இவைபோன்ற நாமங்களுடனும் கணுக்கால் போன்ற இடங்களில் நல்ல சுழிகளுடனும் அவை விளங்குகின்றன. அவை அட்டமங்களங்களையும் ஐந்து கலியாணங்களையும் பெற்றிருக்கின்றன. அவையிடத்தே குங்குமப்பூ, அகில், பச்சைக்கர்ப்பூரம், கத்தூரி இவற்றின் வாசம் இருக்கின்றது. அவைகளின் கனைப்பு சங்கு, முகில், சரபம், சிங்கம் இவற்றின் ஒசையை ஒத்திருக்கின்றது. குதிரைகளின் கால்களில் குற்றம் கிடையாது. அவை கன்னுக்கு கற்றுக்கொடுக்கப்பெற்றவை. சுற்றி ஓட நேர்ந்தால் அவை கொள்ளிவட்டம்போன்று தோன்றும். ஆள் ஏறியதும் அவை தொடைகளுக்கு அடங்கி நிற்கக்கூடியவை. அவற்றின் நுரை அமுத்துணுக்குகள்போன்று மிளிரும். அவை ஆறுகளில் ஓடங்கள் போன்றும், காடுகளில் செல்லும் ஆற்றல் உடையனவாயும், கோட்டை மதில், அணைக்கட்டு, நீர், நெருப்பு இவற்றைத் தாண்டுதற்கு வலிமைபெற்றனவாயும் இலங்குகின்றன. சுமார் எட்டு வயதுடையவை. அச்சம் தவிர்த்தவை. இத்தகைய இலக்கணங்களுடன்கூடிய புரவிகள் மிகவும் அரியவை. அரசர்கள் சவாரி செய்வதற்கு அவையே உகந்தவையெனக் குதிரைச் சாத்திரம் கற்றவர் கூறுகின்றனர். நான் கொணர்ந்திருக்கும் குதிரைகள் யாவும் உனக்கு ஏற்றவை" என மொழிந்தவராய் சுந்தரேசுவரர் முதலான கணத்தலைவர்களைக் கடைக்கண்ணால் நோக்கினர். அவர்கள் உடனே அவரவரது

அம்பு காற்று மன்மம் இவற்றினது வீரைவுடைய புரவிகளை ஐந்துவிதத்தாரைகளிலும் ஓட்டினர். துள்ளல், தாண்டல், ஓட்டம், வட்டமிடுதல், மெதுகடை இவ்வைந்துமே ஐந்து விதத்தாரைகள். அரசனும் அமைச்சரும் குதிரைகளது போக்குகளைக் கண்ணுற்று வியந்தனர்.

பின்னர் எம்பெருமானும் வேதமாகும் தனது புரவியை வலசாரியாகவும் இடசாரியாகவும் ஓட்டிக்கொண்டு கதிரவன் போன்று விளங்கினார். வெகு வேகமாகச் செல்லுங்கால் ஒருவரே பலராகத்தோன்றினர். வட்டமிடும்பொழுது ஒரே வட்டமாகப் புலப்பட்டார். தெருவில் குதிரை ஓடுங்கால் தெரு நெடுக ஒரே குதிரையாய்த் தோன்றியது. இத்தகைய பல விதமான போக்குகளால் இறைவன் அரசனுக்கும் சனங்களுக்கும் ஆச்சரியத்தைவினவித்தார். பின்னர் தனது உயரமான குதிரையை அரசனுக்கெதிரில் நிறுத்திக்கொண்டு "இவை காம்போசநாட்டவை; இவை பாலீச தேசத்திலுண்டானவை; இவை வனுயுதேசத்தைச் சேர்ந்தவை; இவை ஆரட்டத்தில் பிறந்தவை; இவை சிந்துநாட்டில் உண்டாயின; இவைய வன தேசத்திலும்; இவை காந்தர தேசத்திலும் தோன்றியவை; இவை மலைநாட்டுக் குதிரைகள்; இவை காச்மீரநாட்டவை; இவை பிறத்தீவுகளில் பிறந்தவை; இவை சேகயதேசத்தைச் சேர்ந்தவை; இவை வசந்தத்திலும்; இவை சுவீரத்திலும்; இவை மானவத்திலும்; இவை துலுவிலும் உண்டானவை; இவை பாஞ்சாலத்திலும்; இவை சலுவத்திலும்; இவை மகதத்திலும் பிறந்தவை; இவை குருட்சேத்திரத்திலும்; களிங்கத்திலும்; சுராட்டிரத்திலும் தோன்றியவை; இவை இமயத்தில் பிறந்தவை; இவை ஏமகூடத்தில்; இவை பாரியாத்திரத்தினின்றும்; இவை மந்தாமலையினின்றும் வந்தவை; வெளுப்பு, சிவப்பு, பொன்னிறம், கருப்பு, கலப்பு என நிற வேற்றுமைகொண்டு குதிரைகளை ஐந்துவகையாகப் பிரிப்பார்கள். முத்து, பால், சந்திரன், சங்கு, வெள்ளி, பனி இவைபோன்றவை வெளுப்பு நிறத்தவை. செம்பஞ்சுக்குழம்பு, மாதுளம்பூ இவைபோன்ற நிறம் சிவப்பு. கருப்புநிறக் குதிரைகள் மை, குயில், மூங்கில். பெண்வண்டு இவைபோன்றவை. வெளுப்புவகையின் நிறம் தங்கம், எரியும் நெருப்பு, கோரோசனை இவற்றினது நிறம் போன்றிருக்கும். பல நிறம் படைத்தவை கலப்பு வகையைச் சார்ந்தவை. இங்ஙனம் இங்கு வந்திருக்கும் குதிரைகள் பலநாட்டவையாயும் பல நிறத்தவையாயும் பல நல்ல இலக்கணங்களொடு கூடியவையாயும் விளங்குகின்றன. தலை, மார்பு, வால், முகம், கால் இவற்றில் வெள்ளை விழுந்தவை அட்டமங்களம் பொருந்தியவை; அவற்றை இதோபார். முகத்திலும் கால்களிலும் வெள்ளையுடையவை பஞ்சகலியாணிக் குதிரைகள். அவை இதோ நிற்கின்றன. கணுக்காலில் தேவமணியெனும் சுழியுடைய புரவிகள் சொந்தக்காரனுக்கு எல்லா கலன்களையும் பயக்குகின்றன. மார்பில் இரண்டு, சிரத்தில் இரண்டு, முகத்தில் இரண்டு, மூக்கில் இரண்டு, நெற்றியின் மத்தியில் ஒன்று, புட்டத்தில் ஒன்று ஆக இந்தப் பத்துக்கு, துருவச்சுழிகள் எனப்பெயர். இந்தச் சுழிகளுடையவை குதிரைகளில் சிறந்தவை. இவையற்றவை நீயவை. மார்பில் மத்தியில் ஒன்றும் நான்கு புறங்களில் நாலுமாய் வலமாகச்செல்லும் ஐந்துசுழிகளுக்குச் சிரீவச்சமெனப் பெயர். இச்சுழி படைத்த புரவியின் சொந்தக்காரன் செல்வமனைத்தையும் எய்துவான். நெற்றியில் இரட்டைச் சுழியுடைய குதிரையையுடையவனுக்குப் போரில் வெற்றியும், புதல்வன் முதலான பேறுகளும் கிடைக்கும்.

நெற்றியில் வரிசையாக மூன்று சுழிகள் இருக்குமாகில் குதிரையின் சொந்தக்காரன் பேறனேத்தையும் பெறுவான். நெற்றியில் நான்கு வலச்சுழிகள் கொண்ட குதிரையுடைய அரசனுக்குக் கடிதில் புதல்வன் பிறப்பான். காதின் அடிப்பக்கத்திலிருக்கும் இரண்டு சுழிகளுக்கு இடபச்சுழியெனப் பெயர். அவற்றையுடைய குதிரை ஆபரணங்களாயளிக்கும். இத்தகைய நல்ல சுழிகள்கொண்ட குதிரைகள் இவண் கணக்கற்று வந்திருக்கின்றன. கழுத்தின் மத்தியில் விழுந்த இரண்டு சுழிகள் பசி, மனவருத்தம், சாவு இவற்றை விளைவிக்கும். கனைக்காலிலிருக்கும் இரண்டு சுழிகள் அச்சம், விலங்கு, துக்கம் இவற்றைப்பயக்கும். மேலுதட்டில் காணும்சுழி சொந்தக் காரனின் தாயைக் கொல்லும். குதிரைகளின் கட்கத்திலிருக்கும் சுழி போரில் உடையவனின் உயிரைவாங்கும். மூக்குச்சுழி பெயரைக்கெடுத்து ஆயுளும் கொல்லும். கன்னச்சுழி தந்தைக்குக் கெடுதலைத்தரும். முழங்கால் சுழி குலத்தையளிக்கும். இங்ஙனமான கெட்ட சுழிகள்விழுந்த புரவிகள் மிகக்கீழானவை. இவற்றை லாயங்களில் புகவிடுதல் கூடாது. அத்தகையவை ஒன்றேனும் இங்கு வரவில்லை. குதிரைகளுக்கு வயது முப்பத்திரண்டு. தசைகள் பத்து. தசை ஒன்றுக்கு ஆண்டுகள் மூன்றும் மாதங்கள் இரண்டும் நாட்கள் பன்னிரண்டுமாகின்றன. வயதின் பத்திலொரு பங்கிறகுத் தசையெனப்பெயர். மத்தியிலுள்ள மூன்றுவது முதல் எட்டாவதுவரையுள்ள ஆறு தசைகள் சிறந்தவை. அதிகமான வெள்ளோநிறத்துடன் கலந்த மற்ற நிறங்கள் யாவும் நல்லவையே. மற்றை நிறங்களதிகமாயும் சிறிது வெளுப்புமிருந்தால் அவ்வளவு மேலானதல்ல. வயிற்றிலாவது மார்பிலாவது வெளுப்புடன் கருப்பாகவோ அல்லது சிவப்பாகவோவிருக்கும் குதிரைக்கு வைசயிகமெனப்பெயர். அத்தகையது உடையவனுக்கு கற்பயன்களை உண்டாக்கும். வயிற்றிலோ மார்பிலோ சிவப்புடன்கருத்தோ வெளுத்தோவிருக்கும் குதிரையால் பேறுகளும் போரில் வெற்றியும் கிட்டும். வயிற்றில் வெள்ளையுடைய குதிரை புதல்வனைத்தரும். மார்பு வெள்ளைச்சுட்டி மகிழ்ச்சியையும், கழுத்திலிருப்பது செல்வத்தையும், முகத்திலுள்ளது வெற்றியையும், முதுகிலிருப்பது இன்பத்தையும், இடப்பக்கத்திலிருப்பது மனைவியையும், வலப்பக்கத்திலுள்ளது தானியத்தையும், கொடுக்கும். முதுகிலும் வாலிலும் வெள்ளையுடைய குதிரை வெற்றிதரும். வெற்றியின்பொருட்டு அத்தகையகுதிரையை படையின் முன்பக்கத்தில் அரசன் நிறுத்தவேண்டும். வெள்ளைநிறக் குதிரையின் தலையானது அதிகமாக வெளுப்புற்றிருந்தால் அதற்குச் சூரியசாந்தமெனப்பெயர். அதிருக்குமிடத்தில் காரியங்கள்யாவும் கைகூடும். குதிரையதுதொப்புளிலிருந்துதொடங்கு முன்பாதி இளங்கதிரவன்போன்ற நிறமாயும் பின்பாதி வெளுத்தநிறமாயுமிருந்தால் அக்குதிரைக்குப் பகல் வைசயிகமெனப்பெயர். எக்குதிரையினது முன்பாதி சந்திரன்போன்று வெளுத்தும் பின்பாதி இளங்கதிரவன் போன்று சிவந்தும் இருக்கின்றதோ அதற்கு இரவைசயிகமெனப்பெயர் இவ்விருவகைக் குதிரைகளும் உனது கலவைக்கருதி இவண் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அவற்றையும் பார்க்கலாம். கால்கள் பத்துபோன்றும், நிற்கும்போது மலைபோன்றும், அடித்தால் சிங்கம்போன்றும், கண்கள் தாமரைமலர்போன்றும், விரைவில் காற்றுபோன்றும், கனைப்பில் முகில்போன்றும், கால் வைப்பில் நட்டுவன்போன்றும், பார்வையில் குலமங்கையர்போன்றும், வாயில் திங்கள்போன்றும் விளங்கும் புரவிகள் எந்த அரசரிடத்தே இருக்கின்றனவோ அவர்கள் அரசருள் மேன்மையுறுவர். கல்லினக்குதிரை

களுக்கு மார்பு, நெற்றி, சந்து இம்மூன்றும் பருத்தும், மூக்கு, கர்துகள், வயிறு, மூக்கு இந்நான்கும் சிறுத்துமிருக்கும். வால் உரோமம், மேனி உரோமம், பிடரி உரோமம் இம்மூன்றும் மென்மையாயிருந்தால் சிறப்பின் இலக்கணம். உயர்தரக் குதிரைகளுக்கு வாய், கண்கள், தலை இம்மூன்றும் பெரியனவாயிருக்கும். உதடுகள், நாக்கு, அலகுகள் இம்மூன்றும் சிறுத்திருக்கவேண்டும். கழுத்து, கணைக்கால், முகம் இம்மூன்றும் நீண்டிருத்தல் மேன்மை. நல்ல குதிரைகள் வலிமையும் அழகும் பெற்றவையாயும், மணமுள்ள மலர்களின் வாசமுடையனவாயும், சங்கு, முகில் இவைபோன்ற ஒலி படைத்தனவாயும், பலவகையான நன்னிறங்களுடையனவாயும், உடற்கட்டு வாய்ந்தவையாயும், வீரைவு கடை இவையுடையனவாயுமிருக்கும். முகில் நிறத்ததும், உரத்த கனைப்புடையதும், நெய்யின் நறுமணம் கொண்டதும், யானை சிங்கம் இவைபோன்று நடப்பதும், பூ, சந்தனம் இவற்றில் விருப்பம் பெற்றதுமான குதிரை மிக்கச்சிறந்தது. அது அரசர் ஏறுவதற்குத் தகுந்தது. மேலான குதிரை நூறு அங்குல உயரமிருக்கும். நடுத்தரக் குதிரையின் உயரம் அதில் பதினேழில் ஒருபங்கு குறைவு. கீழ்த்தரக் குதிரையின் உயரம் இதிலும் அரைக்கால்பங்கு குறைந்திருக்கும். இத்தகைய சிறந்த இலக்கணங்களுடைய குதிரைகளை அரசன் சந்தனம், மலர்முதலானவற்றால் பூசிக்கவேண்டும். வெற்றியையும் புகழையும் தேடும் வேந்தன் மேற்கூறிய படி குதிரைகளைப் பார்த்து வாங்கவேண்டும். இங்கு வந்திருக்கும் எல்லாக் குதிரைகளுமே பொலிவு, வாசம், கெட்டியான குளம்புகள், வலிமை, நல்ல நிறங்கள், நல்ல சுழிகள், வீரைவு, நல்ல இலக்கணங்கள், நற்பிறப்பு, கெட்ட இலக்கணங்களின்மை இவை பொருந்தியவை. இவை யாவையும் பெற்றுக் கொள்' எனக்கூறிக் குதிரைகளை ஒவ்வொன்றாக அரசனது விரித்தகையில் பிடித்துக்கொடுத்தார்.

அரிமர்த்தனபாண்டியன் அவற்றை ஏற்றுக்கொண்டான். அவன் மீது எம்பெருமானது திருக்கை பட்டதுமே அவனுக்குப் பேருவகை உண்டாயிற்று. பின்னர் அவன் தனது குதிரைவளர்ப்போரனைவரையும் அழைத்துக் குதிரைகளை லாயங்களில் கட்டுவித்தான். பெருமானது வேதமயமான புரவி ஒன்று நீங்கலாக மற்றையாவும் குதிரைவடிவில் தோன்றும் நரிகளே. உடனே அரசன் குதிரைவீரர் அனைவர்க்கும் பரிசுகளளித்தான். தலைவரான இறைவனுக்கு மிக்க மதிப்புள்ள பாகையும் ஆடைகளும் ஆபரணங்களும் கொடுத்தான். பெருமான் புரவியினின்று இறங்கி அவற்றைப் பெற்றுக்கொண்டு மேனியில் அணிந்தார். எல்லாம் துறந்த எம்பெருமான் ஓர் மெய்யன்பளின்பொருட்டு இங்ஙனம் விளையாடல்புரிவதைக் கண்ணுற்ற கணத்தவர் வியந்து சிரித்தனர். பின்னர் குதிரைவீரர் ஒவ்வொருவருக்கும் தக்க வரிசைகள் செய்யப்பெற்றன.

அப்பால் அரசன் முதன் மந்திரியான வாதவூரரையழைத்து இனிமையாய்ப் பேசி அவருக்கு விசேடமான பட்டாடை முதலியன தந்தான். பின்னர் அரசன் கோட்சொல்லிய அமைச்சரை நோக்கி 'மந்திரிகளே! இவரே எனது மந்திரியாவார். இவர் எனக்கு இரண்டாம் சோமசுந்தரக் கடவுள். எனது நலத்தையே எப்போதும் விரும்புகின்றவர். சிறிது நாட்கள் அதிகமாயினும் அவர் குதிரைகளைக் கொணர்ந்துவிட்டார்" என மீண்டும் மீண்டும் உவகையுடன் உரைத்தான். இங்ஙனம் உரையாடிக்கொண்டே

அரசன் வெகுநேரம் கொலுமண்டபத்திலிருந்துவிட்டான். உச்சிநேரம் வந்துவிட்டது. அனைவர்க்கும் விடையளித்துவிட்டு அரசன் உள்ளே சென்றான். சனங்கள் வியப்புடன் வீடுகளுக்கேகினர்.

எம்பெருமானும் சிரித்துக்கொண்டே கணத்தவருடன் ஊழிகாலத்திலும் அழிவுறாத பேரிலிங்கத்தில் மறைந்தருளினார். அன்பனுக்காகத் தான் புரிந்த இந்த விளையாட்டை உமையாரிடத்தே பெருமான் உரைத்தார். தேவி ஆச்சரியப்பட்டு இன்பமடைந்தாள்.

இது ஆலவாயுடையாரது ஐம்பத்தொன்பதாம் திருவிளையாடல். படிப்போருடையவும் கேட்போருடையவும் இன்னல்கள் பறந்துபோம். அவரது இல்லங்களிலிருந்து மூத்தவள் ஓடிவிடுவாள். அங்கு இலக்குமி எப்பொழுதும் தங்குவாள்.



அறுபத்தாறுவது அத்தியாயம்.

வைகையாற்றைப் பெறுக்கெடுக்கச் செய்தல்.

எம்பெருமானது மாயையால் பரிவடிவான நரிகள் நடுநிசியில் மீண்டும் நரிகளாயின. அப்பொழுது அவை ஒன்றுகூடி ஒன்றோடொன்று "நாம் குதிரைகளாயிருக்கையில் கட்டுண்டு மிகவருந்தினோம். இறைவன் திருவருளால் மீண்டும் நமது பழையவடிவத்தை யடைந்துவிட்டோம். முன்னம் கயிறுகளாலும் சங்கிலிகளாலும் மனிதர் நம்மைக் கட்டிவைத்தனர்; இப்பொழுது விடுதலை பெற்ற நமக்கு ஓடிவிடுவதே நலம். இத்தகைய துன்பத்தை நாம் இதற்குமுன்னர் துய்த்ததேகிடையாது. மேனிகளில் அப்பொழுது ஏற்பட்ட கட்டுக் காயத்தின் வலி இன்னும் தீரவில்லை. கிடைத்த உணவும் நமக்குப் பிடிக்கவில்லை. கொள், தட்டப்பயிறு, கடலை, புல் இவற்றைப் போடுகின்றனர். அது ஒன்றும் நமக்கு உகந்ததன்று. ஓடிவிடுதலே நன்று" எனப் பேசித் தீர்மானித்தன.

பின்னர் அவை நாலாபக்கங்களிலும் செல்லத்தொடங்கின. அம்புகள்போன்று விரைவாக நகரினின்று ஓடின. தெருக்களிலும் வீடுகளிலும் தோட்டங்களிலும் கோயில்களிலும் கோட்டை மதில்களிலும் பொந்துகளுடைய எல்லா இடங்களிலும் நரிகளே இருந்தன. பொழுது விடிந்து கோட்டைவாயில்கள் திறந்தவுடன் எல்லாம் கானகத்தை நோக்கிப் பேயின. வாயிற்காப்பாளர் இரவில் அவை செய்த தொந்தரை பொறுக்க மாட்டாது கதவுகளைத் திறந்துபோட்டனர். நரிகள் நகரில் பலரைக் கடித்துத்தின்றன.

காலையில் குதிரைகாப்பவர் கடுக்கத்துடன் அரிமர்த்தன பாண்டியனிடம் சென்று "அரசனே! நாங்கள் தெரிவிப்பதைக் கவனித்துக்கேளும். அது மிக்க அற்புதமானது. புதுக் குதிரைகள் யாவும் நரிகளாகமாறிப் பேரிரைச்சல் செய்தன. லாயங்களில் ஊளையிடும் சத்தம் கேட்டதும் நாங்கள் விழித்து எழுந்து அங்கு எதிர்ந்தோம். எங்களைப்பார்த்து அச்சமுற்றுச் சில நரிகள் குதித்துக் குதித்து மதில்களைத் தாண்டின. சில சலதாரை வழியாகவும், சில சன்னல்கள் வழியாகவும் சில ஆங்காங்குள்ள ஓட்டைகள் வழியாகவும், வெளியேறின. போதற்கு இயலாத சில நகரில் இருக்கின்றன. சில பெரும் நரிகள் பழைய குதிரைகளைக்கடித்தன. நாங்கள் அடித்தோம். எங்களையும் கடித்தன. சில குதிரைகள் மயக்கமுற்றன. சில கட்டுமுளைகளைப் பிடுங்கிக்கொண்டு லாயத்திற்கு வெளிப் போய்விட்டன. கணக்கற்ற நரிகள் நகரில் நிரம்பிவிட்டு வாயில்கள் திறக்கப்பட்டவுடன் இருட்டோடு ஓடிவிட்டன. லாயத்தில் நிகழ்ந்த செய்தியை நாங்கள் தெரிவித்துவிட்டோம்" என உரைத்தனர்.

அரசன் அதைக்கேட்டுத் துன்பக்கடலில் மூழ்கிச் சிறிதுகாலம் பிரக்ஞையற்றிருந்தான். அரண்மனை உட்புறங்களிலும் நகரளது தொந்தரவு ஏற்பட்டதான செய்திகள் அவன் செவிகளில் விழுந்தன. இதற்குள்ளாக மந்திரிகள் வந்து அரசனது அண்மையிற்சென்று லாயத்து நிகழ்ச்சிகள் தெரியவந்தனவாவென வினவினர். பின்னர் தங்களது வீடுகளிலும் நகரில் தொந்தரைபுரிந்தனவெனக் கூறிவிட்டு அவர்கள் அரசனதுதுயரைக் கண்டு வியந்து வருத்தத்துடன் தலைகவிழ்ந்து நின்றனர்.

அத்தருவாயில் வாதஹூர் காரியத்தை முடித்துவிட்டோமென்று எண்ணியவராய் எம்பெருமானை நினைந்துகொண்டு அரசனிடம் வந்தார். அவரைக் கண்டதும் அவன் கடுஞ்சினங்கொண்டு 'வாதஹூரே! கன்றுக்குதிரைகள் கொணர்ந்தீர். உமது இந்திரசால மகேந்திரசால வித்தையைக் காட்டிவிட்டீர். பழைய குதிரைகளும் ஓடிவிட்டன. நகரிலுள்ள மக்களும் துன்புற்றனர்' என மொழிந்தார். உடனே வாதஹூர் பாண்டியராசனை நோக்கிச் சிவபெருமானை நினைந்தவராய் 'அரசனே! குதிரைகள் கொணர்க்கதில் யாதுகுற்றம்? செப்பவேணும். அவைகளை இங்கு கொணர்ந்து கட்டியது இந்திரசாலமெனப் பகர்கின்றாய். இக்கத் தோகச்செயலை கான்புரியவில்லை. நீயும், மந்திரிகளும், குதிரையதிகாரிகளும் அங்குள்ள சனங்களும் எல்லோருமாய்க் குதிரைகளைப் பார்த்து மகிழ்ந்தீர்கள். எம்பெருமான் அசுவ என்ற சொல்லுக்கு நாளையிராது என்று பொருள் கூறியதைக் கேட்டும் பணம் வேண்டாம். குதிரைகள்தாம் வேண்டுமெனக் கூறிக் கயிறும் மாற்றினாய். குதிரை முதலாளியாக வந்த பெருமான் என்னையும் மயக்கிவிட்டார். குதிரைகளது இலக்கணங்களையும் கேட்டுக் குதிரைகளையும் பார்த்து மகிழ்ந்து அவருக்கு வரிசைகளும் வழங்கப்பெற்றன. யான் உனக்குக் குதிரைகளை விற்கவில்லை. எம்பெருமானே விற்றவர். நீ இறைவனது மெய்யன்பன். ஆனதுபற்றியே அவர் உன்னிடத்து இந்த லீலையாட்டைக் காண்பித்தார். எம்பெருமானது காட்சிபெற்ற நீ பெரும்பேறு பெற்றவன்' என உறுதியுடன் பதில் உரைத்தார். அதன்பேரில் இறைவனது மாயையால் மயங்கி நிற்கும் அரசன் அவரை நோக்கி "அக்குதிரைகள் நரிகளாய் மாறி எற்கனவே லாயத்திலிருந்த மந்தரமலை மேருமலை போன்ற குதிரைகளையும் கடித்தன. அவை சங்கிலிகளை யறுத்துக்கொண்டு நரிகளுடன் சாட்டை நோக்கி யோடிவிட்டன" என மொழிந்து அடங்காக் கோபமுற்றுச் சிவந்த கண்களுடன் தண்டலாளரைப் பார்த்துக் "குதிரை வாங்குதற்பொருட்டு இவர் எவ்வளவு பொருள் எடுத்துச்சென்றாரோ அது அவ்வளவையும் அவரை அடித்து வசூல் செய்யுங்கள்" எனப்பணித்தான்.

இங்ஙனம் அரசன் பணித்ததும் இரக்கமற்ற தண்டலாளர் வாதஹூரை மூன்போன்று கட்டி அடித்தனர். அடி பொறுக்கமாட்டாது அவர் துயர்தீர்க்கும் எம்பெருமானை நினைந்து தூயதிருவாசகங்கள் பாடிப்புகழ்ந்து "பரிகள் நரிகளாகிவிட்டன. அரசன் பணத்திற்கு நெருக்குகின்றான்" எனப் பொருள்படும் ஓர் செய்யுளையும் பாடினார். பெருமான் அவரதுபுதிய பாக்களைக் கேட்டு மிக்க மகிழ்வுற்று அவரை இன்னலினின்றும் விடுவித்தற் பொருட்டு வழியை ஆய்ந்து, ஆற்றைப் பெருக்கெடுக்கச்செய்யும் ஓர் லீலையாடலைப் புரியத் தீர்மானித்தார். உடனே வையையாற்றை யழைத்துப் பெரும் பெருக்குகளுடன் நகரின் உட்புகுந்து பயத்தை லீலைக்குமாறு

ஆக்கினை செய்தார். கொடிப்பொழுதில் ஆற்றில் நீர் பெருகி கரைபுரண்டோடிற்று. பேரலைகள் தோன்றி மீன்களுடனும், பாம்புகளுடனும், மரங்களுடனும் தண்ணீர் தெருக்களில் பாய்ந்தது. சனங்கள் திகிலுற்று நடுங்கினர். வாதவூரை அடித்தற்கு அமர்த்தப்பட்ட தண்டலாளர் ஆற்று வெள்ளத்தைக் கண்டு பயந்து தங்கள் மனைவிமக்களைக் காத்தற்பொருட்டு அவரவரது இல்லத்திற்குச் சென்றுவிட்டனர். நகரத்து சனங்களும் தண்டலாளரும் வாதவூரை விடுத்துச் சென்றதும் அவரது அச்சம் நீங்கி மீண்டும் வேறு திருவாசகங்கள் பாடி உமையாரொடுகூடிய எம்பெருமானை மனத்தில் நினைந்து உவகையுடன் சிறையினின்று வெளியேறித் திருக்கோயிலுக்கேகினர்.

அவண் பொற்றாமரையில் நீராடித் தனது உடையை அணிந்து, திருநீறு உருத்திராக்கம் பூண்டு, நித்திய கருமங்களை முடித்துக் கரைமீதுள்ள சித்திவிநாயகரையும் மயிலூர்திபுடைய ஆறுமுகக்கடவுளையும் வணங்கித் துதித்துக் கயக்கண்ணம்மையாரைக் கண்டு வணங்கித்துதித்துக் காப்பாற்றவேண்டுமென வேண்டிக்கொண்டு, மூன்றுதடவைகள் வலம் சுற்றிக் கைகூப்பியவராய் இடபத்தினிடம் சென்று மும்முறை வணங்கித் துவாரபாலரைத் தொழுது நந்திகேசுவரை வணங்கிச் சுயசையெனும் அவரது மனைவியாரையும் தொழுது பெருமானது திருக்கோயிலுக்குட் சென்று வெள்ளியம்பலத்தில் நடராசப்பெருமானைக்கண்டு களித்து வேண்டிக் கொண்டு மகா மண்டபத்தையடைந்து கருப்பக்கிருகம் சேர்ந்தார். அங்கு துவாரபாலர்களையும் கணத்தலைவரையும் வணங்கிப் பின்னர் புனிதமான ஆலவாயுடையாரின் பேரிலிங்கத்தைக் கண்டு இன்பக்கடலில் ஆழ்ந்து இன்பக்கண்ணீர் பெருக உரோமம் சிலிர்ப்ப இலிங்கத்தின் மத்தியில் உமையொடு கூடிய சிவபெருமானை நினைந்து மெய்யன்பாது விருப்பங்களையளிக்கும் பேரிறைவனைக்கண்டு அவரது முன்னிலையில் நின்றார்.

இது பெருமானது அறுபதாம் திருவிளையாடல். மிகப்புனிதமான இக்கதையைக் கேட்போர் புவியில் போகங்களைத் துய்த்து மறுமையில் சிவசாயுச்சியம் பெறுவர்.





மண் சுமத்தல்



அறுபத்தேழாவது அத்தியாயம்.

பிட்டுக்கு மண் சுமத்தல், பவுத்தரை வதைத்தல்.



வைகையாற்று வெள்ளத்தால் மதுரைநகர் வாழும் மக்கள் பெரிதும் துன்பமெய்திக் கூச்சலிட்டனர். உள்வீட்டிலிருந்த அரசன் கூக்குரலைக்கேட்டுச் சனங்களுக்கு என்ன பேரின்னல் நேர்ந்து அவர்கள் இங்ஙனம் கத்துகின்றனரோவென்றெண்ணி விரைவுடன் வெளிவந்து ஆற்று வெள்ளம் தெருக்களில் பரவியிருப்பதைக் கண்ணுற்றான். கரைக்குமேல் தண்ணீர் வந்துகொண்டிருக்கின்றதென்று சனங்கள் கூறவே அரசன் மந்திரிகளிடம் பள்ளமான இடங்கள் யாவற்றையும் உடனே அடைத்துவிடவேண்டுமென்று உத்தரவு செய்தான். அவர்கள் ஆக்ஞையை மேற்கொண்டு ஆற்றின் கரை சென்றுபார்த்து வெட்டுவதற்கும் சுமப்பதற்கும் தற்சமயம் நகரில் ஆட்கள் இல்லையெனத் தெரிந்து வீடொன்றிற்கு அறுபதடி நீளமெனத் திகைத்து அவரவரது பங்கை பணக்காரர் இரண்டு மூன்று கூலிக்காரரையும் ஏழைகள் ஒரு கூலியாளையும் அமர்த்தி முடித்துவிடவேண்டுமென நகர மக்களுக்குக் கட்டளை பிறப்பித்தனர். அங்ஙனமே சனங்கள் கூலியாட்களைதகொண்டு தங்கள் தங்கள் இடங்களை மண்ணைச் சுமந்து மலைபோன்றுக்கிவிட்டனர்.

நகரில் கூலிக்கு ஆட்கள் கிடைப்பது அரிதாயிற்று. அப்பொழுது நகரின் தென்கிழக்குப்பக்கத்தில் பிட்டு விற்று வாழும் பார்ப்பனியாருவள் தனது பங்காகும் முப்பது அடி நீளத்திற்கு மண் போட்டுக் கரையை உயர்த்துவதற்கு தன்னால் இயலாது கூலிக்கு ஆள் தேடினாள். அவள் ஒரு சிவனன்பள். அவளுக்குக் குழந்தைகள் கிடையா. அவள் சிறு குடிசையில் தங்கினாள். அவள் எப்பொழுதும் நீராடித் தூயவளாய் நீறு உருத்திராக்கம் அணிந்து சிவவழிபாடு செய்வாள். தவறாது நாள்தோறும் காலையில் திருக்கோயில் சென்று கயக்கண்ணம்மையாரையும் ஆலவாயுடையாரையும் வணங்கிப் பாடி வலம் சுற்றுவாள். பிட்டுச் சமைத்து அதை விற்றுக் காலம் கழித்தாள். விற்பனையில் வருவாய் பெறுதற்பொருட்டுப் பெருமானது உவகையை ஊட்டுவிக்கும் நோக்கத்துடன் பிட்டுச்சமையலானதும் முதலில் ஏழைகளுக்கு அளித்தாள். தனது வாழ்விற்கு அதிகமாகக் கிடைக்கும் பொருளை மறுநாளுக்கென்று வைத்துக்கொள்வதில்லை. அவள் பேரறிவு படைத்தவள். உடல் அழியும் தன்மையது என்று அவளுக்கு நன்கு தெரியும். தனக்கு வேண்டாத பொருளை உடனேஅடியார்க்குக் கொடுத்து விடுவாள்.

அந்த எண்பதுபிராயக் கிழவிக்கு மண் சுமப்பதற்கு ஆள் கிடைக்கவில்லை. உடனே கோயிலுக்குச் சென்று தூயர்தீர்க்கும் எம்பெருமானை யடைந்து காத்தருளும் காத்தருளும் என வேண்டிக்கொண்டாள். புதி

தாய் சமைத்த பிட்டை இறைவனது அண்மையில் வைத்தாள். பின்னர்ப் பெருமானிடத்தே "கடவுளே! அரசனது ஏவலாளரிடமிருந்து என்னைக் காக்கவேணும். அவர்கள் என்னை மிகவும் துன்புறுத்துகின்றனர். என்னால் பொறுக்கமுடியவில்லை. குடிசையை இடிக்கின்றார்கள். கூலி என்னிடமிருக்கின்றது. ஆள் கிடைக்கவில்லை. வீட்டையிடிக்கவேண்டா மென்று அவர்களிடம் கூறிவிட்டு உம்மிடத்தே வந்திருக்கின்றேன். காப்பாற்றவேணும். தெருக்களில் எவ்வளவோ தேடியும் மண்சுமப்பதற்கு ஆள் அகப்படவில்லை. துணையற்றவர்க்குத் துணையாய் நிற்கும் நீர் கருணையுடன் எனது இன்னலை உடனே அகற்றவேண்டும்" எனத்தெரிவித்து மூர்த்தியை வணங்கிவிட்டு மீண்டும் தெருக்களில் ஆளுக்காக அலைந்தாள்.

இங்ஙனம் மட்டற்றதுன்பத்திற்காளாயிருக்கும் அவளுக்கு அருள் புரியும்பொருட்டு அனைத்திலும் நிறைந்து நிற்கும் எம்பெருமான் பதினாறட்டைப் பிராயத்தானுகக் கொஞ்சும் முகத்துடன் எழிற்கடலில் தோன்றிய சங்குபோன்று கழுத்திருக்க எல்லா உறுப்புகளிலு பொலிவும் உடைய வனாய் மண்டையோடாகும் கூடையைத் தலையிலும் கோடரியாகும் மண்வெட்டியைத் தோளிலும் வைத்துக்கொண்டு மண்வெட்டும் மனிதனது கோலத்தில் பிட்டுப்பாட்டியிடம் சென்றுப் பரிவுடன் அம்மா யாரைத்தேடி அங்குமிங்கும் அலைகின்றாய்? ஏதாவது கூலியாள் வேண்டுமானால் உடனே என்னிடம் சொல்" என உரைத்தான். கிழவி அதைக்கேட்டு மகிழ்ந்து ஆமெனக்கூறி மிகப்பரபரப்புடன் அவனைநோக்கி "அப்பா! உன்னால் மண் சுமக்கமுடியுமா! அப்படியானால் ஆற்றின் கரையில் எனதுபங்கில் மண்ணைச் சுமந்து கரையை உயர்த்திக்கொடு. என்னைக் காப்பதற்காகப் பெருமானே உன்னை இங்கு அனுப்பியிருக்கின்றார். அதில் ஐயமில்லை" என்றாள். அதன்பேரில் கடம்பவனகாதன் 'பாட்டி! எனக்கு நீ என்னதருவாய்' எனக் கேட்டார். அதற்குக் கிழவி 'அப்பா! உண்மையைச் சொல்கின்றேன். என்னிடம் பொருள் கிடையாது. பாசிப்பயிறு, வெல்லம், தேங்காய் எல்லாம் சேர்ந்த சூடான பிட்டு என் வீட்டிலிருக்கின்றது. அதை உனக்குத் தருகின்றேன். எலக்காய் முதலியன கலந்து வாசமுடனிருக்கும் அந்தப் பிட்டு வாங்கப்போனால் பணத்திற்கு மேலிருக்கும். அதை வாங்கித்தின்று விட்டு மண்ணைச் சுமா" என்றனள். 'அங்ஙனமே செய்கின்றேன்' என அவன் பதிலுரைத்தான். உடனே கிழவி பிட்டைக் கொடுத்தாள். அவன் அதை வாங்கி மடியில் கட்டிக்கொண்டு ஆற்றின்கரை சென்று அங்குள்ள கூலியாட்களையும் கரைபுரண்டோடும் ஆற்றையும் கண்ணுற்றுக் கிழவியின் பங்கிருக்குமிடத்தில் பிட்டைத் தின்றுகொண்டு சிரிப்புடன் மெதுவாக அங்குமிங்கும் உலாவினான். கல்லுண்டியை ஒருவனே அருந்துதல் கூடாதெனக் கூறுவர் எனச் சொல்லிக்கொண்டு அங்குள்ள மற்றைக் கூலிக்காரரையும் அழைத்து அவர்கட்கும் பிட்டுக் கொடுத்தான். பிட்டு இல்லாமற் போனபோது இறைவன் லீலையாட்டாகக் கிழவியிடம் சென்று "அம்மா! உனது பங்குமற்றைப் பங்குகளிலும் உயர்ந்துவிட்டது. கெட்டியாகவுமிருக்கின்றது. பொய்யென்று நினைக்கவேண்டாம். சோமசுந்தரமூர்த்திசாட்சி. நீயும் வேண்டுமானால் பார்த்துக்கொள்ளலாம். நீ கொடுத்த பிட்டைத் தின்றுவிட்டேன். வேலை அதிகம். பசி தீரவில்லை. இன்னும் பிட்டு வேண்டும்போலிருக்கின்றது. சமைத்த பிட்டு முழுதையும் எனக்குக்கொடு" என்றான். அவன் கூறியதெல்லாம் உண்மையெனக்கருதிப் பிட்டுப்பாட்டி

பிட்டனைத்தையும் அவனிடம் கொடுத்தாள். அதை வாங்கி மெதுவாய்த் தின்றுகொண்டு ஆற்றின் கரையில் அவளது பங்கு இருக்குமிடத்திற்கு போய் அங்குள்ள குழந்தைகளுக்குப் பிட்டைக் கொடுத்து இனிமையாய்ப் பாடிக்கொண்டு அச்சமற்று விளையாடிக்கொண்டிருந்தான்.

பின்னர் அரசனது ஆக்ஞையின்பேரில் கணக்கெடுக்கப்பட்டது. உடனே பெருமான் மிக்க அழுக்குப்பிடித்த அரைத்துணியுடன் மேனிமுழுதும் புழுதி படிந்து தலையில் கூடையும் கையில் மண்வெட்டியுமாக முன்வந்து "என்னைப் பிட்டுப்பாட்டியின் கூலியாளாகப் பதிந்துகொள்ளுங்கள்" என்று கணக்கனிடம் மீண்டும் மீண்டும் உரைத்தார். 'இவன் மண் ஒன்றும் சுமக்கவில்லை' என மற்றவர் கணக்கனிடம் கூறினர். அப்பொழுது பெருமான் சிரித்துக்கொண்டு எல்லோரையும் பார்த்தவாய் 'நான்தான் கரை முழுவதையும் கெட்டிப்படுத்தினேன். இவர்களது பொய்ப்பேச்சை நம்பவேண்டாம்' எனத் துணிந்து மொழிந்தார். அந்தக் கூலிக்காரனது அழகைக் கண்டு ஆச்சரியமடைந்து கணக்கன் அவன் கூறியபடியே குறித்துக்கொண்டு சென்றுவிட்டான். மாயக் கூலியாள் கூடையைத் தலையணையாக வைத்துக்கொண்டு மண்வெட்டியின்மீது கால்களைப்போட்டுக்கொண்டு உரக்கப்பாடிய வண்ணமாய் ஆற்றின்கரையில் ஓரிடத்தில் படுத்திருந்தான்.

அந்த சமயத்தில் கூலியாட்களின் பார்வையாளர் அங்கு வந்து 'யாரிங்கே படுத்திருக்கிறது' என்றுகோபத்துடன் அண்டையிலுள்ளோரை விளவினர். 'பிட்டுக்கிழவியின் ஆள்' என அவர்கள் பதிலுரைத்தனர். உடனே அவர் அவனை எழுப்பி அதட்டி "ஆளைப்பார்த்தால் சக்கரவர்த்தி போன்றிருக்கின்றாய். நீ பூசைக்குத்தான் தகுதியானவன். ஒரு கூடை மண்கூடச் சுமக்கவில்லை. உனது இடத்தில் தண்ணீர் ஓடிக் கரையை உடைக்கின்றது. கொழுப்புற்றிருக்கும் உன்னை அமைச்சனிடம் காண்பிக்கின்றேன். பிட்டை வாங்கித் தின்றுவிட்டுப் பயமின்றிப் படுத்துக்கிடக்கின்றாய்' எனக் கூறினர். உடனே கூலியாள் அவருடன் சிரித்தமுகத்துடன் மந்திரியையடைந்தான் மந்திரி அவனை நோக்கி 'நீயார்' எனக்கேட்டார். அதற்கு அவன் 'நான் மதுரையம்பதியின் மத்தியில் உறைபவன். அனைவரது பசுவையும் சுமப்பவன், எனக்குத் தந்தையும் தாயும் உடன் பிறந்தாரும் சுற்றத்தாரும் கிடையாது. வடதேசத்தில் ஓர் பணக்காரன் எனது தோழன். நான் கல்லோர்க்கு உற்றதுணை. பிச்சைக்காரன். ஏழைகளைக் காப்பாற்றுவேன். என்னால் உனக்கு ஆகவேண்டிய காரியம் யாது? நான் அரசனுக்கும் பயப்படாதவன். பிட்டம்மாளிடம் கருணை கொண்டு மண்சுமக்க வந்திருக்கின்றேன்" எனப் பதில் உரைத்தான். மந்திரி அதைக்கேட்டு அவன்மீது கோபம்கொண்டு "குணமற்ற நீ குணமுடையவன்போல் தோன்றுகின்றாய். மிகச் செருக்குற்று நான் வரமளிப்பவன் அரசனுக்கும் பயப்படமாட்டேன் என்கின்றாய். உன்னை அடிக்கவேண்டும். என்றாலும் தருமமாய் உன்னை அடியாது விடுகின்றேன். உடனே சென்று கரையில் மண்ணைப்போட்டு அதை உயர்த்து. அங்ஙனம் செய்யாவிடில் அரசனால் உனக்கு அடி கிடைக்கும். அரசன் இன்று கரையைப் பார்க்க வரப்போகின்றான். அரிமர்த்தனபாண்டியன் மிகக் கோபக்காரன்" என மொழிந்து அவனை அனுப்பிவிட்டார்.

கூலியாள் மீண்டும் ஆற்றின் கரையில் உட்கார்ந்துகொண்டும் படுத்துக்கொண்டும் பிட்டுத் தின்றுகொண்டுமிருந்தான். மேல்பார்க்கும் அலுவலாளர் சிலர் அங்கு வந்து அந்த இடம் பள்ளமாயிருப்பதைக்கண்டு 'இது யாரது பங்கு' என வினவினர். அண்டையிலிருந்த கூலிக்காரர் ஈகரின் தென்கிழக்கு மூலையில் பிட்டுவிற்கும் கிழவியின் பங்கு இது. அவளது வேலையாள் இங்கு பாடிக்கொண்டு படுத்துக்கிடக்கின்றான்' என்றனர். உடனே அலுவலாளர் அவனை வலுக்கட்டாயமாக எழுப்பி இழுத்து அதட்டி 'அடே! அடே! கெட்டபுத்திக்காரனே! உனது பங்கு இன்னும் பள்ளமாகவே இருக்கின்றது. அதற்கு என்ன காரணம்! அரசனது ஆக்ஞை என்பது உனக்குத் தெரியாதா? பிட்டு அம்மாளிடமிருந்து சம்பளத்திற்குப் பதிலாகப் பிட்டை வாங்கித் தின்றுகொண்டு துளிக்கூட உடைந்தகரையில் மண் போடாமலிருக்கின்றாய். உனது இத்தீச்செயல் அரசனுக்குத் தெரிய வருமேயாகில் உனக்கும் எல்லோருக்கும் கல்ல அடிகிடைக்கும். ஆனது பற்றிக் கடிதில் கரையில் உனது பங்கை மண்போட்டுக் கெட்டிப்படுத்து' எனக்கூறினர்.

அவர்களது பேச்சைச் சிறிதும் பொருட்படுத்தாதுக் கூலியாள் அவர்களை நோக்கி "நீங்கள் சும்மா போங்கள். நான் சுதந்திரன். யாருக்கும் பயந்தவனல்ல. நான் அரசர்க்கெல்லாம் அரசன். நானே பாண்டிய ராசன். இந்த அரிமர்த்தனன் எனக்கு அரசனல்ல; எனது ஊழியன். அரசனிடம் இங்ஙனம் கூறுங்கள். அவன் எனது பெருமையை அறியட்டும்' என்றான். அவர்கள் இதைக்கேட்டுச் சினங்கொண்டு அரசனிடம் சென்று அவனது துடுக்குச் செயல்களைச் சொல்லும் முறையில் 'பாண்டியராசனே! அவனது பங்கு பாதாளம்போன்று பள்ளமாயிருக்கின்றது. வெள்ளத்தை யாராலும் தடுக்க இயலாதெனத் தோன்றுகின்றது. எனப் பகர்ந்தனர். அரசனுக்குக் கடும் கோபம் வந்து இறைவனது ஆணை காரணமாக அவன் பகுத்தறிவை இழந்துவிட்டான். உடனே கொலுமண்டபத்தினின்று வெளியேறி தங்கப்பிரம்பை கையிலெடுத்துக்கொண்டு படையாட்களுடன் விரைவாய் வைகையாற்றின் கரைக்கு வந்தான். அவன் கண்ணீரின் பெருக்கால் ஆழமாய்ப் பறிக்கப்பட்டிருந்த கரையையும் மாயைக்கூலியாளான சோமசுந்தரக்கடவுளையும் கண்ணுற்றதும் மீண்டும்அவனது கோபத்தீ வளர்ந்தது. மற்றைக் கூலியாட்கள் அரசனது சிவந்த கண்களையும் அவன் அந்த வாலிபனை அடிக்கவிருந்ததையும்நோக்கிக் 'கடிதில் மண்ணைச்சுமந்து விடு. அரசன் உன்னை அடிப்பதற்கு வந்திருக்கின்றான்' என்றனர். அவர்கள் நடுங்கிக் கூறியதைக்கேட்ட அவன் சிறிதும் அச்சமின்றிக் கூடையில் மண்ணைப்போட்டுத் தலையில் வைத்துக்கொண்டு கையில் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு உடைப்பில் மண்ணைப்போடாது மெதுவாக நகர்ந்தான். 'இவனுக்கு உடைப்பை அடைக்க விருப்பமில்லை. அடிதான் வேண்டுகின்றான்' என அரசன் தெளிந்து, அவனது அருகிற் சென்று தங்கப்பிரம்பால் முதுகில் ஓங்கியடித்தான். 'அரசனே! நீ என்னை அடிக்கின்றாய்? நான் போய்விடுகின்றேன்" என்று மொழிந்துகொண்டு அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கையில் மறைந்துவிட்டான். எங்கு தேடியும் அகப்படவில்லை.

உடனே அலுவலாளர் பிட்டம்மாளின் குடிசைக்குச்சென்று அவளை வெளியிலிழுத்து "அவன் எங்கே? உனது கூலிக்காரன் எங்கே?

அவனைக் காண்பி'' எனத் தன்புறுத்தினர். அவன் வெளிவந்து எம்பெரு மானே நினைந்தவளாய் ''ஆலவாயுடையாரே! சம்புவே! நீரே செயல்கள் யாவற்றிற்கும் சாட்சி! ஓர் கூலிக்காரனுக்கு அவன் வேண்டிய அளவு பிட்டைக் கொடுத்துக் கரையில் என்பங்கைச் சீர்படுத்துவதற்கு எற்பாடு செய்தேன். அவன் வேலையைச் செய்யவில்லை. எளியோரின் இறைவனே! கருணை வடிவனே! என்பால் இரங்கவேணும். என்னுல் இந்தத்தன்புறுத்தலைப் பொறுக்கக்கூடவில்லை. இதைக் கடிதில் போக்கி மெய்யன்பளான என்னை இம்மையினின்றும் கடத்தேறச் செய்தருளவேண்டும்'' என வேண்டிக்கொண்டனள். உடனே கருணைக்கடலான எம்பெருமான் உமையாருடன் விடைமீதேறியவராய் சிவகணங்களுடன் அங்கு தோன்றி பிட்டம்மையை பெரியதொரு விமானத்திலேற்றித் திருக்கைலாயத்திற்கனுப்பினர். அம்மை மூப்பு நீங்கி இளமைப்பருவ மெய்தித் தோழிகள் சூழ்ந்துவர வாத்தியங்கள் முழங்கக் கைலாயம் போய்ச்சேர்ந்தாள். பார்த்துக்கொண்டிருந்த சனங்கள் அனைவரும் வியந்து பிட்டம்மையின் செய்தியை அரசனிடத்தே தெரிவித்தனர். அரசன் அதைக்கேட்டுக் காரணம் தெரியாமல் திகைப்புற்றான்.

கூலிக்காரன் வேடத்திலிருந்த எம்பெருமானே அரசன் கைப் பிரம்பால் முதுகில் அடித்தபொழுது அவ்வடி அரசனது முதுகில் இரட்டிப்பாகவிழுந்தது. அது முதல் அவனுக்கு அதிகமான வலி இருந்தது. அப் பிரம்படியானது உலகிலுள்ள எல்லா இயங்கும் பொருள்களாலும் இயங்காப் பொருள்களாலும், எல்லா இலிங்கங்களாலும் உணரப்பெற்றது. ஒவ்வொன்றும் அடியாலுண்டான வலியைத் துய்த்தது. உலகத்திலுள்ள அனைவரும் ஒருவருக்கொருவர் முதுகில் காயத்தைப் பார்த்துக்கொண்டனர். ஆற்றின் கரையில் பிட்டம்மையின் பங்கு முற்றிலும் மூடப்பெற்றிருந்தது. பெருக்கும் போய்விட்டது. ஆறு எப்பொழுதும் போன்றிருந்தது. அரசனும் அமைச்சரும் குடிகளும் அவ்வடியை உணர்ந்து வியப்பெய்தி அச்சமுற்றனர். பின்னர் அனைவரும் அரசனது முன்பு கூடி, அடிக்காயத்திற்கும் வெள்ளம் வருகைக்கும் காரணம் யாதெனப் பலவாறுக ஆய்ந்து ஒன்றும் அறியமுடியாதிருக்கையில் எம்பெருமானது குரல் ஆகாயமூலமாய்ப் 'பாண்டியவேந்தனே! அறமாக நீ தேடிப் பொக்கிஷவறையில் வைத்திருந்த பொருளனைத்தையும் வாதவூர் எனது அடியார்பாலும் என்பாலும் செலவுசெய்து உனக்கு எல்லையற்ற புண்ணியத்தைத் தேடினர். உனது பொக்கிஷமும் நிறைந்திருந்தது, அறியாமையால் நீ அவருக்குத் தொந்தரவு கொடுத்தாய். அதை ஒய்க்கும் பொருட்டு ஆற்றில் பெருக்கை உண்டாக்கினேன். பிட்டம்மையுடையவும் விசேடமாக உன்னுடையவும் காப்பின் பொருட்டு கூலியாளாகவந்து மண்ணைச் சுமந்தேன். நீ பிரம்பாலடித்ததை நான் மன்னித்துவிட்டேன். எனதுவலி போய்விட்டது. முன்னுளில் அருச்சுனனது வில்லடி போன்று உனது பிரம்படி எனக்கு இன்பத்தையே அளித்தது. வேந்தனே! உனக்கு எல்லாப்பேறுகளும் கிட்டும். வேதத்தில் கூறியுள்ள நீண்ட ஆயுள் இருக்கும். வெகுகாலம் நாட்டை ஆள்வாய். எனது அருளால் எண்ணிக்கையற்ற புகழ்கள் வரும். வாதவூர் எனக்குகந்த மனிதர் என்று தெரிந்துகொள். அவரை இன்றுமுதல் தனது விருப்பம்போன்று நடக்கவிட்டுவிடு. இது எனது ஆக்ஞை. அன்பரது விருப்பம்போல் நடப்பதே எனது நோன்பு'' என்றவாறு உண்டாயிற்று. சனங்கள் ஆச்சரியமடைந்து

அரசனைப் போற்றினர். அன்பரிடத்தன்புடைய எம்பெருமானது திரு மொழியே இதென்று கூறி அரசன் வியப்பெய்தி உரோமம் சிலிர்ப்ப மிகப் பயந்து தான் குற்றவாளி யெனக்கருதி மேனிமுழுதும் நடுங்கச் சிற்றரசருடன் வாதவூரை அடைந்து தடிபோல் வீழ்ந்து வணங்கினன். மற்றைச் சனங்களும் உடனே வணங்கினர். அரசன் கூப்பிய கைகளுடன் அவரிடத்தே "அறியாமையால் நான் இழைத்த கணக்கற்ற குற்றங்களைப் பொருத்தருளவேண்டும். பெருமான் எங்ஙனமோ அங்ஙனமே நீர் எனக்கு. அவரது அன்பன். அவருக்கு வேண்டியவன். இனி நான் நலன் பெற வேண்டுமாயுல் உம்மைப் பூசிக்கவேண்டும். முன்போலவே எனது காரியங்களைச் செய்தும் செய்யாமலும் காத்தருள வேண்டும்" என தெரி வித்துக்கொண்டான்.

இதைக்கேட்ட வாதவூர் அகமகிழ்ந்து எம்பெருமானை நினைந்த வராய் அவனை நோக்கிப் "பாண்டியமகாராசனே! பூலோக இந்திரனே! நீ எம்பெருமானது அடியனே! உன்னைக் குறித்தே பெருமானது ஆகாய வாணி பிறந்தது. மிகப் பெரிய சிவனன்பனான உனக்குத் திருக்கள்யாவும் உண்டாம் நீண்ட ஆயுளையும் புதல்வரையும் மங்களங்களையும் நீ பெறுவாய். உன்னை அடைந்து வேதங்களில் கூறியுள்ள கருமங்கள் யாவற்றையும் சிவ பெருமான் களிப்புக்காகவென நன்கு அனுட்டித்தேன். உனக்காய்மை பிறந்தது. உடனே இறைவனிடத்தே அன்பு உண்டாயிற்று. அன்பால் திருவருள் தோன்றி உயிருடனே நான் விடுதலை பெற்றேன். முழுக்கடவு ளான ஆலவாயுடையார் மேரு, மந்தரம், கைலாயம், காசி முதலான புண் ணியத்தலங்களிலும் எல்லா இலிங்கங்களிலும், மூர்த்திகளிலும் இருக்கை கொள்கின்றனன் என ஆகமங்கள் கூறுகின்றன. 'உருத்திரன் ஒருவனே இரண்டற்றவனுய் உடன் பிறந்த அம்மையுடன் தனித்து நின்றனன். அவனே நினைத்தற்குரியவன். வீடு விரும்புவோர் அவனையே அடைய வேண்டும்' என எண்ணிறந்த வேதாந்த வாக்கியங்கள் சிவபெருமானது ஏற்றத்தையே வற்புறுத்துகின்றன. அத்தப் பெருமான் ஆலவாயுடை யாரே என வேதாந்தம் கற்றோர் உரைக்கின்றனர். சோமசுந்தரமூர்த்தி வேதங்களின் உண்மைப்பொருளை கண்ணுவர் முதலான முனிவர்க்கு எடுத் துக்கூறியபொழுது 'ஒன்றே பிரமம். அது இரண்டாவதற்றது. முழு மையானது' என வேதங்கள் கூறுவது இந்த ஆலவாயுடையானது மூலலிங் கத்தைப்பற்றியேதான் என விரிவுரை செய்தார். ஆதலால் இவண் இருக் கைகொள்கின்றவன் வேதத்தின் பொருளான இறைவனே. அவர் எங்கு மிருப்பவர். எல்லாமறிந்தவர். உண்மை, அறிவு, இன்பவடிவானவர். உடல்கள் யாவற்றிலும் உய்பவர். மீளுட்சியம்மையின் பதியானவர். இத் தகையயாவற்றையும் இயக்கும் சுந்தரேசப்பெருமான் அறிவு இன்பவடிவான தனது திருவிலையம்பதிக்குச் செல்செல் என எனதுளக்கோயிலில் உறைந்து கொண்டு என்ன காரணத்திற்காக என்னைத் தூண்டுகின்றீர்? பெருமா னது அன்பர்களான நானும் நீயும் ஆக்ஞையை மீறக்கூடாது. ஆனதி பற்றிக் கடிதில் என்னை சிதம்பரத்தலத்திற்கு அனுப்பிவை" என்றார். உடனே பாண்டியன் அவருக்குச் செல்வதற்கு அனுமதியளித்தான்.

வாதவூர் சோமசுந்தரக்கடவுள்மீது திருவாசகங்களைப் பாடிக் கொண்டு திருவாதவூருக்குப் புறப்பட்டார். அரசன் கூடவே வந்தான்.

கூப்பிடுதொலைவுக்கப்பால் வாதவூர் அவனை நிறுத்தித் திரும்பிப்போகும் படியாய்க் கட்டாயப்படுத்தினர். அதன்பேரில் அரசன் மதுரை வந்து சேர்ந்தான். உடனே அவன் மந்திரிகளுடன் நேராகத் திருக்கோயிலுள்ள மகாமண்டபம் சென்று மிகுந்த உவகையுடன் கருணைவடிவனை எம்பெருமானது கருணையைப் புகழத்தொடங்கி 'மந்திரிமார்களே; அடியாரைக் காக்கும் பேரிறைவனை திருவாலவாயானது கருணைத் தன்மையைக் கேளுங்கள். உலகின் நலத்திற்காக இழிவான தொழிலை மேற்கொண்டார். ஒருவருக்கு நஞ்சும், வேடன் கொடுத்த இறைச்சியும், குழந்தைக் கறியும், பிட்டும், கல்லடியும், வில்லடியும், இன்று கான் கொடுத்த பிரம்படியும் உகந்ததாயிற்று. ஆனதுபற்றித் தேவரீரை அவர்பால் நலனை விரும்பும் அனைவரும் அன்பு செலுத்தவேண்டும்.'' எனப் பலவாறு கூறி பெருமானது செயல்களை நினைத்தவனாய் மந்திரிகளுடன் அந்தப்புரத்திற்கேகினான். பின்னர்ப் பாண்டியராசன் தெய்வங்களுக்குள் சிவபெருமானே துயர் தீர்க்கும் தெய்வமெனத் தீர்மானித்து அவரையே எப்பொழுதும் அண்டியவனாய் ஆலவாயுடையாருக்கு வீடுகளிலும், பொன்னும், பசுக்களும், ஆடைகளும், இரத்தினமயமான ஆபரணங்களும் கொடுத்தான். திங்கள் தோன்றியதும் கடல்நீர் பொங்குவதுபோன்று அரசனது செல்வங்கள் பெருகின. அவனுக்குச் சகலதபாண்டியனெனும் புதல்வன் பிறந்தான். அரசன் அவனோடு வெகுகாலம் அரசியற்றினான்.

வாதவூர் பொதியமலையிலுள்ள எல்லாச் சிவத்தலங்களுக்கும் சென்று அங்கங்குறையும் பெருமானைக் கண்டு வணங்கித் தனது சீடருடன் திருவாலவாய்த்தலம் போய்ச்சேர்ந்தார். அங்கு அவர் சிவகெங்கையில் மூழ்கி உமையுடன் கூடிய சுடராசப்பெருமானையும் இலிங்கங்களுக்குள் சிறந்ததான மூல இலிங்கத்தையும் கண்டு வணங்கித் திருவாலவனத்தில் சீடருடன் களித்திருந்தார். விலங்குகள்போன்று திரிந்து இலைகளை யருந்திக்கொண்டு வெகுகாலம் இருந்தார். அவர் எப்பொழுதும் மனத்தை நிட்டையிலிருத்தியவராய் வெளிப்பொருள்களில் ஈடுபடுகலை நிறுத்தி உணவு உறக்கம் தவிர்த்துச் சிவனின் பதமுதைப் பருகிக்கொண்டு பெரும் யோகியாய் விலங்குகளுடன் அலைந்தார்

அங்ஙனமிருக்கையில், பதுத்தர் வேறு தீவிலிருந்து தமது சீடருடனும் வேலையாட்களுடனும் சிதம்பரத்திற்கு வந்தனர். அவர்கள் தங்களது சமயத்தில் வல்லனாய் நன்மை தீமை இவ்விரண்டையும் பயக்கும் ஆற்றலுடன் விளங்கினர். அவர்களுடன் பெரும் சுவடிமூட்டைகள் வந்திருந்தன. திருவாலவாயில் வாழும் வைதிகர்களையும் சிவதேசர்களையும் வாதில் வென்று தங்களது நாத்திகக் கொள்கையை நிலைநாட்ட வேண்டுமென்பது அவர்களது நோக்கம். அவர்கள் பொய்த்தருக்கம் புரிவதில் புலிகள். அவர்கள் செல்லும்போது மயில் தோகைகளால் வழியைப்பெருக்குவார்கள். மிகுந்த எமாற்றக்காரர். பலவிடங்களில் வாதில் வென்று தங்கள் சமயத்தை நிலைநிறுத்திவிட்டுச் சிதம்பரத்திற்கு வந்தனர்.

அவர்கள் மூவ்வாயிரம் அந்தணரையும் சிவனன்பரையும் யோகியரையும் வாதுக்கு இழுத்தனர். சிவதேசரொடு பல தருக்கங்கள் கூறி வாது புரிந்து 'வீடு அளிப்பவன் சிவபெருமானன்று. உலகனைத்தும் புத்த

மயமானது' எனத் தங்களது சாத்திரங்கள் மூலம் முடிவு கட்டினர். இங்ஙனமே அவர்கள் வாதில் எங்கும் வெற்றி யெய்தினர். சிவனன்பரைத் தோல்வியுறச் செய்தபின்னர், அவர்கள் வேதநெறியுடையோரை வெல்ல அவாக்கொண்டு 'வேதங்கள் பொருளற்றவை; பொய்யான பொருளைக் கூறுகின்றன. வேதங்களின் பொருள் உலகிற்குப் பயன்படாதவை. பொய்மையானதும் கூட. சிவன்பாலும் திருநீறுபாலும் அன்புகொண்ட நீவிர் மயக்கமுற்றவர். வீடு பெறுதற்கு நீறு வேண்டியதில்லை. இம்மை யின்பத்திற்கும் அது பயன் பெறுதது. சிவனுக்கும், திருநீறுக்கும், உருத்திராக்கத்திற்கும் யாதொரு தொடர்புமின்று. மரத்தின் காயும், தீயிலுண்டான நீறும், சிவனும் இகழ்தற்குரியன. இம்மூன்றிற்கும் தொடர்பில்லை யெனக் கூறுகின்றோம். இருக்குமாலுல் எடுத்துரையுங்கள். கடவுளுக்கும் நீறுக்கும் என்ன தொடர்பு? கூறுங்களேன் வேத நெறியீரே! சிவனணிந்த நீறு புனிதமானால் ஓமநீறும், புனிதமற்ற மயானநீறும் புனிதமானதே! சிவனுடையவோ நீற்றினுடையவோ பெருமையையும் தாய்மையையும் நிலை நாட்டி அவ்விரண்டினுள் எது மேலானதென செப்புங்கள். முடிவு கூறுவதற்கு நாட்கள் ஏழு தருகின்றோம். அவ்விரண்டினுள் மேன்மைபெற்றது இது எனத் தெளிந்து நீங்கள் கூறுவீடில் பொன்னம்பலத்தை எங்கள் மடமாக்கிவிடுவோம்;; என அறைகூவினர்.

இம்மொழிகளைக் கேட்டுச் சிவனன்பர்களிற் சற்றறிந்தவர் ஒருவரோடொருவர் ஆய்ந்து பதில்கூற இயலாதவராய்ப் பவுத்தரிடத்தே ''அக்கினிரிதி முதலான வேதவாக்கியங்களில் திருநீறு உண்டான வரலாறும் நலன் விரும்புவோர் அதை அணியவேண்டிய கட்டாயமும் கூறப்பட்டுளது. ஆதலால் அதை அணிந்தேதீரவேண்டும். இல்லையேல் நரகவீழ்ச்சி திண்ணம். பாவிகளான நீங்கள் ஐயமின்றி நரகத்தில் வீழ்வீர் 'எனப் பகர்ந்தனர். அதன்பேரில் பவுத்தர் வைதிகர்களை நோக்கிப் ''பொய்கூறும் உங்களது வேதங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. யுக்திமூலமாய்ப் பொருத்தம் கூறவேண்டும்;; என்றனர். முவ்வாயிரம் அந்தணரும் மனவருத்தத்துடன் வீடு சென்றனர்.

ஆறு நாட்கள் கழிந்தன. வாது நடந்துகொண்டேயிருந்தது. முடிவு ஏற்படவில்லை. பின்னர் அவர்கள் சபாபதிப்பெருமானிடம் யாவற்றையும் தெரிவித்தனர். பெருமான் அவர்களுக்கு வெற்றி கிடைக்கும் பொருட்டு அவர்களது கனவில் 'அந்தணரே! தில்லைவனத்தில் திருநீறு உருத்திராக்கம் பூண்டு ஓர் பிராமண அடியார் இருக்கின்றார் அவர் தமிழ் மொழியில் சொற்செழிப்பு பெற்றவர். புகழ்கொண்ட வாகவி. வியாக்கிரபாதர் போன்று காட்டு விலங்குகளுடன் திரிந்துகொண்டிருக்கின்றார். அப்பெரியாரால் உங்களது காரியம் கைகூடும். கானகம் சென்று சன் மொழிகள் பேசி, அவரைக் கொணர்ந்து, அறிவுக்கடலாகும் அவரைக் கொண்டு பவுத்தர்மீது வெற்றி யெய்துங்கள். அவரது முதற்பெயர் வாதவூர் என்பது. பின்னர் அவர் மாணிக்கவாசகராஞர். பவுத்தரை வெல்வதற்கென்றே சோமசுந்தரமூர்த்தி மதுரையம்பதியில் வாழ விரும்பிய அவரை இங்கு அனுப்பியிருக்கின்றார்;; எனத் திருவாய்மலர்ந்தருளினர். இதே கனவை அவர்கள் யாவரும் கண்டு மகிழ்ச்சியுடன் ஒருவருக்கொருவர் சொல்லி ஆச்சரியப்பட்டனர்.

அப்பால் எல்லோரும் ஒன்றுகூடி வாத்தியங்களை முழக்கிக் கொண்டு திருவெண்காட்டிற்கெதிர் சிவனடியாரைத் தேடித் திரிந்து கடைசியில் ஓரிடத்தில் விளக்குகளின் ஊடே அவரைக் கண்டனர். வாத்திய வொலியைக் கேட்டதும் விளக்குகளுடன் அவரும் ஓடிக் காணமற்போய் விட்டார். வாத்தியங்களும் மற்றைச் சனங்களுமில்லாது மீண்டும் அவர்கள் காட்டிற்குச்சென்று தேடினர். அப்பொழுதும் அவர் விளக்குகளின் மத்தியில் தென்பட்டார். உடனே அவர்கள் அவரது அண்மையையடைந்து "வரவேணும் காத்தருளவேணும்" எனத் தலைமீது கூப்பிய கைகளுடன் வணக்கமாய் வேண்டிக்கொண்டனர். பெரியவர் கவனியாமலே விளக்குகளுடன் மறைந்துவிட்டார். இறுதியில், விரைவாய் நடக்கக்கூடிய சிலர் அவரைப் பின்தொடர்ந்து கெஞ்சினர். அப்பொழுதும் அவர் முன்போன்றே சென்றுவிட்டார்.

அப்பால் அவர்கள் ஒன்று சேர்ந்து மிகுந்த மனத்தாங்கலுடன் நடராசப்பெருமானது திருமுன்பு சென்று 'கடவுளே! எவ்வளவு பரிவுடன் அழைத்தும் அவர் வராது விளக்குகளுடன் ஓடி விடுகின்றார். பவுத்தரை வெல்வதற்கு நாங்கள் செய்யவேண்டியது என்னே?" என்றனர். உடனே நடனத்தை மேற்கொண்ட ஆலவாயுடையாரது கருணையால் ஆகாயத்தினின்று "பாக்கியம்பெற்ற முவ்வாயிரவரே! அன்பர்களான நீங்கள் என் சொல்லைக் கவனத்துடன் கேளுங்கள். எளிதாகவே அவரை இங்கு கொணர்தற்குத் திண்ணமான வழியொன்றிருக்கின்றது. முன்னம் திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் நான் குருவாகவிருந்து அருள்நோக்கால் அவரைப்பார்த்துத் திருமந்திரம் சொல்லிவைத்தபோது அவருக்கு மாணிக்கவாசகர் எனத் தீக்கைப்பெயர் இடப்பட்டது. நீங்கள் அனைவரும் அனைவரின் நலத்தின்பொருட்டு அந்த நாமத்தைச் சொல்லியழையுங்கள். அவருக்கு உடனே நினைவு வந்து வணங்கியவராய் உங்களருகே அவர் வருவார்" என்ற சொற்கள் உண்டாயின.

அவற்றைச் செவியுற்ற சிவனடியார்கள் அளவிலா மகிழ்ச்சியடைந்து மறுபடியும் திருவெண்காடு சென்றனர். தொலைவில் பெரியவரும் காணப்பட்டார். உடனே அவர்கள் அவரை நோக்கி உரத்த குரலில் 'மாணிக்கவாசகரே! ஆலவாயுடையாரது திருமொழியின்பேரில் நாங்கள் உமது அண்டையில் வந்திருக்கின்றோம். சைவநெறியை நிலைக்கவைக்கவும் பவுத்தரை அடக்கவும் பெருமானது ஆக்கினையின்பேரில் உமது அண்மையை அடைந்திருக்கின்றோம். கருணைகொண்டு வந்தருளவேணும்" என விண்ணப்பித்தனர். வாதவூர் மாணிக்கவாசகரென்ற தனது தீக்கைப்பெயரைச் செவியுற்றவுடன் "எனக்கு அருள்புரியவே குருமூர்த்தியாய்த்தோன்றிய சிவபெருமான் என்னை இன்று அழைக்கின்றார். அவரது ஆக்கினையின்பேரிலேயே இவ்வடியார்கள் அந்தப் பெயரைத் தெரிந்து கொண்டிருக்கின்றார்கள். இதற்காகவே என்னைப் பெருமான் மதுரையம்பதியினின்று அனுப்பியிருக்கின்றார். பேறெய்தினேன்! பேறெய்தினேன்" எனவுரைத்தவராய் அடிக்கொருமுறை வணங்கிக்கொண்டு அடியாரை நோக்கி வந்தார்.

அவர்களும் மகிழ்ந்து பெரியவரை வணங்கிப் பவுத்தரது வரலாற்றையும் இறைவனது ஆக்கினையையும் அறிவித்தனர். பின்னர் அவரைத்

தழுவி ஒருவரது தோள்மீதேற்றிச் சிவசரமங்களப் பாடிக்கொண்டும் ஆடிக் கொண்டும் வாத்தியங்கள் முழங்கப் பவுத்தரிருந்தவிடம் சேர்ந்தனர்.

யோகியை முன்னிட்டு வந்த அவர்களை நோக்கி பவுத்தர் ''தோளில் தூக்கி இவரை இங்கு கொணர்ந்திருக்கின்றீர்கள். இவர் அந்த ஐயத்தைத் தீர்த்துவிட்டாரா?'' எனக் கேட்டனர். அதற்குத் தில்லையந் தணர் துணிச்சலுடன் ''ஐயம் தீர்ந்துவிட்டது. வெற்றி எங்களதே! தோல்வி உங்களது.'' எனப் பதில் உரைத்தனர். பவுத்தர் சினங்கொண்டு ''மயக்கங்கொண்டவரே! எங்ஙனம் ஐயம் தெளிந்திருக்கின்றதென்று கடிதில் கூறவேண்டும்'' என மொழிந்து வாதவூரைக் கடுப்புடன் நோக்கி 'நீர்தான் சொல்லுமே! சிவன்நீறு இவ்விரண்டினுள் எது மேலானதென்று' எனக் கூறினர். உடனே வாதவூர் அவர்களது முன்னிலையில் நிரியாயுஷம், பிருகத்சாம, ஆவோராசானம், என்ற வேதமந்திரங்களையும் திருநீற்றின் மாட்சியையுணர்த்தும் அக்கினிரிதி என்ற மந்திரத்தையும் மொழிந்து சிவனது பெருமையையும், விபூதியின் பெருமையையும் அவ்விரண்டிற்கு மிருக்கும் சார்பையும் விளக்கிப் பதிலுரைத்தார். அதன்பேரில் பவுத்தர் வேதமொழிகள் யாவும் பொய்யானவையென்றும் சருக்கமுறையில் யுக்திக்குப் பொருத்தமான திருட்டாந்தங்களுடன் மெய்ப்பிக்கவேண்டுமென்றும் கூறினர்.

பவுத்தரது மொழிகளைக்கேட்ட வாதவூர் அவர்களது முன்பு காய்ந்த எரு உருண்டையைக் கொணரச்செய்து அதற்குத்தீயிட்டார். அந்த நீறு அணிதற்குத் தக்கதாகும்பொருட்டு அதற்குரிய மந்திரங்களைச் செபித்தார். அந்த உருண்டை வெளியேநீறுகவும் உள்ளே அனலாகவுமிருந்தது. உடனே வாதவூர் அவர்களை நோக்கி ''நீவிர் பெயரளவில்தான் எல்லாமறிந்தவர்; உண்மையில் ஒன்றுமறியாதவர். மங்களவடிவான சிவபெருமான் அனல்மயமானவன் என்பது அனைவரும் ஒப்புக்கொண்ட பொருள். சிவனுக்கும் நீறுக்கும் ஓரிடத்தில் உறைவது எனும் தொடர்பு. அத்தத் தொடர்பு இந்த எரு உருண்டையில் கண்கூடாகக் காணப்பெற்றது. இவ்விரண்டிற்கும் மகனுக்கும் தந்தைக்குமுள்ள தொடர்பும் கூறலாம். இங்ஙனம் நீறுக்குப் பிறப்பின் காரணமான தூய்மை எற்படுகின்றது. அனையறியாது பிதற்றும் அறிவிலிகளான உங்களது மூன்பு அது நோகக் காண்பிக்கப்பட்டது. அந்த அக்கினியானது சிவமயமானதென்று கூறப்பட்டுளது. நீறு அவனது ஆபரணம். அதை அணிவதால் அனைவர்க்கும் இன்பமும் வீடும் உண்டு. இது சிவனது ஆணை. சிவனுல் அணியப்படுவதனைத்தும் இன்பத்தையும் வீட்டையும் பயக்கும். சிவபெருமான் அணிவதாலேயே உருத்திராக்கத்திற்கும் கெங்கைக்கும் தூய்மை. இயல்பாகவே எங்ஙனம் அனலானது சாம்பரால் மூடப்பெற்றுளதோ அங்ஙனமே இறைவனும் சாம்பரால் பூசப்பெற்றிருக்கின்றான்.'' எனவுரைத்தார்.

வாதவூரது அற்புத மொழிகளைக்கேட்ட பவுத்தர் பதிற்கூற இயலாது அவரை அதட்டும் முறையில் 'நீர் கூறியது யுக்திக்கு ஒவ்வாது. ஆதலால் நீர் தோல்வியுற்றீர்'' என்றனர். அதற்கு வாதவூரர் ''பதிற்கூறமுடியாது தவிக்கும் அறிவிலிகளான நீங்களே தோல்வியடைந்தீர்'' என மறுமொழிகொடுத்தார். சைவருக்கும் பவுத்தருக்கும் கலகம் உண்டாயிற்று

இருபக்கத்தவரும் அருகிலுள்ள நகருக்கு வந்திருந்த சோழவேந்தனிடம் சென்று தத்தம் வழக்கையுரைத்தனர். அரசன் இருதரப்பினரின் வல்ல மையைப் பார்த்தற்பொருட்டு எவர்தான் கூறுவதை நிறைவேற்றுவரோ அவரது கூற்றே உண்மையானது என முதலிலேயே சொன்னன். அதற் குப் பவுத்தர் இயைந்தனர். உடனே பிறவி ஊமையான தனது அழகிய புதல்வியை வரவழைத்து அவண் நிறுத்தி வாதவூரரையும் பவுத்தரையும் நோக்கி "வினையின்பயனால் ஏற்பட்டிருக்கும் எனது புதல்வியின் ஊமைத் தனத்தைப் போக்கித் தெளிவாய்ப் பேசவைப்பதே வெற்றி" என்றான்.

இதைக்கேட்ட சைவரும் பவுத்தரும் அரசனது முன்பு "இதில் தோல்வியடைபவர் வேந்தனது ஆட்களால் கற்களாலான கரும்பாலைகளில் போட்டு அரைக்கப்படவேண்டும்" எனவோர் கடுமையான ஒப்பந்தத்தைச் செய்துகொண்டனர். அப்பால் கன்னியிடத்தே சென்றனர். முதலாவ தாகப் பவுத்தர் மந்திரங்களால் செபித்த நீரை அவளது முகத்தில் தெளித் தனர். பின்னர்த் தங்களுக்குச் சித்தியாயிருந்த மந்திரங்களே முணுத்துக் கொண்டு நிட்டையில் ஆழ்ந்தனர். ஊமைத்தனம் விலகவில்லை. வெற்றி யிலுள்ள அவர்களது நம்பிக்கையும் போயிற்று. வருத்தத்தால் வாடியமுகங் களுடன் அவர்கள் வாதவூரைப் பார்த்து "யோகிகளின் தலைவரே! உமது திறமையைப்பார்க்க விரும்புகின்றோம். வேந்தனது புதல்வியின் ஊமைத் தனத்தை போக்கடியும்" என்றனர். இவ்வாறு அரசன் முன்னிலையில் அவர்கள் கூறியதும் அரசனால் மதிக்கப்பெற்ற மாணிக்கவாசகர் உளத்தி லும் சிதம்பரத்திலும் ஆலவாயிலும் ஒரே இறைவன் ஆடுகின்றான் என உறு தியாய் நினைந்துகொண்டு உமையுடன் கூடி எப்பொழுதும் நடனம் புரியும் ஆலவாயுடையாரைத் தியானித்துக்கொண்டு புதிதாயியற்றிய திருவாசகங் களால் ஊமைத்தனம் விலகவேணுமாயத் துதிகள் பாடினர். ஈரடி மடக் குள்ள இருபது பாசுரங்களைத்தான் முதலில் பாடி பெண்ணைப்பார்த்துப் பாடு எனப் பணித்தார். ஊமைத்தனம் நீங்கிப் பெண்ணரசி தெளிவான சொற்களொடு அப்பாசுரங்களே அவருக்குப் பின்னே பாடினள்.

அரசனது மகிழ்ச்சிக்கு அளவு கிடையாது. ஊமைத்தனம் வில கிப் பெண்ணின் நாவில் நாமகள் கூத்தாடினள். பெருமானது ஆணையால் அவளது உளமும் தூய்மையுற்றது. அவள் புலவரான வாதவூரரால் தண் டப்பெற்ற அனேகத் திருவாசகப் பாக்களைப் பாடினர். இவ்வற்புதத்தைக் கண்ணுற்றுச் சோழராசன் மிகுந்த உவகை யெய்தினன்.

பின்னர்த் தோல்வியடைந்த பவுத்தரை ஏவலாளரைக்கொண்டு கரும்பாலைகளில் வதைக்கும்படி அரசன் கட்டளையிட்டான். சோழநாட்டு மன்னனும் அங்குள்ள மக்களும் மாணிக்கவாசகரால் பெரும் சிவனன்பராயி னர். அப்பால் வாதவூர் வேதங்களில்கூறிய பல சிவத்தொண்டுகளையாற் றினர். தமிழ்மொழியில் சிறந்த பாக்களையியற்றினர். பின்பு எம்பெரு மானது திருவருளால் உடலொடு சிவசாயுச்சியம் பெற்றார். அரிமர்த்தன பாண்டியனும் புதல்வனை செகதாதபாண்டியனிடத்தே அரசியலை ஏற் பித்து யோகியர்க்கும் கிடைத்ததற்கரிய வீட்டுப்பேற்றை யடைந்தான். செகதாதபாண்டியன் குடிகளின் நலனே எப்பொழுதும் கருதியவனாய்ப் பெருமானிடத்தே அன்பு செலுத்திக்கொண்டு குபேரன்போன்று வாழ்ந் தான்.

அறுபத்தோராம் திருவிளையாடல் கூறப்பட்டது. பலமுறை கேட்டால் சிவபெருமானிடத்தில் அன்பை ஊட்டக்கூடியது. இன்பத்தையும் வீட்டையும் விரும்புவோர் கேட்பது மிகவும் அவசியம். இன்னல்கள் நீரும். எம்பெருமான் மண் சுமந்த வரலாற்றையும் மாணிக்கவாசக சுவாமிகள் பவுத்தரை வென்ற கதையையும் படிப்போரும் கேட்போரும் கன்னிலங்கூப்பெற்ற அழியாப்புகழையும் எய்துவர்.



அறுபத்தெட்டாவது அத்தியாயம்.

கூன்பாண்டியனது சரித்தைத் தணித்தல்.

சகலாதபாண்டியன் வெகுகாலம் அரசியற்றியபின்பு சுந்தரமூர்த்தியின் திருவருளால் வாழ்க்கைக் கடலினின்று விடுபட்டுச் சிவசாயுச்சிய மடைந்தான். அவனுக்குப் பின்வந்த வீரபாகுபாண்டியன் தன்னையினும் அதிக வலிமையுடனும் புகழுடனும் நாட்டை ஆண்டான். அவனுக்குப்பின னர் விக்கிரமபாகுவும் அதற்குப்பின் பராக்கிரமபாகுவும் அரசரா யிருந்தனர். பின்பு வரிசையாகச் சூரபி பாண்டியன், குங்கும பாண்டியன், கர்பூரபாண்டியன், கருணைநிறைந்த காருண்ணிய பாண்டியன், மகாவிட்டுணுபோன்ற புருஷோத்தம பாண்டியன், சேரனையும் சோழனையும் வென்று மூன்று நாடுகளுக்கும் அரசனன சத்துருசாசன பாண்டியன், இவர்கள் பாண்டிநாட்டு வேந்தராய் விளங்கினர்.

சத்துருசாசன பாண்டியனது புதல்வன் கூன் பாண்டியன். குங்குமம்போன்று சிவந்திருந்தான். அவன் அரசனபொழுது காஞ்சியில் இருந்துகொண்டிருந்த சோழராசன் தன் புத்திரியான மங்கையர்க்கரசியை அவனுக்குத் திருமணம் செய்வித்து அதன்மூலம் இழந்த இராச்சியத்தைத் திரும்பப்பெற்றான். சோனும் வெகுவான பொருளும் தானியமும் கூன் பாண்டியனுக்குக் கொடுத்து அவனது கருணையால் தனது நாட்டை மீண்டு மடைந்தான். கூன்பாண்டியன் மங்கையர்க்கரசியுடன் நாராயணன் இலக்குமிதேவியுடன்போன்று விளங்கினான். மங்கையர்க்கரசி வரும்பொழுது சோழராசனது மந்திரியான குலச்சிறையார் எனும் குலபந்தனரும் கூட வந்தார். அவரைப் பாண்டியராசனுக்குச் சோழன் கொடுத்தான். கூன் பாண்டியன் குலபந்தனரைத் தனது மந்திரியாக ஆக்கிக்கொண்டான். அவரே இராச்சிய காரியங்கள் யாவையும் கவனித்தார்.

கூன் பாண்டியனது கூனல் எப்படி முன்னினைப் பயனல் நேர்ந்ததோ அப்படியே வைதிகரால் இகழப்பெற்ற அவனது சமணசமயப்பற்றும் நேர்ந்தது. அவனது ஆக்கினையால் சிவனன்புடைய அரசியும் மந்திரியும் விபூதியையும் உருத்திராக்கத்தையும் விடுத்து அகவேள்விமுறைப்படிச் சிவபெருமானை வழிபட்டுவந்தனர். சோமசுந்தரமூர்த்தியைக் காணவிடில் உயிர் நீங்கும் என்று கூறியதால் அரசன் அவ்விருவருக்கும் அனுமதி கொடுத்தான். அதன்பேரில் அவர்கள் நாள்தோறும் திருக்கோயிலுக்குச் சென்று இறைவனைக் கண்டனர்.

வேதநெறியற்றிருக்கும் அரசனை எங்ஙனம் வழிக்குக்கொண்டு வருவதென்று பாண்டிமாதேவியும் மந்திரியும் இரவும் பகலும் கவலையுற்றனர். அரசனது ஆக்கினையால் கிராமத்திலுள்ளோரும் நகரத்திலுள்ளோரும் எல்லோரும் திருநீற்றையும் உருத்திராக்கத்தையும் சிவபூசையையும்

விட்டவராய் மனத்தில் துயர்கொண்டு வெளிக்கு அரசன் கட்டளையிட்ட நெறியில் ஒழுகினர். அரசனது பிழையால் நாடே கெட்டுப்போயிற்று; மழையும் பெய்வதில்லை. தீயோர் இன்புற்றிருந்தனர். நல்லோர் துன்ப மடைந்தனர்.

இங்ஙனம் காலம் சென்றுகொண்டிருக்கையில், திலையிலிருந்து ஆலவாயுடையானை வணங்குதற்பொருட்டுச் சிவஞானத்தவடிகள் வந்தார். மங்கையர்க்கரசியும் மந்திரியும் அவரைத் திருக்கோயிலில் கண்டனர். உடனே சோழநாட்டுச்செய்தி யென்னவென வினவினர்.

அப்பொழுது அடிகள் "பிரமதேவர் தவம் புரிந்த இடமாகும் பிரமபுரம் என்ற சீர்காழியில் சிவபாதக்ஷிருதயர் என ஓர் அந்தணர் இருந்தார். சிவபெருமானது ஆணையால் முருகபிரான் அவர்தது திருக்குமாரனாக அவதரித்தார். கருணை வடிவான மலைமகள் அம்மையார் குழந்தைக்கு முலைப்பால் கொடுத்தாள். அப்பாலை யருந்தியவளவிலே குழந்தை புலவர் கோமானாக ஆய்விட்டான். மூன்று பிராயமாகுமுன் அவன் அறிவுக்கடலாகி ஞானசம்மந்தன்என்றபொருளுடைய பெயரைப்பெற்றான். சிவத்தலங்களைப் பாக்கவேணுமென்ற நல்லெண்ணம் சிறுவனுக்கு உண்டானது. தந்தையின் தோளில் ஏறிக்கொண்டு தலந்தோறும் சென்று, மாசற்ற அன்பொடு இறைவன்மீது திருப்பாடல்களைப் பாடிப் பின்னர் எம்பெருமானது திருவருளால் முத்துச்சிவிகையும் குடையும் சாமரங்களும் பெற்று, அங்கங்கேயுள்ள வேதநெறி நீறியோரைத் தண்டனைக்குட்படுத்திச் சிறுவனாயினும் சிவநெறி நிற்போருக்கு இன்பத்தை விளைவித்தான். அக்குழந்தை இவ்வூருக்கு வேதமிகழும் சமணரைத் தொலைப்பதற்கும் ஆலவாயுடையாரைக் காண்டற்கும் வரப்போகின்றான்" எனச் செய்தி கூறினர்.

அரசியும் குலச்சிறையாரும் இம்மொழியமுதைக்காதுகளால்பருகி மட்டிலா இன்பத்தையடைந்து உடனே "அறிவு நிறைந்தவரே! அறிவுவடிவானவரே! ஞானம் விஞ்ஞானம் இவற்றின் களஞ்சியமே! ஞானசம்மந்தப் பெருமானே! வைதிகயானையே! எல்லாமறிந்த முருகவடிவனே! முதல்வனே! உலகிற் கருள்புரிபவனே! அன்பரைக்காத்தற்கும் கயவரைக் கொய்தற்கும் ஆலவாயுடையாரைக் காண்டற்கும் இவண் எழுந்தருளவேண்டும். அரசியும் மந்திரியுமான நாங்களிருவரும் உம்மைச் சரண்புகுந்தோம்" என்ற வாறு கடிதமெழுதி ஞானசம்மந்தருக்கு அனுப்பினர்.

அதற்குமுன்பே யோகியான அவர் ஞானநோக்கால் யாவற்றையுமறிந்து வேதநெறியை நிலைநாட்டவும் எதிரிகளை மடக்கவும். ஆலவாயுடையாரையும் கயக்கண்ணம்மையாரையும் காணவும் மதுரையம்பதிக்குச் செல்ல வேணுமென நினைத்துச் சோழநாட்டில் அரசன் சிவநெறியில் நிற்கின்றான் அவ்விதமே குடிகளுமிருக்கின்றனர், பாண்டிய நாட்டில் அரசன் சமண நெறியில் நிற்பதால் குடிகளும் அங்ஙனம் ஒழுகுகின்றனர். அவ்வரசனை வேதநெறிக்குக் கொணர்தற்குக் கடிதில் செல்லவேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டிருக்கையில் அக்கடிதமும் வந்தது. அதைப் படித்து அவர் மகிழ்ச்சியுற்றார். உடன் புறப்படவேண்டுமென்றார். அதற்குத் தந்தை முதலானவர் 'அப்பா! இன்று சுவாமி திதி; ஞாயிற்றுக்கிழமை. பிரயாணத்

திற்கு உகந்தவையல்ல. சமண் ஆயிரக்கணக்கின்வர். ஏமாற்றக்காரர். அறிவிலும் படிப்பிலும் முதிர்ந்தவனுயினும் நீ சிறுவன்தானே.'' என்றனர். அதன்பேரில் குழந்தை சிவபெருமானே உளத்தில் நினைந்து சுற்றத்தாரை நோக்கிச் ''சோமசுந்தரமூர்த்தியைக் காண்டற்குச் செல்லும் எனக்கு எல்லாத் திதிகளும் எல்லாக் கிழமைகளும் மங்களமானவையே!'' எனப் பதில் கூறினர். அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாது இன்று போகக்கூடாதெனத் தடுத்தனர். அப்படியிருந்தும் சுந்தரமூர்த்தியது ஆக்கினையின் வலிமையால் அவர் அனுப்பப்பெற்று ''சுந்தரமூர்த்தியைக் காணப்போகும் எனக்குத் திதியும் கிழமையும் நல்லதாகவேயிருக்கும். ஆலவாயுடையாரது திருவருளால் வேதநெறியை இகழும் சமணரை நான் கிண்ணமாய் வெல்வேன். கருடனைக்கண்ட அரவங்கள்போன்று அவர்கள் அடங்குவர்'' என மொழிந்து அன்பொடு ஒரு பதிகம் பாடிப் புறப்பட்டார்.

பெருமானது பெருமை வாய்ந்த திருநாமங்களைக் கூறிக்கொண்டு விபூதியும் உருத்திராக்கமும் பூண்ட பதினாயிரம் திருக்கூட்டத்தார் சூழ்ந்துவர முத்துச் சிவிகையிலேறிக் குடை பிடிக்கப்பெற்றுச் சாமரங்கள் வீசப்பெற்றுப் பாற்கடலில் தோன்றிய சந்திரன் பூவுலகிற்கு வந்தாற்போல் பூலோக கைலாயமெனப்படும் மதுரையம்பதிக்கு வந்தார். வேத நெறியைக் காத்தற்கும் சமணரையழித்தற்கும் பிரம புரத்தில் தோன்றிய சமணுந்தகன் வருகின்றார். நல்லோரைக் காத்தற்பொருட்டும் தீயோரே அடக்குதற் பொருட்டும் சுப்பிரமணியப் பெருமானின் அமிசமாய் அவதரித்த ஞானசம்பந்தர் வருகின்றார் என்று பொருள் படும்படியாகக் காஹளிவாத்தியங்கள் முழங்கிக்கொண்டு முன் சென்றன. வாத்தியவோசையைச் செவியுற்ற சமணர் மனம் கலங்கி இவ்வளவு முழக்கத்துடன் வருகின்றவர் யார் என அறிந்துவரும்படி அநுவரையனுப்பினர். அவர்கள் வந்து செய்தியைச் செப்பினர்.

அறிவு நிறைந்த ஞானசம்பந்தர் தொலைவிலேயே திருவாலவாயருடைய விமானத்தையும் கோபுரத்தையும் கண்டு வணங்கி பாடல்கள் புனைந்து பாடி வகையாற்றையடைந்து அதில் நீராடி பிதுருக்களுக்கும் தேவர்களுக்கும் இருடிகளுக்கும் தருப்பணம் செய்து முழுகடலிலும் நீராடித் தேவர் முதலானவர்க்குத் தருப்பணம் செய்து ஞான தீர்த்தமாகும் பொற்றாமரைக்குச்சென்று அதில் நீராடி அங்கு செய்யவேண்டிய அனுட்டானங்களை முடித்துப் பின்னர் விநாயகரையும் முருகனையும் கயக்கண்ணம்மையையும் வணங்கிப் பாடல்கள் சொல்லித் துதித்து வலம் சுற்றி முறையே கலனனைத்தையும் அளிக்கும் சுவாமி கோயிலையடைந்து கணத்தலைவராலும் யானைகளாலும் சிங்கங்களாலும் திக்கு யானைகளாலும் தாங்கப்பெற்றதும் தேவேந்திரனால் கொடுக்கப் பெற்றதுமான அற்புத விமானத்தைக்கண்டு கோயிலிற்குள் புகுந்து துவாரபாலரைத் தொழுது அவண் ஆலாலக்கண்டனும், ஆலவாயுடையானும், முதலாவதாக இலிங்கவடிவேற்றவனும், உண்மை, அறிவு, இன்பவடிவனும், அறிவானந்தா முதமயமானவனும், எல்லா மூர்த்திமயமானவனும், வீட்டுப் பேறளிப்பவனும், உலகத்தைக் கோயிலாகக் கொண்டவனும், கருணைக் கடலும், ஐம்பது எழுத்து வடிவனுமான சிவபெருமானைக்கண்டு இன்பத்தால் பரவயமாகிக் கூப்பிய கைகளுடன் அசைவற்று நின்றார். சொற்களுக்கும் மனத்திற்கும் எட்டாத பேரின்பத்தைத் துய்த்

தார். இன்பக்கண்ணீர் பெருக, உரோமம் சிலிர்ப்ப, இந்திர விமானத்தின் கீழுறைபவனும், மிகமிகப் பழையவனும், இதற்குமுன் காணப்படாதவனும், மனத்தைப் பறிப்பவனுமான எம்பெருமானைப் பாடல்கள்பாடித்துதித்தார். மூல இலிங்கத்தின் கடுவில் உமையுடன் கூடிய பேரிறைவனைக் கண்ணுற்றுத் தியானம்செய்து முறைப்படி விடைபெற்றுக்கொண்டு வெளியேறினர்.

அத்தருவாயில் மந்திரி குலச்சிறையாரும், அரசியும் அவரை வணங்கிப் பூசித்துப் 'பெருமானே! நாங்களிருவரும் உம்மைத் தஞ்சம்புகுந்தோம். எங்களையாட்கொண்டு காத்தருளவேணும்' என வேண்டிக்கொண்டனர். அவ்விருவருக்கும் அவயம் அளித்தருளிச்செய்தார். அப்பொழுது மதுரையில் மடம் கட்டி இரவும் பகலும் சிவபூசை செய்துகொண்டு விபூதி உருத்திராக்கம் அணிந்து விளங்கிக்கொண்டிருக்கும் வாகீசர் எனப்பெயர் கொண்ட சிவயோகியொருவரும் அரசியும் மந்திரியும் பெரியவரை உண்டிக்கழைத்தனர். அவர் தனது சீடருடன் யோகியரது மடத்துக்கே சென்றார். அதன்பேரில் மங்கையர்க்கரசியும் குலபந்தனரும் பால், தயிர், நெய், பழவகைகள் முதலான திண்பண்டங்களைக் கணக்கில்லாமல் மடத்திற்குக்கொணர்ந்து கிறப்பினர். வாகீசர் வந்திருந்த சீடரனைவர்க்கும் அறுசுவையுடன் உண்டியளித்தார். பின்னர் திருஞானசம்பந்தர் சிவபெருமானை வழிபட்டு வாகீசரால் மிகவும் பூசிக்கப்பெற்று உணவு அருந்தியபின் எம்பெருமானை நினைந்தவராய் சிறிது கண்ணயர்ந்தார்.

அப்பொழுது சோழன் அண்மையிலுறையும் மலைகளில் இருந்து கொண்டுவந்த சமணர் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, அபிசாரஓமம் வளர்த்து, அவிகள் சொரிந்து, அணற்தெய்வத்தை மகிழ்வித்து வேதமதத்தோரின் தலைசிறந்த தலைவரான ஞானசம்பந்தரை எரிக்கும்படி ஏவினர். அந்த அக்கினியுடன்கூடச் சில சமணரும் சென்றனர். அக்கினியானது மடத்தையடைந்ததும் ஒன்றும்செய்ய இயலாது வலியற்றுப்போயிற்று. சமணர் சுற்றிலும் நின்றுகொண்டு துண்டினர். பெருமானது ஆணையால் அப்பொழுதும் ஒன்றும் செய்யமுடியவில்லை. அதன்பேரில் சமணர் அக்கினியை ஒன்றுதிரட்டி மடத்தின் எட்டுத்திசைகளிலும் ஏவிவிட்டனர். ஒருவாறு தீப்பற்றியது. கதவுப்பால் உறக்கத்திலிருந்த திருஞானசம்பந்தர் அதையறியவில்லை. பதினாயிரம் சீடருக்கும் அது தெரியாது. கருணைக்கடலான கடம்பவனப்பெருமான் அதையறிந்து அக்கினியை வலியற்றதாக்கினார். மடத்தில் சிறிதளவேனும் எரிக்கப்படவில்லை. மடத்தின் மேற்புரத்திலெரிந்த அக்கினி ஓர் விளக்குபோன்று ஆயிற்று. மடத்தின் உயரே நெருப்பைக் கண்ணுற்ற திருக்கூட்டத்தார் காயனாரிடம் விரைந்து செய்தியை அறிவித்தனர். உடனே அவர் விழித்தெழுந்து எம்பெருமானை நினைந்துகொண்டு பாடல்கள்பாடி இறைவனைப்புகழ்ந்து,, உமையொடுகூடிய சுந்தரமூர்த்திக் கடவுளது திருவாணையால் இந்த அக்கினியானது சமணச் சமயத்தில் பற்றுக்கொண்டிருக்கும் கூன் பாண்டியனை மெதுவாக அணுகட்டும்;; என்று பொருள் படும்படியாகப் பாடலொன்றைப் பாடினார். உடனே கூன் பாண்டியனுக்குச் சுரம் கண்டது. அடங்காத எரிச்சலால் இருக்கைகொள்ளாது தரையில் வீழ்ந்து புரண்டான். இப்படியிருக்கையில் காரியம் கைகூடாததால் மனம் வருந்திய சமணர் தங்கள் தலைவர்களிடம் சென்று

தாங்கள் வைய அக்கினி மடத்தை எரிக்கவில்லையெனத் தெரிவித்தனர். அவர்கள் அச்சமடைந்து ஒன்றுகூடி மீண்டும் எங்ஙனம் துன்பம் இயற்றலா மென்பது பற்றி ஆய்ந்தனர்.

சுரத்தால் வருந்தும் அரனுக்குப் பலவகையான மருந்துகள் கொடுக்கப்பெற்றன. விசேடமான செபங்கள் கடந்தேறின. எவ்வகையிலும் சுரம் தணியவில்லை. அதிகமாய்க்கொண்டே வந்தது. சமணரால் மந்திரம் செய்து ஏவப்பெற்ற அக்கினியல்லவா அவ்வருவாய் வந்திருக்கின்றது! பெரும் பெரும் வைத்தியரெல்லாம் சுரம் நீங்காததுகண்டு மனவருத்தமுற் றனர். அபிசாரத்தால் அது ஏற்பட்டதென்பது அவர்களுக்குத்தெரியாது. அரசன் அவர்களை நோக்கிச் சுரம் குணமாகவில்லை நீங்கள் செல்லலாம்' எனக்கடிந்து பேசினன். பின்னர் அவன் அமைச்சரைக்கொண்டு மந்திர வாதத்தில் தேர்ந்தவரான சமண குருக்களை வரவழைத்து "எனது சுரத் தைப் போக்குங்கள்' என வேண்டினன். அவர்கள் மயிற்றோகையினால் அரசனைத் தொட்டுக்கொண்டு மந்திரங்களைச் செபித்தனர். மீண்டும் மீண் டும் கடுமையான தியானங்கள் புரிந்தனர். கலயநீரைத் தெளித்தனர். சுரம் சிறிதளவுகூடக் குறையவில்லை. அதற்குமாறாக நீரால் வடவாமுகாக்கினி போன்று சினத்திற்குக் கணம் வளர்த்தது. அரசன் சினத்துடன் சமண குருக்களை வெளியேற்றிவிட்டு அரசியையும் குலபந்தனரையும் நோக்கிய வனைப் பிரக்ஞையற்றுக் கீழே வீழ்ந்தான். அவனது முன்புண்ணியப் பயனால் அவ்விருவரும் உடனே அவனிடம் ஓடிவந்து அவனுக்குப்பிரக்ஞை வரும்படி செய்தனர். அப்பால் அரசியும் மந்திரியும் இதுவே நல்ல தருண மென்று கருதி அரசனது கலத்தின்பொருட்டு அவனை நோக்கி 'அரசனே! எங்களது சொல்லைக் கேட்கவேண்டும். உமது உயிரைக் காக்கவே சொல் லுகின்றோம். ஞானசம்பந்தர் என்றோர் அந்தணகுமாரர் ஆலவாயுடையா னைக் காண்டற்பொருட்டுச் சோழநாட்டிலிருந்து இவண் வந்து இங்கே மடத்தில் தங்குகின்றார். நகரிலுள்ள நல்லோரனைவரும் அவர் பெரும் ஆற் றல் படைத்தவரெனக் கூறுகின்றனர். அவர் சைவசமயமறிந்தோருள் தலை சிறந்தவர். ஆசாரியர். பேரறிஞர். வயதில் சிறியரேனும் அறிவிலும் கல்வியிலும் முதிர்ந்தவர். சிவபெருமானிடத்தே பேரன்புகொண்டவர். அவரது திருவருள் பெற்றவர். அப்பெரியாரை யழைத்துச் சுரத்தைத் தணியவைக்கச் செய்யவேண்டும். இது எங்களது விருப்பம். மகாராசா அதை ஏற்றுக்கொண்டால் உடன் அப்படியே செய்யலாம்" எனத் தெரி வித்தனர். மூன்றினைப் பயனுல் அரசன் கடுங்கோபமடைந்தவனுய் அவ் விருவரையும் நோக்கி 'அவர் வந்தால் திருநீற்றைக்கொண்டு என்மீது பூசு வார். அது எனது சமண சமயத்திற்கு ஒவ்வாத காரியம்" என மொழிந் தான். அதைக்கேட்டு அரசியும் மந்திரியும் அவனைப்பார்த்து "வேந்தனே! வேதங்களால் புகழப்பெறும் தூய திருநீற்றை நாம் தள்ளுதல் என்பது கூடாது. வேதத்தை இகழ்கின்ற அந்தச் சமணர் பாவிகள். நாங்கள் உமக்கு உண்மையைக் கூறுகின்றோம். திருநீற்றையும் உருத்திராக்கத் தையும் விட்டவர்க்கு நரகம்தான் என்று சாத்திரங்கள் உரைக்கின்றன. இன்னலுற்றிருக்கும் இவ்வேளையில் உமது சுரம் தணியும்பொருட்டு எங்க ளது சொல்லைக் கேளும். நமது அப்பன் பாட்டன் முதலான முன்னோரால் அணியப்பெற்ற நீறும், உருத்திராக்கமும், அவர்களால் புரியப்பெற்ற பேரி றைவனை சிவபெருமானது வழிபாடும் நமது எல்லாவிதப் பாவங்களையும்

போக்க வல்லவை. சுரத்தைத் தணித்தற்பொருட்டுச் சமண சமயத்தவரையும் வேத சமயத்தவரையும் அழைத்து அவர்களுள் எவர் சுரத்தைக் குணப்படுத்துகின்றனரோ அவரையே உமது குருவாக ஏற்றுக்கொள்ளும் மன்னனே!'' என்றனர். அதற்கு அரசன் இணைந்தான்.

உடனே ஆட்கள் சென்று சமண குருக்களை அழைத்து வந்தனர். மாதேவியும் குலபந்தனரும் தாமே வாகீசரது மடத்திற்கேகி ஞானசம்பந்தரை வணங்கி வேண்டியழைத்தனர். அவரும் கணத்தலைவரால் சூழப்பெற்ற சிவபெருமான்போன்று பதினாயிரம் திருக்கூட்டத்தாருடன் வந்தார். அரசனது முன்னிலையில் வீற்றிருந்த சமணரது மத்தியில் அவருக்கு இருக்கையளிக்கப்பட்டது. எண்ணாயிரம் மதயானைகளின் மத்தியில் ஒரு சிங்கக்குட்டிபோன்று அவர் அதன்மீது அமர்ந்தார். அப்பொழுது 'நாமிருவரும் இவரை இங்கு கொணர்ந்துவிட்டோம். சமணரோ தருக்கத்தில் மிகப் பலவல்லாதவர். வாதில் வெற்றி எங்ஙனமிருக்குமோ?' வென அரசியும் மந்திரியும் அச்சமுற்றிருப்பதைக் கண்டு அவர் 'மனத்தே உமையுடன் கூடிய ஆலவாயுடையான் உறைகின்றான் அஞ்சல்மினீண்டாம்' எனப் பாடல் கூறப் பாடிக்கொண்டு அவர்களுக்கு சமிக்ஞைமூலம் அறிவித்தார். அப்பால் தருக்கத்தில் வல்லுனர் என்று செருக்குக்கொண்ட சமணர் அவையோரின் முன்பு 'இவர் அரசனது வலப்பக்கத்தச் சுரத்தைத்தணிக்கட்டும். நாங்கள் இடப்பக்கத்தைக் கவனித்துக்கொள்கின்றோம்' என அறை கூவினர். ஞானசம்பந்தர் 'அப்படியேயாகட்டும்' என ஒப்புக்கொண்டார். அரசியும் மந்திரியும் மகிழ்வுற்றனர்.

சுரத்தால் வருந்தும் அரசனும் முன் புண்ணியப் பயனால் ஞானசம்பந்தர் தொடுவதற்கு இசைந்தான். உடனே நாயனார் உமையொடு கூடிய எம்பெருமானை நினைந்துகொண்டு அரசன்மீது இடுவதற்குத் திருநீற்றை எடுத்தார். அதைக் கண்ணுற்ற சமணர் ''நில். நில். '' எனத்தடுத்து அவரை நோக்கி 'மருந்துகலந்த நீற்றை நீர் கையாள்கின்றீர். உம்மிடம் மந்திரவாற்றல் ஒன்றுமில்லை. நீர் ஓர் அறிவிலி. குழந்தை. சுரத்தைக் குறைப்பதற்கு அந்த நீற்றை எடுக்கக்கூடாது. சுரத்தைப்போக்கும் ஆற்றல் நீறுக்கு இயல்பாகவே உளதாகில் உமது கையில் இடக்கும் மருந்து கலந்த நீறுவேண்டாம். வேறு நீற்றால் சுரத்தைத் தணிக்கவேண்டும். இகழ்ச்சிக்குரிய நீற்றைத் தொட்டாலும் அழுக்கு உண்டாகும். அதைக்கொண்டு நீர் எங்ஙனம் சுரத்தைக் குணப்படுத்தப்போகின்றீர்? ஆற்றலிருந்தால் வேறு நீறு கொணரச்செய்து சுரத்தை நீக்கும். அங்ஙனம் செய்து சுரம்தீருமாகில் உமது ஆற்றலையும் உமது எல்லாமறிந்த தன்மையையும் ஏற்றுக்கொள்கின்றோம்'' எனச் செப்பினர். அதைக்கேட்டு நாயனார் அவர்களிடம் ''நீவிரே ஆலவாயுடையாரது மடைப்பள்ளியிலிருக்கும் சாம்பரை எடுத்துவாருங்கள்' என்றார். அதற்குச் சமணர் 'சாம்பரை நாங்கள் கண்ணுற்கூடப்பார்க்க மாட்டோம். அப்படியிருக்க உம்போன்ற அறிவிலிகளால் அணுப்பெறும் அதைக் கையால் எங்ஙனம் தொடுவது? உமது ஆட்களைக்கொண்டும் அதை எடுத்துவரச்சொல்லுதல் கூடாது. ஏனெனில் அவர்கள் அத்துடன் மருந்தைக் கலந்து விடுவார்கள்'' என்றனர். உடனே வைதிகயானையான ஞானசம்பந்தர் அவர்களைப் பார்த்து 'ஆம். நீங்கள் உரைப்பது உண்மையே. பாவிகளான நீங்கள் திருநீற்றைத் தொடுதலும் கூடாது. நம்மிருவரையும்

சேர்த்த அரசனுக்கு எம்மாற்றமற்ற ஏவலாளர் சென்று திரு மடைப்பள்ளி யினின்று சாம்பரைக் கொணரட்டும்'' என்றார்.

இங்ஙனமுறைக்கவே, ஆருகதர் அரசனது ஆட்களைச் சாம்பர் கொணர்தற்கு அனுப்பினர். அவர்கள் விரைந்து சென்று திருக்கோயிலி லிருந்து நீறு கொணர்ந்து அடிகளின் கையில் போட்டனர். ஆலவாயாரது மடைப்பள்ளியினின்று கொண்டுவரப்பெற்ற அந்தத்தூய நீற்றை அவர் அன்புடன் ஏற்று அரசனது பாவம் நீங்குதற்பொருட்டு அதைத் தொட்டு உமையுடன் கூடிய எம்பெருமானே நினைந்தவராய் திருநீற்றுப் பதிகத்தைப் பாடி இறைவனே வணங்கி செபிப்பவருக்கு கலனனைத்தையும் பயக்கும் ஐயெழுத்து மந்திரத்தை செபித்து ''வேதங்களுக்குப் புறம்பட்ட இவன் தொடுதற்கு உரியனல்லன்'' ஆயினும் 'இவனைத் தொட்ட பாவம் ஆலவா யுடையாரது நினைவு வலிமையால் நீங்கிவிடும்'' என்று கருதியவராய் அரச னது வலப்பக்கத்தில் செபம்செய்த திருநீற்றைத் தனிஞர். சுரம் அப்பக் கத்தினின்றும் வெளியேறி இடப்பக்கம் சென்று அங்குள்ள சுரத்துடன் சேர்ந்து அரசனை அதிகமாக எரித்தது. ஆருகதர் மந்திரங்களைச் செபித் துக்கொண்டு மயிற்றோகையால் இடப்பக்கத்தைத் தடவினர். எரிச்சல் இரண்டுமடங்காயிற்று. மீண்டும் மீண்டும் கோபத்துடன் தோகைகொண்டு அப்பக்கலில் அடித்தனர். கலைய நீரையும் தெளித்தனர். தோகை வீசு வதால் உண்டான காற்றும் கலைய நீரில் கலந்த நெய்த் திவலைகளாலும் அக்கினியின் எரிவு மும்மடங்காயிற்று. தோகையின் தனிகள் கருகின. அரசனுக்குக் கோபம் மூண்டது. அப்பொழுது ஆருகதர் வெட்கத்தை விடுத்து அரசனை நோக்கி 'மன்னனே! வலப்பக்கத்தில் அமுதமுள்ளது. ஆனதுபற்றிக் குழந்தை நாயனர் அங்குள்ள சுரத்தை எளிதில் குணப்படுத் தினர். இடப்பக்கத்தில் நச்சு இருக்கின்றது. அங்கிருக்கும் சுரத்தையும் குழந்தை தணிப்பாரேயாகில் அவர் குழந்தையல்ல. பெரியவரே. அப்போது எங்களைக் கடிந்து பேசலாம்'' என்று உரைத்தனர்.

உடனே அரசன் ஞானசம்பந்தரைப் பார்த்துப் ''பெரியாரே! நீர் எங்களுக்குச் சிவபெருமானேயாவீர். இடப்பக்கத்துச் சுரத்தையும் தணித் தருளல்வேண்டும். எனது உயிரைக் காப்பாற்றவேண்டும்'' என வேண் டிக்கொண்டான். அதன்பேரில் அடிகள் ''ராசனே! இடப்பக்கச் சுரத் தையும் போக்குகின்றேன். நானிருக்கும்போது கொஞ்சமும் அஞ்சவேண் டாம்,, எனக்கூறி அப்பக்கத்தில் நீற்றைத் தடவினர். நிகம்பரான சம ணரால் குணப்படுத்த இயலாத இடப்பக்கச் சுரமும் நீங்கிற்று. அரசனது உடல் முழுதிலுமே இனிச் சுரமில்லை. உடம்பு குளிர்ந்து வலியும் பெற்றது. கூன்பாண்டியன் முன்னிலும் அதிகமான உடல் நலனையும் வளர்ச்சியையும் அடைந்தான். அவன் மீண்டும் மீண்டும் மாதேவியையும் மந்திரியையும் புகழ்ந்தான். வைதிக யானைய எட்டுறப்புகளுடன் வணங்கிச் சமயச் செருக்கு நீங்கியவனாய்,''பெருமானே! எல்லாமறிந்தவரே! எனது நாதரே! உலகத்தின் நாதரே! உலகத்தாரின் குருவே! குழந்தையாயினும் சிறந்த பேச்சால் பெரியவராகவே யிருக்கின்றீர். தத்துவங்களின் அறிவிலும் சிவ பெருமானிடத்தே அன்பிலும் எவ்வகையிலும் உமக்கு ஈடானவர் இலர். உம் மைக் கண்டதும் எங்களது அறிவீனம் நீங்கிற்று. நல்லறிவு உண்டாயிற்று. ஆனதுபற்றி நீர் சிவபெருமானே! முன்னம் நாங்கள் ஆருகதரின் கொள்கை

கலை யேற்றுக் கெட்டுப்போனேம். கருணைக்கடலே! அப்பாவத்தினின்று எங்களை மீட்டிக் காப்பாற்றி யருளவேணும்'' என அரசன் வேண்டினன்.

முன் புண்ணியப்பயனால் அரசன் இங்ஙனம் வேண்டிக்கொண்டதும் ஞானசம்பந்தப்பெருமான் தனது திருநோக்கால் கூன்பாண்டியனுக்குத் தீக்கையளித்து அவனது கூனைப் போக்கடித்தார். மேனி ஓர் புத்தழகைப் பெற்றது. அவனுக்குப் பஞ்சாக்காத்தைச் சொல்லிவைத்தார். சிவலிங்கமொன்றை அவனுக்குக் கொடுத்து வழிபடும் முறையையும் உபதேசித்தார். அரசனது மேனியின் பொன்போன்ற பொலிவை நோக்கிய கல்லோரனைவரும் இது என்ன ஆச்சரியம் இது என்ன ஆச்சரியமென மொழித்தவராய் அளவிறந்த பெருமிதத்தையடைந்தனர். ஞானசம்பந்தரை எல்லாமறிந்தவரெனப் புகழ்ந்தனர். அரசனது அண்மையிலிருந்த எல்லாச் சனங்களும் நெற்றியில் திருநீறு அணிந்தனர். அரசனது கூனலொடு அறிவீனமும் ஒழிந்தது. ஒப்பற்ற அழகும் வலிமையும் தோன்றின. ஞான சம்பந்த நாயனார் அவனைக் கண்ணுற்று ''அரசனே! இனிமேல் உனது பெயர் சுந்தரபாண்டியன் என்பது'' என மொழிந்தார். பிறவிமுதற் கொண்டிருந்த கூன்பாண்டியன் எனப் பெயரைவிடுத்து அரசன் சுந்தரபாண்டியன் எனப் புதுப்பெயரைப் பூண்டான்.

அப்பால் சுந்தரபாண்டியராசன் ஞானசம்பந்த தேசிகரை மங்கள விருக்கையில் இருத்தி அவரைச் சிவபெருமானாகவே கருதிச் சந்தனம், மலர் முதலியவற்றால் பூசித்து, உயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிவித்துக் குடை கொடி சாமரம் முதலானவையுடன் வாத்தியங்கள் முழங்கப் பல்லக்கில் ஏற்றி பெரும் விழாப்போன்று மெதுவாக நகரை வலம்சுற்றி மடத்தில் கொண்டு சேர்த்துக் கைகளைக் கூப்பிக்கொண்டு அவரது முன்னிலையில் நின்றனன். தேசிகேந்திரன் அரசனது வணக்கத்தைக்கண்டு மகிழ்ந்து அவனை அரண்மனைக்குச் செல்லும்படி கட்டளையிட்டார். பின்னர் ஆலவாயுடையாரையும் கயற்கண்ணம்மையாரையும் புதுப்பதிகங்கள் பாடிப்புகழ்ந்து சனங்களால் போற்றப்பெற்று மடத்திற்குச் சென்றார்.

மங்கையர்க்கரசியும் மந்திரியும் தங்களது விருப்பம் நிறைவேறியவராய் நாயனாருக்குப் பலவிதமான வரிசைகள் தந்து மகிழ்வித்தனர். உடற்கையற்ற ஆருகதர் மனம் நொந்து வெட்கித் தலை குனிந்து அரசனால் விரட்டப்பட்டனர். சனங்களும் அவர்களைக் கடிந்துபேசி ஏசினர். அவர்கள் நடுநடுங்கித் தரையையும் ஒருவர் ஒருவரது முகத்தையும் பார்த்துக்கொண்டு அவரவரது நிலையிடத்துக்குச் சென்றனர்.

அரசனான சுந்தரபாண்டியன் எப்பொழுதும் ஆலவாயுடையாரை நினைத்தவனாய் உலக நாயகனுக்கு விலையுயர்ந்த ஆபரணங்களையும், கற்பகத்தரு ஈந்திய பொன்மயமான பிரம்பையொன்றையும், இடப ஊர்தி முதலான ஊர்திகளையும், பொன்மயமானவையும் முத்து மயமானவையுமான பீடங்களையும், அரி இருக்கையையும் சாமரங்களையும், விளக்கிலங்களையும் ஏற்பித்து இறைவனையும் இறைவியையும் களிப்பித்தான்.

இங்ஙனம் சுந்தரபாண்டியன் திருஞானசம்பந்தரது நல்லுபதேசத்தால் சமண சமயத்தை விடுத்துச் சைவசமயத்தை யேற்றுச் சிவனன்பருள் முதல்வனாய் விளங்கினன்.

இது பெருமானது அறுபத்திரண்டாம் திருவிளையாடல். இக்கதையைக் கேட்போரும் படிப்போரும் ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் பெறுவர்.



அறுபத்தொன்பதாவது அத்தியாயம்.

சமணர் கழுவேற்றம்.

மந்திரி குலச்சிறையாரும் பாண்டிமா தேவியும் நாயனாரிடத்தே சென்று இரகசியமாக "அறிவு நிறைந்த வைதிக யாரையே! வேத நெறியை நிலைபெறுத்தற்கும் சிவனடியாரைக் காத்தற்கும் வேதங்களைப் பகைப்பவரை யழித்தற்கும் உடலெடுத்தவரே! எங்களிருவரையும் பாண்டிநாட்டு மன்னனையும் மெய்யன்பரையும் காத்தற்பொருட்டு இவண் வந்திருக்கின்றீர். நாட்டில் சமணமதம் ஓங்கி நிற்கின்றது; சைவமதம் இருக்குமிடம் தெரியவில்லை. ஆனதுபற்றி நுண்ணறிவு படைத்த நீர் தக்க வழிகளால் சமணரைத் தொலைக்கவேண்டும். அரசரது நட்பை நம்பமுடியாது. ஏனெனில் அரசர் தம் விருப்பம்போன்று நடப்பவர். ஆனதால் அறிவுக்கடலாகும் உம்மாலேயே சமணர் அழிக்கப்படவேண்டும். அவர்கள் எண்ணாயிரம்பேர்களும் கொடுஞ் செயலுடையவர். வயப்படுத்தல், இழுத்தல், வெறுப்பூட்டல், நிற்பித்தல், பேயோட்டல் முதலான தொழில்களில் ஈடுபட்டவர். இரக்கமற்ற நெஞ்சினர். அவர்களது நடத்தையைக் கூறவும் எங்களுக்கு அச்சம் உண்டாகின்றது. எங்களுக்கு இங்கு யாதொரு துணையும் கிடையாது. அவர்களை ஒடுக்கியபின்னரே நீர் இவணிருந்து உமது ஊருக்குச் செல்லல்வேண்டும். அடியாரைக் காத்தற்பொருட்டு எங்களது வேண்டுகோளுக்கிணங்கி ஓராண்டு இங்கு தங்கியருளவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டனர்.

இம்மொழிகளைக் கேட்ட நாயனார் சிவபெருமானை நெஞ்சில் நினைந்தவராய் "இறைவனது துணை கொஞ்சமேனும் எவனுக்கு இருக்கின்றதோ அவனது செயல்கள் யாவும் கைகூடும். அவனது பகைவர் மாய்வர். என உறுதியாய் நம்பிக்கொண்டு கவலையின்றி நீங்கள் இருவரும் இருங்கள். உமையொடு கூடிய எம்பெருமானது அனுமதியைப் பெற்று நான் நாளைச் சமணரை அடக்குகின்றேன். நீங்கள் இப்பொழுது இருப்பிடம் செல்லலாம்" எனத் துணிவுடன் உரைத்து அவர்களை அனுப்பினார்.

மறுநாட் காலையில் நாயனார் எழுந்து நித்திய கருமங்களையும் நியமங்களையும் முடித்துச் சமணரையழித்தற்கு இறைவனது கட்டளையைப் பெறக் கருதியவராய்ப் பாண்டிமாதேவி குலச்சிறையார் இவ்விருவருடன் திருக்கோயிலுக்குச் சென்றார். அங்கு முதலில் விநாயகக்கடவுளையும் கயக்கண்ணம்மையாரையும் முருக பெருமானையும் வணங்கிச் சுவாமி கோயிலையடைந்து பெருமானை வணங்கித் துதித்து "எம்பெருமானே! எல்லா உலகிற்கும் இறைவனே! எல்லாமறிந்தவனே! மங்களமூர்த்தியே! மதிசூடியே! அடியாரது விருப்பங்களை நிறைவேற்றுபவரே! எட்டுக் குன்றுகளில் வாழும் எண்ணாயிரம் சமணரையும் அவர்களது குருமாரையும் வேதநெறியைக் காத்தற்பொருட்டு நாங்கள் காண விரும்புகின்றோம். பெருமானுக்கு அது உகந்ததாகில் அனுமதி தரல்வேண்டும். வாதுகளிலும் எங்களது செயல்

களிலும் எங்களுக்கு வெற்றி கிடைக்கவேண்டும்'' என வேண்டிக்கொண்டு அசைவற்று நின்றார்

அப்பொழுது ஆகாயத்தினின்று 'அன்பர்க்கு எது உகந்ததோ அது எனக்கும் உகந்ததே. வேத விரோதிகளையடக்கி வேதத்தைக் காக்கும் செயலில் உங்களுக்கு வெற்றியும் எதிரிகளுக்குத் தோல்வியும் உண்டாகட்டும்'' என இறைவனது மொழி கேட்டது. காயனூர் உவகையெய்திப் பெருமானை நினைத்தவராய் அங்கேயே நின்றார். மீண்டும் வான்மொழி ''எனது இந்த நற்சொற்களுக்குச் செவி சாய்த்து அச்சத்தை விடுங்கள். வாதில் வெல்லவிரும்பும் நீங்கள் பாண்டியராசனது முன்னிலையில் அவையைக் கூட்டவேண்டும். எனது ஆணையால் கோணல்தருக்கத்தில் தேர்ச்சி பெற்ற அவர்கள் கடைக்காலம் நெருங்கியவராய்த் தாமாகவே வாதுக்கு வருவார்கள். அவர்கட்குக் கழுவேற்றம் கிடைக்கும். எனதன்பரனைவரும் வெற்றி பெறுவர்'' எனக் கூறிற்று. உடனே காயனூர் சொல்லொணா மகிழ்ச்சியடைந்து மந்திரியுடனும் மாதேவியுடனும் இறைவனைத் தொழுது அவ்விருவரது மலர்ந்த முகங்களைக் கண்ணுற்றுக் கடமை முடித்தவர் போல் ஆனார். மிகுந்த நம்பிக்கைபெற்று மூவரும் பெருமானது இரத்தினம் போன்ற மொழிகளை உடுக்கையில் முடித்துக்கொண்டனர். அப்பால் சோமசுந்தரமூர்த்தியை வணங்கிப் பாடி அவரவரது இருப்பிடம் சென்றனர்.

பின்னர் மாலையில் மூவரும் ஒன்று சேர்ந்து ''உலகம் முழுதும் சமணசமயத்தில் ஈடுபட்டிருக்கின்றது. தடைசெய்யாவிடில் அது மென்மேலும் ஓங்கும். வேதங்களில் கூறியுள்ள சைவநெறி மங்கிவிடும். சைவநெறியழியவே வைதிக கருமங்களும் அசுவமேதம் ஈறாகவுள்ள வேள்விகளும் காளடைவில் மறைந்துபோம். வேள்விகளில்லையேல் இந்திரன் முதலான தேவர்கள் உணவு பெறுதுக் கோபம் கொண்டு மழையை நிறுத்தி விடுவர். மழையின்றிப் பெரும்கேடு விளையும். மக்கள் பாவச்செயல்கள் புரிவர். வேதநெறி கெட்டதும் அரசனும் கெடுவான். அரசன் கெடவே சனங்களும் கெடுவர். இப்பொருளை அரசன் உணரும்படி நாம் செய்து அவனிட்ட பணிகளை நாம் நிறைவேற்றவேண்டும். ஏனெனில் அரசனே அறத்திற்குக் காரணம்'' என ஆய்ந்துதெளிந்து அரசனிடம் சென்று அந்தக் காரியத்தைப் பற்றிச் செப்பினர். அரசனும் அதைக்கேட்டுச் சமணரை ஒழித்தற்கு ஒப்புக் கொண்டனன். இறைவனது ஆணையையும் அரசனது அனுமதியையும் பெற்ற அவர்கள் அளவிலா மகிழ்ச்சியெய்தி அவ்விரவை உறக்கமின்றியே கழித்தனர். சமணருக்கும் மனவருத்தத்தால் அன்றிரவு உறக்கம் கிடையாது. அவர்களது பெண்டிரும் புதல்வரும் மாணாக்கரும் அவர்களை யிகழ்ந்து பேசினர். காயனரிடம் தோல்வியடைந்து வெட்கத்துடன் அவர்கள் தத்தம் இல்லம் சென்றதும் அவர்களது மனைவிமார் அவர்களை யேசி ''மூன்னளில் வியாகரணம், தருக்கம், மீமாஞ்சை முதலான சாத்திரங்களில் வல்லுனராய் எங்கும் வெற்றியுடன் ஒப்புயர்வற்று விளங்கிய நம் முன்னோரால் ஈய்தப்பெற்ற புகழை ஒரு சிறுவனிடம் தோல்வியடைந்து கொடிப்பொழுதில் கற்குலத்தைத் தீயுதல்வர்போன்று பாழாக்கிவிட்டீர். அரசனது அண்மையை விடுத்து வெட்கமின்றி எங்களது முன்புவந்து எதற்காகப் பிதற்றுகின்றீர்? உயிரையல்லவா நீங்கள் விடவேண்டும்? நமக்கிருந்த பெருமையைச் சிறுவன் அழித்துவிட்டான். நமது முன்னோர் மந்திரவலிமையால் மாய யானையையும், சருப்பத்தையும், பூதத்தையும் எளி

தில் தோற்றுவித்தனர். அந்த ஆற்றல் இப்பொழுது உங்களிடத்தே இல்லையா? குழந்தையிடம் தோல்வியுற்றீரே! வசியம் முதலான செயல்களில் உங்களுக்கிருந்த பேர் பெற்ற தேர்ச்சி இப்பொழுது மறைந்துவிட்டதா? இந்திரசாலம், மகாசாலம், மந்திரசாலம் இவற்றில் வல்லனான நீவிர் யாது காரணம்பற்றி இப்பொழுது மக்குகள் போன்று சும்மா நிற்கின்றீர்? இன்னும் அனேகவிதமான ஆற்றல்கள் உங்களிடத்தே உண்டே? அவையனைத்தும் எங்கு சென்றன? இதற்குமுன் உங்களது வலிமைக்கு யாதொரு குறைவும் ஏற்பட்டதில்லையே! ஓய்யய்யோ! எவனோ ஒரு சிறுவன் இப்பொழுது அதை மிகவும் இழிவுபடுத்திவிட்டானே! உங்களது தோல்வியால் எங்களுக்கல்லவோ வெட்கமுண்டாகின்றது! தன் மதிப்பில் முதல்வராய் நிற்கும் உங்களுக்கு அந்த வெட்கம் ஏற்படவில்லையா? எப்பாடுபட்டாயினும், அவர்களை நீங்கள் வெல்லாவிடில் உங்களுக்கு எங்கும் இன்பம்கிடையாது. ஆனது பற்றி அவர்கள்மீது வெற்றியெய்தியாகவேண்டும். அப்படிக்கின்றி நீங்கள் வீட்டில் சும்மாவிருப்பீர்களாகில் நாங்கள் உயிரைவிடுவது திண்ணம் ''எனக் கடிந்துபேசினர். அவர்கள் உணவு அருந்தாது உரக்கமின்றி இரவு முழுதும் நாயனரை வெல்லுதற்கு வேண்டிய வழிகளைப்பற்றிப் பேசித தீர்மானித்தனர்.

மறுநாள் ஆருகதக் குருமார் அனைவரும் அக்கினித்தம்பம் சலத்தம்பம் முதலான மாயச்செயல்களால் நாயனரை வெல்லக் கருதியவராய் வீடுகளினின்று புறப்பட்டனர். அப்பொழுது அவர்களது மனைவிமார் ஒவ்வொருத்தியும் தத்தம் கணவனிடத்தே ''பதியே! நான் இரவில்ஓர் கனாக் கண்டேன். அதில் சமணரனைவரும் சிறுவனிடம் தோல்வியுற்றனர். அரசனது ஏவலாளர் அவர்களைச் சவுக்குகளாலும், கத்திகளாலும், கோடரிகளாலும், மூட்டிகளாலும் தாக்கித் துன்புறுத்திக் கழுவில் ஏற்றினர். அவர்கள் அதில் மாண்டனர். பெண்டிரான நாங்கள் மார்பில் புடைத்துக் கொண்டு தந்தையரும் கணவரும்புதல்வரும் கழுவில்மடிவதைக்கண்ணுற்று வருத்தம் தாங்காது துன்பக்கடலில் ஆழ்ந்தோம். ஆதலால் சிறுவனை வெல்வதற்கு இன்று போகுதல் கூடாது. விடியும் நேரத்தில் இந்தக் கனவைக் கண்டிருக்கின்றோம். அது உண்மையாய்விடும்;;; எனக் கூறி அழுதவண்ணமாய்க் கணவன் மாரைப்போகவேண்டாமெனக் கைகளைப் பிடித்துக் கொண்டு தடுத்தனர். அதன்பேரில் அவர்கள் 'நேற்று இவர்கள் சினங் கொண்டு இழிவாய்ப் பேசினர். இன்று கல்லவர்களாய்விட்டனர்போலும். இவர்களது சொல்லைக்கேட்டு நாம் வாளாவிருப்பின் இனி ஒவ்வொருகாலும் கடுஞ்சொற்களைக் கேட்கவேண்டியதுதான். அதைக்காட்டிலும் சாவே மேலானது;;; எனத் தெளிந்து மனைவியரது கைகளை உதறித் தள்ளிவிட்டுக் கிளம்பினர். எங்களது சொல்லை மதியாது புறப்படும் உங்களுக்கு வெற்றியில்லை; எனப் பெண்டிர் சாபமிட்டனர். அதற்கு அவர்கள் 'பெண் சொற் கேட்கும் ஆடவர்க்குப் பெருங்கேடே விளையும்; எனப்பதில்கூறிமதுரையை நோக்கி புறப்பட்டனர்.

எதிரில் பாம்புகளும் நரிகளும் பூனைகளும் வந்தன. கைம்பெண் மூதலியோரும் வந்தனர். வரிசையாகக் கெட்ட சகுனங்கள் ஏற்பட்டன. பறவைகளும் நேர்மாறாகக் குறுக்கே பறந்தன. புறப்பாட்டிற்கு மிகக் கெடுதலான மாடுகளின் தும்மலையும் மனிதரின் தும்மலையும் கண்டும் காலம்

கிட்டிவிட்டபடியால் அவர்கள் நில்லாது சென்றனர். அவர்களது மாணாக் கரும் மாணாக்கரது மாணாக்கரும் கெட்ட சகுனங்களைக்கண்டு பயந்து போக வேண்டாமென்று மன்றாடினர். அதையும் கவனியாது அவர்கள் மேற் சென்றனர். அவர்களது தலையில் கரும் ஒணான்கள் வீழ்ந்தன. செல்லும் போது ஒவ்வொரு அடியிலும் கால் தடுக்கிற்று. இடது கண்களும் புயங் களும் துடித்தன. இச்சிலையில் அவர்கள் மதுரை நகரின் அண்மையை அடைந்ததும் எல்லோரும் ஒன்றுகூடிச் செய்யவேண்டியதைப்பற்றி ஆலோ சனை செய்து முதலில் அரசனிடம் சென்று 'நாங்கள் சிறுவனோடு வாதபுரிய வந்திருக்கின்றோம். அனுமதிதரவேண்டும்' என்று பகர்ந்தனர். 'அங்க னமே செய்யுங்கள்' என அரசன் மறுமொழியளித்தான்.

உடனே ஆருகதர் மிக்க இறுமாப்புடன் ஞானசம்பந்தரைத் தேடிச் சென்றனர். அவர் காலையில் திருக்கோயிலுக்கேகி ஆலவாயுடையாரை வணங்கிவிட்டு மடத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார். சமணர் வழி மறித்து அவரை வாதுக்கிழுத்தனர். அதன்பேரில் அவர்களோடு அவர் மண்டபத்திற்குச் சென்றார். அங்கே அவையில் அரசனும் மாதேவியா லும் வணங்கப்பெற்று முருகனது அமிசமான அவர் அனைத்திலும் உயர்ந்த தானதும் பொன்மயமானதும் இரத்தினமயமானதுமான அழகான இருக் கையில் ஏறி அமர்ந்தார். அரசன் அவரது அருகே சென்று எட்டுறுப்புக ளோடு வணங்கிப் பொன்மலர்களால் பூசித்துத் தொழுது ஒடுக்க வணக்கத் துடன் கைகூப்பியவனாய் நின்றனன். அரசியும் மந்திரியும் மெய்யன்பொடு கூட நின்றனர்.

அப்பொழுது கயவரானசமணர் வெட்கத்தை விடுத்து அரசனது முன்னிலையில் அச்சமின்றி ஞானசம்பந்தரை நோக்கி நகைத்துக்கொண்டு "சிறு வனே! உன்னிடம் மந்திரம் ஒன்றும் கிடையாது. எட்டிலும் மரத்திலும் புழு ஊர்ந்தவரையானது எழுத்தாவது போன்றும் காக்கை இருந்ததும் பனம்பழம் விழுந்ததுபோன்றும் ஏதோ குருட்டுத்தனமாய் அப்பொழுது உனக்குப் பலித்தது. உனக்குக் கிடைத்த வெற்றி வெற்றியன்று. உன் மீதுவெற்றி பெறுதற்கு நாங்கள் இதோ வந்திருக்கின்றோம். அப்பொழுது உண்டான பெருமையை விட்டுவிடு. மீண்டும் உனது செயல் பலிக்குமா யின் உன்னுடைய ஆற்றல் உண்மையானதே! இல்லையேல் வெற்றி எங்க ளது. உனது மந்திரத்தையும் எமது மந்திரத்தையும் ஓலையில் எழுதி அன லில் இடுவோம். எவரது ஓலை எரியாமலிருக்கின்றதோ அவருடையது வெற்றி. எவரது ஓலை எரிகின்றதோ அவருடையது தோல்வி" என்றவாறு பிரதிக்ஞை செய்தனர். ஞானசம்பந்தர் எம்பெருமானை நினைந்தவராய் புன்முறுவலு டன் 'அப்படியே' எனமொழிந்து அரண்மனை வேலைக்காரரைக்கொண்டு அங்கேயே அன்றுழியை அமைக்கச்சொன்னார். உடனே சமணசாரியர் "அது கூடாது. இங்கு நடந்தவுல் சிவபெருமான் தனது அன்பனுக்கு கலனைச் செய்துவிடுவார். ஆனதுபற்றி நகருக்கு வடகிழக்கில் பத்துக் கூப் பிடு தொலைவில் அனற்குண்டம் வகுக்கப்பட்டு அதில் பிரதிக்ஞை நிறை வேற்றப்பெறவேண்டும்" என்று கூறி அந்தவிடத்திற்குச் சென்று ஞானசம் பந்தரைப்பற்றி ஒருவரோடொருவர் கேலியாகப் பேசிக்கொண்டு அனலை மூட் டியவராய் நின்றனர்.

வைதிகரின் ஆசிரியரான ஞானசம்பந்த நாயனார் குலச்சிறையாரு டனும் பாண்டிமாதேவியுடனும் மற்றைச் சிவனடியாருடனும் கூடி அந்த இடத்திற்குச் சென்றார். விருப்பம்போன்று ஓடுகின்ற கன்றைத்தொடர்ந்து ஆவானது செல்வதுபோல் ஆலவாயுடையாரும் சிறுவனைத் தொடர்ந்து பின் சென்றார். பாண்டியமாகாராசனும் சமணாசாரியருடையவும் நாயனாருடை யவும் செயல்களைக் கண்ணுறுதற்பொருட்டுத் தனது பரிவாரங்களுடன் அவண் சென்றனன்.

மந்திரங்களிலும் இயந்திரங்களிலும் தேர்ந்தவரான எண்ணாயிரம் சமணரும் முற்றின பனையோலை கொணர்ந்து தாங்கள் வெகுகாலம் செபித் துச் சித்திபெற்ற மந்திரங்களை அதில் வரைந்து ஓலைகளை நெருப்பிலிட் டனர். வயதில் குறைந்து அறிவில் நிறைந்தவரான நாயனார் கயக்கண் ணம்மையாரின் ஞானமே உளத்தில் நினைந்து தனது சுவடியிலிருந்த ஓர் ஓலையை எடுத்து நெருப்பில் வைத்தார். எல்லோரும் பார்த்துக்கொண்டி ருந்தனர். தீயை சமணர்களது எண்ணாயிரம் ஓலைகளும் நெருப்பில் இட்ட வுடனேயே எரிந்தன. நாயனாரது ஓலையோ நீரிலிட்டதுபோன்று யாதொரு சிதைவுமின்றி அப்படியே மிளிர்ந்தது. சனங்களனைவரும் அந்த ஆச்சரி யத்தைக் கண்டு வியந்தனர். முருகக்கடவுளே நேரில் வந்துவிட்டாரென நாயனாரைப் புகழ்ந்தனர். அன்பர்க்கடிவரான ஆலவாயுடையாரையும் கயக்கண்ணம்மையாரையும் போற்றினர்.

இழிகுணமுடைய சமணர் நாயனாரை நோக்கி "உனக்கு அனலைக் கட்டும் மந்திரம் ஏற்கனவே தெரியும். முன்னம் உனது மடத்தை எரித் தற்கு நாங்கள் அக்கினியை இட்டபோது அது பயனற்றுப்போயிற்று. எங்களது ஓலைகள் எரிந்து உனது மாத்திரம் எரியாமலிருந்தது உன்னு டைய சூதினால். ஆனதுபற்றி உனக்கு வெற்றி கிடையாது. நாம் வேறு முறையில் நமது மந்திரங்களின் வலிமையைச் சோதிக்கவேண்டும். நம்மு டைய மந்திரங்களை வரைந்து வைகையாற்று வெள்ளத்தில் ஓலைகளைப்போடு வோம். ஓலைகள் வெள்ளத்தால் இழுத்துக்கொண்டு போகப்படுமேயாகில் அவை வலியற்றவை. அவற்றின் சொந்தக்காரர் தோல்வியுற்றவராவர். வெள்ளத்தை எதிர்த்து எவரது ஓலைகள் செல்லுமோ அவரே வெற்றியுடை யவராவர். தோற்றவர் வென்றவரது அடிமையாகவேண்டும்" என்றனர்.

இதுகேட்ட நாயனார் 'எனக்கு அடிமைகள் தேவையில்லை. சிவ பெருமானது ஆணையால் நான் வெற்றி யெய்தினால் திருநீற்றையெழும் உங் களைக் கழுக்களில் ஏற்றுவேன்' என்றார். அதற்கு லிகிதமால் தூண்டப் பெற்ற சமணர் சரியென ஒப்புவைத்தனர். உடனே நாயனார் வேதநெறிக்கு வெளிப்பட்ட அவர்களைக்கண்டு சீச்சியென மொழிந்துகொண்டு அரசனது எவலாளரால் வைரம் பாய்ந்த கட்டைகளைக்கொண்டுக் கழுமரங்களைத் தயா ரித்தார். எண்ணாயிரமோ அதற்கு இருமடங்கோ கழுமரங்கள் தயாராகி வரிசை வரிசையாக நிறுத்தப்பெற்றன. அவற்றைக் கண்டு சனங்கள் நடுங் கினர்.

நாயனார் கருணையுடன் மீண்டுமொருமுறை சமணசிரியரைப் பார்த்து 'நீங்கள் அறிவிலிகளாயிருக்கின்றீரே! உங்களது நலன் எதென்று உங்களுக்குத் தெரியவில்லையே! நான் சொல்கின்றேன். சற்றுச் செவிசாயுங்

கள். வேதங்கள் சாத்திரங்களுடன் பிரமாணமாகும். மற்றவை நகரத்தில் வீழ்த்தும். ஆருகதசமயம்போன்ற பிறசமயங்கள் இகழ்ச்சிக்குரியன. துன் பத்தையே பயக்கக்கூடியவை. ஆதலால் மறுமையில் நலனெய்தற்பொருட்டு என் சொல்லைக்கேட்டு வேதநெறியைத் தழுவித் திருநீற்றையும் உருத்திராக் கத்தையும் பூணுங்கள். சாக்காட்டையுண்டுபண்ணும் ஆணவத்தை விடுத்து எனது சொற்படி நடவுங்கள். இன்றே உங்களது மேனிகளில் அவ்விரண் டையும் அணியுங்கள். பிரணவத்தோடு கூடியதும் வேதங்களின் உண்மைப் பொருளுமான இறைவனது ஆறெழுத்து மந்திரத்தை இன்பத்தின் பொருட்டும் வீட்டின் பொருட்டும் செபம் செய்யுங்கள். அறம், பொருள், இன்பம், வீடு என்ற இந்நான்கு பயன்களையும் பெறுதற்கு மகாவிட்ணு முத லானவரால் வணங்கப்பெற்ற பேரிறைவனை வழிபடுங்கள். இங்ஙனம் வேதங்களில் கூறிய கருமங்களை முறைப்படி அனுட்டித்து உண்மை, அறிவு, இன்பம் இவ்வடிவான மேலான முத்தியைப் பெறுங்கள். எனது சொன் மொழிகளைக் கேட்பீராகில் உங்களை வதைசெய்யாமல் விட்டுவிடுவேன். இல்லையேல் கழுமரங்களில் ஏற்றுவேன்'' என்றுரைத்தார்.

ஆருகதருக்குக் கடும் சினம் வந்துவிட்டது. சிவந்த கண்களுடன் நாயனாரைக் கடுமையாகப் பார்த்து மிகமிக அதட்டிப் பேசினர். ஆறெ ழுத்து மந்திரத்தையும் உருத்திராக்கத்தையும் திருநீற்றையும் இகழ்ந்தனர். பின்னர் கயவரான அவர்கள் காலம் நெருங்கிவிட்டபடியால் நாயனாரைப் பார்த்து ''அடே அறிவில்லாத சின்னப்பயலே! உன்னைக் கடிதில் இயம னது இல்லத்திற்கு அனுப்பிவிடுவோம். எழுந்திரு. மந்திர ஓலைகளை வைகை வெள்ளத்தில் விடுவோம்'' எனச் சினந்து பேசினர். அப்பொழுது நாயனார் அரசனையும் மற்றோரையும் நோக்கி ''இவர்கள் பாக்கியம் கெட்ட வர் நற்சொற்களைக் கேட்கின்றனரில்லை'' என மொழிந்தார். பின்னர் மந்திரியாலும் மாதேவியாலும் தூண்டப்பெற்று ஊசிபோன்று கூரான இரும்பு முனிகளையுடைய கழுமரங்களை அரசனது ஆட்களைக்கொண்டும் சிவனடியார்களைக்கொண்டும் நட்டுவித்தார்.

அதன்பின் திருக்கூட்டத்தார் பின்வர அரசனோடும் மந்திரியோ டும் நாயனார் ஆற்றின்கரைக்குச் சென்றார். அதற்கு முன்னதாகவே ஆரு கதர் ஆற்றிற்குவிரைந்து மந்திரங்களைச் செபித்து நீரைக்கட்டுதற்குமுயன்று தங்களது ஓலைகளை ஆற்றில் எரிந்தனர். அதே கணத்தில் நாயனாரும் தனது எட்டின் நடுவேயிருந்து ஓர் ஓலையை உருவிப் பெருமானையும் பெரு மாட்டியையும் நினைந்துகொண்டு ஆற்றில் விட்டார். உலகம் உய்யும் பொருட்டுச் சிவபெருமானது ஆக்ஞையால் அது அம்புபோன்று மிக்க விரைவுடன் மேற்கு நோக்கிச் சென்றது. சமணரது ஓலைகளோ நீரின் வேகத்தால் இழுக்கப்பெற்றுக் கிழக்கு நோக்கிச் சென்று கிழிந்தவண்ண மாய்க் கடலில் கடல்போய்ச் சேர்ந்தன. அந்த அற்புதத்தை நோக்கிய மக்கள் வியப்பெய்திக் களிப்புடன் சிங்காதனம் செய்து ஆரவாரித்தனர். பாண்டியராசனும், பாண்டிமாதேவியும், குலச்சிறையாரும் மற்றைச் சிவ நேசச் செல்வர்களும், திருக்கூட்டத்தாரும், நாயனாரும், அளவிற்கு மிஞ்சிய மகிழ்ச்சியையடைந்தனர். ஆருகதர் வருத்தத்தால் தலை குனிந்தவராய் வைதிகயாளையிடத்தே ''நாங்கள் தோல்வியுற்றோம்'' எனக் கூறினர். அவர்கள் ஓடாமல் தடுக்கும்பொருட்டு ஒவ்வொருவரையும் அரசனேச்சார்ந்த சான்று ஏவலாளர் காத்தனர்.

அப்பொழுது நாயனூர் ஒரே சமயத்தில் மரிக்கப்போகும் அச்சம் ணர்பால் இரக்கங்கொண்டு அவர்களை நோக்கி "அறிவிழந்தவரே! இப் பொழுதாவது என் சொற்களைக் கேளுங்கள். ஆடுகள்போன்று வீணே உயிரை விடாதீர்கள். நான் சொல்கின்றபடி வேதநெறியைத் தழுவுங்கள். கூச்சப்படாது உங்களது மயிற்றோகை முதலானவற்றைக் களைந்து மங்களம் பயக்கும் மிகத் தூய திருநீற்றையும் உருத்திராக்கமாலையையும் அணியுங்கள். அவற்றையணிவதாலேயே நீங்கள் புண்ணியம் பெறுவீர். நீங்கள் இருபிறப் பாளரல்ல. கலப்புச்சாதி. ஆனதுபற்றி உங்களுக்கு வைதிக கருமங்களில் உரிமை கிடையாது. நீற்றையும் உருத்திராக்கத்தையும் அணிவதற்கே நீங்கள் உரியவர். ஆனதுபற்றியே நான் இங்ஙனம் கூறுகின்றேன்" எனப் பரிவுடன் மொழிந்தார். அதன்பேரில் மதிகெட்ட அவர்கள் காலனால் ணண்டப்பெற்று உயிரின்பாலுள்ள பற்றையும் தள்ளி நாயனாரைப் பார்த்துச் "சிறுவனே! அச்சமின்றி எங்களிடம் யாது செப்பினை! நீற்றைத் தொடுத் லும் எங்களுக்கு ஒவ்வாத காரியம். அப்படிக்கிருக்க அதைப்பூசுவது எங்ஙனம்? அரசனது சார்பு இருக்கின்றதென்று இத்தகைய அமங்களச் சொற்களைப் பேசத்துணிந்தாய்" என்றவாறு கடிந்து பேசித் தாமே கழுக் களில் ஏறினர். அவர்களது மாணாக்கரும், சுற்றத்தாரும், வேலையாட்களும் பயந்து நெற்றியில் திருநீற்றை யிட்டுக்கொண்டனர். நீறு கிடையாதவர் சாணத்தை மூன்று வரிகளாக நெற்றியில் தடவிக்கொண்டனர். அதுவும் கிடையாதவர் சாணத்திற்குக் காரணமாகும் கன்றுக்குட்டிகளைத் தோளில் சுமந்தனர். அரசனது ஆட்கள் அத்தகையவரைவிடுத்து மற்றவரை கழுக்களில் ஏற்றினர். சூலங்களில் வரிசையாகப் பற்களைக் காட்டிக் கொண்டு தொங்கும் அந்தப் பிரேதங்களைப் பார்க்க மிக்க பயங்கரமாயிருந் தது. கழுகு முதலான பறவைகளும் நரிகளும் பிசாசுகளும் நாற்றமெடுத்த அவ்வுடல்களைத் தின்றன.

நாயனார் நெருப்பில் ஓலையையிட்டு எந்த இடத்தில் சமணரை வென்றாரோ அந்த இடத்திற்கு ஞானசம்பந்தம் எனப் பெயர் வந்தது. நல் லோரனைவரும், கயவர்களைக் களைந்த முருகமூர்த்தியான ஞானசம்பந்தரைத் தலையை யசைத்துக்கொண்டு உளத்திலும் பேச்சிலும் வெகுவாகப் பாராட் டினர். அப்பால் பாண்டியராசன் நாயனாரைப் பணிவுடன் வணங்கிப் "பெருமானே! தாங்கள் ஆற்றில் விட்ட ஏடு எங்கே?" என வினவினன். அதற்கு அவர் 'இறைவனது ஆக்கினையால் அது ஆற்றை எதிர்த்துச் சென் றது" என்றார். அதன்பேரில் பாண்டியன் தான் அவ்வோலையைப் பார்க் கவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டான். உடனே நாயனார் 'எம்பெ ருமானது திருவருளால் நான் அதைக் கொண்டுவருகின்றேன்" என மொழிந்து மேற்கு நோக்கிச் சென்றார்.

நாயனாரால் எறியப்பெற்ற ஏடானது அரை யோசனைத் தொலை விற்கப்பால் போய் நீரில் மூழ்கியது. அதை நாயனார் பதிகங்கள் பாடித் தெரிந்துகொண்டார். ஆனால் மூழ்கியபின் அது கண்ணிற்குப் புலப்பட வில்லை. அரசன் முதலிய யாவரும் அவரோடு கூட அவண் வந்திருந்தனர். நாயனார் அங்குச் சற்று நின்று மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்த இடை யரை நோக்கி 'இந்த இடத்தில் ஏதாவது விசேடமுண்டா?" என வினவி னார். ஒன்றுமில்லையென அவர்கள் பதில் கூறிவிட்டனர். ஆயினும் விசேட

மிருக்கவேண்டுமென்று தெளிந்து நாயனார் சில பதிகங்களைப் பாடினார். பாடவே அண்மையில் ஆற்றின் வடகரையில்தான் தோன்றிய ஓர் சிவலிங்கம் தென்பட்டது. உடனே அவர் அதன் அருகாமைக்குச் சென்று வலம் சுற்றி வணங்கி நின்றார். அரசனும் மாதேவியும் மந்திரியும் ஆட்களும் அங்குவந்து அவரோடு நின்றனர். நாயனார் இலிங்கத்திலுறையும் எம்பெருமானைப் போற்றிப் பதிகங்களைப் பாடினார். பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து பெருமான் என்பது வயது பிராமணக்கிழவராக இலிங்கத்தினின்றும் வெளிவந்தார். திருநீறும் உருத்திராக்கமுமணிந்து சுரத்துடன் வேதங்களைச் சொல்லிக்கொண்டு அவர் சிறுவனது அருகே வந்து அவனது நெற்றியில் ஐயெழுத்தை உரைத்தவராய் விபூதியைத் தடவினார். பின்னர் அவனது கையைப் பிடித்துக்கொண்டு 'சிறுவனே! உனக்கு என்ன வேண்டும் சொல். உடனே தருகின்றேன்'' என்றருளிச்செய்தார். அந்த ஞானசம்பந்தச் சிறுவன் அவரை வணங்கி 'ஐயமின்றி இப்பெரியார் எனது தந்தையான சிவபெருமானே' எனத் தெளிந்து உடல் முழுதும் கடுங்கிக்கொண்டிருக்கும் அவரை அன்புடன் கட்டிக்கொண்டு 'காக்கவேண்டும். காக்கவேண்டும்' என உரைத்தார். புதல்வனுல் இங்ஙனம் தழுவப்பெற்ற பெருமான் ''குழந்தையே! அறிவாளிகளிற் சிறந்தவனே! மாசற்ற கல்வியிலும் சிவனிடத்தன்பிலும் முவ்வுலகிலும் உனக்கு நிகரானவர் கிடையாது. ஒளிமயமான மேனியுடன், முழுமதிபோன்ற முகம் மிளிர, நெற்றியில் திருநீறு அணிந்து முருகன் போன்றே தோன்றுகின்றாய்'' என அருளினார். பேரறிவுபெற்ற சிறுவன் பெரியாரது இனிய மொழிகளைக் கேட்டுக் கிழவர் இறைவனேயென வுணர்ந்து அவரை நோக்கிப் ''பெருமானே! உம்மைக் காண்டலாலேயே நான் எல்லாம் பெற்றுவிட்டேன். ஆயினும் ஒன்று தெரிவிக்கவேண்டியிருக்கின்றது. பரிவுடன் செவிசாய்க்கவேண்டும். ஆற்றில் போடப்பெற்ற எனது எட்டை நீர் ஒளித்திருக்கின்றீர். எல்லாமறிந்த உமது புதல்வற்கு எடு ஒவ்வாததுதான். நீர் உண்மையாக எல்லாமறிந்த இறைவனே. ஆயினும் அந்த எட்டை எனக்குக் கொடுத்துவிடும். உமது திருவடிகளில் எப்பொழுதும் எனக்கு அன்பு இருக்கட்டும். பெருமானே! அரசன் அவ்வேட்டை வேண்டுகின்றான். எவ்வகையிலேனும் நான் அவனுக்கு அதைக் காட்டவேண்டும். எட்டை எடுக்கவோ அல்லது கொடுக்கவோ உம்மையல்லது வேறு எவரால் முடியும்?'' எனச்செப்பினார்.

அன்பும் அறிவும் நிறைந்த அச்சொற்களைக்கேட்ட எம்பெருமான் புன்னகையுடன் சிறுவனை நோக்கி ''எல்லாமறிந்த எனது இருபுதல்வர்க்கும் எடு ஒத்தசதல்லவென நீ கூறியது மிக்கப் பொருத்தமானது. உண்மையானது. முருகனது அமிசமான நீயும் எல்லா முணர்ந்தவனே. சிறுவனாயினும் நீ மிக்க ஆற்றல்பெற்றவன். பகைவரை வென்று உலகில் வேதநெறிகளை நிலைவித்து நூறாண்டு வாழ்வாயாக. இன்பங்கள் யாவையும் துய்த்து இறுதியில் முருகனுடன் ஒன்றுவாயாக'' எனத்திருவருள்புரிந்தார். அப்பால் ஞானசம்பந்தரிடம் அந்த ஓலையைக் கொடுத்துவிட்டுக் கிழவர்வடிவான ஆலவாயுடையார் அவணிருந்த இலிங்கத்தில் மறைந்தருளினார்.

நாயனார் மிகவும் மகிழ்ச்சியடைந்து அரசனை அருள்நோக்குடன் நோக்கிப் பெருமானால் அளிக்கப்பட்ட ஓலையை அவனிடம் கொடுத்தார். அரசன் அங்கு நிகழ்ந்தனவற்றை யெல்லாம் கண்டும் ஓலையைப் பெற்றுப்

படித்தும் அளவிலாத உவகையெய்தி ஞானசம்பந்தரை வணங்கித் துதித்தான்.

பின்னர் ஓர் சிவயோகியிடமிருந்து அந்தத் தலத்திலுடையவும் இலிங்கத்திலுடையவும் பெருமையைக் கேட்டறிந்து, நாயனரின் அனுமதி பெற்றுத் திருவேடகப் பெருமானுக்குக் கோயில் கட்டுவித்தான். அந்தச் சிறப்பு மிக்க தலத்திற்குத் திருவேடகமென்றும், மூர்த்திக்குத் திருவேடக நாதர் என்றும் பெயர் உண்டாயிற்று. அரசன் முன்னர்ச் சமணசமயத் தீக்கை பெற்ற பாவத்தைத் தொலைத்தற்பொருட்டுத் திருவேடகப்பெரு மானை வணங்கினான். பெரும் பழிகள் தீர்வதற்கும், விரும்பங்கள் யாவை யும் பெறுதற்கும், இயமபயம் ஒழிவதற்கும் மக்கள் அந்த மூர்த்தியை வணங் கவேண்டும். கிருதம் முதலான மூன்று யுகங்களில் மகாவீட்டினை, கெரு டன், ஆதிசேடன் இவர்கள் முறையே அவ்விலிங்கத்தைத் தொழுதனர். பாண்டியராசன் கோயில்கட்டி மதில்களையும் கட்டுவித்தான். அது தெரிந் தவரைக்கொண்டு ஆகம விதிப்படி மருந்து சாத்திப் பூசை நடத்துவதற்குப் பட்டர்களையும் நியமித்தான். அங்கு ஓர்ஊரையும் நிறுவித் தனக்கென ஓர் வீடுதியையும் கட்டி எல்லாச்சனங்களோடும் பெருமானை வணங்கிக்கொண்டு அங்கு குடியிருந்தான். ஞானசம்பந்த நாயனரும் அந்த மூர்த்தியைத் தொழுதுப் பதிகங்கள் பாடிக்கொண்டு அவண் அரசனோடு தங்கினர்.

ஓராண்டு கழிந்தது. நாயனர் பாண்டிய மன்னனுடன் அங்கி ருந்து புறப்பட்டு மதுரைக்கு வந்தார். அங்கே அரசனாலும், பாண்டிமா தேவியாலும், மந்திரிமார்களாலும் மிகவும் போற்றப்பெற்று ஒரு வருடகால மிருந்தார். அங்குள்ள மக்களனைவரும் சைவநெறியைத் தழுவினர். ஊருத் திராக்கமாலைகளையும், அக்கினிஹோத்திர நீற்றையும், எம்பெருமானுக்கு மிகவும் உகந்த ஐயெழுத்து மந்திரத்தையும் மனத்தாலோ பேச்சாலோ செயலாலோ அவர்கள் ஒருபொழுதும் விட்டதில்லை. இங்ஙனம் வைதிக மதமானது கடம்பக்காட்டிற்கு வந்து ஆருகத மங்களை முறித்து விசேடமான உவகையை அடைந்தது. நாயனர் உமையொடு கூடிய ஆல வாயுடையாரைப் புதுப் புதுப் பதிகங்கள் பாடித் துதித்து எம்பெருமானது திருவருளால் ஞானம் விஞ்ஞானம் இவ்விரண்டிலும் முடிவு கண்டு சிவன் முத்தி நிலையெய்தினர்.

பின்னர் ஞானசம்பந்தர் ஆலவாயுடையாரது அனுமதி பெற்று, அரசன் மூதலியோரிடம் சொல்லிக்கொண்டு சிவலிங்கமயமான வேணு வாத்திற்கேகி அங்கும் சமணர்மீது வெற்றிபெற்று அவர்களையடக்கித் திருக் கூட்டத்தாருடன் அங்கு ஆறு மாதங்கள் தங்கினர். சென்றவிடங்களி லெல்லாம் வேதநெறி தழைக்கச்செய்து பிற சமயங்களைக் கண்டித்தார். அப்பால் சுசீந்திரம் முதலான சிறந்த சிவத்தலங்களுக்குச் சென்று மூர்த்தி களைக் கண்டார். அதன்பின் இன்னும் பல அற்புதமான தலங்களுக்கேகி னர். மிழக்கே இராமேசுரத்திற்கும் திருமறைக்காட்டிற்கும் போனர். பிறகு திருவாரூர், திருச்செங்காடு, சீர்வாஞ்சியம், கும்பகோணம், திருவி டைமருதூர், திருவாலங்காடு, மாயூரம், திருக்கடவூர், திருமறைக்காடு முத லான பல தலங்களுக்குச் சென்று அங்கங்கு எம்பெருமானைப் பதிகங்கள் பாடித் துதித்து இறுதியில் வெற்றிக் கொடியுடன் தனது ஊராகும் சீர்

காழிக்கு வந்துசேர்ந்தார். அவண் தந்தையான சிவபாதயிருதயரை வணங்கிக்கொண்டு நிலையாகத் தங்கினர். அடிக்கடி சிவத்தலங்களுக்கும் சென்றார்.

சுந்தரபாண்டியராசன் மதுரையம்பதியில் மனைவி, மக்கள், மந்திரிகள், நண்பர் இவர்களோடு சீவன் முத்த நிலையடைந்தவனாய் வாழ்ந்து வந்தான். அரசியலைப் புதல்வனான மதுரேச பாண்டியனிடத்தே ஏற்பித்துச் சமயம் வந்ததும் மங்கையர்க்கரசியுடன் கைவல்லியநிலையையெய்தினன்.

இவ்வறுபத்துமூன்றும் திருவிளையாடல் முவ்வுலகிலும் பேர்பெற்றது. இன்பத்தையும் வீட்டையும் அளிக்கவல்லது. சிவனிடத்தே அன்பையும், அவரது திருவருளையும் பயக்கும்.



எழுபதாவது அத்தியாயம்.

வன்னிமரமும் கிணறும் சிவலிங்கமும் அழைத்தல்.

சோழ நாட்டில் கடற்கரையில் காவேரிப் பட்டிணம் என்றோர் அழகிய ஊர். அங்கு வணிகனொருவன் தனது இல்லாளுடன் செல்வங்கள் யாவும் பெற்று இன்புற்றிருந்தான். அவனுக்கு மகப்பேறு எற்படாத ஓர் குறை இருந்தது. அதற்காகப் பலகாலம் தவம் புரிந்தான். தான தருமங்கள் செய்தான். கடைசியில் ஓர் மகள் பிறந்தாள். அந்தக் குழந்தையை மதுரைமா நகரிலிருந்த தனது மருமகனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்று தனது சுற்றத்தார் மத்தியில் பேசித் தீர்மானித்திருந்தான்.

நாட்கள் செல்லவே, வணிகன் தளர்ச்சியடைந்து காலகதியடைந்தான். சற்பிற் சிறந்த அவனது மனைவியும் உடன்கட்டையேறி உயிர் துறந்தாள். வணிகனைச் சார்ந்த பங்காளிகள் அவ்விருவரது ஈமச் சடங்குகளை முறைப்படி யாதொரு குறைவுமின்றி நடத்தி வைத்தனர்.


அப்பால் அவர்கள் மதுரையிலிருக்கும் அவனது உடன்பிறந்தாள் மகனுக்கு ஓர் கடிதம் அனுப்பினர். அதில் "வைசியகுலத்திற் பிறந்து எல்லா நற்குணங்களுடனும் விளங்குபவனே! செல்வங்கள் யாவற்றையும் பெற்ற உனது மாமனுக்குப் புத்திரப்பேறு உண்டாகாமல் கடும் தவங்கள் ஆற்றிய பின்னர் மகளொருத்தி பிறந்தாள். அவள் பிறந்தவுடனேயே அவளையும் அவரது செல்வங்களையும் உனக்கே கொடுக்கவிரும்புவதாக எங்களிடம் கூறினர். அவர் வயது முதிர்ந்து காலமாகிவிட்டார். அவரது மனைவியும் கூடவே போய்விட்டாள். ஆனதுபற்றி நீ இவண் வந்து அந்தப் பெண்ணையும் மாமனது ஆஸ்திகளையும் பெற்றுக்கொண்டு மதுரைநகருக்குத் திரும்பவேண்டும்: என்று வரைந்திருந்தது. கடிதத்தைப் பிரித்துப் படித்து மாமனது வரலாறு முழுதையும் அறிந்துகொண்டான்.

பின்னர் அவன் ஐந்தாறு மனிதரை உடன் இட்டுக்கொண்டு சின்னாட்களில் காவேரிப்பட்டினம் போய்ச் சேர்ந்தான். அங்கு மாமனது பங்காளிகளும் மற்றவரும் பரிவுடன் அவனை வரவேற்றனர். அவர்கள் ஆறுதல் கூறவே, மாமனிறந்த வருத்தத்தை நாளடைவில் விடுத்து அங்கு அவரது வீட்டில் இன்புற்றிருந்தான். திருமணம் செய்துகொள்ளும்படியாய் அவர்கள் வற்புறுத்தினர். அதற்குத் தான் மதுரை சென்று தனது சுற்றத்தார் மத்தியில் அவளை முறைப்படி மணைக்கப்போவதாகப் பதில்கூறி விட்டான்.

அதன்பின் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு மதுரைக்குப் புறப்பட்டான். முதலில் பல பொருள்களோடு கூடவந்தோரிற் சிலரை



வன்னியும், கிணறும், சிவலிங்கமும் அழைத்தல்



அனுப்பினான். பின்னர் மாமன் மகனை அழைத்துக்கொண்டு எஞ்சியோரு டன் சென்றான். கொஞ்சம் தொலைவு போனதும் அந்தப் பெண் தனக்கு விரைந்து வாழுடியவில்லையென்றும் மெதுவாகத் தங்கித் தங்கிச் சென்றால் நலமாயிருக்குமென்றும் சொன்னதன்பேரில் மற்றவரையும் அனுப்பிவிட்டு மெதுவாக நாளொன்றுக்கு ஒரு யோசனை வீதம் போய்க்கொண்டிருந்தான்.

செல்லும் வழியில் ஓர் சிவத்தலமிருந்தது. அவ்வூருக்குச் சீகபுர மென்றும் திருப்புரம்பயமென்றும் பெயர். அங்கு அவன் திருக்கோயிலில் கன்னியுடனும் அவளது சேடியருடனும் தங்கினான். மகாவிட்டுணு முத லான தேவராலும் ஆதிசேடன் முதலான நாகராலும் வணங்கப்பெற்ற அவனுறையும் இலிங்கத்தை அவன் வழிபட்டான். அவ்விலிங்கத்தின் முன்னிலையில் கிணறு ஒன்றும் வன்னி மரம் ஒன்றும் இருந்தன. கிணற்றில் எல்லாப் புண்ணிய தீருத்தங்களும் மரத்தில் எல்லாத் தெய்வங்களும் குடி கொண்டிருந்தன. அந்தக் கிணற்றில் நீராடி வன்னிமரத்தடியிலுறையும் தக்கன் முதலான சருப்பங்களையும் அவன் வணங்கிப் பின்னர்ச் சேடியர் ஆக்கிய உணவையருந்தித் திண்ணையில் தலைவைத்துப் படுத்தான். கன்னி யும் மற்றோரும் மண்டபத்தில் படுத்தனர்.

கடு நிசியில் வைசிய வாலிபன் அரவம் தீண்டி யிறந்தான். சேடி யர் விழித்துப்பார்த்து ஐயோவென்றலறினர். முகத்திலும் மார்பிலும் அடித்துக்கொண்டனர். தலையில் குட்டிக்கொண்டனர். கூந்தலைப் பிடுங்கி யெறிந்தனர். கன்னி தொலைவிலிருந்துகொண்டு அழுதாள். "நஞ்செடுப் போரே! எனது நாதனுக்கு உயிர்ப் பிச்சை யளியுங்கள். தந்தையும் தாயுமற்ற எனக்கு மங்கலியப்பிச்சை யளியுங்கள்" என்ற கேட்போர் மனம் உருகும்படியாகத் தெருக்களில் சென்று கதறினாள்.

அன்றிரவு தற்செயலாகச் சீர்காழிக்குச் செல்லும் நோக்கத்துடன் ஞானசம்பந்தப் பெருமான் அவ்வூரில் தங்கினார். முருகக்கடவுளது திரு வவதாரமான அவர் திருவாலவாய்முதலான சிறந்த சிவத்தலங்களிற்குச்சென்று விட்டு சீகபுரேசுவரரைக் காண்டற்பொருட்டு அவண் வந்திருந்தார். அது வும் வணிகப் பெண்ணின் அதிருஷ்டமே! அவர் அழுகைக்குரலைச் செவி யுற்று அதுவென்ன வென்றறிந்து வர ஓர் சீடனை அனுப்பினார். அவன் அழுகையின் காரணத்தைத் தெரிந்துவந்து அவரிடத்தே அறிவித்தான். கருணைவள்ளலான அவர் அப்பெண்ணிடத்தே இரக்கம்கொண்டு அவளுக்கு உதவி புரிய வேண்டுமென்று தீர்மானித்தார். உடனே விரைவாக அவ்வி டம் சென்று உயிரற்றுக் கிடக்கும் வைசியனையும் அவன்பொருட்டு இன்ன லுற்றிருக்கும் வைசியக் கன்னியையும் கண்டு அழுதத்தால் நனைந்த மேனி யுடையவரும் உமையாரொடு கூடியவருமான சிவபெருமானை உளத்தில் நினைந்துகொண்டு திருநீற்றைக் கையிலெடுத்துச் சாவை விலக்கவல்ல திருத் தியுஞ்செய மந்திரத்தைத் செபித்துப் பின்னர்க் கறைக்கண்டகிலையில் பெரு மானை நினைந்து பஞ்சாக்ஷர மந்திரத்தையும் செபித்து மந்திரித்த நீற்றை அவனது முகத்திலும் உடலிலும் தூவி அந்தோத்தில் தான் முருகனைக் கொண்டு அழுத விழியுடன் அவனை நோக்கினார். பையன் உறக்கத்தி னின்று போன்று புன்னகையுடன் எழுந்தான். காட்சியைக்கண்ட அனை வரும் உயிர் பிச்சையளித்த அப்பெரியாரது தாள் மலர்களில் கட்டை

போன்று வீழ்ந்து வணங்கினர். கன்னியும் சேடியரும் மட்டில்லாஇன்பத்தை யடைந்தனர். வைசியனின் சுற்றத்தார் செத்துப் பிழைத்த அவனை அன் புடன் கட்டிக்கொண்டனர். கன்னிமாத்திரம் திருமணமாகாததால் அவ னைத் தொடவில்லை. அங்கிருந்த சனங்கள் அந்த வழக்கத்தைக் கண்டு ஆச் சரியமெய்தினர்.

அப்பொழுது நாயனார் தன்னால் உயிர்பெற்ற அவனை நோக்கி "வைசியனே! நான் சொல்வதைக்கேள். மருமகனை நீ நல்ல பாக்கியம் பெற்றவன். இன்பத்திலோ அல்லது துன்பத்திலோ உனது மாமனது மகள் உன்னைத் தொடுதற்குத் தகுதியுள்ளவளாயிருத்தல்வேண்டும். ஆத லால் இங்கேயே அவளை மணம் செய்துகொள். குருவாகிய எனது சொற் படி நீ நடக்கவேண்டும்" எனப் பணித்தார். அதன் பேரில் வைசியன் அவ ரைப் பார்த்துப் "பெரியாரே! திருமணமென்னால் எனது சுற்றத்தார் ஒரு வரும் இங்கில்லை. சாட்சிகளுமில்லை. அந்தக் காரியத்தை எங்ஙனம் கடத்துவது?" எனப் பதிலுரைத்தான். அது கேட்ட ஞானசம்பந்தர் மீண் டும் அவனிடத்தே "அத்தப்பெண் பிறந்தவுடனேயே அவளது பெற்றோர் அவளை உனக்குக்கொடுப்பதாக மனத்தில் தீர்மானித்துச் சுற்றத்தாரிடமும் பேச்சால் சொல்லியிருக்கின்றனர். அது அவர்களனைவர்க்கும் நன்கு தெரி யும். இவண் இலிங்கமும், வன்னிமரமும், கிணறும் சாட்சிகளாக விருக் கின்றன. எல்லாவற்றிற்கும் சாட்சியாயும், எல்லாமறிந்தவராயும், முழு மையானவருமான சுந்தரேசப்பெருமான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு எங்குமுளர். உனது திருமணத்திற்கும் அவர் சாட்சியே. உனது மங்கையது கற்பின் பெருமையால் உனது மணத்தை மெய்ப்பித்தற்கு இந் தச் சாட்சிகள் மதுரைக்கு வரும். ஆனதால் உனது நகரை விரும்புவை என் னுடைய ஆணையை நீ மீறுதல் கூடாது. இடமோ பெருமானது முன்னிலை. மிகச் சிறப்புவாய்ந்தது. இலக்கினத்தின் வலிமையால் சமயமும் மிக மிகச் சிறந்தது. நல்ல இடத்தில் நல்ல காலத்தில் மங்கள காரியங்களை நடத்து பவன் நீண்ட ஆயுளையும், நோயின்மையையும், செல்வங்களையும் பெற்று வெகுகாலம் சீருடன் வாழ்கின்றனன் ஆதலால் உடனே மகிழ்ச்சியுடன் அவளது கையைப்பிடி. உனக்கும் எல்லாச் சிறப்புகளும் உண்டாகும். அதில் ஐயமேயில்லை" எனப் பொருத்தமான மொழிகள் பேசி அவனுக்கு அறிவுறுத்தினர்.

இங்ஙனமாக நாயனாரது ஆக்கினையின்பேரில் வைசியன் சிவபூசை சாரது திருமுன்பு வேதமுறைப்படி அவளது கையைப் பிடித்தான். நாய னாரே திருமணச் சடங்குகளை நடத்திவைத்தார். எல்லாம் முடிவுற்றதும் தன் கோரிக்கைப்படி ஒழுகிய அவனை மதுரைக்கு விடைகொடுத்தனுப் பினார். புறப்படுமுன் சதபதிகள் அவரை வீழ்ந்து வீழ்ந்து வணங்கினர். பின்னர் வழியில் பலவிடங்களில் தங்கி மெதுவாக மதுரை போய்ச்சேர்ந் தனர்.

அங்கே சென்றதும் வைசியன் சுற்றத்தாரிடம் தனது திருமண நிகழ்ச்சியைத் தெரிவித்தான். அவர்கள் மிக மகிழ்ந்து அவனைக் கொண் டாடினர். சற்குணம் நிறைந்த மனைவியோடு அவன் இன்பமுற்றிருந்தான்.

தனது செல்வத்தோடு மாமனின் செல்வமும் சேர்ந்தது. வர்த்தகத்திலும் ஏராளமான வரவு வந்தது. வைசியன் குபேரன்போன்று விளங்கினான்.

நாட்கள் செல்லவே மாமன் மகளிடத்தில் அவனுக்கு ஓர் நற்புதல்வன் தோன்றினான். அவனுக்குக் குணம்கெட்ட மூத்த மனைவி யொருத்தியிருந்தாள். அவளிடத்தில் தாயைப்போலவே நற்குணமற்ற பிள்ளைகள் பிறந்தனர். மூத்தவளது குழந்தைகளும் இளையவளது குழந்தையும் ஒரு நாள் விளையாடிக்கொண்டிருந்தபொழுது சின்னவனைப் பெரியவர் எரிச்சற் பட்டு அடித்துவிட்டுத் தாயிடத்தே ஓடிவிட்டனர். சின்னவன் அழுது கொண்டு தன் தாயிடம் சென்று பெரியதாயாரின் பிள்ளைகள் தன்னைக் காரணமின்றி யடித்ததாகக் கூறினான். அவள் உடனே கோபமடைந்து உன்னை யடித்தவர் நாசமாய்ப்போகட்டும் எனச் சபித்தாள். இதைக்கேட்டுக்கொண்டிருந்த மூத்தவள் சிரித்கொண்டு இளையாளை நோக்கி "யாரடி நீ? உனது இனம் என்ன? உன் தகப்பன் யார்? உன்னை இங்கே யாருக்குத்தெரியும்? கணவர் உன்னை விரும்பிக் கூட்டிக்கொள்ளவில்லை. விலைமாது போன்று நீயாகவே அவரிடம் வந்து முறைப்படியின்றிச் சேர்ந்திருக்கிறாய்! எனது கணவர் அக்கினி சாட்சியாக உன்னைக் கைபிடிக்கவில்லை. அவர் உன்னை மணந்ததற்கு உலகில் சாட்சியேகிலடையாது. இருந்தால் சொல். வேகி போன்று என் கணவரை நீயே வேண்டிக்கொண்டாய். நீ ஓர் வேசிப்பெண். எனது செல்வத்தையோ, தானியங்களையோ, வீட்டையோ, தொடுவதற்குக் கூட உனக்குத் தகுதி கிடையாது. அத்தகைய நீ எனது பிள்ளைகளைச் சபிக்கின்றாய்! நீ எனது கணவரின் மாமன்மகளாயிருந்து, அவர்உன்னைச் சாத்திர முறைப்படி மணம் செய்திருந்தால் அதற்கு உடனே சாட்சிகளைக் கொண்டுவா" என்றவாறு பேசினாள்.

இளையாள் வெட்கத்தால் தலைகுனிந்து மௌனமாய் ஒவ்வொரு சொல்லாக மூத்தவளைப் பார்த்து உயிரளிக்கும் ஆற்றல் படைத்த திருஞான சம்பந்த நாயனாது முன்னிலையில் அழகிய திருச்சிபுரத்தில் சாத்திர முறைபடிப் நாதர் எனது கையைப்பிடித்தார். அதற்கு அவண் என்றுமழியாத இலிங்கமும், இணறும், வன்னிமரமும் சாட்சிகள். இந்த சோமசுந்தர மூர்த்தியே அங்கு இலிங்க உருவாய் உறைகின்றான். இணறானது கங்கை முதலான எல்லாத் தீருத்தங்களும் சேர்ந்து ஒருருவானது. அல்வடிவான அந்த வன்னிமரத்தில் தேவர்களனைவரும் குடியிருக்கின்றனர். இதற்கு மேல் உன்னுடன் பேசுவதற்கு எனக்கு யாதுமில்லை. எனது கணவருக்கு எல்லாம் தெரியும்! நீ ஓர் கொடுமையான அரக்கி. எனது திருமணத்திற்குச் சாட்சிகளே கிடையாவெனப் பிதற்றுகின்றாய். அந்தச் திருஞான சம்பந்த நாயனார் முருகக்கடவுளது அமிசம். சமணரைத் தொலைத்து வைதிக நெறியை நிலை காட்டியவர். பதினாயிரம் சீடருடன் கூடியவர்" என உரைத்தாள்.

இதைக்கேட்ட மூத்தவள் "தொலைவிலிருக்கும் சாட்சிகளால் சான்று எங்ஙனமேற்படும்? அத்தச் சாட்சிகள் இங்கு வந்து மெனினத்தார் முன்பு மெய்ப்பிக்குமேல் அனைவரும் ஒப்புக்கொனவர். அப்பொழுது நீ மிகத் தூயவளாகிக் கற்புடையமங்கையரின் தலைவியாய் விளக்குவாய். அந்தச் சிவலிங்கமும், வன்னிமரமும் இணறும் இங்குவரட்டும். இல்லையேல்

நீ எனது கணவரின் வேசியே. அதில் ஐயமில்லை. உன்னை எல்லோரும் முறைப்படி மணமாகாதவளாகவே கருதுவார்" என்றனள். இளையாள் உறவினரது கூட்டத்தில் இம்மொழிகளைக் கேட்டு மிகவும் வருந்தியவளாய்க் குனிந்த தலையுடன் உண்டியையும் உறக்கத்தையும் தவிர்த்து அவ்விரவை ஓராண்டுபோன்று கழித்தாள். கணவனும் ஊமையாயிருந்துவிட்டான்.

அவள் காலையில் எழுந்து கணவனின் இருதாள்களையும் வணங்கி "நாதனே! சோமசுந்தரமூர்த்தியின் திருவருளால் நான் சாட்சிகளை இங்கு வரவழைக்கப்போகின்றேன். அதன்மூலம் எனக்கும், தங்களுக்கும், குலத்திற்கும் அழியாப் புகழ் உண்டாகட்டும். பெண்டிர் கணவனது அனுமதி பெற்றே எக்காரியத்தையும் செய்யவேண்டுமானதால் திருக்கோயிலுக்குச் செல்ல எனக்கு அனுமதி தரல்வேண்டும்" என வேண்டிக்கொள்ளவே அவன் தனது இளையாள் இங்ஙனம் வருந்துவதைக்கண்ணுற்றுத் தானும் உளம்நொந்து, அவ்வாறே செய், என அனுமதி யளித்தான்.

இவ்விதமாகக் கணவனது அனுமதிபெற்ற வைசியமங்கை புதல்வனை யிட்டுக்கொண்டு திருக்கோயிலுக்குச் சென்று பொற்றூமரைப் பொய்கையில் நீராடி அங்கயக்கண்ணம்மையாரை வணங்கிச் சுவாமி கோயிலையடைந்து மங்களமயமானவரும், அழகிய இலிங்கவடிவானவரும், கருணைக்கடலும், மெய்யன்பரது இன்னல்களையகற்றுபவரும், அன்பர் வயப்பட்டவரும், மலைமகள் மணாளரும், இன்பத்தையும் வீட்டையுமளிப்பவரும், துன்பக்கடலுக்கு ஊழிக்கால அனல்போன்றவரும், உண்மை அறிவு இன்பம் இவைவடிவானவரும், அனைத்திற்கும் சாட்சியானவருமான ஆலவாயுடைப் பெருமானை வணங்கி, அழுத வண்ணமாய் இறைவனை நோக்கிச் "சம்புவே! எனது நாதனே! எல்லாமறிந்தவனே! விருப்பங்கள் யாவையுமளிப்பவனே! கருணைக்கிருப்பிடமே! பேரிறைவனே! பாவமெனும் பஞ்சிற்கு முதல் நெருப்பே! கடம்பக்காட்டிலிருக்கும் இந்திரவிமானத்தின்கீழ் உறைபவனே! எம்பெருமானே! உமது திருவருளால் நான் கறபுடையளாகில் என்னை காத்தருளும். நான் விண்ணப்பித்துக்கொள்வதைக் கேளும். எனது திருமணத்திற்குச் சாட்சிகளான சிவபுரத்திலிருக்கும் இலிங்கமும், கிணறும், வன்னிமரமும் உடனே இங்கு வரட்டும். திருஞானசம்பந்தர் உமது மெய்யன்பராகில், நீர் உடனே அனைவரது முன்னிலையிலும் நேரில் காட்சியளித்து வேண்டும் வரங்களைத் தரவேண்டும் அம்மூன்றும் இலண்டாவில்லையாகில் நான் திண்ணமாய் உயிர் துறப்பேன்" என அறிவித்தாள்.

கற்பிற்கரசியான அவளது வெட்கத்தையும் துயரையும் கண்ணுற்ற எம்பெருமான் திருஞானசம்பந்தரது அழுத நோக்கால் வைசியன் உயிர்பெற்றதையும், அவரே கூடவிருந்து திருமணம் நடத்திவைத்து அனுப்பியதையும், தனக்கும் காயனருக்கும் வேற்றுமையின்றென்பதையும் நினைவிற்குக் கொணர்ந்து சித்தர் உருவெடுத்து அவளுக்குக்காட்சியளித்தார் பேரிலிங்கத்தினின்று அவளை அருள் நோக்குடனும் நோக்கி அவயமும் கொடுத்தார். பின்னர் ஆறகால் மண்டபத்தில் நின்றுகொண்டு அனைவரது முன்பில் பேரிலிங்கத்திற்கு வடகிழக்கு மூலையில் சிவபுரத்தினின்று மூன்று சாட்சிகளையும் அழைத்துக் காட்டினார். நங்கையோடு வந்தோரும், இறைவனை வழிபடுதற்கு வந்தோரும் அந்த அற்புதத்தைக் கண்டு வியந்து இளை

யாளையும் கருணைக்கடலான ஆலவாயுடையாரையும் போற்றினர். அவளது கணவனும் உறவினரும் தர்க்குணம் படைத்த மூத்தவளைத் திட்டி யிகழ்ந்தனர். இறைவனது ஆணையால் வன்னிமரத்தொடு தக்கன் முதலானோரும் வந்தனர். இங்ஙனம் சாட்சிகளையழைத்துக் காண்பித்த பின்னர் சித்தவேடம் பூண்டிருந்தபெருமான் அனைவரும் பார்த்துநிற்க இலிங்கத்தில் மறைந்தருளினர்.

வைசியன் மூத்தவளையும் அவளது குழந்தைகளையும் நீக்கிவிட்டு, இளையாளோடு இன்பமாக வாழ்ந்தான். அவளது புதல்வருக்கும் மனைவிகள் வந்தனர். பெருமானது திருவருளால் பேரும், புகழும், செல்வமும் நாளுக்குநாள் ஓங்கின. இங்ஙனம் நீண்டகாலம் இன்புற்றிருந்து வைசியனும் அவனது மங்கையும் இறைவன் திருவடி சேர்ந்தனர்.

நாற்கூடற் பெருமானது இத்த அறுபத்துநான்காம் திருவிளையாடல் பதினான்கு உலகங்களிலும் புகழ் பெற்றது. இத்தக் கதையைக் கேட்போரது பாவங்கள் நெருப்பிலிட்ட பஞ்சுபோன்று அழிந்துபோம். இம்மையில் நீண்டஆயுளையும் பிணியின்மையையும் பெருஞ்செல்வத்தையும் துய்த்து மறுமையில் அவர்கள் சிவசாயுச்சியம் பெறுவர். சிவபெருமானது மெய்யன்பையடைந்து மறுபிறப்பற்றவராவர். சுருங்கச்சொல்லுமிடத்து அவர்களுக்கு மீளாட்சி நாதரது மெய்யன்பு பிறக்கும்.



எழுபத்தோராவது அத்தியாயம்.

கேட்டற் பயனுரைத்தல்.

இங்ஙனம் முறையாக ஆலவாயுடையாரது திருவிளையாடற் கதைகளைக் குடமுனிவர் வசிட்டர் முதலான பெரியோர்களுக்குக் கூறி முடித்தார். முத்திமண்டபத்திலிருந்துகொண்டு அவற்றைக் கேட்ட இருடிகளனைவரும் ஆலவாயுடையாரது கருணையால் அவர்பால் அன்புகொண்டு சிவன் முத்தராயினர். அவர்கள் எல்லோரும் உலோபாமுத்திரையாருடன் கூடிய அகஸ்தியரை குருவாகக் கருதிச்செய்த உதவிக்காக வாசம், மலர், பழங்கள் இவற்றால் பரிவுடன் பூசித்தனர். பொன்மயமான மலர்களாலும் தாமரைப்பூ முதலான பூக்களாலும் ஆடையாபரணங்களாலும் கற்புடைய மாதருள் தலைசிறந்து விளங்கும் உலோபாமுத்திரையாரையும் அருச்சித்தனர். அகத்தியரானவர் வசிட்டர் முதலான பெரியோரின் ஆசி மொழிகளைப் பெற்று அனைவிலா உவகையெய்தி, மற்றைக் கதை கேட்டவர்க்குத்தான் அருள்புரிந்து அவர்கள் விரும்பியவற்றையளித்தார்.

அப்பால் அவர் துவாதசாந்த நிலையானதும், கலைகளற்றதும், மிகத் தூயதும் சிவபெருமானேயடைதற்கு ஒரே கருவியானதுமான சிவத்தலமாகும் ஆலவாயில் சம்புவும், மங்களமானவனும், முதற்காரணனும், மறைமுடிகளால் போற்றப்பெற்றவனும், அறம் முதலிய எல்லாக் குறிக்கோள்களையுமளிப்பவனும், உலகனைத்திற்கும் சார்பாய் நிற்பவனும், இலிங்கவடிவினனும், உலகத்தையழிப்பவனும், முதல் நடு முடிவற்றவனும், இறைவனும், உமையாரொடு கூடியவனும், மேலானதில் மேலானவனுமான ஆலவாய்ப்பெருமானே நிலையான உளத்தில் நினைந்து சிவானந்தத்தைத் துய்த்துக்கொண்டு அவன் மயமாக ஆகிவிட்டார்.

வசிட்டர் முதலான சிறப்புற்ற இருடிகள் சோமசுந்தரமூர்த்தியது பெருமையைக் கேட்டபின் அவரைக் காண்டற்குப் போவாகொண்டனர். குடமுனிவர் கிட்டை கலைந்து விழித்ததும் முனிவர் அவரையணுகிப் "பெருமானே! நீர் எங்களது குருவாகிவிட்டீர். உமது குருவும் உலகத்தின் குருவுமான சோமசுந்தரக்கடவுளை எங்களுக்குக் காண்பித்தருளும். காசியில் மணிகர்ணிகைக்கரையில் பெருமான் எங்களுக்குக் காட்சியளித்து எங்களுக்கு உளத்தூய்மையை அளித்தார். நீர் கருணையுடன் கூறிய ஆலவாயுடையாரது அற்புதமான திருவிளையாடற் கதைகளைக் கேட்டுப் பேரானந்தமடைந்தோம். அவற்றைப் பரிவுடன் கேட்போரும் படிப்போரும் உடலொடு முக்தி பெறுவது திண்ணம். உயிர்களின் அஞ்ஞானமெனும் பாசத்தை அடியோடு அறுக்கவல்லதும், பேரமுதத்தை யடைதற்பொருட்டு நல்லோரனைவராலும் அணுகப்பெறுவதும், கேள்வியுருதலாலேயே சித்திகளைப் பயக்குவதும், அழைத்தமாத்திரத்திலேயே சிவன் முத்தி நிலையளிப்பதும், சிவன் முத்தி கரெனப் பெயர்பெற்றதும், அடைதற்கரியதுமான, ஆலவாய்ச்

சிவத்தலத்திற்கு முத்திபெற விரும்பும் நாங்கள் உடனே எகவேண்டும். கருணைபொருந்தியவரே! அந்தத்தலத்தை எங்களுக்குக் காண்பித்துக் காத் தருளவேண்டும் அங்குள்ள தீருத்தராசனென்றும் சிவதீருத்தமென்றும் பெயர்கொண்ட தீருத்தத்தையும், அங்கு வாழ்வோரின் மூன்று துயர்களை யும் அகற்றுவதும் மிகப் புனிதமானதுமான ஆதி இலிங்கத்தையும் எங்க ளுக்கு காட்டியருளவேண்டும்;; என வேண்டிக்கொண்டனர். சிவபெருமா னிடத்தே பேரன்புகொண்ட அகத்தியர் இன்பக்கண்ணீர் சொரிந்தவராய்த் தழுத்த குரலில் 'அங்ஙனமே செய்கின்றேன்' எனப் பதிலுரைத்தார்.

மறுநாள் காலையில் அவர் எழுந்து நித்தியகருமங்களை முடித்து மணிகர்ணிகைக்கரையிலுறையும் விசுவநாதரையும் பின்னர்திருக்கோயில் சென்று விசாலாட்சியம்மையாரையும், விசுவநாதசூர்த்தியையும், டுண்டி விநாய கரையும், தெண்டாயுதபாணிக் கடவுளையும் வணங்கி இருடிகள் எல்லோரு டன் ஊர் முழுதையும் சுற்றிப்பார்த்து, வலம் வந்து. வணங்கிப் பூலோக சிவலோகமெனும் மதுரையம்பதிக்குப் போகப் புறப்பட்டுத் தவமெனும் விமானத்தில் உலோபாமுத்திரையாருடனும் சீடருடனும் ஏறி ஆகாயவழி யாகச் சென்றார். வசிட்டர் முதலானவரும் தமது தவவலிமையால் உண் டாக்கப்பெற்ற விமானங்களில் ஏறிக்கொண்டு அவரைப் பின்தொடர்ந்தனர். முனிவரால் சூழப்பெற்றுச் செல்லும் குடமுனிவர் கட்சத்திரங்களால் சூழப் பெற்ற முழு மதிபோன்று விளங்கினார். சுடர் மிளிரும் சீடர்நிறைந்த அகத் தியரது விமானம் வாலகில்லியர் எனும் இருடிகள்கொண்ட கதிரவனது விமானம்போன்று ஒளிவீசிற்று. பூக்களுடனும் பழங்களுடனும் கூடிய புனிதமான தருக்களையும், கெங்கைமுதலான நதியாறுகளையும், தவசிகளது பரிசுத்தமான ஆச்சிரமங்களையும், அழகான காடுகளையும், சிரீசைலம் முத லிய இறைவன் கோயில்கொண்ட மலைகளையும், மாளிகைகளும், கோபுரங் களும், மதில்களும் நிறைந்த காஞ்சிநகர் போன்ற சிறப்புற்ற சிவத்தலங்களை யும் கண்டு வியந்து, அன்பும் பெருமிதமுமடைந்து, அவ்வவ்விடங்களின் மாட் சியை உரைத்து, வணங்கிக்கொண்டு, அவர் இருடிகளுடன் மதுரை நகரின் எல்லைப்புறம் சேர்ந்தார்.

அவண் நகரின் சக்கரவாளமலைபோன்று உயர்ந்திருக்கும் கோட் டையைக்கண்டு விமானத்தினின்று இறங்கி மற்றை முனிவருடன் அதை வணங்கினார். பின்னர் கடம்பக்காட்டையும் கோபுரங்களையும் இந்திரவிமா னத்தையும் கண்டு வணங்கினர். அதன்பின் அனைவரும் சிவன் முத்தி யடைய விரும்பியவராய் நகருக்குள் புகுந்தனர். அங்கு அவர்கள் கெங்கையே நேராக வந்திருப்பதும், முதலில் பெருமானது சடையில் உறைந்துப் பின் னர் அவரது திருவாணை காரணமாக ஆற்றுருவைப் பெற்றதுமான வைகை யாற்றையடைந்து அதில் மந்திரங்கள் ஓதி நீராடி சாத்திரமுறைப்படி தேவர்க்கும் முனிவர்க்கும் தென்புலத்தார்க்கும் தருப்பணங்கள் செய்தனர். பின்பு வடவாலவாயாரது திருக்கோயிலுக்குச் சென்று இறைவனையும் இறை வியையும் மீண்டும் மீண்டும் வணங்கி வலம் சுற்றினர். பின்னர் அவர்கள் எழுகடலில் நீராடித் தருப்பணங்கள் முடித்துத் தானங்கள் கொடுத்து வேதி யருக்கு உண்டியளித்தனர். எழுகடல் தீருத்தமென்பது இறைவனால் கட்டு விக்கப்பெற்ற பெரியதொரு குளத்தில் ஏழுகடல்களும் சேர்ந்தது. கலி யுகத்தின் தொடக்கத்தில் முற் காலத்தில் அவை ஏழு திசைகளிலும் ஆன்

மாக்களுக்கு முத்தியளித்துக்கொண்டு மீளிர்ந்தன். அத்தகைய அத்தத் தீருத்தத்தை முனிவர் பூசித்து வணங்கி வலம் வந்தனர்.

பின்னர் அவர்கள் அகத்தியருடன் பொற்றுமரைவாவியையடைந்து பாவங்களைப் போக்கும் மந்திரங்களையோதிச் சங்கற்பம் செய்து நீராடி மேனி முழுதும் திருநீறு பூசித் திரிபுண்டரமணிந்துத் தலையிலும் கழுத்திலும் தோள்களிலும் உருத்திராக்கமாலைகள் பூண்டு, விரும்பியதையளிப்பவரான சித்திவிநாயகரைத் தொழுது, ஆறுமுகப்பெருமானையும் வணங்கித் துதித்து, அங்கயக்கண்ணம்மையாரைக் கண்டு வணங்கிவழிபட்டு வலமாக வந்து சண்டிகேசுரரைத் தொழுது மீண்டும் அம்மையாரை வணங்கிப் போற்றி மகிழ்வித்தனர். அம்மையார் கருணையுடன் அவர்களுக்கு நேரில் காட்சியளித்துப் பெருமானிடத்தும் தன்னிடத்தும் நிறைந்த அன்பு உண்டாகும்படிச்செய்து அவர்களுக்கு அட்டமாசித்திகள் கிட்டும்படிக்கும் அருளினாள்.

பின்னர் அம்முனிவர் சுவாமி கோயிலை வலம் சுற்றி இடபத்தினருகே வணங்கி, இரு வாயிற்காப்போலையும் தொழுது, நந்திகேசுரருக்கடியணிந்தனர். அதன்பின் அவர்கள் இந்திரவிமானத்தின் கீழ் உறைவதும், இலிங்கங்களின் தொகுதியானதுமான பேரிறைவனின் மூர்த்தியைக் கண்டனர். உடனே பரவசமாயினர். அப்பால் மதிசூடியான அவனை வணங்கித் துதித்து முறைப்படி பதினாறு வரிசைகளுடனும் வழிபட்டனர். பின்னர் முதற்பிராகாரம் சுற்றிவந்து உருத்திர மந்திரங்களைச் சொல்லி வணங்கிப் பலவிதத் தோத்திரங்கள் பாடிப் போற்றினர். பூசை முடிந்ததும் அனைவரும் இறைவனது முன்னிலையில் இடபத்தை வணங்கி எல்லாத்தீருத்தங்களுமடங்கிய அதன் மங்களமான அண்டத்தைத் தொட்டு அதன் கொம்புகளின் ஊடாகச் செங்கழுநீர் முதலான மலர்மாலைகள் பூண்ட ஆலவாய்மூர்த்தியை தரிசனம் செய்து நெஞ்சில் பெருமானை நினைந்தவராய் ஓம் ஹர ஹர நமச்சிவாய என்று உரத்த குரலில் கூறினர்.

உடனே சோமசுந்தரப்பெருமான் முனிவரது அன்பிலும் வழிபாட்டிலும் மகிழ்ச்சியெய்தி, அமுத மயமானதும் தானே தோன்றியதும் பழமையானதுமான பேரிலிங்கத்திலிருந்தும் கோடிப் பரிதிகளின் சுடரோடு, உண்மையறிவு இன்ப வடிவாய், வரம், அவயம், கோடரி, மான் இவற்றைக் கைகளில் ஏந்தி உமையாளொடு இடபத்தின்மீது எழியவராய் வெளிக் கிளம்பி அவர்களுக்குக் காட்சியளித்தார். அவர்களை நோக்கி 'உங்களுக்கு வேண்டும் வரங்கள் தருகின்றேன். கேளுங்கள்' என அருளொடு உரைத்தார். அவர்கள் பெருமானது அருள் மொழிகளைச் செவியுற்று இன்பக்கண்ணீர் வடித்துக்கொண்டு போற்றிகள் கூறி 'எம்பெருமானே! உமது திருவடிகளில் எங்களுக்கு நிலையான அன்புண்டாகட்டும். இதுவே நாங்கள் வேண்டும் வரம்'' என்றனர். இதைக் கேட்டுப் பெருமான் மகிழ்ந்து ''முனிவரே! உங்களது மெய்யன்பின் ஆற்றலானது இம்மையில் இன்பங்களையும் மறுமையில் முத்தியையும் பயக்கக்கூடியது ஆனதுபற்றி நான் உங்களுக்கு அவ்விரண்டையும் அளிக்கின்றேன். மேலும் உலகத்தின் நலனைக் கருதி நான் உங்களிடத்தே ஓர் மறைபொருள் கூறப்போகின்றேன். அதாவது பூலோக சிலலோகமென்றழைக்கப்பெறும் இந்த எனது மதுரையம்பதியானது பெயரிலும் பொருளிலும் உண்மையாகவே

சிவன் முத்தி நகர். ஒரே சமயத்தில் இன்பத்தையும் வீட்டையும் விரும்பு வோர் இங்கு வந்து வாழட்டும். இந்த நகரமானது பாவங்களாகும் பஞ்சிற்கு நெருப்பு போன்றது. பாவங்கள் புரிந்தோரும் இந்தச் சிவன் முத்திபுரத் தையடைந்து முத்தியெய்துவர். இங்கு வாழும் இயங்குபவையும் இயங்காத வையுமான எல்லாப் பொருள்களுக்கும் முத்தியுண்டு. காசிமுதலான புண் ணியத் தலங்களில் மறுபிறப்பில்தான் முத்தியுண்டாகும். இங்கோ உட லோடே முத்தி பெறலாம். இந்தச் சூடமுனிவர் எனக்கு நிகரானவர். அவ ரது நன்னெஞ்ச உண்மையாளருக்கு ஒப்பானவர். அவ்விருவரது அருள்நோக்குப் பெற்ற எவர்தான் உலக வாழ்க்கையில் தன்புறுவர்? படிப்பிலும், நிட்டை யிலும் அனுட்டானத்திலும் அகத்தியர் எல்லாமறிந்தவர். எனது தன் மையை எடுத்துரைப்பதில் அவருக்குச் சரியானவர் உலகிலே கிடையாது. அவருடைய பேரறிவானது உங்களுக்கு அருள் பயக்கத்தக்கது. அவரு டைய பேரறிவால் நீங்கள் உண்மையாகவே பயனெய்தியிருக்கின்றீர்" எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

பின்னர்ச் சோமசுந்தரமூர்த்தி சூடமுனிவரை வரக்கையாலும் அவயக்கையாலும் தொட்டு 'எனது மெய்யன்பருள் முதல்வரே! நீர் மற்றை முனிவருடன் சித்திகள் யாவையும் பெறுதற்பொருட்டு இக்கேயேதங்கி யிரும். தேவர்களுக்கும் அரிதான இன்பத்தையும் வீட்டையும் எல்லோரும் அடையுங்கள். பெரும் தலமானதும், திருக்கூத்திற்கிடமானதும், ஆதித் தலமானதும், என்வடிவானதும், உமையாள் மயமானதுமான, இந்த ஆல வாய் புண்ணியத்தலத்தில் அனைவரும் வாழுங்கள்" என மொழிந்து அவர்க ளெல்லோரையும் அருள்நோக்கோடுப் பார்த்துப் பேரின்பத்தில் மறைந் தருளினர்.

அகத்தியரும் மற்றை இருடிகளும் நேராகவே பெரும் பொருளை கண்டதில் அளவிறந்த ஆனந்தமெய்தினர். பின்னர் அவர்களுக்குச் சிவ பெருமானுக்குக் களிப்பளிப்பனவற்றுள் முதன்மையானது சிவலிங்கப் பிர திட்டையென முன்னரில் இறைவன் கூறியிருந்தது நினைவிற்கு வந்தது. அதன்பேரில் அனைவரும் இலிங்கங்களை நிறுவித்தனர். அப்பொழுது கடம்பவனத் தலமானது ஆகந்த வனம்போன்று விளங்கிற்று. சூடமுனிவர் கடம்பவனத்தின் மத்தியில் மேற்காக இலிங்கத்தைப் பிரதிட்டை செய்து பூசித்தார். வசிட்டர் முதலான மற்றை எண்ணுயிரம் இருடிகளும் தத்தம் பெயரால் இலிங்கங்களைப் பிரதிட்டை செய்து பூசித்தனர். பின்னர் முன் நேரமும் அவர்கள் சோமசுந்தரமூர்த்தியையும், துவாதசாந்த நிலையிலுரையும் அம்பலப் பெருமானையும், சுயக்கண்ணம்மையாரையும் தொழுது இறுதியில் வீடு பெற்றனர். வீடடைந்தபின்னரும் அவர்கள் மீளுட்சியம்மையாரையும் சோமசுந்தர பெருமானையும் வணங்கிக்கொண்டு அவண் தங்குகின்றனர்.

இங்ஙனம் ஆலவாயது மான்மியத்தைக் கேள்வியுற்று வசிட்டர் முதலியோர் அங்குச் சென்று பேறுகளைப் பெற்று அழிவிலா இன்பமெய்தி னர். என்றவாறு சூதமுனி கூறி தன்னிடத்தே கேள்வி கேட்ட முனிவரை நோக்கி 'நீவிரும் என்னுடன் அவண் சென்று ஆலவாயுடையாரைக் கண்டு உங்களது கடமையை நிறைவேற்றிக்கொள்ளுங்கள். திரு ஆலவாயெனும் சிவத்தலத்தில் சோமசுந்தரமூர்த்தியானவர் உமையாருடன் பெருங்கருணை

வள்ளலாய் எப்பொழுதும் அருள் புரிந்துகொண்டு பலவிதமான அறுபத்து நான்கு திருவிளையாடல்களாடி இலிங்கவடிவத்தில் விளங்குகின்றார். அங்கு நடராசர் முதலான மூர்த்திகளும் சக்திதேவதைகளுமிருக்கின்றனர். தக்ஷிணமூர்த்தி பிக்காடன மூர்த்தி முதலிய மூர்த்திகளும் உண்டு. இப்பேருலகில் விளர்கின்ற பெருமைவாய்ந்த தீருத்தங்கள் யாவற்றிலும் பொற்றாமரைத் தீருத்தம் மிகச் சிறந்ததெனக் கூறப்பட்டிருக்கின்றது. சிவத்தலங்களுள் ஆலவாய் முதன்மை பெற்றது. பெரும்பழிகளைப் போக்கும் திறமை வாய்ந்ததாலும், அதிகமான புண்ணியத்தைப் பயக்கும் ஆற்றல் உடையதாலும் மேரு முதலான தலங்களில் உறையும்இலிங்கங்களைக்காட்டிலும் ஆலவாயிலிருக்கும் மூல லிங்கமானது மேம்பட்டது. ஆகவே தலமும், தீருத்தமும் இலிங்கமும் மேலானதிலும் மேலானது. இம்மூன்றும் ஒரே இடத்தில் சேர்ந்து விளங்குகின்றன. இம் மூன்றும் ஒப்புயர் வற்றவை. உலகத்திலேயே மிகச் சிறந்தவை. இது உண்மை. உண்மை. உண்மை. ஆனது பற்றித் தனது நலனை விரும்பும் ஒவ்வொருவனும் அம்மூன்றையும் அண்ட வேண்டும்.

உங்களது கேள்விக்கு நான் சரியான விடையளித்துவிட்டேன். மிகச் சிறப்புவாய்ந்த தலமும் இலிங்கமும் தீருத்தமும் எதுவென்று கூறிவிட்டேன். இவற்றுள் ஒவ்வொன்றுமே எல்லாப் பாவங்களையும் போக்க வல்லமையுடையது. மூன்றும் சேர்ந்துவிட்டால் கேட்பானேன்?'' என மொழிந்து பின்னர் மான்மியத்தைக் கேட்டல் படித்தல் பற்றிக்கூறலானார்.

''இந்த ஆலவாய் மான்மியத்தைக் கேட்போரும் படிப்போரும் நாள்தோறும் புத்தகத்தில் கயக்கண்ணம்மையாரையும் சோமசுந்தரக்கடவுளையும் பத்திரம், புட்பம், தூபம், தீபம் முதலிய வரிசைகளுடன் வழிபட்டுச் சோமசுந்தரமூர்த்தியின் திருவருள் உண்டாகட்டும்'' என்ற நினைப்புடன் வேதியரையும் பூசித்துப் பெருமானிடத்தே மெய்யன்பு செலுத்தும் பெரியாரிடமிருந்து நியமமாக அதைக் கேட்கவேண்டும். கேட்டால் அவர்களது பாவங்கள் நீங்கும். பெருமானும் பெருமாட்டியும் அவர்கள்பால் உவகையடைவர். அவர்கள் இம்மையில் புதல்வர் முதலான பேறுகளைப்பெற்று, மனப்பிணி உடற்பிணி இவ்விரண்டுமற்று நூறுண்டு வாழ்வர். இறுதியில் விமானமேறித் தெய்வீக இன்பங்களுடன் தைத்திரீய உபநிடதத்தில் கூறப்பெறும் ஆகந்த வரிசைகளையடைந்து திருக்கைலாயத்தில் சாரூப்பியம் முதலான நிலைகளைப்பெற்றுக் களித்திருப்பர்.

மான்மியம் படிக்குமிடங்களிலெல்லாம் சோமசுந்தரமூர்த்தியானவர் கயக்கண்ணம்மையாருடன் இருக்கைகொள்வார். படிக்கும் இடத்தைத் தோரணங்கள் மலர் மாலைகள் முதலியன கட்டி அழகுபடுத்தவேண்டும். கோயிலிலோ, ஆற்றின் கரையிலோ, மடத்திலோ, அல்லது வேறு தூய இடத்திலோ மான்மியத்தை ஒன்று, இரண்டு, நான்குமுறைகள் வரைக் கேட்பவன் நிண்ணமாய் இம்மையில் நூறுண்டுகள் உறவினர்களுடன் இன்பங்களுடன் யாவையும் துய்த்து மறுமையில் கால்விதமான முத்திகளையுமடைவான். இது உண்மை, உண்மையென மீண்டும் கூறுகின்றேன்.

ஆலவாயுடையாரது மான்மியத்தைச் சொல்லுகின்றவரைச் சிவபெருமானுவே நினைத்து மலர் முதலியவற்றால் பூசித்து அறுசுவையொடு

கூடிய உண்டியை அவருக்கு அளிக்கவேண்டும். ஒவ்வொருநாளும் கட்டாயமாக ஒரு அத்தியாயமோ அல்லது அரை அத்தியாயமோ அல்லது ஒரு அடியாவது மான்மியத்தில் கேட்பவன் உடலொடு முத்தியடைவான். மான்மியம் படித்து முடிவுறும் சமயத்தில் படித்தவரைப் பெருமானுகவே நினைத்து அரசனுக விருந்தால் அவருக்கு துலாபாரம்முதலான தானங்கள் கொடுக்கலாம், மற்றைச் செல்வம் படைத்தவர் அவரவரது நிலைமைக்கேற்ற வாறு பொருள் கொடுத்துப் பூசிக்கலாம். விசேடமான ஆடையாபரணங்கள் தரலாம். எது கொடுத்தாலும் சுத்தசேசனுக்கென்ற நினைப்புடன் தாரைவார்த்துக் கொடுத்தல்வேண்டும். அவருக்குக் கொடுத்த பொருளனைத்தும் சுத்தசேசப்பெருமானுக்குக் கொடுத்ததாகவே ஆகும். படிப்பவரிடத்தில் பெருமான் உமையாருடன் குடிகொள்கின்றன். அவரது காவில் அவ்விருவரும் கூத்தாடுகின்றனர். ஆதலால் அறிவாளியானவன் மான்மியம் படிப்பவரைப் பொருள் முதலானவை கொடுத்து மகிழ்விக்க வேண்டும். சொல்கின்றவரைக் குருவாகவும் இறைவனுகவும் கருதிக் கேட்கவேண்டும். அங்ஙனம் கேட்போருக்கு இறைவன் எல்லாப் பொருள்களையும் அருள்கின்றன். கதை முடியும் நாளன்று சோமசுந்தரமூர்த்தியின் மகிழ்ச்சியின்பொருட்டு வேதியருக்கு அன்னமிடவேண்டும். ஆயிரம் திருப்பெயர்களைச் சொல்லியோ, அல்லது நூற்றெட்டுப் பெயர்களைச் சொல்லியோ, அல்லது இறைவனது திருவிளையாடல்களின் எண்ணன அறுபத்து நான்கு பெயர்களைச் சொல்லியோ, அல்லது பன்னிரண்டு அல்லது எட்டுப் பெயர்களைச் சொல்லியோ, அன்னமளிக்கவேண்டும். சிவனடியார்க்கும் அன்னம் கொடுக்கவேண்டும். இங்ஙனம் செய்யப் பெருமானுக்கு மகிழ்வு உண்டாகும். கொடுப்பவன் பிரமதக் கணக்கூட்டங்களில் ஒருவனுகி, எத்தனை எண் சோறு கொடுத்தானே அத்தனை எண் ஆண்டுகள் சிவலோகத்தில் வாழ்வான். மெய்யன்புடன் சொல்வோனும், கேட்போனும், பூசிப்போனும் தீய எண்ணங்களை நீக்கிச் சிவநேசத்தைப்பெற்று இவ்வுலகில் இன்பங்கள் யாவையும் அனுபவித்துக் கடைசியில் சாயுச்சியம் எனும் பெரும் நிலையை அடைவான். மீண்டும் மீண்டும் பயனை உரைப்பதுபெருமானிடத்தே அன்பு உண்டாவதற்காகவே.

எந்த நாளன்று ஆலவாய் மான்மியம் படிக்கத்தொடங்கப்படுகின்றதோ அதுமுதல் முடியும்வரை ஒவ்வொரு நாளும் சொல்லுகின்றவர்க்கும் அவரொடு கூடக் குறைந்தது ஒரு சிவனன்பரான வேதியர்க்கும் அன்னமிடவேண்டும். பட்டு முதலான புதுத்துணியின்மீது மான்மியப் புத்தகத்தை வைத்து, மலர் முதலியவற்றால் பூசித்து, பாற்சோறு நிவேதனம் செய்து, தாம்பூலம் ஏற்பித்து, வலம் சுற்றி வணங்கிப் பின்னர் பரிவுடன் மான்மியத்தைக் கேட்கவேண்டும். மான்மியப் புத்தகத்தில் சோமசுந்தரமூர்த்தி உமையாரொடு உறைகின்றார். மான்மியம் கேட்கும்பொழுது பதட்டம் இருத்தல்கூடாது. வேறு பேச்சைத் தவிர்க்கவேண்டும். இங்ஙனம் கேட்போரது காதில் இறைவனும் இறைவியும் கூத்தாடுகின்றனர். மான்மியம் கேட்டுக்கொண்டிருக்கும்போது அதற்கு இடையூறு விளைவிப்பவன் பெரும் பாவியாகி நரகத்தை யெய்துவான். ஆலவாயாரது மான்மியத்தைச் சொல்வோரும், கேட்போரும், கேட்கத் தூண்டுவோரும் முத்திபெருவர். இங்ஙனம் கேட்போருக்குப் பெரும் பயன் விளையும். சொல்

கின்றவரை உயர்ந்த இருக்கையில்மர்த்திக் கேட்போர் தணிந்த வீடத்திலி
ருந்து கேட்கவேண்டும். சொல்கின்றவரைக் குருவாகவும் இறைவனாகவும்
கருதவேண்டும். இவ்வாறு நியமங்கட்குட்பட்டு மான்மியம் கேட்பவன்
சுந்தரமூர்த்தியிடத்தே அன்புடையனாகி விருப்பங்கள் யாவற்றையும் பெறு
வான். ஆலவாய் மான்மியத்தைக் கேட்டலால் எல்லா சிவத்தலங்களின்
மான்மியங்களைக் கேட்டதாகவே ஆகும். ஏனெனில் ஆலவாயானது எல்
லாத்தலங்களின் தொகுதி மான்மியத்தில் ஒரு அத்தியாயம் கேட்டால் அசு
வமேத வேள்வியின் பயன் பிறக்கும். ஒரு செய்யுள் கேட்டால் சோம
யாகம் செய்த பயன் உண்டாகும். இந்த ஆலவாய் மான்மியத்தைக் கேட்
டல் எல்லா சித்திகளையும் அளிக்கும்.

மதுரையம்பதிக்கரசனான ஆலவாயுடையானது மான்மியத்தைக்
கேட்டால் எல்லாப்பாவங்களும் தொலையும். இடுக்கண்கள் பறந்தோடும்.
இன்பம் பிறக்கும். வேதியனைக்கொன்றவன், கட்குடியன், பொன் திருடி,
தாயொடு கூடியவன், அவனொடு நட்புக்கொண்டவன், குருவழித்தவன்,
தாயைக் கொன்றவன், தந்தையைக் கொன்றவன், நம்பிக்கை கொன்றவன்,
நஞ்சிட்டவன், செய்நன்றி கொன்றவன், நண்பனைக்கொன்றவன், நெருப்பு
வைத்தவன், ஆவைக் கொன்றவன், குருவின் பொருளை திருடியவன் முத
லான மாபாதகஞ் செய்தோரும் உபபாதகஞ் செய்தோரும் கூடப்பரிவுடன்
மான்மியத்தைக் கேட்டலால் பழிகளின்றும் விடப்படுகின்றனர். அவர்
களுக்கு எங்கும் மதிப்பும் வெற்றியும் கிடைக்கும். அவர்கள் இன்பங்களை
யும் பெறுவர். அறுபத்துநான்கு திருவிளையாடல்கள் கொண்ட அற்புத
மான்மியத்தைக் கேட்போரும் கேட்கச் செய்வோரும் உடனே அமைமை,
பெற்றுத் தேவர்கள் முதலானவர்க்கு உகந்தவராவர். இவ்வுலகில் பேறுகள்
யாவையும் பெற்று, சீவன் முத்தியையுமடைந்து மறுமையில் சிவசாயுச்சிய
மெய்துவர்.

ஆலவாய் மான்மியத்தைக் கேட்கும் ஒருவன் புதல்வனை விரும்பி
னால் புதல்வனைப் பெறுவான், பொருளை விரும்பினால் பொருளைப் பெறு
வான், இராச்சியத்தை விரும்பினால் பகைவர் பயம் நீங்கிய இராச்சியத்தைப்
பெறுவான். உலகிலிருக்கும் புண்ணிய தீருத்தங்கள் எல்லாவற்றிலும் நீரா
டிய பயன் ஒருமுறை ஆலவாய் மான்மியத்தைக் கேட்டலால் கிடைக்கும்.
பெருநோய் தீரும். பகைவரை வெல்லவேண்டுமென்ற கோரிக்கையுடன்
அரசனொருவன் மான்மியத்தைக் கேட்பானாகில் அவன் நிண்ணயமாய் அவர்
களை வெல்லுவான். நிரம்பச் சொல்வானேன்? எந்த எந்த விருப்பத்துடன்
ஒருவன் மான்மியத்தைக் கேட்கின்றானோ அந்த அந்த விருப்பம் இறைவ
னது திருவருளால் அவனுக்குத் நிண்ணயமாய்க் கைகூடும்.

மான்மியம் சொல்லி முடிவுற்றதும் சொன்னவருக்கு உயர்ந்த
ஆடை ஆபரணங்கள் தக்க பல்லக்கில் ஏற்றி, ஊர்வலம் வந்து, அவரை
அவரது இல்லத்தில் கொண்டுசேர்த்து அவரது ஆசியைப் பெறவேண்டும்.
அங்ஙனம் செய்யச் சோமசுந்தரமூர்த்தியைத் தொழுத பயன் கிட்டும்.
மான்மியம்படிக்கு மிடங்கள்தோறும் ஆலவாயுடையார் கயக்கண்ணம்மையா
ருடன் தங்கிக் கேட்கும் சனங்களுக்குப் பயன்களாயளிக்கின்றார்.

முனிவரே! மான்மியத்தைக் கேட்கும் உங்களுக்கும் சுந்தரேசருடையவும் மீனாக்ஷியம்மையுடையவும் திருவடிகளில் நிலையான அன்பு உண்டாகட்டும். உங்களுக்கு எங்கும் வெற்றியும் மங்களமும் உண்டாகட்டும் அனைவரும் இன்னல்களைத் தாண்டுவாராக. அனைவரும் கன்மைகளைக் காண்பாராக. அனைவரும் நன்னிலையை எய்துவாராக. அனைவர்க்கும் மங்களம் உண்டாகுக" என ஆசி கூறி "ஆலவாய்த் தலத்தை வணங்குகின்றேன். பொற்றாமரைத் தீருத்தத்தை வணங்குகின்றேன். அங்கயற்கண்ணம்மையாரை வணங்குகின்றேன். சோமசுந்தரமூர்த்தியை வணங்குகின்றேன்."

என்றவாறு வணக்கம் தெரிவித்துக்கொண்டு எல்லாமறிந்த சூத முனிவர் இருடிகளனைவரையும் அருளுடன் நோக்கிச் சிவத்தியானத்தில் ஈடுபட்டு விளங்கினார்.

திருச்சிற்றம்பலம்.



நடேசர் பிரஸ், திண்டுக்கல்—51.